இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்வுதழ்

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018

IIJIF

INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR

DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301

office@iijif.com
https://iijif.com/

This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE

OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]

THIS CERTIFICATE IS PRESENTED TO

Inam: International E-Journal of Tamil Studies

e-ISSN: 2455-0531

The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.

Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321

MANAGER

ஆ.மணி
அ.மோகனா
இரா.இராஜா
கி.சங்கரநாராயணன்
ப.திருஞான சம்பந்தம்
மு.நாகராஜன்
விஸ்வேஸ்வரன்
மௌ.அஸ்கர் அலி
மா. உமாமகேஸ்வரி
சு.பேச்சியம்மாள்
கு.தனலெட்சுமி
அ.பிரீதா
மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி
கு.சரஸ்வதி
இரா.வைதேகி
சி.யுவராஜ்
ந.மாலதி
இரா.பிரசன்னா
ப.மணிகண்டன்
ரா.ராஜராஜன்
நா.மலர்விழி
சே.செந்தமிழ்ப்பாவை
பெ.குபேந்திரன்
பெ.ராஜா
மா.ஆசியாதாரா
வி.மல்லிகா

இல.இராஜதுரை
க.தேவி
மீ.கோமதி
க.ரேவதி
வீ.மீனாட்சி
ம.பெட்ரிக் ஜெபராஜ்
ப.புவனேஸ்வரி
இரா.நித்யலெட்சுமி
சே.முனியசாமி
அ.அனேஜா
வி.வசந்தா
அ.புவியரசு
தி.நிரஞ்சனி
மா.யோகராஜ்
யே.டிலானி
மொ.சபீதாபானு
கா.தினேஷ்
ஆ.ஷைலா ஹெலின்
ம.சந்துரு
வசந்தமணி
பி.விஜி
த.சத்தியராஜ்
மா.பரமசிவன்

Inam ISSN : 2455 - 0531

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

An Internationally Refereed e_ Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி

முனைவர் த.சத்தியராஜ்

ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2018 மலர் : 4 இதழ் : 13

May 2018 Volume IV Issue 13

உள்ளே ...

தொகுதி - ஒன்று

தமிழ்ச் செவ்வியல்

ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?
முனைவர் ஆ.மணி | 4

பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்
முனைவர் அ.மோகனா | 12

யாப்பியலும் கணக்கியலும்
முனைவர் இரா. இராஜா | 19

வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்
முனைவர் கி.சங்கர நாராயணன் | 26

கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34

முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்
முனைவர் மு.நாகராஜன் | 40

திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை
விஸ்வேஸ்வரன் | 45

தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
திரவியராசா நிரஞ்சினி | 53

சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்
முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59

பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்
முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64

இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை
முனைவர் சு.பேச்சியம்மாள் | 69

பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்
கு. தனலட்சுமி | 75

பழந்தமிழரின் போர் முறைகள்
அ.பிரீதா | 79

முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு
மு.தமிழ்முல்லை | 83

பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்
ரெ. அருணா தேவி | 87

சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்
முனைவர் கு.சரஸ்வதி | 92

எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)
இரா. வைதேகி | 96

...

UGC APPROVED JOURNAL NO: 64244



அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்

சி. யுவராஜ் | 99

அகநானூற்றின் கட்டமைப்பு

ந. மாலதி | 104

குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்

இரா. பிரசன்னா | 107

நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்

ப.மணிகண்டன் | 111

குறுந்தொகை உணர்த்தும் அறம்

முனைவர் ரா. ராஜராஜன் | 115

நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்

முனைவர் நா. மலர்விழி | 119

சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்

பெ.ராஜா | 126

வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை

முனைவர் மா.ஆசியாதாரா | 130

தொகுதி - இரண்டு

காப்பிய இலக்கியம்

ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்

முனைவர் வி.மல்லிகா | 136

நளன்கதை கூறும் இலக்கியங்கள்

Rajadurai.L | 140

பக்தி இலக்கியம்

ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை

க. தேவி | 144

அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்

முனைவர் மீ. கோமதி | 148

ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்

க.ரேவதி | 152

தற்கால இலக்கியம்

'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்

முனைவர் வீ.மீனாட்சி | 155

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு

ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு

ப. புவனேஸ்வரி | 163

தினமணி இதழும் தலையங்கமும்

முனைவர் இரா. நித்யலட்சுமி | 167

வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்

சே.முனியசாமி | 171

பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்

அரியரெத்தினம் - அனேஜா | 182

சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு

வினாயகமூர்த்தி - வசந்தா | 192

சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்காலம்

முனைவர் அ.புவியரசு | 203

செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு

திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்

யேசுஜயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

வள்ளலார் வகுத்த இனம்

கா. தினேஷ் | 230

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்

ஆ. ஷைலா ஹெலின் | 233

வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்

யேசுஜயா டிலானி | 238

ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்

Shandru Mariyadas | 254

பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்

முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்

பி.விஜி | 269

நூல் மதிப்பீடு

சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை

த.சத்தியராஜ் | 277

வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்

முனைவர் மா.பரமசிவன் | 286

...

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 மே 2018 மலர்:4 இதழ்:13 4

மதிப்பிடப்பெற்றது

ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?

முனைவர் **ஆ.மணி,**
துணைப்பேராசிரியர் - தமிழ் & இணைத் தேர்வாணையர்,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி,
புதுச்சேரி - 605 003, பேச: 9443927141,
மின்னஞ்சல்: manikurunthogai@gmail.com

உரைக்களம்

சங்கத் தொகைகளில் பத்துப்பாட்டின் முதல் நூலாகவும், நாயன்மார்கள் பாடிய பன்னிரு திருமுறைகளில் பதினோராம் திருமுறையின் பதினேழாம் நூலாகவும் முன்னோர்களால் தொகை பெற்றுள்ள திருமுருகாற்றுப்படை ஆறுமுக நாவலரால் முதன்முறையாகப் பதிப்பிக்கப்பட்டது என்றும், அப்பதிப்பே பத்துப்பாட்டின் முதற்பதிப்பு என்றும் தமிழாய்வுலகில் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இக்கருத்துக்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து விளக்குவது இவ்வுரையின் நோக்கமாகும்.

நாம் ஒரு பதிப்பை / நூலை எப்படி எடுத்துக்கொள்கின்றோம் என்பது வேறு; அந்நூலின் பதிப்பாசிரியர் அந்நூலை எந்த நோக்கத்தோடு பதிப்பிக்கின்றார் என்பது வேறு. ஒரு பதிப்பாசிரியர் ஒரு நூலைப் பதிப்பிக்க முனைவதற்குப் பின்னால் பல்வேறு காரணங்கள் மறைந்து நிற்கின்றன. அவற்றை அறிவது அப்பதிப்பின் பின்புல அரசியலை உணர்வதற்கு அடிப்படையாகும். ஒவ்வொரு பதிப்பின் பின்னும் நிற்கின்ற இவையே, அப்பதிப்பை ஒரு பதிப்பாசிரியர் உலகிற்குத் தருவதற்குக் காரணிகளாக அமைகின்றன. மேலும், ஒரு பதிப்பாசிரியரைக் கட்டமைக்கும் பின்புலங்களாகவும் இவையே அமைகின்றன. ஒருவர் சிறந்த பதிப்பாசிரியராக உலகில் நிலைபெற அவர்தம் உழைப்பும் திறனும் அடிப்படைகளாக இருப்பினும், இப்பின்புலங்களும் உதவுகின்றன என்பதை மறுக்க இயலாது. அவ்வகையில் ஒரு பதிப்பாசிரியரின் நோக்கத்தை அறிவதே அப்பதிப்பின் புரிதலுக்குப் பெருந்துணையாகும். எனவே, இம்முயற்சி இன்றியமையாததாகின்றது. ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு இவ்வுரைக்கு முதன்மைத் தரவாகும். திருமுருகாற்றுப்படை / நாவலர் பதிப்புப் பற்றிய கட்டுரைகளும் நூல்களும் பிறவும் இம்முயற்சிக்குத் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

திருமுருகாற்றுப்படைப் பதிப்பாளர் / பதிப்புப் பற்றிய கருத்துக்கள்

திருமுருகாற்றுப்படையின் பதிப்பாசிரியர் / பதிப்புக் குறித்து ஆய்வாளர்கள் கூறியுள்ள கருத்துக்களை இவண் தொகுத்துக் காணலாம்.

"சங்க இலக்கியப் பதிப்பு நூல்களுள் முதன்முதலில் திருமுருகாற்றுப்படை (1851, ஆறுமுக நாவலர்) அச்சிடப்பெற்றது" (ச. சிவகாமி 2009: IX) என்றும், "திருமுருகாற்றுப்படையை முதன்முதலில் பதிப்பித்தவர் ஆறுமுக நாவலர்" (ச. சிவகாமி 2009: 392) என்றும் கூறுவர்.

"முதன்முதலில் முழுமையாகப் பத்துப்பாடல்களுக்கும் உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரையுடன் 1889-இல் டாக்டர் உ.வே. சாமிநாதையர் பத்துப்பாட்டைப் பதிப்பித்தார். அதற்கு முன்பே திருமுருகாற்றுப்படை 1851- இல் ஆறுமுகநாவலரால் பதிப்பிக்கப் பெற்றதாக அறிகிறோம்" (ச.வே. சுப்பிரமணியன் 2003: 62) என்று கூறுவர்.

''பத்துப்பாட்டில் முதற்பாட்டாகிய திருமுருகாற்றுப்படை சமயப் போற்றுதலும், ஓதுதலும் உடைய நூலாகலின் அது மட்டும் தனியே மிக முற்பட்டே வெளிப்போந்தது. அதன் பலப்பல பதிப்புகளும் வந்தன.

திருமுருகாற்றுப்படை - 1839 - இவ்வாண்டில் வந்த இப்பதிப்பே முதற்பதிப்பு ஆகலாம். இதற்கு முன்னே ஏதேனும் பதிப்பு உண்டா என்பது தெரியவில்லை'' (இரா. இளங்குமரன் 2001: 211; 1991: 241) என்றும்,

பத்துப்பாட்டு நூல்களில் முதலில் பதிப்பிக்கப்பெற்றது திருமுருகாற்றுப்படையே ஆகும் என்றும், 1834, 1850களில் திருமுருகாற்றுப்படை மூலபாடம் வெளிவந்துள்ள செய்தியை இரா. ஜானகி தம் பதிப்பு விவரப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளார் என்றும் கூறுவர் (கோ. நித்தியா அறவேந்தன் 2011: 1).

''பத்துப்பாட்டினுள் முதலாவதாக இடம்பெற்றுள்ள திருமுருகாற்றுப்படையை முதன்முதலில் 1834இல் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அடையாளம் காட்டிய பெருமை இவரையே (சரவணப் பெருமாளையர்) சேரும்'' (இரா. ஜானகி 2011: 16) என்றும்,

''பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களின் முதற்பதிப்புகள் (செம்மொழித் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 41 நூல்களின் பதிப்பு விவரங்கள்)'' என்னும் கட்டுரையில், பத்துப்பாட்டின் முதற்பதிப்பாக, ''பத்துப்பாட்டு - 1. திருமுருகாற்றுப்படை மூலபாடம், தெய்வத்தன்மை பொருந்திய மதுரைக் கடைச்சங்கத்து மகாவித்துவானாகிய நக்கீரனார் அருளிச் செய்தது. நச்சினார்க்கினியாருரைப்படியே பரிசோதித்துச் சென்னபட்டணம் விவேகக் கல்விச்சாலைத் தமிழ்த்தலைமைப் புலவராகிய சரவணப்பெருமாளையரால் கல்வி விளக்க வச்சுக்கூடத்தில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. சய வருஷம் ஆவணி மாசம் (1834)'' (பா. இளமாறன் 2008: 30) என்றும் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

மேற்பத்திச் செய்தி 'செம்மொழித் தமிழ் நூல்கள் பதிப்புரைத் தொகுப்பு' என்னும் நூலிலும் (கா. அய்யப்பன் 2009: 254) சொற்றொடர்களின் சந்திப் பிரிப்பு முறையால் நேர்ந்த சில வேறுபாடுகளுடன் தரப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இதன்மூலம், ஒரு பதிப்பின் முகப்புப் பக்கத்தை எடுத்துத் தருவோர் தம் மனக்கருத்துக்குத்தக சந்திப்பிரிப்பு முதலான பணிகளைச் செய்தே தருகின்றனர் என்பதை அறியமுடிகின்றது.

'ஆறுமுகநாவலர் 1851இல் சென்னை, வித்தியாநுபாலன யந்திரசாலை மூலமாகத் திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் என்னும் பதிப்பொன்றை வெளியிட்டார். அதன் 10ஆம் பதிப்பு 1930இலும், 15ஆம் பதிப்பு 1935இலும், 16ஆம் பதிப்பு 1947இலிலும் வெளிவந்துள்ளன' (சு. அமிர்தலிங்கம் 2000: 360) என்பர்.

இரா. ஜானகி (2011: 196) தொகுத்த 'சங்க இலக்கியப் பதிப்புரைகள்' என்னும் நூலின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ள சங்க இலக்கிய பதிப்புகள் பற்றிய அடைவு என்னும் பகுதியில் ''1851 திருமுருகாற்றுப்படை ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை'' என்னும் குறிப்புத் தரப்பட்டுள்ளது.

கரு.அழ. குணசேகரன் பதிப்பித்த 'ஆறுமுகநாவலர்' என்னும் நூலில் ஆ. முத்துச் செல்வன் (2008: 42) எழுதிய 'நாவலரின் சுவடிப்பதிப்பு நூல்கள் பதிப்பு வரலாறு' என்னும் கட்டுரையில் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ள நாவலரின் சுவடிப்பதிப்புகள் (கிடைக்கக் கூடியவை) என்னும் பகுதியில் ''6. திருமுருகாற்றுப்படை - 1857'' எனப் பதிப்பாண்டு குறிக்கப்பட்டுள்ளது.

மயிலை சீனி. வேங்கடசாமி (2012: 160; 266 - 273) 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்' என்னும் பெருநூலைத் தந்தவர். அரிய தகவல்கள் பலவற்றைக் கொண்ட அவர்தம் நூலில் ஆறுமுக நாவலர் எழுதிய பிற நூல்களின் உரைகள் கூறப்பட்டுள்ளபோதும், திருமுருகாற்றுப்படை உரையோ, பதிப்போ இடம்பெறவில்லை. அதுபோன்றே, அவர் தந்துள்ள

19ஆம் நூற்றாண்டில் அச்சான இலக்கிய நூல்கள் என்னும் பகுதியிலும் ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படை உரைப்பதிப்புப் பற்றிய எந்தவொரு குறிப்பும் இல்லை.

'உரையாசிரியர்கள்' என்னும் அரிய நூலைச் செய்த மு.வை. அரவிந்தன் (2008: 658) ஆறுமுக நாவலர் இயற்றிய உரைகள்: என்னும் பகுதியில் திருமுருகாற்றுப்படையுரையைக் குறித்துள்ளார். ஆனால், பதிப்பாண்டு எதுவும் அவரால் குறிக்கப்படவில்லை. இக்கருத்துக்களைத் தொகுத்து நோக்கும்பொழுது, பின்வரும் செய்திகளை அறியமுடிகின்றது. அவை வருமாறு:

1. பத்துப்பாட்டு நூல்களில் முதல் பதிப்புக் கண்ட நூல் திருமுருகாற்றுப்படை.
2. திருமுருகாற்றுப்படையின் முதல் பதிப்பை வெளியிட்டவர் சென்னபட்டணம் விவேகக் கல்விச்சாலைத் தமிழ்த்தலைமைப் புலவராகிய சரவணப்பெருமாளையர் என்பர் சிலர்.
3. திருமுருகாற்றுப்படையின் முதல் பதிப்பை வெளியிட்டவர் ஆறுமுகநாவலர் என்பர் சிலர்.
4. சரவணப் பெருமாளையரின் பதிப்பு வெளிவந்த ஆண்டு 1834.
5. ஆறுமுக நாவலரின் பதிப்பு வெளிவந்த ஆண்டு 1851 என்றும் 1857 என்றும் வேறுபடக் குறிக்கப்பட்டுள்ளது.
6. பதிப்பாசிரியர் பெயர் குறிக்கப்படாத 1839 ஆம் ஆண்டுப் பதிப்பே திருமுருகாற்றுப்படையின் முதற்பதிப்பாகலாம். முன் பதிப்புக்களும் இருக்கலாம்.
7. நாவலரின் திருமுருகாற்றுப்படையுரைப் பதிப்பைக் குறிக்காதோரும்; பதிப்பாண்டு குறிக்காதோரும் உண்டென்பதைக் காணமுடிகின்றது.

திருமுருகாற்றுப்படை குறித்த மேற்செய்திகளைக் காணும்போது திருமுருகாற்றுப்படையை முதற்கண் பதிப்பித்தவர் யார்? என்பதிலும், பதிப்பாண்டு எது? என்பதிலும் கருத்துவேறுபாடுகள் இருப்பதை உணரமுடிகின்றது. இவ்வேறுபாடுகளைக் களைவது தனி ஆய்வாகும். அதனை உரிய தரவுகள் கிடைக்குமிடத்துக் காணலாம். இவண் ஆறுமுக நாவலர் வெளியிட்ட திருமுருகாற்றுப்படைப் பதிப்பின் ஆண்டு இன்னதெனத் தெளிவதும், அப்பதிப்பு பத்துப்பாட்டுப் பதிப்பா? என்பதை அறிந்து, உரிய சான்றுகளின்வழி அதனை நிறுவுவதும் இவ்வுரையின் நோக்கமாதலால், அதனைக் காண்போம்.

நாவலர் பதிப்பின் ஆண்டு 1853 - ஏ

ஆறுமுக நாவலர் திருமுருகாற்றுப்படையைப் பதிப்பித்து வெளியிட்ட ஆண்டாகப் பான்மையான ஆய்வாளர்கள் 1851 என்றும், ஒருவர் மட்டும் 1857 என்றும் குறித்துள்ளதை மேலே கண்டோம். இவ்விரு ஆண்டுகளும் நாவலர் பதிப்பு வெளிவந்த ஆண்டுகளல்ல என்பதை இக்கட்டுரையாளரின் ஆறுமுக நாவலரின் "திருமுருகாற்றுப்படைப் பதிப்பு: கருத்துமுரண்களும் தெளிவும்" என்னும் கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது. அக்கட்டுரையின் ஒரு பகுதியை இவண் காணலாம். "நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பில் "பிரமாதீச ஐப்பசி" எனப் பதிப்பாண்டு நாவலரால் குறிக்கப்பட்டுள்ளது. பிரமாதீச ஆண்டுக்குச் சரியான ஆண்டு 1853 - 1854 ஆகும். ஐப்பசித் திங்களுக்குச் சரியான மாதங்கள் அக்டோபர் - நவம்பர் ஆகும். ஆகவே, பிரமாதீச ஐப்பசி என்பது 1853 ஆம் ஆண்டின் அக்டோபர் - நவம்பர் மாதங்களைக் குறிக்கும். எனவே, நாவலரின் பதிப்பு வெளிவந்த ஆண்டாக 1853ஐக் குறிப்பதே பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது" (விரிவுக்கு: ஆ.மணி ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு: கருத்துமுரண்களும் தெளிவும் கட்டுரைப்படி ப. 5). எனவே, நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு வெளிவந்த ஆண்டு 1853 - ஏ என்பது தெளிவாகின்றது. இனி, அப்பதிப்புப் பத்துப்பாட்டுப் பதிப்பா? என்பதைக் காண்போம்.

நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு - பத்துப்பாட்டுப் பதிப்பா?

ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு, பத்துப்பாட்டின் முதற்பதிப்பு என்றே ஆய்வாளர் பலர் கருதியுள்ளனர் என்பதை முன்னர்க் கண்டோம். அதன் பொருத்தத்தை அறிவோம். ஆறுமுக நாவலர் திருமுருகாற்றுப்படைக்கு உரையெழுதி 1853இல் பதிப்பித்தபோதும், அதனைப் பத்துப்பாட்டின் முதல் பாட்டு எனக் கருதித்தான் நாவலர் பதிப்பித்தார் எனக் கூறுவதற்கு அவர்தம் பதிப்பில் இடமிருப்பதாகத் தெரியவில்லை. அதனை விளக்குவோம்.

திருமுருகாற்றுப்படை சமயநூலாகவே அறிமுகமாதல்

திருமுருகாற்றுப்படை திருமுறை நூலாகவே நாவலருக்கு அறிமுகமானது என்பதைப் பின்வரும் பகுதிகள் உணர்த்துகின்றன. ''.. .. ஏறத்தாழ 57 ஆண்டுகளே வாழ்ந்த நாவலர் தம் 'இருபது இருபத்திரண்டு வயதில் திருமுருகாற்றுப்படையைப் பாராயணமாகக் கற்றுவந்தார்' (கைலாச பிள்ளை 1919: 10*). சௌமிய ஆண்டில் (1849 - 1850) வண்ணார்பண்ணையில் தம் அச்சகத்தைத் தொடங்கிய நாவலர் (கைலாச பிள்ளை 1919: 62*) 1844ஆம் ஆண்டு முதலே தாம் பாராயணமாகக் கற்று வந்த திருமுருகாற்றுப்படையை அச்சகசாலை நிறுவிய (1849 - 1850) பின்னர்த் தான் பதிப்பித்தார் என அறிகின்றோம் என்பர் (ஆ.மணி ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு: கருத்துமுரண்களும் தெளிவும் கட்டுரைப்படி ப. 1 - 2). இதன்மூலம், திருமுருகாற்றுப்படை நாவலருக்கு அறிமுகமானது 1844 இலில் என்பதையும், நாவலர் உரையோடு அந்நூல் அச்சானது 1850 - களுக்குப் பின்னர்த்தான் என்பதையும் உணரமுடிகின்றது. மேலும், பத்துப்பாட்டின் எந்தவொரு நூலையும் பாராயணமாகக் கற்கும் வழக்கமில்லை; சமய நூல்களே பாராயணத்துக்கு உரியனவாகத் தமிழர்களிடையே வழங்கி வருகின்றன என்பதை அறியும்போது, திருமுருகாற்றுப்படை ஒரு சமய நூலாகவே நாவலருக்கு அறிமுகமானது; அந்த உணர்வோடுதான் அவர் அந்நூலைக் கற்று வந்தார் என்ற உண்மை புலனாகின்றது.

நூலாசிரியர் பெயரைக் குறிக்கும் முறை

"இஃது பெரும்பான்மையும் நச்சினார்க்கினியார் (நச்சினார்க்கினியர் பெயரை நச்சினார்க்கினியார் என்றே நாவலர் குறித்துள்ளார்) உரைக்கருத்தைத் தழுவி, யாழ்ப்பாணத்திற் சைவப்பிரகாச வித்தியாசாலைக் கதிபதியாகிய நல்லூர் ஆறுமுக நாவலர் செய்த உரையுடன்'' என்ற குறிப்புடன் நாவலரின் திருமுருகாற்றுப்படை உரை வெளியிடப்பட்டபோதும், அது பத்துப்பாட்டின் முதல் நூலுக்கு எழுதப்பட்ட உரையன்று; பதினோராம் திருமுறையாகிய திருமுருகாற்றுப்படைக்கு எழுதப்பட்ட உரை என்பதை நக்கீரர் பெயரை நக்கீரதேவர் என நாவலர் குறிப்பதால் உணர முடிகின்றது.

நாவலரின் முன்னுரை குறிக்கும் உண்மைகள்

ஆறுமுக நாவலர் தம் பதிப்புக்களில் நூல்கள்தோறும் முன்னுரை எழுதும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. எனினும், திருமுருகாற்றுப்படையுரைக்குப் ''பிரபந்த வரலாறு'' என்னும் பெயரில் முன்னுரை ஒன்றை எழுதியுள்ளார். அம்முன்னுரையின் தலைப்பே நமக்குச் சில கருத்துக்களை உணர்த்துகின்றது. அதில் முதற்கருத்து, திருமுருகாற்றுப்படை ஒரு பிரபந்த நூலாகும் என்பதே. பத்துப்பாட்டு நூல்களைப் பிரபந்த நூல் (சிற்றிலக்கிய நூல்) எனக் குறிக்கும் வழக்கம் தமிழில் இல்லை. ஆசிரியப்பாவில் அமைந்த நெடும்பாடல்களான பத்துப்பாடல்களும் ஒரே நூலாகத் தொகைநிலை பெற்றுள்ளபோதிலும், அவை தனிப்பாடல்களே. ஆற்றுப்படை என்பது பிரபந்த வகைகளுள் ஒன்றாகப் பிற்கால இலக்கணிகளாலும் அறிஞர்களாலும் கூறப்பட்டாலும், பத்துப்பாட்டு என்ற தொகையில் உள்ளபோது திருமுருகாற்றுப்படையைப் பிரபந்தம் எனக் கூறுவதில்லை. பதினோராம் திருமுறையில் மட்டுமே திருமுருகாற்றுப்படையைப் பிரபந்தம் எனக் குறிக்கும் வழக்கமுண்டு. மேலும், பத்துப்பாட்டில் உள்ள பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியவை எவ்விடத்தும் பிரபந்த நூல்களாகக் குறிக்கப்படாமையால், அத்தொகையில் உள்ள திருமுருகாற்றுப்படையையும் பிரபந்தம்

எனக் குறிப்பது பொருத்தமுடையதாகாது என்பது வெளிப்படை. அப்படியாயின், திருமுருகாற்றுப்படையைப் பிரபந்தம் எனக் குறித்தால், அது பத்துப்பாட்டில் ஒன்றாகக் கருதப்படவில்லை என்பது தெளிவாகும்.

தலைப்பிலேயே தாம் பதிப்பிக்கும் நூலின் தன்மையை அதாவது, நூலின் வகைமையை உணர்த்திய ஆறுமுக நாவலர் (1853: ப.எ.இ.) அம்முன்னுரைக்கண்ணும், ".. .. நக்கீரதேவர் அதுகண்டு, மனமிரங்கி, முருகக்கடவுளைக் குறித்துத் திருமுருகாற்றுப்படை என்கிற இப்பிரபந்தத்தைப் பாடினார். உடனே முருகக்கடவுள் எதிர்வந்து அவ்வாபத்தை நீக்கி, அவர்களெல்லாரையும் காப்பாற்றியருளி, நக்கீரரைப் பார்த்து, இப்பிரபந்தத்தைத் தினந்தோறும் அன்புடனே ஓதுபவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து வருவேன் என்று வாக்குத்தத்தஞ் செய்தருளினார்" எனத் திருமுருகாற்றுப்படை ஒரு பிரபந்த நூல்; பதினோராம் திருமுறை நூல் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றார். அதன் பின்னரும் உரையின் தொடக்கத்திலும், "திருமுருகாற்றுப்படையென்பது திருமுருகனிடத்தே ஆற்றுப்படுத்தலை உடையதென ஏழாம் வேற்றுமைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் இப்பிரபந்தத்திற்குக் காரணப்பெயராயிற்று" (ஆறுமுக நாவலர் 1853: 1*) என எழுதுகின்றார். மேலும், ".. .. இப்பிரபந்தத்தில் .. .."., ".. .. இப்படிப் பிரபந்தஞ் செய்தற்கு விதி.. .." ".. .. ஸ்ரீசுப்பிரமண்ணியசுவாமியிடத்தே வழிப்படுத்தலையுடைய பிரபந்தமெனப் பொருள் கூறுக", ".. .. முருகக் கடவுளிடத்தே வழிப்படுத்ததாக இப்பிரபந்தம் செய்யப்பட்டமை தெளிக" (ஆறுமுக நாவலர் 1853: 2, 3, 5, 83*) என வாய்ப்பு நேருழியெல்லாம் தாம் உரையெழுதிப் பதிப்பிக்கும் நூல் ஒரு பிரபந்த நூலே / பதினோராம் திருமுறை நூலே என்பதை அழுத்தந் திருத்தமாக நாவலர் குறித்துள்ளார். பன்முறையும் அந்நூல் பிரபந்த நூல் எனக் குறித்த நாவலர் ஓரிடத்தும் அது பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று என்பதைக் குறிக்கவில்லை என்பதனால், நாவலரின் முதன்மை நோக்கம் பதினோராம் திருமுறையுள் ஒன்றாகத் தாம் நாள்தோறும் பாராயணம் செய்த நூலாகிய திருமுருகாற்றுப்படையைப் பதிப்பித்து வெளியிடுவதே என்பதை உணரமுடிகின்றது. திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றென அறியும் வாய்ப்பு அவருக்கு இருந்தாலும், அந்நூலைப் பத்துப்பாட்டு நூலாகப் பதிப்பிக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்பதும் மேற்கண்ட கருத்துக்களால் தெளிவாகின்றது. இவ்வுண்மையை வேறு சில சான்றுகளாலும் நாம் உறுதிப்படுத்த இயலும். அவற்றையும் காண்போம்.

வேறு சான்றுகள்

திருமுருகாற்றுப்படையுரையின் நிறைவில் 'நேரிசை வெண்பா' எனப் பெயரிட்டு ஏழு வெண்பாக்கள் நாவலரால் தரப்பட்டுள்ளன. இவை பத்துப்பாட்டுச் சுவடிகளில் இல்லாதவை; திருமுருகாற்றுப்படை மட்டும் தனியே எழுதப்பட்ட சுவடிகளில் மட்டுமே இருந்தவை என்ற உண்மையை "அடியிலுள்ள பாடல்கள், பத்துப்பாட்டும் சேர்ந்துள்ள பழைய ஏட்டுப்பிரதிகளிலில்லாமல் திருமுருகாற்றுப்படை மட்டுமுள்ள புதிய ஏட்டுப்பிரதிகளிலும் அச்சுப்பிரதிகளிலும் இருந்தமையால் தனியே பதிப்பிக்கப்பெற்றன" என வரும் உ.வே. சாமிநாதையரின் (1931: 80*) கருத்துப் புலப்படுத்துகின்றது. (நாவலர் பதிப்பில் உள்ள ஏழு வெண்பாக்களோடு, மேலும் மூன்று வெண்பாக்கள் ஆக, மொத்தம் பத்து வெண்பாக்கள் உ.வே.சா. (1931: 80 - 83*) பதிப்பில் இடம்பெற்றுள்ளன என்பது தனிச்செய்தி). திருமுருகாற்றுப்படை பாராயண நூலாகையால், அதனைத் தனியே எழுதிக்கொள்ளும் வழக்கமிருந்ததையும் இதனால் அறியமுடிகின்றது. இதன்மூலமும் நாவலர் பதிப்பு, பத்துப்பாட்டுப் பதிப்பன்று என்பது உறுதியாகின்றது.

திருவாலவாயுடையார் திருமுகப் பாசுரம் முதலிய பிரபந்தங்கள் அடங்கிய பதினோராந் திருமுறை என்னும் பெயரிய பதிப்பு பரிதாபி ஆண்டு மார்கழித் திங்களில் (1913) சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர் பொன்னம்பல பிள்ளையால் சென்னப்பட்டணம்

வித்தியாநுபாலன யந்திரசாலையில் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இப்பதிப்பு 'பல பிரதிரூபங்களைக் கொண்டு ஒருவாறாராய்ந்து ஆறுமுக நாவலர்' கொணர்ந்த பதிப்பின் இரண்டாம் பதிப்பாகும் என்பதை அதன் முதற்பக்கம் தெளிவுபடுத்துகின்றது. இதன் 'சூசிபத்திர'ப் (பொருளடக்கப்) பகுதியில் 'நக்கீரதேவர்' பாடிய பிரபந்த வரிசையில் ஒன்பதாம் பிரபந்தமாகத் திருமுருகாற்றுப்படை தரப்பட்டுள்ளது. இது பத்துப்பாட்டினைப் பதிப்பிக்காத நாவலர் பதினோராம் திருமுறையைப் பதிப்பித்திருப்பதன்மூலம், திருமுருகாற்றுப்படையை அவர் சமய நூலாகவே கருதிப் பதிப்பித்தார் என்னும் நம் கருத்துக்குத் துணையாகின்றது.

சைவ சமய எழுச்சிக்காகவே கல்விக்கூடங்களை நாவலர் நிறுவினார்; அச்சகம் அமைத்தார் என்பதை "சைவ சமயத்தை வளர்க்க வேண்டுமென்னும் பேராசை சிறுவயதிலேயே இவருக்கு (நாவலருக்கு) உண்டாயிற்று"; ".. .. .. சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்" (கைலாசபிள்ளை 1919: 17, 20*) என வரும் தொடர்கள் உணர்த்துகின்றன. எனவே, சைவப் பரவலுக்காகவே நாவலர் திருமுகாற்றுப்படையைப் பதிப்பித்தார் எனக் கொள்வதே பொருத்தமுடையதாகவும், நாவலரின் உள்ளக்கருத்தை அறிவிப்பதாகவும் தோன்றுகின்றது.

முடிபுகள்

1. ஒரு பதிப்பாசிரியர் ஒரு நூலைப் பதிப்பிக்க முனைவதற்குப் பின்னால் பல்வேறு காரணங்கள் மறைந்து நிற்கின்றன. அவற்றை அறிவது அப்பதிப்பின் பின்புல அரசியலை உணர்வதற்கு அடிப்படையாகும். ஒவ்வொரு பதிப்பின் பின்னும் நிற்கின்ற இவையே, அப்பதிப்பை ஒரு பதிப்பாசிரியர் உலகிற்குத் தரக் காரணிகளாக அமைகின்றன. மேலும், ஒரு பதிப்பாசிரியரைக் கட்டமைக்கும் பின்புலங்களாகவும் இவையே அமைகின்றன. ஒருவர் சிறந்த பதிப்பாசிரியராக உலகில் நிலைபெற அவர்தம் உழைப்பும் திறனும் அடிப்படைகளாக இருப்பினும், இப்பின்புலங்களும் உதவுகின்றன என்பதை மறுக்க இயலாது. அவ்வகையில் ஒரு பதிப்பாசிரியரின் நோக்கத்தை அறிவதே அப்பதிப்பின் புரிதலுக்குப் பெருந்துணையாகும்.
2. திருமுருகாற்றுப்படை குறித்த மேற்செய்திகளைக் காணும்போது திருமுருகாற்றுப்படையை முதற்கண் பதிப்பித்தவர் யார்? என்பதிலும், பதிப்பாண்டு எது? என்பதிலும் கருத்துவேறுபாடுகள் இருப்பதை உணரமுடிகின்றது.
3. ஆறுமுக நாவலர் திருமுருகாற்றுப்படையைப் பதிப்பித்து வெளியிட்ட ஆண்டாகப் பான்மையான ஆய்வாளர்கள் 1851 என்றும், ஒருவர் மட்டும் 1857 என்றும் குறித்துள்ளதைக் கண்டோம். இவ்விரு ஆண்டுகளும் நாவலர் பதிப்பு வெளிவந்த ஆண்டுகளல்ல.
4. ஆறுமுக நாவலர் திருமுருகாற்றுப்படைக்கு உரையெழுதி 1853இல் பதிப்பித்தபோதும், அதனைப் பத்துப்பாட்டின் முதல் பாட்டு எனக் கருதித்தான் நாவலர் பதிப்பித்தார் எனக் கூறுவதற்கு அவர்தம் பதிப்பில் இடமிருப்பதாகத் தெரியவில்லை.
5. பத்துப்பாட்டின் எந்தவொரு நூலையும் பாராயணமாகக் கற்கும் வழக்கமில்லை; சமய நூல்களே பாராயணத்துக்கு உரியனவாகத் தமிழர்களிடையே வழங்கி வருகின்றன என்பதை அறியும்போது, திருமுருகாற்றுப்படை ஒரு சமய நூலாகவே நாவலருக்கு அறிமுகமானது. அந்த உணர்வோடுதான் அவர் அந்நூலைக் கற்று வந்தார் என்ற உண்மை புலனாகின்றது.
6. ஆறுமுக நாவலர் தம் பதிப்புக்களில் நூல்கள்தோறும் முன்னுரை எழுதும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. எனினும், திருமுருகாற்றுப்படையுரைக்குப் "பிரபந்த வரலாறு" என்னும் பெயரில் முன்னுரை ஒன்றை எழுதியுள்ளார். அம்முன்னுரையின் தலைப்பே நமக்குச் சில கருத்துக்களை உணர்த்துகின்றது. அதில் முதற்கருத்து, திருமுருகாற்றுப்படை ஒரு பிரபந்த நூலாகும் என்பதே. பத்துப்பாட்டு நூல்களைப் பிரபந்த நூல் (சிற்றிலக்கிய நூல்) எனக் குறிக்கும் வழக்கம் தமிழில் இல்லை.

7. வாய்ப்பு நேருழியெல்லாம் தாம் உரையெழுதிப் பதிப்பிக்கும் நூல் ஒரு பிரபந்த நூலே என்பதை அழுத்தந் திருத்தமாக நாவலர் குறித்துள்ளார். பன்முறையும் அந்நூல் பிரபந்த நூல் எனக் குறித்த நாவலர் ஓரிடத்தும் அது பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று என்பதைக் குறிக்கவில்லை என்பதனால், நாவலரின் முதன்மை நோக்கம் பதினோராம் திருமுறையுள் ஒன்றாகத் தாம் நாள்தோறும் பாராயணம் செய்த நூலாகிய திருமுருகாற்றுப்படையைப் பதிப்பித்து வெளியிடுவதே என்பதை உணரமுடிகின்றது. திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றென அறியும் வாய்ப்பு அவருக்கு இருந்தாலும், அந்நூலைப் பத்துப்பாட்டு நூலாகப் பதிப்பிக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்பதும் தெளிவாகின்றது.
8. திருமுருகாற்றுப்படையின் இறுதியில் உள்ள வெண்பாக்கள், பத்துப்பாட்டுச் சுவடிகளில் காணப்படாமை; பத்துப்பாட்டினைப் பதிப்பிக்காத நாவலர் பதினோராம் திருமுறையைப் பதிப்பித்ததமை; சைவப் பரவலுக்கான கருவியாகவே திருமுகாற்றுப்படையைப் பதிப்பித்தமை ஆகியனவும் நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு பத்துப்பாட்டுப் பதிப்பன்று என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகின்றன.

துணைநூல்கள்

- அமிர்தலிங்கம் சு., 2000 (முதல் பதிப்பு). சங்க இலக்கியக் களஞ்சியம். சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.
- அய்யப்பன் கா., 2009 (முதல் பதிப்பு). செம்மொழித் தமிழ் நூல்களின் பதிப்புரைத் தொகுப்பு. சென்னை: காவ்யா.
- அரவிந்தன் மு.வை., 2008 (இரண்டாம் பதிப்பு). உரையாசிரியர்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- ஆறுமுக நாவலர் (உரைஆ.)., பிரமாதீச - ஐப்பசி (1853). திருமுருகாற்றுப்படை. --: வித்தியாநுபாலன யந்திரசாலை.
- இளங்குமரன் இரா., 1991 (முதல் பதிப்பு). சுவடிக்கலை. சேலம் : அரிமாப் பதிப்பகம்.
- ..., 2001. சுவடிப் பதிப்பியல் வரலாறு. சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.
- இளமாறன் பா., 2008 (முதல் பதிப்பு). தொல்காப்பியம் பன்முக வாசிப்பு. சென்னை: மாற்று.
- கைலாசபிள்ளை த., காலயுத்தி - தை (1919). ஆறுமுக நாவலர் சரித்திரம். சென்னபட்டணம்: வித்தியா நுபாலன யந்திரசாலை.
- சாமிநாதையர் உ.வே.(பதி.ஆ.), 1931 (மூன்றாம் பதிப்பு). பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும். சென்னை: கேஸரி அச்சுக்கூடம்.
- சிவகாமி ச. (பதி.ஆ.), 2009 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும். சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
- சுப்பிரமணியன் ச.வே. (உரைஆ.), 2003 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மக்கள் பதிப்பு. கோவிலூர் : கோவிலூர் மடாலயம்.
- சுப்பிரமணியன் ச.வே. (உரைஆ.), 2003 (முதல் பதிப்பு). பத்துப்பாட்டு மக்கள் பதிப்பு. கோவிலூர் : கோவிலூர் மடாலயம்.
- நித்தியா அறவேந்தன் 2011 (முதல் பதிப்பு), முல்லைப்பாட்டு : பதிப்பு வரலாறு (1889 - 2011). சென்னை: காவ்யா.
- மணி ஆ.. 2015 (முதல் பதிப்பு), குறுந்தொகை உரைகளில் பண்பாட்டுப் பதிவுகள். சென்னை: லாவண்யா பதிப்பகம்.

- முத்துச்செல்வன் ஆ. (க.ஆ.) 2008 (முதல் பதிப்பு), ஆறுமுக நாவலர். கரு. அழ. குணசேகரன் & த. பூமிநாதன் (பதி.ஆ.). சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
- வேங்கடசாமி மயிலை.சீனி. 2012 (முதல் பதிப்பு), பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம். சென்னை பரிசல் : புத்தக நிலையம்.
- ஜானகி இரா. (தொகு.ஆ.), 2011 (இரண்டாம் பதிப்பு). சங்க இலக்கியப் பதிப்புரைகள். சென்னை: பாரதி புத்தகாலயம்.

மதிப்பிடப்பெற்றது

பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்

முனைவர் அ.மோகனா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை - 09
mohanakareem1987@gmail.com

பக்தி இயக்கக் காலத்தில் உருப்பெற்ற சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் பதினோராம் திருமுறையானது காலத்தால் முதலேழு திருமுறைகளுக்கு(தேவாரம்) முற்பட்டு அமைந்த இலக்கியங்களையும், காலத்தால் மிகவும் பிற்பட்ட (பன்னிரு திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி இயற்றிய இலக்கியங்கள் உட்பட) இலக்கியங்களின் தொகுப்பாகவும் அமைந்துள்ளது. சங்ககாலத்தைச் சார்ந்தவராகக் கருதப்படும் திருமுருகாற்றுப்படை நக்கீரர், நக்கீர தேவநாயனாராக மாறி இலக்கியங்கள் படைத்திருப்பதும் இத்திருமுறையில்தான். யாப்பியலைப் பொறுத்தவரை பதினோராம் திருமுறையில் பல பழமை வாய்ந்த யாப்பு வடிவங்களைக் காணமுடிகின்றது. மேலும் பிற்காலத்தில் உருப்பெற்ற பல இலக்கிய வகைமைகளுக்கான முன்னோடித் தன்மையினையும் கொண்டதாகவும் பதினோராந் திருமுறை அமைந்துள்ளது.

திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவ நாயனார், கல்லாட தேவ நாயனார், கபில தேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிரு ஆசிரியர்களின் பாடல் தொகுப்பாகப் பதினோராம் திருமுறை உள்ளது. ஆனால் திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர் வேறு, இதில் பத்துப்பிரபந்தங்கள் பாடிய நக்கீரர் வேறு என்பதால் பதினோராந்திருமுறை ஆசிரியர் தொகை 12 அன்று 13 என்று மு.அருணாசலம் குறிப்பிடுகிறார் (1972:265). இதுவரை வெளியாகியுள்ள திருமுறைப் பதிப்புகள் அனைத்திலும் நக்கீரதேவநாயனார் மட்டுமே இடம்பெற்றுள்ளார் என்பதும் கருதத்தக்கது. இது குறித்த விவாதங்கள் ஆய்வு எல்லைக்கு அப்பாற்பட்டது. பதினோராம் திருமுறை யாப்பியலின் சில கூறுகள் மட்டும் இங்கு விளக்கப்படுகிறது. கீழ்க்கண்ட நிலைகளில் இவ்வியாப்பு மரபினைப் புரிந்து கொள்ளலாம்.

- காலத்தால் மிகவும் முந்தையவராகக் கருதப்படும் காரைக்காலம்மையாரின் பாடல் வடிவங்களும், பண்ணமைதியும்
- சம்பந்தரின் தேவாரப்பாடல்களில் காணப்படும் காரைக்காலம்மையார் பயன்படுத்திய வடிவங்களின் தாக்கமும், பண்ணமைதியின் பயன்பாடும்
- பிரபந்த இலக்கிய வகைமையின் தொடக்கம்
- பாக்களின் புதுமைகளும் இனவினங்களும்
- பதிப்பியல் மாறுபாடுகளும் யாப்பியல் முரண்களும்
- காரைக்காலம்மையார் பாடல் வடிவங்களும் சம்பந்தரின் பாடல்களும்

காரைக்காலம்மையார் (கி.பி.5ஆம் நூற்றாண்டு) சம்பந்தரைவிட ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் முற்பட்டவர். இவரது பாடல்களின் வடிவங்களும் பண்ணமைதிகளுமே சம்பந்தரின் பாடல்களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. இவர் பாடியனவாகக் கட்டளைக் கலிப்பாவும், ஆசிரிய விருத்தமாகவும் அமைந்த திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் - 2, கட்டளைக் கலித்துறையும் வெண்பாவுமாக அமைந்த திருஇரட்டை மணிமாலை, வெண்பாவினாலாகிய

திருஅற்புதத் திருவந்தாதி ஆகியன பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் திருஅற்புதத் திருவந்தாதியின் யாப்பமைப்பினைக் குறித்து, சோ.ந.கந்தசாமி

> ...101 நேரிசை வெண்பாக்கள் இந்நூலில் அந்தாதி அமைப்பில் விளங்குதல் காணலாம்...சைவத் திருமுறைப் பாடல்களில் காலப் பழமை படைத்த வெண்பாக்கள் அம்மையார் பாடியவை எனலாம். அந்தாதி என்னும் பிரபந்தத்திற்கும் அம்மையாரின் அருளிச் செயல் முழுமை முதல் இலக்கியமாகக் கொள்ளுதற்கு உரியது. இந்நூல் 'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம்' எனத் தொடங்கி இறுதி வெண்பாவின் இறுதியடி, 'பேராத காதல் பிறந்து' என்று இறுவதால் மண்டலித்து முடிந்த மாலையாகும்... (1989:702,703)

என்று பதிவு செய்துள்ளார். காரைக்காலம்மையார் மூத்த திருப்பதிகங்கள் இரண்டையும் முறையே நட்டபாடை, இந்தளம் ஆகிய பண்களில் பாடியுள்ளார். இவற்றுள் முதல் பதிகத்தின் யாப்புவடிவம் கட்டளைக் கலிப்பா. இக்கட்டளைக் கலிப்பாவிற்கான வரையறை முற்கால இலக்கணப் பனுவல்களில் வரையறுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நேர் 10 நிரை 11 என்ற கட்டளை பெற்று அமைந்த பாடல் வருமாறு:

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி யலறி யுலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தன லாடும்எங்கள்
அப்ப னிடந்திரு வாலங்காடே. (மூத்த.திருப்.1-1)

திருவாலங்காட்டு இறைவனின் நடனக்காட்சிக்குரிய இப்பாடல் நட்டபாடைப் பண்ணில் பாடப்பட்டது. முதலிரு சீர்களும் வெண்டளையால் பிணைக்கப்பட்டு நேரசையில் தொடங்கி 10 எழுத்துக்களையும் நிரையசையில் தொடங்கி 11 எழுத்துக்களையும் கொண்டதாக அமைந்திருக்கின்றது. அரையடிகளுக்கு மோனைத் தொடையும் அடிகளுக்கிடையில் எதுகைத் தொடையும் ஒன்றி அமைந்துள்ளன. இவருக்குப் பின்தோன்றிய சம்பந்தர் அம்மையாரின் நட்டபாடைப் பண்ணிலேயே தமது முதல் திருப்பதிகமான பிரமாபுரத் திருப்பதிகத்தைப் பாடியுள்ளார். ஆனால் அதன் யாப்பமைப்பு வேறு.

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென்
னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்
தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மா னிவனன்றே. (1:1:1)

அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று நேரசையில் தொடங்கின் 18 எழுத்துக்களையும் நிரையசையில் தொடங்கின் 19 எழுத்துக்களையும் பெற்ற கட்டளைக் கலித்துறைவடிவமாக இப்பாடல் அமைந்துள்ளது. முதல் மற்றும் மூன்றாம் சீர்கள் மோனை பெற்றும் அடிதோறும் எதுகை பெற்றும் கலித்தளை விரவியும் உள்ளது. ஆனால் முதல் திருமுறையில் இதே பண்ணில் பாடப்பெற்றுள்ள ஏழாம் பதிகத்தின் பாடல்கள் இந்த யாப்பு வடிவத்தினை உடையனவாக உள்ளன.

பணியுடை மாலும் மலரி னோனும்
பன்றியும் வென்றிப் பறவை யாயும்
நணுகல ரியநள் ளாறு டைய
நம்பெரு மானிது வென்கொல் சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடு மற்றை
மாமுர சின்னொலி யென்று மோவா
தணிகிளர் வேந்தர் புகுதுங் கூடல்
ஆலவா யின்க ணமர்ந்த வாறே. (தேவாரம்: 1:7:9)

காரைக்காலம்மையாரின் இரண்டாவது மூத்த திருப்பதிகம் இந்தளப் பண்ணினால் பாடப் பட்டுள்ளது. ஐந்து மாச்சீர்களைத் தொடர்ந்த காய்ச்சீரினைப் பெற்ற அறுசீர் ஆசிரிய விருத்தமாக அப்பாடலின் யாப்பு வடிவம் காணப்படுகின்றது.

நிணந்தான் உருகி நிலந்தான்
நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை யெறிந்து சூழும்
நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள்
மாந்திக் களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை
யேந்தி அழகன் ஆடுமே (மூத்த.திருப்.2:2)

சம்பந்தரின் இரண்டாம் திருமுறையின் முதல் பதிகம் இப்பண்ணமைதியினால் பாடப் பெற்றதே. ஆனால் அப்பதிகமானது யாப்பு அடிப்படையில் நேர் 14 நிரை 15 என்ற கட்டளை பெற்ற ஐஞ்சீரடிகளால் ஆன கட்டளைக் கலித்துறை. இதன்மூலம் பண்ணமைதிக்கும் யாப்பிற்குமான தொடர்பானது வரையறைகளுக்கு உட்பட்டதன்று என்பது தெளிவாகிறது.

சம்பந்தர் பாடிய பாடல்களின் பண்ணமைப்பானது எவ்வாறு காரைக்காலம்மையாரின் பண்ணமைப்பினை அடிப்படையாகக் கொண்டமைந்ததோ அவ்வாறே சில யாப்பு அமைப்புகளுக்கும் அம்மையாரே முன்னோடியாக இருக்கின்றார். இது குறித்து அ.சண்முகதாஸ் குறிப்பிடுகையில்,

> கலிநிலைத்துறை கட்டளைக் கலித்துறை ஆகியனவற்றை வரலாற்றடிப்படையில் நோக்கும்போது அவற்றுள் கட்டளைக் கலித்துறையே முதலில் எழுந்ததெனக் கூறலாம். ஏனெனில் பத்திப்பாடல் பாடியவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த காரைக்காலம்மையார் இத்துறையில் பாடியிருப்பதேயாகும். அம்மையார் பாடிய கட்டளைக் கலித்துறைக்குத் தோற்றுவாயாகக் கலித்தொகையிலோ சிலப்பதிகாரத்திலோ செய்யுள் வடிவங்கள் இல்லை... தொல்காப்பியருடைய கொச்சகக் கலிவடிவத்தை முன்மாதிரியாக வைத்து அம்மையார் இப்புதிய செய்யுள் வடிவத்தை அமைத்திருக்க வேண்டும். இதற்குக் கட்டளைக் கலித்துறைக்கு கூறப்பட்ட இலக்கணம் சான்றாக அமைகின்றது... (1997:61)

என்கிறார். அறுசீர் விருத்த அமைப்பிற்கு காரைக்காலம்மையாரே முன்னோடியாகத் திகழ்கிறார். இவர் பாடிய மூத்ததிருப்பதிகம் இரண்டில் இடம் பெற்றுள்ள வடிவத்தினை ஒத்து சம்பந்தர் பாடிய பாடல்,

வேத மோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியி னுரிதோலர்

நாதா வெனவு நக்கா வெனவு நம்பா வெனநின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே. (1:67:1)

தேவார ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த யாப்பு வடிவங்களையும் பண்ணமைப்புகளையும் பாடிய காரைக்காலம்மையாரின் பாடல்கள் பதினோராம் திருமுறை திருமுகப்பாசுரத்தை அடுத்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பிரபந்த இலக்கிய வகைமைகளின் தொடக்கம்

பதினோராம் திருமுறையில் பல்வேறு பிரபந்தங்கள் பாடப்பெற்றுள்ளன. இவை பிற்காலத்தில் பிரபந்த இலக்கியக்காலம் என்று காலரீதியிலான இலக்கிய எழுச்சிக்கு ஆதாரமாக அமைந்துள்ளன. இத்தன்மையினால் பிரபந்த மாலை என்ற சிறப்புப் பெயரும் பதினோராம் திருமுறைக்கு வழங்கப்பட்டது. பிரபந்தங்களின் விவரங்கள் வருமாறு,

அந்தாதி 8	மும்மணிக்கோவை 7	இரட்டை மணிமாலை 4
மாலை 2	விருத்தம் 2	திருமறம் 2
நான்மணிமாலை1	உலா 1	ஆற்றுப்படை 1
வெண்பா 1	கலிவெண்பா 1	திருஎழுகூற்றிருக்கை 1
பெருந்தேவ பாணி1	கோபப்பிரசாதம் 1	ஒருபாஒருபஃது 1
கார் எட்டு 1	ஆற்றுப்படை 1	கலம்பகம் 1
திருத்தொகை 1		

40 இலக்கியங்களுள் 38 இலக்கியங்கள் பிற்காலப் பிரபந்தங்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ளன. ஏனைய இரண்டும் (திருமுகப் பாசுரம், திருஈங்கோய் மலை எழுபது) அவ்வாறான வளர்ச்சியினைப் பெறவில்லை. இப்பிரபந்த வகைமைகளின் அடிப்படையில் பதினோராம் திருமுறை யாப்பியல் குறித்த சில கருத்துகள் வருமாறு:

- முழுவதும் வெண்பாவாலாகிய பிரபந்தங்களினை மிகுந்த அளவில் பாடியவர் நக்கீர தேவநாயனார்
- முழுவதும் ஆசிரியப்பாவாலாகிய பிரபந்தங்களினை மிகுந்த அளவில் பாடியவர் நக்கீர தேவநாயனார்
- முழுவதும் கட்டளைக் கலித்துறையாலாகிய பிரபந்தங்களினை மிகுந்த அளவில் பாடியவர் நம்பியாண்டார் நம்பி
- முழுவதும் ஆசிரிய, சந்த விருத்தங்களினாலாகிய பிரபந்தங்களினை மிகுந்த அளவில் பாடியவர் நம்பியாண்டார் நம்பி
- பதினோராம் திருமுறையில் முழுவதும் வெண்பாவால் பாடப்பட்ட இலக்கியங்கள் மிகுதியாக உள்ளன.
- பதினோராம் திருமுறையில் அதிக அளவில் உள்ள பிரபந்தங்கள் அந்தாதி (7), மும்மணிக்கோவை (7)

பிற பாவடிவங்களைவிட வெண்பாவின் ஆட்சி பதினோராம் திருமுறையில் மிகுந்துள்ளது. காரைக்காலம்மையார் வெண்பா வடிவத்தினைக் கையாண்டுள்ளது குறித்து அ.சண்முகதாஸ்,

> இயற்றமிழ்ப்பாக்களுள் வெண்பாவே பல்லவர் கால இலக்கியங்களிற் பெரிதும் கையாளப்பட்டுள்ளது. இக்காலத்துப் பெரும்பான்மையான இலக்கியங்களாகிய பத்திப் பாடல்களுக்குத் தோற்றுவா யமைத்தவர்களாகிய காரைக்காலம்மையாரும் முதல்மூன்று ஆழ்வார்களும் வெண்பா யாப்பிற் பாடல்கள் பாடியுள்ளனர். சங்கமருவிய காலத்தை அடுத்து வாழ்ந்த இந்நால்வரும் இப்பாவினைக் கையாண்டதற்கு ஒரு காரணங்கூறலாம்.

> அதாவது சங்கமருவிய காலத்தில் எழுந்த பெரும்பான்மையான இலக்கியங்கள் வெண்பா யாப்பிலேயே அமைந்தன. சங்க காலத்தில் அகவலிற் பாடப்பட்ட அகப்பொருள் புறப்பொருள் ஆகியனவும் இக்காலத்தில் வெண்பாவிலேயே பாடப்பட்டன. ஆகவே இத்தகையதொரு காலத்திலே வாழ்ந்த அம்மையாரும் ஆழ்வார்களும் காலத்தின் கோலத்திற்கேற்ப வெண்பா யாப்பினையே தம் பத்தியுணர்வினைப் புலப்படுத்தவும் கையாண்டனர். 'பத்தியனுபவத்தை வெளிப்படுத்த உதவாத வெண்பா யாப்பினைக் காரைக்காலம்மையார் அமைத்துக் கொண்டது, அவர் காலத்தில் அது பெருவழக்காயிருந்த காரணமே' யென வி.செல்வநாயகம் கூறியுள்ளார். (1997:59)

என்று கருத்துரைத்துள்ளார்.

பாவடிவப் புதுமைகளும் இனவினங்களும்

மரபான பாவடிவங்களில் பல இலக்கியங்கள் பதினோராம் திருமுறையில் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் வெண்பா மிகப் பெரிய இடத்தினை வகிக்கின்றது. அவை சொல் விளையாட்டுகளாக யமகம், திரிபு, அந்தாதி அமைப்புகளில் அமைந்துள்ளன. மரபான பாவடிவங்களிலும் சில புதுமைகளைச் செய்திருப்பது கவனிக்கத்தக்கது. அடிதோறும் கூன் பெற்று வந்த ஆசிரியப்பா ஒன்று அதிராவடிகளின் மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையில் இடம்பெற்றுள்ளது.

> சிரமே, விசும்புபோ தஉயரி இரண்டசும்பு பொழியும்மே
> கரமே, வரைத்திரண் முரணிய விரைத்து விழும்மே
> புயமே, திசைவிளிம்பு கிழியச் சென்று செறிக்கும்மே
> அடியே, இடுந்தோறும் இவ்வுலகம் பெயரும்மே
> ஆயினும், அஞ்சுடர்ப் பிழம்பு தழீஇ
> நெஞ்சகத் தொடுங்குமோ நெடும்பணைச் சூரே. (திருமும்மணி.22)

ஓசை நயமிக்க வெண்பாக்கள் முதலிரண்டடி ஒரே தன்மையதாகவும் அடுத்த இரண்டடிகள் வேறுபட்ட ஒரே தன்மையதாகவும் அமைந்திருப்பதையும் காணமுடிகிறது. கபில தேவநாயனாரின் பாடல் ஒன்று,

> காக்கைவளை என்பார்ப்பார்க் கன்பாப்பா னையாதே
> காக்கைவளை யென்பார்ப்பான் ஊர்குரக்குக் - காக்கைவளை
> ஆடானை ஈருரியன் ஆண்பெண் அவிர்சடையன்
> ஆடானை யான தமைவு.(சிவபெருமான்.திருவந்.67)

இவ்வாறு மரபான பாக்களை ஆளுமிடத்தும் அவை சில புதுமைகளைக் கொண்டு கையாளப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அடுத்ததாக இனவினங்கள்

> பாவினங்களின் அடிப்படையில் தோன்றித் தமக்கெனத் தனித்த அடையாளங்களோடு வளர்ச்சி பெற்றுள்ள சில பாவடிவங்கள் இனத்தின் இனம் எனும் பொருள்தரும் 'இனவினம்' எனும் பெயரால் வகைப்படுத்தப்படுகின்றன. இனவினம் எனும் சொற்படைப்பைத் தந்து 'தாழிசை துறை விருத்தம் என்றும் நாம் கொள்ளும் இனங்களுள்ளும் எத்துனையோ இனவினங்கள் பெருகின' என இனவினங்கள் தோன்றியுள்ளமையைக் குறிப்பிடுவார் வ.சுப.மாணிக்கம்.(2001:92)

என்று இனவினம் குறித்த கருத்துக்களை ய.மணிகண்டன் பதிவு செய்கிறார். இந்த இனவினங்களும் வண்ணம், சந்தம், கும்மி, உருப்படி, மேல் வைப்பு ஆகியன அடங்கும். வண்ணங்களின் தொடக்கம் தொல்காப்பியத்தினின்று அடையாளம் காணப்படுகின்றது. செய்யுள்களின் ஓசை நலத்தைச் சார்ந்தே வண்ணமும் சந்தமும் வரையறை பெறுகின்றன. திருஅராகம் என்ற பெயரில் சம்பந்தர் சில

பதிகங்களைப் பாடியுள்ளார். அவை அனைத்தும் முடுகியலாக அமைந்த உருட்டு வண்ண அமைப்பை ஒத்தவை. சந்த கலிவிருத்தங்களும் இவர் தம் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. பதினோராம் திருமுறையில் இனவினங்களின் பயன்பாடுகள் கணிசமாக உள்ளன. அவற்றுள் பட்டினத்துப் பிள்ளையின் பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

நெறிதரு குழலை அறலென்பர்கள்
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்
நிலவினும் வெளிது நகையென்பர்கள்
நிறம்வரு கலசம் முலையென்பர்கள்
அறிகுவ தரிதிவ் விடையென்பர்கள்
அடியிணை கமல மலரென்பர்கள்
அவயவம் இனைய மடமங்கையர்
அழகியர் அமையும் அவரென்செய
மறிமழு வுடைய கரனென்கிலர்
மறலியை முனியும் அரனென்கிலர்
மதிபொதி சடில தரனென்கிலர்
மலைமகள் மருவு புயனென்கிலர்
செறிபொழில் நிலவு திலையென்கிலர்
திருநடம் நவிலும் இறையென்கிலர்
சிவகதி அருளும் அரசென்கிலர்
சிலர்நர குறுவர் அறிவின்றியே. (கோயின்.நான்மணி.15)

இப்பாடல் தந்த தனதன தந்த தனதன என்கிற சந்த வாய்ப்பாட்டினைப் பெற்று இரட்டை ஆசிரியச் சந்தவிருத்தமாக உள்ளது கவனிக்கத்தக்கது. இவ்வாறு சில பாடல்கள் அமைந்துள்ளன.

பதிப்பு மாறுபாடுகளும் யாப்பு முரண்களும்

பதினோராம் திருமுறையானது தனித்தனி ஆளுமைகளின் பதிப்பு, தொகுப்பான பதிப்பு என்ற இரண்டு நிலைகளில் பதிப்புகளைப் பெற்றமைந்துள்ளது. இதுவரையிலான பதிப்புகளில் அவற்றின் யாப்புவடிவங்கள் சில பதிப்புகளில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. கழக வெளியீடு, திருப்பனந்தாள் மடப்பதிப்பு, தருமபுரப் பதிப்பு, ஆகியன இவற்றுள் குறிப்பிடத்தக்கன. சோ.ந.கந்தசாமி தனது தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற ஆய்வு நூலுள் நக்கீர தேவ நாயனாரின் கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி பற்றிக் குறிப்பிடும்போது,

> ‘இசையும்தன்’ என்ற பாடலின் (90) கடைசி அடி, ‘கூட்டுமேல் கூடலே கூட’ என்று பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதன் இறுதிச்சீர் கூட என்பது தேமா என்ற வாய்பாட்டுக்குரிய ஈரசைச் சீராகும். ‘காசு’ என்னும் வாய்பாட்டினால் முடிதலே இலக்கணம் எனின், நக்கீர தேவர் தேமா வாய்பாட்டுச் சீரினால் முடித்தது யாப்பியலில் ஒரு புதுமையே. (1989:705)

என்று கூறுகிறார். இதற்காக இவர் பயன்படுத்திய பதிப்பு திருப்பனந்தாள் காசிமடப் பதிப்பு 1972. ஆனால் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் 1971 இல் வெளியிடப்பட்ட பதினோராந்திருமுறைப் பதிப்பில் ‘கூட்டுமேல் கூடலே கூடு’ என்று சரியான இலக்கணத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. மேலும் 1997 இல் வெளியிடப்பெற்ற திருப்பனந்தாள் காசிமடப் பதிப்பில் கூடு என்று சரிசெய்யப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. முன்பின் பதிப்புகளை ஒப்புநோக்கிக் கண்ணுறாது நக்கீரர் புதுமை செய்துள்ளார் என்று சோ.ந.கந்தசாமி குறிப்பிடுவது மாறுபாட்டுக்குரியது. இவ்வாறே, பரண தேவநாயனாரின் சிவபெருமான் திருவந்தாதி பாடல் ஒன்று,

நீயேயா ளாவாயும் நின்மலற்கு நன்னெஞ்சே

நீயேயா ளாவாயும் நீள்வாளின் - நீயே

ஏறூர் புனற்சடையா எங்கள் இடைமருதா

ஏறூர் புனற்சடையா என்று. (சிவபெருமான்.திருவந்.4)

என்று கழகப் பதிப்பு, திருப்பனந்தாள் பதிப்பு இரண்டிலும் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இரண்டாம் அடியின் தனிச்சொல் மூன்றாம் அடியின் முதற் சொல்லுடன் வெண்டளையில் பொருந்தவில்லை. ஏறத்தாழ ஆறு பதிப்புகளில் இவ்வாறே அச்சிடப்பெற்றுள்ளது. ஆனால் தருமபுரப் பதிப்பில் பதினோராம் திருமுறையின் பாடல்களைக் காணும்போது

நீயேயா ளாவாயும் நின்மலற்கு நன்னெஞ்சே

நீயேயா ளாவாயும் நீள்வாளின் - நீயேயேய்

ஏறூர் புனற்சடையா எங்கள் இடைமருதா

ஏறூர் புனற்சடையா என்று (சிவபெருமான்.திருவந்.4)

என்று வெளியிடப்பெற்றுள்ளது. ஆனால் இப்பாடலின் சரியான வடிவம் இவ்வாறே அமைந்திருக்க வேண்டும்.

இவ்வாறு யாப்பியலானது சரியான பதிப்பையும் பாடத்தையும் அடையாளங்காணப் பயன்படுகின்றது.

துணைநின்ற நூல்கள்

- அருணாசலம் மு., 2005, தமிழ் இலக்கிய வரலாறு - பத்தாம் நூற்றாண்டு, தி பார்க்கர், சென்னை.
- இராமசாமிப்புலவர்,சு.அ.,(கு.ஆ.), 1971, பன்னிரு அருளாளர்கள் பாடியருளிய பதினொராந் திருமுறை (நாற்பது நூல்கள் அடங்கியது), கழகம், சென்னை.
- கந்தசாமி சோ.ந., 1989, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதற்பாகம் - முதல் பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- சண்முகதாஸ்அ., 1997, தமிழின் பா வடிவங்கள், குமரன் புத்தக இல்லம், சென்னை.
- மணிகண்டன் ய., 2001, தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி, விழிகள் பதிப்பகம், சென்னை.
- ……., திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப் பதிகங்கள், திருமுறை (1,2,3), 1973, கயப்பாக்கம் சதாசிவசெட்டியாரால் பார்வையிடப்பெற்றன, கழகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

யாப்பியலும் கணக்கியலும்

முனைவர் **இரா. இராஜா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-1.
sengolan84@gmail.com

இலக்கணச் செம்மை மிக்க மொழியாகத் தமிழ் விளங்குகின்றது. இதன் மரபிலக்கணங்கள் செய்யுளாக்கம் குறித்துத் தனிச்சிறப்பாகப் பேசியுள்ளன. குறிப்பாகத் தொல்காப்பியத்தில் செய்யுளியல் என்பதே அளவில் பெரிய பிரிவாகும். இவ்வியலுள் பாடுபொருளும் யாப்பும் இயைபுடன் விளக்கப்பட்டுள்ளன. இதற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூல்கள், பாடுபொருளிலிருந்து யாப்பிலக்கணத்தை மட்டும் பிரித்துத் தனியாக இலக்கணம் வகுத்துள்ளன. இவ்விரு நிலைகளிலும் யாப்புறுப்புகளைத் தொகைவகை செய்தும் உறழ்ந்தும் காட்டும் முறைமைகள் கையாளப்பட்டுள்ளன. இவற்றுள் கணக்கியல் எவ்வாறு பயன்பட்டுள்ளது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பொதுவாக, மொழியை (அ) செய்யுளை ஆராயப் புகும் இலக்கணம் என்பது ஓர் அறிவியல் துறையாகும். அதன் அடிப்படையில் பிற அறிவியல் துறைகளைப் போல யாப்பியலிலும் கணக்கியல் பயன்படுத்தப்பட்டிருப்பது தவிர்க்க இயலாதது.

தமிழில் நவீன உரைநடை பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னரே வளரத் தொடங்கியது. அதுவரை அனைத்துத் துறைசார்ந்த கருத்துகளும் செய்யுள் வடிவத்தில் தாம் எழுதப்பட்டு வந்தன. அப்பொழுது தமிழர்கள் உரைநடையைவிடச் செய்யுட்களைக் குறுகிய நேரத்திற்குள் பாடி முடித்துவிடும் பழக்கத்தில் இருந்துள்ளனர். தமிழில் கணக்கினை அடிப்படையாகக் கொண்டு கணக்கதிகாரம், வானியல் நூல்கள் முதலானவை எழுதப்பட்டுள்ளன. இங்கு அவை குறித்துப் பேசாமல் யாப்பிலக்கணத்தில் கணக்கியலின் பயன்பாடு குறித்து மட்டும் சுருக்கமாகச் சுட்டப்படுகின்றது.

யாப்பியல் : இயற்கைக் கணக்கும் செயற்கைக் கணக்கும்

பொதுவாக எல்லா மொழிகளிலும் எழுத்துவடிவம், இலக்கண நூல்கள் ஆகியவை உருவாவதற்கு முன்னரே வாய்மொழிப் பாடல்கள் சிறந்தோங்கி இருக்கும். அவற்றிலிருந்துதான் தொழில்முறைப் பாணர்கள் (அ) புலவர்கள் யாப்புவடிவங்களை உருவாக்கிக் கொள்வார்கள். அவ்வகையில் மக்களின் இயல்பான பாடல்களே யாப்பியலிற்குத் தோற்றுவாயாக அமையத் தக்கன.

பழங்கால மக்களின் பாடல்கள் தொழில்பிரிவினைகளின் அடிப்படையிலும் பிற வாழ்வியல் செயல்களின் ஊடும் முகிழ்ந்து பரவியவை. அவற்றுள் அந்தந்தத் தொழில்களுக்குரிய கால இசைவுகள் பொதிந்திருக்கும். எடுத்துக்காட்டாக, படகினை வலிக்கும் மீனவர்கள் ஒத்திசைவாகத் துடுப்பினை நீரில் இடுவதற்கும் எடுப்பதற்கும் ஆகும் கால ஒழுங்கின் அடிப்படையில் தொழில்முனைப் பாடலைக் கட்டி இருப்பர். வள்ளைப்பாட்டு (அ) உலக்கைப்பாட்டு பாடுவோர் இரு பிரிவாக எதிரெதிரே நின்றுகொண்டு உலக்கை குற்றும் ஒழுங்கிற்குத்தக பாடுவர். தாலாட்டை எடுத்துக்கொண்டால், குழந்தை ஆடுகின்ற தூளி (அ) தொட்டில் போய்வருகின்ற அசைவு வேகத்திற்குத்தக அதன் மெட்டு அமைந்துள்ளது. அதாவது, தூளியை அதன் இயல்பான மையத்திலிருந்து ஆட்டி விடுகின்றபோது, அது விலகிச்செல்லும் வேகத்தைவிட மீண்டுவருகின்ற வேகம் விரைவாக இருக்கும். அதனால்தான் தாலாட்டு மெட்டில் 'ஆராரோ ஆரிரரோ' என்பதில் முன்னதைவிடப் பின்னது விரைவாகப் பாடப்படுகின்றது. இப்படி ஏற்றப்பாட்டு, வண்டிக்காரன்பாட்டு, நடவுப்பாட்டு முதலான பலவகைப் பாடல்களிலும் அவ்வவற்றுக்கு உரிய கால அளவும் கூட்டிசைவும் உட்பொதிந்திருக்கும்.

மக்களின் மனம் கவர்ந்த இப்பாடல்கள் நாளடைவில் தொழில்முனைக் களத்தில் மட்டுமின்றி ஓய்வுநேரங்களிலும் பாடப்பட்டுள்ளன. இவற்றோடு சடங்கியல், கேளிக்கைப் பாடல்களும் உருவாக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் இருந்துதான் தொழில்முறைப் பாணர்கள் (அ) புலவர்கள் தங்களுக்கான பா வடிவங்களை உண்டாக்கிக் கொண்டனர்.

பழந்தமிழில் வெறிக்கூத்து (அ) வெறிப்பாடல் என்பதிலிருந்து அகவற்பாவும், துணங்கைக் கூத்து (இருசீர்ப்பாணி) என்பதிலிருந்து வஞ்சிப்பாவும், குரவைக்கூத்து (கொண்டுநிலைப்பாட்டு) என்பதிலிருந்து கலிப்பாவும் தோற்றம்பெற்ற பின்னணியை அ.பிச்சை (2011: 287) விளக்குகின்றார். இப்படிப் பாவகைகள் உருவான பின்னர் ஏடறி புலவர்கள் அவற்றை வகைதொகை செய்து இலக்கணமயப்படுத்தி வரம்பிட்டுள்ளனர். யாப்பியல் ஆராய்ச்சிகளும் நிகழத் தொடங்கின.

யாப்பு வகைகளும் தமிழும்

மரபு மற்றும் நவீன யாப்பியல் வல்லுநர்கள் பலவாறாக யாப்பினை வகைசெய்கின்றனர். பொதுவாக, ஒரு மொழியின் ஒலிக்கூறுகள் (அ) ஒலியன்களே யாப்பியல் வகைபாட்டிற்கு அடிப்படையாகின்றன. ஜான் லோட்ஸ் (*John Lotz*) என்பவர் யாப்பினைப் பின்வருமாறு வகைப்படுத்துகின்றார் (அ. பிச்சை, 2011: 20-23).



மேற்கண்டவற்றுள் மாத்திரை யாப்பினை உடையதாகத் தமிழ் விளங்குகின்றது. தொல்காப்பியரும் செய்யுளின் அடிப்படை (அ) முதல் உறுப்பாக மாத்திரையைக் கூறுதல் இங்கு நினையத்தக்கது. மாத்திரை என்பது எழுத்தினை ஒலிப்பதற்குத் தேவைப்படும் கால அளவைக் குறிப்பதாகும். இது பல செய்யுள் உறுப்புகளை வரையறை செய்வதற்குக் கருவியாகத் திகழ்கின்றது. இதனை,

> *மாத்திரை எழுத்தினது குணம் ஆதலானும் அசையும் சீரும் அடியும் தூக்கும் பாவும் வண்ணங்களும் என்று இன்னோரன்ன எல்லாம் மாத்திரை நிமித்தமாகத் தோன்றுவன ஆதலானும் அது முன் வைத்தான் (தொல்.பொருள். 313, பேரா.)*

எனப் பேராசிரியர் விளக்கம் அளிக்கின்றார். தொல்காப்பியருக்குப் பின்வந்த யாப்பிலக்கணிகள் மாத்திரையையும் எழுத்தையும் தனித்தனிச் செய்யுள் உறுப்புகளாகக் கணக்கிடாமல் ஒன்றாகவே சேர்த்துப் பார்க்கின்றனர்.

யாப்புறுப்புகள் ஒவ்வொன்றிலும் கணக்கியலின் பயன்பாடு மிகுந்திருக்கின்றது. கட்டுரையின் எல்லை கருதிச் சீர், அடி, தொடை ஆகியவற்றுள் இடம்பெறும் கணக்கியல் பயன்பாடு மட்டும் இங்குச் சுருக்கமாக உரைக்கப்படுகின்றது.

சீர் பற்றிய கணக்கீடுகள்

தொல்காப்பிய நூற்பாக்களின்வழி ஓரசைச்சீர்கள் நான்கு, ஈரசைச்சீர்கள் பதினாறு, மூவசைச்சீர்கள் அறுபத்துநான்கு எனச் சீர்கள் கணக்கிடப்படுகின்றன. இதற்கு இளம்பூரணர் முதலான உரையாசிரியர்கள் பல்வேறு வாய்பாட்டு உதாரணங்களைத் தருகின்றனர். இடைக்காலத்தில் தோன்றிய யாப்பருங்கலக்காரிகையில் ஓரசைச்சீர்கள் இரண்டு, ஈரசைச்சீர்கள் நான்கு, மூவசைச்சீர்கள் எட்டு, நாலசைச்சீர்கள் பதினாறு எனச் சீர்கள் உரைக்கப்படுகின்றன. அதற்குக் குணசாகரர் வாய்பாட்டு உதாரணங்களையும் தருகின்றார். இந்த மாற்றத்திற்கு எது காரணம்? பாடல்களின் (அ) செய்யுட்களின் ஓசை மாற்றத்திற்கும் இந்த சீர்களின் எண்ணிக்கை மாற்றத்திற்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ? என்று ஆராய்ந்தால் நிச்சயம் இல்லை. இஃது ஓசை சார்ந்த மாறுபாடு அன்று. கணக்கீடுகள் சார்ந்த மாறுபாடு தான்.

அசைகளை முதலாகக்கொண்டு சீர்கள் கணக்கிடப்படுகின்றன. தொல்காப்பியர் காலத்தில் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற நான்கு வகையான அசைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முன்னிரண்டும் இயலசை எனவும், பின்னிரண்டும் உரியசை எனவும் குறிக்கப்பட்டன (தொல்.பொருள்.314). இவை ஓரசைச்சீர்களாகவும் எண்ணப்பட்டன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு ஈரசை மற்றும் மூவசைச்சீர்கள் கணக்கீடு செய்யப்பட்டன. சான்றாக,

நேர்பு நேர்	நேர்பு நேர்
நேர் நிரை	நேர்பு நிரை
நேர் நேர்பு	நேர்பு நேர்பு
நேர் நிரைபு	நேர்பு நிரைபு
நிரை நேர்	நிரைபு நேர்
நிரை நிரை	நிரைபு நிரை
நிரை நேர்பு	நிரைபு நேர்பு
நிரை நிரைபு	நிரைபு நிரைபு

என்னும் வகையில் அமைகின்றன. அதாவது, ஈரசைச்சீருக்குரிய இரண்டு இடங்களில் (தானங்களில்) நான்கு அசைகளும் மாறிமாறி வரும் வாய்ப்பினைப் பெறுகின்றன. எடுத்துகாட்டாக, ஈரசைச்சீரில் முதலசையாக நேர் நிற்க, இரண்டாம் அசையாக நான்கு அசைகளும் (நேர், நிரை, நேர்பு, நிரைபு) வரக் கூடும். இப்படியே ஒவ்வொன்றும் அமையும். ஆக, நிகழ்தகவு (*Probability*) அடைப்படையில் $4 \times 4 = 16$ என ஈரசைச்சீர்கள் அமைகின்றன. இவ்வாறு $4 \times 4 \times 4 = 64$ என மூவசைச்சீர்கள் கணக்கிடப்படுகின்றன. தொல்காப்பியத்தில் நாலசைச்சீர்கள் குறிப்பிடப்படவில்லை.

தொல்காப்பியருக்குப் பின்வந்த காக்கைப்பாடினியார், மயேச்சுரர், அமிர்தசாகரர் போன்றோர் வெண்பாவின் ஈற்றில் மட்டுமே நேர்பு, நிரைபு என்னும் அசைகளை ஏற்றனர். மற்றபடி நேர், நிரை என்னும் இரண்டைத்தான் அடிப்படை அசைகளாகக் கொண்டனர். அவற்றைக்கொண்டே சீர்களைக் கணக்கிட்டுள்ளனர். $2 \times 2 = 4$, $2 \times 2 \times 2 = 8$, $2 \times 2 \times 2 \times 2 = 16$ என்ற வகையில் முறையே ஈரசை, மூவசை மற்றும் நாலசைச்சீர்கள் எண்ணப்பட்டுள்ளன.

சான்றாக, '*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி* (குறுந். 2: 1) என்ற அடியை எடுத்துக்கொண்டால் இதில் 'கொங்குதேர்' என்னும் முதற்சீர் தொல்காப்பியச் செய்யுளியல் அடிப்படையில் 'நேர்பு நேர்' என்னும் அமைப்புடைய ஈரசைச்சீராகும். இதற்கு இளம்பூரணர் உரைப்படி 'ஆற்றுக்கால்' என்பது வாய்பாடு. இதே சீர் யாப்பருங்கலக் காரிகையின்படி 'நேர் நிரை'

என்னும் அமைப்புடைய 'கூவிளம்' என்னும் வாய்பாட்டிற்குரியது. இங்குப் பாட்டின் ஓசையிலோ சொற்பொருளிலோ எந்த மாறுபாடுமில்லை. சீரை அளந்தறியும் அசைக் கணக்கீட்டில்தான் மாறுபாடு உள்ளது.

அடிவகையில் கணக்கீடுகள்

யாப்பியலைப் பொறுத்தவரை அடியிலக்கணம் மிகவும் இன்றியமையாதது. '*அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே*' (தொல். பொருள். 343) எனத் தொல்காப்பியம் உரைக்கின்றது. சீர் மற்றும் எழுத்துகளின் எண்ணிக்கையையொட்டி அடிகள் வகைசெய்யப்படுகின்றன. இவை முறையே சீர்வகையடி, கட்டளைவகையடி எனப் பகுக்கப்படுகின்றன. தொல்காப்பியத்தில் இவ்விருவகைக் கருத்தியல்களும் காணப்படுகின்றன. குறிப்பாக, அளவடி எனப்படும் நாற்சீரடியில் அமையும் எழுத்தெண்ணிக்கை பற்றி இந்நூல் (தொல். பொருள். 344-357) குறிப்பிடுகின்றது. அடியின் எழுத்தெண்ணிக்கையில் ஒற்றும் குற்றுகரமும் குற்றிகரமும் பெரும்பாலும் எண்ணப்படுவதில்லை. நாற்சீர் கொண்ட அடியில் 4 எழுத்து முதல் 20 எழுத்துவரை இடம்பெறும். இதனை 17 நிலம் எனக் குறிப்பர். 4, 5, 6 ஆகிய எழுத்தெண்ணிக்கை கொண்ட நாற்சீரடிகள் குறளடிகள் என்றும், 7, 8, 9 ஆகிய எழுத்தெண்ணிக்கை கொண்ட நாற்சீரடிகள் சிந்தடிகள் என்றும், 10, 11, 12, 13, 14 ஆகிய எழுத்தெண்ணிக்கை கொண்ட நாற்சீரடிகள் அளவடிகள் என்றும், 15, 16, 17 ஆகிய எழுத்தெண்ணிக்கை கொண்ட நாற்சீரடிகள் நெடிலடிகள் என்றும், 18, 19, 20 ஆகிய எழுத்தெண்ணிக்கை கொண்ட நாற்சீரடிகள் கழிநெடிலடிகள் என்றும் சுட்டப்படுகின்றன. ஒவ்வொரு சீரும் 1 முதல் 5 எழுத்துக்களுக்குள் அமைய வேண்டும். இத்தகு கட்டுப்பாடுகளைக்கொண்டு அடிகளின் மொத்தத்தொகை 'அறுநூற்று இருபத்தைந்து ஆகும்மே' (தொல். பொருள். 357) எனத் தொல்காப்பியம் உரைக்கின்றது. ஆனால், 4 எழுத்துக்களில், 5 எழுத்துக்களில், 6 எழுத்துக்களில் என்று இப்படி ஒவ்வொரு எழுத்துக்களிலும் எத்தனை வகையான அடிகள் அமையக் கூடும்? குறளடி வகையில், சிந்தடி வகையில் என்று தனித்தனியாக எத்தனையத்தனை அடிகள் அமையும் என்பதை யாப்பியலார் சிறப்பாகக் கணக்கிட்டுள்ளனர். சான்றாக, 4 எழுத்துக்களைக் கொண்ட நாற்சீரடி 1+1+1+1 = 4 என்ற ஒருவகையில் மட்டுமே அமையும். 5 எழுத்துக்களைக் கொண்ட நாற்சீரடி 2+1+1+1, 1+2+1+1, 1+1+2+1, 1+1+1+2 என நான்கு வகைகளில் அமையும். 6 எழுத்துக்களைக் கொண்ட நாற்சீரடி 3+1+1+1, 1+3+1+1, 1+1+3+1, 1+1+1+3, 2+2+1+1, 2+1+2+1, 2+1+1+2, 1+2+2+1, 1+1+2+2, 1+2+1+2 என பத்து வகைகளில் அமையும். ஆக, குறளடியில் (4, 5, 6 ஆகிய எழுத்தெண்ணிக்கையில்) அமையக் கூடிய அடிகள் மொத்தம் (1+4+10 = 15) பதினைந்து. இப்படி நிகழ்தகவின் அடிப்படையில் ஒவ்வொரு எழுத்தெண்ணிக்கைக்கும் அடிவகைக்கும் அமையத் தகும் விபரம் வருமாறு (மு.இராமலிங்கனார், 1974:16, *இக்கணக்கீட்டின் அச்சுப்பிழைகள் கட்டுரையாளரால் திருத்தப் பெற்றுள்ளன).

அடிவகை	எழுத்தளவு	அடித்தொகை
குறளடி	4, 5, 6	1+4+10 =15
சிந்தடி	7, 8, 9	20+35+52 = 107
நேரடி	10,11, 12, 13, 14	2 (68+80) +85 = 381
நெடிலடி	15, 16, 17	52+35+20 = 107
கழிநெடிலடி	18, 19, 20	10+4+1 = 15
ஐவகையடி	பதினேழு நிலம்	கூடுதல் - 625

இக்கணக்கீட்டினை உணர்த்தும் காசியனார் வரைவு வளைவு வருமாறு (மேலது).



நாற்சீரடிக்கு மேலாக ஐந்து, ஆறு முதலான சீர்களைக் கொண்ட அடிகள் அமைந்தால் கிடைக்கப்பெறும் அடிகளின் எண்ணிக்கையை நிகழ்தகவு அடிப்படையில் பின்வருமாறு இளம்பூரணர் கணக்கிட்டு உரைக்கின்றார்.

அறுநூற்று இருபத்து ஐந்தினோடும் (625) ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் உறழ மூவாயிரத்து ஒருநூற்று இருபத்தைந்து (3,125) விகற்பமாம். அதன்கண் ஆறாவது இவ்வகை ஐந்துசீரையும் உறழப் பதினையாயிரத்து அறுநூற்று இருபத்து ஐந்து (15,625) விகற்பமாம். அதன்கண் ஏழாவது வரும் சீரைந்தினையும் உறழ எழுபத்து எண்ணாயிரத்து ஒருநூற்று இருபத்து ஐந்து (78,125) விகற்பமாம். இவ்வகையினான் உறழ வரம்பிலவாய் விரியும். அன்றியும், இச்சொல்லப்பட்ட அடியினை அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பிலவாம் (தொல்.பொருள்.358, இளம்.).

தொல்காப்பியத்திற்குப் பின்னர் யாப்பருங்கலக்காரிகைக் காலத்தில் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பு, சிறப்புப்பெற்று விளங்கியது. இதன் வேறுபெயர் காரிகை. இஃது எழுத்தெண்ணிக்கை அடிப்படையில் அமைவதாகும். ஒற்றும் குற்றுகரமும் குற்றிகரமும் நீங்கலாக, நேரசையில் தொடங்கினால் அடிக்கு 16, காரிகைக்கு (16 × 4) 64 எழுத்தும், நிரையசையில் தொடங்கினால் அடிக்கு 17, காரிகைக்கு (17 × 4) 68 எழுத்தும் கொள்ளப்படும். யாப்பருங்கலக்காரிகை நூலின் மொத்த அளவை அதன் உரையாசிரியர் குணசாகரர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

இந்நூல் எவ்வளவைத்தோ எனின், இயல் வகையான் மூன்றும் (3), காரிகை வகையால் நாற்பத்து நான்கும் (44), கிரந்த வகையால் தொண்ணூறு (90) கிரந்தமும் இருபத்து எட்டு (28) எழுத்தும் எனக் கொள்க. அவற்றுள், ஒரு கிரந்தமாவது ஒற்று ஒழித்து உயிரும் உயிர்மெய்யும் ஆகிய முப்பத்து இரண்டு (32) எழுத்தாம் எனக் கொள்க. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை இருபத்து ஒன்றும் (21) நிரையசை முதலாகிய காரிகை இருபத்து மூன்றும் (23) எனக் கொள்க. நேரசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்துநான்கும் (64), நிரையசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்து எட்டும் (68) எனக் கொள்க. இவ்விரு திறமும் கூட்டி உறழ இரண்டாயிரத்துத் தொளாயிரத்து எட்டு (2,908) எழுத்தாம் எனக் கொள்க. நேரிசை முதலாகிய காரிகை ஒற்று

ஒழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினாறும் (16) நிரையசை முதலாகிய காரிகை ஒற்று ஒழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினேழும் (17) எனக் கொள்க (யாப்பருங்கலக்காரிகை, காரிகை 1, குணசாகரர் உரை).

தொடைவிகற்பங்களும் கணக்கியலும்

"*தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்*" என்பது பழமொழி. செய்யுளின் ஓசை நயத்திற்கு அடிப்படையான உறுப்பு தொடை. யாப்பு ஆராய்ச்சியில் இதற்கு முக்கிய இடமுண்டு. பாடலில் ஓரடிக்கு உள்ளும், ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளுக்கு இடையிலும் எனத் தொடைகள் இருநிலைகளில் அமையும். முன்னதைச் சீர்த்தொடை என்றும், பின்னதை அடித்தொடை என்றும் வழங்குவர். நாற்சீரடியான அளவடியில் பயின்றுவரும் சீர்த்தொடைகளின் வேறுபாடுகளை இடைக்கால யாப்புநூல்கள் தொடைவிகற்பங்கள் எனக் குறிக்கின்றன. இதன் தோற்றுவாய் தொல்காப்பியத்தில் உள்ளது. நாற்சீரடியில் 1,3 ஆகிய சீர்களில் அமைந்துவரும் தொடைவிகற்பத்தை பொழிப்புத்தொடை என்றும், 1,4 ஆகிய சீர்களில் அமைந்துவரும் தொடைவிகற்பத்தை ஒரூஉத்தொடை என்றும் தொல்காப்பியம் (பொருள்.403,404) குறிப்பிடுகின்றது.

இடைக்கால யாப்புநூல்கள், தொடைவிகற்பங்களைக் கணக்கியல் அடிப்படையில் விரித்துரைக்கின்றன. நாற்சீரடியில் ஒரு சீரினை மட்டும் மையப்படுத்தித் தொடைவிகற்பத்தைக் கணிக்க முடியாது. இரண்டு, மூன்று மற்றும் நான்கு என்னும் எண்ணிக்கைகொண்ட சீர்களுக்கு இடையில் அமையும் உறவினைக்கொண்டே தொடைவிகற்பங்களைக் குறிக்க முடியும். நான்கு சீர்களிலும் அமைந்து வருவது ஒருவகைத் தொடைவிகற்பமே. இரண்டு மற்றும் மூன்று சீர்களுக்கு இடையில் பயின்றுவரும் தொடைவிகற்பமே மிகுதி. யாப்பருங்கலக்காரிகை சுட்டும் தொடைவிகற்பமும் அதற்கான சீர்களும் வருமாறு.

வ.எண்	தொடைவிகற்பம்	சீர்கள்
1	இணை	1, 2
2	பொழிப்பு	1, 3
3	ஒரூஉ	1, 4
4	கூழை	1, 2, 3
5	மேற்கதுவாய்	1, 3, 4
6	கீழ்க்கதுவாய்	1, 2, 4
7	முற்று	1, 2, 3, 4

வ.எண்	தொடைவிகற்பம்	சீர்கள்
1	கடை (அ) பின்	2, 4
2	இடைப்புணர்	2, 3
3	கடையிணை	3, 4
4	கடைக்கூழை	2, 3, 4

இவற்றுள் இரண்டு மற்றும் மூன்று சீர்களுக்கு இடையில் பயின்றுவரும் தொடைவிகற்ப வாய்ப்புகள், நிகழ்தகவு அடிப்படையில் முழுமையாகச் சுட்டப்பெறவில்லை. சான்றாக, (2,4), (2,3), (3,4), (2,3,4) ஆகிய சீர்களுக்கு இடைப்பட்ட தொடைவிகற்பங்களைக் குறிப்பிடலாம். யாப்பருங்கலக்காரிகையில் இவை பற்றிய குறிப்புகள் இல்லாவிட்டாலும் யாப்பருங்கல விருத்தியுரையில் இவை குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றுக்குப் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆக, நாற்சீரடியைப் பொறுத்தவரை மேற்கண்ட பதினொரு வகையில்தான் தொடைவிகற்பங்கள் அமைந்துவர வாய்ப்பிருக்கின்றது. இல்லாவிட்டால் எந்த விகற்பங்களும் இன்றி வரலாம். அதற்கும் செந்தொடை என்றொரு பெயர் வைத்திருக்கின்றனர். ஆக, எப்படிப் பாடினாலும் ஏதாவது ஒரு வகைக்குள் அடங்கிவிடும்.

நிறைவுரை

மேற்கண்ட யாப்பியல் கணக்கீடுகளை எல்லாம் நினைவில் வைத்துக்கொண்டுதான் பழந்தமிழ்ப் புலவர்கள் செய்யுள் இயற்றினரா? என்றால், நிச்சயமாக வாய்ப்புக் குறைவு. பழந்தமிழில் பாடுபொருளும் படைப்பு மனநிலையும்தாம் முதன்மையானவை. அன்று பாவடிவங்களும் புலப்பாட்டு உத்திமுறைகளும் வாய்மொழி இலக்கிய மரபின் எச்ச வடிவங்களாக விளங்கின.

வாய்மொழி இலக்கியச் செல்வாக்குப் படிப்படியாகக் குறைந்து எழுத்திலக்கிய வழக்கம் வலுப்பெற்ற பின்னரே யாப்புத்துறையில் கணக்கியலின் ஆதிக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியே இம்மாற்றம் நிகழ்ந்துள்ளதை உணரமுடிகின்றது.

சங்க காலத்திலேயே சில புலவர்கள் 'கணக்காயனார்' என்னும் அடைமொழியைப் பெற்றுள்ளனர். அவர்கள் புலமைத்தொழில் மட்டும் செய்தனரா? வேறு பிற அறிவுத்துறையினையும் சார்ந்து இருந்தனரா? எனத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், இடைக்காலத்தில் யாப்பு, அணி உள்ளிட்ட இலக்கணத்துறை சார்ந்தவர்கள் கணக்கியலில் தேர்ச்சி மிக்கவராக விளங்கியுள்ளனர். இதற்குத் தொல்காப்பியச் செய்யுளியல், யாப்பருங்கலம், யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலக்காரிகை உரை, தொல்காப்பியச் செய்யுளியல் உரைகள், தண்டியலங்காரம் மூலமும் உரையும் போன்றவை சிறந்த சான்றுகள். அவற்றுள் கணக்கீடுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன? என்பதை ஆராய்ந்து பார்ப்பது அறிவிற்கு விருந்தான பணி. அந்நூல்களில் கணக்கியல்படி பல வகைமைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குக் கால்பங்குதான் (கணக்கியல் முன் நிபந்தனையற்ற) சான்றோர் செய்யுட்கள் சான்று பகிர்கின்றன. எஞ்சிய முக்கால்பங்கு உதாரணப் பாடல்களை இலக்கணிகளே திட்டமிட்டு உருவாக்கியுள்ளனர். இஃது இத்துறையில் உள்ள செயற்கைப்பண்பைக் காட்டுகின்றது. நடப்பியலுக்கு மாறானதாக இது விளங்கினாலும், இதனை ஒருவகையில் இன்று பேசப்படும் செயற்கை அறிவாற்றலுக்கு (*Artificial Intelligence*) ஒப்பான திறனாகக் கருத முடியும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் வருக்க எழுத்துக்களை வைத்துப் பாடுதல், இன்ன சொல்லில் தொடங்கி இன்ன வகையில் முடித்தல், ஆசுகவி, சித்திரகவி முதலான சொல்விளையாட்டுகளை நிகழ்த்துதல் போன்றவை சாத்தியமாகியுள்ளன. இத்தகைய செய்கைகளுக்குக் கணக்கியல் நோக்கற்ற வெறும் யாப்பிலக்கணக் கல்வி துணைசெய்திருக்க முடியாது.

துணை நின்றவை

- அடிகளாசிரியர் (பதி.ஆ.), 1985, தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல் இளம்பூரணர் உரை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- இராமலிங்கனார் (உரை.ஆ.), 1974, தொல்காப்பியம் செய்யுளியல் விளக்கம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
- கந்தசாமி சோ.ந., 1989, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (முதற்பாகம் - முதற்தொகுதி), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- கௌமாரீஸ்வரி எஸ். (பதி.ஆ.), 2006, தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
- பிச்சை அ., 2011, சங்க இலக்கிய யாப்பியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- வேங்கடசாமி ந. மு. (பதி.ஆ.), 1969, யாப்பருங்கலக் காரிகை, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

மதிப்பிடப்பெற்றது

வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்

முனைவர் **கி. சங்கர நாராயணன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம், சென்னை - 600 005

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல், தென்னூல், தமிழ்க் காப்பு இயம் முதலான இலக்கண நூல்களில் வேற்றுமை குறித்த கருத்துநிலை அடைந்துவரும் மாற்றங்களையும் வளர்ச்சிநிலைகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

முதலாம் வேற்றுமை

தொல்காப்பியம், எழுவாய் வேற்றுமையைப் பெயர் வேற்றுமை என்றும் முதலாம் வேற்றுமை என்றும் குறிப்பிடுகின்றது. எழுவாய் வேற்றுமைக்கு உருபு கிடையாது. இவ்வேற்றுமை ஏற்கும் பயனிலைகள் ஆறாகும். 1. பொருண்மை சுட்டல் 2. வியங்கொள வருதல் 3. வினைநிலை உரைத்தல் 4. வினைவிற் கேற்றல் 5. பண்புகொள வருதல் 6. பெயர்கொள வருதல் ஆகும் (தொல்.65-67). வீரசோழியம், முதலாம் வேற்றுமையாகக் கருத்தாக் காரகம் என்பதைக் குறிப்பிடுகின்றது. இவற்றின் உருபுகளாகச் சு, அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்பனவற்றைச் சுட்டுகின்றது (வீரம்.சொல்.வேற்றுமை.2). நேமிநாதம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி எழுவாய் வேற்றுமைக்கு இலக்கணம் வகுக்கின்றது. தொல்காப்பியம் சுட்டிய ஆறு பயனிலைகளையே இவ்விலக்கணநூலும் குறிப்பிடுகின்றது (நேமி.41). நன்னூல், பெயராய் நிற்கும் எழுவாய் உருபு ஆறு வேற்றுமைகளை ஏற்கும் எனவும், நீயிர், நீவிர், நான் போன்றவற்றை எழுவாய் ஏற்கும் எனவும், வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது திரிதல் இல்லாத பெயரே எழுவாய் வேற்றுமையாகும் என்கிறது (நன்.சொல்.293-295). இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், நன்னூலைப் பின்பற்றி முதலாம் வேற்றுமைக்கு இலக்கணம் வகுக்கின்றது (இல.வி.197), (தொ.வி.சொல்.56). முத்துவீரியம், தொல்காப்பியம் மற்றும் நன்னூலினைப் பின்பற்றி இலக்கணம் வகுக்கின்றது (மு.வீ.509-512). சுவாமிநாதம், ஐந்து பாலிலும் மூன்று காலத்தினும் மூன்று இடத்தினும் வரும் சொற்கள் எழுவாய் வேற்றுமைக்கு உருபாகவும் வரப்பெறும் என்கிறது (சுவாமி.41). அறுவகை இலக்கணத்தில் வேற்றுமை குறித்த செய்திகள் இடம்பெறவில்லை. தமிழ்நூல், முதல் வேற்றுமைப் பொருளும் உருபும் முழுப்பெயர் மட்டும் தொடர்ப்பட நிற்பதே என்றும், ஒரு தொடரில் செய்பவனே எழுவாய் ஆகும் என்றும் குறிப்பிடுகின்றது. நன்னூல் சுட்டிய பயனிலைகளையே இந்நூலும் பின்பற்றுகிறது (தமிழ்.70-71). தென்னூல், இருதிணைப் பொருள்களின் குறியீடாகக் குழுவாய்க் கிடக்கும் சொற்களுள் ஒன்று அக்குழுவின் நீங்கி ஒன்றை விளக்குதற்கு வினைமுதலாகத் தோன்றும் நிலையே முதல்வேற்றுமையின் பொருள்நிலையாகும் எனவும், எழுவாய் வேற்றுமை தனியொரு சொல்லாக வருதலன்றித் தொகைமொழியாயும், தொடர்மொழியாயும் வரும் எனவும், தெரிநிலை வினையாலணையும் பெயர்தவிர்த்த ஏனைய எழுவாய் பெயர்நிலைச்சொற்கள் காலம் காட்டாது எனவும் குறிப்பிடுகின்றது (தென்.46-48). தமிழ்க் காப்பு இயம் நன்னூலைப் பின்பற்றி எழுவாய் வேற்றுமைக்கு இலக்கணம் வகுக்கின்றது.

இரண்டாம் வேற்றுமை

தொல்காப்பியம் முதலாகத் தமிழ்க் காப்பு இயம் வரையிலான அனைத்து இலக்கணநூல்களும் இரண்டாம் வேற்றுமை உருபாக ஐ என்பதைச் சுட்டுகின்றன. தொல்காப்பியம் (தொல்.71-72), வினையையும் வினைக் குறிப்பையும் இடமாகக் கொண்டு தோன்றுபவை

இரண்டாம் வேற்றுமையாகும் என்கிறது. இரண்டாம் வேற்றுமை ஏற்கும் பயனிலைகளாகக் காப்பு, ஒப்பு, ஊர்தி, இழை, ஒப்பு, புகழ், பழி, பெறல், இழவு, காதல், வெகுளி, செறல், உவத்தல், கற்பு, அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், நிறுத்தல், அளவு, எண், ஆக்;கல், சார்தல், செலவு, கன்றல், நோக்கல், அஞ்சல், சிதைப்பு போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது.

வீரசோழியம் (வீர.4), பற்றுக்கருமம், வீட்டுக்கருமம், இருபுறக்கருமம், தான்தெரிகருமம், தான்தெரியாக்கருமம், கருத்தாக்கருமம், தீபக்கருமம் ஆகியவற்றை இரண்டாம் வேற்றுமை உருபுபேற்கும் பயனிலைகள் என்கிறது. நேமிநாதம், சுவாமிநாதம் (சு.நா.42) ஆகிய இலக்கண நூற்கள் தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணத்தை வரையறை செய்கின்றன.

"ஐயென் னுருபிரண் டாவ ததுவினையும்
எய்தும் குறிப்பும் இயலவரும் - தையலாய்
ஆனொடு மூன்றா வதுதான் வினைமுதலும்
ஏனைக் கருவியுமாம் ஈங்கு" (நேமி.42)

நன்னூல் (நன்.296), ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்ற ஆறு பயனிலைகளைக் குறிப்பிடுகின்றது. இலக்கணவிளக்கம் (இல.வி.199), தொல்காப்பியர் கூறிய இரண்டாம் வேற்றுமைப் பயனிலைகளை மூன்றாகப் பகுக்கிறது.

1. இயற்றல் - 1 (இழைத்தல்)
2. திரித்தல் - 8 (ஒப்பு, இழப்பு, அறுத்தல், குறைத்தல், தொகுத்தல், பிரித்தல், ஆக்கல், சிதைத்தல்)
3. எய்தல் - 19 (மற்றவை யெல்லாம்)

தொன்னூல் விளக்கம் (தொ.வி.57), நன்னூலைப் பின்பற்றி இலக்கணம் வகுக்கின்றது. முத்துவீரியம் (மு.வீ.513-514), காப்பு, ஒப்பு, ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், அஞ்சல், உடைமை என்பனவற்றைப் பயனிலைகளாகக் குறிப்பிடுகின்றது. தமிழ்நூல் (தமிழ்.74), நன்னூல் கூறிய ஆறு பயனிலைகளுடன் விரும்புதல், அறிதல் என்பதனையும் இணைக்கின்றது. தென்னூல் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், திரிபுறல் என்ற பயனிலைகளைக் குறிப்பிடுவதைப் பின்வரும் நூற்பா தெளிவுபடுத்துகிறது.

"ஐயெனப் பெயரிய இரண்டா குவதே
எவ்வழி வரினும் ஆக்கல் அழித்தல்
அடைதல் நீத்தல் திரிபுறல் முதலா
எழுவா யதுதொழில் படுநிலைத் தாகும்" (தென்.50)

தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.109-110), எய்தல், பொருத்தல், நோக்கல், நீத்தல், இயற்றல், காதலித்தல், வேறாக்கல், அளத்தல் முதலிய பயனிலைகளைச் சுட்டுகின்றது.

மூன்றாம் வேற்றுமை

தொல்காப்பியர் (தொல்.73-74), மூன்றாம் வேற்றுமை உருபாக ஒடு என்பதைக் குறிப்பிடுகின்றார். இவ்வேற்றுமை வினைமுதல், கருவி என்ற இரண்டின் அடிப்படையில் தோன்றும் என்பதைப் பின்வரும் நூற்பா விளக்குகின்றது.

"மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே" (தொல்.சொல்.73)

மூன்றாம் வேற்றுமை ஏற்கும் பயனிலைகளாக, அதனினியறல், அதற்றகு கிளவி, அதன்வினைப்படுதல், அதனினாதல், அதனிற்கோடல், அதனொடுமயங்கல் ,அதனோடியைந்த

ஒருவினைக் கிளவி, அதனோடியைந்த வேறுவினைக் கிளவி, அதனோடியைந்த ஒப்பல் ஒப்புரை, இன், ஆன் என்பதைக் குறிப்பிடுகிறது தொல்காப்பியம்.

வீரசோழியம் (வீர.6), ஒடு, ஓடு, ஆல் என்பதை உருபாகக் குறிப்பிடுகின்றது. இவ்வேற்றுமையின் பொருள்நிலையினைப் புறக்கரணம், அகக்கரணம் என்று இரண்டாகப் பிரிக்கின்றது. நேமிநாதம் (நேமி.42), ஆன், ஒடு என்பதை உருபாகச் சுட்டுகின்றது. வினைமுதல், கருவி என்ற பொருள் அடிப்படையில் இவை வரும் என்கிறது.

நன்னூல் (நன்.297), இலக்கணவிளக்கம் (இல.வி.200), தொன்னூல் விளக்கம் (தொ.வி.58), சுவாமிநாதம் (சு.நா.42), தமிழ்நூல் (தமிழ்.75) ஆல், ஆன், ஒடு, ஓடு என்பதை உருபுகளாகக் குறிப்பிட்டு, இவை கருவி, கருத்தா, உடனிகழ்வு என்ற பொருள் அடிப்படையில் பயின்றுவரப்பெறும் என்கின்றன. முத்துவீரியம் (மு.வீ.515-516), ஆல் என்பதை மட்டும் வேற்றுமை உருபாகச் சுட்டுகின்றது. இவை கருவி, கருத்தா, உடனிகழ்வு என்ற பொருள் அடிப்படையில் வரப்பெறும் என்றும் குறிப்பிடுகின்றது.

சுவாமிநாதம் 'கொண்டு' என்ற சொல்லுருபினையும், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் 'உடனே' என்ற சொல்லுருபினையும், தென்னூல் 'உளி', 'மாறு' என்ற சொல்லுருபுகளையும் குறிப்பிடுகின்றன. தென்னூல் 'இன்', 'ஆன்' என்ற மாற்றுருபுகளையும், தமிழ்க்காப்பு இயம் 'ஒடு' என்ற மாற்றுருபினையும் குறிப்பிடுகின்றன. தென்னூல் (தென்.51-56), ஒடு என்ற வேற்றுமை உருபினையும், உடனிகழ்வாய் வரும் ஒருவினைக்கிளவி, வேறுவினைக்கிளவி, ஒப்பல்ஒப்புரை என்ற பயனிலைகளையும் குறிப்பிடுகின்றது.

"மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி
வினைமுதல் கருவியொடு நிகழ்செயல் அதுவே" **(த.கா.இ.111)**

தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.111-14), தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் வகுக்கின்றது.

நான்காம் வேற்றுமை

தொல்காப்பியம் முதலாக அனைத்து இலக்கணநூற்களும் 'கு' என்பதை நான்காம் வேற்றுமை உருபாகச் சுட்டுகின்றன. தொல்காப்பியம் (தொல்.75-76), எப்பொருளாயினும் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையதே நான்காம் வேற்றுமையின் இயல்பாகும் என்கிறது. அதற்குவினையுடைமை, அதற்குடம்படுதல், அதற்குப்படுபொருள், அதுவாகுகிளவி, அதற்குயாப்புடைமை, அதன்பொருட்டாதல், நட்பு, பகை, காதல், சிறப்பு ஆகியன இவ்வேற்றுமையின் பயனிலைகள் ஆகும்.

வீரசோழியம் (வீர.6), கு, பொருட்டு என்பதை உருபாகக் குறிப்பிடுகின்றது. கோளிக்காரகம், ஆர்வக்கோளி, கிடப்புக்கோளி, இரப்புக்கோளி என்பது இதன் பயனிலைகளாகும். நேமிநாதம் நான்காம் வேற்றுமைப் பொருளான கு எந்த இடத்திலும் ஈ பொருளை ஏற்று நிற்கும் என்பதைப் பின்வரும் நூற்பா மூலம் விளக்குகிறது.

"ஒதுங் குகர உருபுநான் காவதஃ
தியாதிடத்தும் ஈபொருளை ஏற்குமாம் - கோதிலா
தின்னுருபைந் தாவ திதனினித் தன்மைத்தி
தென்னு மொருநான் கிடத்து" **(நேமி.43)**

நன்னூல் (நன்.298), தொன்னூல்விளக்கம் (தொ.வி.59) இவ்வேற்றுமை உருபு 'இதற்குஇது' என்ற முறையில் அமைந்துவரப்பெறும் எனவும், இவ்வேற்றுமையின் பயனிலைகளாகக் கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை என்பதையும் குறிப்பிடுகின்றன. இலக்கணவிளக்கம் (இல.வி.201), முத்துவீரியம் (மு.வீ.517-58), தென்னூல் (தென்.58) ஆகிய இலக்கணநூற்கள் நன்னூல் குறிப்பிட்ட பயனிலைகளைப் பின்பற்றுகின்றன.

சுவாமிநாதம் (சு.நா.42), வினைமுதல் கொள்வோனாய்க் கொடைப்பொருளில் வினைச்சொல்லையும், பெயர்ச்சொல்லையும் பயனிலையாகக் கொண்டு முடியும் என்கிறது. தமிழ்நூல் (தமிழ்.76), பயனிலையாகப் பகை, நட்பு, தகுதி, முதற்கருவியாதல், பொருட்டு, எல்லை என்பதைக் குறிப்பிடுகிறது. தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.115) தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் வகுப்பதோடு, 'பொருட்டு' என்ற சொல்லுருபினையும் குறிப்பிடுகிறது.

ஐந்தாம் வேற்றுமை

தொல்காப்பியம் (தொல்.77-78), முதலாக அனைத்து வேற்றுமை உருபுகளும் இன்னினை ஐந்தாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுகின்றது. இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என்ற பொருளில் அமைந்து வருவது இவ்வேற்றுமை என்கிறது தொல்காப்பியம். வண்ணம், வடிவு, அளவு, சுவை, தண்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை, வன்மை, மென்மை, கடுமை, முதுமை, இளமை, சிறத்தல், இழித்தல், புதுமை, பழமை, ஆக்கம், இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல், பன்மை, சின்மை, பற்றுவிடுதல் போன்றன இவ்வேற்றுமையின் பயனிலைகள் ஆகும் என்கிறார் தொல்காப்பியர்.

வீரசோழியம் (வீர.3), ஐந்தாம் வேற்றுமை உருபாக இன் என்பதையும், அவை அவதி, அசலம், சலம் என்ற பொருள்களில் அமையும் என்றும் விளக்குகின்றது. நேமிநாதம் (நேமி.43), தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் அமைக்கின்றது. இவை உவமம், நீக்கம், எல்லை, ஏது என்ற பொருளில் வரப்பெறும் என்கிறது.

நன்னூல் (நன்.299), இலக்கணவிளக்கம் (இல.வி.202), தொன்னூல் விளக்கம் (தொ.வி.60), இல், இன் என்பனவற்றை ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகக் குறிப்பிடுகின்றன. இவ்வேற்றுமை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்ற பொருள்களில் வரப்பெறும் எனவும் குறிப்பிடுகின்றன. இலக்கணவிளக்கம் ஐந்தாம் வேற்றுமை இதனின்இற்று இது என்னும் தன்மையில் வரப்பெறும் என்கிறது.

முத்துவீரியம் (மு.வீ.518-519), இல், இன் என்பனவற்றைக் குறிப்பிடுவதோடு, அச்சம், ஆக்கம், தீர்தல், பற்றுவிடல், நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்ற பொருள்களிலும் வரப்பெறும் என்கிறது. சுவாமிநாதம் (சு.நா.43), இல், இன் என்பனவற்றை ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகக் கொள்கின்றது. இவை ஏது, எல்லை, நீக்கம், உவமை ஆகியப்பொருளில் வந்து பெயரையும் வினையையும் கொண்டு முடியும் என்கிறது.

"ஐந்தன் உருபே இன் இல் என்பர்
நீங்கல் பொருள்தர நிகழும் போதில்
நின்றுஇருந் தென்ப நிரலே இணையும்" (தமிழ்.77)

தமிழ்நூல் இல், இன் என்பதைக் குறிப்பிடுகிறது. தென்னூல் (தென்.58), ஐந்தாம் வேற்றுமை உருபாக இன்னினைச் சுட்டுகின்றது. மேலும், இது ஒன்றையொன்று ஒப்பிட்டும், உறழ்ந்தும், நீக்கியும், எல்லையும் அளவையுமாக இப்பொருளின் இப்பொருள் இந்நிலையினது என்னும் பொருள்பட வரப்பெறும் என்கிறது. நின்று, இருந்து, உம், விட, காட்டினும் என்பனவற்றை ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளாகக் குறிப்பிடுகின்றது.

தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.118-120), இன் என்பதைச் சுட்டுகின்றது. இவ்வுருபு இதனைவிட இது இத்தன்மையது என்னும் பொருளில் வரும் எனவும், இன் உருபு உம் என்னும் இடைச்சொல்லை ஏற்றுவருமானால் ஒப்பீட்டுப் பொருளைச் சிறப்பாகப் புலப்படுத்தும் என்றும் குறிப்பிடுகின்றது. வண்ணம், வடிவம், அளவு, சுவை, தன்மை ஆகியவற்றைக் கொண்டு இதனின்இது இத்தன்மையத்து என்று ஒப்புமைக்காட்டலும், நீங்கல், எல்லை இவற்றின் அகற்சியை இதனின் இது இத்தன்மையத்து என்று காட்டலும் இவை போன்ற பிறவும் ஐந்தாம் வேற்றுமையது பாகுபாட்டில் வரும் எனவும் குறிப்பிடுகின்றது.

ஆறாம் வேற்றுமை

தொல்காப்பியம் (தொல்.79-80), ஆறாம் வேற்றுமை உருபாக 'அது' என்பதைக் குறிப்பிடுகின்றது. இது கிழமைப்பொருளில் வரும் வேற்றுமையாகும். இவ்வேற்றுமையானது தற்கிழமை, பிறிதின்கிழமை என்ற இரண்டு கிழமைப்பொருளில் வரப்பெறும் என்றும் குறிப்பிடுகிறது. இயற்கை, உடைமை, முறைமை, கிழமை, செயற்கை, முதுமை, வினை, கருவி, துணை, கலம், முதல், ஒருவழியுருப்பு, குழு, தெரிந்துமொழிச் செய்தி, நிலை, வாழ்ச்சி என்பன இவ்வேற்றுமையின் பொருள்பாகுபாடுகள் ஆகும்.

வீரசோழியம் (வீரம்.7), ஆறாம் வேற்றுமை உருபாக உடை என்பதைச் சுட்டுகிறது. உடை என்னும் உருபு ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, இன என்னும் சொற்களின் பின் வரப்பெறும் என்கிறது. நேமிநாதம் (நேமி.42), தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் வகுக்கின்றது.

நன்னூல் ஆறாம் வேற்றுமையில் ஒருமைக்கு அது, ஆதுவும், பன்மைக்கு அ என்பதும் உருபாகும் என்கிறது. பண்பு, உறுப்பு, ஒருபொருள் கூட்டம், பலபொருள் கூட்டம், ஒன்று திரிந்து மற்றொன்றாதல் என்னும் ஐந்து தற்கிழமைப் பொருள்களையும், அவையல்லாத பொருள், இடம், காலம் ஆகிய பிறிதின் கிழமைப் பொருள்களையும் உடையனவாக வரப்பெறும் என்பதைப் பின்வரும் நூற்பா தெளிவுறுத்துகிறது.

"ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம்: பண்புஉறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கம் ஆம்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே" (நன்.சொல்.300)

இலக்கண விளக்கம் (இல.வி.203), தொன்னூல் விளக்கம் (தொ.வி.61), முத்துவீரியம் (மு.வீ.512-513) ஆறாம் வேற்றுமையின் இலக்கணத்தை நன்னூலைப் பின்பற்றி வகுக்கின்றன. சுவாமிநாதம் (சு.நா.43), ஆறாம் வேற்றுமையினை ஒருமை, பன்மை என்று பிரிக்காமல் அது, ஆது, அ, உடைய என்பதை உருபாகக் கொள்கிறது. தற்கிழமையில் சினை, குணம், தொழில் என்பதும் பிறிதின் கிழமையில் பொருள், இடம், காலம், என்பது வரும் என்கிறது. உடைய என்ற சொல்லுருபினையும் இது குறிப்பிடுகின்றது.

தமிழ்நூல் (தமிழ்.78), உடைமைப் பொருளில் வருவது ஆறாம் வேற்றுமை உருபாகும் என்கிறது. அது, உடைய என்பனவற்றை உருபுகளாகக் குறிப்பிட்டு, உடைய என்பதைச் சொல்லுருபாகவும் காட்டுகின்றது. தற்கிழமை, உறுப்பு, பண்பு, தொகுதி, திரிபு என்னும் பொருள்களிலும், பிறிதின்கிழமை, பொருள், இடம், காலம் என்னும் பொருள்களிலும் வரப்பெறும் என்கிறது.

"அது வெனப் பெயரிய ஆறா குவதே
பண்புறுப் புக்குழு பலவின் ஈட்டம்
வாழ்நிலை செய்யுள் திரிபி னாக்கம்
இன்னன பிறவும் தன்னினும் பிறிதினும்
இதன திதுவெனும் கிழமைத் ததுவே" (தென்.58)

தென்னூல் (தென்.58-59), அது, ஆது, அ என்ற உருபுகளையும் உடைய என்ற சொல்லுருபினையும் குறிப்பிடுகின்றது. தற்கிழமை, பிறிதி;ன்கிழமை ஆகியவை பண்பு, உறுப்பு, குழு, பலவின் கூட்டம், வாழ்ச்சி, செய்யுளுரிமை, திரிபின் ஆக்கம் என்ற பொருண்மைகளில் வரப்பெறும் என்கிறது. தமிழ்க்காப்பு இயம் (த.கா.இ.121-124), ஒருமைக்கு அதுவும் பன்மைக்கு அவும் உருபாகும் என்கிறது. இது தற்கிழமையாகவும். பிறிதின்கிழமையாகவும் இதனதுஇது என்னும் பொருளில் வரப்பெறும் என்றும், உடைய என்பதைச் சொல்லுருபு என்றும் குறிப்பிடுகின்றது.

கிழமைப் பொருளில் வரும் சொற்களாக இயல்பு, உடைமை, முறைமை, நிலம், வினை, உறுப்பு, கருவி, கலம், துணை, குழு, திரிபு முதலானவற்றைக் குறிப்பிடுகின்றது.

ஏழாம் வேற்றுமை

தொல்காப்பியம் முதலாக அனைத்து இலக்கண நூல்களும் 'கண்' என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியம் (தொல்.81-82), ஏழாம் வேற்றுமை உருபு கண் என்கிறது. இவ்வேற்றுமை வினைசெய் இடம், நிலம், காலம் என்பவற்றை ஏற்று வரப்பெறும் என்கிறது. கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார்;, அயல், புடை, தேவகை, முன், இடை, கடை, தலை, வலம், இடம் என்ற பத்தொன்பது உருபுகளைக் குறிப்பிடுகின்றது.

வீரசோழியம் (வீர.7), உருபுகாளக் கே, உழை, வயின், பக்கல், உழி, இல், கண், சார் என்பதைக் குறிப்பிடுகின்றது. நேமிநாதம் (நேமி.42), தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் வகுக்கின்றது.

"அதுஎன்ப தாறாம் உருபாம் இதன
திதுவென் கிழமையிரண் டெய்தும் - விதிமுறையாற்
கண்ணென்ப தேழாம் உருபாகுங் காலநில
நண்ணும் வினையிடத்து நன்கு" (நேமி.42)

நன்னூல் (நன்.301-302), ஏழாம் வேற்றுமையினை இடப்பொருள் வேற்றமை என்கிறது. அறுவகைப் பெயர்களும் தற்கிழமை மற்றும் பிறிதின்கிழமை என்னும் இரண்டிற்கும் இடமாக நிற்கும் என்கிறது. கண், கால், இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உளை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் என்ற இருபத்தி ஏழு உருபுகளைக் குறிப்பிடுகின்றது.

இலக்கண விளக்கம் (இல.வி.204), இவ்வேற்றுமை உருபு பொருள், இடம், காலம் என்னும் மூவகைக் குறிப்பின் கண் தோன்றலாம் என்கிறது. மேலும், தொல்காப்பியம் குறிப்பிட்ட பத்தொன்பது உருபுகளையும் குறிப்பிடுகின்றது இந்நூல். தொன்னூல் விளக்கம் (தொ.வி.62), பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களும், தற்கிழமை பிறிதின் கிழமைப் பொருளில் வரும் என்கிறது.

முத்துவீரியம் (மு.வி.526-525), நன்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் அமைக்கின்றது. சுவாமிநாதம் (சு.நா.43), இவ்வுருபு பொருள் முதலாக ஆறையும் கருத்தாவின் இடனாக ஏற்று வினையையும் பெயரையும் கொண்டு முடியும் என்கிறது.

தமிழ்நூல் (தமிழ்.79), இல், கண், இடம், பால் முதலிய உருபுகளைக் குறிப்பிடுகின்றது. தென்னூல் (தென்.60-61), இவ்வேற்றுமை பல்வகை இடம், வினைநிகழ்ச்சி, இருவகைக்காலம் ஆகியவற்றை இடனாகக் கொண்டு பிறக்கும் என்கிறது. கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், முன், பின், அயல், புடை, கடை, இடை, தலை, வாய், வலம், இடம், முதல், சார், தேஎம், திசை, உழை, வழி, உழி, உளி, இல், வயின் என்ற இருபத்தியெட்டு உருபுகளைக் குறிப்பிடுகின்றது.

தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.125-127), இல் என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுகின்றது. இவ்வேற்றுமை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றிலும் பலவகையான குறிப்பிலும் வினை நிகழுமிடத்துத் தோன்றும் என்கிறது. இடப்பொருள் உணர்த்தும் சொல்லுருபுகளாகக், கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், முன், பின், அயல், புடை, வலம், இடம், மிசை, சார், வழி, வயின், வாய், தலை, இடை, கடை, பாடு. அளை. ஊழி, திசை, பால் என்ற இருபத்தியேழினைக் குறிப்பிடுகின்றது. ஊடே, இடையே, நடுவே என்பனவற்றை இடப்பொருளில் வரும் கூட்டுச்சொற்கள் என்கிறது.

எட்டாம் வேற்றுமை

தொல்காப்பியம் (தொல்.118), விளியெனப்படுவது தம்மையேற்கும் பெயரோடு விளங்கத் தோன்றும் இயல்புடையது என்கிறது. வீரசோழியமும், நேமிநாதமும் விளியின் இலக்கணத்தைக் குறிப்பிடவில்லை. நன்னூல் (நன்.303), இலக்கண விளக்கம் (இல.வி.205), தொன்னூல் விளக்கம் (தொ.வி.69), தமிழ்நூல் (தமிழ்.81), தென்னூல் (தென்.64), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.131) போன்ற இலக்கண நூற்கள் எல்லாம், படர்க்கையோரைத் தன்முகமாகத் தான் அழைப்பதுவே என்று விளிக்கு இலக்கணம் வகுக்கின்றன.

தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்கினியர் ஈறுதிரிதல், ஈற்றயல் நீடல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் என்னும் நான்கு வகைகளில் விளியானது மாற்றமடையும் என்கிறார் (தொல்.120). நன்னூல் (நன்.303), இலக்கண விளக்கம் (இல.வி.205), தொன்னூல் விளக்கம் (தொ.வி.69), தமிழ்நூல் (தமிழ்.81), தமிழ்க் காப்பு இயம் (த.கா.இ.132) ஆகிய இலக்கண நூற்கள் பெயர்கள் விளியேற்கும் போது அடையும் மாற்றங்களாகத் திரிபு, குன்றல், மிகுதல், இயல்பு, அயல் திரிபு என்னும் ஐந்தாகக் குறிப்பிடுகின்றன.

சுவாமிநாதம் (சு.நா.44), ஈற்றயல் அளபெழல், ஈறுநீடல், ஈற்றயல்நீடல், ஈறுகெடுதல், ஈற்று விகுதி கெட்டு 'ஆ' விகுதி சேர்தல், ஆ, ஓ, ஏ ஆகிய விகுதிகளைப் பெற்று வருதல், ஈற்றயல் அ, ஆ, இ, ஈ பெற்று வருதல், ஈறு அளபெடுத்து வேறு ஒற்று மிகுதல், ஈறுமிகுதல் என்னும் எட்டு விளி மாற்றங்களைக் குறிப்பிடுகின்றது.

தொகுப்புரை

தொல்காப்பியம் முதல் தமிழ்க் காப்பு இயம் வரையிலான இலக்கண நூல்கள் காலமாற்றம், வளர்ச்சியின் அடிப்படையில் வேற்றுமை குறித்த கருத்தாக்கத்தில் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பதிவு செய்துள்ளன. தற்காலத் தமிழின் மொழிநிலை, பல புதிய இலக்கண மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும் கொண்டு திகழ்வதோடு, புதிய இலக்கணக் கூறுகளைக் கொண்டு அமைவதும் கவனிக்கத்தக்கது. இக்கட்டுரையின் அடுத்தக்கட்ட நகர்வு, இக்கோட்பாடுகளை இக்காலத் தமிழில் பொருத்திப் பார்த்து, இக்காலத் தமிழில் இவ்வேற்றுமைகள் அடைந்த மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் இனம்கண்டு இக்காலத் தமிழுக்கான புதிய வேற்றுமைக் கோட்பாட்டினை உருவாக்குவதாகும். இலக்கண உலகில் மொழிநிலையில் ஏற்படும் இவ்வகை மாற்றங்கள், வளர்ச்சிகள், புதிய போக்குகள் போல்வனவற்றைத் தொடர்ந்து காணுவதும், பதிவு செய்வதும் பிற்கால மொழி ஆய்வுகளுக்குப் பெரிதும் பயன்படும்.

துணைநின்றவை

- அகத்தியலிங்கம் ச., 1979, மொழியியல் சொல்லியல், பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.
- அழகேசன் சு.,1991, இலக்கணப் பாதையில், சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில்.
- ……., 1996, இலக்கணச்சுவை, சுதாபதிப்பகம், தூத்துக்குடி.
- ……., 2007, இலக்கணப் பார்வைகளும் பதிவுகளும், சேகர் பதிப்பகம், சென்னை.
- ……., 2012, தொல்காப்பியக் கொள்கைகளும் தமிழ் இலக்கண வளர்ச்சியும், காவ்யா பதிப்பகம், சென்னை.
- அழகேசன் சு. & வேல்மயில் த., 2009, இலக்கணத் தேடல்கள், காவ்யா பதிப்பகம், சென்னை.
- இன்னாசி சூ., 2009, சொல்லியல், பாரி புத்தகப் பண்ணை, சென்னை.
- சக்திவேல் சு., 2003, தமிழ் மொழி வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- ..., 2003, சொற்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

- சண்முகதாஸ் அ., 1982, தமிழ்மொழி இலக்கண இயல்புகள், முத்தமிழ் வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.
- ..., 2008, தமிழ்மொழி இலக்கண இயல்புகள், என்சிபிஎச், சென்னை.
- சண்முகம் செ.வை., 1984, சொல்லிலக்கணக் கோட்பாடு, தொல்காப்பியம் - முதல்பகுதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- ..., 1986, சொல்லிலக்கணக் கோட்பாடு, தொல்காப்பியம் - இரண்டாம் பகுதி, அனைத்திந்தியர்; தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.
- ..., 1992, சொல்லிலக்கணக் கோட்பாடு, தொல்காப்பியம் - மூன்றாம் பகுதி, மணிவாசகன் பதிப்பகம், சென்னை.
- ..., 2001, இக்கால எழுத்துத் தமிழ், குமரன் பப்பிளிஷர்ஸ், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே., 1971, இலக்கணத் தொகை சொல், ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்.
- பரமசிவம் கு., 1983, இக்காலத் தமிழ்மரபு, அன்னம் (பி) லிட், சிவகங்கை.
- பொற்கோ, 1973, இலக்கண உலகில் புதிய பார்வை - தொகுதி 1, என்சிபிஎச், சென்னை.
- ..., 1981, இலக்கண உலகில் புதிய பார்வை - தொகுதி 2, என்சிபிஎச், சென்னை.
- ..., 1989, தமிழ் இலக்கணக் கோட்பாடுகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.
- ..., 1995, இலக்கண உலகில் புதிய பார்வை - தொகுதி 3, என்சிபிஎச், சென்னை.
- ..., 2006, இக்காலத் தமிழ் இலக்கணம், பூம்பொழில் வெளியீடு, அடையாறு, சென்னை.

மதிப்பிடப்பெற்றது

கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்

முனைவர் **ப.திருஞானசம்பந்தம்**
முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 21

சங்க இலக்கியங்களுக்கு அடுத்த நிலையில் அமைந்திருப்பன பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள். இவை வெண்பா யாப்பினைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. வெண்பா யாப்பின் அனைத்து வகைகளும் இந்நூலின் பாடல்களில் பயின்றுள்ளன. குறிப்பாகக் குறள்வெண்பாவும் நேரிசை வெண்பாவும் அதிக இடத்தைப் பெற்றுள்ளன. இப்பதினெண் கீழ்க்கணக்குப் பாடல்களைப் பாடிய புலவர்களிடம் சில மரபுகள் தொடர்ந்துள்ளதைப் பார்க்க முடிகின்றது. அவற்றுள் ஒன்று நேரிசை வெண்பாவாகப் படைக்க முயற்சித்த பாடல்கள் இன்னிசை வெண்பா அமைப்பைப் பெற்றமைதல். இது குறித்து இனி விரிவாகக் காணலாம்.

பாடலை நேரிசை வெண்பா அமைப்பில் படைக்க வேண்டும் என்று கருதிய புலவர்கள் முதல் இரண்டடிகளை ஓரெதுகையும் தனிச்சொல்லும் பெறும்வண்ணம் அமைத்துவிட்டனர். பின்னிரு அடிகளைப் படைக்கும்போது எதுகை அடிப்படையில் விகற்பத்தை அமைக்க முடியாத சூழலில் சில பாடல்கள் வடிவ நோக்கில் இன்னிசை வெண்பாவாக அமைந்து போய்விட்டன. இவ்வகை அமைப்பிலான பாடல்கள் கீழ்க்கணக்கின் இலக்கியங்களில் பயின்று வருகின்றன. நேரிசை வெண்பா இன்னிசையாதல் என்ற நிலையில் வரும் இவ்வெண்பாவின் வடிவங்கள் குறித்த சில கருத்துக்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன. இவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

- நேரிசை வெண்பாவின் இலக்கணம்
- நேரிசை வெண்பாவுக்குத் தனிச்சொல்லிடும் மரபு உருவாக்கம்
- கீழ்க்கணக்கு நூற்றொகுதியில் உள்ள நேரிசை வெண்பாக்கள்
- கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்

நேரிசை வெண்பாவின் இலக்கணம்

நான்கடியாய் இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல்லைப் பெற்று வருவது நேரிசை வெண்பாவாகும். இந்நேரிசை வெண்பா ஒருவிகற்பமாயும் இருவிகற்பமாயும் அமையும். "நேரிய இசையால் அமைவது நேரிசை வெண்பா" (ந.வீ.செயராமன், 1978:89) என்னும் தொடர் இப்பாவின் தன்மையைச் சுட்டுகின்றது. இந்நேரிசை வெண்பாவிற்கு இலக்கண நூல்களும் அவற்றின் உரைகளும் இலக்கணம் வகுத்துள்ளன. யாப்பருங்கலம் நேரிசை வெண்பாவிற்குரிய இலக்கணத்தைச் சற்று நுட்பமாக வகுத்திருப்பதை,

நாலோ ரடியாய்த் தனியிரண் டாவதன்
ஈறொரூஉ வாய்முற் றிருவிகற் பொன்றினும்
நேரிசை வெண்பா எனப்பெயர் ஆகும் (60)

எனும் நூற்பாவழி அறியலாம். நேரிசை வெண்பாவின் இரண்டாமடியின் இறுதியில் ஒரூஉ எதுகையோடு மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று முதலிய எதுகைகளும் வரலாம் என்று யாப்பருங்கலம் இலக்கணம் வகுத்திருக்கின்றது. இவ்வரையறையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது கீழ்க்கணக்கின் நேரிசை வெண்பாக்கள் பெரும்பான்மை ஒரூஉ எதுகையையும்

சிறுபான்மை பிற எதுகைகளையும் பெற்றிருக்கின்றன. இது மட்டுமல்லாமல் முன்னிரு அடிகளில் நேரிசை வடிவத்தையும் பின்னிரு அடிகளில் இன்னிசை வடிவத்தையும் பெற்று வருகின்ற சில வெண்பாக்கள் கீழ்க்கணக்கில் இடம்பெற்றிருப்பதை அறிய முடிந்தது. இவ்வெண்பாக்கள் குறித்துச் சில குறிப்புகள் இப்பகுதியில் முன்வைக்கப்படுகின்றன.

வெண்பாவின் வகைகளில் தனித்த சிறப்பைக் கொண்ட பாவாக நேரிசை வெண்பா உள்ளது. இந்நேரிசை வெண்பா யாப்பின் சிறப்பையும், குறள்வெண்பா முதலிய வெண்பாவின் பிற வடிவங்களிலிருந்து நேரிசை வெண்பா வடிவம் பெறும் தனித்துவத்தையும் பின்வரும் கருத்து உணர்த்தி நிற்கின்றது.

> *"வடிவ வளர்ச்சி என்ற நிலையில் வெண்பாக்களை வி.செல்வநாயகம் அவர்கள் சுட்டிய வளர்ச்சி நியதியின் அடிப்படையில் நோக்கும்போது குறள், சிந்து, இன்னிசை, பஃறொடை என்பன அதன் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்கள் எனக் கருதலாம். அவ்வளர்ச்சிக் கட்டங்களின் இறுதியில் செப்பமானதாகப் பேணப்படும் நிலையை எய்திய வடிவமாக நேரிசை வெண்பாவைக் கொள்வது சாலும். இரண்டு முதற் பன்னிரு அடிகள் வரை பாடப்பட்டு வந்த வெண்பா நான்கடிகளில் அமைந்து இரண்டாமடியின் ஈற்றிலே தனிச்சொற் பெற்ற நிலை நேரிசை - செப்பமான ஓசை - எனக் கொள்ளப்பட்டமையை உய்த்துணர முடிகிறது. நான்கடிகளால் அமையும் வெண்பாக்களில் இன்னிசை வெண்பாவே கால முதன்மையுடையது என அ.சிதம்பரநாதச் செட்டியார் தெரிவித்துள்ள கருத்தும் இத்தொடர்பில் சிந்திக்கத்தக்கது. வெண்பா வடிவ வளர்ச்சியின் உயர்நிலையான நேரிசை வெண்பாவின் அமைப்புநிலை தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது."* (நா.சுப்பிரமணியம்:1985:31)

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பார்க்கும்போது வெண்பா யாப்பானது மனனம் செய்துகொள்வதற்குரிய வடிவமாகவும், அதை மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டு வருவதற்கேற்ற வடிவமாகவும் கருதியே நம் பழந்தமிழ்ப் புலவர்கள் வெண்பா யாப்பினைக் கையாண்டுள்ளனர்.

மக்கள் நினைவுகொள்ளுதற்கென்று சில முறைகளைக் கையாளுகின்றோம். வெண்பாவால் தொகைப்படுத்தல் அம்முறைகளுள் ஒன்று. 'முருகு பொருநாறு பாணிரண்டு' என்ற வெண்பா பத்துப்பாட்டினையும், 'நற்றிணை நல்ல குறுந்தொகை' என்ற வெண்பா எட்டுத்தொகையினையும் 'நாலடி நான்மணி நானாற்பது' என்ற வெண்பா பதினெண் கீழ்க்கணக்குப் பனுவல்களையும் இலக்கியப் பட்டியல் செய்துள்ளன.

> *"ஓரின நூல்களை நினைவு கொள்ளவும், ஒன்று படித்தபின் ஒன்றைப் படிக்கவும், நூலகங்களில் இனநூல்களை வரிசைப்படுத்திக் கொள்ளவும் இப்பட்டியல்கள் உதவுகின்றன. அழியாமற் காப்பதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் இம்முறை வழி செய்திருப்பது கண்கூடு."* (வ.சுப.மாணிக்கம்,1971:100)

மேற்சுட்டிய கருத்துகள் அனைத்தும் நேரிசை வெண்பாவின் சிறப்பைப் பறைசாற்றுவனவாய் அமைகின்றன. மேலும் எளிதாய் மனனம் செய்வதற்கேற்ற வடிவமாக நேரிசை வெண்பா உள்ளதையும் அறிய முடிகின்றது.

நேரிசை வெண்பாவுக்குத் தனிச்சொல்லிடும் மரபு உருவாக்கம்

நான்கடி அளவில் வெண்பாவில் வரும் நேரிசை, இன்னிசை என்னும் இருவகைகளையும் வேறுபடுத்திக் காட்டுவதற்கு இடம்பெறும் தனிச்சொல் என்னும் மரபு எப்படி உருவானது என்பது குறித்து அறிந்து கொள்வது என்பது மிக இன்றியமையாததாகும். நேரிசை வெண்பா பாடலின்

இரண்டாமடியில் வரும் ஒரூஉ எதுகை வழங்கும் மரபிருந்ததை விருத்தியுரை முதலான உரையாசிரியர்கள் சுட்டியுள்ளனர். இம்மரபு காலவோட்டத்தில் வழக்கற்று நேரிசையில் கோடிடும் வழக்கம் உருவாகியது. எனினும் நேரிசை வெண்பாவில் முதன்மை பெற்ற இம்மரபு குறித்த பின்வரும் ஆய்வாளர்களின் கருத்துகள் இங்கு மனங்கொள்ளத் தக்கனவாக உள்ளன.

> *"பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினாறு நூல்கள் இந்த மாற்றத்தைப் பெற்றுள்ளன என்பதனை நாம் காணாமல் இருக்க முடியாது. அந்தப் பதினாறு நூல்களிலும் பதினொரு நூல்கள் இரண்டாம் அடியில், தனிச்சொல் பெற்றும், பெறாமலும் வந்துள்ளன. அவற்றில் சிறுபஞ்சமூலமும் ஏலாதியும் இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று வந்துள்ளன. திணைமாலை நூற்றைம்பதில் ஒருபாடல் தவிர, ஏனைய பாடல்கள் அவ்வாறே இடம்பெற்றுள்ளன. இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகிய இரு நூல்களிலும் ஒரு பாடலாவது அவ்வாறு காணுமாறில்லை. இரண்டாம் அடியின் இறுதியில் ஒலி இயைபிற்காக, முதலிரண்டடிகளில் தனிச்சொல் பெய்திருப்பது புலவர்களின் தன்னார்வத்தைக் காட்டுகிறது. சுருங்கக்கூறின், முதலிரு அடிகளுக்கு இயைய, தனிச்சொல்லை எதுகைக்காக அமைத்துக் கொண்டனர் என்று எண்ணத் தோன்றுகின்றது. தனிச்சொல் புலவர்களால் இவ்வாறு மெல்ல அறிமுகமாகியது எனலாம். இவ்வகை வெண்பா பழங்கால வடிவங்கள் ஏனையவற்றோடு இணைந்தே பயின்று வந்துள்ளது என்பதை அறியலாம். ஆனால், காலப்போக்கில் சில நூல்களுக்கு இது மட்டுமே கருவியாக அமைந்தது. இவ்வகையில் இத்தொகை நூல்களில் அதன் வடிவம் அமைந்திருப்பினும், இந்நூல்கள் ஏனைய வடிவத்தை முழுமையாகப் பெற்றிருப்பதை அறிகிறோம்"* (அ.சிம்பரநாதன், 2009:83,84)

அ.சிதம்பரநாதன் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் எந்தெந்த நூல்கள் ஒரூஉ எதுகை மரபைப் பெற்றுள்ளன, எந்த நூல்கள் இம்மரபைப் பெறவில்லை என்று குறிப்பிடுகின்றார். மேலும் இம்மரபைப் புலவர்கள் ஒலி இயைபிற்காகத்தான் அமைத்தனர். அது பின்னாளில் சில நூல்களில் மரபாக மாற்றப்பட்டுவிட்டது என்றும் கருத்துத் தெரிவிக்கிறார். இத்தொடர்பில் இணைத்து எண்ணத்தக்க மற்றுமொரு கருத்து வருமாறு:

> *"நேரிசை வெண்பாக்களில் தனிச்சொல்லை இரண்டாவது அடியில் சிறியதொரு கோடு அமைத்துத் தனிப்படக் காட்டுவது இப்போது வழக்கமாயுள்ளது. இவ்வழக்கம் சமீப காலத்திலேதான் ஏற்பட்டது. முற்காலத்து ஏட்டுப் பிரதிகளில் இது கிடையாது. முதன்முதலில் அச்சிடும் முயற்சியில் இறங்கியவர்களில் சிலர் சிறிது வெற்றிடம் விட்டும், சிலர் இடம்விடாது தொடர்ந்தும் தனிச்சொல்லைப் பதிப்பித்தனர். உதாரணமாக 1831-ல் தாண்டவராய முதலியாரால் 'பழுதற ஆராயப்பட்டு' வெளிவந்த 'திருக்குறண் மூலமும் நாலடி நானூற்றின் மூலமும்' என்ற பதிப்பைக் காண்க. 1868-ல் வெளியிட்ட வடமலை வெண்பாவும் இங்ஙனமே பதிப்பிக்கப்பட்டுள்ளது. வேறுசிலர் தனிச்சொற்களுக்கு முன் கலிவெண்பாவில் உடுக்குறியிட்டுப் பதிப்பித்தனர். மிகப் பிற்பட்ட காலத்தில்தான் (சுமார் 1875) கோடிட்டுக் காட்டும் வழக்கம் ஏற்பட்டது. தனிச்சொல்லை விதித்துள்ள இலக்கண நூல்களில் அதனை இவ்வாறு காட்ட வேண்டும் என்ற குறிப்புக் கொடுக்கப்படவில்லை. கலிப்பா முதலியவற்றுள் தனிச்சொல் வரும்போது அதனைக் கோடிட்டுக் காட்டும் வழக்கம் இன்றும் கிடையாது. நேரிசை வெண்பாவிலும் கலிவெண்பாவிலும் மட்டும்தான் இதனை இப்போது கையாண்டு வருகிறார்கள்"* (எஸ்.வையாபுரிப்பிள்ளை, 1944: xi, xii)

நேரிசை வெண்பாக்களில் தனிச்சொல்லை இரண்டாவது அடியில் சிறியதொரு கோடிட்டுக் காட்டும் மரபைப் பதிப்பாசிரியர்கள் உருவாக்கினர் என்று குறிப்பிடுகின்றார். இதற்கு முன்பிருந்த ஓலைச்சுவடிகளில் இம்மரபு இடம்பெறவில்லை என்பதையும் இவர் பதிவு செய்கின்றார். மேலும்

இம்முயற்சியை முன்னெடுத்த பதிப்பாசிரியர்கள் குறித்தும் இவர் குறிப்பிட்டுள்ள கருத்து பதிப்பியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க கருத்தாக்கமாக உள்ளது.

கீழ்க்கணக்கு நூற்றொகுதியிலுள்ள நேரிசை வெண்பாக்கள்

நான்கடியைப் பெற்று அமைகின்ற நேரிசை வெண்பாக்கள் கீழ்க்கணக்கின் அற, அக, புற நூல்களுள் பயின்று வந்துள்ளன. இவ்வகை நூல்களில் திருக்குறள், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, முதுமொழிக்காஞ்சி ஆகிய நான்கு அற நூல்களைத் தவிர ஏனைய பதினான்கு அற, அக, புற நூல்களில் இந்நேரிசை வெண்பாக்கள் காணப்படுகின்றன. கீழ்க்கணக்கின் அக நூல்களில் காணப்படுகின்ற வெண்பாவின் தன்மையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஆய்வாளரின் கருத்தும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

சங்க மருவிய காலப்பகுதியில் வெண்பா யாப்புத் தலைமை பெற்று விளங்கியதால், அக்காலப் புலவர்கள் அகத்திணைப் பொருளை வெண்பாவில் அமைத்துப் பாடினர். புணர்தல், பிரிதல் முதலிய ஒழுக்கங்களை ஒன்றன்பின் ஒன்றாக வைத்துப் புலவர்கள் கீழ்க்கணக்கு நூல்களிலே கூறியமுறை பிற்காலங்களில் எழுந்த கோவைப் பிரபந்தத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருந்தது எனக் கருதக் கிடக்கின்றது.

> *"இந்நூல்கள் அன்பினைந்திணை ஒழுக்கங்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மையும், எழிலும் இனிமையுற அவற்றை எடுத்தியம்புஞ் சிறப்பும் கண்டு இன்புறற்பாலன. இந்நூல்களுட் பல்லாற்றானும் சிறப்புற்று விளங்குவது திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலாகும்"* (வி.செல்வநாயகம், 2005:47)

அகநூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வெண்பா வடிவம் பிற்காலக் கோவை இலக்கியங்களுக்கு அடிப்படையாக அமைந்ததை மேற்சுட்டிய கருத்து உணர்த்துகின்றது. இதில் சிறப்புற்று விளங்கும் அகநூலான திணைமாலை நூற்றைம்பதில்தான் மிக அதிகமான நேரிசை வெண்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

> *"பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள நேரிசை வெண்பாக்களைச் சோ.ந.கந்தசாமி பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார். 'நாலடியார் 309, நான்மணிக்கடிகை 52, பழமொழி நானூறு 225, களவழி நாற்பது 40, ஆசாரக்கோவை 6, திரிகடுகம் 50, சிறுபஞ்சமூலம் 97, ஏலாதி 81, கார்நாற்பது 13, திணைமொழி ஐம்பது 3, ஐந்திணை ஐம்பது 35, ஐந்திணை எழுபது 27, திணைமாலை நூற்றைம்பது 150, கைந்நிலை 9 ஆக மொத்தம் 1067 வெண்பாக்கள் கீழ்க்கணக்கில் நேரிசை வெண்பாக்களாக உள்ளன"* (1989:611, 612).

நேரிசை வெண்பா அமைப்பினை முன்னிரு அடிகளில் பெற்று, பின்னிரு அடிகளில் இன்னிசை வெண்பா அமைப்பைக் கொண்ட பாடல்கள் நாலடியார், நான்மணிக்கடிகை, ஐந்திணை ஐம்பது, கார்நாற்பது, களவழி நாற்பது ஆகிய ஐந்து நூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. பழமொழி நானூறு, திரிகடுகம், ஏலாதி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை, ஐந்திணை எழுபது ஆகிய ஒன்பது நூல்களில் இவ்வகை அமைப்பிலான பாடல்கள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ - டு)

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் - றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின். (நாலடி.151)

வீறுசால் வேந்தன் வினையு முடிந்தன

வாறும் பதமினிய வாயின - வேறோ
டருமணி நாக மனுங்கச் செருமன்னர்
சேனைபோல் செல்லு மழை. (கார்நாற்.20)

இவ்வடிவ மரபை வெண்பா வடிவிலான பிற்காலத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பிட்டும் ஆராய வேண்டும்.

மேற்கண்ட நாலடியார், கார்நாற்பது பாடல்களின் முதல் இரண்டடிகள் முறையே 'அங்கண் திங்களுஞ்' என்றும் 'வீறுசால் வாறும்' என்றும் ஓரெதுகையைப் பெற்று நேரிசை வெண்பாவுக்குரிய அமைப்பிலுள்ளன. ஆனால் இவ்விரு பாடலின் பின்னிரு அடிகளில் எதுகையமைப்பு ஒத்துவராத காரணத்தினால் இன்னிசை வெண்பா அமைப்பைப் பெற்றுள்ளன. கார்நாற்பதின் பாடலில் இரண்டாமடியின் எதுகைக்கேற்ற வகையில் றகரவருக்க ஒரூஉ எதுகையைப் பெற்று அமைந்திருப்பதும் இங்குச் சுட்டத்தக்கது. இவ்வமைப்பிலான பாடல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் பாடிய புலவர்கள் சிலர் தத்தம் பாடல்களுள் பின்பற்றயிருப்பதைக் கண்ணுற முடிகின்றது. இம்மரபை ஒரு புலவன் படைக்க இன்னொருவன் பின்பற்றினானா அல்லது இம்மரபு அக்காலப் பாடல்களுள் இடம்பெற்றிருந்த மரபா என்பது குறித்து மேலும் சிந்திப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

தொகுப்புரை

கீழ்க்கணக்கு நூல்களைப் பாடிய புலவர்களிடையே காணப்படும் பின்வரும் மரபை இப்பகுதி கவனப்படுத்தியுள்ளது. நேரிசை வெண்பாவாகப் படைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் முதலிரு அடிகளைப் படைத்த புலவன், பின்னிரு அடிகளைப் படைக்கையில் ஓர்மையில்லாமல் பாடலின் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வடிவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கா நிலையைக் காணமுடிகின்றது. இவ்வாறு படைக்கப்பட்ட வெண்பாவைப் 'புலவன் நேரிசையாகப் படைக்கக் கருதிய வெண்பா' என்னும் தன்மையில் அவற்றின் இயல்புகள் இங்கு எடுத்து உரைக்கப்பட்டுள்ளன. இவ்வகை வெண்பாக்கள் கீழ்க்கணக்கின் எல்லா நூல்களிலும் இடம்பெறவில்லை. ஒரு சில நூல்களில் மட்டும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக நாலடியார், களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, கார் நாற்பது, நான்மணிக்கடிகை உள்ளிட்ட இலக்கியங்களில் பயில்வது சிறப்பாகக் கருதத்தக்கது.

பதினெண்கீழ்க்கணக்கின் புலவர்களால் படைக்கப்பட்ட இவ்வகையான நேரிசை வெண்பா வடிவங்களைப் பிற்காலப் புலவர் பலரும் படைத்துள்ளனரா? என்பதைக் குறித்து ஆராய வேண்டியதும் அவசியமாகின்றது.

கீழ்க்கணக்கின் சமகாலத்திலும் அதற்குப் பின்னரும் தோன்றியுள்ள சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம், பத்துப்பாட்டின் இறுதியில் உள்ள வெண்பாக்களின் அமைப்புகளோடு இணைத்து நோக்கும் முயற்சிகளும் விரிவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இப்பகுதி முன்வைக்கின்றது. இவ்வாறு ஒப்பிட்டு நோக்கும்போது இம்மரபு பிற்கால இலக்கியங்களில் தொடர்ந்துள்ளதைக் காண முடியும். இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

துணைநின்றவை

- *1892 ஜைன முனிவர்கள் இயற்றிய நாலடி நானூறு மூலம், தெளிபொருள் விளக்கப் பதவுரை: ஊ.புஷ்பரத செட்டியார், கலாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை.*

- 1876 களவழி நாற்பது மூலமும் உரையும், தி.சுப்பராய செட்டியார் (உ.ஆ.), பு.தெய்வசிகாமணி முதலியார் (ப.ஆ.), மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை.
- 1903 ஐந்திணை ஐம்பது மூலமும் உரையும், ரா.இராகவையங்கார், தமிழ்ச்சங்க முத்திரா சாலைப்பதிப்பு, செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை.
- 1917 கார்நாற்பது மூலமும் உரையும், கா.ர.கோவிந்தராஜ முதலியார் (உ.ஆ.), மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை.
- 1924-25 நான்மணிக்கடிகை மூலமும் உரையும், வே.இராஜகோபாலையங்கார் (ப.ஆ.), கம்பர் விலாஸம், சென்னை.
- 1944 கபிலர், இன்னா நாற்பது (பழைய உரையுடன்), எஸ்.வையாபுரிப் பிள்ளை (ப.ஆ.), சக்தி காரியாலயம், சென்னை: மதுரை.
- 1971 வ.சுப.மாணிக்கம், இலக்கிய விளக்கம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
- 1978 ந.வீ.செயராமன், சிற்றிலக்கியத் திறனாய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- 1985 நா.சுப்பிரமணியன், தமிழ் யாப்பு வளர்ச்சி (ஆய்வேடு), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
- 1989 சோ.ந.கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதற்பாகம் - முதற் பகுதி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
- 2005 வி.செல்வநாயகம், தமிழ் இலக்கிய வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
- 2009 அ.சிதம்பரநாதன், தமிழ் யாப்பியல் உயராய்வு (கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை), மொழிபெயர்ப்பு: இராம. குருநாதன், விழிகள் பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்

முனைவர் **மு.நாகராஜன்**
தமிழ் - உதவிப் பேராசிரியர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை - 641 029. அலைபேசி: 90923 61536

தனிமனிதனுக்கென்று சில கடமைகள் உள்ளன. அவன் கல்வி கற்க வேண்டும். நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொள்ள வேண்டும். இல்லறத்தாருக்கென்று சில கடமைகள் உள்ளன. அவர்கள் இல்லறத்தை நல்லறமாக மாற்றவேண்டும். ஈகைப் பண்புடையவராகவும் பிறரது துன்பத்தைப் போக்குபவராகவும் விளங்கவேண்டும். நல்லோருடன் நட்புப் பாராட்டவேண்டும்.

சமுதாயத்திற்கென்று சில கடமைகள் உள்ளன. சமுதாயத்தில் உள்ளோர் தங்களது கடமைகளை அறிந்து பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும். சமுதாயத்தோடு தொடர்புடையதே அரசு. சமுதாயத்தைக் கட்டுப்பாட்டிற்குள் முறையாக இயங்க வைப்பதோடு மக்களை நெறிப்படுத்தவும் உண்டான அமைப்பே அரசு.

நல்லரசு நடக்கக்கூடிய நாட்டில் மக்கள் இன்பமும் கொடுங்கோலாட்சி புரியும் நாட்டில் மக்கள் துன்பமும் அடைவர். ஆதலால் நாட்டை முன்னின்று வழிநடத்தக்கூடிய அரசர்கள் நற்குணங்களுடன் கல்வியறிவு உடையவராகவும் எதனையும் ஆராயும் திறன் கொண்டவராகவும் இருக்கவேண்டும்.

அரசியல் - பொருள் விளக்கம்

சமுதாயம் கட்டுப்பாட்டிற்குள் முறையாக இயங்குவதற்கும் மக்களை நெறிப்படுத்துவதற்கும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே அரசு. ஒன்றுக்கு மேற்பட்டோர் இணைந்து குடும்பத்தை உருவாக்கிப் பின் சமூகத்தை அமைத்தனர். அச்சமூகத்தை வழிநடத்தும் அரசரைப் பற்றியும் அரசனது ஒழுக்கங்களையும் நாடு, மக்கள், அமைச்சர், படைவீரர், தூதுவர், ஒற்றர் போன்றவர்களின் செயல்பாடுகளையும் நீதி நூல்கள் உணர்த்துகின்றன. இவற்றின் தொகுப்பே அரசியலாகும். 'மலர்க மாநில சுயாட்சி' என்னும் நூலில்

> **"ஒரு சமுதாயத்தைச் சார்ந்து மக்கள் அவர்களது அரசியல் பொருளாதாரச் சமுதாயக் குறிக்கோளை அடைவதற்காகத் தங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய பொது ஒழுக்கவிதிகளை ஏற்படுத்திக்கொண்டு அந்த விதிகளில் கட்டுப்பாட்டிற்குள், முறையாக இயங்கி வருதல் இன்றியமையாததாகும். அந்த விதிகளை அமல்படுத்துவதற்கும் அதற்குச் சமுதாய மக்களை அடிபணிந்து நடக்கச் செய்வதற்காகவும் ஏற்படுத்தக்கூடிய ஓர் அமைப்பையே அரசாங்கம் என்று குறிப்பிடுகிறோம்"** (ப.11)

என்கிறார் ஆனந்தம்.

திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம் என்னும் நூலில்

> **"அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம், கொள்கை. அரசியல் என்பது வாழும்முறை அல்லது வாழ்க்கை முறை ஆகும். அஃதொரு சமுதாய வாழ்க்கை முறை"** (ப.102)

என்கிறார் தாமரைச்செல்வி. ஒப்பீட்டரசியல் என்னும் நூலில்,

> **"மக்கள் அமைதியாக வாழ்ந்து, முன்னேற்றமடையவும், செழுமையை அடையவும் மக்களுக்கு ஓர் அரசாங்கம் அவசியம்"** (ப.23)

என்கிறார் திலகவதி.

அரசியல் சமுதாய வாழ்க்கைக்கு ஒழுங்கமைதியைத் தருகிறது. ஒன்றுக்கு மேற்பட்டோர் கூடி வாழவும், பொருளியல் ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழிவகுத்துத் துணை செய்கிறது. சிறந்த அரசியல் நிலவும் நாட்டில்தான் ஒழுங்குகள் நிலவும்.

உலகச் சிந்தனையாளர்களின் பொன்மொழிகள் என்னும் நூலில்

"நாட்டு மக்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் முதற் கடனாக இருக்கவேண்டும்" (ப.70)

என்கிறார் பழனிச்சாமி. சிறந்த கல்வியை மக்கள் அறிந்தாலே போதும் வேறு செல்வத்தை நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

"ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயன்இன்றே
வேந்தமைவு இல்லாத நாடு" (740)

என்னும் குறளில் வள்ளுவர் ஒரு நாட்டிற்கு வேண்டிய அனைத்து வளமும் இருந்தபோதிலும் அரசு சரியாக அமையவில்லை எனில் வளமான நாட்டைப் பெற்றும் பயனில்லை என்கிறார்.

பலவகை வளங்கள் நிறைந்த நாட்டில்தான் அமைதியும் இன்பமும் குடி கொண்டிருக்கும். செல்வத்தில் சிறந்த நாடுதான் வளமுள்ள நாடாகும். அவ்வளமுள்ள நாட்டிலேதான் மக்கள் ஒற்றுமையுடனும் ஒழுக்கமுடனும் வாழ்வார்கள். இன்பத்தமிழ் என்னும் நூலில்,

"பசியும் பஞ்சமும் - வஞ்சகமும் துரோகமும் - இலஞ்சமும் எதிர்கொள்ளும் வரிக்கொடுமையும் - போரும் பூசலும் - போராட்டமும் பொல்லாங்குத்தனமும் - நயவஞ்சக நச்சரவமும் இல்லாத மக்கள் உறைந்திடும் நாடுகள் நிறைந்த நானிலம்" (ப.58)

என மகிழ்வான உலகின் கூறுகளைக் காட்டுகின்றார் தங்கராசு.

"நற்புடைய நாடு அமிர்து" (சிறுபஞ்ச.4) என்னும் பாடலில் காரியாசான் வளமுள்ள நாடே அமிர்தம் என்கிறார்.

"...பட்டினம் கொண்டு ஆளும்
நாட்டான் வீறு எய்துவர்"

என்னும் (நான்மணி.86) பாடலில் விளம்பி நாகனார், ஒரு நாட்டின் வளங்களாலேதான் அரசர் பெருமை எய்துவர் என்கிறார்.

"நாடென்ப நாடா வளத்தன"(739)

என்னும் குறளில் வள்ளுவர் தேடி வருந்தாமல் எளிதில் கிடைக்கத்தக்க செல்வத்தையுடைய நாடுகளே நாடுகள் என்கிறார். இக்கருத்தினைப் பற்றிச் சிந்திக்கும்போது அன்றைய தமிழகத்தில் எப்படிப்பட்ட மனிதர்கள் வாழ்ந்திருப்பர் என்பதை உணர முடிகிறது.

"...ஒருவழி
நாட்டுள்ளும் நல்ல பதிஉள"

என்னும் (நான்மணி.65) பாடலில் விளம்பிநாகனார் வளமற்ற நாட்டிலும் நல்ல ஊர்கள் உள்ளன என்கிறார். **"நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை"** (நீதிக்களஞ்சியம்,49) என்னும் பாடலில் ஔவையார், நாட்டில் உள்ளோர் நலமாகவும் வளமாகவும் வாழ்ந்தால் திருட்டு நிகழாது என்கிறார்.

வளமுள்ள நாடே அரசனுக்கு அமிர்தம். அவ்வளமான நாட்டினாலே அவனுக்குப் பெருமை. நாட்டில் உள்ளோர் நலமாகவும் வளமாகவும் வாழ்ந்தால்தான் திருட்டு நிகழாது. ஆதலால் ஒவ்வொரு நாட்டையும் வளமான நாடாக மாற்றவேண்டும். நல்லதொரு நாட்டிற்கும் அரசியலுக்கும் வளமே அடிப்படை என்பதை அனைவரும் அறிந்து செயல்பட வேண்டும்.

அரசியல் எனப் பொதுப்படக் கூறினும் அதனுள் பல்வேறு கூறுகளும் அடங்குவதை உணரமுடிகிறது. அதாவது நல்லதொரு அரசு அமைக்க, அரசியல் நிலவ, அடிப்படையாக அடித்தளமாக உள்ளவர்கள் மக்கள். அம்மக்களை ஆனந்தமாக வாழ வைக்க அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும். அம்மக்களை நெறிப்படுத்தும் தலைமை சிறப்பாக இருக்க வேண்டும்.

மக்களின் கடமைகள்

மக்கள் என்னும் சொல் ஓரரசின் ஆட்சிக்குள் அடங்கிய குடிகளைக் குறிக்கிறது. குடிகள் இன்றி அரசாட்சி நடைபெறாது. குடிகளாக வாழும் மக்களுக்காகத்தான் அரசாட்சியே ஏற்படுத்தப்பட்டது. எனவே, அரசாட்சி அமைப்பில் மக்களே முக்கியத்துவம் வகிக்கின்றனர். முதலிடம் பெறுகின்றனர். மக்களுக்காகவே அரசு என்பதை அனைவரும் அறிய வேண்டும். அரசறிவியல் மூல தத்துவங்கள் என்னும் நூலில்,

> **"அரசு என்பது மக்கள் கூடிவாழும் ஓர் அமைப்பு. ஆகவே மக்கள் இன்றி அரசு அமைய முடியாது. அரசு வெறும் நிலப்பகுதியில் தனது ஆட்சியைச் செலுத்த முடியாது. அரசில் மக்களின் உரிமை வலுக்கட்டாயமானது"** (ப.18)

என்கிறார் சிவராஜா. அதாவது நல்லாட்சியின் அடித்தளமாக அமைபவர்கள் மக்களே. அம்மக்களின் கடமைகளாக அமைபவை பல. அவை:

ஒத்துழைப்புத் தருதல்

குடிமக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் ஆட்சி சிறப்பாக அமையும் என்பதை ஒவ்வொரு அரசும் உணர்ந்து செயல்படவேண்டும். குடிகளை கொடுமைப்படுத்தும் அரசாங்கம் குலைந்துவிடும். மக்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்காத அரசு மறைந்துவிடும். தமிழர் இலக்கியச் சமூகத்தளங்கள் என்னும் நூலில்,

> **"மக்கள் நல்லவராக இருந்தால்தான் ஆட்சியும் நல்லதாக அமையும்"** (ப.64)

என்கிறார் க.ப.அறவாணன். அதாவது நாடு நலம் பெற அதில் வாழும் மக்களும் நல்லவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. வள்ளுவர் வாழ்ந்த தமிழகம் என்னும் நூலில்,

> **"குடிஅரசோ முடிஅரசோ பொதுமக்கள் விருப்பத்தின்படி ஆட்சி புரியுமானால் அந்த ஆட்சி நிலைத்து நிற்கும். அதை யாரும் அசைத்துவிட முடியாது"** (ப.119)

என்கிறார் சிதம்பரனார். இதன்வழி மக்களின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. தமிழியல் ஆராய்ச்சி என்னும் நூல்,

> **"வாழ்ந்தால் தான் அவ்விடம் நாடாகும். ஆதலால் மக்கள்; அரசனது நல்ல மனதைப் புரிந்துகொண்டு அவன் ஆட்சிக்கு ஒத்துழைப்புத்தர வேண்டும்"** (ப.89)

என்று மன்னனை அனுசரிக்கும் மக்கள் தேவை என்கிறது.

> **"...பற்றிய**
>
> **மண்அதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும்"** (நான்மணி.21)

என்னும் பாடலில் விளம்பிநாகனார், மக்கள் கலங்கினால் ஆட்சியும் கலங்கும் என்கிறார்.

> **"...வீறுசால்**
>
> **மன்னர் விழையும் குடிஉள"** (நான்மணி.54)

என்னும் பாடலில் நாகனார், தவறான அரசரையும்; குடிமக்கள் அடக்கிவிடுவர் என்கிறார். மக்கள் வெகுண்டு எழுந்தால் அரசு கவிழும்.

> **"வழிப்பட்டவரை வலியராய்ச் செய்தார்**
>
> **அழிப்பினும் ஆக்கினும் ஆகும்"**(பழமொழி.252)

என்னும் பழமொழி அரசால் மக்களை ஆக்கவும் அழிக்கவும் முடியும் என்கிறது. எனவே, ஒரு நாட்டில் நல்லாட்சி அமைய மக்களின் ஒத்துழைப்பு மன்னனுக்கு அவசியம் தேவைப்படுகிறது.

அகலாது அணுகாது பழகுதல்

அடுத்து மன்னரிடம் பழகும் வாய்ப்புக் கிட்டினால் மக்கள் பயனற்றதைப் பேசாமல், எல்லை மீறி நடக்காமல் அளவோடு வைத்துக்கொள்ள வேண்டும்.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்" (691)

என்னும் குறளில் வள்ளுவர் ஆளும் அரசருடன் நேரில் பழகும் வாய்ப்பைப் பெற்றோர் நெருப்பில் குளிர் காய்வதுபோல, மன்னரிடம் மிக நெருங்கிவிடாமலும் விலகாமலும் உறவைக் கொள்ளவேண்டும் என்கிறார்.

"விடலை செய்து வெருண்ட கன்று நில்லாது
உடலரு மன்னர் உவப்ப வொழுகின்
...
கடல்படா வெல்லம் படும்" (பழமொழி.269)

என்னும் பழமொழி அரசரிடம் பழகும்போது அவரிடம் மிக அணுகிச் செல்லாமலும் அச்சம் கொண்டு மிக அகன்று செல்லாமலும் கவனமாக இருந்து அரசர் விரும்பும்படி நடந்துகொண்டால் எல்லாச் செல்வமும் கிடைக்கும் என்கிறது.

"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்" (698)

என்னும் குறளில் வள்ளுவர் அரசரை இளையவர் என்றோ, இன்னமுறை உடையவர் என்றோ இகழாமல் மரியாதை அளிக்க வேண்டும் என்கிறார். **"கோலநேர் செய்யார்"** (பா.66) என்னும் பாடலில் பெருவாயின் முள்ளியார் அரசரிடம் பழகுவோர் அரசருக்கு நிகராக தன்னை அலங்கரித்துக் கொள்ளக்கூடாது என்கிறார்.

"இறைவர்முன் செல்வமுங் கல்வியும் தேசுங்
குணனுங் குலமுடையார் கூறார் பகைவர்போற்
பாரித்துப் பல்காற் பயின்று"

(பா.71)என்னும் ஆசாரக்கோவை அரசர்முன் தன்னுடைய கல்வி, செல்வம், குணத்தைக் கூறக்கூடாது என்றும் கூறினால் துன்பமே உண்டாகும் என்றும் கூறுகிறது. மேலும்

"தமக்கு உற்ற கட்டுரையும் ...
சொல்லற்க" (பா.67)

என்னும் பாடலில் பெருவாயின் முள்ளியார் அரசரிடம் தம்முடைய உறுதிமொழிகளைச் சொல்லக்கூடாது என்கிறார். **"உமிவும் உயர்ந்துழி ஏறலும், பாக்கும்"** (பா.70) என்னும் பாடலில் பெருவாயின் முள்ளியார் அரசன்முன் எச்சிலை உமிழ்தலும் உயர்வான இருக்கையில் அமர்தலும் வெற்றிலைப் பாக்கு போடுதலும் கூடாது என்கிறார். மேற்கண்ட செயல்கள் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதாகவும், மன்னனை அலட்சியப்படுத்துவதாகவும் இருப்பதால் அவற்றைத் தவிர்ப்பது மக்களுக்கு நல்லது என்கிறார்.

"செருக்குடைய மன்னரிடைப்புக் கவருள்
ஒருத்தற்குதவாத சொல்லின் தனக்குத்
திருத்தலு மாதாது தீதாம்" (பழமொழி.278)

என்னும் பழமொழி செருக்கு மிக்க அரசர்களுக்குப் பயன்படாத அறிவுரை வழங்கவோ அவர்களைத் திருத்தவோ கூடாது என்கிறது.

அதாவது மக்கள் என்னும் சொல் ஓரரசின் ஆட்சிக்குள் அடங்கிய குடிகளைக் குறிக்கும். குடிகளாக வாழும் மக்களுக்காகத்தான் அரசாட்சியே ஏற்படுத்தப்பட்டது. குடிமக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் ஆட்சி சிறப்பாக அமையும். குடிகளைக் கொடுமைப்படுத்தும் அரசும் மக்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்காத அரசும் அழிந்துவிடும்.

மக்களின் விருப்பப்படி நடக்கும் அரசு நிலைத்து நிற்கும். மக்கள் கலங்கினால் ஆட்சியும் கலங்கும். தவறான அரசை மக்கள் அடக்கிவிடுவர். மக்கள் மன்னருடன் பழகும் வாய்ப்பைப் பெற்றால் மிகவும் நெருங்காமலும் விட்டு விலகாமலும் பழக வேண்டும். அரசனுக்கு உரிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். அரசனுக்கு நிகராக அலங்கரித்துக் கொள்ளவோ அவனுக்கு உறுதிமொழி கூறவோ இருக்கையில் அமரவோ எச்சில் உமிழவோ வெற்றிலைபாக்குப் போடவே கூடாது. மீறி நடந்தால் துன்பமே உண்டாகும். ஆதலால் குடிமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என முற்கால அறநூல்கள் மக்களுக்கான கடமைகளை வரிசைப்படுத்தியுள்ளன.

துணைநின்றவை

- அம்பலவாணர், சிவராஜா, 2000(இ.ப.), அரசறிவியல் மூலதத்துவங்கள், குமரன் புத்தக இல்லம், சென்னை.
- அறவாணன் க.ப., 2003, தமிழர் இலக்கியச் சமூகத் தளங்கள், தமிழ்க் கோட்டம், சென்னை.
- ஆனந்தம், கே.எஸ்., 1975, மலர்க மாநில சுயாட்சி, தங்கம் பதிப்பகம், கோபிசெட்டிபாளையம்,
- இராசமாணிக்கம்பிள்ளை, ம. (உ.ஆ.), 1967(ம.ப.), பழமொழி நானூறு (மூலமும் உரையும்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
- கதிர்முருகு (தொ.ஆ.), 2007, நீதிக்களஞ்சியம், சீதை பதிப்பகம், சென்னை.
- சிதம்பரனார் சாமி., 2006, வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், மல்லிகா, சென்னை.
- சிவமுத்து மயிலை(உ.ஆ.) 1989, திருக்குறள் (இனிய எளிய உரை) மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை.
- தங்கராசன் மு., 2007, இன்பத்தமிழ், அதியன் பதிப்பகம், நெய்வேலி.
- தாமரைச்செல்வி தி., 2001, திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம் (குடும்பம், அரசு), செயராம் பதிப்பகம், புதுச்சேரி.
- திலகவதி, அன்புக்கொடி ஒப்பீட்டரசியல், தீபா பதிப்பகம், சென்னை -96
- முதற்பதிப்பு 2004
- பழனிச்சாமி, கே.ஜி.எப்., 2003, உலகச் சிந்தனையாளர்களின் பொன்மொழிகள், சேது அலமி பிரசுரம், சென்னை, 17, திருத்திய பதிப்பு,
- பாலசுந்தரம்பிள்ளை, தி.சு.,(ப.ஆ.), 2007, நான்மணிக்கடிகை (இளவழகனார்உரையுடன்) சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அப்பர் அச்சகம், சென்னை.
- புன்னைவனநாதன், பு.சி., (உ.ஆ.),2007, ஆசாரக்கோவை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- ……., (உ.ஆ.),2007, சிறுபஞ்சமூலம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- ----------, 2002, தமிழியல் ஆராய்ச்சி தொகுதி-2, புலமை மன்றம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை

அரி.வே.விஸ்வேஸ்வரன்
துறைத்தலைவர் (ஓய்வு)
கணிதத் துறை, த.பெ.சமணக் கல்லூரி,
சென்னை 600097, vichaan@gmail.com

சுருக்கம்

ஆன்மா என்பது உபநிடதக் கருத்து. தமிழ்ச் சிந்தனையில் ஆன்மா என்ற கருத்துக் கிடையாது. இந்தக் கருத்து பார்ப்பனீயப் பரவலுக்குப்பின் தமிழ்ச் சிந்தனையில் புகுந்தது. தமிழ்ச் சிந்தனையை விளக்கும் நூல்களில் திருக்குறளுக்கு முதல் இடம் உண்டு.

முன்னுரை

மனித நாகரிகத்தின் ஆரம்பநிலை குடும்பம், சமூகம் என்ற அமைப்பு ஆகும். அத்தகைய ஆரம்பகால நாகரிகத்தின் ஒரு பகுதி தமிழகத்தில் காணப்படுவது ஆகும்.

மிருகங்கள், பறவைகள் குழுவாக வாழ்வதைப் பார்த்த ஆதிமனிதன் கற்ற பாடம் குடும்பம், சமூகம் என்ற அமைப்புகள்.

சிந்துநதி ஓரமோ, தென்னிந்திய நதிகளோ, கடல் பகுதிகளோ எனத் தமிழன் வளமான நிலப்பரப்பில் உணவுப் பஞ்சமின்றி வாழ்ந்தான்.

பல காரணங்களால் சிந்துவெளி நாகரிகம் மறைந்தது. வடவேங்கடத்திற்குத் தெற்கே பிறர் இடையூறின்றித் தமிழ்ச்சமூகம் வாழ முடிந்தது.

உணவுப் பஞ்சமின்றி வாழ்க்கை இலகுவாகும்போது சிந்தனை வளர்ச்சி பெருகும். அந்தப் பழைய நாகரிகங்களில் எழுத்து வடிவும் உண்டு. சிந்தனைகளைப் பனுவல்களாக நூலோர் யாத்தனர். அந்த நூல்கள் தமிழர் வாழ்வியலின் ஆரம்ப நிலைகளைப் பதிவு செய்தன.

அமைதியான வாழ்க்கையானதால் தமிழ்ச்சமூகம் பயம் அறியவில்லை. கடவுளரைக் கற்பிக்கவில்லை. இறந்து மறைந்த முன்னோர் நினைவைப் போற்றினர். குழுக்களிடையே சண்டை வரும்போதும், கொள்ளையரிடமிருந்தும் சமூகம் காத்த வீரமகன்கள் நினைவாக நடுகல் நட்டுப் போற்றினர்.

தொல்காப்பியம் என்ற முழுமையான இலக்கண நூலே, தமிழரின் மிகப்பழமையான சிந்தனை வளம், அதன் பனுவல்கள் என இருந்தன என்பதை நிலைநிறுத்துகிறது. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்.

காலப்போக்கில் வடபுலத்திலிருந்து வேதமரபினர் இங்குக் குடியேறலாயினர். அவர்கட்கு ஏற்பில்லாத உயர்சிந்தனைகளை அழித்தனர். தங்கள் மதச்சிந்தனை, சடங்குகளைப் பரப்பினர். கடல்கோளினாலும் தமிழ்நூல்கள் அழிந்தன.

இந்தக் காலகட்டத்தில் திருக்குறள் தமிழ்ச்சிந்தனைகளைத் தொகுத்தளித்து அவை ஓரளவு அழியாமல் நமக்குக் கிடைக்கச் செய்தது.

திருக்குறள்

திருக்குறளில் பேசப்படுவது குடும்பம், தனிமனித ஒழுக்கம், சமூகம் ஆகியவற்றின் ஒழுங்கு நடைமுறைகள் ஆகும். திருக்குறளில் கூறப்படும் கருத்துகள் நாகரிக சமூகத்தின் செயல்பாடுகள்(அறம், அரசு, நட்பு, அமைச்சு, குடிமை, களவு, கற்பு எனப் பல) அனைத்தையும் தன்னுள் கொண்டுள்ளது. இவ்வளவு பரந்துவிரிந்த சிந்தனை ஒரே சமயத்தில், ஒரு மனிதரால் உண்டாக்கப்பட்டதாக இருக்க முடியாது. இந்தக் கருத்துகள் திருக்குறள் எழுதப்படுவதற்கு முன்னரே பலப்பல நூற்றாண்டுகள் தமிழகத்தில் நடைமுறையில்

இருந்து பனுவல்களாக, நூலோர்களால் தொகுக்கப்பட்டு இருக்க வேண்டும். (இத்தகைய இலக்கிய வளம் இருந்த காரணத்தால்தான் தொல்காப்பியம் என்ற உயர்ந்த இலக்கண நூல் தோன்றியது).

மேற்கூறியவற்றால் திருக்குறள் ஒரு வளர்ச்சியடைந்த, மனித இனத்தின் தொன்மையான நாகரிகத்தை விளக்கிப் பதிவு செய்த நூல் என்பது அறியப்படுகிறது.

திருக்குறளும் வேதமரபும்

மனித வாழ்விற்கு அமைதியான, இணக்கமான சமூக அமைப்பே அடிப்படை என்பது சிந்தித்தால் புரிந்து கொள்ள முடியும். மதம், கடவுள் போன்ற சிந்தனைகள் பின்னர்தான் தோன்றியிருக்க முடியும். மனித மனத்தில் அச்சம் தோன்றும்போது கடவுள் என்ற சக்தியை நம்பினான்.

மழை, இடி, தீ.. என இயற்கைச் சீற்றங்களுக்கு அஞ்சிய வேதகால ஆரியர் பல கடவுளரைப் படைத்து அதற்கான சடங்குகளை உருவாக்கினர். அதை மக்கள் நம்ப வைத்து அவர்கள் வாழ்க்கையைக் கழித்தனர். காலம் செல்கையில் மக்களுக்குச் மதச்சடங்குகள் மேல் நம்பிக்கை தளர்ந்தது. சமண பௌத்த மதங்கள் அதற்கு உரமூட்டின. வேதமரபு தாழ்ந்தது. அதை மீண்டும் புதுப்பிக்க ஆரியர் முற்பட்டனர். அதன் அடிப்படையில் உபநிடதங்கள் தோன்றின. உபநிடதங்கள் மதச்சடங்குகளை ஏற்கவில்லை. ஆன்மா, பாவ புண்ணியம், பல பிறவிகள் என்ற கருத்துகள் தோன்றின. இந்தக்கருத்துகளை முழுமையாக்கி மோட்சம் என்ற கருத்தை முன்வைத்து பகவத்கீதை எழுதப்பட்டது.

தமிழ்ச்சிந்தனைக் கருத்துகள் ஆரியவேதக் கருத்துக்ளுக்கும் காலத்தால் முற்பட்டவை. அவற்றின் தொகுப்பே திருக்குறள். நாகரிக சமூகத்தின், மனிதனின் ஆரம்ப காலம்.

திருக்குறளில் ஆன்மா என்ற கருத்து

ஆன்மா என்ற கருத்துத் திருக்குறளில் நேரடியாகக் கூறப்படவில்லை. இம்மை, மறுமை, எழுபிறப்பு என்ற சொற்கள் குறட்பாக்களில் காணப்படுகின்றன. இந்தச் சொற்கள் மறுபிறவி என்ற கருத்தின்வழியாக விளக்கப்படுகிறது. மறுபிறவி என்பது ஆன்மா என்ற கருத்தின் அடிப்படையில் விளக்கப்படுகிறது.

ஆன்மா என்பது உபநிடதக் கருத்து. ஆன்மா அழியாதது என்று உபநிடதத்திலும் பகவத்கீதையிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஆன்மா பற்றிய உபநிடதக் கருத்து

ஆன்மா அழியாதது. உடல் இறந்தபின் ஆன்மா முந்திய வாழ்வில் வாழ்ந்த பட்டறிவிற்கு ஏற்ற புது உடலில் பிறக்கும். என்பது கூறப்படுகிறது. *(Brha-daranyaka Upanishad --- Sankara Bashya, tr. Madhavanandha [1]. The original quote is given at the end of the article.*)

ஆன்மா பற்றிய உபநிடதக் கருத்து: (மொழிபெயர்ப்பு)

3.9.26" 'இது எதுவும் அல்ல' என்று சொல்லப்படுகிற ஒன்றுதான் ஆன்மா என்பது. அதைப் புரியவோ, உணரவோ முடியாது. யாராலும் உணரப்படவில்லை அது அழிவதல்ல, எப்போதுமே அழியாது. ஒட்டு உறவு இல்லாதது, எதனுடனும் ஒட்டியதில்லை. கட்டுப்பாடுகள் அற்றது. வலி அறியாதது. அது காயமடைந்ததில்லை".

4.42."ஆத்மா பிரியும்போது அதனுடன் உயிரோட்டமும் சென்று விடுகிறது. உயிரோட்டம் பிரிகையில் உறுப்புகள் அனைத்தும் பின் செல்கின்றன. ஆத்மா குறிப்பான உணர்வுகளுடன் இருக்கும். அந்த உணர்களுக்கு ஒத்த ஒரு உடலுடன் ஆத்மா இணையும். சென்றகாலத்தில் பெற்ற பட்டறிவும், அறிதலும் தொடர்ந்து செல்லும்".

4.43 "வைக்கோலில் ஊறும் எறும்பு ,வைக்கோல் நுனியை எட்டியதும் இன்னொரு இடத்தைப் பற்றுவதுபோல், ஆன்மா இருந்த உடலைத் துறந்து, அதை உணர்வற்றநிலையில் விட்டு, இன்னொரு பற்றை ஏற்றுக் கொள்கிறது"

"செயல்பாட்டிற்கு ஏற்பதான் விளைவு இருக்கும். நற்செயல் நன்மையில் முடியும், தீச்செயல் தீமையில் முடியும். - ஆன்மா, செய்த நற்செயல்களால் உயர்வாகவோ, செய்த தீச்செயல்களால் தாழ்வாகவோ மாறும்".

முற்பிறப்பில் செய்த செயல்களுக்கேற்ப மறுபிறவி என்னும்போது, பிறக்கும் உயிர்கள் சமமானதாக இராது என்பது கூறப்படுகிறது.

இந்த உலகனைத்தையும் உண்டாக்கிய சக்தி பிரம்மன் என்று அழைக்கப்படுகிறது. பிரம்மன் பற்றிய விளக்கம் பிரகதாரண்யக உபநிடதத்தில் காணப்படுகிறது. அதுபற்றி விளக்கும் செய்யுள் ' நேதி நேதி ' என்று குறிப்பிடப்படுகிறது. அதன்படி பிரம்மன் ஒரு தொட்டு உணரக்கூடிய பொருளும் இல்லை, ஒரு கருத்தாகக் கருதி விளக்கக்கூடிய பொருளும் இல்லை என்றே கூறப்படுகிறது.

அதாவது பிரம்மன் என்பது 'இல்லாத ஒன்று என்றுதான் புரிந்துகொள்ள முடியும்'-- என்று சங்கரர் கூறுகிறார். (*Sankara : Brihadaranyaka Upanishad Sankara Bashya Tr. By Madhavananda pp. 516-517*)

ஆன்மா என்றால் என்ன? ஆன்மா என்பது பிரம்மனின் நிழலே (பிரதி, படி) என்று விளக்கப்படுகிறது (அஹம் பிரம்மாஸ்மி). அப்படிப் பார்த்தால் , பிரம்மன் எப்படி இல்லாத ஒன்றோ அதுபோல ஆன்மா என்பதும் இல்லாத ஒன்றே!

இந்த உலகில் வாழ்ந்து இறக்கும் மனிதரின் ஆன்மா, உயிர், வாழ்நாளில் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப சொர்க்கமோ நரகமோ என்று இருந்து பலனை அனுபவித்து மீண்டும் பிறப்பு எய்தும் என்பது உபநிடதக் கருத்து.

ஆன்மா பற்றிய விளக்கம் பகவத்கீதையில் விரிவாகக் காணப்படுகிறது.

கீதை 2.20 : உயிரானது பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை. இல்லாமலிருந்து புதிதாய் உண்டாகி விடவில்லை. உண்டாகாமல் போவதுமில்லை. பிறப்பற்ற அந்தப் பொருள், என்றும் இருந்து வந்த அந்தப் பொருள் மரணம் அடைவதில்லை. கொல்லப்படுவது உடலே, அதுவன்று!

உடல் இறந்தவுடன் ஆன்மா, வாழும்போது செய்யப்பட்ட பாவ புண்ணியத்திற்கு ஏற்பப் புது உடலில் பிறக்கிறது. நல்வழியில் வேதக்கருத்துக்களுக்கு ஏற்ப வாழும் மனிதரின் ஆன்மா மறுபிறவியில் உயர்ந்த குடியில் பிறக்கும்.

கீதை - 6.44. "முன்பிறவியில் அடைந்த பயிற்சி அவனுக்கும் தெரியாமல் அவனை யோகமுறையில் இழுத்து கொண்டு செல்வதால் எளிதாக மேற்செல்வான். யோகமுறையில் செல்ல வேண்டும் என்கிற விருப்பமே போதும், அவனுக்குப் பயன் தந்து விடும்".

இப்படியே பல பிறவிகளில் நேர்மையாக வாழ்ந்தவரின் ஆன்மா பிறவித் தளையிலிருந்து விடுபட்டு பிரம்மனோடு இணைந்து விடுகிறது. அத்தகைய ஆன்மா மேலும் பிறவி எடுப்பதில்லை.

கீதை - 5.17: " புத்தியையும் உள்ளத்தையும் வழிபாட்டையும் பரத்தை நோக்கி நிறுத்தி ஞானத்தால் மாசுகளைத் தீர்த்துக்கொண்டவர்கள் மீளாநிலையை அடைவார்கள்".

கீதை - 6.43. "அதன்மேல் முன்பிறவியில் அடைந்திருந்த வெற்றியைத் தொடர்ந்து மேலும் யோக முன்னேற்றத்துக்கு முயல்வான்".

கீதை - 7.19. : "பல பிறவிகள் எடுத்து மெய்யறிவு அடைந்து வாசுதேவனே அனைத்தும் என்று கண்டு என்னைச் சரணம் அடைகிறான். இத்தகைய மகாத்மாக்கள் வெகு சிலரே".

கீதை - 12.6,12.7: "ஆனால் செய்யும் செயல்கள் அனைத்தையும் எனக்கே அர்ப்பணம் செய்து விட்டு. என்னையே கதியாகக் கொண்டு என்னையே சிதையாத மன அடக்கத்துடன் தியானித்து உபாசிப்பவர்களை நான் பிறப்பிறப்பு என்னும் சம்சார சாகரத்தினின்று கடைத்தேற்றுவேன். அவர்கள் எனக்குத் தம் உள்ளத்தை அர்ப்பணம் செய்தார்களே என்று உடனே கைதூக்கி விடுவேன். பார்த்தனே! அறிவாய்".

இதனால் ஆன்மாவைப் பற்றி நாம் புரிந்து கொள்வது பிறவிதோறும் ஆன்மா முதிர்ச்சி பெற்று ஆன்மவளர்ச்சி பெற வேண்டும். அதாவது வாழும் மனிதர்களில் சிலரது ஆன்மா முழுமையான முதிர்ச்சி பெற்று பிரம்மனோடு ஒன்றும் நிலையில் உள்ளதாக இருக்கும். இதுபோல பிற மனிதர்களின் ஆன்மாக்கள் முதிர்ச்சி அளவில் பலவேறு நிலைகளில் உள்ளனவாக இருக்கும்.

இதன்படி உயிர்வாழும் மனிதர்களின் ஆன்மாக்கள் பிறக்கும்போதே ஏற்றத்தாழ்வுகளுடன்தான் பிறக்கின்றன. இது ஆரியவேதக் கருத்து.

திருக்குறளில் ஆன்மா என்பது உயிர் என்று கூறப்படுகிறது

திருக்குறள், எல்லா உயிர்க்கும் (ஆன்மாவுக்கும்) பிறப்பு ஒக்கும். வேறுபாடு கிடையாது. செய்தொழில் வேற்றுமையால் சிலர் சமூகத்தில் சிறப்படையலாம். அது ஒவ்வாச் சிறப்பு என்று கூறுகிறது. மனிதர்களுக்கிடையே பிறப்பின்வழி வேற்றுமைகள் இல்லை என்பது குறட்பா.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வாச்

செய்தொழில் வேற்றுமை யான் (972)

இக்கருத்து, 'முற்பிறப்பில் செய்த செயல்களுக்கேற்ப மறுபிறவி என்னும்போது, பிறக்கும் உயிர்கள் சமமானதாக இராது ' என்ற வேதக் கருத்துக்கு மாறானதாகும். அதாவது திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏற்கவில்லை என்றாகிறது. சில குறட்பாக்களின் வழியாகவும் ஆன்மா பற்றிய திருக்குறளின் கருத்துகளைக் காண்போம்.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று (236)

இந்தக் குறட்பாவில் 'தோன்றலின் தோன்றாமை நன்று' என்ற சொற்றொடர் வள்ளுவரின் கோபத்தால் வருகிற சாபம், வசைமொழி.

மோட்சம் (வீடுபேறு) என்ற கருத்தை நம்பி ஏற்றுக்கொள்வோருக்கு பிறவாமை என்பது வரமல்லவா? வள்ளுவர் வீடுபேற்றை நம்புபவரானால் ' பிறவாமை நன்று' என்பதற்கு மாற்றாக 'ஈனப்பிறவியாய்ப் பிறப்பாய்' என்றல்லவா வசைமொழி கூறி இருப்பார். அதாவது திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏற்கவில்லை என்றாகிறது.

மற்றும் தொடர்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்

உற்றார்க்கு உடம்பும் மிகை (345)

பிறவித்தளையிலிருந்து விடுபடத் தொடர்ந்து பல பிறவிகள் தேவையில்லை. உயிரை மாய்த்துக் கொள்ளலாம்.

வள்ளுவர் பல பிறவிகள் என்ற கருத்தை ஏற்கவில்லை. வேதக்கருத்தான ஆன்மவளர்ச்சி இங்கு கூறப்படவில்லை. மாறாக அதைக் கேலிசெய்யும் வண்ணமாக அமைந்துள்ளது இந்தக் குறட்பா. "பல பிறவிகள் எடுக்க வேண்டிய தேவை என்ன?" என்று கேட்கிறார். அதாவது திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏற்கவில்லை என்றாகிறது.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்

அறங்கூறும் ஆக்கம் தரும் (183)

இறப்பின்மூலம் பொய்த்துயிர் வாழ்பவரின் தவறான செயல்பாடுகள் முடிவுக்கு வரும் என்ற கருத்துக் கூறப்படுகிறது. பாவம், மறுபிறவி என்ற கருத்துகள் கூறப்படவில்லை. அதாவது திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏற்கவில்லை என்றாகிறது.

குடம்பைத் தனித்தொழியப் புள்பறந் தற்றே

உடம்பொடு உயிரிடை நட்பு (338)

உடம்போடு உயிர்க்குள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறு இடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது..... (மு.வ. உரை).

பறவை கூட்டிலிருந்து எதையும் தன்னுடன் எடுத்துச் செல்வதில்லை. அதுபோல் இறந்தபின் உயிர், ஆத்மா, தன்னுடன் பாவ புண்ணியங்களைக் கொண்டு செல்வதில்லை. அதாவது திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏற்கவில்லை என்றாகிறது.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்

வாளது உணர்வார் பெறின் (334)

வாழ்க்கையை ஆராய்ந்து உணர்வாரைப் பெற்றால், நாள் என்பது ஒரு கால அளவுபோல் காட்டி , உயிரை உடம்பிலிருந்து பிரித்து அறுக்கும் வாளாக உள்ளது..... (மு.வ.உரை.).

ஒவ்வொரு நாளும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை நமக்களித்தாலும், வாளால் அறுத்துக் குறைக்கப்படுவது போல ஒவ்வொரு நாளும், நம் வாழ்க்கையைக் குறைக்கிறது என்பதை உணர்தல் வேண்டும்.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே இயங்கும் உயிர் குறைகிறது (உயிர் ஈரும்....) என்பது கூறப்படுகிறது. அழியாத ஆன்மாவுக்கு குறை, நிறை என்ற வேறுபாடு இருக்க முடியாது. இதையே பகவத்கீதையில் காணலாம்.

2.17. "நாம் காணும் உடல்களில் எல்லாம் வியாபித்து நிற்கும் உயிரை யாராலும் நாசம் செய்ய இயலாது. பருவ மாறுதலினாலும் மரணத்தாலும் அது மாறுபடாது. அது சாகாப் பொருள்".

2.18. " இந்த உடலுக்கு முடிவுண்டு. உடலைத்தாங்கும் உயிருக்கு முடிவில்லை. அது பூதப்பொருளைப்போன்றதல்ல. அளவும் அழிவும் கடந்த பொருள். இது பெரியோர் முடிவு. அதை உணர்ந்து போர் செய்வாய் பாரத புத்திரனே". அதாவது திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏற்கவில்லை என்றாகிறது.

புக்கில் அமைந்தின்று கொல்லொ உடம்பினுள்

துச்சில் இருந்த உயிர்க்கு. (340)

உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு புக்கில் அமைந்தின்று கொல்லொ .

உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிர்க்கு, நிலையாகப் புகுந்திருக்கும் வீடு இதுவரையில் அமையவில்லையோ?(மு.வ. உரை.).

மேற்கண்ட குறள், சீவாத்மாவிற்கு நிலையான வீடு, மோட்சம் என்பது இல்லை என்று கூறுகிறது. பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையேயான வாழ்வில் மட்டுமே சீவாத்மா செயல்படுகிறது.

குறள் மோட்சம் என்ற கருத்தை ஏற்கவில்லை. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற வேதக்கருத்துக்களான புருஷார்த்தங்களில், முதல் மூன்று நிலைகளையும், முறையே, அறம், பொருள், இன்பம் என்று திருக்குறள் ஏற்று விவரித்து விளக்குகிறது.

நான்காம் நிலையான மோட்சம் (வீடுபேறு) என்பதைத் திருக்குறள் ஏற்று விளக்கவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏற்காத நிலையில், ஆன்மா பற்றிய விளக்கமான மோட்சம் என்ற கருத்து கூறப்படவில்லை. திருக்குறளில் இம்மை (1042), மறுமை (98, 459, 904), எழுபிறப்பு (62, 107, 398, 538) என்ற சொற்கள் காணப்படுகின்றன.

இம்மை என்றால் இந்தப்பிறவி எனவும், மறுமை என்றால் மறுபிறவி எனவும், எழுபிறப்பு என்றால் ஏழுபிறவிகள் என்றும் பொருள் கொள்ளும்போது ஆன்மா என்ற கருத்து வந்து விடுகிறது.

திருக்குறள் ஆன்மா என்ற கருத்தை ஏறாகாத நிலையில் இம்மை, மறுமை, எழுபிறப்பு என்ற சொற்களுக்குப் பொருள் என்ன என்று காணும் தேவை ஏற்படுகிறது.

'இம்மைக்கு' என்ற சொல் மருவி 'இன்னைக்கு' ஆக மாறியது எனக் கருதலாம். (அன்னை, அம்மை என்ற இரு சொற்களுக்கும் பொருள் ஒன்றே. அதுபோல் 'இம்மை', 'இன்னை' என்ற இரு சொற்களுக்கும் பொருள் ஒன்று எனக் கருதலாம்). அதன்வழி, இம்மைக்கு என்றால் (இன்னைக்கு) தற்காலம் என்று பொருள் கொள்ளலாம்.

மறுநாள், நாளை மறுநாள்... என வரும் நாட்களின் பொதுப்பெயர் மறுமை எனக் கொள்ளலாம். அதாவது மறுமை என்ற சொல் எதிர்காலத்தைக் குறிக்கும்.

பழமை என்ற சொல் கடந்த காலத்தைக் குறிக்கும் சொல்லாக இன்றும் வழக்கில் உள்ளது.

இதுபோன்று பொருள் கொள்ளும்போது ஆன்மா என்ற கருத்து திருக்குறளில் கூறப்படவில்லை என்பது உறுதியாகிறது.

எழுமை எழுபிறப்பும் : எழு என்ற சொல்லைச் செயல்படு என்ற பொருளில் கொள்ளலாம்.

பிறப்பு என்ற சொல்லுக்குப் பொருள் காண்பது சுற்றி வளைத்துக் காண வேண்டியதாகிறது. (பிரம்ம சூத்திர உரைகளை மனதில் கொள்க).

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

என்ற குறட்பாவின் தேவை என்ன? அது பிறப்பு, இறப்பு இரண்டும் அன்றாடம் நிகழும் வழமையான நிகழ்வுகள்தான் (தூங்குவதும், விழித்தெழுவதும் போல்) என்பதைக் கூறவே! பிறப்பு, இறப்பு என்ற நிகழ்வுகளின் பின்னணியில் மறுபிறவி, ஆத்மா என்ற கருத்துகள் இல்லை என்பதை திருக்குறள் சொல்லாமல் சொல்கிறது. மானிடரது பிறப்பும் இறப்பும் உலகில் தொடர்ந்து நடக்கும் நிகழ்வுகளே. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம்.

இக்குறளின் அடிப்படையில் 'பிறப்பு', 'உறங்கி விழிப்பது' என்ற இரு சொற்களும் ஒரே கருத்தைக் கூறுகிறது எனலாம். அதன்படி "எழுபிறப்பும் " என்பதன் பொருள் 'விழித்து எழும்போது' எனர் கொள்ளலாம். ஆக, 'எழுமை எழுபிறப்பும்' என்ற சொற்றொடர் ' விழித்து எழுந்து செயல்படும்போது' என்ற பொருள் கொள்கிறது. அதாவது 'எல்லாக் காலத்திலும் ' என்று பொருள் கொள்ளலாம்.

இக்கருத்துகளுடன் மேலே குறிப்பிட்ட குறட்பாக்களின் கற்பனை கலவாத ஏற்றுக்கொள்ளத் தக்கதான பொருட்களை, முறையே காண்போம் :

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். (1042)

வறுமை என்று சொல்லப்படும் ஒரு பாவி ஒருவனை நெருங்கினால், அவனுக்கு இன்று, மறுநாள் என்று எக்காலத்திலும் துன்பமே தரும்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். (98)

பிறருக்குத் துன்பம் விளைவிக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் எப்போதும் வழங்குபவனுக்கு இன்பம் தரும்.

மனநலத்தின் ஆகும் மறுமை மற்றஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உயைத்து. (459)

மனத்தின் நன்மையால் எதிர்காலம் இன்பம் பெறும், அதுவும் இனத்தின் நன்மையால் மேலும் சிறப்புடையதாகும்.

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறுஎய்தல் இன்று (904)

மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற, தன் எதிர்காலத்தில் நம்பிக்கையில்லாத, மனிதனின் செயலாற்றும் தன்மை பெருமை பெற்று விளங்க முடியாது.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடை மக்கள் பெறின். (62)

பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால் ஒருவருக்கு வாழ்நாளில் எந்தவிதத் தீமையும் இராது.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்

விழுமம் துடைத்தவர் நட்பு. (107)

தன்னுடைய துன்பத்தைப் போக்கி உதவியவருடைய நட்பை எப்பொழுதும் மறவாமல் பெரியோர் போற்றுவர்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து. (398)

மனம் சிதறாமல் ஆழ்ந்து கற்ற கல்வி ஒருவர்க்கு வாழ்நாள் முழுவதும் உதவும்.

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது

இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். (538)

சான்றோர் புகழ்ந்து சொல்லிய செயல்களைப் போற்றிச் செய்யவேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தார்க்கு எப்பொழுதும் நன்மை இல்லை.

முடிவுரை

ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்த காலத்தில், இங்கிருந்த இனமக்களை வென்று அடிமைப்படுத்திக் கோலோச்ச முயன்றனர். போராட்டத்தால் மக்களை வெற்றிபெற இயலாது என்ற நிலையில், மந்திர தந்திரங்கள்வழி மக்களை ஏமாற்றி, சமூகத்தில் உயர்ந்த இடம் பெற்றனர். கௌதம புத்தருடைய வரவு அவர்களை நிலைகுலையச் செய்தது.

மக்களை மூளைச்சலவை செய்யப் பண்பாட்டுப் படையெடுப்பைத் துவக்கினர். மக்கள் மனதில் உள்ள மத, கடவுள் நம்பிக்கைகளைத் திசைதிருப்பினர். தமிழ்ச்சிந்தனை ஒன்றே அன்று முழுமை பெற்ற சிந்தனையாக இருந்தது. அதைத் திசைதிருப்பத் தமிழ் நூல்களை அழித்தனர். அவற்றைத் தன்மொழியில் எழுதித் தமதாக்கினர். அதில் தப்பி நின்றது திருக்குறள். அதை மாற்றி விளக்கினார் பரிமேலழகர்.

அன்று ஆரம்பமான பண்பாட்டுப் படையெடுப்பு இன்றும் தொடர்கிறது. ஆட்சியாளர்கள் அவர்களுக்கு ஆதரவாகும்போதெல்லாம் இந்தப் படையெடுப்புத் தொடர்கிறது.

இரா.நாகசாமி 'திருக்குறள் - வேதசாத்திரங்களின் சுருக்கம்' என்று, திருக்குறள் ஒரு வழிநூல் என்று ஒரு நூல் எழுதியுள்ளார். அதற்காக அவருக்கு இந்தியாவின் உயர்ந்த தாமரை (பத்மஸ்ரீ) விருது வழங்கப்பட்டுள்ளது. அந்த நூல் காஞ்சி சங்கராசாரியாரின் ஆசி பெற்ற நூல் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. (இந்தக் கட்டுரை அவரது நூல் வெளிவருமுன் எழுதப்பட்டது.)

துணைநூல்கள்

- *Brihadaranyaka Upanishad - Shankara Bhashya translated by Swami Madhavananda*
- *http://us.yhs4.search.yahoo.com/yhs/search?hsimp=yhs-affiliate_a&hspart=greentree&type=937811_yhs2tst&p=brihadaranyaka+upanishad+sankars*
- *இராஜாஜி, 1958, கைவிளக்கு ,சம்பா நூலகம், சென்னை.*
- *விஸ்வேஸ்வரன்: தமிழனின் தத்துவம் திருக்குறள் அறம் - பரிமேலழகர் இங்கே திருத்தப்படுகிறார்.*

- *Visweswaran: Philosophy of Peninsular India Kindle edition Kindle store. www.notionpress.com*

கட்டுரையில் மேற்கோளிடப்பட்ட உபநிடதக் கருத்துகளின் ஆங்கில மூலம்:

(Brha-daranyaka Upanishad --- Sankara Bashya, tr. Madhavanandha [1])

3.9.26 (page 555) "..This self is That which has been described as 'not this not this'. It is imperceptible, for it is never perceived; undecaying, for It never decays; unattached, for it is never attached; unfettered, for it never feels pain, and never suffers injury. "

4.4.2 (page 703) "... When the soul departs, the vital force follow; when the vital force departs, all organs follow. Then the self (soul) has particular consciousness, and goes to the body which is related to that consciousness. It is followed by knowledge and past experience".

4.4.3 (page 709) "... Just as a leech supported on a straw goes to the end of it, takes hold of another support and contracts itself, so does the self (soul) throws this body aside - make it senseless- takes hold of another support, and contract itself ".

4.4.5 (page 740) ".. As it does and acts it becomes; by doing good it becomes good, by doing evil it becomes evil- it becomes virtuous through good acts and vicious through evil acts. ...".

மதிப்பிடப்பெற்றது

தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

செல்வி. திரவியராசா நிரஞ்சினி
முதுகலைமாணி மாணவி
(பேராதனைப் பல்கலைக்கழகம்)
இலங்கை.
nironiru03@gmail.com

1. ஆய்வு அறிமுகம்

'மெய்யியல்' என்பது உண்மை பற்றிய தேடலாகும். இம்மெய்யியலானது ஆய்வு செய்யும் விடயங்களின் இயல்புகள், நோக்கங்களின் அடிப்படையில் நான்கு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பௌதீக அதீதம், அறிவாராய்ச்சியியல், ஒழுக்கவியல், அழகியல், போன்றனவாகும். மெய்யியலின் விசேட பிரிவுகளில் ஒன்றாகவே தமிழர் மெய்யியல் அமைந்துள்ளது. தமிழர் மெய்யியல் என்பது மெய்யியலின் பிரதான எண்ணக்கருக்கள் தமிழர்களது வாழ்வியலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றிய அணுகு முறையாகும். மேற்குத்தேயத்தில் கலைகளானது கலை கலையை வெளிப்படுத்தல், கலை உணர்ச்சியை வெளிப்படுத்தல், கலை அறத்தை வெளிப்படுத்தல், கலை சமூக மாற்றத்தை வெளிப்படுத்தல் என்ற வகைப்பாடுகளுக்கு ஏற்ப கோட்பாடுகள் ரீதியாக வளர்க்கப்பட்டன. ஆனால் தமிழர் சிந்தனை மரபில் கலையும், அழகியலும் கோட்பாடுகள் ரீதியாக வளர்க்கப்படாமல் மக்களின் வாழ்வியலையும், வாழ்வியல் கூறுகளையும், அதில் நிகழும் தவறுகளையும் சுட்டிக் காட்டுவதாக வளர்க்கப்பட்டது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என பனம் பாரனாரால் எல்லை வகுக்கப்பட்ட தமிழகத்தின் அழகியல் அம்சங்களை கலை ரசனையோடு சங்க இலக்கியங்களே வெளிப்படுத்தி நிற்கின்றன.

சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழரின் கலை, அழகியல் சார்ந்த அம்சங்களை மெய்யியல் நோக்கில் ஆராய்வதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

2. சங்கத் தமிழர் அழகியல்

சங்ககால கவிதைகள் யாவும் சொற்சுருக்கமும், பொருள் விரிவும், கவித்துவ செறிவும் கொண்டதாக அமைவதோடு சொல்லலங்காரம் மிக்க பல்வேறு அழகியல் அம்சங்களை கொண்டதாக உள்ளன. இதனடிப்படையில் சங்கத் தமிழர் அழகியலை

2.1 தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் வகுக்கப்பட்ட மெய்ப்பாடுகள்

2.2 அகத்திணை பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தப்படும் சங்ககால தலைவியின் 24 வகையான மெய்ப்பாடுகள்

2.3 சங்ககால திணைக் கோட்பாடுகளின் வகைப்பாடுகள் ஊடாகவும் விளங்கிக் கொள்ளலாம்.

2.1 தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் வகுக்கப்பட்ட மெய்ப்பாடுகள்

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் எட்டு வகையான மெய்ப்பாடுகள் கூறப்பட்டுள்ளன. அவையாவன நகை, அழுகை, அச்சம், இழிவரல், உவகை, வெகுளி, பெருமிதம், மருட்கை. இவ் எட்டுவகையான சுவைகளும் முப்பத்திரெண்டு வகையான கரணிகளால் தோற்றுவிக்கப்படுகின்றது. அவற்றை பின்வருமாறு கூறலாம்.

1. எள்ளல், இளமை, மடமை, பேதை : நகை
2. இழிவு, இழத்தல், அசைதல், வறுமை : அழுகை

3. அணங்கு, விலங்கு, கள்வர், இறை : அச்சம்

4. மூப்பு, பிணி, வருத்தம், மென்மை : இழிவரல்

5. புதுமை, பெருமை, சிறுமை ஆக்கம் : உவகை

6. உறுப்பறை, குடிகோளவைத்தல் : வெகுளி

7. கல்வி, தறுகண்மை, இசைனம், கொடை : பெருமிதம்

8. செல்வநுகர்ச்சி, ஐம்புல நுகர்ச்சி, மகளிரோடு புணர்தல், சோலை ஆறு என்பனவற்றில் புகுந்து

விளையாடுதல் : மருட்கை

2.2 அகத்திணைப் பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தப்படும் சங்ககாலத் தலைவியின் 24 வகையான

மெய்ப்பாடுகள்

1. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்குதல்

- தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்குதல்
- தலைவன் முகத்தை முதன்முதலில் பார்த்த தலைவி வெட்கப்படல்.
- தலைவன் கூறுவதைக் கேட்டு புலனாகாது மறைத்தல்
- தலைவனிடத்தில் தன் மனம் அலைதலைப் பிறருக்கு தெரியாதவாறு தவிர்க்கும் நிலை

2. தலைவியின் செயற்பாடுகளால் தலைவனை தன்பக்கம் ஈர்த்தல்

- கூந்தலைக் கலைத்தல்
- காதில் அணிந்திருந்த தோட்டை விழப்பண்ணி தேடுவது போல நிற்றல்
- அணிந்திருக்கும் ஆபரணங்களை கையினால் அங்கும் இங்குமாக அசைத்தல்
- ஆடையைக் குலைத்து உடுத்தல்

3. தலைவனின் விருப்பத்திற்கு இசைந்தமையால் தலைவி வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள்

- மேலாடை திருத்துதல்
- அணிந்திருந்த ஆபரணங்களை திருத்துதல்
- விருப்பம் இல்லாதவர் போல் தன் நிலையை மாற்றிக்கொள்ளல்
- தலைவி தன் வார்த்தைகளால் மறுத்தாலும் சைகளால் தன் உடன்பாட்டை வெளிப்படுத்தல்

4. தலைவன் தலைவி சந்திப்பால் வெளிப்படும் உளநிலை பாங்கு

- மனதினால் தலைவனைப் வாழ்த்துதல்
- பாங்கர் கூட்டத்தினர் தலைவனுடனான தனது காதலை தெரிந்து கொண்டமையால் தலைவி நாணுதல்
- தலைவனால் வழங்கப்பட்டதை விரும்புதல்
- வேட்கை நிலைக்கு உள்ளாதல்

5. காதல் வயப்பட்ட பின்னர் தலைவன் தலைவியின் மெய்ப்பாடுகள்

- தலைவியின் வளர்ப்புத் தாயான செவிலிக்கும், தோழியர் கூட்டத்திற்கும் தலைவனுடனான காதலை தெரியப்படுத்தல்.
- தலைவனைக் கண்ட தலைவி விருப்பம் கொள்ளுதல்
- தலைவனோடு திளைத்தமையால் அச்சங் கொள்ளுதல்

- பெண்களின் இயல்பான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன வெளிப்படல்

6. தலைவனின் பிரிவால் ஏங்கும் தலைவியின் நிலை

- தன் உடல் அலங்காரத்தை தவிர்த்தல்
- பொலிவிழந்து காட்சியளித்தல்
- நிலை தடுமாறி உரையாடுதல்
- தலைவியானவள் தனது துன்ப நிலையை பிறர் அறிந்து கொள்ளாத படி நடத்தல்.

சங்ககால அகத்திணைப்பாடல்களின் ஊடாக வெளிப்படுத்தப்படும் தலைவியின் 24 வகையான மெய்ப்பாடுகளும் சங்கத்தமிழரின் அழகியலை வெளிப்படுத்துகிறது. தலைவனும்> தலைவியும் ஒருவரை ஒருவர் நோக்குதல் தொடங்கி இறுதியில் தலைவனின் பிரிவால் ஏங்கும் தலைவியின் நிலை வரைக்குமான 24மெய்ப்பாடுகளும், அதனூடாக வெளிப்படும் முகபாவங்கள்> உடலசைவுகள்> உணர்வினைவெளிப்படுத்தும் செயற்பாடுகள் முதலியவைகளை சங்கத்தமிழர்கள் அழகியலாகவே காண்கின்றனர்.

2.3 சங்ககால திணைக் கோட்பாடுகளின் வகைப்பாடுகள்

இயற்கை நெறிக்காலம் என்று சிறப்பித்துக் கூறப்படும் சங்க காலத்தில் ஐந்நில மக்களின் நில அமைப்பு வேறுபாடுகளுக்கு ஏற்ப அன்பின் ஐந்திணையான குறிஞ்சி - புணர்தல், முல்லை - இருத்தல், மருதம் - ஊடல் , நெய்தல் - இரங்கல், பாலை - பிரிதல் எனும் ஒழுக்கங்களை தீர்மானிப்பதற்கு இயற்கையின் அழகியல் அம்சங்கள் பயன்படுத்தப்பட்டன. இதனையே கருப் பொருள் என்பர். இது சங்க கால அகத்திணை பொருள் மரபில் ஒன்றாகும். புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல், முதலிய உரிப்பொருளான ஒழுக்கங்களைப் பாடுவதற்கு பயன்பட்ட விலங்கு, பறவை, இசைக்கருவி, நீர் நிலைகள், தாவரம், பூக்கள் முதலியன கருப்பொருளுள் அடங்கும். இக் கருப்பொருளானது நிலக்கூறுகளுக்கு ஏற்ப மாறுபடும் தன்மையினை கொண்டது.

மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி நிலத்தில் வாழும் வேடுவ மக்களின் காதல் ஒழுக்கத்தைப் புணர்தல் என்பர். இதனைப் பாடுவதற்குக் கருப் பொருட்களாக,

விலங்குகள்: புலி, யானை, பன்றி, சிங்கம், மான்

பறவைகள்: கிளி, மயில்,

இசைக்கருவி: குறிஞ்சி யாழ்

நீர்நிலைகள்: அருவி, சுனை

தாவரம்: குறிஞ்சி, வேங்கை, குவளை, அகில், மூங்கில்

பூக்கள் : குறிஞ்சி

பயன்பட்டன.

காடும் காடு சார்ந்த இடமான முல்லை நிலத்தில் வாழும் இடையர்களின் காதல் ஒழுக்கத்தை இருத்தல் என்பர். இதனைப் பாடுவதற்குக் கருப்பொருட்களாக,

விலங்கு: எருது, முயல், மான்

பறவைகள்: காட்டுக்கோழி, தாரை

இசைக்கருவி: பறை, முரசு

நீர்நிலைகள்: காட்டாறு

தாவரம்: முல்லை, கொன்றை, குருத்து, சந்தணம்

பூக்கள்: முல்லை

பயன்பட்டன.

வயலும் வயல் சார்ந்த இடமான மருத நிலத்தில் வாழும் உழவர்களின் காதல் ஒழுக்கத்தை ஊடல் என்பர். இதனைப் பாடுவதற்குக் கருப்பொருட்களாக,

விலங்குகள்: எருது, நீர்நாய்

பறவைகள்: நீர்க்கோழி, தாரா

இசைக்கருவி: மருத யாழ்

நீர்நிலைகள்: ஆறு, கிணறு, பொய்கை

தாவரம்: மருதம்

பயன்பட்டன.

கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல் நிலத்தில் வாழும் மீனவ மக்களின் காதல் ஒழுக்கத்தை இரங்கல் என்பர். இதனைப் பாடுவதற்குக் கருப் பொருட்களாக,

விலங்குகள்: மீன், நீர்க்காகம், எருது

பறவைகள்: அன்னம்

இசைக்கருவி: விளரி யாழ்

நீர்நிலைகள்: உவர் புழி, மணற்கிணறு

தாவரம்: கண்டல், தாழை, புன்னை

பயன்பட்டன.

மணலும் மணல் சார்ந்த இடமான பாலை நிலத்தில் வாழும் மறவர் மக்களின் காதல் ஒழுக்கத்தைப் பிரிதல் என்பர். இதனைப் பாடுவதற்குக் கருப்பொருட்களாக

விலங்குகள்: புலி, யானை, செந்நாய்

பறவைகள்: கழுகு, பருந்து

இசைக்கருவி: பறை

நீர்நிலைகள்: கூவல்

தாவரம்: இலுப்பை, மாந்தாவரம், முண்டகம், பாலை

பூக்கள்: பாதிரிப்பூ, மராம்பூ

பயன்பட்டன.

அன்பின் ஐந்திணையில் நிலஅமைப்புக்களுக்கேற்ப வகுக்கப்பட்ட கருப்பொருட்களை சங்கத் தமிழர்கள் அழகியல் அம்சங்களாகவே காண்கின்றனர். ஐந்நிலங்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் சங்கத்தமிழரின் கலையை வெளிப்படுத்துகின்றன..

உதாரணம் : குறிஞ்சி> மருத யாழ்> பறை> முரசு

மேலும் ஐந்நிலங்களின் இயற்கைக் காட்சிகள்> நீர் நிலைகள். தாவரங்கள்> பூக்கள் முதலியனவற்றினூடாக சங்ககால தமிழர்களின் அழகியல் அம்சங்கள் வெளிப்படுவதனைக் காணலாம்.

உதாரணம் : குறிஞ்சி> முல்லை> பாதிரிப்பூக்கள்> அருவி> சுனை> மணற்கிணறு> நீர் நிலைகள் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

3. சங்கத் தமிழரின் கலைகள்

கலை என்பது ஒருவரது உள்ளத்தில் தோன்றும் எண்ணமானது பிறிதொருவரின் ரசனைக்கு விருந்தாக அமைவதனைக் குறிக்கும். சங்கத் தமிழரின் வாழ்வியலின் ஒவ்வொரு கூறும் கலையம்சம் நிறைந்ததாக இருந்தமையால் இவர்கள் கலை குறித்த இரசனையியலும், தேடலிலும் அதிக அக்கறைப்பாட்டினைக் கொண்டிருந்தார்கள். சங்ககால செய்யுள்களில் கலை என்ற சொல் பல பெயர்களில் அழைக்கப்பட்டது. உதாரணம் "குரங்கு-18 இடங்கள், "மான்"- 25 இடங்கள், "மேகலை"- ஓரிடம் . சங்கத் தமிழரின் கலை வாழ்வினை

3.1 இயற்கை- புலவர்களின் கற்பனைத்திறன்

3.2 இசைக்கலைஞர்கள்

3.3 இசைக்கருவிகள்

3.4 ஆடல் கலைகள் முதலியவற்றினூடாக விளங்கிக் கொள்ளலாம்.

3.1 இயற்கை - புலவர்களின் கற்பனைத்திறன்

சங்கப்புலவர்கள் செய்யுள்களைப் பாடும்போது இயற்கையில் நிகழும் நிகழ்வுகளை உள்ளுறை உவமையாகக் கையாண்டமையின் ஊடாக அகத்திணை, புறத்திணைப் பாடல்களில் இயற்கை செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணலாம்.

3.2 இசைக்கலைஞர்கள்

சங்ககாலத்தில் பாணர், பாடினியர், கூத்தர், முதலிய இசைக்கலைஞர்கள் கலைத்துறையினைச் சார்ந்தோராக விளங்கினர். தமிழிலக்கிய வரலாற்றில் தொல்காப்பியக் காலத்திற்கு முற்பட்ட பழங்காலத்தில் இருந்து சங்ககாலம் வரையிலும் இசை, கூத்து ஆகிய இரு கலைகளின் மரபினைப் போற்றி வளர்த்த பெருமை பாணரையும், பாடினியரையும் சேரும்.

பண்ணிசைப்பவர்கள் பாணர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் பாடல்களைப் பாடுவதிலும், யாழ் இசைப்பதிலும், கூத்து, கலை நிகழ்ச்சிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர்.

மேலும் சங்ககாலத்தின் கலையம்சத்தினை வளர்த்த பெருமை இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என மூவகைப்பட்ட பாணர்களைச் சேரும். இசைப்பாணரைப் பாடற்பாணர், அம்பனவர் என்றும், யாழ்ப்பாணரை யாழிசைத்துப் பாடுபவர் என்றும் அழைப்பர். பேரியாழ், மகர யாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பன யாழ்ப்பாணர்கள் வாசித்தவற்றுள் சிறப்பானவையாகும். இதில் பேரியாழ் வாசித்த பாணரைப் பெரும்பாணர் என்றும், செங்கோட்டியாழாகிய சீறியாழை வாசித்த பாணரை சிறு பாணர் எனவும் அழைப்பர், அத்துடன் சங்ககால ஆற்றுப்படை நூல்களுள் பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை என்ற நூல்கள் இவர்களையே சிறப்பித்துக் கூறுகின்றன.

இவர்கள் மன்னர்களைப் பாடுவதனால் அவர்களால் பொருள் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். சூழலுக்கு ஏற்பவும், காலத்திற்கு ஏற்பவும் பண்களை வகுக்கும் திறன்களையுடைய இவர்கள் மன்னர்கள் போருக்குச் செல்லும்போது உடனிருந்து பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளனர்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி..." (தொல்.புறத்.93)

3.3 இசைக்கருவிகள்

இயற்கையின் அசைவுகளின் ஊடாகத் தோன்றும் ஓசைகளைச் சங்கத் தமிழர்கள் இசைக் கருவிகளினால் பிறப்பிக்கப்படும் ஒலிகளுக்கு ஒப்பிட்டுள்ளனர். உதாரணம் - வண்டுகளால் துளையிடப்பட்ட மூங்கிலின் மேற்புறத்தில் காற்றுப் படும்போது எழும் ஒலியைப் புல்லாங்குழல் ஓசை எனவும், பூக்களில் வண்டுகளால் தேன் நுகரப்படும்போது எழும் ஓசை யாழிசையாகவும், அருவிகளில் எழும் நீரின் ஓசை மத்தளத்தின் ஒலியாகவும், கலை மான்கள் ஓடும் போது பிறப்பிக்கப்படும் ஒலிகள் தாள ஒலியாகவும் கருதினர்.

சங்ககால இசைக்கலைஞர்கள் பல்வகைப்பட்ட இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர்.

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ" (335ம் பாடல்)

சங்ககாலத்தில் 103 பண்களை இசைக்கும் 27 நரம்புகள் கொண்ட பேரியாழ் மீட்டுபவர்கள் பெரும்பாணர்கள் என்றும், 103 பண்களிலும் குறைந்த பண்களை மீட்டுபவரும், செங்கோட்டியாழை மீட்டுபவரும் சிறுபாணர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

"தேஎந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண....."

3.4 ஆடல் கலைகள்

சங்ககாலத்தில் பல்வேறுபட்ட ஆடல்கலைகள் நிகழ்ந்துள்ளன. தைந்நீராடல், வெறியாடல் (கிராமிய வழிபாட்டின்போது கூத்தர்கள் சென்று ஆடுவது), பிற ஆடல் கலைகளும் இடம்பெற்றன. சங்ககாலக் கலை மரபில் ஆடல், பாடல், கூத்துக் கலைகளில் ஈடுபட்ட பெண்களை விறலியர், பாடினியர் என அழைத்தனர். சங்ககால நீர் விளையாட்டுக்களில் ஒன்றான தைந்நீராடல் என்பது தமிழ்நாட்டுப் பருவ காலத்தில் ஆற்றுநீரும், குளத்துநீரும் வெதுவெதுப்பாக இருக்கும் மாலை வேளையில் மகளிரால் ஆடப்படும் நீர் விளையாட்டினைக் குறிக்கும்.

"வைஎயிற் றவர் நாப்பண் வகைஅணிப் பொலிந்துநீ
தையில்நீ ராடிய தவம்தலைப் படுவையோ" (கலி.59)

4. முடிவுரை

தமிழர் மெய்யியலானது மெய்யியலின் பிரதான எண்ணக்கருக்களுள் ஒன்றான அழகியலைத் தன்னுள் உள்ளடக்கியதோடு அவற்றைச் சங்ககாலத் தமிழர்களின் அன்றாட வாழ்வில் பயன்படுத்தியுள்ளமையைக் காணலாம். சங்ககாலத் தமிழரின் நாகரிக, பண்பாட்டு முதுமையை அறிந்து கொள்ள உதவும் அளவீட்டுக் கருவியான அழகியல், கலை என்பன இயற்கையின் பெரும்பங்களிப்புடன் கூத்து, நாடகம், இசை, பாடல், இசைக்கருவிகள் என வளர்ச்சி பெற்றன. மேலும் சங்ககால மக்கள் கலையைத் தம் வாழ்க்கையாகக் கொண்டிருந்தமையை, அக, புற இலக்கியங்களில் அக்கலைகளைப் பாடிய புலவனின் புலமைவழி அறிய முடிகின்றது.

துணைநின்றவை

- அம்மன்கிளி முருகதாஸ், 2006, *சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- அருணாசலம், மு, 1969, *தமிழ் இலக்கிய வரலாறு*, (15ஆம் நூற்றாண்டு), தஞ்சை.
- சிவத்தம்பி கா., 2007, *சங்க இலக்கியமும் சமூகமும்*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
- பிரேம்குமார்.இ, 2013, *மேலைநாட்டு அழகியல்* (பிளேட்டோ முதல் நீட்ஷே வரை), குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- பாலசுப்பிரமணியம், கு.வெ, & பரிமணம், அ.மா. (உரை.), 2004, *பத்துப்பாட்டு மூலமும் உரையும்*, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- ....., *இந்து கலைக்களஞ்சியம்*, தொகுதி-10, (ப-பௌ), 2009, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
- *www. Nilacharal.com / karuvoolam / தமிழர் கலைகள்*
- *https:// ta.m.wikipedia.org/wiki/ சங்ககாலம்*
- *https:// ta.m.wikipedia.org /wiki / சங்ககாலக் கலைகள்*
- *www. Vjpremalatha.blogspot.com* புறநானூறு

மதிப்பிடப்பெற்றது

சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்

முனைவர் **மௌ.அஸ்கர் அலி**
உதவிப் பேராசிரியர்
ஆச்சாரியா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வில்லியனூர், புதுச்சேரி - 605 110.
askarsuperstar@gmail.com

மனிதத்துவ அறிவுப்பரப்பில் இயங்கியல் சார்ந்த சிந்தனை மரபுகள் முதிர்ந்து நிற்கும்போது அதற்கேற்ப இலக்கிய வெளியும் தன்னளவில் செயலாற்ற நேர்கிறது. புவியியல், வானியல், தாவரவியல், விலங்கியல், பறவையியல், சுற்றுச்சூழலியல் என்பன போன்ற தற்கால அறிவியல் வளர்ச்சி இலக்கிய விளைச்சலாக அரும்பி வரும் இக்காலக்கட்டத்தில் சூழலியல் சார்ந்த கருத்தாக்கங்கள் 'இந்தப் பூமியைக் காப்போம்' என்ற அளவிற்கு முதிர்ந்து நிற்கின்றன. எனவே சூழலியல் இலக்கியங்கள் மனித வாழ்வோடு தொடர்புடைய புறச்சூழல்கள் குறித்து விரிவான அளவில் ஆராய்ந்து வருகின்றன. இதன் காரணமாகவே இன்றைய காலக்கட்டத்தில் புறந்தள்ளமுடியாத ஒன்றாக இலக்கிய வெளியில் அவை முன்னுக்கு வந்து நிற்கின்றன. சுற்றுச்சூழலைத் தூய்மையாகப் பேணிக் காத்தலுக்கான விழிப்புணர்வு இன்றைய சமூகத்தாரிடையே முழுமையாகக் காணப்படாவிட்டாலும் சங்ககாலச் சமூகத்தில் காணப்பட்டன என்பதைச் சங்க இலக்கிய நூல்களான தொகையும் பாட்டும் எடுத்தியம்புகின்றன. அவற்றுள் சில கருத்தாக்கங்களை மட்டும் எடுத்தியம்ப இக்கட்டுரையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சூழலியல் - விளக்கம்

சூழலியல் மனிதன் வாழும் இடத்தையும் அவனைச் சுற்றியுள்ள அமைப்பையும் சேர்ந்ததாகும். நாம் வாழும் உலகம் பற்றிய அடிப்படைப் புரிதலை உண்டாக்குவது. உலகமயமாக்கலுக்குப் பிறகு பன்னாட்டு மூலதனங்கள் இந்தியாவின் இயற்கை வளங்களையும், காடுகளையும் அழித்து மனித வாழ்க்கையை இயற்கையிலிருந்து அந்நியப்படுத்துகின்ற கொடூரமான தன்மையை உருவாக்கிவிட்டன. சுற்றுச்சூழலியல் சீரழிவால் முதல் அடி வாங்குவது ஏழை மக்களே. உலகமயமாக்கல் - சந்தைமயமாக்கல் எனும் ஆழிப்பேரலையால் சுற்றுச்சூழல் பற்றிய கரிசனம் அடிபட்டுப் போனது.

> *"இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுற்றுச்சூழல் காப்புக் குறித்துப் பல நாடுகளிலும் பேசப்பட்டு வருகின்றன. கல்வி, வணிகம், பொருளியல், பொறியியல், அரசியல், சட்டம், வேளாண்மை என அனைத்துத் துறைகளிலும் சூழலியலின் தாக்கம் காணப்பட்டு வருகின்றன. கடந்த நூற்றாண்டின் அறிவியலின் ஒரு கூறான சூழலியல் தனித்துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. பல்வேறு நாடுகளில் ஏற்பட்ட சுற்றுச்சூழல்களின் காரணமாகச் சூழலியல் மிக வேகமான வளர்ச்சியைப் பெற்றதுடன் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வும் மக்களிடையே ஏற்படத் தொடங்கியுள்ளது. சுற்றுச்சூழலைத் தூய்மையாகப் பேணிக் காப்பதும், இயற்கை வளங்களை அழியாமல் காப்பதுமே மனிதனின் நிலையான வாழ்க்கைக்கு அடிப்படை எனச் சூழலியல் உணர்த்துகிறது"* (இலக்கியத்தில் சூழலியல், ப.8)

மரங்கள், விலங்குகள், பறவைகள், மக்கள் இயற்கைச் சூழல் நிலையில் எப்படி இணைந்து வாழ்கிறார்கள் என்பதும், பருவங்கள், மழை, மனிதன் ஆகியவற்றால் எப்படி மாற்றங்கள் தோன்றுகின்றன என்பதும் சூழலியல் குறித்த ஆய்வு பெறும் கருத்தாக்கமாகும்.

சூழலியல் திறனாய்வு

சூழலியல் திறனாய்வு (*Eco Criticism*) என்ற சொல்லாட்சி 1978இல் தான் ஆங்கில மொழியில் உருவானது. இலக்கியத்தையும் சுற்றுச்சூழலையும் இணைத்து ஆராய்வதற்கு 1992-இல்

சங்கம் ஒன்று மேலைநாட்டில் நிறுவப்பட்டது. அதற்காக ஓர் இதழும் வெளிவந்தது. (ISLE - Interdisciplinary Studies in Literature and Environment) 1996-இல் சூழலியல் திறனாய்வு குறித்த கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஒன்று வெளியிடப்பட்டது. டேவிட் மார்சல் என்பார் "ஒரு நூற்றாண்டு தொடக்ககாலச் சூழலியல் திறனாய்வுகள்" என்ற ஒரு கட்டுரைத் தொகுப்புநூலை வெளியிட்டதன் மூலம் முப்பதுக்கும் மேற்பட்ட சூழலியல் திறனாய்வாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். இவ்வாறு தோற்றமெடுத்த சூழலியல் திறனாய்வு அமெரிக்காவில் 'லாரன்ஸ் பௌல்' என்பவரால் பெரிதும் மேலெடுக்கப்பட்டு முக்கியமானதொரு இலக்கிய இயக்கமாக வளர்த்தெடுக்கப்பட்டது. 'சுற்றுச்சூழல் திறனாய்வின் எதிர்காலம்' என்ற அவருடைய நூல் பின் அமைப்பியல் கோட்பாடுகளையும் பயன்படுத்திக் கொண்டது. அவருடைய 'சுற்றுச்சூழல் கற்பனைகளும் அழியும் பூமி குறித்த இலக்கியங்களும்' என்ற நூலும் சூழலியல் கோட்பாட்டிற்குப் பெரிதும் பங்களிப்பைச் செய்தது.

தமிழ் இலக்கியப் பரப்பில் இச்சூழலியல் திறனாய்வு குறித்த கருத்தாக்கங்கள் சமீபகாலத்தில்தான் தொடங்கப்பட்டுள்ளன. திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறைத் தலைவராகப் பணியாற்றும் முனைவர் நிர்மல்.செல்வமணி இச்சூழலியல் திறனாய்வு அடிப்படையில் தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டையும் சங்க இலக்கியங்களையும் விளக்கிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது அரிய முயற்சியில் ஆங்கில மொழியில் சூழலியல் திறனாய்வுக்கென்று ஓர் இதழும் வெளிவருகிறது.

மனிதன் வாழும் இடத்தையும், அவனைச் சுற்றியுள்ள அமைப்பையும் சேர்ந்த ஒன்றாகச் சூழலியல் முன்னிறுத்தப்பட்டது. உலகம் பற்றிய அடிப்படையான புரிதலை, விழிப்புணர்வை உண்டாக்கும் விதத்தில் சூழலியல் சார்ந்த கல்வி முறை சமீபகாலத்தில் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன. சூழலியல் சார்ந்த விழிப்புணர்வால் அழிந்து கொண்டு வரும் விலங்கினங்களை, தாவரங்களை, இயற்கை வளங்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சியாக இக்கல்விமுறையைக் கருத வாய்ப்பிருக்கிறது.

சூழலியல் திறனாய்வின் போக்குகள்

சூழலியல் திறனாய்வு இலக்கியத்தை எத்தகைய முறையில் எல்லாம் அணுகுவதற்கு முயல்கிறது என்பதைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. இயற்கை குறித்த சமகாலப் படைப்புகளைச் சுற்றுச்சூழல் அறிவியல் வழங்கிய அறிவு கொண்டு ஆராய்தல்
2. பழம்பெரும் இலக்கியங்களில் இயற்கை எவ்வாறு இடம்பெற்றுள்ளது என விளக்குதல்.
3. மனிதர்களின் அரசியல் மற்றும் பண்பாட்டு நடவடிக்கை இயற்கையின் மேல் எத்தகைய தாக்கத்தை வரலாறுதோறும் நிகழ்த்தியுள்ளது என்பதை இலக்கியங்களின் வழி வெளிக்கொணர்தல்.
4. இயற்கை குறித்த அறிவு, இலக்கியப் படைப்புகளில் எவ்வாறு பதிவாகியுள்ளன என்பதைப் புலப்படுத்துதல்.
5. இயற்கைக்கும் மனிதர்களுக்குமான முரணையும், பகை நட்பையும் ஒத்திசைவையும் இலக்கிய வரலாற்றில் தேடி அலைதல்.
6. சுற்றுச்சூழல் திறனாய்வை வளர்த்தெடுப்பதன் மூலம் 'புவியை மனிதர்களிடமிருந்து காப்பாற்றுதல்' என்கிற தற்காலச் சமூகப் போராளிகளின் முயற்சிக்குத் துணைநிற்றல்.

சங்க இலக்கியத்தில் சூழலியல்

சங்க இலக்கியத்தில் மரம், செடி, கொடி பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அதற்கடுத்து பறவைகள், விலங்கினங்கள் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. விலங்கினங்களைவிடப் பறவையினங்கள் தமிழகத்தில் மிகுதியான அளவில் காணப்பட்டதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. சங்ககாலப் புலவர்கள் மரம், விலங்கு, பறவை முதலியவற்றின் இயல்புகளை நன்றாக உணர்ந்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்ற உ.வே.சா.வின்

கூற்று சங்க இலக்கியப் புலவர்கள் சூழலியல் அறிஞர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பதைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இத்தகைய சமகால வாழ்வில் மனிதன் இயற்கையிலிருந்து அந்நியப்படுத்திக் கொண்டு வாழநேர்கிற நெருக்கடி சூழல் இயல்பாகவே ஏற்பட்டுவிடுகிறது. சங்க இலக்கியங்களில் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்திருக்கிறான் என்பதனைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

"என்றூழ் வியங்குளம் நிறைவீசிப் பெரும்பெயல்
பொழிந்த ஏமவைதுறை உவந்த உவகை
எல்லாம்" (அகம்.42)

மழை வளத்தால் ஏரி, குளங்கள் நிரம்புவதை மேற்கண்ட பாடல் குறிப்பிடுகிறது. அக்காலகட்டச் செழுமை, மழைவளம், இயற்கைவளம் ஆகியவை மனிதனை இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுத்தன. தற்காலத்தில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதால் புவி வெப்பமடைதலும், ஆறு, ஏரி, குளங்கள் போன்றவை சரிசமமாக ஆக்கப்பட்டு கட்டிடங்களாக முளைப்பதும், குடிநீர் பிரச்சனையால் மக்களின் வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக மாறுவதும் சாதாரணமாக நிகழ்ந்தேறி விடுகிறது.

சங்க இலக்கிய இயற்கை வெளியில் மனிதன் எளிதில் வயப்படக்கூடிய நிலத்தை 'முதற்பொருள்' எனக் கொண்டு அவர்களின் அனுபவத்திற்குள் இணைப்பதற்குக் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என ஐந்தாகப் பகுத்தறிய முயன்றுள்ளனர் தமிழர்கள். அகத்திணைப் பாகுபாட்டை முதல், கரு, உரிப்பொருள் எனச் சிறப்பித்து உரைத்தனர். திணைசார் வாழ்வின் மூலமாகத் தொழில் உற்பத்திக் கருத்தாக்கங்களைச் சங்ககால மக்கள் பெற்றிருந்தனர். தாங்கள் விளைவிக்கும் பயிர்களிடையே வளரும் தேவையற்ற களைகளை நீக்கும் பயிர்ப் பாதுகாப்பு அனுபவம் பெற்றிருந்தனர் என்பதைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

"கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்
கறங்குபறைச் சீறின் இரங்க வாங்கி
களைகால் கழீஇய பெரும்புன வரவின்" (அகம்.194)

இயற்கைப் பேரழிவுகளான நிலநடுக்கம், ஆழிப்பேரலை ஆகியவற்றின் காரணமாகப் பல்லாயிரம் கோடிகளுக்கு மேலான இழப்புகளை உலக நாடுகள் சந்தித்து வருகின்றன. ஏராளமான உயிர் இழப்புக்களை ஏற்படுத்துகின்ற இயற்கைப் பேரழிவுகளால் நீர்வளமும், நிலவளமும் வளர்ச்சியின்றிக் காணப்படுவதை உணரமுடிகிறது. கலித்தொகைப் பாடல் ஒன்று நீர்வளம், நிலவளம் வளர்ச்சியின்றி இருப்பதைப் பின்வருமாறு எடுத்தியம்புகிறது.

"செல்லுநீர் ஆற்றிடைச் சேர்ந்து எழுந்த மரம்வாட
புல்லுவிட்டு இறைஞ்சிய பூங்கொடி தகைப்பன" (பாலைக்கலி 3: 12-13)

மனித சமூகம் தனது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டிக் காடுகளை அழித்து வயல்வெளிகளை உருவாக்கியது. குறவன் புதுக்கொல்லினை உருவாக்க வேண்டிக் காட்டை அழித்தான் என்ற செய்தி பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

"புனவர் கொள்ளியின் புகல்வரும் மஞ்ஞை" (ஐங்.295)

நிலத்தை அழிப்பதில் சங்ககால மக்கள் செயலாற்றியுள்ள மற்றொரு கூறு அந்தந்த நிலங்களுக்கே உரிய தொழில் சார்ந்த உற்பத்திப் பொருட்களில் ஈடுபட்டதுதான். தச்சனுடைய தச்சுத் தொழிலுக்காக மரங்கள் வெட்டப்பட்டன. வெட்டப்பட்ட மரங்களைக் கொண்டு அழகிய மதில் நிலைகளை உருவாக்கியதைப் பின்வரும் நெடுநல்வாடைப் பாடலடிகள் சித்திரிக்கின்றன.

"தாழொடு குயின்ற போர் அமை புணர்ப்பின்

கைவல் கம்மியின் முடுக்கலின் புரைதீர்த்து

ஐயவி அப்பிய நெய்அணி நெடுநிலை'' (நெடு.184-186)

மருத்துவத்திற்காக மரம் வெட்டப்பட்ட செய்தியும் சங்க இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. மக்கள் சந்தனக்கட்டை கொண்டு எரித்த செய்தியும் பின்வரும் புறநானூற்றுப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

''சாந்த விறகின் உவித்த புன்கம்'' (புறம்.166)

காடுகள் அழிக்கப்படுவதால் விலங்கினங்கள் அஞ்சி ஓடுவதையும் சங்கப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.

சங்க இலக்கியத்தில் இயற்கை வளமும், நீர் வளமும் நிறைந்திருந்தன எனப் பேசப்பட்டாலும் கலங்கிய நீரினைப் பருகிய மக்கள் குறித்த பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. இதனைப் பினவரும் ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

''... நம் படப்பைத்

தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு

உவலைக் கூவற்கீழ

மான்உண்டு எஞ்சிய கலுழி நீரே'' (ஐங்.203)

காட்டுப் பகுதியில் வெப்பம் மிகுதியாக இருக்கும் போது தோன்றும் காட்டுத்தீயின் செயல்பாடுகள், அத்தீயானது ஆரவாரித்துப் பல இடங்களில் பரவிச்செல்லும் தன்மைகள், காற்று வீசும் தன்மையெல்லாம் சென்று காட்டை அழிக்கும் நிலைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அகநானூற்றுப் பாடல் பதிவு செய்கின்றது.

''கனைஎரி நடந்த இலைஇல் அம்காட்டு'' (அகம்.379)

விலங்கினங்கள் இயற்கையை அழித்தல் என்ற பதிவுகள் மிகையாகக் காணப்படுகின்றன. பன்றியும், யானையும் விளைநிலங்களை மேய்ந்து அழிக்கின்றன. நண்டானது நெல் விதைத்து முளை குருத்து வெளிவரும் நிலையை அழிக்கிறது என்பதைப் பின்வரும் நற்றிணைப் பாடல் மையப்படுத்துகின்றது.

''எய்ம்முள் அன்ன பரூஉமயிர் எருந்தின்

செயம் மேவல் சிறுகண் பன்றி

ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி

நூழை நுழையும்'' (நற்.98)

இயற்கையைப் போற்றும் அறச் செயல்பாடாகச் சங்ககாலத்தில் வழங்கிய திணைக் கொள்கையே சூழலியல் அறிவியலாக இன்று மலர்ந்து கவனம் பெற்று வருகிறது.

முடிவுரை

இன்றைய காலக்கட்டத்தில் சூழலியல் குறித்த அறிவினைப் பெற்றிருத்தல் அவசியம் என வலியுறுத்தப்படுகிறது. மனிதனை இயற்கைக்குள் நிறுத்தும் 'சூழலியல்' சங்க இலக்கியத்தில் மிகுதியும் போற்றப்பட்டது. மேலைநாட்டு மூலதனங்களின் குவியலால் வனங்கள் அழிக்கப்பட்டதன் விளைவாகச் சூழலியல் குறித்த ஆய்வு முன்னுக்கு வந்திருக்கிறது. சங்க இலக்கியப் பதிவுகளை நோக்கும்போது சூழலியல் சார்ந்த வாழ்விற்குப் பரவலாகத் தங்களை தயார்ப்படுத்திக் கொண்டிருந்தனர் என்பதை உணரமுடிகிறது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சூழலியல் கல்வியின் அவசியத்தை அனைத்துத் துறைகளிலும் கொண்டுவர வேண்டிய தேவை இக்காலக்கட்டத்தில் ஏற்பட்டுள்ளது. சூழலியல்சார் அறிவினை ஒவ்வொருவரும் பெற்று இருத்தலே மிகுந்த பயன் தருவதாக அமையும். சூழலியல் அடிப்படையில்

சங்க இலக்கியத்தை ஆராய்வது மிகவும் தேவையான ஒன்று என்ற கருத்தாக்கமே மேலோங்கி நிற்கிறது.

துணைநின்றவை

- சோமசுந்தரனார் பொ.வே. (உரை.), 2009, ஐங்குறுநூறு, கழக வெளியீடு, சென்னை.
- ……, (உரை.), 2008, பத்துப்பாட்டு, கழக வெளியீடு, சென்னை.
- ……, (பதி.), 2007, கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை.
- நாராயணசாமி ஐயர் அ.(உரை.), , 2007, நற்றிணை, கழக வெளியீடுசென்னை.
- வேங்கடசாமி நாட்டார் ந.மு.(உரை.), 2008, அகநானூறு, கழக வெளியீடு, சென்னை.

மதிப்பிடப்பெற்றது

பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்

முனைவர் **மா. உமா மகேஸ்வரி**
தமிழ் - உதவிப்பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை - 09
umamaheswarikalimuthu@gmail.com

இயற்கைப் பாதுகாப்பு என்பது மிகவும் இன்றியமையாததாகும். இன்று இயற்கைப் பாதுகாப்பிற்குப் பதிலாக இயற்கையை அழிக்கத் தொடங்கி விட்டோம். ஆறு, குளம், ஏரி என எல்லாவற்றையும் அழித்து நவீன குடியிருப்புகளாக ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் பழந்தமிழ்ச் சமூகத்தில் இயற்கைசார் சுற்றுச்சூழல் குறித்த பாதுகாப்பு உணர்வு மேலோங்கியிருந்ததைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. பழந்தமிழரிடையே காடு கொன்று நாடாக்கி வாழ்வது நாகரிகமாகக் கருதப்பட்டது. இருப்பினும் அவர்கள் அழித்த காடுகளுக்குப் பதிலாகக் குளம் வெட்டி அதனைப் பாதுகாத்தனர் என்ற செய்தியையும் அறிய முடிகிறது. ஐம்பூதங்களில் ஒன்றான நீரின் மேலாண்மையை உணர்ந்து "நீரின்றி அமையாது உலகு" (குறள்-20) என்று நீரின் மேலாண்மையைக் குறள் எடுத்துரைக்கின்றது. அதுபோல, தமிழர்கள் குளம் வெட்டி, நீரைப் பாதுகாத்தனர், கடலோரங்களிலும், ஆற்றங்கரை ஓரங்களிலும் பேரழிவைத் தாங்கக்கூடிய மரங்களை நட்டு அதனைப் பாதுகாத்துள்ளனர். தற்கால மனிதனைப் போல் இயற்கையை அழிக்காமல், அதனைப் பாதுகாத்துள்ளனர். இதுகுறித்து அறிமுக நிலையில் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஐம்பூதங்கள்

"மண் திணிந்த நிலனும்
நிலம் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல" (புறம்.2)

என்ற புறநானூற்றுப் பாடல் ஐம்பூதங்களும் மானுடத்தின் தேவைக்குப் பயன்பட வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றது. *"தீமுரணிய நீரும்"* என்ற அடியில் நீரலைகளைப் பெருக்கினால் புவி வெப்பமடைவதைத் தடுக்கலாம் என்கிறது. நீரைத் தேக்கும் வழிமுறைகள் பற்றிய குறிப்புகளும் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

குளம் அமைத்தல்

"குழித்துழி நிற்பது" (நாலடி.31)

என்பதனால், நீரைக் குழிகள் (குளம்) அமைத்துத் தேக்க வேண்டும் என்றும்,

"நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே" (புறம்.18:28-30)

"மடு, குளம்" (பெரும்பாண்.288, மதுரைக்.710, குறிஞ்சிப்.63, மலைபடு.47)

"அறையும் பொறையும் மணந்தலைய எண்நாள் திங்கள்
அணைய கொடுங்கரை தெண்ணீர்ச் சிறுகுளம்" (புறம்.118:1-3)

என்ற பாடல் பாறைகளையும், சிறுமலைகளையும் இடைஇடையே இணைத்து பிறை வடிவில் ஏரிகளுக்கும் கரையமைக்கும் முறை பழந்தமிழரிடத்து இருந்திருக்கிறது. எட்டாம் நாள் தோன்றும் பிறை போன்ற வளைந்த தோற்றமுடைய குளம் கட்டப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படுத்தியுள்ளனர் என்றும், நீர் மிகுதியாக நிரம்பும் காலத்து அதன் கரை உடையாதவாறு காவல் இருந்து பாதுகாத்துள்ளனர் என்பதையும் இப்பாடல் எடுத்துரைக்கின்றது.

''நீர் அறம் நன்று நிழல் நன்று'' (சிறுபஞ்ச.63)

''காவொடு அறக்குளம் தொட்டல் மிக இனிது'' (இனியவை.23)

என்ற பாடலடிகளின்வழி, குளம் அமைப்பதோடு சுற்றிலும் மரங்கள் நட்டு, சோலைகளை அமைத்து இயற்கையைப் பாதுகாத்தனர் என்ற செய்தியும் புலனாகிறது.

''நீரான் அறிப மடுவினை'' (நான்மணி.80)

என்ற பாடலடி குளம் அமைத்துத் தேக்கும் நீர் ஓர் ஆறு உள்ளடங்கும் அளவிற்கு இருக்க வேண்டும் என்றும் (நான்மணி.54) நீரைக் காக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியும் கூறுகின்றன. இதன்மூலம் பழந்தமிழர், குளம் வெட்டி நீர்வளத்தைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டு இயற்கையைப் பாதுகாத்துள்ளனர் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

மரங்களைப் பாதுகாத்தல்

மரங்கள் பாதுகாக்கப்பட்டால் மாரி பொய்க்காது என்பதைப் பழந்தமிழர்கள் உணர்ந்திருந்தனர். இதனை,

சந்தனம், வகுளம், அகில், வேங்கை, விசை, சுரபுன்னை போன்ற மரங்கள் மட்டுமே பயிர்த்தொழிலில் வேளாண்மை செய்ய அழிக்கப்பட்டுள்ளன. சந்தன மரங்களைத் தினைப்புனக் காவலின் போது வெயிலில் நின்று பறவைகளை விரட்ட வேண்டிய சூழலில் வெப்பம் தவிர்க்க உடலில் தடவிக்கொள்ளப் பயன்படுத்தி உள்ளனர் என்பதை,

''சாந்தம் எறிந்து சாரல் சிறுதினைச்
சாந்தம் எறிந்த இதண்மிசைச் சாந்தம்
கமழக் கிளி கடியும்'' (திணைமாலை.3:1-3)

எனும் பாடற்குறிப்பு வெளிப்படுத்துகின்றது. இதைத்தவிர்த்து, தன்நலத்திற்காக பிற மரங்களை வெட்டி, அவ்விடத்தில் பயிர்த்தொழில் செய்பவர்களின் வீட்டில் பெண் எடுக்கவும் தயங்கியுள்ளனர் என்பதை,

''நறுந்தண் தகரம் வகுளம்
இவற்றை வெறும்புதல் போல் வேண்டாது'' (திணைமாலை.24)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. மரங்களை வெட்டுவது மட்டுமின்றி மரங்களின் நுனியைக் கிழிப்பதைக்கூட அறமன்று எனக் கருதியுள்ளனர். இதனை, ''எம் நாட்டில் அறநெறி தவறி நடப்பவர்கள் எவரும் இல்லையாதலால் கண்டல் சோலைகளில் உள்ள தாழை மரங்களின் நுனிப்பகுதிகள் முறிந்த காட்சியைக் கூட எங்கும் காண முடியாது'' எனத் தோழியொருத்தி தலைவனிடம் தன் நாட்டின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறாள். இதனை,

''நெறிதிரிவார் இன்மையால் இல்லை முறிதிரிந்த
கண்டல்அம் தண்டு'' (திணைமாலை.61)

என்று கூறுவதிலிருந்து பழந்தமிழர் மரக்கிளைகளின் நுனியைக்கூட கிழிப்பதை அறமற்ற செயலாகக் கருதியுள்ளனர் என்பதையும் அறியலாம். தமிழர் நீர் வளம் பெற்றுச் சிறப்போடு வாழும் வாழ்வையே போற்றியுள்ளனர் என்றும், மரங்களை, நீர்நிலைகளைப் பேணிப்பாதுகாத்துள்ளனர் என்றும் இதன்வழி அறிய முடிகிறது.

மழைநீரின் பயன்பாடு

தமிழர்கள் மழைநீரைச் சேமிக்க குளங்கள் வெட்டினர். அந்நீரைச் சேமித்து விவசாயமும் செய்துள்ளனர். மழைநீரைப் பயன்படுத்தி, பருவ காலத்திற்கேற்பப் பயிர் செய்ததை,

"பல்மர உயர்சினை மின்மினி விளக்கத்து

செல்மழை விளக்கம் காணும்" (நற்.44)

என்ற பாடலில், மேகம் வருவதைக் கண்டு மழை பொழியும் எனக் கருதி அதற்கேற்பப் பயிர்த்தொழிலைச் செய்திருக்கின்றனர். மழைநீர் மட்டுமின்றி அருவி, சுனை, ஆறு போன்ற நீர்நிலைகளிலிருந்து கிடைக்கும் நீரையும் வேளாண்மைத்தொழிலுக்குப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

"மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி அருவியின் விளைக்கும்" (குறுந்.370) என்ற பாடலடியானது மழையை நம்பி விதைத்த விதையானது அருவி நீரால் வளர்ந்தது என்று கூறப்படுகின்றது. மேலும், வாய்க்கால் அமைத்து அருவி மற்றும் சுனையில் உள்ள நீரானது முறையாகப் பயன்படுத்தப்பட்டு விவசாயம் செய்ததை,

"அகல்வாய்ப் பைஞ்சுனை பயிர்க்கால் யாப்ப" (நற்.5)

என்ற பாடலடியின்வழி, மலைகளில் உள்ள மரங்கள் முதலான செடிகொடிகள் தழைக்கவும், அகன்ற இடத்தை உடைய குளிர்ந்த சுனையில் நீர் நிறைந்து அங்குள்ள பயிர்கள் நெருங்கி வளரவும், குறவர்கள் சுனைகளைப் பாதுகாத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மேலும்,

"இட்ட வெல்லாம் பெட்டாங்கு விளைய

...மகுளி பாயாது மலிதுளி தழாலின்,

அகளத் தன்ன நிறை சுனைப்புறவின்" (மலைபடு.98-104)

என்ற பாடலடிகளில் விதைகள் விதைக்கப்பட்ட கொல்லையின் பக்கத்தில் நீர் இறைக்கும் 'சால்' போன்ற வடிவத்தையுடைய நீர் நிறைந்த சுனைகள் இருந்தன என்பதை எடுத்துரைக்கின்றன. இதன்மூலம் மழைநீர், ஆற்று நீர், சுனை, அருவிநீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்து, நீரைப் பாதுகாத்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது.

பேரிடர் பாதுகாப்பு

நிலஅதிர்வினால் ஏற்படும் கடல்சீற்றம், புயல் போன்றவற்றினால் ஏற்படும் கடல் சீற்றம் என்பன போன்றவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர். இலக்கிய இலக்கணத்தைப் போற்றி வளர்த்தது போல் உலகைக் காக்க சூழல் பாதுகாப்பிலும் கவனம் செலுத்தியுள்ளனர் தமிழ்ர்கள். இதனை,

"கடலும் கானலும் போல புல்லிய சொல்லும் பொருளும்" (பரி.15.11-12) என்ற அடியில், பொருளில்லாத சொல் பயனற்று, மொழிவளத்தைப் பாதித்து விடுவதைப் போல கடற்கரைச் சோலைகளில்லாத கடலும் பயனற்று ஊர்களின் வளத்திற்குப் பாதிப்பைத் தரும் என்கிறது ஒரு பாடல்.

"தொன்றுஉறை கடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பை" (நற்றிணை.303.3-4)

என்ற இப்பாடல் பழந்தமிழர் மரங்களைக் கடவுளாக வழிபட்டுப் போற்றிப் பாதுகாத்தனர் என்பதை எடுத்துரைக்கின்றது. கடற்கரைச் சோலைகளில் தாழை (கைதை, கண்டல்), நெய்தல், ஞாழல், புன்னை, பனை, அடப்பங்கொடிகள் போன்றவை ஒன்றோடொன்று பின்னி வளரக்கூடியவை. இவை இவ்வாறு நெருங்கி வளர்வதால் அப்பகுதி முழுவதும் கரிய சோலை போல் காட்சி தரும். இதனை,

"தாழை மணந்து ஞாழலொடு

கெழீஇ படப்பை நின்ற முடத்தாட் புன்னை'' (அகம்.180.12-13)

''தெரிஇணர் ஞாழலும் தேம்கமழ் புன்னையும்

புரிஅவிழ் பூவின கைதையும்'' (கலி .127.1-2)

போன்ற பாடல்கள் கடற்கரைச் சோலைகளில் புன்னை மரங்களோடு, அடப்பங்கொடிகளும், தாழை மரங்களும் எப்பொழுதும் இணைந்தே வளர்ந்திருக்கும் என்கின்றன. ஆழிப் பேரலையினால் சிறிதும் பாதிக்கப்படாத பல அழியா ஊர்களைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஆழிப் பேரலையின் தாக்கத்திலிருந்து கடற்கரைகளையும், ஊர்களையும் காக்க, பழந்தமிழர்கள் தாழை முதலான மரங்களின் தன்மையறிந்து அவற்றை வளர்த்துள்ளனர்.

'கண்டவாயில்' என்னும் ஊர் ஒன்று நற்றிணைப் பாடலொன்றில் வெகுவாகச் சிறப்பிக்கப்படுகின்றது. இதனுடைய சிறப்பே ஆழிப்பேரலையிலிருந்து தப்பித்ததுதான். இவ்வூர் உப்பங்கழி சூழ்ந்த தோட்டங்களை உடையது. இதன் கடற்கரையில் முற்றிய பனைமரங்கள் வெளிரிய மணல்மேட்டில் முள்வேலி அமைத்தது போல் காட்சி தரும். இதனை உணர்த்தும் பாடலடிகள் வருமாறு,

''புதுமணற் கானல் புன்னை நுண்தாது

கொண்டல் அசைவளி தூக்குதொறும் குருகின்

வெண்புறம் மொசிய வார்க்கும் தெண்கடல்

கண்டல் வேலிய ஊர்'' (நற்.74:7-10)

பனைமரங்களோடு இணைந்த ஞாழல், தாழை, புன்னை மரங்களும் சேர்ந்து கரிய சோலையோ என்று எண்ணும்படி அடர்ந்திருக்கும். மணற்குன்றுகள் சூழ்ந்த இச்சோலைகளே கண்டல் வேலிகள் எனவும் அழைக்கப்பட்டிருகின்றன. இவற்றுள் வணங்கும் தன்மையுடைய தாழையே சிறப்பாக பேரலைகளைத் தாக்குப்பிடிக்க வல்லது. அதனால்தான் தாழை சூழ்ந்த சோலைகளை நாட்டுவேலி, பெருநீர்வேலி, கண்டல்வேலி எனப் பல பெயர்களில் அழைத்துள்ளனர்.

பரிபாடல் குறிப்பிடும் வையை ஆற்று வருணனையில் வையை கடலோடு ஒப்பிடப்படுகிறது. வையை ஆறானது பெருகி, ஊருக்குள் நுழைந்து பேரழிவை ஏற்படுத்திவிடும் என்பதால் ஆற்றங்கரைகளில் ஞாழல், புன்னை, தாழை முதலான மரங்களை வளர்த்துள்ளனர். இம்மரங்களில் ஞாழல்மரம் வலுவானதன்று. வெள்ளநீரின் வேகத்திற்குத் தாக்குப்பிடிக்க முடியாது. ஆனால், புன்னை, தாழை போன்ற மரங்கள் உறுதியானவை. பேரலைகளைத் தாங்கக்கூடியவை. அதனால் கடற்கரை சார்ந்த பகுதிகளிலும், ஆற்றங்கரை ஓரங்களிலும் இத்தகைய மரங்களே வளர்க்கப்பட வேண்டும். இதனை,

''ஒளிதிகழ் உத்தி உருகெழு நாகம்,

அகருவழை ஞெமை ஆரம்இனைய

தகரமும் ஞாழலும் தாரமும் தாங்கி

நளிகடல் முன்னியது போலும்'' (பரி.12:4-7)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

தாழையின் சிறப்பு

வளைந்த தாழையைக் 'கண்டல்' என நற்றிணைப்பாடல் கூறுகிறது. தாழை மரங்களுடன் புன்னை, ஞாழல் மரங்களும் இணைந்து வளர்ந்து நெய்தல் சார்ந்த ஊர்களைக் காத்து நிற்பதால் இவற்றைக் கண்டல் வேலிகள் என பழந்தமிழர் குறித்துள்ளனர். இதனால் தாழை மரத்தின் சிறப்பையும், அதன் உறுதியையும் அறிய முடிகிறது.

இவ்வாறாக, பழந்தமிழர்கள் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்துள்ளனர். மழைபெய்யும் பருவகாலங்களை அறிந்து அதற்கேற்ற வகையில் வேளாண்மை செய்துள்ளனர். வேளாண்மைத்

தொழிலுக்கு நீர் மிக இன்றியமையாத ஒன்றாக இருப்பதால் நீர்த்தேக்கங்களான குளம், அணை ஆகியவற்றை அமைத்து அதனைப் பாதுகாத்தனர் என்பதையும் அறிய முடிகிறது. கடற்கரை ஓரங்களில் வலுவான தாழை, புன்னை போன்ற மரங்களை வளர்த்து, ஆழிப் பேரலை உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களிலிருந்து தம் இருப்பிடத்தைப் பாதுகாத்துள்ளனர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

பார்வை நூல்கள்

- ……, சிலப்பதிகாரம் உரையுடன், பாரி நிலையம், சென்னை. முதற்பதிப்பு - 1944.
- சுப்பிரமணியன் ச.வே.(உ.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு - 2009.
- பாலசுப்பிரமணியம் கு.வெ.(உ.ஆ.), நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு - 2004.

மதிப்பிடப்பெற்றது

இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை

முனைவர் சு.பேச்சியம்மாள்
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, அலைபேசி 9788749246
spetchi29@gmail.com

பண்பாட்டு மானிடவியலின் முக்கியமான பிரிவாக இனவரைவியல் அமைந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழும் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியற் கூறுகளை, அவர்களோடு குறிப்பிட்ட நாட்கள் அல்லது ஆண்டுகள் தங்கி வாழ்ந்து, கள ஆய்வு முறைகளின் மூலம் பெறப்படும் முதன்மையான தரவுகளைக் கொண்டு விளக்கமாக எழுதுவது இனவரைவியலாகும். இனவரைவியல் நோக்கில் ஓர் இலக்கியத்தை அணுகி, அவ்விலக்கியம் காட்டும் மாந்தர்தம் வாழ்வியல் கூறுகளை இனங்கண்டு விளக்குவதும் ஆய்வில் தேவையான ஒன்றாகும்.

இனவரைவியல் - சொற்பொருள் விளக்கம்

மானிடவியல் கலைச் சொல்லகராதி இனவரைவியல் எனும் சொல்லுக்கு "மனிதவினப் பரப்பு விளக்கவியல்" (சக்திவேல், 1972:25) என்றும், பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம் "குறிப்பிட்ட மானிடச் சமுதாயம் ஒன்றினைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி, விவரிப்பு இனவரைவியலாகும்" (அன்பரசன்,2011:15) என்றும், "இனக்குழுவியல் என்பது பண்பாட்டு மானிடவியலின் அடித்தளமாக அமைவது, இது ஓர் இனக்குழு அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய விரிவான, முழுவதுமான அறிவினை எடுத்தியம்புவது. "இனக்குழுவியல்" என்னும் பொருளுடைய "Ethnography' என்னும் ஆங்கிலச் சொல் "ethnos', 'graphein' ஆகிய கிரேக்கச் செற்களின் மூலங்களைப் பெற்றது என்பதற்கு இனம் (race), இனக்குழு (ethnic group), மக்கள் (people) என்பது பொருள் 'graphein' என்பதற்கு "எழுதுவது" அல்லது "வரைதல்" (to write) என்பது பொருள். ஆகையால் இனவரைவியல் என்பது ஒரு குறிப்பிட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது" (பக்தவத்சல பாரதி, 2003:117) என்றும் விளக்கமளிக்கப் பெறுகின்றது.

தமிழ்நாட்டு அறிஞர்களின் கருத்துகள்

மானிடவியல் அறிஞரான பக்தவத்சல பாரதி, "ஒரு தனித்த சமூகத்தின் பண்பாட்டைப் பற்றி மானிடவியலாளர்கள் அச்சமூகத்தாரோடு நீண்ட காலம் ஒன்றி வாழ்ந்து ஆய்வு செய்து அதனை, எழுத்தில் எழுதியளிக்கும் தனிவரைவு நூலே இனவரைவியல் எனப்படும். இத்தகு நீண்ட காலக் களப்பணியில் உற்றுநோக்கிப் பண்பாட்டை விவரிக்கும் தனிவரைவுகளை (monographs) எழுதும் மானிடவியலர்கள் இனவரைவியலர்(ethnographer) எனப்படுவர்" (பக்தவத்சல பாரதி,2005:387 என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "இனவரைவியல் என்பது களப்பணியை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டமாகும். அதாவது, மானிடவியலர் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது ஏதேனும் ஒரு துணைப் பண்பாட்டைப் பற்றி அப்பண்பாட்டைக் கொண்டிருக்கும் மக்களோடு குறிப்பிட்ட காலம் வரையில் தங்கியிருந்து, அவர்களோடு வாழ்ந்து அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பங்கேற்று, ஆராய்ந்து வெளிப்படுத்துவது" (2006:2) என்று ஆ.தனஞ்செயன் குறிப்பிட்டுள்ளார்.

மேலை நாட்டு அறிஞர்களின் கருத்துகள்

"ஓர் இனத்தை அடையாளப்படுத்துவது இனவரைவியலாகும். இது கடந்தகாலம் பற்றியதாக இருக்கலாம். அதாவது, ஒரு குறிப்பிட்ட மக்களை உற்றுநோக்கல் உத்திகள் மூலம் ஆராய்ந்து,

அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கூறுகளையும், மேலும் பல தகவல்களையும் எடுத்தியம்புவதே இனவரைவியல்'' என்று பெர்டாஸ், பிளம்மெர் (*Pertaux, Plunmer*) ஆகிய இருவரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இனவரைவியலை உள்ளடக்கிய மானுடவியலை ''ஏகாதிபத்தியத்தின் குழந்தை'' என்று காதரின் காஃப் அறிவித்துள்ளார்'' (ஆ.சிவசுப்பிரமணியன், 2009:11) ''பல்வேறுபட்ட இனக்குழுக்களின் தொலைநோக்குடைய வாழ்வியல் நெறிகளைக் கூடிய வரையிலும் துல்லியமாகப் பதிவு செய்யும் குறிக்கோள் உடையது இனவரைவியல் ஆகும்'' என்று லெவிஸ்ட்ராஸ் விளக்கமளித்துள்ளார்.

இனவரைவியல் கூறுகள்

ஓர் அயற்பண்பாட்டை விளக்க முற்படும்போது எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும், பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையப் பெறுகின்றன (பக்தவத்சல பாரதி. 2003:118-119). அவை, புவிச்சூழல், சுற்றுச் சூழல், காலநிலை, குடியிருப்பு நிலை, பொருள்சார் பண்பாடு, குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிட முறை, வாழ்வியற் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்கமுறை, மக்களின் உளவியற் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்கு முறை, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற்பகுப்பு, உற்பத்திமுறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சடங்குகள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியற் சிந்தனைகள், வழக்காறுகள், ஈமச் சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள்எனும் வகையில் இனவரைவியல் கூறுகள் அமையப் பெறுகின்றன.

குறுந்தொகையில் இனவரைவியல் பதிவுகள்

இலக்கியம் பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதனால், இனவரைவியல் ஆதாரங்களில் ஒன்றாக இலக்கியம் காணப்பெறுகிறது. ''ஒரு பண்பாட்டைப் பற்றி ஆராய முற்படும் பொழுது, அந்தப் பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் குழுவினர் பின்பற்றும் உறவுமுறைகள், ஒழுங்கு அமைப்புகள், அவர்களின் உணவுமுறைகள், உணவைச் சமைக்க அவர்கள் கையாளும் முறைகள், வாழ்க்கை வட்டச் சடங்குகள் போன்ற பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வது எவ்வளவு முக்கியமோ அது போன்று, இனவரைவியலார், இலக்கியத்தையும் ஆராய்வது அவசியமானது'' (ஆ.தனஞ்செயன், 2006:12) ஆகும்.

படைப்பாளன் ஒரு படைப்பை உருவாக்கும் பொழுது, அவருடைய கருத்தோடு அவ்வக்கால மக்கள், அவர்களின் சூழல், வாழ்வியல் முறைகள், இயங்கும் இயங்காப் பெருட்கள் ஆகியன தெரிந்தோ, தெரியாமலோ படைப்பில் இடம்பெற்றுவிடுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதனையே, படைப்பாளி ஒருவன் சுயசிந்தனை என்ற எல்லைக்குள் நின்று மட்டும் ஒரு இலக்கியத்தைப் படைத்துவிட முடியாது. அவனைச் சுற்றியுள்ள புறவுலகின் அசையும் பெருட்கள், அசையாப் பொருட்கள் ஆகிய அனைத்தையம் உற்றுநோக்கி, அவற்றின் தனிப்பட்ட இயல்புகளையும் இயக்கங்களையும் இணைத்து இலக்கியம் படைக்க வேண்டியிருக்கும் (ஆ. சிவசுப்பிரமணியன்,2009:13) என்று குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கிய எட்டுத்தொகை அடிவரையறையை மையமாகக் கொண்டு, ஐந்திணை அடிப்படையில் அகச் செய்யுள்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைக் குடியினரின் இனவரைவியலைப் பெற இயலுகிறது. மேலும் , பத்துப்பாட்டின் மூலம் பாணர்,பொருநர், கூத்தர் ஆகிய இனத்தவரின் இனவரைவியலைப் பெற இயலுகிறது. ''சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகளையும் வரலாற்றையும் சங்க இலக்கியங்களைக் கொண்டே பேசி வருகின்றோம். நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், வாழ்க்கைமுறைகள், சடங்குகள், தொழில்கள், புழங்குப் பொருட்கள், மக்கள் குழுக்கள், உணவு, ஆடை, விலங்குகள், பறவைகள், நிலை உயிர்கள், ஐம்பூதங்கள் போன்றவை

குறித்த செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவையனைத்தும் இனவரைவியல் தரவுகள் ஆகும்'' (ஞா.ஸ்டீபன், 2010:16) எனும் கருத்துக் குறிப்பிடத்தக்கதாகும்.

காலந்தோறும் படைக்கப்பெறும் இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டையுடைய சமூகத்தைப் பற்றிய இனவரைவியல் செய்திகள் இடம் பெறும் என்பது நிலையான பதிவாக அமைகின்றன.

''வேறு வகையான ஆவணங்கள் எவையும் கிடைக்கப் பெறாத , ஒரு கடந்த காலத்திய சமூகத்தை, அதன் பண்பாட்டைப் புரிந்து கெள்வதற்கு, ஆராய்வதற்கு அச்சமூகம் படைத்தளித்த கலை இலக்கிய வடிவங்களையே முக்கிய ஆதாரங்களாகப் பயன்படுத்துவதை ஒரு தவிர்க்கமுடியாத விதிமீறலாக நாம் ஏற்க வேண்டியவர்களாக உள்ளோம்'' என்று குறிப்பிடுகிறார் (ஆ.தனஞ்செயன்,2006:38) இவ்வாறாக இலக்கியங்களில் இனவரைவியல் பதிவுகள் காணப்படுவதை அறியமுடிகின்றது. அவ்வகையில் குறுந்தொகையில் குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுகின்றனர். (குறுந்.272) மலைச்சாரலில் மலைநெல்லை விதைத்து அருவியின் நீர்கொண்டு பயிர் செய்கின்றனர். (100, 371). மரத்தை வெட்டிச் சுட்டபின் அந்நிலத்தைக் கொத்திப் பண்படுத்தி தினை, பருத்தி ஆகியவற்றை விதைக்கின்றனர் (198,72,214). மலைச்சாரல்களிலிருந்து தேன் சேகரிக்கின்றனர் (3, 60, 176). தரைக்கடியிலிருந்து கவரைக்கிழங்கைத் தோண்டியெடுக்கின்றனர் (233,379). முல்லை நில மக்கள் கால்நடைகளை வளர்த்தும் வரகு முதலிய புன்செய் நிலப்பயிர் செய்தும் வாழ்கின்றனர் (358, 221, 220, 282). மருதநிலத்தில் உழவரும் வினைஞரும் காணப்படுகின்றனர் (309). வாளையும் கெண்டையும் உள்ள கழனிகள் காணப்படுகின்றன (127, 8). நீர் பாய்ச்சிக் கரும்பு பயிர் செய்வது காணப்படுகிறது (149). செந்நெல்லும் வெண்ணெல்லும் காணப்படுகின்றன (53, 277, 210). இவற்றுக்கு சிறுகான் யாறு, மழைநீர் நிறைத்த கயம் (171, 113), மூலம் நீர்வரத்து நடந்துள்ளது. நெய்தல் நிலத்தில் தூண்டில், வலை, படகு, எறிஉளி முதலியவற்றின் மூலம் மீன் பிடித்து மீனை நெல்லுக்கு மாற்றி உண்கின்றனர் (269). பாலை நில மக்கள் வழிப்பறி செய்து பங்கிட்டுக் கொண்டு உண்கின்றனர் (331).

குறுந்தொகைப் பாடல்களில் உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்துகொண்ட முறை பற்றி (பாலை நில மக்கள் கடறு கூட்டுண்டதைப் பற்றி (குறுந். 331) கூறியுள்ள ஒரு பாடலைத் தவிர வேறு பாடற்குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் செல்வர் (148, 337, 233), வறியர் (19), இல்லோர் (63, 120, 282), உள்ளோர் (283), இரவலர் (137), சீர் இல்வாழ்க்கை (295), ஓர் ஆன்வல்சி (295), ஓர் ஏர்உழவன் (131), புனவன் துடவை (தோட்டம்) (105, 133), பெரும்புனக் குறவன் (82), நம் படப்பை (98), எம் இல் (354), போன்ற குறிப்புக்களிலிருந்து தனிக்குடும்பமும் தனிச்சொத்துரிமையும் சமுதாயத்தில தலைகாட்டத் தொடங்கி விட்டிருந்த நிலைமையைப் பார்க்கிறோம்.

வாணிபத்தைப் பொறுத்தவரை உப்பை மாற்றி நெல் பெற்றதையும் (269), ஊர்ஊராக சாத்துக்களாகச் சென்று வாணிபம் நடத்தியதையும் (124, 388, 390) குறுந்தொகைப் பாடல்களில் நாம் காணமுடிகிறது. இவை தவிர வரைவதற்கிடையில் பொருள்வயிற் பிரிவும் கற்புவாழ்க்கையின் போது பொருள்வயிற் பிரிவும் தலைவன் தலைவியருள் ஏற்படுகின்றன. அவ்வேளைகளில் வெளிநாடுகளுக்கும் கடல்கடந்தும் (11, 228) சென்று பொருள் ஈட்டி வருகிறான் தலைவன். வாணிபமே பெரும்பாலும் அவன் செய்தது தொழிலாகும் என்று கருத இடமுண்டு. ஆக வாணிபமும் குறுந்தொகை காட்டும் சமுதாயத்தில் ஆரம்ப நிலையில் இருந்தது என்று எண்ணத் தோன்றுகிறது. பண்டமாற்று முறை இருந்தது 9269) என்பதையும் காசு இருந்தது என்பதையும் அது கிண்கிணி அரி அளவு சிறியதாகவும் வேப்பம்பழம் அளவு பெரிதாகவும் இருந்தது என்பதையும் அறிகிறோம் (67,148). அக்காசுகளை மாலையாகக் கோத்து அணித்திருக்கின்றனர். கிண்கிணியின் உள்ளீடாகவும் செய்து உள்ளனர்.

மக்கட் பாகுபாட்டைப் பொறுத்தவரை நில அடிப்படையில் குறவர் (346), கானவர் (322), புனவர் (105), எயினர் (12), மறவர் (297), கோவலர் (358), உழவர் (10), இடையர் (221), அண்டர்

(117), பரதவர் (304), என்ற பெயர்களும் தொழில் அடிப்படையில் உழவர் (10), தச்சர் (61), கோவலர் (358), பொற்கொல்லர் (67), ஏனல் காவலர் (54), சேணோன் (150), யாமம் காவலர் (375), நாழிகைக் கணக்கர் (261), புலைத்தி (330), போன்ற பெயர்களும் குலமரபுக் குழுக்கள் என்ற அடிப்படையில் கோசர் (73), பூமியர் (163), வேளிர் (164), கொங்கர் (393), சோழர் (116), தொண்டையர் (260), விச்சியர் (328), பாண்டியர் (393) போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. சமுதாயம் சாதி என்ற அடிப்படையில் பிரிந்திருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் பாடல் எண் 45ல் வால்இழை மகளிர்த் தழீஇய சென்ற (பரத்தையிடம் சென்ற) தலைவனைப் பார்த்துத் தலைவி புரியாமல் குழம்பி நிற்க ''இதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கும் இத்திணையில் பிறந்திருப்பது துன்பம் தரத்தக்கதாக உள்ளது'' என்று தோழி கூறுகிறாள். ஆகவே குழுவின் சில குடிப்பிரிவுகளில் சில ஒழுக்க விதிகள் கைப்பற்றப்பட்டனவோ என்றும் தனித்தனி ஒழுக்கத்தைக் கைப்பற்றியவர்கள் தனித்தனித் திணையினர் அல்லது குடியினர் என்று அழைக்கப்பட்டனரோ என்றும் நினைக்க வேண்டி உள்ளது. இவ்விடத்தில் பேராசரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ''இலக்கணமும் சமூக உறவுகளும்'' என்னும் அவர் எழுதிய நூலில் ''குடும்பம், கணம், குடியிருப்பும் என்னும் பொருளைத்தரும் குடி என்னும் பெயர்ச்சொல்லைக் குறிக்கத் ''திணை '' எனும் சொல் பயன்படுவதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன'' என்பதையும் அதற்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள பாடல்களில் இப்பாடலும் (குறுந்.45) ஒன்று என்பதையும் குறித்துப் பார்ப்பது உதவியாக இருக்கும். இந்த நிலைமையும் பிற்காலத்தில் தொழில்கள் பரம்பரையாக பிறப்பிலேயே வாய்த்து அவரவர் தொழிலுக்கு ஏற்பச் சிற்சில வேறுபட்ட ஒழுக்கங்கள் அமைந்ததும் அத்தொழில் செய்தவர்களிடையிலேயே மணவினைகள் நடைபெற்றதும்(அகமணம்) சாதிகள் உருவெடுக்கக் காரணங்களாக இருந்தனவோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

தமிழகத்துக் குலமரபுக் குழுக்களின் தலைவர்களாக எவ்வி (19), குட்டுவன் (34), எழினி (80), ஆஅய் (84), பெரும்பூண் பொறையன் (8), அஞ்சி (91), ஓரி (100), சோழன் (116), மலையன் (198), நள்ளி (210), அழிசி (258), விச்சியர் பெருமகன் (328), பசும்பூண்பாண்டியன் (393), அதிகன் (393), ஆகியோர் காணப்படுகின்றனர். ஆட்சியோடு தொடர்பு கொண்ட மன்றம் (46), செங்கோல் அவையம் (376) கட்டில் (335), தானை (328), முரசு (328), நுண்தோல் (கேடயம்) (392), திண்தேர் (128), வில்கெழு தானை (328), நாடு (130), மன்னன் (225), அரசன் (276, 392), வேந்தர் (380) ஆகியவையும் பாடல்களில் தெரிகின்றன. இக்குழுத்தலைவர்களில் அஞ்சி (91), எழினி (80), விச்சியர் (328) ஆகியோர் தம் பகைவர்களோடு போரிட்டதாகக் காட்டப்படுகிறது. ஆக இப்போர்களும் ஆட்சியும் இன்னும் பெருமன்னர்கள் உருவாகவில்லை என்பதையும் குலமரபுக் குழுக்களின் தலைவர்கள் முட்டி மோதி வேந்தர்களாகும் முயற்சியிலும் வேந்தர்கள் மன்னர் மற்றும் அரசர்களாகும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் தெரிவிக்கின்றன.

குறுந்தொகை காட்டும் மக்கள் பேயைக் கண்டு அஞ்சினர் (161). அதன் பல், யானையின் நகத்தைப் போன்றிருக்கும் என்று பயந்தனர் (180). பெண்களைப் பேய் பிடித்துக் கொள்ளும் என்றும் அச்சப்பட்டனர் (263). ஆட்டுக்குட்டியை அறுத்துப் படையல் வைத்துப் பல தெய்வங்களை வாழ்த்தி பேயோட்ட முயன்றுள்ளர் (263). மலைகளிலும் ஊர் மன்ற மரத்திலும் அச்சம் தரும் தெய்வம் இருப்பதாகவும் நம்பினர் (52, 87, 89, 105, 376). மன்ற மரத்திலுள்ள தெய்வம் கொடியவர்களை வருத்தும் என்ற நம்பினர் (87). தலைவனை நினைத்துத் தலைவி மெலிகின்ற பொழுது வேலன அழைத்து வெறியாட்டு நடத்துவர். அவன் தலைவியை நெடுவேள் அணங்கிற்று என்பான். மறி அறுத்து வெறியாட்டு நடத்துவான். தன் மேல் முருகு வந்திருப்பதாகக் கூறுவான் (111, 362). தாம் வேண்டுவது நிலைவேறச் சூலியை வணங்கிக் கையில் நூலால் காப்புக் கட்டிக்கொள்வர் (218). கொல்லிக் கருங்கண் தெய்வம் எழுதிய நல்லியல் பாவையைத்(89) தவிர வேறு தெய்வ உருவம் பற்றிக் குறுந்தொகையில் இல்லை. குறுந்தொகை காட்டும் மக்கள் உயர்நிலை உலகம் (361), அமிழ்தம் (83), நிரையம் (நரகம்) (292), இம்மை மறுமை (49, 199) ஆகியவற்றில் நம்பிக்கை வைக்க ஆரம்பத்திருக்கின்றனர். ''நெய்பெய் தீ போன்று'' என்ற தொடர் பாடல் எண்

106 இல் சொல்லப்பட்டுள்ளது. உ.வே.சா. அவர்கள் இதை மணச்சடங்கின்போது நெய் பெய்த தீயின் நினைவு என்று கொள்கிறார். வேள்வி செய்யும் பழக்கம் குறுந்தொகை காட்டும் தமிழகத்தில் வர ஆரம்பித்து விட்டது என்று எண்ண வேண்டியுள்ளது.

குறுந்தொகை காட்டும் மக்கள் விழுமியங்களாக ஏற்றுக் கொண்டுள்ளவற்றை நோக்கும்போது அவர்களுடைய வாழ்க்கையில் தோன்றி வளர்நத ஒழுக்கங்களையும் தனிச்சொத்துரிமையடிப்படையில் வளர்ந்திருந்த கோட்பாடுகளையும் பண்பாடுகளையும் காணமுடிகிறது. இவை பிற்காலத்தில் அறநெறியின் கூறுகளாகப் போற்றப்பட்டன. பொய் கூறுவதை இழிவாகக் கருதினர் (259, 184). பிறர் தமக்குச் செய்த நன்றியை மறக்காமல் அவற்றைப் பேணினர் (225, 115). தன் ஒழுக்கத்தில் வடு ஏற்பட நாணினர் (88,24). பிறர் தம்மைப் புகழும்போது அப்புகழ்ச்சியைக் கேட்க நாணினர் (252). சான்றோரை மதித்து நடந்தனர் (265). இல்லோர் வாழ்க்கை இழிவானது, உள்ள பொருளைச் சிதைக்கக் கூடாதென்றும் கருதினர் (283).. ஒவ்வொரு நாளும் தம்மிடம் இரவலர் வந்து இரக்க வேண்டும் என்று விரும்பினர் (137). கொடுப்பதை நீரொடு சொரிந்து ஈந்தனர் (233). இரந்தோர்க்குக் கொடுத்ததைத் திருப்பித்தா என்று கேட்பதைவிட தம் உயிரை விடுவதையே மேலாகக் கருதினர் (349). எல்லாவற்றுக்கும் மேலாக உலகில் உள்ள எதுவும் நிலையாக நிற்பதில்லை. அப்படி நில்லாமையாக இருப்பது ஒன்றே நிலையான ஒன்று (நில்லாமையே நிலையிற்று) என்று எண்ணினர் (143).

குறுந்தொகை காட்டும் மக்களின் கலைகளைப் பற்றிப் பார்க்கும்போது கோடியர் (78), பாணர் (19, 323) போன்ற கலைஞர்களையும் முரசு (32ழ8), முழவு (301), தண்ணுமை (390), பதலை (59), தொண்டகம் (375), குழல் (151), யாழ் (323) போன்ற இசைக்கருவிகளையும் படுமலை (32), விளரி (336) போன்ற பண்களையும் அவர்கள் பயன்படுத்தி வந்திருப்பதைக் காணமுடிகிறது. கொல்லிக்குடவரையில் நல்லியல் பாவையின் ஓவியம் வரையப்பட்டிருந்தது (89). கூத்து என்ற வகையில் துணங்கைக் கூத்து நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (31, 364). அக்கூத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து ஆடி இருக்கின்றனர் (31). விளையாட்டு என்ற வகையில் மகளிர் கடற்கரையில் சிறுமனை கட்டி விளையாடியிருக்கின்றனர் (326). சிறுவர் தச்சன் செய்த சிறு தேரை உருட்டி விளையாடினர் (61). ஆற்றில் புதுவெள்ளம் வரும்போது ஆணும் பெண்ணும் சென்று அதில் விளையாடி இருக்கின்றனர் (358, 80) ஆரியர் பறையறைந்து கயிறாடியதாக ஒரு பாடல் (7) கூறுகிறது. எழுத்தை அறிந்திருந்தனர் என்பதற்கு சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையே சான்று ஒன்றில் பாதியாகிய (1.2) அரை என்னும் எண்ணிலிருந்து ஒன்பது வரையும் அறிந்திருந்தனர் என்பதை உய்த்துணரலாம் (280,277, 43, 287, 229, 42,129,292). பாடல் எண் 156 இல் தலைவன் பார்ப்பன் நண்பனைப் பார்த்து "எழுதா கற்பின் நின்சொல்லுள்ளும்" என்பதால் பார்ப்பனரின் வேதமும் மந்திரமும் (உ.வே.சா. எழுதாக் கற்பு என்பதற்கு இப்படித்தான் பொருள் கொள்கிறார்). எழுதப்படாமலே வாய்வழியாகவே சொல்லப்பட்டு வந்தன என்று தெரிகிறது.

முடிவுரை

இலக்கியத்திலுள்ள செய்திகளின் தொகுப்புகளை இனவரைவியல் கூறுகள், கொண்டு ஆய்வு செய்வதன் மூலம் இலக்கியத்தின் தன்மையையும் அறியஇயலும். மேலும் ஒவ்வொரு இனக்குழுவின் இனவரைவியல் கூறுகளை ஆராய்வதன் வழி அக்குழுவின் மரபுகளையும் அறிய இயலும்.

துணைநூற்பட்டியல்

- அன்பரசன், 2011, பெரும்பாணாற்றுப்படை இனவரைவியல், (இளமுனைவர்பட்ட ஆய்வேடு), திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்.
- சக்திவேல், சு., 1972, மானிடவியல் கலைச்சொல்லகராதி (ஆங்கிலம் - தமிழ்), திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சிவத்தம்பி கா., 1999, இலக்கணங்களும் சமுக உறவுகளும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

- சிவசுப்பிரமணியன், ஆ., 2009, இனவரைவியலும் தமிழ் நாவலும், பரிசில் வெளியீடு, சென்னை.
- தனஞ்செயன், ஆ. 2006, விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள் -இனவரைவியல் ஆய்வு, புதுச்சேரி.
- பக்தவத்சல பாரதி, 2003. பண்பாட்டு மானிடவியல். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- ....., 2005, மானிடவியல் கோட்பாடுகள், புதுச்சேரி. வல்லினம்.
- ஸ்டீபன், ஞா., 2010, தொல்காப்பியமும் இன வரைவியல் கவிதையியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்

கு. தனலட்சுமி
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17.

செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் சங்கப் புலவர்களின் கவிக்கொடையால், பண்டைத் தமிழர்களின் மரபுசார்ந்த விழுமியங்களை எடுத்தியம்புகின்றன. நம் தமிழர்கள் உழவுத்தொழிலைக் கொண்டு உலகுக்கு உணவளித்ததோடு, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலினர் என்பதனை உயர்த்திக் கூறும் நோக்கில், 'பத்துப்பாட்டில் பழந்தமிழரின் தொழிற்சிறப்பு' என்னும் தலைப்பின் கீழ் ஆய்ந்து, பழந்தமிழர் இலக்கியத்தில் பயிர்த்தொழிலில் 'நெல்' (தானியம்) இன்றியமையாதப் பயிராக இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டி, நெல்லின் தேவையையும், சிறப்பையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உழவின் இன்றியமையாமை

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்
அதனால் உழந்தும் உழவே தலை (குறள்-1031)

என்ற குறட்பாவின் பொருளுக்கிணங்க, உலகத்தில் உள்ள உயிரினங்களின் அனைத்துச் சுழற்சியும் உணவினை மையமிட்டே இயங்குகிறது எனலாம். மனிதனின் பசிப்பிணியைப் போக்கும் உணவினைப் பகிர்ந்தளிக்கும் ஒப்புயர்வு பெற்ற தொழில் உழவுத்தொழில். உணவின் தொழில் வெறும் பசியாறுதல் என்பதோடு நின்றுவிடாமல், நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் இன்றியமையாத காரணிகளுள் முதலாவதாகும் (2007:32) எனக் குறிப்பிடும் ஆ.மணவழகனின் கருத்து இங்குப் பொருத்திப் பார்க்கத் தக்கது.

தொல்காப்பியம் சுட்டும் தொழில் வைப்புமுறை

பண்டைத் தமிழினம் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனத் தொழில்முறையால் பாகுபாடு செய்யப் பெற்றிருந்ததைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. தவிர, நால்வகை நிலங்களில் வாழும் மக்களின் தொழிற்கூறுகளைக் கருப்பொருட்களின் வாயிலாக விளக்குகின்றது.

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
இவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்.அகத்.20)

இந்நூற்பாவில் செய்தி என்பது தொழில் எனும் பொருண்மையில் பயின்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற நால்வகைத் தொழில் பாகுபாட்டில், வேளாளர்க்கான தொழிற்றிறனும் அவர்தம் செயலும் மரபியலில் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளது.

வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி (தொல்.மரபு.81)

வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்
வாய்த்தனர் என்ப அவர்பெறும் பொருளே (தொல்.மரபு.82)

எனும் நூற்பாக்கள் வேளாண் மாந்தர்க்கு உழுதுண்டு வாழ்வதே தொழில் என்பதனையும், அவர்கள் வேந்தனால் ஏவப்பட்ட தொழிலைச் செய்பவர்கள் என்பதனையும் குறிப்பிடுகின்றன.

பழந்தமிழர்களின் பயன்பாட்டில் நெல் (தானியம்)

பண்டைக்காலம் முதல் இன்றுவரை தமிழக உழவுத்தொழிலில் நெல் முதன்மையான இடத்தைப் பெற்று வருகின்றது. பத்துப்பாட்டிலும் நெல் பற்றிய குறிப்புக் காணப்பெறுகின்றது.

1. சாலி - உயர்தர நெல்

பண்டைக்காலத்தில் சாலி எனும் உயர்தர நெல் இருந்ததனை மதுரைக்காஞ்சி குறிபிடுகின்றது.

சீர்சான்ற உயர்நெல்லின்

ஊர்கொண்ட உயர்கொற்றவ (மதுரைக்.87-88)

கடலை அரணாகக் கொண்டு வளம்கொழித்த சாலியூர் எனும் ஊர் சாலி எனும் நெல் விளைந்த வளத்தால் பெயர் பெற்ற வரலாற்றை இப்பாடலடிகளால் அறியலாம்.

2. உழவும் ஓசையும்

உழவுக்கும் ஓசைக்கும் எண்ணற்ற தொடர்பு உண்டு. உழவில் நாற்று நடுதல் தொடங்கி அறுவடை செய்து விளைச்சலை இல்லம் கொண்டு சேர்க்கும்வரை பணிச்சோர்வு நீங்கப் பாடல் இசைப்பது உழவர்தம் செயலாக அமைந்துள்ளது; அமைந்து வருகின்றது.

வெள்ளம் மாறாது விளையுள் பெருக

நெல்லின் ஓதை அரிநர் கம்பலை (மதுரைக்.109-110)

மழையின் கொடையால் வயலில் விளைந்த நெல் காற்றடித்து அசைவதால் எழும் ஓசையும், நெற்கதிர்களை அறுப்பவர்களின் ஓசையும் எண்ணற்ற நிகழ்வுகளினால் எழும் ஓசையும், கொண்ட வளமான ஊர் முதுவெள்ளலை என்பதனை மதுரைக்காஞ்சிவழி அறிய முடிகின்றது.

3. மருதநிலத்தின் செழுமை

மருத நிலத்தில் நெற்பயிரானது யானை நின்றாலும் மறையும் அளவிற்கு நெடிது வளர்ந்த தாளினைக் கொண்டிருந்தது என்பதனை,

களிறு மாய்க்கும் கதிர்க்கழனி (மதுரைக்.247)

எனும் பாடலடியால் அறிய முடிகின்றது. தற்போதுள்ள சம்பா, பொன்னி நெல்வகைகளும் நெடிது வளர்வன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

வயல்களில் நன்கு முற்றிய செந்நெல்லினை எருமையின் கன்று உண்ட மயக்கத்தில் நெற்கூடுகளில் படுத்து உறங்கும் வளமை வாய்ந்த சோழநாட்டின் சிறப்பினை

விளைவுஅறா வியன்கழனி (பட்டினப்.8)

எனும் பாடலடி அழகுற எடுத்துரைக்கின்றது. வெண்மையான பூக்களையுடைய கரும்பும் செந்நெல்லும் வளர்ந்து வளங்கொழிக்கும் மருதநிலத்தின் செழிப்பினைப் பட்டினப்பாலை(240) குறிப்பிடுகின்றது.

4. மூங்கிலரிசி

குறிஞ்சி நிலத்தில் விளையக்கூடிய இன்றியமையாத தானியம் மூங்கிலரிசி. இதனை,

நெற்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை (குறிஞ்சிப்.35)

எனும் பாடலடி குறிப்பிடுகின்றது. மூங்கிலரிசியைத் தின்ன வருகின்ற யானை என்பது இப்பாடலடியின் பொருள். யானை விரும்பி உண்ணும் மூங்கிலரிசியானது நன்கு முற்றி விளையப் பன்னிரண்டு ஆண்டு காலமாவதோடு, அவ்விடத்தேயுள்ள மூங்கில் மரம் அழிந்து புதியதாக இளந்தளிர் துளிர்க்கும் எனும் தகவல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

மூங்கில் நெல்லை அவலாகப் பக்குவப்படுத்தி உணவாகப் பயன்படுத்தியதையும் பெருமூங்கிலரிசியானது முற்றிய கதிராய் அசையாது நின்றதையும் மலைபடுகடாம்(121, 133) வாயிலாக அறியலாம்.

5. குறிஞ்சிநில ஐவன வெண்ணெல்

குறிஞ்சிநில மக்கள் தம் மண்ணின் வளத்திற்கேற்ற நெல்வகையினைப் பயிரிட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கியுள்ளனர்.

நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி
ஐவன வெண்ணெலொடு அரில்கொள்பு நீடி
இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத்து ஈண்டி (மதுரைக்.286-290)

தோரை நெல், நெடிய தாளினையுடைய வெண்சிறு கடுகு, ஐவன வெண்ணெல் இவற்றோடு ஊடுபயிராக மஞ்சள், இஞ்சி, மிளகு எனப் பல பயிர்வகைகளைக் குறிஞ்சிவாழ் மக்கள் பயிரிட்டனர் என்பதை மேற்கண்ட பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன. ஒரே விளைச்சலில் பருவப்பயிரோடு ஊடுபயிரை விளைவித்தல் பண்டைக்காலந்தொட்டே வழக்கில் உள்ள தமிழரின் தொழில்நுட்பம் ஆகும்.

6. நெல்லைத் தூவி வழிபடுதல்

இல்லற மகளிர் மாலையில், ஞாயிறு மறையும் நேரத்தில் விளக்கேற்றி, நெல்லையும் மலரையும் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கினர் என்பதை,

நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவண மாலை அயர(நெடுநல்.43-44)

எனும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

7. பண்டமாற்றில் நெல்

நெய்தல் நிலத்தில் வாழ்கின்ற உமணர்கள் வெண்ணிறமுடைய உப்பினைப் படகில் உப்பங்கழி வழியே எடுத்துச்சென்று விலைகூறி விற்ற பணத்தில், வேற்றுநிலத்தில் விளையும் நெல்லினைப் பெற்று, தம் நாடு திரும்பினர் என்பதை,

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வள்வாய்ப் பஃறி (பட்டினப்.29-30)

எனும் பாடலடிகள் விளக்கி நிற்கின்றன. உமணர்கள் தங்கள் உணவுத் தேவையையும், பொருளாதாரத்தையும் சீர்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. நெய்தல் நிலத்தில் வாழும் மக்களானப் பரதவர்களின் தொழில் மீன்பிடித்தல் (பட்டி.29-30) எனவும், உமணர்களின் தொழில் உப்புவிளைவித்தல் (பட்டி. 90-93) எனவும் தொழில் பகுப்பு முறையை பட்டினப்பாலைக் குறிப்பிடுகிறது.

8.நெல் பாதுகாத்தல்

'கூழுடைக் கொழு மஞ்சிகை
தாழுடைத் தண் பணியத்து
வால் அரிசிப் பலி சிதறி' (பட்டினப்.163-165)

நெல்லையும், அரிசியையும் "கூட்டில்' பாதுகாப்பாக வைத்து , நெல்லை வாங்க விழைவோர் அடையாளம் கண்டுக்கொள்வதற்குக் குறியீடாக வெண்ணிறக் கொடியை நாட்டி, வாணிபம் செய்தனர் வணிகர்கள் , என்பதனைப் பட்டினப்பாலைப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

9. அறக்கூழ்ச் சாலை

சங்க இலக்கியமானது மரபுக்கூறுகளோடு மனித அறநெறிகளையும் கட்டமைப்பாகக் கொண்டது. பண்டைக்காலத்தில் பசித்துன்பத்தைப் போக்கும் அறக்கூழ்ச்சாலை அமைக்கப்பட்டிருந்ததைப் பட்டினப்பாலை,

சோறு வாக்கிய கொழுங்கஞ்சி

யாறு போலப் பரந்து ஒழுகி (பட்டினப்.44-45)

எனும் பாடலடிகளின்வழி உணர்த்துகின்றது. இச்செய்தி, மனித இனத்திற்கு வரையாது உணவளிக்கும் வளமான நாட்டையும் கொடையுள்ளத்தையும் கொண்டவர்கள் தமிழர்கள் எனும் பெருமித உணர்வைத் தருகிறது.

நிறைவுரை

பயிர்த்தொழிலில் நெல்லானது உணவுத்தேவைக்கான உற்பத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, அச்சீர்மிகு உழவுத்தொழில் திறம்பட, கழனிவாழ் உழவர்களின் உழைப்பின் மேன்மையைக் காலந்தோறும் பேணிப் போற்றுவதோடு, தமிழர் ஒவ்வொருவரும் அத்தொழிலைக் கைக்கொள்ள விழைந்திடுதல் சாலச் சிறந்தது.

துணைநின்றவை

- அடிகளாசிரியர் (பதி.), 2008, *தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை,* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
- நாகராசன் வி. (உரை.), 2011, *பத்துப்பாட்டு மூலமும் உரையும்,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- மணவழகன் ஆ., 2007, *சங்க இலக்கியத்தில் வேளாண் மேலாண்மை,* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- ……, 2010, *திருக்குறள் பரிமேலழகர் உரை,* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

பழந்தமிழரின் போர் முறைகள்

அ.பிரீதா
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17.

சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப் பெற்றது. ஆடவரும், மகளிரும் இயற்கையிலேயே மறப்பண்பு மிக்கவராய் விளங்கினர். இதனால் இவர் 'மறவர்', 'மறக்குடி மகளிர்' என அழைக்கப் பெற்றனர். ஒவ்வொருவருக்கும் வகுக்கப்பட்ட கடமைகள் போரோடு தொடர்புடையனவாகவே அமைந்திருந்தன. சங்க காலத்தில் மறமே மிகுந்திருந்ததனால் எண்ணற்ற போர்கள் நடைபெற்றன என்பதனை இலக்கியங்கள்வழி அறிய முடிகிறது. போரானது பல்வேறு காரணங்களுக்காக நிகழ்ந்துள்ளது. அவ்வகையில் சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது. ஒரு சமுதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பினைஅரசன் கொண்டிருந்தான். அந்தச் சமுதாயம் அரசனையே நம்பி வாழ்ந்தது. அவ்வாறு நம்பி வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை வளமாக அமைய வேண்டும் என்று நினைத்த அரசன் அதற்காகத் தன்னுடைய படையைக் கொண்டு பிறநாட்டுடன் போர் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே போருக்குச் செல்லும் வீரம் மிக்கவர்களே சிறப்பிற்குரியவர்களாகக் கருதப்பட்டனர்.

ஈன்று புறந்தருதருதல் எம்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம்.312)

எனும் புறநானூற்றுப் பாடல் பழந்தமிழரின் கடமைகளுள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றது. இப்பாடலில் குறிப்பிடப்பெறும் பெரும்பாலானோரின் கடமைகள் போரொடு தொடர்புடையனவாகவே அமைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

> *வீரமும் போர்ப்பண்பும் ஆடவர்க்குரிய இன்றியமையாப் பண்புகளெனச் சங்ககாலம் கருதியது. வீரநிலைக் காலத்தில் நிலவிய போர் விருப்பச் சமூகம் சங்ககாலத்திலும் நிலவியது.* (2007:107)

என்று கூறும் கு.வெ.பாலசுப்பிரமணியனின் கருத்து இங்கு உடன்வைத்து எண்ணத்தக்கது.

பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள், தொழில், விளையாட்டு ஆகியன யாவும் மறப்பண்புடன் திகழ்ந்துள்ளன. இதனை நோக்குங்கால் பழந்தமிழர் இயற்கையாகவே போர்க்குணம் படைத்தவராக விளங்கியிருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு இயல்பாகவே மறத்தன்மை மிக்க பழந்தமிழர்கள் போர்களைப் பல முறைகளில் மேற்கொண்டுள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் பின்வரும் பகுதியில் விளக்கப்பெறுகின்றன.

நிரை கவர்தலும் நிரை மீட்டலும்

ஒரு நாட்டு அரசன் தன் அண்டை நாட்டுடன் போர் மேற்கொள்ளக் கருதினால் பகைவர் நாட்டின் ஆநிரைகளைக் கவர வேண்டும் என எண்ணுவான். ஒவ்வொரு நாட்டவரும் தங்களின் எல்லையைப் பாதுகாக்கக் காவலர்களாகப் பலரை நியமித்திருந்தனர். அக்காவற்படைஞர் ஏராளமாக ஆடுமாடுகளை வளர்த்து வருவர். அவர்கள் ஆநிரைகளைப் பெருஞ்செல்வமாக நினைத்தனர். எனவே

அவர்கள் செல்வமாக நினைக்கின்ற ஆநரைகளைத் தங்களுடைய மறவர்களை ஏவிக் களவு செய்து ஓட்டிக்கொண்டு வரச் செய்வர்.

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும் (தொல்.புறத்.60)

இவ்வாறு ஆநிரைகளைக் கவர்வதால் இருநாட்டினர்க்கும் போர் ஏற்படும். இதனை வெட்சிப்போர் என்பர். ஆநிரைகளுக்குரியோர் அவற்றை மீட்க வரும்பொழுது அவர்களோடு போருக்குச் செல்வர். இவ்வாறு நிரைமீட்கப் போரிடுவது கரந்தைப் போர் ஆகும். இவ்வாறு ஆநிரைகளைக் கவர்தலையும் மீட்டலையும் போருக்குரிய ஒரு காரணியாகக் கொண்டிருந்தனர் பண்டைத் தமிழர்கள்.

எல்லை விரிவாக்கம்

பழங்காலத்தில் தமிழகத்தே இரு நாட்டிற்கும் இடையே எல்லையாகப் பெரிய நிலப்பரப்பில் மரம், செடி, கொடிகள் நிறைந்து காடுகளாக இருந்துள்ளன. தம் நாட்டு மக்கள் சிறப்பாக வாழ வேண்டும் என்றால் தம் நாடு பெரிதாகப் பரந்து காணப்பட்டால் சிறப்பாக இருக்கும் என நினைத்த வேந்தன் தம் அண்டை நாட்டின் செழிப்பான நிலப்பரப்பைத் தனதாக்கிக் கொள்ள எண்ணி, அந்நாட்டின் மீது போர் தொடுக்கத் தக்க காலம் பார்த்திருப்பான். அதற்கான காலம் வாய்க்கும்போது அந்நாட்டின்மீது தன்னுடைய படையைக் கொண்டு போர் மேற்கொள்வான். இவ்வாறு ஒருவன் மண்ணாசையால் பிற நாட்டின் மீது படையெடுத்துச் செல்லின், அந்நாட்டரசனும் தம் மண்ணை இழக்காமல் காத்தற்கு வருவான். இவ்வாறு அவ்விருவரும் மண்ணாசை காரணமாகப் போரிடுவது வஞ்சிப் போர் என்று கூறப்படுகின்றது. இதனை,

எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே (தொல்.புறத்.64)

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

அரண் முற்றுகை

ஓர் அரசன் ஒரு நாட்டின்மீது படையெடுத்துச் சென்றால், எதிர்நிற்க இயலாத அந்நாட்டு மன்னன் தன் கோட்டைக் கதவுகளையடைத்து அதனுள் பாதுகாப்பாக இருந்து கொள்வான். படையெடுத்துச் சென்ற மன்னன் அந்நாட்டுக் காட்டையை முற்றுகையிடுவான். இதனை,

முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப (தொல்.புறத்.66)

என்று உழிஞைப் போராகக் குறிப்பிடுவார் தொல்காப்பியர்.

பகைநாட்டு மன்னன் அஞ்சித் தன்னிடம் வந்து பணிந்து தனக்குக் கீழ் இருக்க வேண்டும் என்றால் அவனுடைய கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு மன்னர்கள் இத்தகைய போர்முறையை மேற்கொண்டனர்.

இவ்வாறு பிற மன்னர்கள் தம் கோட்டையைக் கைப்பற்றிவிடக் கூடாது என்று மன்னர்கள் தம் கோட்டையைச் சுற்றி மதில்கள் அமைத்துப் பாதுகாத்து வருவர்.

கோடுறழ்ந் தெடுத்த கொடுங்கள் இஞ்சி (பதிற்.16.:1)

என்று கோட்டையைச் சுற்றி மதில்கள் அமைத்திருப்பதைப் பதிற்றுப்பத்துக் குறிப்பிடுகின்றது.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண் (குறள்.742)

மதிலுடன் கூடிய, கருநிறம் கொண்ட நீர்நிலையாகிய அகழியும் பரந்த வெளியும் உயர்ந்த மலைகளும் மரங்களடர்ந்த காடும் ஒரு நாட்டைப் பாதுகாக்கும் சிறந்த அரண்களாகும் என்று

திருவள்ளுவர் கூறுவதன்மூலம் மன்னர்கள் அரண் அமைத்துத் தங்களின் கோட்டையைப் பாதுகாத்தனர் என்பதனை உணர முடிகின்றது.

வலிமையை நிலைநாட்டல்

தமது வலிமையினை உலகம் புகழ்தலையே பெருமபொருளாக எண்ணுகின்ற இரு மன்னர்கள் எதிர்த்து ஓரிடத்தில் களம் குறித்துப் போரிடுவர். இதனைத் தும்பைத்திணை என்பர்.

மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப (தொல்.புறத்.76)

ஒத்த வலிமையுடைய இரு மன்னர்கள் போரிடுவதை இந்நூற்பாவானது குறிப்பிடுகின்றது. வலிமை மிக்க இரு மன்னர்கள் போரிடுவதால் இந்தப் பாரானது கடுமையான போராகக் கருதப்பெற்றது. இரு நாட்டு வளங்களும் அழிவைச் சந்திக்கின்றன.

திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்
பெருமரத்து இலையில் நெடுங்கோடு பற்றவும் (புறம்.4:4-5)

எட்டுத் திசையிலும் எரியும் கொள்ளியால் நெருப்புப் பற்றி எரிகின்றது. அதனால் பச்சை மரங்கள் பட்டுச் செழிப்பற்றுப் போயிருப்பது பற்றி இப்புறநானூற்றுப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

கடற்போர்

கடலில் கலம் செலுத்துவதில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர் தமிழர்கள். வணிகத்திற்காகக் கட்டப்பட்ட கலங்கள் பின்னர்ப் போர்களுக்கும் பயன்படுத்தப் பெற்றன. சோழன் கரிகாற் பெருவளத்தானின் முன்னோர் கடற்போர் நிகழ்த்தியதை

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக (புறம்.66:1-2)

என வெண்ணிக்குயத்தியார் புறநானூற்றில் குறிப்பிடுகின்றார்.

கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பில் படுகட லோட்டிய (பதிற்.46:11-12)

சங்குகள் ஒலிக்கும் கடல் கலங்கும்படி வேற்படையைச் செலுத்திப் பெரிய அலைகளைக் கொண்ட கடலை இடமாகக் கொண்டு போர் மேற்கொண்டு எதிரிகளை ஓடச் செய்து வெற்றி கொண்டவன் சேரன் செங்குட்டுவன் என்று பதிற்றுப்பத்துக் குறிப்பிடுகின்றது.

மேற்காண் இலக்கியங்கள் கூறும் சான்றினைப் பார்க்கும்பொழுது சங்க காலத்தில் கடற்போர் மேற்கொண்டு கடல் கடந்த நாடுகளைத் தமிழ்மன்னர் வெற்றி கொண்டுள்ளனர் எனத் தெரிகின்றது. சங்ககாலத்து மன்னர்கள் தரையில் களம் அமைத்துப் பாரிடுவது போன்று கடலிலும் சென்று போர் மேற்கொண்டுள்ளனர். சங்ககாலத்துப் போர்முறைகளுள் கடற்போரும் ஒன்றாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

பண்டைத் தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களென மதித்துச் செயலாற்றியுள்ளனர். இயல்பிலேயே வீரம்(மறம்) மிக்குத் திகழ்ந்துள்ளவர் மறவர் எனப் பெயர் பெற்றுள்ளனர். பகைநாட்டு மன்னனுடன் போரிடக் கருதிய சூழலில் எவ்விதமான காரணமுமின்றி, முன்னறிவிப்பின்றிப் போர் செய்யும் செயலைப் பண்டைத் தமிழ் மன்னர்கள் மேற்கொள்ளவில்லை. மாறாக, பகைநாட்டு ஆநிரைகளைக் கவர்தல், பகைநாட்டு அரணை முற்றுகையிடல் என்பன போன்ற முன்நிகழ்வுகளைச் செய்துள்ளனர். அவையே வெட்சி, கரந்தை, நொச்சி, உழிஞை... என இலக்கணப்படுத்தப் பெற்றுள்ளன. கடல் கடந்தும் பண்டைத் தமிழ் மன்னர்கள் போரிட்டு வெற்றிக்கொடி நாட்டியதனைப் புறநானூறு உள்ளிட்ட இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

துணைநூற்பட்டியல்

- கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), 2014(13ஆம் பதிப்பு), தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
- பகலவன் ப.(உரை.), 2007(மு.ப.), திருக்குறள் உரை, கற்பகம் புத்தகாலயம், சென்னை.
- பாலசுப்பிரமணியன் கு.வெ., 2007, சங்க இலக்கியத்தில் புறப்பொருள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
- மாணிக்கம் அ.(உரை.), 2012(மு.ப.), பதிற்றுப்பத்து, அறிஞர் அண்ணா நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- மாணிக்கவாசகன் (உரை.), 2012(ஆ.ப.), புறநானூறு, உமா பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு

மு.தமிழ்முல்லை
முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 17.
tasokan7@gmail.com

சங்க இலக்கிய அகமரபு களவு, கற்பு எனும் இரு கைகோளினை உடையதாக அமைந்துள்ளது. இவ்விரு கைகோளிலும் பன்னிரு அகமாந்தர்கள் இடம்பெறுகின்றனர். இத்தகு அகத்திணை மாந்தர்களில் முதன்மையானவர்களாகத் தலைவனும், தலைவியும் உள்ளனர். அகவாழ்வில் இடம்பெறும் இப்பன்னிரண்டு அகமாந்தர்களின் மூலமாகவே அகமரபுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் முல்லைத்திணையில் வெளிப்படுத்தப்படும் அகமரபுகள் குறித்துச் சுட்டிச் செல்வதாக இக்கட்டுரை அமைகின்றது. சுருக்கம்கருதி ஐங்குறுநூற்று முல்லைத்திணைப் பாடல்கள் மட்டும் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளன.

நெஞ்சுக்குச் சொல்லுதல்

அகத்திணை மாந்தர்களாக விளங்குகின்ற முதன்மையானவர்களான தலைவனும், தலைவியும் தம் மனக்குமுறல்களைத் தம் நெஞ்சுக்குச் சொல்லும் முறைமை உண்டு. பிற மாந்தர்கள் எல்லாரும் இவர்களுக்குத் துணை நிற்பவர்களாக அமைகின்றார்கள். நெஞ்சுக்குச் சொல்லுதல் என்பது தலைவனும், தலைவியும் பிரிந்து இருத்தல் காரணமாக அமைகின்றது. முல்லை நிலத்தில் தலைவன் போர்த்தொழிலுக்கு அல்லது பொருள்தேடிச் செல்லும் பொழுது தலைவியைப் பிரிந்து வாழும், வாடும் சூழல் ஏற்படுகின்றது. இதனால் தனித்து இருக்கும் பொழுது நெஞ்சிடம் புலம்பும் தன்மை ஏற்படுகின்றது.

பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்துநனி பெறுதலும் உரியள் மாதோ
இருண்டு தோன்றும் விசும்பினுயர் நிலையுலகத்து
அருந்ததி அனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே (ஐங்.442)

என்ற பாடலில் பேயனார் கார்ப்பருவ வருகையினால் எங்கும் இருள் தோன்றும் வானத்தில், தேவருலகத்தில் என்றென்றும் புகழோடு விளங்குகின்ற அருந்ததியாகிய வடமீனை ஒத்த தெய்வக் கற்பினையுடைய என் அருமைப்புதல்வன் தாயாகிய என் ஆருயிர்க் காதலி நம் மன்னவன் தொழிலாகிய போர்த்தொழிலை விட்டு அமைதி பெற்றால், தான் விரும்பி இருக்கின்ற விருந்தோம்பலைத் தருவதற்குரியவள். அவருடைய செயலுக்கு நான் செயலற்று இருக்கிறேன். நான் என்ன செய்வேன் என்று வினைமேற் சென்ற தலைவன் தன் நெஞ்சுக்குப் புலம்புதலைக் கூறுகின்றார்.

பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே
பனிஉளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை
யாடு சிறைவண்டு அழிப்பப்
பாடல் சான்ற காண்கம் வாள்நுதலே (ஐங்.447)

என்ற பாடலில் போருக்குச் சென்ற தலைவன், தன் தலைவியைப் பிரிந்த ஆற்றாமையைத் தன் நெஞ்சுக்கு உரைக்கின்றான்.

செவிலியின்வழி அகமரபு வெளிப்பாடு

செவிலி என்பவள் தோழியை ஈன்ற தாய்; தலைவியின் வளர்ப்புத் தாய். *ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்*

தாயெனப் படுவோள் செவிலி யாகும்(தொல்.கள.34)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் ஆராய்ந்து அறிந்து கூறுபவள் செவிலியாதலால் தாய் என்று சிறப்பித்துக் கூறப்பெறுபவள் செவிலி ஆவாள் என்று கூறுகின்றார்.

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவண னாக நன்றும்
இனிது மன்றஅவர் கிடக்கை முனிவின்றி
நீல்நிற வியலகம் கவைஇய
ஈனும் உம்பரும் பெறலரும் குரைத்தே (ஐங்.401)

என்ற பாடல், கற்புக்காலத்தில் தலைவன் - தலைவி ஆகியோர்க்கிடையே இருந்த அன்புப்பிணைப்பைச் செவிலி நேரில் கண்டு கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடலைக் கண்ணுறுவோர் இல்லற வாழ்வில் தாமும் இவ்வாறு அன்புப்பிணைப்புடன் வாழ எண்ணும் அளவுக்குச் சிறப்பு வாய்ந்தது தமிழ் அகமரபு.

புதல்வன் கவையினன் தந்தை மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவையினள்
இனிது மன்றஅவர் கிடக்கை
நளியிரும் பரப்பின் இவ்உலகுடன் உறுமே (ஐங்.409)

என்ற பாடல் மூலம் தலைவன் தன் புதல்வனைக் காதலால் அணைத்துக் கிடந்தான். தலைவி தன் பேரன்பினால் இருவரையும் ஒருசேர அணைத்துக் கிடந்தாள் என்று தலைவன் தலைவியின் அன்புப் பிணைப்பைச் செவிலி கூற்றாக அமைத்துள்ளார் புலவர்.

செலவு அழுங்குவித்தல்

செலவு அழுங்குவித்தல் என்பது தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்து செல்ல எண்ணும் எண்ணத்தைக் கைவிடச் செய்தலாகும். தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்லும் தலைவன் பிரிவினால் ஏற்படும் பெருந்துன்பத்தினை அறிவான். பிரிந்து செல்லுதலைத் தலைவியிடம் நேரடியாக சொல்லுவதில்லை.

தலைவியின் தோழியிடம் கூறுவான். அதனால் அவள் பெருந்துன்பம் அடைவாள். தலைவியைப் பிரிந்து செல்ல எண்ணும் தலைவனைத் தோழி தடுத்து நிறுத்துவாள். தலைவனுடைய பிரிவைத் தவிர்க்கவும் செய்வாள்.

செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும் (தொல்.கற்பு.44)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் வினைமேல் பிரிந்து செல்லும் தலைவன், செல்லுதற்குக் காலம் தாழ்த்துதல், செல்லாமல் இருப்பதன்று. தலைவியை வற்புறுத்தலைக் குறித்துத் தங்கிய தவிர்ச்சியாகும் என்கிறார்.

இளங்காதலர்களுக்குப் பிரிதல் என்பது முகவாட்டமும் உயிர் வாட்டமும் தரும் கொடுஞ்செயலாகும். பருவத்தாரின் இம்மனநிலை பருவம் வாராதார்க்குத் தோன்றாது; பருவம் கழித்தார்க்கோ மறந்து போகும்.

என்பார் வ.சுப. மாணிக்கம் (2002:81).

மாமழை இடியூஉத் தளிசொரிந்த தன்றே
வாள்நுதல் பசப்பச் செலவயர்ந் தனையே

யாயே நின்துறந்து அமையலம்
ஆய்மலர் உண்கணும் நீர்நிறைந் தனவே (ஐங்.423)

என்ற பாடலில் தலைவனுடைய பிரிவை அழுங்கச் செய்யும் தோழியின் செயல் வெளிப்படுகின்றது. நீ இப்பருவத்தில் பிரிந்தால் நாங்கள் உயிர் வாழமாட்டோம். உன் பிரிவால் தலைவியின் ஒளிநுதல் பசலை பாய, மையுண்ட கண்கள் நீர் நிறைந்தன. அதனால் நீ பிரிய வேண்டாம் என்று தோழி கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல்.

புறவணி நாடன் காதல் மடமகள்
ஒண்ணுதல் பசப்ப நீசெலின் தெண்ணீர்ப்
போதவிழ் தாமரை அன்னநின்
காதலன் புதல்வன் அழும்இனி முலைக்கே (ஐங்.424)

என்னும் பாடலிலும் தலைவனுடைய பிரிவைத் தவிர்க்கச் செய்யும் தோழியின் மனநிலை கூறப்பட்டுள்ளது. நீ பிரிந்து சென்றால் தலைவி இறந்து படுவாள். குழந்தை பாலுக்கு அழும். எனவே பிரிந்து செல்ல வேண்டாம் என்று தோழி தலைவனைச் செலவழுங்குவிக்கின்றாள்.

பருவம் கண்டு இரங்கல்

தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை நினைத்துக் கார்ப்பருவம் வந்துவிட்டதே தலைவன் இன்னும் வரவில்லையே என்று தலைவி இரங்குவாள். தலைவனும் தான் மீண்டு வருவதாகச் சொன்ன கார்ப்பருவத்தினைக் கண்டு தலைவியை நினைத்து வருந்துவான்.

பரத்தையிற் பிரிதல் ஓதற்குப் படர்தல்
அருள்தகு காவலொடு தூதிற்கு அகறல்
உதவிக்கு ஏகல் நிதியிற்கு இகத்தலென்று
உரைபெறு கற்பிற் பிரிவு அறுவகைத்தே (நம்பி.62)

என்ற நூற்பாவில் நம்பியகப்பொருள் ஆறு வகையான பிரிவு கற்பில் நிகழ்வதாகக் கூறுகின்றது. தொல்காப்பியம் நான்கு வகைகளாகக் கூறுகின்றது.

தளவின் பைங்கொடி தழீஇப் பையென
நிலவின் அன்ன நேரும்பு பேணிக்
கார்நயந்து எய்தும் முல்லை அவர்
தேர்நயந்து உறையும் என் மாமைக் கவினே (ஐங்.454)

என்ற பாடல் முல்லைக் கொடிகள் செம்முல்லைக் கொடிகளைப் பற்றுக் கோடாகத் தழுவிக் கொண்ட நிலாப் போன்று அழகிய வெண்மையான தம் அரும்புகளைப் பாதுகாத்துக் கார்ப்பருவத்தை விரும்பி நின்றன. என்னுடைய அழகு தலைவனுடைய தேர் வருகையை எதிர்பார்த்துத் தயங்கி நிற்கின்றது என்று தலைவி கூறுவதாக அமைந்துள்ளது.

ஆற்றுவித்தல்

தலைவன், தலைவியின் காதல் வாழ்க்கையில் தலைவன் போர்க்காகவும், பொருளுக்காகவும், கல்விக்காகவும் பிரிதல் உண்டு. இந்தப் பிரிவினைத் தலைவி பொறுக்க மாட்டாள். அவளின் நிழலாகத் திரியும் தோழி ஆறுதல் கூறுவாள்.

நன்றே காதலர் சென்ற ஆறே
நீர்ப்பட எழிலி வீசும்
கார்ப்பெயற்கு எதிரிய கானமும் உடைத்தே (ஐங்.433)

என்ற பாடலில் பிரிந்து சென்ற நீ வருந்த வேண்டாம் தலைவன் சென்ற வழி நன்மையே உடையது என்கிறாள் தோழி.

முடிவுரை

ஐவகை நிலங்களில் முல்லை நிலமும் ஒன்றாகும். இந்த நிலத்தில் வாழும் மக்கள் அவர்களுடைய காதல் வாழ்க்கை நிலையினை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்துகின்றனர் என்பதனையும், இம்மக்களுடைய அகவாழ்வு நிலைகளில் அகமரபுகள் எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதனையும் யார்யாரெல்லாம் சங்க அகமரபை வெளிப்படுத்துகின்றார்கள் என்பதனையும் இக்கட்டுரை வெளிப்படுத்தி நிற்கின்றது.

துணைநின்றவை

- பாலையன் அ.ப. (உரை.), 2009, *நம்பியகப்பொருள்,* சாரதா பதிப்பகம், சென்னை.
- புலியூர்க்கேசிகன் (உரை.), 2012, *தொல்காப்பியம் எழுத்து - சொல் - பொருள்,* சாரதா பதிப்பகம், சென்னை.
- ……, (உரை.), 2012, *ஐங்குறுநூறு மூலமும் உரையும்,* சாரதா பதிப்பகம், சென்னை.
- மாணிக்கம் வ.சுப., 2002, *தமிழ்க்காதல்,* மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்

ரெ. அருணா தேவி
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17.

பத்துப்பாட்டில் இடம்பெறும் ஆற்றுப்படை நூல்களுள் ஒன்று பொருநராற்றுப்படை. வள்ளலிடம் பொருள் பெற்றுத் திரும்பும் வறிய பொருநன் ஒருவன், வழியில் வேறொரு பொருநனைக் கண்டு இளஞ்சேட் சென்னியின் புதல்வனான கரிகால் பெருவளத்தானைச் சென்றடைந்தால் தன்னைப் போல் அவனும் பொருள் பெற்று வரலாம் என்று ஆற்றுப்படுத்துவதாய் அமைந்தது பொருநராற்றுப்படை.

பொருநராற்றுப்படை - உள்ளடக்கம்

பொருநராற்றுப்படையின் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார். பொருநராற்றுப்படை 248 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. விறலியாற்றுப்படை எனவும் குறிப்பிடப்படுகிறது. பொருநராற்றுப்படை பிற ஆற்றுப்படை நூல்களுக்கெல்லாம் காலத்தால் முந்தியது.பொருநராற்றுப்படையை நான்கு பகுதியாகப் பிரிக்கலாம்.

1.பரிசு பெற்று வரும் பொருநன் இன்னொரு பொருநனைக் காணுதல்.

2.தான் ஒரு வள்ளலிடம் சென்று பொருள் பெற்று வறுமை நீங்கி வந்ததைக் கூறுதல்.

3.தனக்குப் பொருள் தந்து வறுமை நீக்கிய வள்ளலின் மாட்சிமைகளைக் கூறுதல்.

4.அவ்வள்ளலின் சோழநாட்டு வளத்தை எடுத்துக் கூறுதல்.

வள்ளலின் விருந்தோம்பல்

தனக்குப் பரிசில் தந்த வள்ளல் விரும்தோம்பிய நிலையினையும் தனது வறுமையை நீக்கி வழியனுப்பிய முறையினையும் எடுத்துக் கூறுகின்றான் ஒரு பொருநன். கரிகால் பெருவளத்தானிடம் சென்று அவன் புகழ் பாடினால் உன் கந்தல் உடை நீக்கிப் புத்தாடை பொலியத் தருவான். தேர், யானை, குதிரை, ஊர், பொன், மணி போன்றவற்றைப் போதும், போதும் என்று சொன்னாலும் கேட்காமல் மேலும் மேலும் தந்து நம்மை மகிழ்விப்பான்.

வள்ளலின் மாட்சிமை

தனக்குப் பொருள் தந்த வள்ளலின் மாட்சிமைகளைப் பரிசு பெற்ற பொருநன் எடுத்துக் கூறுகின்றான். பனம்பூ மாலை சூடிய சேரனையும், வேப்பம்பூ மாலை சூடிய பாண்டியனையும் ஒரு சேர வெண்ணிப் பறந்தலை என்னும் ஊரிலே நடந்த போரில் வெற்றி கொண்டவன் ஆத்தி மாலை சூடிய கரிகால் பெருவளத்தான். அருட்கடவுள் முருகப்பெருமானைப் போன்ற வலிமையும், வளமும் உடையவன் கரிகால் பெருவளத்தான் என்று திருமாவளவனின் மாட்சிமைகளைக் கூறுகிறது இந்நூல்.

கரிகாற் சோழனின் கொடைச்சிறப்பு

கரிகாலன் தமிழ்வாணரை வரவேற்றல், உண்டியும் உடையும் வழங்கல், பல நாள் தன் அரண்மனையில் அவர்களை இருக்கச் செய்தல், பரிசில் நல்குதல், அவர்கள் விடைபெறும் பொழுது தானும் அவர்களுக்குப் பின் ஏழடி நடந்து வந்து வழிவிடல் முதலியனவற்றைப் பொருநராற்றுப்படையில் விருந்தோம்பல் நிகழ்வில் காணலாம்.

கரிகால் வளவன் தன்மீது பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவருக்குப் பதினாறு இலட்சம் பொன் பரிசளித்துள்ளான் எனக் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

தழுவு செந்தமிழிப் பரிசில்வாணர்பொன்

பத்தொடாறு - நூறாயிரம் பெறப்

பண்டு பட்டினப் பாலை கொண்டது (கண்ணி.198)

கரிகாலன் தன் மீது பட்டினப்பாலை பாடிய புலவர்க்குப் பதினாறுகால் மண்டபத்தைப் பரிசிலாக அளித்தனன். அதைக் குறிக்க அம்மண்டபத்தில் கல்வெட்டு இருந்ததாகவும், கி.பி. 1219-ல் சோணாட்டை வென்று உறையூரை அழிக்கத் தொடங்கிய முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மேலே கூறப்பட்ட பதினாறுகால் மண்டபத்தை மட்டும் இடிக்காமல் விட்டனன் என்றும் அவனது திருவெள்ளறைக் கல்வெட்டுச் செய்யுள் கூறுகிறது.

வெறியார் தளவந் தொடைச்சய மாறன்

வெகுண்ட தொன்றும்

அறியாத செம்பியன் காவிரி நாட்டில்

அரமியத்துப்

பறியாத தூணில்லை கண்ணன் செய்பட்டினப்

பாலைக் கன்று

நெறியால் விருந்துண் பதினாறு மேயங்கு

நின்றனவே

கரிகால் சோழனின் கொடைச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக வள்ளலிடம் சென்று வறுமையைக் கூறி அணுகினால் அன்போடு ஆதரவுக்கரம் நீட்டுவான் என்னும் கருத்தினை முடத்தாமக் கண்ணியார் பின்வரும் பாடலடிகளில் விளக்குகிறார்.

ஈற்றுஆ விரும்பின் போற்றுபு நோக்கிநும்

கையது கேளா அவளை ஒய்என (151-52)

கரிகாலனின் திருவடிகளை அடைந்து உம்முடைய வறுமையை அவன் காணுமாறு அவன் முன்பு நின்றீர் என்றால் அதுவரை உங்களைப் பற்றியிருந்த வறுமைத் துன்பம் இல்லாமல் போகும்படி, பசு தன் கன்றை அன்புடன் பார்ப்பதைப் போன்று உங்களை ஆர்வம் தோன்றப் பார்த்து, விரைந்து சென்று, அழுக்கடைந்து பாசி படிந்த ஆடைகளை நீக்கிக் கரையில் கொட்டைகள் கட்டப்பட்டிருக்கும் தூய்மையான பட்டாடைகளைக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்வான்.

தொழுதுமுன் னிற்குவி ராயிற் பழுதின்

றீற்றா விரும்பிற் போற்றுபு நோக்கினும் (150-51)

மேலும், பெறுவதற்கு அரிதாக உள்ள பொன்னாலாகிய வட்டியில் நீங்கள் விரும்பிய உணவுகளை எல்லாம் உண்டீர்கள் என உங்களை வேண்டிக் கேட்டுக் கொண்டு மலர் மனம் வீசுகின்ற தெளிவான கள்ளினை மீண்டும் மீண்டும் நீங்கள் உண்ணுமாறு கொடுப்பதனால் போதும் போதும் என மறுத்து அதனைப் பருக வைப்பர்.

பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்

பூக்கமழ் தேறல் வாக்குடி தரத்தர

வைகல் வைகல் கைகவி பருகி(156-58)

வழியனுப்பும் பண்பு

கரிகால் சோழன் தந்த பொருளைப் பெற்று, நீங்களும் விடைபெற்றுப் புறப்படும் போது, தேரையும் குதிரைகளையும் பரிசாகத் தருவான். நீர்வளம் மிக்க ஊர்களையும் யானைகளையும் தருவான். மேலும், கொடுஞ்சி வைத்த குதிரைகள் பூட்டிய தேரைத் தருவான் என்னும் கருத்தினை முடத்தாமக் கண்ணியார்,

கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்

ஊட்டு உளைதுயல் ஓரி நுடங்கப்
பால்புரை புரவி நால்குஉடன் பூட்டி (163-65)

என்று பாடியுள்ளார்.

கரிகாலன் பரிசில் நல்கும் சிறப்பு

... ஒருநாள்
செயிர்த்தெழு தெவ்வர் திறைதுறை போகிய
செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கிளந்தன மாக வல்லே
அகறி ரோவெம் ஆயம் விட்டென
சிறறிய வன்போற் செயிர்த்த நோக்கமொடு
துடியடி யன்ன தூங்குநடைக் குழவியோடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்கென (119-26)

கரிகால் சோழன் தந்த பொருளை நீங்களும் வறுமையில் வாடுபவர்களுக்குக் கொடுத்து அவனிடம் இருந்து பிரிந்து செல்வதை அவனிடம் கூறினால் அவன் அதற்காக வருத்தம் கொண்டு சேர்ந்தவர்கள் பிரிவார்கள் சேர்ந்த எதுவும் நிலைத்து இருப்பது கிடையாது என்பதை மனத்தால் ஆராய்ந்து பார்த்து நீங்கள் செல்லுங்கள் என்று கூறி அனுப்புவான் என்கிறார் முடத்தாமக் கண்ணியார்.

... வரவிடைப்
பெற்றவை பிறர்பிறர்க் கார்த்திதீ தெற்றெனச்
செலவுகளைக் கூட்டு தி ராயிற் பல புலந்து
நில்லா வுலகத்து நிலைமை தூக்கிச்
செல்கென விடுக்குவ னல்லன் (173-77)

கரிகாற்சோழனின் வீரம்

கரிகாலன் தந்தை உருவப் பஃறேர் இளையோன் என்று பொருநர் ஆற்றுப்படை கூறுகிறது.

... வென்வேல்
உருவப் பஃறேர் இளையோன் சிறுவன் (129-130)

நாடாண்ட சோழனுக்குப் பட்டத்திற்குரிய பிள்ளை இன்மையால் அவன் தம்பி மகனான கரிகாலன் தாய் வயிற்றில் இருந்தபோதே அரசுரிமைக்கு உரியவன். இதை, கரிகாலன் தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தியவன் என்கிறார் முடத்தாமக் கண்ணியார்.

தாய்வயிற் றிலிருந்து தாய மெய்தி (132)

பெருவீரனான தந்தையும் சோழ மன்னனும் இறந்துவிட்டமையால், இளைஞனான கரிகாலனுக்குப் பட்டம் சூட்டப்பட்டது. இந்நிலையில் அவனது அவையத்தார்கள் கரிகாலனைச் சிறையில் அடைத்துவிட்டனர். ஒரு வீரமிக்க புலிக்குட்டி கூண்டுக்குள் அடைபட்டு வாழ்ந்தது போல் கரிகாலன் பகைவர் காவலில் இருந்து வளர்ந்தான்.

கரிகாலன் தன் வலிமையுடைய காவலாகிய வாட்படையை வென்று சிறையில் இருந்து வெளிவந்தான். பிறகு தன் அரசுரிமையை ஏற்று அரசாண்டான் என்று பட்டினப்பாலை கூறுகிறது.

கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர்பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
யடுங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு

நுண்ணதி னுரை நாடி நண்ணார்
செறிவுரைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாயம் ஊழின் எய்தி (பட்டினப்.221-222)

மேலும் கரிகாலன் 'வெண்ணி' என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் சேரனையும் பாண்டியனையும் இறக்கச் செய்தான். இதனை,

இருபெரு வேந்தரும் பொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள் (146-47)

என்று குறிப்பிடுகின்றது பொருநராற்றுப்படை.

காவிரிக்குக் கரை

கரிகாலன் காவிரிக்குக் கரை இடுவித்தமையால் சோழ நாடு வெள்ள அழிவிலிருந்து காக்கப்பட்டதுடன், வேண்டும்போது ஆற்றிலிருந்து வாய்க்கால் வழியே குளங்களுக்கும், ஏரிகளுக்கும் நீரைச் செலுத்திக் கொள்ளவும் வழி ஏற்பட்டது. இதனால் சோழநாட்டு வளம் பெருகியது. இங்ஙனம் கரிகாலன் காவிரிக்குக் கரை இடுவித்து நலன் செய்தமை பொருநராற்றுப்படையில்,

நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடைய (240-41)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாட்சி

சங்ககாலத்தில் ஒவ்வோர் ஊரிலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியோர் இருந்து ஊராட்சியைக் கவனித்து வந்தனர். நாட்டின் தலைநகரில் பெரிய நீதி மன்றம் இருந்தது. 'அறக்களம்' என்றும் 'அறங்கூறு அவையம்' என்றும் பெயர் பெற்றது.

இளைஞனான கரிகாலன் முதியவனைப் போல வேடம் பூண்டு நீதி வழங்கினான் என்று பொருநராற்றுப்படை கூறுகிறது.

இளையோர் வண்ட லயரவு முதியோர்
அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் சொலவும் (187-188)

இங்ஙனம் நீதி வழங்கிய சிறப்பை பிற்காலத்தில் தோன்றிய பழமொழி நானூற்றுப் பாடல்,

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும் (பழமொழி.6)

எனக் குறிப்பிட்டுள்ளது.

கரிகாலச் சோழனின் விருந்தோம்பல்

கரிகால் சோழனை நாடி சென்றால் அங்கே உள்ளே நுழைய எந்தவித மறுப்பும் இல்லை. விரும்பி வந்தவர்களை வரவேற்க வாயில் கதவு எப்போதும் திறந்தே இருக்கும். இதனை உணர்த்தும் பாடலடி பின்வருமாறு:

நசையுநர்த் தடையா நன்பெரு வாயில் (66)

முடிவுரை

கரிகாற்சோழனின் பெருமைகளையும், சிறப்புகளையும் பத்துப்பாட்டுள் ஒன்றான பொருநராற்றுப்படை கூறுகிறது. சங்க காலத்தில் வறுமையில் வாடும் புலமையோர் கூட்டம் இருந்தமை போன்று, அவ்வறுமையைப் போக்கும் புரவலர்களும் இருந்துள்ளனர் என்பதனையே ஆற்றுப்படை நூல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

துணைநின்றவை

- சோமசுந்தரனார் பொ.வே.(உரை.), 1972(ம.ப.), *பத்துப்பாட்டு மூலமும் உரையும்,* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- இராசமாணிக்கனார் மா., 1970, *பத்துப்பாட்டு ஆராய்ச்சி,* சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- கதிர்முருகு (உரை.), 2009, *பொருநராற்றுப்படை மூலமும் உரையும்,* சாரதா பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்

முனைவர் **கு.சரஸ்வதி**
தமிழ் - உதவிப் பேராசிரியர்
சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர், திருச்சிராப்பள்ளி.
ksaraswathibala@gmail.com

சங்கத்தமிழ்ச் சமூக அமைப்பினைச் சங்க இலக்கியம்வழி உய்த்துணர முடிகின்றது. தொழில்நிமித்தமாகப் பல்வேறு நாட்டினர் தமிழகத்து நிலப்பரப்புகளில் தற்காலிகமாய்க் குடியேறியுள்ளனர். புகார், மதுரை, கருவூர், வஞ்சி உள்ளிட்ட நகரங்கள் தொழில்நகரங்களாகத் திகழ்ந்துள்ளன. பெரும்பான்மையான மக்கள் சிற்றூர்களில் அவரவர்க்குரிய தொழில்களைச் செய்து வாழ்ந்துள்ளனர். ஒவ்வொரு மக்களின் அடிப்படைத் தேவையாகிய உணவு, உடை, இருப்பிடம் ஆகிய இவை மூன்றும் அவரவர்க்கான தொழில்களை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கின்றன. அவ்வகையில், பழந்தமிழர் மேற்கொண்ட முதன்மையான தொழில்களைச் சங்க இலக்கியம்வழி அடையாளப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

தொழிற்பிரிவினர்

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனும் நால்வகைப் பிரிவினர் சமூகத்தின் முதன்மை அங்கமாய்த் திகழ்ந்துள்ளனர். இவர்களைத் தவிர, சமூகத்தின் தேவைகளுக்கு உதவும் பல்வேறு தொழிற்பிரிவினர் இருந்துள்ளனர். நிலவியல் அடிப்படையில் குறிஞ்சி நிலத்தவர் குறவர் குறத்தியர் என்றும், முல்லை நிலத்தவர் ஆயர், ஆய்ச்சியர் என்றும், மருத நிலத்தவர் ஊரன், உழத்தியர் என்றும் நெய்தல் நிலத்தவர் பரதவர் என்றும் அழைக்கப் பெற்றுள்ளனர். தொழில்நிலையில் தச்சர், கொல்லர், குயவர், உமணர், ஆடை வெளுப்போர், பறையர், கடம்பர், துடியர், பாணர், வேட்டுவர், கணியர் முதலிய பல வகுப்பினர் தமிழகத்தில் வாழ்ந்துள்ளமையைச் சங்க இலக்கியங்கள்வழி அறிய முடிகின்றது. செல்வர் மனைகளில் குற்றேவல் புரியும் மக்களும் இருந்துள்ளனர். வினைவல பாங்கினர் என்று இவர்கள் வழங்கப்பெற்றுள்ளனர்.

உழவுத்தொழில்

மனித வாழ்வில் உணவு குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெறுகின்றது. உணவு இல்லையேல் உயிர் இல்லை. விஞ்ஞானம் விண்வெளியைக் கையகப்படுத்திய போதும் மனிதன் உண்பதற்கான உணவை மண்ணில் பயிரிட்டுத் தான் பெற முடியும். மனிதரின் உணவை எந்திரங்களால் உற்பத்தி செய்ய இயலாது. அதேவேளை ஆயிரம் தொழில்கள் இருந்தாலும் உழுதுண்டு வாழும் வேளாண்மையே முன்னிலையானது. இதனை,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (1033)

என்று வள்ளுவர் சுட்டுவார்.

சங்கத் தமிழர் சுற்றுப்புறச் சூழல் கெடாமல் இயற்கை முறையில் வேளாண்மை செய்துள்ளனர். வேளாண்மைக்குத் துணையாக ஆடு, மாடு, கோழிகளை வளர்த்துள்ளனர். சிறிதளவு நிலத்தில் அதிகளவு விளைச்சலை உற்பத்தி செய்துள்ளனர். இதனைப் புறநானூறு பின்வருமாறு பதிவு செய்கின்றது.

... ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே (புறம்.40)

"ஒரு பெண்யானை படுத்துறங்கும் சிறிய இடத்தில் ஏழு ஆண்யானை உண்ணத்தக்க விளைபொருள் விளையும் வளம்மிக்க நாட்டுத் தலைவனே!" என்று புலவர் பாடியுள்ளார். இக்குறிப்பின்வழி, சிறிய நிலப்பகுதியில் அதிக விளைச்சல் காணுகின்ற உழைப்பு, ஆற்றல் பழந்தமிழர்களுக்கு இருந்திருக்கின்றது எனும் செய்தி பெறப்படுகின்றது.

நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கும் அகலாம்பியிற்
கயனகைய வயல்நிறைக் குடம் (மதுரைக்.89-92)

தொழுவர் ஆற்றுநீரை மேட்டு நிலங்களுக்கு ஏற்றத்தால் இறைத்துப் பாய்ச்சியுள்ளனர். நீரிறைக்கும்போது அவர்கள் பாடிய பாட்டிசை எங்கும் முழங்கியது என்பதை மேற்காண் மதுரைக்காஞ்சிப் பாடலடிகள் சுட்டியுள்ளன.

நெசவுத்தொழில்

நெசவுத்தொழிலில் பண்பட்ட பேரினங்களுள் தமிழினமும் ஒன்று. தமிழகத்து ஆடைகளுக்கு அயல்நாடுகளில் நல்ல வரவேற்பு இருந்துள்ளது. பருத்தி, பட்டு, உரோமம் முதலியவற்றால் ஆடைகள் நெய்யப்பட்டுள்ளன. ஆடைகள் பாலாவி, மூங்கில் தோல், பாம்புரி, எண்ணெய், நுரை ஆகியவை போல் இருந்துள்ளன. கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகளுக்கு வண்ணமூட்டப் பெற்றுள்ளது.

வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழும்
கொல்லை தைஇய குறும்பொறை மருங்கில் (அகம்.133)

எனும் அகநானூற்றுப் பாடலில் வில் அடித்து பஞ்சிலிருந்து விதை நீக்கப்பட்டதாகவும் விதை நீக்கப்பட்ட பஞ்சு வெண்மேகம் பாலக் காணப்பட்டதாகவும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

பாம்பு உரித்தன்ன வான்பூங் கலிங்கமொடு
மாரி யன்ன வண்மையின் சொரிந்து (புறம்.397)

எனும் புறநானூற்றுப் பாடல்வழி, பாம்பு உரித்த சட்டை போன்ற பூவேலைப்பாடுகள் செய்த உயர்ந்த ஆடைகளை உருவாக்கியுள்ளமையை அறிய முடிகின்றது.

கண்ணால் காண முடியாத மெல்லிய நூலால் நெய்யப்பட்டு அழகான பூவேலைப்பாடுகளால் செய்யப்பட்டது, பாம்பின் தோலைப் போல் மென்மையும் வழவழப்பும் பளபளப்பும் அமைந்த மெல்லிய துணி என்று பொருநராற்றுப்படை அக்காலத்தில் நெய்யப்பட்ட ஆடையைப் பற்றி

நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை (பொருநர்.83-84)

எனும் அடிகளில் குறிப்பிடுகின்றது. ஆடைக்கு அறுவை என்றும் பெயர். அறுவை - அறுக்கப்படுவது, நீளமாக நெய்து துண்டாக்கப்படுவது என்று பொருள்.

அக்காலத்துத் தமிழர் அழகிய பட்டாடைகள் நெய்தனர். பணம் படைத்தவர்கள் பட்டாடைகள் அணிந்தனர். கரையிட்ட ஆடை நெய்வதில் தமிழர்கள் கைதேர்ந்துள்ளனர்.

கொட்டைக் கரைய பட்டுடை நல்கிப்
பெறலருங் கலத்தில் பெட்டாங் குண்கென (பொருநர்.155-56)

எனும் அடிகளால் இதனை அறியலாம்.

தச்சுத்தொழில்

தமிழ்நாட்டுத் தச்சர்கள் மன்னர்க்கும் மக்களுக்கும் வேண்டிய வாகனங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளனர். நால்வகைப் படைகளுள் தேர்ப்படையும் ஒன்றாக இருந்ததால் தேர் செய்வது

அன்றைய தச்சர்களின் தலையாய கடமையாக இருந்துள்ளது. அதியமானின் படைவலிமையைக் கூறவந்த ஔவையார்,

வைகல் எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்அன் னோனே (புறம்.87)

"நாளொன்றுக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன், ஒரு மாதம் முயன்று பாடுபட்டுச் செய்த ஒரு தேர்க்காலைப் போன்ற வலிமையுடையவன் அதியமான்" என்கிறார்.

சிறுவர் நடைபயிலும், ஓட்டி விளையாடும் நடைவண்டிகளும் சிறுதேர்களும் அக்காலத்தில் செய்யப்பட்டுள்ள குறிப்பினைச் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. தச்சன் செய்த சிறுமா வையம், முக்காற் சிறுதேர் என அவை வழங்கப்பெற்றுள்ளன. தச்சனின் புதல்வர்களும் இவ்வண்டியைச் செய்யும் திறன் பெற்றிருந்தனர் என்பதை,

தச்சர் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர் (பெரும்பாண்.248-49)

எனும் பாடலடிகளின்வழி அறிய முடிகின்றது.

கொல்லுத் தொழில்

தமிழர் உலோகத் தொழிலிலும் மேம்பட்டிருந்துள்ளனர். இரும்புசெய் கொல்லரும் பொன்செய் கொல்லரும் தனித்தனியே பேசப்பெறுகின்றனர். போர் நிறைந்த அக்காலத்தில் வாளும் வேலும் பிற போர்க்கருவிகளும் செய்ய எண்ணற்ற கொல்லர்கள் தேவைப்பட்டிருப்பர்.

கருங்கைக் கொல்லன் இருப்புவிசைத்து எறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்து (பெரும்பாண்.437-38)

எனும் பாடலடிகளில் அரண்மனைக்கு முன்னால் கொல்லர் போர்யானைகளின் தந்தங்களுக்குக் காப்பு வளையல்கள் போடுவதற்காக உலைக்கூடத்தில் தட்டும் இரும்பின் ஓசையைக் கேட்டு வெருவி அங்குள்ள மாடப்புறாக்கள் பறக்கும்போது திருமகள் வாழும் திருக்கோயில் போன்ற காட்சியை உடையதாகும் என்ற குறிப்பைக் காண முடிகின்றது.

தமிழர் அணிந்த எண்ணற்ற அணிகளைப் பற்றிய குறிப்புகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. கண்ணகியின் காற்சிலம்பு ஒன்றே அக்காலக் கொல்லரின் கைத்திறனுக்கு ஏற்ற சான்றாய் அமைந்து விடுகின்றது.

மண்பாண்டத் தொழில்

பண்டைய நாளில் பெரும்பான்மை மாந்தர் மண்பாண்டங்களையே புழங்கியுள்ளனர். உணவு சமைப்பதற்கு மட்டுமின்றி, இறந்த உடலைப் புதைப்பதற்கும் மண்தாழிகள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

இருள்திணிந் தன்ன கருஉத்திரள் பருஉப்புகை
அகலிரு விசும்பின் ஊன்றுஞ் சூளை (புறம்.228)

எனும் புறநானூற்றுப் பாடலடிகள் "இருளெல்லாம் ஒன்றுதிரண்டு ஓரிடத்தில் குவிந்தது போலக் கருமைநிறப் புகை ஆகாயத்தில் சென்று தங்கும் சுடுகின்ற சூளையை உடைய அகன்ற ஊரிலே மண்கலம் வனைகின்றனர்" எனும் குறிப்பினைத் தருகின்றது.

தமிழர்களின் மட்கல உருவாக்கத் தொழில்திறமையை நெடுநல்வாடையின் பின்வரும் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

கல்லென் துவலை தூவலின் யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்
பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர (நெடுநல்.64-66)

குவிந்த வாயையுடைய நீருண்ணும் மண்பாண்டம் தொகுவாய்க் கன்னல் எனப் பெயர் பெற்றது. கூதிர்காலத்தில் குளிரைப் போக்க விரிந்த வாயையுடைய பெருத்த தாழிகளில் நெருப்பை வளர்த்து அதன் வன்மையை நுகர்வர். பல்வேறு நிலைகளிலும் தேவைக்கேற்ற வகையில் மண்பாண்டங்கள் புழக்கத்திலிருந்ததை அறியும்பொழுது பண்டைத் தமிழர் மட்கலத் தொழிலில் பெற்றிருந்த மேன்மையை அறிய முடிகின்றது.

ஆடை வெளுக்கும் தொழில்

ஆடைகளை வெளுத்துத் தூய்மையாக்குவோர் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆடை வெளுப்போரை இழிநிலையில் வைத்தே சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. புலையர் - சண்டாளர், இழிந்தோர். ஆடை வெளுப்போரைப் புலையர், புலைத்தி என்றே சங்க இலக்கியங்களில் குறிப்புக் காணப்பெறுகின்றது.

வறன்இல் புலைத்தி நெடிது பிசைந்தூட்டிய
பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல் (அகம்.387)

என்னும் குறிப்பால் ஆடையை ஒருவகைப் பசையிட்டுக் காயவைத்தமை புலனாகின்றது. ஆடை வெளுப்போரின் வறுமைநிலையை அகநானூறு பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

வறனில் புலைத்தி எல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு (நற்.90)

உவர்நிலத்தில் ஊற்றுக் கிணறுகளைத் தோண்டி அவர்கள் ஆடைகளை வெளுத்தனர் என்பதை,

களர்ப்படு கூவல் தோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் ளருவி (புறம்.311)

எனும் பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன.

தொகுப்புரை

பழந்தமிழர்கள் நிலவியல் அடிப்படையில் பல்வேறு இனங்களாகப் பிரிந்து வாழ்ந்துள்ளனர். அவ்வச்சமூகத்தின் வளத்தினை அவர்தம் உடை, உணவு, உறைவிடம் ஆகியவற்றின் ஆக்க முறைமைகளால் அறிய முடிகின்றது. உழவு, நெசவு, தச்சு உள்ளிட்ட அடிப்படைத் தொழில்களில் தமிழர்கள் தேர்ந்த நிலையில் இருந்துள்ளதனைச் சங்க இலக்கியங்கள்வழி அறிய முடிகின்றது.

துணைநின்றவை

- கதிர்முருகு (உரை.), 2002, பத்துப்பாட்டு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
- சண்முகம் பிள்ளை மு., 2005, சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- சிதம்பரனார் சாமி., 2003, பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், அறிவுப் பதிப்பகம், சென்னை.
- மாணிக்கவாசகன் ஞா. (உரை.), 2010, புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)

இரா. வைதேகி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 24

பண்டைய தமிழ் நாகரிகம், மொழிச்சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோர்க்குச் சான்றாதாரமாக, செய்தி ஊற்றாக அமைவது சங்க இலக்கியம். சங்க இலக்கியத்துள் சிறந்த சிந்தனைகள் மிளிர்வதையும் ஓங்கி வளர்ந்த நாகரிகம் வெளிப்படுவதையும் காணலாம். சங்க இலக்கியக் காலக்கட்டம் இயற்கையோடு இயைந்த வாழ்வினைக் கொண்ட காலக்கட்டமாகும். வெறும் வருணனைக்காக மட்டுமின்றி, அகமரபை வெளிப்படுத்துவதற்கே சங்கத்தமிழ்ப் புலவர்கள் தாவரப்பெயர்களைத் தம் பாடல்களுள் கையாண்டுள்ளனர். அவ்வகையில், சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையில் குளவி (காட்டுமல்லிகை) பற்றிய செய்திகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

குளவி

குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிடும் 99 வகை மலர்களுள் ஒன்று 'குளவி' ஆகும். இது குறிஞ்சி நிலத்தில் பூக்கும் மலராகும். குளவி என்பதற்குக் காட்டு மல்லிகை என்ற பெயரும் உண்டு. இதன் வேறு பெயர்கள் பன்னீர்ப் பூ, மரமல்லி.

எட்டுத்தொகையில் குளவி

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர் (குறுந்.56)

வேட்டையாடச் செல்லும் செந்நாய் இளைத்து உண்டு மிச்சமிருந்த நீரின் மேல் காட்டு மல்லிகை படர்ந்து மூடியிருந்தது. அந்நீர் அழுகல் நாற்றம் வீசியது. அந்நீரை வளையுடைக் கையையுடைய எம் தலைவி உண்ணும் நிலையில் எம்மோடு காட்டுவழியில் வருவதாக இருத்தால் வரட்டும். அவ்வாறாயின் என் நெஞ்சில் அமர்ந்திருப்பவள் மிகவும் இரங்கத்தக்கவள் என்கிறான் தலைவன்.

குவளையொடு பொதிந்த குளவிநாறு நறுநுதல் (குறுந்.59:3)

தலைவனை விட்டுப் பிரிந்து வாடும் தலைவியைத் தோழி ஆற்றுகிறாள். தலைவன் செல்லும் பாதையைத் தலைவியிடம் தோழி கூறுகிறாள். அகன்ற வாயினையுடைய ஆழமான சுனைகளில் பூத்த குவளை மலர்களோடு சேர்த்துக் கட்டிய காட்டு மல்லிகையின் மணம் வீசுகின்ற நின்னுடைய நல்ல நெற்றியைத் தலைவர் மறப்பாரோ என்று சொல்லித் தேற்றுகிறாள் தோழி.

பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும் (குறுந்.100:2)

சிற்றூரில் வாழும் மக்கள் காந்தளை இயற்கை வேலியாக உடைய இச்சிறுகுடியில் வாழ்பவர். அருவியை உடைய பரந்த நிலத்தில் மலைநெல்லை விதைப்பர். அவற்றினிடையே களையாக வளர்ந்துள்ள பருத்த இலையையுடைய காட்டு மல்லிகையையும் பறித்து எறிவர் என்கின்றது மேற்குறித்த பாடலடி.

அடைமல்கு குளவியொடு கமழும் சாரல் (புறம்.90:2)

உடைந்த கைவளையலைப் போன்று மலர்ந்த வெண்காந்தள் தழை நிறைந்த மலைமல்லிகை மணக்கும் மலைச்சாரல் இருக்கும் இடத்தில் போர் புரியும் வீரமழவர் பெருமகனைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

கதளம் கவினிய குளவி முன்றில் (புறம் .168:12)

மலைச்சாரலிடத்து அருவி ஒலித்து இழியும் மூங்கில் வளர்ந்த அகன்ற இடத்தில் மிளகுக்கொடி வளரும் அழகு பெற்ற மலைமல்லிகை நாறும் முற்றத்திடத்து அரசனையும் அவனது நாட்டின் சிறப்பையும் புலவர் பாடுவதாகப் பின்வரும் பாடலடி குறிப்பிடுகிறது.

நாறுஇதழ்க் குளவியொடு கூதளம் குழைய (புறம்.380-7)

தென்கடலினின்றும் எடுத்த முத்துக்களால் ஆன மாலை சூடி, வடகுன்றமான இமயமலையில் பெற்ற சந்தனத்தை உடம்பில் தீற்றி, இனிய புகழை உடைய போர்வெற்றியையும் உடைய, பாண்டியருடைய வலிமை மிக்க தானைத் தலைவன் விசும்பிலிருந்து பொழிந்த நீர் கடலுக்குள் சென்று முத்தாகும் நறுமணம் கமழும் மலை மல்லிகையோடு கூதாளி தழைத்து விளங்கும் என்பர்.

குளவி மேய்ந்த மந்தி துணையொடு (ஐங்.279:2)

மலையினைத் தன் வேரால் பற்றிக்கொண்டு வளரும் இற்றிமரத்தினைப் பற்றி மந்தியும் கடுவனும் காட்டுமல்லிகையின் தளிர்களை மேய்ந்து மலைமீது துள்ளிக் குதித்து விளையாடுவதற்கிடமான நாடனே! எங்கள் ஊர் மலைகளுக்கிடையே அமைந்துள்ளது. அங்கு உன்னையும், என்னையும் பற்றிய அம்பல் அலராக மிகுதியாகின்றது. அதனால் நீ வருதல் கடினம் என்று தலைவனிடம் தோழி கூறுவதாக அமைகிறது மேற்குறித்த பாடலடி.

காண்டல் விருப்பொடு கமழும் குளவி (பதிற்.12:10)

பகைவீரர் அழியுமாறு வாள்போர் புரிந்து அவர்களின் நாடுகளைக் கொண்ட படைச்சுற்றமுடைய அரசர்கள் நடுங்கும்படி அவர்களின் காவல் மரமான கடம்பமரத்தினை வெட்டி வீழ்த்திய வேந்தன்,

தன் கன்றினைத் தழுவி நிற்கும் பெண் யானையைச் சூழ்ந்து மொய்க்கும் வண்டுகளையுடைய காட்டு மல்லிகைகள் வளர்ந்த குன்றுகள் பலவற்றைக் கடந்து உன்னிடம் வந்து தங்குவதை,

ஏனல் உழவர் வரகுமீது இட்ட
கான்மிகு குளவிய வன்புசேர் இருக்கை (பதிற்.30:22-23)

எனும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

மருதமரத்தின் உச்சிவரை புதுவெள்ளம் வந்து பெருகி அங்குள்ள வைக்கோல் புரிகளால் சுற்றப்பெற்ற மணல்கோட்டையைக் கரைந்து அழிக்கும். வெள்ளத்தினை அணைகட்டித் தடுத்து நிறுத்த விரும்பும் மக்கள் கூட்டம் பழமையான ஊரில் விழாவினைக் கண்டு திரும்பும். அத்தகைய செழிப்புடைய மருத நிலமும் தினைப்புனத்தை உழுது பண்படுத்தித் தினைப்பயிரை விளைவிக்கும் முல்லைநில மக்கள் மனமிக்க காட்டு மல்லிகைக்கொடி படர்ந்த வளமான குடியிருப்புகளில் வந்த விருந்தினர்க்குத் தினைகளைப் பகுத்துக் கொடுக்கும் முல்லைநிலம்.

பெருந்தண் குளவி குழைத்த பாவடி (நற்.51:8)

பெருந்தண் கொல்லிச் சிறுபசுங் குளவி (நற்.346:9)

தலைவியை விட்டுப் பிரிந்து சென்ற தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாக இப்பாடலுக்கு(நற்.376) அமைந்த துறைக்குறிப்புக் குறிப்பிடுகின்றது. தலைவியின் கூந்தல் காட்டு மல்லிகை மணக்கும் கூந்தல் என்று தன்னுள்ளே கூறுவதாக அமைகிறது .

குல்லை குளவி கூதளம் குவளை (நற்.376:5)

தலைவி இற்செறிப்புற்றாள், இனி வெறியாட்டு நிகழவும் கூடும். தாய் வெறியாட்டு நிகழ்த்துவாள் ஆதலின் முருகவேளும் எம்மைத் துன்புறுத்தும். ஆகையால் முல்லை காட்டுமல்லிகை கூதாளி குவளை தேற்றா ஆகியவற்றின் மலர்களாற் புனைநத மிகக் குளிர்ந்த மாலையை உடையவன் தலைவன் என்று தோழி கூறுவதாகப் பாடல் அமைகிறது.

உருகெழு நாற்றம் குளவியொடு விளங்கும் (நற்.268:4)

தோழி தலைவியிடம், மலைநாட்டைச் சார்ந்த ஒருவன் என்னைச் சந்தித்தான். அவனது மலைச்சாரலில் முகத்தில் புள்ளிகளையும் வரிகளையும் உடைய யானையோடு புலி பொருதது. அதனால் அந்த இடமெங்கும் இரத்தத்தால் சேறாகிச் சிவந்து விட்டது. அங்கு நிலவிய நாற்றத்தை வேங்கை மலர்களும் காட்டு மல்லிகைப் பூக்களும் மலர்ந்து மணத்தால் மாற்றின என்று கூறுகிறாள். இதனை உணர்த்தும் பாடலடி வருமாறு:

குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர (அகம்.182:7)

வேங்கை மலர்களைச் சூடிக்கொண்டு தோளில் வில்லை மாட்டிப் பலாப்பழத்தில் விளைந்த தேனைப் பருகி சீழ்க்கை ஒலியோடு செல்லும் இளைஞன் ஒருவன் வேட்டைநாய்கள் பின்வரச் சென்றான். அப்போது முள்ளம்பன்றி ஒன்று மல்லிகைப் புதரின்கீழே மறைந்து நின்றது. அப்பன்றியை அவன் கொன்றான். அத்தகைய மலைநாட்டைச் சேர்ந்த வீரம் நிறைந்தவன் தலைவன் என்கிறாள் தலைவி.

முடிவுரை

இவ்வாறாக, சங்க இலக்கியம் - எட்டுத்தொகையில் குளவி பற்றியும் குளவியின் மறுபெயர்கள் பற்றியும், குளவியின் சிறப்புப் பற்றியும், பண்டைத்தமிழ் நிலப்பரப்பில் இத்தகைய மலர் பெற்றுள்ள வளத்தினையும் இக்கட்டுரைவழி அறிய முடிகின்றது.

துணைநின்றவை

- பாலசுப்பிரமணியம் கு.வெ.(உ.ஆ.), 2004, *நற்றிணை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- பிரேமா இரா.(உ.ஆ.), *குறுந்தொகை*, 2004, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- சாமி பி.எல்., 1973, *சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்*, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே.(உரை.), 2009, *புறநானூறு*, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்

சி. யுவராஜ்
முனைவர்பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி -24.
palaicyuvan@gmail.com

சங்க இலக்கிய நூல்களில் அகவாழ்க்கையைப் பற்றி செய்திகள் பரவலாகப் பேசப்படுகின்றன. குறிப்பாக, தொகைநூல்களுள் ஐந்து நூல்கள் அகநூல்களாக அமைந்துள்ளன. தமிழர்களின் அகவாழ்வில் குடும்பத்தில் உள்ள உறவுநிலைகளையும் அதனால் ஏற்படும் உணர்வுநிலையையும் மகிழ்ச்சியையும் காணமுடிகிறது. இந்நிலையில், அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகளை விளக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

குடும்பம்

ஒரு சமூக அமைப்பின் அடிப்படை குடும்பம் ஆகும். *"குடும்பம் என்பது உறவுநிலை, திருமணம், சட்டப்பிணைப்பு இவற்றில் தொடர்பு கொள்ளும் குழுவினரைக் கொண்ட சமூக அங்கீகாரம் பெற்ற ஓர் அலகாகும்"* என்று ஆண்டர்சன் பார்க்கர் குறிப்பிடுகிறார்.

சங்ககாலச் சமூகத்தில் குடும்பம் சீரும் சிறப்புற்றும் விளங்கியதை அகநானூறு இயம்புகின்றது. தந்தை குடும்பத்திற்குத் தலைமை தாங்கியவராகவும் இருந்ததையும் தாய் வழிநடத்தியதையும், குடும்ப அமைப்பில் தாய், தந்தையர் குழந்தை வளர்ப்பதில் செலுத்தும் அக்கறையையும்

யாயே கண்ணினும் கடுங்காத லோளே
எந்தையும் நிலனுறப் பொறாஅன் சீறடிசிவப்ப
எவனில குறுமகள் இயங்குதி (அகம்.12:1-3)

எனும் கபிலரின் பாடலடிகள் காட்டுகின்றன. மேலும்,

...யாய்
ஓம்பினள் எடுத்த தடமென் தோளே (அகம்.18:17-18)

என்ற அடி தாய் தன் குழந்தையைப் பேணி வளர்த்தமையைப் புலப்படுத்துகின்றது. *"குடும்பம் என்பது பெரும்பாலும் கணவன், மனைவி அவர்களுடைய குழந்தைகள் என்ற உறவில் தான் எண்ணப்படுகிறது. ஓர் ஆணும், ஒரு பெண்ணும் கணவன் மனைவியாக இணைகிறபொழுது தோன்றும் குடும்பத்தை மணவாழ்க்கைக் குடும்பம் எனலாம்"* என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

தெய்வக் கற்புடன் குடிக்கு விளக்கமாகிய மகனைப் பெற்றுப் புகழ்மிக்க சிறப்பும் நலமும் வாய்க்கப்பெற்று நன்கு குடும்பம் நடத்தும் தலைவியை,

கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வன் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்னீ ராட்டி ... (அகம்.184:1.3)

எனும் அடிகள்வழியாக மருதன் இளநாகனார் எடுத்துக்காட்டுகின்றார்.

எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்

புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே (அகம்.352:15-17)

எனும் அடிகள் தலைவன் தலைவியர் அன்பு மிகுந்த மகிழ்வாக இல்லறம் வாழ்க்கை அமையப் போவதை எண்ணி மகிழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

திருமணம்

ஆண் பெண் இணைந்து வாழும் இயல்பினைக் கொண்ட ஒரு குழுவைக் குடும்பம் என்பர். இக்குடும்ப அமைப்பிற்கு ஆண் பெண் இணைவாழ்க்கை அடிப்படையாக அமைகின்றது. *''திருமணம் என்பது பாலினத் திருப்திக்கு அப்பாற்பட்ட ஒரு ஈடு இணையற்ற குடும்ப வாழ்க்கையைக் குறிப்பதாகும்''* என்று இராபர்ட் ஹெச்.லூயி குறிப்பிடுகிறார். *''திருமணம் என்பது ஏறக்குறைய ஓர் ஆண் ஒரு பெண் பல ஆண்கள் அல்லது பல பெண்களுக்கிடையே ஏற்படும் ஒரு நிலையான அமைக்கப்படும் இது உயிர்ப்பிறப்புக் கடமை அல்லது இனப்பெருக்கம் மற்றும் சமூகத் தேவைகளின் நிறைவுக்காக ஏற்பட்டதாகும்''* என்று சர்மா குறிப்பிடுவதனை, கே.பி.அழகம்மை தமது 'சமூக நோக்கில் சங்க மகளிர்' எனும் நூலில் எடுத்தாண்டுள்ளார்.

சமூக ஊடாட்டத்தில் மனிதர்களிடம் பொய் கூறலும், பிழைபட நடத்தலும் தோன்றிய பின்னர், சான்றோர்கள் கூடித் திருமணம் நடத்தினர் என்பர். தொல்காப்பியர் இதனை,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப(தொல்.கற்பு.4)

என வெளிப்படுத்துகிறார். சங்க இலக்கியக் காலத் திருமணம் பத்து வகைகளாக நிகழ்ந்ததாகச் சசிவல்லி குறிப்பிடுகிறார். அவை, 1. உடன்போக்கு மணம் 2. களவுமணம் 3. மடலேறுதல் 4. தொன்றியல் மரபின் மன்றல் 5. பரிசங்கொடுத்து மணத்தல் 6. சேவை மணம் 7. ஏறுதழுவி மணமுடித்தல் 8. சேவை மணம் 9. துணங்கையாடி மணத்தல் 10. பலதார மணம் என்பனவாகும். (சசிவல்லி, தமிழர் திருமணம், ப.54)

சுரம்பல கடந்தோர்க் கிரங்குப என்னார்
கேளவை மேவல ராகி இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுப
புரைய அல்லஎன் மகட்கெனப் பரைஇ
நம்முணர்ந் தாறிய கொள்கை
அன்னை முன்னர்யாம் எண்ணிதற் படலே (அகம்.95:10-15)

எனும் பாடலடிகள் இற்செறிப்பு, உடல்மாற்றம், பெண்களின் பழிச்சொற்கள், அன்னை தெய்வத்தை வழிபடல் போன்ற காரணங்களால் களவு மணத்தைத் தொடர்ந்து ஒழுகல் இயலாது என்று கருதிய தலைவி உடன்போக்கிற்கு உடன்பட்டதைக் காட்டுகின்றன. இதன்மூலம் வேறு ஓர் ஆண்மகனை மணம் முடித்து வாழ விரும்பாத பெண், தன்னால் விரும்பப்பட்ட ஆணோடு வாழ்வதற்குச் சுற்றத்தார் அறியாமல் இல்லத்தை விட்டு நீங்குவர் எனும் சமூகச் சூழல் இருந்ததை ஒரோடகத்துக் கந்தரத்தனார் பாடலடிகளில் அறியமுடிகின்றது.

குழந்தைப்பேறு

''குடும்பம் குழந்தைகளைச் சமூகப்படுத்துகிறது. பெற்றோர்கள் தம் நடத்தைக் கோலங்களைச் செம்மைப்படுத்திக் கொண்டு, அதன்மூலம் குழந்தைகளுக்குத் தம்மை முன் மாதிரியாக அமைத்துக் கொள்ளுகின்றனர். குழந்தைகள் அவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே தமது நடத்தைக் கோலங்களையும் அமைத்துக்கொள்ளுகின்றனர். வயது வந்ததும் அவர்கள் கணவர் (அல்லது மனைவியாக), தந்தையராகப் (அல்லது தாயர்களாக) பங்காற்ற இப்பயிற்சி கைகொடுக்கிறது'' (வாழ்வியற் களஞ்சியம். தொகுதி -ஏழு, ப.595)

நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை (அகம்.16:1-5)

எனும் பாடலடிகளில் சாகலாசனார் தாமரை மலரின் இதழைப் போன்ற உள்ளங்கையையும் பவளச் செவ்வாயையும் உடைய நாவால் பயின்று பேசப்படாத கேட்பார் விரும்பும் பொற்றொடி அணிந்த புதல்வன் எனத் தலைவி கூறுமிடத்துக் குழந்தையின் சிறப்பு வெளிப்படுகிறது.

ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்றலை (அகம்.5:22)
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே (அகம்.54:22)
உவருணப் பறைந்த ஊன்றலைச் சிறாஅரொடு (அகம்.387:4)

எனும் அடிகள் குடும்பத்தில் குழந்தை இருந்தமையையும், தாய் தன் குழந்தையைப் பாதுகாத்து வளர்த்ததையும் இயம்புகின்றன.

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சி
கிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயா யாகுதல் வாய்த்தனர் (அகம்.66:1-6)

எனத் தலைவி, பகைவரும் விரும்பும் சிறந்த அழகுடைய பிள்ளைகளைப் பெற்ற தலைமைப் பண்புடையோர், இவ்வுலகத்தே இம்மையில் புகழுடன் விளங்கி, மறுமை உலகு வாழ்வையும் குற்றமின்றிப் பெறுவர் என்று பலர் கூறிய பழைய மொழிகள் எல்லாம் உண்மையாதலைக் கண்கூடாக அறிந்தோம் என்று தோழியிடம் கூறுகிறாள். இதன்மூலம் குழந்தைப்பேறு பெற்றவர்கள் மறுமை வாழ்வை அடைவர் எனும் கருத்துப் பண்டைய காலத்தில் நிலவியதை அறிய முடிகிறது.

ஈகை

சமூகத்தளத்தில் வறியோருக்குப் பொருள் கொடுத்தல் சிறந்த அறச்செயலாகக் கருதப்படுகிறது. பண்டைய காலம் முதல் இன்று வரை வறியோருக்கு ஈதல் எனும் நற்செயல் நடைமுறையில் உள்ளது. ஈதல் எனும் தனிமனிதனின் நடத்தை பிறரால் தூண்டப்பட்டதை,

நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார்பிறர் கொளஇளிந் தோரெனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர் (அகம்.61:1-3)

எனத் தலைவன் தன் நெஞ்சிடம் தலைவியினும் நமக்கு ஈதலே சிறந்தது என்று கூறுமிடத்து ஈதலால் வரும் புகழ்ச்சிறப்பு வெளிப்படுகிறது. அறநெறி தவறாமல் இல்வாழ்க்கை நடத்துவதற்கும். சுற்றத்தாரின் துன்பம் நீங்கிக் காக்கவும், வறுமையுற்றோருக்குப் பொருள்களை வழங்கி மகிழவும், நல்ல புகழை நிலைநாட்டவும் தலைவன் பொருள்தேடிச் சென்றுள்ளார். இரப்பவர்களுக்குக் கொடுக்காத பொருள் அழியும் என்பதை,

...ஆர்வுற்று
இரந்தோர்க் கீயாது ஈட்டியோன் பொருள்போல்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே (அகம்.276:12-15)

எனும் பாலை பாடிய பெருங்கடுங்கோவின் அடிகள் உணர்த்துகின்றன.

நட்பு

தம்மிடம் நட்புடையவர் செல்வம் சிதைந்து வறுமையுற்ற காலத்தும், அவ்வறுமை காரணமாக நல்லோர் நட்புத் தன்மையினின்றும் வேறுபட மாட்டார் என்பதை,

நன்றல் காலையும் நட்பிற் கேடார் (அகம்.113:1)

எனும் பாடலடி குறிப்பிடுகிறது. இப்பாடல் நட்பு எனும் குழுநடத்தையில் புரிதல் எனும் ஒத்துணர்வு காணப்படுகிறது என்பதைக் காட்டுவதை,

உயிர்கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பில்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போலத்
தையல் நின்வயின் பிரியலம் யாமென (அகம்.205:1-3)

எனும் அடிகள் தலைவன் தலைவியிடம், 'உயிருடன் கலந்து பொருந்திய பல பிறவிகளிலும் தொடர்ந்து வரும் நட்பினால், குற்றமற்ற நெஞ்சத்தால் கலந்தவர் போல உன்னைவிட்டுப் பிரியோம்' எனக் கூறியதைக் காட்டுகின்றன. இதன்மூலம் தலைவன் தலைவியரின் அன்புகலந்த நடத்தையை நக்கீரர் தம் பாடலில் வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது.

விழா

விழா என்பது சமூகத்தளத்தில் மக்கள் பொதுவானக் குறிக்கோளைக்கொண்டு நடத்தும் நிகழ்வாகும். விழாவில் குழு நடத்தைகள் வெளிப்படுகின்றன.

வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன (அகம்.187:7-8)

எனும் அடிகள் மழவர் பூந்தொடை விழாவினைப் பொலிவுடன் கொண்டாடியதைப் பகர்கின்றன. உறையூரில் பங்குனி உத்தரவிழா சிறந்து நடைபெற்றதை,

பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரப்பியல் இலும்பில்
தீயில் அடுப்பின் அரங்கம் (அகம்.137:9-11)

என்ற அடிகள் உரைக்கின்றன.

... கொங்கர்
மணியரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே (அகம்.368:15-18)

எனும் அடிகள்வழி, கொங்கர் மணியினை இடையில் கட்டிக்கொண்டு ஆடும் உள்ளி விழாவினை அறியமுடிகிறது. விழாக்களில் குழுவில் உள்ள உறுப்பினர்களிடையே ஒற்றுமைத் தன்மைகள் இடம்பெறுகின்றன.

முடிவுரை

பழங்காலத் தமிழர்களின் சிறப்புகளைச் சங்கநூல்களின் மூலமாகத் தெள்ளத் தெளிவாகக் காணமுடிகிறது. சடங்குகளின் வழியாக நம்பிக்கை கொண்டு திருமணமுறை நடத்தும் பழக்கவழக்கங்கள் இருந்ததையும், களவு வாழ்க்கையில் மேற்கொள்ள வரைவுகடாதலும் இருந்ததையும், நன்னடத்தையை வளர்த்துக் கொள்ள தாயின் வழிகாட்டுதல் பின்பற்றப்பட்டுள்ளதையும், தாயின் வழியாக குடும்பம் இருந்ததையும், தந்தை தலைமையேற்றதையும், நட்பின் மேன்மையையும் வறியோருக்குப் பொருள் உதவிச்செய்வதை வலியுறுத்துவதையும் சங்கப் பாடல்கள் - அகநானூற்றுப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

துணைநூற்பட்டியல்

- அழகம்மை கே.பி., 2002, *சமூக நோக்கில் சங்க மகளிர்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- சசிவல்லி, 2009, *தமிழர் திருமணம்,* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), 2009, *தொல்காப்பியம் - பொருளதிகாரம் -இளம்பூரணர் உரை,* சாரதா பதிப்பகம், சென்னை.
- வேங்கடசாமி நாட்டார் ந.மு. & வேங்கடாசலம் பிள்ளை இரா.(உரை.), 1972(ம.ப.), *அகநானூறு* (மூன்று பகுதிகள்), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சிவசுப்பிரமணியம் மயிலம் வே.(உரை.), 2009, *அகநானூறு,* டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
- ……, 1992, *வாழ்வியற் களஞ்சியம்,* தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

அகநானூற்றின் கட்டமைப்பு

ந. மாலதி
முனைவர்பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
malathi1061988@gmail.com

சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இருபெரும் பிரிவுகளுள் அடங்குகின்றன. எட்டுத்தொகையில் நெடுந்தொகை எனப் பெயர்பெற்ற அகநானூற்றின் அமைப்பு முறையினை விளக்க முற்படுகிறது இக்கட்டுரை. அகநானூற்றுப் பாடலின் திணைவைப்புமுறையை உணர்த்தும் பழம்பாடல் பின்வருமாறு:

"ஒன்று மூன்று ஐந்து ஏழு ஒன்பான் பாலை ஓதாது
நின்றவரின் நான்கு நெறிமுல்லை அன்றியே
ஆறாம் மருதம் அணிநெய்தல் ஐயிரண்டு
கூறாதவை குறிஞ்சிக் கூத்து"

பிற சங்க இலக்கியங்களில் காணப்பெறாத சீரிய அமைப்பு முறை அகநானூற்றில் காணப்படுகிறது. அஃதாவது அம்மூவனார் முதல் உலோச்சனார் ஈறாக உள்ள 145 புலவர்களால் பாடப்பட்ட 400 பாடல்களையும் உருத்திரசன்மர் மூன்று பிரிவுகளாகப் பிரித்து அம்முப்பிரிவுகளுக்கும் தனித்தனியே பெயரும் சூட்டியுள்ளார். முதல் நூற்று இருபது பாடல்களுக்குக்(1-120) *களிற்றியானை நிரை* என்றும், அடுத்தாக உள்ள நூற்று எண்பது பாடல்களுக்கு(121-300) *மணிமிடை பவளம்* என்றும் இறுதி நூறு பாடல்களுக்கு(301 - 400) *நித்திலக்கோவை* என்றும் பெயர் சூட்டியுள்ளார்.

பிற்காலத்தில் உரையாசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் இப்பிரிவுகளின் பெயர்களையே எடுத்தாளும் வகையில் இப்பெயர்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

"களித்த மும்மதக் களிற்றியானை நிரை
மணியொடு மிடைந்த அணிகிளர் பவளம்
மேவிய நித்திலக் கோவை என்றாங்கு
அத்தகு பண்பின் முத்திறம்"

என்ற பழம்பாடல் இப்பகுப்புகளைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு முப்பெரும் பிரிவுகளாக அகநானூற்றைப் பிரித்து அதற்குத் தனித்தனியாகப் பெயரும் சூட்டியுள்ளதற்குக் காரணம் இன்று தெரியவில்லை. களிற்றுயானை நிரை என்பது பொருள் காரணமாக வந்த பெயரென்றும், மணிமிடை பவளம் என்பது செய்யுளும் பொருளும் ஒவ்வாமையால் பெற்ற பெயர் என்றும், நித்திலக்கோவை என்பது செய்யுளும் பொருளும் ஒக்கும் காரணத்தால் வந்த பெயர் என்றும் அகநானூற்றின் பாயிரத்தோடு காணப்படும் உரைநடைப்பகுதி கூறுகிறது.

இப்பிரிவு பாட்டின் பொருள் கருதிப் பிரிக்கப்படவில்லை என்றும் செய்யுளின் நடைநயம் கருதியே இப்படிப் பிரிக்கப்பட்டு இருக்கலாம் என்றும் கருதும் சாமி. சிதம்பரனார் அவர்கள்

அதற்கான காரணமாகக் ''களிற்றியானை நிரை'' ஆண்யானை வரிசை. ஆண்யானைகளைப் போலக் கம்பீரமாக அசைந்து செல்லும் பாடல்களுக்கு இப்பெயரை அமைத்திருக்கலாம். ''மணிமிடை பவளம்'' மாணிக்கத்தோடு தொடுக்கப்பட்ட பவளம் போன்ற மொழிகளும் கலந்த பாடல்களை மணிமிடை பவளம் என்ற வரிசையிலே தொகுத்திருக்கலாம. ''நித்திலக்கோவை'' முத்து மாலை, முத்துப் போன்ற ஒரே வகையான சொற்களால் அமைந்த பாடல்களை நித்திலக்கோவை என்ற வரிசையிலே சேரத்திருக்கலாம் என்பதை அகநானூற்றின் கட்டமைப்பு விளக்குகிறது.

சிறப்புகள்

13 அடிச் சிற்றெல்லையும் 31 அடிப் பேரெல்லையும் கொண்ட 400 செய்யுள்களைக் கொண்டது இந்நூல். பழைய இலக்கியங்களுள் ஐந்திணை தழுவி விளங்கும் இந்நூல் ஒன்றே 'அகம்' எனும் பெயரமைந்து காணப்படுகின்றது. அகத்திணையை முழுமையான அளவில் விளக்கும் பாடல்களைப் கொண்டமையால் அகம் எனவும் அகப்பாட்டு எனவும் அகம் பற்றிக் கூறும் 400 பாக்களைக் கொண்டதனால் 'அகநானூறு' என்றும், அகம் பற்றிய எட்டுத்தொகை நூல்களுள் நீண்டு காணப்படுவதால் 'நெடுந்தொகை' என்றும் வழங்கப்படுகிறது. இந்நூலின் பெரும்பான்மையான பாடல்களில் அகப்பொருளின் மூலக்கூறுகளாகிய முதல், கரு, உரிப்பொருள் பற்றிய செய்திகள் அழகுறக் கூறப்பட்டுள்ளன. இந்நூலைக் தொகுத்தவர் உப்பூரிக் குடிகிழார் மகன் உருத்திர சன்மனார். தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. 145புலவர்கள் இதனைப் பாடியுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பெற்ற கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்று உள்ளது.

பாலை

அகநானூற்றில் உள்ள 40 பத்துப் பாடல்களில் ஒவ்வொரு பத்திலும் 1, 3, 5, 7, 9 என்னும் எண்ணைக் கொண்ட பாடல்களைப் பாலைத்திணைக்கு என்று அமைத்து 200 பாடல்களைத் தொகுத்துள்ளார்.

குறிஞ்சி

அகநானூற்றில் உள்ள நாற்பது பத்துப் பாடல்களில் ஒவ்வொரு பத்துப் பாடல்களிலும் 2, 8, 12, 18... என்னும் இருவகை எண்களைக் கொண்ட பாடல்களைக் குறிஞ்சித்திணைக்கு என்று அமைத்து 80 பாடல்களைத் தொகுத்துள்ளார் உருத்திரசன்மனார்.

முல்லை

அகநானூற்றில் உள்ள நாற்பது பத்துப் பாடல்களில் ஒவ்வொரு பத்திலும் 4, 14, 24... என்னும் எண்ணைக் கொண்ட பாடல்களை முல்லைத்திணைக்கு என்று அமைத்து 40 பாடல்களைத் தொகுத்துள்ளார்.

மருதம்

அகநானூற்றில் உள்ள நாற்பது பத்துப் பாடல்களில் ஒவ்வொரு பத்திலும் 6, 16, 26,36... எனும் எண்ணைக் கொண்ட பாடல்களை மருதத்திணைக்கு என்று அமைத்து 40 பாடல்களைத் தொகுத்துள்ளார்.

நெய்தல்

அகநானூற்றில் உள்ள 40 பாடல்களில் ஒவ்வொரு பத்திலும் 10, 20, 30,40... என்னும் எண்ணைக் கொண்ட பாடல்களை நெய்தல் திணைக்கு என்று அமைத்து 40 பாடல்களைத் தொகுத்துள்ளார்.

உரையாசிரியர்கள்

ஊட்டியார்(அகம்.388), நோய்பாடியார்(671) எனச் சொற்றொடரால் பெயர்பெற்ற புலவர்கள் இந்நூலில் இடம்பெற்றிருக்கக் காணலாம். இதன் முதல் 90 பாடல்களுக்கு மட்டும் பழைய உரை ஒன்று உண்டு. இதன் முதல் பதிப்பாசிரியர் கம்பர்விலாசம் இராஜகோபாலையங்கார் ஆவார்.

> *1926இல் 91 - 120 பாடல்களுக்கும் 1933இல் 121 - 160 பாடல்களுக்குமாக இவர்(இராஜகோபாலையங்கார்) உரை எழுதி வெளியிட்டுள்ளார்*

என்கிறார் மா.பரமசிவன் (2012:48). பிற்காலத்தில் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு இரா.வேங்கடாசலம் பிள்ளை ஆகிய இருவரும் இணைந்து நூல் முழுமைக்கும் சிறந்த உரை எழுதியுள்ளார்கள்.

அகப்பொருள் நூலான இது புறப்பொருள் நூலைப் போல தமிழகத்தின் வரலாற்றுச் செய்திகளையும் அறிவிக்கின்றது. தித்தன், மத்தி, நன்னன், கரிகாற் பெருவளத்தான், தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் முதலான பெருநில வேந்தர் பற்றியும் ஆதன், எழினி, ஆட்டனத்தி, அன்னி மிஞிலி, பாணன், பழையன் முதலான குறுநில மன்னர்களைப் பற்றியும் எண்ணற்ற வரலாற்றுச் செய்திகளையும் தருகின்றது. அலெக்சாண்டரின் படையெடுப்புக்கு அஞ்சி நந்தர்கள் தமது செல்வங்களை யெல்லாம் கங்கையாற்றின் அடியில் புதைத்து வைத்த வரலாற்றுச் செய்தியும், பல இதிகாச, புராணச் செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

தொகுப்புரை

தொகைநூல்களுள் அகம் எனும் சிறப்புப்பெயர் பெற்ற நூல் அகநானூறு ஆகும். இந்நூல் பாடல்கள் களிற்றியானை நிரை, நித்திலக்கோவை, மணிமிடை பவளம் என முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அகனைந்திணை நூலாகிய இந்நூலைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. இந்நூலைத் தொகுத்த உப்பூரிக் குடிகிழார் மகன் உருத்திர சன்மனார் பாடல்வைப்புமுறையில், திணைவைப்புமுறையில் ஓர் ஒழுங்கினைப் பின்பற்றித் தொகுத்துள்ளமை சிறப்பிற்குரியதாக அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

- ஆலிஸ் அ., 1991, *கட்டமைப்பு ஆய்வில் அகநானூறும் புறநானூறும்*, மதுமதி வெளியீடு, சிவகங்கை.
- சிதம்பரனார் சாமி., 2003, *எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்*, அறிவுப் பதிப்பகம், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே. (உரை.), 1998, *தொல்காப்பியம் மூலமும் உரையும்*, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
- பரமசிவன் மா., 2012, அகநானூற்றுப் பதிப்புப் பின்புலம், காவ்யா பதிப்பகம், சென்னை.
- ஜெயம் அ. & சந்திரலேகா வைத்தியநாதன், 1994, *தமிழ் இலக்கிய வரலாறு*, ஜனகா பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்

இரா. பிரசன்னா
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 24.
meenuthangam2226@gmail.com

தொகைநூல்கள் அகம், புறம் என்னும் பொருணெறி மரபு பற்றிப் பல்வேறு நல்லிசைப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதியேயாகும். தொகைநூல்களுள் ஒன்றான குறுந்தொகை நான்கடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் கொண்டு 402 பாடல்களை உள்ளடக்கிய நூலாகும். ஐந்திணைகளை உள்ளடக்கிய இந்நூலில், முல்லைத்திணையில் இடம்பெற்றுள்ள மரங்கள், மலர்கள் பற்றிய பதிவுகளைப் பற்றி விளக்கியுரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

மரங்களும் மலர்களும்

வளரியல்பு அடிப்படையில் அமைந்த வகைப்பாட்டில் முதன்மை பெறுவது மர இனமாகும். பொதுவாக மர இனம் அதன்கண் அமைந்திருக்கும் உள்ளீட்டைக் கொண்டே வரையறுக்கப்படுகின்றது. பதினைந்திலிருந்து இருபது அடி வரை வளர்வதையே மரம் என்று தாவரவியலாளர் கூறுவர்.

குறுந்தொகை - முல்லைத்திணையில் இடம்பெற்றுள்ள மரங்களான பிடவு, காயா, குருந்து, கொன்றை முதலிய மரங்கள் மிகவும் உயரமற்றுக் குறுமரங்களாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் முல்லை நிலத்தில் உள்ள மரங்களின் மலர்கள், தலைவனின் கார்கால வரவினை உணர்த்துவதற்கும் முல்லைநிலக் காட்டின் அழகினை வெளிக்காட்டும் வகையிலும் ஆயர்கள் அம்மரத்திலுள்ள பூக்களைக் கொய்து தலையில் சூடிக் கொள்வதாகவும் படைக்கப்பெற்றுள்ளன.

கொன்றை

பூவால் பெயர்பெற்ற மரங்களில் கொன்றை முதன்மையானதாகும். இதன் பூக்கள் பொன்னிறத்தில் மாலைகள் தொடுத்தாற்போல் சரம்சரமாகத் தோன்றும். குறுந்தொகையில் கொன்றை 5 இடங்களில் (21, 66, 148, 183, 233) காணப்படுகின்றது.

வண்டுபடத் ததைந்த கொடியிணர் இடையிடுபு
பொன்செய் புனையிழை காட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர்பொய்வழங் கலரே (குறுந்.21)

என வரும் பாடலில், மகளிர் பொன்னாற் செய்த தலையணிகளை இடையிடையே கூந்தலில் அணிந்தாற்போலக் கொன்றை மரத்தின் தழையிடையே நீண்ட பூங்கொத்துக்கள் தோன்றும். தலைவர் கார்ப்பருவத் தொடக்கத்தே வினைமுடித்து மீண்டு வருவேன் என்று கூறிப் பிரிந்தார். அவர் வாராமையாலேயே இது கார்ப்பருவம் அன்று. ஏனெனில், தலைவர் பொய் கூறமாட்டார் எனத் தலைவி தோழியிடம் உரைத்துத் தலைவினின் பிரிவை ஆற்றியிருக்கின்றாள். இச்செய்தியின்மூலம் கொன்றை கார்ப்பருவத்தில் மலர்ந்து தலைவனின் வரவை உணர்த்தப் பயன்படுத்தப் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

காயா - பூவை மரம்

பூவால் பெயர்பெற்ற மரங்களில் காயா மரமும் ஒன்று. இப்பூவானது முல்லை நிலத்தின் செந்நிலப் பெருவெளியிலும் சில நேரங்களில் குறிஞ்சியிலும் பூக்கும் இயல்புடையது. கார்காலத்தில்

மலரும் இதன் பூக்கள் காலையில் மலர்ந்து இரவில் உதிரும் தன்மையுடையன. காயா என்னும் பெயரினையுடைய இப்பூவினை 'பூவை' எனும் பெயரிலும் சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியத்திலும் 'பூவைநிலை' எனும் துறை குறிப்பிடப்பெற்றுள்ளது.

தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் (தொல்.புறத்.5:10)

இதற்கு உரை வகுத்த இளம்பூரணர், *'பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப் புகழ்தல் நாடெல்லை காடாதலின் அக்காட்டினைக் கடந்து செல்வோர் அப்பூவைக் கண்டு கூறுதல் உன்னைக் கண்டு கூறினாற்போல'* என்று கூறுகின்றார்.

குறுந்தொகை - முல்லைத்திணையில் காயா மரம் பற்றிய செய்தி ஒரு பாடலில் (183) இடம்பெற்றுள்ளது.

சென்ற நாட்ட கொன்றைஅம் பசுவீ
நம்போல் பசக்கும் காலை தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறிகோட்டு
இரலை மானையும் காண்பர்கொல் நமரே
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தின் தோன்றும்
கான வைப்பின் புன்புலத் தானே (குறுந்.183)

என வரும் பாடலில், மழைமுகம் காணாது பொலிவழிந்திருந்த காயா மரத்தின் மலர்கள், மழை பெய்த காரணத்தால் மயிலின் கழுத்தைப் போல் பொலிவுற்றுத் தோன்றும். இக்கார்காலத்தில் கலைமான் பிணையைத் தழுவிக் கொண்டிருக்கும் காட்சியைக் காணும் நம் தலைவர் விரைந்து வந்துவிடுவார் எனத் தலைவி தோழியிடம் கூறி ஆற்றியிருக்கின்றாள். இதன்மூலம் காயா கார்காலத்தில் மலரக்கூடியது என்பது தெரிகின்றது. இதனை,

கருதனைக் காயா கணமயில் அவிழ (சிறுபாண்.165)

எனும் சிறுபாணாற்றுப்படைப் பாடலடியின் மூலமும் அறியலாம்.

பிடவம்

பிடவம் முல்லைநிலத்தில் வளரக்கூடிய ஒரு குறுமரமாகும். குறுந்தொகை இதனை 'பிடவு' என்கிறது. குளிர்ச்சி பொருந்திய முல்லைநிலக் காடுகளில் செழித்து வளரக்கூடிய பிடவமரத்தின் மலர்கள் கார்காலத்தில் மலர்ந்து மணம் பரப்பும். இதனுடைய மலர் வெண்மை நிறத்துடன், கொத்தாக மலரும் இயல்புடையதாகும். பிடவ மலரைப் பற்றித் தொல்காப்பியர்,

யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்(தொல்.உயிர்.27)

எனும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார். பிடவமரத்தை நாட்டார்வழக்கில் 'புடன்' என அழைப்பதாகப் பி.எல். சாமி குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் பிடவமரத்தை யாமரத்தோடு இணைத்துக் குறிப்பிட்டுள்ளார். குறுந்தொகை - முல்லைத்திணையில் பிடவம் பற்றிய குறிப்பு ஒரு பாடலில்(251) காணப்பெறுகின்றது.

மடவ வாழி மஞ்ஞை மாஇனம்
கால மாரி பெய்தென அதன்எதிர்
ஆலலும் ஆலின பிடவும் பூத்தன
கார்அன்று இகுளை தீர்கநின் படரே
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே (குறுந்.251)

எனும் பாடலடிகளில் சென்ற காலத்துப் பெய்யாது எஞ்சி நின்ற மழை இப்பொழுது பெய்கிறது. மழை பொழிய மயில் ஆடுவதும் பிடவம் பூப்பதும் அவற்றிற்குரிய இயல்புகளாகும். பருவம் மாறி மழை பெய்கிறது. ஆகையால் இது கார்காலம் அன்று எனத் தோழி தலைவியை ஆற்றுவிக்கின்றாள். இதனைக் கூர்ந்து நோக்குமிடத்து, கார்காலத்தில் பிடவம் பூக்கும் என்பதை அறிய முடிகின்றது.

குருந்தம்

குருந்த மரம் புனத்திலும் சுரத்திலும் பொழிலிலும் வளரக்கூடிய ஒரு சிறுமரமாகும். குவிந்த இதன் பூக்கள் வெண்மை நிறத்தில் காணப்படும். சங்க இலக்கியத்தில் இம்மலரினைக் குறிக்க, குரா, குரவு, குருந்தம் எனும் சொல்லாட்சிகள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. குருந்து என்பது புனஎலுமிச்சை வகையைச் சார்ந்தது என்பதை,

புனஎலு மிச்சை குருந்தெனப் புகலுவர் (பிங்.2777)

எனும் பிங்கல நிகண்டுக் குறிப்பின்வழி அறியலாம். இத்தகு சிறப்பைப் பெற்ற குருந்தம் குறுந்தொகை - முல்லைத்திணையில் ஓரிடத்தில் (148) இடம்பெற்றுள்ளது.

காசின் அன்ன போதுஈன் கொன்றை
குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்
கார்அன்று என்றி ஆயின்
கனவோ மற்றுஇது வினவுவல் யானே(குறுந்.148)

எனும் பாடலில் தலைவி தோழியிடம், பேரரும்பை வெளிப்படுத்தும் கொன்றை மரம் குருந்த மரத்தோடு சேர்ந்து சுழலும் இந்தக் காலத்தையும் கார்காலம் அன்று என்று நீ கூறுவாயாயின், இப்படித் தோன்றுவது எல்லாம் கனவுதானா என நான் கேட்கின்றேன், பதில் கூறுவாயாக என்கிறாள். இதனை நோக்குமிடத்து, குருந்தமரம் தலைவனின் வரவை உணர்த்துவதற்குக் காற்றில் ஆடியது என்பது புலனாகின்றது.

முல்லை

சங்க அகப்பாடல்களில் மகளிரின் கற்புநெறியானது வெண்மை நிறமுடைய முல்லைப்பூவோடு தொடர்புபடுத்தியே பேசப்பெற்றுள்ளது. இதனை,

முல்லை சான்ற கற்பின் மெல்லியல் (சிறுபாண்.3)
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே (நற்.142)

என்பன போன்ற குறிப்புகளால் உய்த்துணரலாம்.

காடும் காடு சார்ந்த நிலப்பகுதியையும் உடைய முல்லை நிலத்தில் முதன்மை பெற்று விளங்குவது முல்லைப்பூ. இதன் மலர் வெண்மை நிறத்திலும் கொடி பசுமை நிறத்திலும் இலை கூட்டு இலையாகவும் வளரும் இயல்புடையது. இம்முல்லைப்பூப் பற்றிய குறிப்பானது குறுந்தொகை - முல்லைத்திணையில் 11 பாடல்களில் (126, 162, 182, 188, 193, 221, 234, 275, 323, 358, 387) காணப்பெறுகின்றது.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே (குறுந்.221)

எனும் பாடலில், தலைவி தோழியிடம், முல்லையும் பூத்தன, பறியோலை உடைய கையினரான இடையர்கள் ஆடுகள் உள்ள மந்தையில் குட்டிகளை விட்டுவிட்டு அவர் இல்லத்திற்குப் பாலொடு வந்து தமக்கு உணவான கூழைப் பெற்று மீண்டு செல்லுகின்ற ஆடுகளை உடைய இடையன் தன் தலையில் சூடிக் கொண்டது சிறுமுல்லை அரும்புகளை எனக் கூறுகின்றாள்.

இப்பாடலின்மூலம் முல்லைப்பூப் பூத்தல் கார்காலத்தின் அறிகுறி என்பதனை அறிய முடிகின்றது. மேலும், மகளிர் மட்டுமின்றி ஆடவரும் முல்லைப்பூவைச் சூடினர் என்பதனை அறிய முடிகின்றது.

தொகுப்புரை

- ✓ குறுந்தொகை - முல்லைத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள மரங்கள், மலர்கள் அனைத்தும் தலைவன் - தலைவியின் அகவாழ்க்கையை எடுத்துக்காட்டப் பயன்படும் சிறந்த குறியீடுகளாக அமைவதை அறிய முடிகின்றது.
- ✓ முல்லை நிலத்தில் பிடவம், கொன்றை, காயா முதலிய குறுமரங்கள் காணப்பட்டதனைக் குறுந்தொகைப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.
- ✓ மணத்தால் பெயர் பெற்ற கார்கால மலர்களில் பிடவமும், நிறத்தால் பெயர் பெற்ற காயாமலரும் தலைவனின் வரவைத் தலைவிக்கு உணர்த்துவதையும், வெண்மை நிறமுடைய முல்லைப்பூவானது மகளிரின் கற்பின் தூய்மையை உணர்த்துவதையும் குறுந்தொகை முல்லைத்திணைப் பாடல்கள் சுட்டி நிற்கின்றன.
- ✓ சங்ககாலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்துள்ளனர் என்பதனையும் குறுந்தொகை - முல்லைப்பாடல்கள்வழி அறிய முடிகின்றது.

துணைநின்றவை

- ❖ ஆனந்தம் வி.வி.வி., (ஆ.வி.இ.), *மக்கள் வாழ்வில் மரங்கள்,* வளவன் வெளியீடு, சென்னை.
- ❖ சாமி பி.எல்., 1973, *சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்,* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- ❖ சாமிநாதையர் உ.வே.(உரை.), 1973(மு.ப.), *குறுந்தொகை,* உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
- ❖ இலம்போதரன் சு.(பதி.), 2005 (இ.ப.), *பிங்கல நிகண்டு,* வசந்தா பதிப்பகம், ஆதம்பாக்கம், சென்னை.
- ❖ ……., 1974(ஆ.ப.), *தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை,* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்

ப.மணிகண்டன்
முனைவர்பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 24
Manikandansiva2@gmail.com

சங்க இலக்கிய அகப்பாடல் மரபுகளுள் குறிப்பிடத்தக்க இரு கூறாக அமைவன தூதும் மடலும். தலைவன், தலைவி சந்திப்புக்கு இடையூறு நேரும்பொழுது, தம் உள்ளக்கிடக்கையைத் தாம் விரும்பும் நபரிடம் வெளிப்படுத்தும் உதவி செய்வோரைத் தூதுவர் என்றழைப்பர். அவ்வகையில், நற்றிணையில் காணப்படும் தூதையும் மடலையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தூது - விளக்கம்

அன்றைய அரசர்கள் காலம் முதல் இன்றைய மக்களாட்சிக் காலம் வரை அரசிற்குத் தூதாகச் செல்வோருமுண்டு. சங்க இலக்கியம் சுட்டிக்காட்டும் காதலர் வாழ்வில் தூதும் இடம்பெற்றிருக்கிறது.

தூது என்பதற்கு *"ஒருவகைப் பிரபந்தம், இருவரிடையே பேச்சு நிகழ்தற்கு உதவியாக நிற்கும் ஆள், கூழாங்கல், செய்தி, பகை, தானாபதி, இராசதூதர், தன்மை"*[1] என்று கழகத் தமிழ் அகராதி பொருள் தருகின்றது.

தொல்காப்பியர், தலைவன் - தலைவியரின் அகவாழ்க்கைக்குப் பங்காற்றுவோரை வாயில்கள் எனக் குறிப்பிடுவார். அவ்வகையில்,

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப (தொல்.அகத்.கற்பு.52)

ஆகியோரை வாயில்களாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், சில அஃறிணைப் பொருட்களையும் காதல் வாழ்க்கையில் காதலர் தூதாக விடுவர் எனக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். அந்நூற்பா வருமாறு:

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலொடு கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் சொல்லிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர் (தொல்.பொருள். செய்.201)

கண்ணீர்த் தூது

...இன்றுசெல்
இகுளையர்த் தருஉம் வாடையொடு
மயங்கிதழ் மழைக்கண் பயந்த தூதே (நற்.5:7-9)

என்ற பாடலடிகளில் பெருங்குன்றூர்க் கிழார் என்னும் புலவர், பல தோழியர் தலைவியின் துன்பத்தை நீக்கிவிட்டு இன்று புறப்படுவதாக இருந்தது. ஆனால் மீண்டும் அவர்கள் உன் துயரைச் சரிசெய்வதற்கு வந்துள்ளனர். வாடைக்காற்றினால் வருத்தத்துடன் காணப்படுகிறாய். மழை போன்று கண்ணீரை வரவழைத்து அழுகிறாய். உன் அழுகையின்போது வந்த நீர் தலைவனின் மனநிலையைப் பாதிக்கும்வண்ணம் தூதாகச் செல்கிறது எனத் தோழி, தலைவியிடம் கூறுவதாகக் கூறுகின்றார்.

அயலவர்த் தூது

ஒல்காது ஒழிமிகப் பல்கின் தூதே (நற்.165:9)

என்ற பாடலடியில் தோழி தலைவியிடம், நீ வருந்தாமல் என்னருகில் அறத்தோடு நிற்கிறாய். உன்னைத் தலைவன் மணம்முடிக்கச் செய்யச் சம்மதிக்குமாறு நான் கூற வேண்டுமென அயலவர் அதிகமாகத் தூது விடுகின்றனர் என்கிறாள்.

பாணன் தூது

தலைவனின் கட்டளைக்கு இணங்க பாணன் தூது செல்கிறான். தூது சென்றவிடத்தில் தோழி பாணனிடம், நீ தூதுவனாக வந்திருக்கிறாய், தலைவனின் பெருமைகளை எடுத்துக் கூறினாய், ஆனால் நீ கூறியதெல்லாம் மென்மையான பொய்யான வாக்குறுதிகள் எனக் கூறியதை,

... தூதொடும் வந்த
பயன்தெறி பனுவல் பைதீர்பாண
நின்வாய்ப் பணிமொழி (நற்.167:5-7)

இப்பாடலடிகளில் காணமுடிகின்றது.

மடல் - விளக்கம்

தன் காதல் நிறைவேறாத சூழலில் பனங்கருக்கில் குதிரை உருவம் செய்து அதனை மடலாக்கி, அந்த மடல்மேலேறி ஊரார்க்குத் தலைவன் தன்காதலை அறிவிக்கும் நிகழ்வு மடல் எனப்படும்.

"ஓர் ஆடவன் ஒரு பெண்ணைக் களவுடனோ அல்லது களவின்றியோ அடைய மேற்கொள்ளும் வழிமுறையே மடலேறுதல் எனப்படும்."[2] என்று க.காந்தி கூறுகிறார்.

மடலேறுதல் என்பதனைப் பெருந்திணைக்கு உரியதாகத் தொல்காப்பியர் கூறியதை,

ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே[3]

என்ற நூற்பாவால் அறிய முடிகின்றது.

தலைவன் மடலேறிய காட்சி

வில்லாப் பூவின் கண்ணி சூடி
நல்ஏ முறுவல்எனப் பல்ஊர் திரிதரு
நெடுமாப் பெண்ணை மடல் மானோயே (நற்.146:1-3)

இப்பாடலடிகளில் கந்தரத்தனார் என்னும் புலவர், தலைவன் தன்னைப் பற்றித் தோழி கேட்குமாறு, விலைபோகாத பூக்களால் கட்டிய மாலையைச் சூடிப் பித்துப் பிடித்தவன் என ஊரார் நோக்கும்படிப் பல ஊர்களிலும் சுற்றித் திரிந்தேன். பின்னர் கருமையான பனைமடலில் குதிரை செய்து அதிலும் சுற்றி வந்தேன் என்று உணர்த்தியுள்ளார். மேலும்,

மடலே காமம் தந்தது அலரே
மிடைபூ எருக்கின் அலர்தந் தன்றே (நற்.152:1-2)

என்ற பாடலடிகளில் தலைவன், தோழியிடம் தன் துன்பத்தைக் கூறுகிறான். என்னுடைய அன்பெல்லாம் பனங்கருக்காலே கட்டிய குதிரையின் மேல் ஏறி மடலேறும் நிலையைத் தந்தது. ஊரில் தூற்றும் பழியெல்லாம் என்னைச் சேர்ந்தது. ஆவிரை, பூளை, உழிஞை போன்ற மலர்களைத் தொடுத்த எருக்க மாலையை எனக்குத் தந்தது எனும் குறிப்புக் காணப்பெறுகின்றது. இதன்வழித் தலைவனின் மனநிலையைக் காணமுடிகின்றது.

மடலேறத் துணியும் தலைவன் எவ்வெவற்றை அணிந்திருப்பான் எனக் கலித்தொகைப் பாடலொன்று நன்கு வெளிப்படுத்தி நிற்கின்றது. அப்பாடற்பகுதி பின்வருமாறு:

அணியிலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கின்
பிணையல்அம் கண்ணி மலைந்து மணிஆர்ப்ப
ஓங்குஇரும் பெண்ணை மடல் ஊர்ந்து (கலி.139:8 -10)

மேலும்,

கண்டவி ரெல்லாம் கதுமென வந்துஆங்கே
பண்டறியா தீர்போல நோக்குவீர் கொண்டது
மாவென்று உணர்மின் மடலன்று மற்றிவை
பூவல்ல பூளை உழிஞையோடு யாத்த
புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பொய்ம்மணி கட்டி
அடர்பொன் அவிரேய்க்கும் ஆவிரங் கண்ணி(கலி.140:1-7)

எனும் பாடற்குறிப்பின்வழி, ஆவிரைப்பூ, எருக்கம்பூ, பூளைப்பூ, உழிஞைக்கொடி, மயிற்பீலி ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிய மாலையைத் தலைவன் மடலேறுவதற்கு முன் அணிந்திருப்பான் எனும் செய்தியை அறிய முடிகின்றது.

இப்பாடலடிகளில், தலைவன் ஊரிலுள்ளோரைப் பார்த்து, நீங்கள் எல்லோரும் வேகமாக வந்து முன்பு என்னைத் தெரியாதவர் போன்று பார்க்காதீர்கள். நான் ஏறிவருவது மடல் அன்று, குதிரை என்றே அறியுங்கள். நான் அணிந்திருப்பது பொன்நகை அன்று, பூளை, உழிஞை, பீலி முதலியவற்றை நூலிலே மணியுடன் சேர்த்துக்கட்டி, பொன்னிறமுடைய ஆவிரம் பூவையும் சேர்த்து நானே தொடுத்து அணிந்துள்ள மலர்க்கண்ணி என உணருங்கள் எனத் தலைவன் பொதுமன்றத்தில் கூடியுள்ள சான்றோரைப் பார்த்துக் கூறுகின்றான். அவ்வகையில், தன் காதல் கைகூடுவதற்குத் தலைவன் மேற்கொள்ளும் இறுதி முயற்சியே இந்த மடலேறுதல் நிகழ்வு எனலாம்.

முடிவுரை

- சங்க இலக்கியங்கள் முழுவதும் இருந்த தூதும் மடலும் நற்றிணையில் காணப்பட்டன.
- தூதில் மாறுபட்ட ஒன்றாக தலைவியின் கண்ணீர் கூட தூதாக உள்ளதை நற்றிணைப் பாடலொன்றில் காணமுடிகின்றது.
- மடலில் தலைவனின் மடலேறும் காட்சி ஊரில் உள்ளோர் அனைவரும் காணும் வகையிலும், தோழிக்கு தலைவன் கூறும் வகையிலும் இருந்துள்ளது.

சான்றெண் விளக்கம்

1. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, பக்.566.
2. டாக்டர் க. காந்தி, தமிழர்பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், பக்.16
3. தொல்காப்பியம் - பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, நூற்பா எண்.54

துணைநின்றவை

- காந்தி க., 2003, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

- கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), 2009, *தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை,* சாரதா பதிப்பகம், சென்னை.
- தமிழமுதன்(உரை.), 2012, *கலித்தொகை மூலமும் உரையும்,* சாரதா பதிப்பகம், சென்னை.
- புலியூர்க்கேசிகன்(உரை.), 2012, *தொல்காப்பியம் (எழுத்து - சொல் - பொருள்),* சாரதா பதிப்பகம், சென்னை.
- வேங்கடராமன் ஹெச். (உரை.), 2013, *நற்றிணை மூலமும் உரையும்,* டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
- ....., 2010, *கழகத் தமிழ் அகராதி,* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

குறுந்தொகை உணர்த்தும் அறம்

முனைவர் ரா. ராஜராஜன்
தமிழ் - உதவிப் பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17
thanivairams@gmail.com

பண்டைய தமிழன் தன் வாழ்நாளில் கடைப்பிடித்த அறக்கருத்துகளை இலக்கியங்களில் பதித்து அளித்துள்ளான். அவ்அறக்கருத்துகளைக் கைக்கொண்டு வாழ்வோர் வாழ்வில் மேன்மை அடைவர். சமுதாயம் போற்றும் சான்றோராகவும் திகழ்வர். அவ்வகையில், நற்குணங்கள் குடிகொண்டுள்ள மனிதனாக வாழ்வதற்குக் குறுந்தொகை சில அறக்கருத்துகளை வழங்கியுள்ளது. அவற்றை இக்கட்டுரை விளம்புகிறது.

அறச்செயல்

தாகமாய் இருப்போருக்குத் தண்ணீரும், பசித்திருப்போருக்கு உணவும் வழங்குவது சிறந்த அறமாகும். நீர் வேட்கையைத் தணிக்கும் இயல்பு கொண்டது நெல்லிக்கனி. இது பாலைநிலத்தைக் கடந்து செல்வோரின் நீர்வேட்கையைத் தணிப்பதனை,

அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய் (குறுந்.209)

என்ற அடி கூறுகிறது. நெல்லியைப் போன்று மக்களும் பிறருக்குப் பயன்தரும் வகையில் இருக்க வேண்டும் என்பதை இவ்வடி புலப்படுத்துகிறது. மேலும் பசித்திருக்கும் தன் பிள்ளைக்கு ஊட்டியபின் எஞ்சியவற்றைத் தான் உண்ணலே அறம் (குறுந். 213) என்ற கருத்தும் குறுந்தொகையில் இடம்பெறுகிறது.

ஈகை

இவ்வுலகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களும் அழியும் தன்மை கொண்டன. நிலையாமை மட்டுமே நிலைத்து நிற்கும். கால வெள்ளத்தில் அழிந்துபடாமல் தம் பெயர் சரித்திரத்தில் இடம்பெற அரிய பல செயல்களை மக்கள் செய்வர். அழியாத புகழினைப் பெற விரும்புவோர் நேர்மையான வழியில் ஈட்டிய செல்வத்தினை அனைவருக்கும் ஈவர். அப்பொருளும் ஈட்டியவன்பால் நிற்காமல் வறியவன்பால் செல்லும். பொருள் ஈந்தவனின் புகழும் நிலைத்து நிற்கும். இதனை,

நில்லா மையே நிலையிற் றாகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்று (குறுந்.143)

என்ற பாடல் கூறுகிறது. பாரி, ஓரி, ஆய் முதலான வள்ளல்களின் பெயர்கள் இன்றளவும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவர்களின் ஈகையால் உண்டான புகழேயாகும். புகழன்றி இவ்வுலகில் இறவாது நிற்பது வேறில்லை என்பதனை,

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல் (குறள். 233)

எனும் குறளும் எடுத்துரைக்கிறது.

நன்மொழி கூறல்

பிறருக்கு நன்மொழிகளைக் கூறுவதற்கு அச்சம் கொள்ளத் தேவையில்லை என்பதனை, *'நல்மொழிக்கு அச்சம் இல்லை'* (குறுந்.392) என்று பதிவு செய்கிறார் தும்பிசேர் கீரனார். இதற்கிணங்க, பிறருக்கு அறிவுரை கூறும்முகத்தான் பாடல்கள் அமைந்துள்ளன. தலைவியுடன் இருந்த காலத்தில் அவளின் அமுதம் போன்ற மொழிகளும் குணமும் தலைவனுக்கு இன்பத்தைப் பயந்தன. காமமுடையோர்க்குப் பிரிவு என்பது இல்லாமல் உடனுறையும் பேறு பெற்றால் மகிழ்ச்சி உண்டாகும். எஞ்ஞான்றும் பிரிவின்றி உடனுறைதல் இவ்வுலகில் அரிதானதாகும். அங்ஙனம் பிரிந்தவிடத்து, முன்னர் இன்பம் தந்த அனைத்தும் துன்பத்தைத் தருவதாக அமையும். ஆகவே, அறிவுடையோர் காமநெறியின்பால் சாராமை நன்று என்பதனை,

அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி

அன்ன வினியோள் குணனு மின்ன
இன்னா வரும்படர் செய்யு மாயின்
உடனுறை வரிதே காமம்;
குறுக லோம்புமி னறிவுடை யீரே (குறுந்.206)

எனும் பாடலில் தனது பட்டறிவினைத் தலைவன் வெளிப்படுத்துகிறான்.

ஒருவன் செய்யும் நன்மை சிறிதாயினும் அச்சிறுநன்மை செய்தவரையும் போற்றுதல் வேண்டும். அங்ஙனம் போற்றுதலே உயரிய குணம் (குறுந்.115) என்று தோழி தலைவனிடத்து மொழிகிறாள். தினை அளவினதாகிய உதவி ஒருவர் செய்யினும் அதன் அருமை அறிந்தவர்கள் அதனைப் பனை அளவினதாகக் கருதுவர் என்பதனை,

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் (குறள்.104)

என வள்ளுவமும் கூறுகிறது.

நடுவுநிலைமை தவறாமை

குற்றத்திற்குத் தீர்ப்பு வழங்குவோர் நடுநிலைமையோடு நின்று தீர்ப்பு வழங்க வேண்டும். தராசு முள்போல் யார் பக்கமும் சாய்ந்திடாமல் இவர் வேண்டியவர், வேண்டாதவர், உற்றார், உறவினர், நண்பர் என்று பாராமல் உண்மையை ஆய்ந்து தீர்ப்பு வழங்கிட வேண்டும். இந்நடுநிலைமையை உணர்த்தும் பாடல்கள் குறுந்தொகையில் காணப்பெறுகின்றன. இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையது என நலம்பாராட்டுகிறான் தலைவன். மேலும், தும்பியினை அழைத்து நீ அறியும் மலர்களில் இதனைப் போன்று நறுமணம் உள்ள மலர்களும் உள்ளனவோ? எனவும் கேட்கிறான். அவ்விடத்து, தனக்கு இன்பத்தைத் தருவதைப் பதிலாகக் கூறாமல் உண்மையை ஆய்ந்து அறிந்த ஒன்றினை விடையாகக் கூறு என்கிறான். இதனை,

காமஞ் செப்பாது கண்டது மொழிமோ (குறுந்.2)

எனும் பாடலடி உரைக்கிறது. வழக்குகளை விசாரிக்க அக்காலத்தில் அறங்கூறும் அவையமும் இருந்தது என்பதனை,

முறையுடை யரசன் செங்கோ லவையத்து (குறுந்.276)

எனும் பாடல் புலப்படுத்துகிறது.

செய்ந்நன்றி மறவாமை

ஒருவர் செய்த உதவியை மறந்திடாது என்றும் நினைத்துப் பார்க்க வேண்டும். அதிலும் தனக்குக் கேடு வந்த பொழுது, தாமே வலிந்து வந்து பிறர் செய்த உதவியை மறந்திடல் கூடாது என்பதை,

கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையாய் (குறுந்.225)

என உரைக்கிறது கபிலர் பாடல். முன்பின் அறிந்திடாதவர் தாமே எந்தவித எதிர்பார்ப்புமின்றிச் செய்த உதவிக்குக் கைமாறாக மண்ணுலகையும் விண்ணுலகையும் தந்தாலும் ஈடாகாது என்பதைச்,

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது (குறள்.101)

என்று திருக்குறளும் செய்யாமல் செய்த உதவிக்கு ஈடுஇணை எதுவும் இல்லை என்பதை எடுத்துரைக்கிறது.

பொய்கூறல் கூடாது

தான் அறிந்ததனை மறைத்துப் பொய் கூறுவது அறமாகாது. சான்றோருக்கும் அங்ஙனம் உரைப்பது இயல்பாகாது. அவர்கள் தன் நெஞ்சு அறிந்தவற்றைப் பொய்யாது உரைப்பர் என்பதை,

அறிகரி பொய்த்த லான்றோர்க் கில்லை (குறுந்.184)

என்ற அடி வெளிப்படுத்துகிறது. அறிந்திருந்தும் பொய்த்தவனின் மனம் தன்னையே சுட்டெரிக்கும் என்பதைத் திருக்குறளும்,

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்

தன்நெஞ்சே தன்னைச் சுடும் (குறள். 293)

என்றுரைக்கின்றது.

பழிக்கு அஞ்சுதல்

பிறர் கூறும் பழிமொழிக்கு அஞ்சும் இயல்புடையவர் சான்றோர். அத்தகைய இயல்பு கொண்ட தலைவனும் தனது பிரிவால் தலைவி இறந்துபடுவளோ என்றும் அங்ஙனம் ஆயின் தனக்கு வரும் பழிக்கு அஞ்சி விரைந்து பொருளீட்டி வருவான் என்றும் தோழி மொழிகிறாள். இதனை,

பழியு மஞ்சும் பயமலை நாடன் (குறுந்.143)

என்ற பாடலடி எடுத்துரைக்கிறது. தன் முன்னர்ப் பிறர் கூறும் புகழ்மொழிகளைக் கேட்க நாணும் மென்மைக்குணம் கொண்ட தலைவன் பழியை உரைக்குங்கால் எங்ஙனம் வலிமை பெறுவானோ என்பதனை,

...சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ காணுங் காலே (குறுந்.252)

எனும் தலைவி கூற்றுப் பாடல் பழிக்கு அஞ்சுவதைப் புலப்படுத்துகிறது. இப்பாடல்கள் பழிமொழிக்கு அஞ்சி நன்மொழிக்கான அறச் செயல்களைச் செய்து வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றன.

தன் உழைப்பில் வாழ்தல்

தன்னுடைய முயற்சியால் ஈட்டிய பொருளைக் கொண்டு வாழ்தலே சிறந்த வாழ்வாகும். முன்னோர்கள் தேடிச் சேர்த்த செல்வத்தைக் கொண்டு செலவழிப்போர் செல்வர் ஆகார். தான் ஈட்டிய பொருளைக் கொண்டு வாழாதோருடைய வாழ்க்கை இரந்து உண்டு வாழ்வோரின் வாழ்வைக் காட்டிலும் இழிவுடையதாகும். இக்கருத்தினை,

உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவுஎன (குறுந்.283)

என்ற பாடல் காட்டுகிறது. முன்னோர் ஈட்டிய செல்வத்தினை வைத்துக்கொண்டு ஆடம்பர வாழ்க்கையை வாழ்வோரும், பணத்தைச் சேர்த்து வைக்கும் பணக்காரர்களும் என்றும் மனதில் இருத்த வேண்டிய அடிகளாய் இவற்றைக் கூறலாம்.

கையுறை மறுத்தல்

தனக்கு ஆக வேண்டிய செயலை விரைந்து முடித்தற் பொருட்டும், நியாயமற்ற செயல்களைச் செய்வதற்காகவும், பிறருக்குக் கையுறை வழங்குவது வழக்கம். தலைவன் வழங்கும் கையுறையை மறுக்கும் தோழியின் பெருமிதப் போக்கு குறுந்தொகையின் முதல் பாடலில் வெளிப்படுகிறது. தலைவன் தந்த சிவந்த காந்தள் மலரைத் தோழி, 'எங்களது குன்றத்தில் இப்பூ கொத்துக்கொத்தாகப் பூத்துள்ளது' என்று கூறி மறுப்பதை,

குருதிப் பூவின் குலைக்காந் தட்டே (குறுந்.1)

என்ற திப்புத்தோளார் பாடலடி இயம்புகின்றது. அவள் கையுறை மறுத்தமைக்கான காரணங்களாக, *"கடவுட்கு உரிய குருதி நிறமுடைய இக்காந்தள் பூவினை நினக்குத் தந்தவர் யார் எனத் தாயார் முதலியோர் ஐயுற்று வினவுவர் எனத் தோழி கூறி மறுத்தனள். வேலனும் வெறியாடும் காலத்தன்றிப் பறியாத பூவினைப் பறித்து நினக்குத் தந்தவர் யார் என வினவப்படும் எனக் காட்டி மறுத்தனள். இம்மலைப் பகுதியில் மிகுதியாக வளர்ந்துள்ள இம்மலரினை ஒருவரும் சூடாத போது, இவள் சூடினால், சூடியது பூப் பற்றியன்று, சிறந்தான் ஒருவன் தந்தமையால் என அயலாரால் உய்த்துணரப்படும் எனக்காட்டி மறுத்தனள். குன்றத்துக் காந்தள் செந்நிறம் உடையது எனக் கூறி, நீ கையுறையாகத் தந்த இப்பூ, நின் உடல் வெப்பத்தால் கரிந்து காட்டுகின்றது என்றும், இதனைத் தலைவி காணின் ஆற்றாமையால் வருந்துவாள் என்றும் மறுத்தனள்"* எனக் குறுந்தொகை உரையாசிரியருள் ஒருவரான வி.நாகராசன் தம் உரையில் கூறுகிறார். கையுறையை இக்காலத்தில் இலஞ்சம், அன்பளிப்பு எனும் சொற்களால் குறிப்பர்.

நிறைவுரை

அறச்செயல்கள் பல செய்தல் வேண்டும், ஈகை புரிதல் வேண்டும், நடுநிலை தவறாமல் வாழவேண்டும், செய்ந்நன்றி மறத்தல் கூடாது, பொய் கூறல் கூடாது, பழிபாவங்களுக்கு அஞ்சுதல்

வேண்டும், தன்னுழைப்பில் வாழ வேண்டும், கையுறை ஏற்றல் கூடாது போன்ற கருத்துகளைக் குறுந்தொகை மொழிகிறது. இவை எஞ்ஞான்றும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களாகும்.

துணைநின்றவை

- நாகராசன் வி. (உரை.), 2004(மு.ப.), குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- பிள்ளை கா.சு. (உரை.), 2012(மூ.ப.), திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்

முனைவர் **நா. மலர்விழி**
தமிழ் - உதவிப் பேராசிரியர்
ஜி.டி.என். கலைக்கல்லூரி
திண்டுக்கல். poetmalarvizhi@yahoo.com

சமண முனிவர்களால் இயற்றப்பட்ட வேளாண் வேதம், நாலடி நானூறு என்று சிறப்பிக்கப்படும் நாலடியாரில் முதியோர் பற்றிய சிந்தனைகள் குறிப்பிடத்தகுந்தளவில் காணப்படுகின்றன.

முதியோர்

தமிழ் மொழியின் முதன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் முதுமை, மூப்பு, முதிர்வு முதலான சொற்கள் காணப்படுகின்றன. முதுமை=மூப்பு என்று பொருள். முதிர்வு, அறிவு முதிர்வு எனும் பொருளைத் தருகிறது.

பாரதியார், நரை கூடிக் கிழப்பருவ மெய்தி என்கிறார். கிழம் என்பதற்கு முதுமை, முதுமையடைந்த-வன்-வள்-து என்று பொருள்.

நாலடியாரில் முதியோர் பற்றிய சிந்தனைகள் என்பது, வயதில் மூத்த, அனுபவ அறிவு முதிர்வுடைய, கிழப்பருவம் எய்தியவர்களைப் பற்றிய சிந்தனையாக அமைகிறது.

நாலடியாரில் இளமை நிலையாமை எனும் அதிகாரத்தில் முதியோர் பற்றிய சிந்தனைகள் காணக் கிடைக்கின்றன.

தோற்ற மாறுபாடுகள்

கிழப்பருவம் அடைந்தவர்களின் உடல் தோற்றத்தில் பல்வேறு மாறுபாடுகள் உண்டாகும்.

"நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்" (நாலடி.11-1)

வயதாகும்போது தலைநரைத்துப் போகும் எனும் கருத்தை மேற்கண்ட அடி புலப்படுத்துகிறது. ஆனால்,

"யாண்டு சில ஆகியும்
நரைபல ஆகுதல்,
யாங்கியர் என
வினவுதிர் ஆயின்
மாண்பில்லா மனைவி: தறுதலைத் தணையர்:
சுரண்டும் சுற்றம், கடுஞ்சொல் மேலாளர்,
நன்றியில்லா நண்பர்: அரசியல் பேய்கள்
ஆகியோர் உறைகாடு நான்வாழும் நாடே"(சிவசக்தி இன்னமும் இனிக்கிறது, ப.55)

எனும் புதுக்கவிதை வரிகள் வயதாகாமலேயே நரைத்து முதுமைநிலை அடைந்துவிட்ட இளைஞனைக் காட்டுகின்றன.

"முதுமை வயதினால் மட்டும் வருவது அன்று போதிய ஊட்டமும், செல்வமும் அற்ற நிலையும் வேலையும் சமுதாயச் சூழலும் காரணமாக அமையலாம்" (நா.மலர்விழி , ஊரக முதியோர் உளவியல், ப.45)

இன்றைய காலக்கட்டத்தில் "நரை" சிறியவர், பெரியவர் வேறுபாடு இல்லாமல் பெரும்பான்மையோரிடம் காணப்படுவதற்குக் குடும்பச் சூழலும் சமூகச் சூழலுமே காரணமாக அமைகின்றன எனலாம். தாராளமயமாக்கலின் விளைவாக அந்நிய உணவுகளை உண்பதில் நாட்டம் கொள்ளும் இளைய சமுதாயம் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கு ஆட்படுகிறார்கள். இன்றைய அவசர உலகின் பதற்றம் மனக்கவலைகளுக்குக் காரணமாகிறது. உடல், மனநிலைக் குறைபாடு இளம் பருவத்தினருக்கும் முதுமைத் தோற்றத்தைத் தருகிறது. நரை மட்டுமல்லாமல் முதியவர்களிடம் வேறு பல தோற்ற மாறுபாடுகளும் ஏற்படுவதை,

"சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சேர்ந்த நடையினராய்ப்
பல்கழன்று பண்டம் பழிகாறும் - இல்செறிந்து" (நாலடி.13.1-2)

எனும் அடிகள் புலப்படுத்துகின்றன.

சொல் தடுமாறும் வாய் குழறும் நடை தளரும் உள்ளமும் உடலும் சோர்வடையும். கோலூன்றி நடக்கவேண்டி வரும். பல் விழுந்து போகும் உயிர் இருக்கும் இந்த உடல் பலரும் பழிக்கத்தக்க பரிதாப நிலை அடையும்.

"பல் கட்டது விடும்" (திருப்புகழ்.447)

"தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று,
இரும்இடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே" (புறம்.243)

மேற்கண்ட அடிகள், முதுமையில் பல்விழும் நிலையையும், கோலூன்றி நடப்பதையும், உடல் நடுங்குவதையும், இருமலினிடையே சில சொற்களே பேச இயலும் முதுமை நிலையினையும் குறிப்பிடுகின்றன. முப்பாலின முதுமைப் பருவத்தினருக்கும் மேற்கண்ட தோற்ற மாறுபாடுகள் ஏற்படுகின்றன என்றாலும் பெண்ணின் முதுமைத்தோற்றம் தனித்துப் பார்க்கப்படுகின்ற போக்கு நாலடியாரில் காணப்படுகிறது.

"தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழ்இலா" (நாலடி.14-1-2)

வளையாது நிமிர்ந்து நின்ற உடல்வளைந்து கூனிக் குறுகி, தலை நடுங்கிக் கொண்டு நேராக நிற்க இயலாத நிலையில் கோலூன்றி நடுங்கும் நிலையில், உடல் நலம் குன்றி, இறக்கும் நிலையில் இருக்கும் ஒரு முதிய பெண்ணை இப்பாடலடிகள் காட்சிப்படுத்துகின்றன.

"உபயோகப்படுத்திய பாத்திரமாய்
மங்கிய பளபளப்பில் தேகம்
இருந்த ஈர்ப்பு எழுந்து நின்று
"போகட்டுமா" - என்று
விடைபெறும் நேரம்"

என வயது முதிர்ந்த பெண்களை "பேரிளம் பெண்" என்ற கவிதையில் படம்பிடிக்கிறார் பத்மாவதி தாயுமானவர் (.அ.பாலமுருகன், 2-ம் நூற்றாண்டில் பெண்ணியம் P.34)

"வேல்கண்ணன் என்றிவளை வெஃகன்மின் மற்றிவளு
கோல்கண்ண ளாகும் குனிந்து" (நாலடி.17:3-4).

வேல்போன்ற கண்ணுடையவள் என்று விரும்பி நீங்கள் ஆசைவைக்கும் அவளும் ஒருநாள் கோலூன்றி நடக்கும் கூன் முதுகை உடைய முதியவள் ஆகிப்போவாள் என்கின்றன மேற்கண்ட அடிகள். வேல் போன்ற கண்கள் முதுமையில் குழி விழுந்ததைப்போல் மாறிவிடுகின்றன.

"கண்கள் பொருந்தியிருக்கும் குழியில்((Orbit) உள்ள கொழுப்புத் தசை குறைவதாலும் கண்களைச் சுற்றித் தோளிலுள்ள நிறமி அணுக்கள் மூப்பின் காரணமாகக் கருமையுறுவதாலும் கண்கள் குழிந்தன போன்று தோற்றமளிப்பதாக" உடற்கூற்றியலாளர் கூறுகின்றனர்.(*Sinclair*, "*Human Growth After Birth*)"

ஆணின் வயது உணர்ச்சியைப் பொறுத்தது. பெண்ணின் வயது தோற்றத்தைப் பொறுத்தது என்பர். சமவயதுள்ள ஆண், பெண் முதியவர்களை நோக்கினால், ஆணைவிடப் பெண்ணிடம்தான் மூப்பின் முத்திரைகள் முக்கியத்துவப் படுத்தப்படுகின்றன எனலாம். இன்றைய காலக்கட்டத்தில், ஆண்கள் உடற்பயிற்சி, வெளியுலகத்தொடர்புகள் மூலம் தன் உடல்நலத்தையும் உள்ள நலத்தையும் பேணிக்காக்கின்றனர். ஆனால், பெண்ணுக்கோ அதற்கு வாய்ப்பில்லாமல் போகின்றது. வீட்டுவேலைகளில் கவனம் செலுத்துவதுடன் மட்டுமல்லாமல் பணிக்கும் சென்று வேலைப்பளுவை அதிகமாக்கிக் கொள்கின்றனர். பெண்ணின் வெளித்தொடர்பு திருமணத்திற்குப்பின் அறுபட்டுப் போகின்றது. பெரும்பாலான பெண்கள் 'படி தாண்டா பத்தினி' என்பது போல கணவன், குழந்தைகள் என நான்கு சுவர்களே உலகமாக வாழ்கின்றனர். பணிக்குச் செல்லும் பெண்களோ வீட்டு நிருவாகத்தைக் கவனித்துக் கொண்டு வேலைக்கும் செல்வதால் உடல், மனதளவில் விரைவில் முதுமை அடைகின்றனர். வீட்டுச்சூழலும் பணிச்சூழலும் சரியாக அமையாத பெண்களின் நிலையோ இன்னும் பரிதாபத்திற்குரியதாகவே இருக்கின்றது.

வேல்போன்ற கண்ணுடையவள்மேல் ஆசை வைப்பவன் முதுமையடைவதற்கு முன்பே, அப்பெண் முதுமையடைவதை நாலடியார் வழி அறிய முடிகிறது. அன்றும் இன்றும் பெண்களின் வாழ்வியல் இருப்பு மாற்றமடையாத நிலை வருத்தத்திற்குரியது.

முதுமையின் முதிர்நிலை

முதியோர்களின் தோற்ற மாறுபாடுகள் முழுமை பெறுவதை முதிர்நிலை எனலாம்.

"பருவம் எனைத்துள - பல்லின்பால் ஏனை
இருசிதையும் உண்டீரோ என்றுவரிசையால்" (நாலடி.18:1-2)

எனும் அடிகள் என்ன வயதாயிற்று, இன்னும் எத்தனைப் பற்கள் கழன்று விழாமல் இருக்கின்றன? அதனோடு வேளைக்கு இரண்டு கவளம் உணவாவது உட்கொள்ள முடிகிறதா என்றெல்லாம் சுற்றத்தார் முறையாக விசாரிப்பார்கள் எனக் கூறுகின்றன.

முதுமையின் முதிர்நிலையில் முதியவர்கள் செயலற்றவர்களாக இருக்கின்றார்கள். பெரும்பான்மையான பற்கள் கழன்று விழுந்த நிலையில் உணவு உட்கொள்வதில் சிக்கலைச் சந்திக்கும் நிலை ஏற்படுகின்றது.

பல்போனால் சொல் போச்சு என்பார்கள். பெரும்பான்மையான பற்கள் கழன்று விழுந்த நிலையில் சரியாகப் பேச முடியாது. வாய் குழறும். மேலும், பல் போன வயதானவர்களின் பேச்சிற்கு வீட்டிலும் சமூகத்திலும் மரியாதை குறைந்துவிடும். முதியோரின் முதிர்நிலையில் மரியாதைக்குறிய முதியோர்களின் மரியாதை சமுதாயத்தில் குறைந்துபோகின்றது.

முடிவுரை

நாலடியாரில் முதுமைப் பருவத்தினர் நரையுடையவர்களாக, பல் விழுந்து, சொல் தடுமாறுதலும் வாய் குழறுதலும் உடையவர்களாக, கோல் கொண்டு நடக்கின்றவர்களாகக் காட்சியளிக்கின்றனர். மேலும், ஆண், பெண் இருபாலரில் ஆண்களைவிட பெண்கள் விரைவில் முதுமைப்பருவத்தை அடைகின்றனர் என்ற கருத்தும் பெறப்படுகின்றது.

துணைநின்றவை

- அருணகிரிநாதர், 1974, திருப்புகழ், கழக வெளியீடு, சென்னை.
- சாமிநாதையர்.உ.வே.(ப.ஆ), 2011, புறநானூறு, கழக வெளியீடு, சென்னை.
- சிவசக்தி, 1992, இன்னமும் இனிக்கிறது, முருகன் பதிப்பகம், சென்னை.

- பாலமுருகன் அ., 2005, "21-ம் நூற்றாண்டில் பெண்ணியம்", ஆய்வுக்கோவை, ஈரோடு கலைக்கல்லூர, ஈரோடு.
- மலர்விழி நா., 2003, ஊரகமுதியோர் உளவியல், முதுகலைப்பட்ட ஆய்வேடு, காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகம், காந்தி கிராமம்.
- *Sinclair, 1985, Human Grouth after Birth, Oxford University Press, Oxford.*

மதிப்பிடப்பெற்றது

சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்

முனைவர் **சே.செந்தமிழ்ப்பாவை**
பேராசிரியர் & இயக்குநர்
தமிழ்ப் பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

பெ.குபேந்திரன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்ப் பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3.

காப்பியங்கள் காலத்தைக் கடந்து கருத்துக்களைத் தாங்கிச் செல்லும் வரலாற்றுப் பெட்டகமாகும். பழந்தமிழ்க் காப்பியங்களுக்கு உரையாசிரியர்கள் செய்துள்ள தொண்டு அளப்பரியது. அவ்வகையில் காப்பியத்திற்குத் தொண்டாற்றிய புலமைச் செல்வர்களை நூலாசிரியர், உரையாசிரியர், கற்பிக்கும் ஆசிரியர் என மூவகைப்படுத்தலாம். இம்மூவருள் நூலாசிரியரின் உள்ளக்கிடக்கையை உய்த்துணர்ந்து கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தெளிய அறிவிக்கும் நுண்மாண் நுழைபுலமும் சொல்வளமும் ஒரு சேரப் பெற்றவர்கள் உரையாசிரியர்களேயாவர். அத்தகைய உரையாசிரியரான அரும்பத உரைகாரரின் வரலாறு, இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதுவதற்கான காரணம், அதற்கான சமூகப் பின்புலங்கள் போன்றவற்றினை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியம் குறிப்பிடும் உரை வகைகள்

மூலநூலின் சிறப்பினை வெளிப்படுத்துவது உரை ஆகும். தொல்காப்பியர் காலத்திலேயே உரைநடை தோன்றிவிட்டதென்பதற்கு,

அவற்றுள்
நூல் எனப்படுவது நுவலும் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றி
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுஅதன் பண்பே (தொல்.பொருள்.செய்யு.159)

எனும் தொல்காப்பியம் சான்றாகும். இதனால் நூலின் உட்பொருளை விளக்குவது உரையின் பண்பு என்பது அறியப் பெறுகிறது.

அரும்பத உரையாசிரியர் வரலாறு

சிலப்பதிகாரத்திற்குக் காலத்தால் முந்திய உரையாசிரியர் அரும்பதஉரைகாரர் ஆவர். இவ்வுரைகாரரை அரும்பத உரைகாரர் என்று முதன்முதலில் குறிப்பவர் அடியார்க்கு நல்லார். சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையில்,

ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்
இவர்பரித் தேரினர் இயைந்தொருங்கு ஈண்டி (சிலம்பு.5:157-160)

எனவரும் அடிகளில் எண்பேராயம் குறித்து மொழிகையில் *"கரணத்தியல்வர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர்*

இனையரெண்பேர் ஆயமென்ப எனுமிவர் இனி சாந்து பூ..... அவைக்களத் தாரைந்து (157 உரை) எனக் காட்டுவர் அரும்பதவுரையாசிரியர்'' எனக் குறிப்பதன்வழி அறிய இயலும்.

அரும்பதவுரைகாரர் - பெயர்ககாரணம்

ஒரு காலத்தில் அரும்பதவுரைக்குச் சிறப்புப்பாயிரம் இன்மையாலும் பிற வரலாறுகள் இன்மையாலும் அடியாருக்கு நல்லார் உரை போல எல்லோரும் படித்துப் பயனடையுமாறு இல்லாது கற்றோர் மட்டுமே பயன்படத்தக்க சுருக்கவுரையாக இருத்தலாலும் இவருடைய வரலாறு விளக்கம் பெறவில்லை என்று கருதுவதற்கு இடமுண்டு. இருப்பினும் நீர்ப்படை காதையில்,

செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த் தொகை உண்ட ஒன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியு நாளும் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள (சிலம்பு.27:7-10)

என வரும் அடிகளுக்கு அரும்பதவுரைகாரர், *''கூற்றுவன் செல்கின்ற உயிரைக் கவரும் தொழில் பெருகும்படியாக, உயிர்த்தொகை உண்டவனாகிய ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற் றிரட்டியென்று அவற்றோடே கூட்டியெண்ண தேவாசுர யுத்தம் பதினெட்டாண்டிலும், இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டுவனும் கனக விசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தவெண்ண''* என்று உரை எழுதியுள்ளார். இந்த யுத்தங்களை இதே முறையில் கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார்,

தேவாசுர ராமாயண மாபாரதம் உளவென்று
ஓவா உரை ஓயும்படி உளதப்பொரு களமே (களம் பாடியது-9)

என்றுரைப்பார். இதைக்கொண்டு செயங்கொண்டாரே அரும்பத உரைகாரர் என்று சிலர் குறிப்பிடுவர். ஆயின் இது பொருத்தமன்று. செயங்கொண்டார் முதற் குலோத்துங்கன் காலத்து வாழ்ந்தவர். அரும்பதவுரைகாரர் இராசராசன் காலத்து வாழ்ந்தவர். இருவரும் ஏறக்குறைய 80-100 ஆண்டு இடைவெளியிட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். அன்றியும் ''தேவாசுர யுத்தம் என்ற கருத்து தமிழ் இலக்கியப் பரப்பில் சிந்தாமணியிலும்'' வேறுயிடங்களிலும் வருவதால் அரும்பதவுரைகாரர் செயங்கொண்டார் எனக் கொள்வதில் பொருத்தமின்மை புலப்படும்.

அரும்பதவுரைகாரரின் காலம்

அரும்பதவுரையாசிரியர் காலத்தை அறிவதற்குத் திட்டமான ஆதாரங்கள் இல்லை. இருப்பின் உரையின் தொடக்கத்தில் விநாயகர் வணக்கம் இருப்பதைக் கொண்டு இவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்று இலக்கிய வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவர். ஆயின் இதில் ஐயப்பாடு உள்ளது. இவர் மேற்கோள் காட்டும் இலக்கியங்களில் புறப்பொருள் வெண்பாமாலை முதலிடம் பெறுகிறது. அந்நூலின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு ஆதலின் இவர் ஒன்பதாம் நூற்றாண்டு எனக் கூறலாம். அத்திரி - எனும் சொல்லுக்கு கழுதை என்று திவாகரமும், ஒட்டகம் என்று பிங்கல நிகண்டும் கூறுகின்றன. ஆனால் திவாகரமும், பிங்கலமும் 9,10 ஆம் நூற்றாண்டினது. 9-ஆம் நூற்றாண்டில் கழுதையாக இருந்த சொல்லினை 12-ஆம் நூற்றாண்டில் ஞானமிர்தவுரை 'குதிரை' என்று குறிப்பிடுகிறது. அப்படியானால் 'கோவேறு கழுதை' என்று சொல்லுகிற அரும்பத உரைகாரர் காலம் 9-க்கும் 12-க்கும் இடைப்பட்ட காலம் ஆதலின் அரும்பதவுரைகாரர் 11-ஆம் நூற்றாண்டு என்றும் கருதலாம்.

அரும்பத உரைகாரரின் சமயம்

உரைகாரரின் சமூகப் பின்னணி பற்றி ஆய்கையில் சமயம் முதலிடம் பெறுகிறது. அவ்வகையில் இவ்வுரையாசிரியர் தம் உரைத்தொடக்கத்தில் விநாயகர் காப்பாக ஒரு வெண்பாவை அமைத்துள்ளார். அது,

கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி - அரும்பவிழ்தார்ச்
சேரமான் செய்த சிலப்பதிகார ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி (கடவுள் வணக்கம்)

என்பதாகும். இதில் இவர் சைவ சமயத்தினர் என்று சொல்லுவர். இதற்கேற்ப ''நெடுவேலோன் குன்று - திருச்செங்கோடு'' என்று குறிப்பிடுவதால் இவர் சைவ சமயம் சார்ந்தவர் எனலாம். மேலும் இவர் ''அரங்கம் - திருவரங்கம்'', ''ஸ்ரீகோயில்'', ''மங்கல மடந்தைக் கோட்டம்'', ''ஆயிழைக் கோட்டம்'' என்று வைணவம், சமணம் சார்ந்த பல்வேறு கோயில்களைக் குறிப்பிடுவதால் இவர் அனைத்து சமய நெறிமுறைகளும் அறிந்தவர் எனக் கருத இடமுண்டு.

உரை எழுதுவதற்கான நோக்கம்

இவர் தோன்றிய காலம் சைவ சமயம் பெருமலர்ச்சி பெற்று வந்த சோழர் காலம். அதாவது முத்தமிழிலும் பெரும்புலமை எய்தியிருந்த இப்பேராசிரியர், தம் புலமை வெளிப்பாட்டுக்குத் தக்க முத்தமிழ்த்திறம் வாய்ந்த காப்பியம் எதுவும் வேறு இல்லாமையால் சிலப்பதிகாரத்தை உரை இயற்றுவதற்கு உரியதாகக் கொண்டார் என்பது இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதக் காரணம் எனக் குறிப்பிடலாம். இளங்கோவடிகள் செய்த காப்பியமும் விரிந்த சமய நோக்குடையதாய் இருந்தமையும் இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதத் தேர்ந்துகொண்டார் எனலாம்.

முடிவுரை

காலத்தால் முற்பட்ட சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய பெருமைக்குரியவர் அரும்பதவுரைகாரர் என்று முதன்முதலில் குறிப்பிட்டவர் அடியார்க்கு நல்லார் ஆவார். அவரது வரலாற்றை ஆராயுமிடத்து அவர் காலம் 11-ஆம் நூற்றாண்டு என்பதும், சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதும் பெறப்படுகிறது. மேலும் அவர் காலத்தில் முத்தமிழ்த் திறம் வாய்ந்த காப்பியம் சிலம்பைத் தவிர வேறு ஏதும் இல்லாமையே அவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதத் தோற்றுவாயாக அமைந்தது எனலாம்.

துணைநூற்பட்டியல்

- சாமிநாதையர் உ.வே (உரை.), 2009(ஏ.ப.), சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட் நகா, சென்னை.
- புலியூர்க்கேசிகன் (உரை.), 2009, கலிங்கத்துப்பரணி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
- மலர்விழி மங்கையர்க்கரசி இராம(உரை.), 2008, சீவக சிந்தாமணி மூலமும் உரையும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்

பெ.ராஜா
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 017.

ஒரு நாட்டின் வரலாற்றினை நன்கறியத் துணைபுரிவனவற்றுள் சிறப்பு மிக்கவை அந்நாட்டு இலக்கியங்கள். சங்க இலக்கியங்களில் மூவேந்தர்கள், சிற்றரசர்கள், வள்ளல் பெருமக்கள் ஆகியோர் பற்றிய செய்திகளும் அந்நாளைய பழக்க வழக்கங்களும், பழம் பெரும் நகர்கள் பற்றிய குறிப்புகளும் இன்னபிற செய்திகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவற்றுள் நெய்தல் பாடல்களுள் காணப்படுவனவும், ஏனைய திணைகளில் காணப்படும் நெய்தல் நிலச் சார்புடையனவுமான செய்திகளில், குறிப்பிடத்தக்கன ஈண்டு அடையாளப்படுத்தப் படுகின்றன. நெய்தல் நிலத்தே பல போர்கள் நடந்துள்ளன. நெய்தல் நிலம் போர்க்களமாயிருந்ததற்குச் சாலச் சிறந்த இடமாகும். 'தும்பை தானே நெய்தலது புறனே' என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையில், *'இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலின் அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுமாதலானும், அந்நிலம் கடல் சார்ந்த வழியல்லது இன்மையானும்'* இளம்பூரணரும் போர்க்களமாயிருந்ததற்கு நெய்தலே சாலச் சிறந்தவிடம் என்ற கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். பல போர் நிகழ்ச்சிகள் நெய்தலில் காணப்படுகின்றன. அப்போர் நிகழ்ச்சிகளையும், பிற சிறப்புச் செய்திகளையும் ஈண்டுக் காண்போம்.

மன்னர்களும் போர் நிகழ்ச்சிகளும்

நெய்தல் நிலத்துக்குரிய புன்னைமரமானது திதியன் என்னும் குறுநில மன்னனின் காவல் மரமாயிருந்துள்ளது (அகம். பாலை. 45:9-11). அன்னி என்னும் குறுநில மன்னன் வலிமிக்க ஊர்களையும், வேற்படையினையுமுடைய எவ்வியென்னும் சிற்றரசனது அறிவுரையையும் பொருட்படுத்தாமல், அத்திதியனைக் "குறுக்கைப் பறந்தலை" என்னுமிடத்தே எதிர்த்து அவனது காவல் மரமாகிய அப்பழம்பெரும் புன்னையைத் துணித்தான். அதனைப் பொறாத திதியன், அன்னியைக் கொன்றொழித்தான். குறுக்கைப் பறந்தலை நெய்தல் நிலத்தின் சிறந்த பதியெனவும், நெய்தல் நிலத்திற்குரிய மரமான புன்னையைக் காவல் மரமாகக் கொண்டிருந்தான் என்ற காரணத்தால் திதியன் நெய்தல் நிலத்தையுள்ளிட்ட நாட்டின் தலைவன் எனவும் கொள்ளலாம்.

திருமுடிக்காரி

முள்ளூரை ஆண்ட குறுநில மன்னன் மலையமான் திருமுடிக்காரி என்று வழங்கப்பட்டான். இவனது குதிரையின் பெயரும் காரியே. இவன் வல்வில் ஓரியென்பானொடு போர்புரிந்து அவனைக் கொன்ற பெருமையுடையவன். முள்ளூர்க்கு மன்னனாகிய இக்காரி, தன் குதிரையின் துணையுடன் இரவோடிரவாக ஆயர்தலைவர்களின் பசுக்களைக் கவர்ந்ததும் அவர்கள் வருந்திய நிலையினையும் நற்றிணைப் பாடலொன்று குறிப்பிடப்படுகிறது.

மா இரு முள்ளூர் மன்னன் மாஊர்ந்து
எல்லித் தரீஇய இனநிரைப்
பல் ஆன் கிழவரின் அழிந்த... (நற். 291:7-9)

தித்தன் வெளியன் கடற்றுறை

வீரை என்பது கடற்றுறை. *"அடுபோர் வேளிர், வீரை முன்துறை"* (அகம் 206:13-14). மருதத்திலும் போரில் வல்ல வேளிர்களுள் சிறந்த வெளியனின் மைந்தன் தித்தனுக்குரியது இத்துறை

"வீரை வேண்மாள் வெளியன் தித்தன்" (நற்.58). இத்துறையின்கண் பரந்துவிரிந்து கிடக்கும் உப்பளத்தில் விளைந்த வெள்ளுப்பு, குன்றெனக் குவிந்து கிடக்கும். அவ்வீரை நகரின் கண்ணுள்ள முரசுகட்டில்களில் மாலை வேளையில் வரிசையாக விளக்குகள் சுடர்விட்டெரியும் அவ்வரிசையொழுங்கு கடற்கரைக்கண் நிரையுறக் கிடந்து முழங்கும் சங்கங்களைக் காணும். தித்தன் உறையூர்க்கண்ணிருந்து நாடுகாவல் புரிந்தவன் என்பதால் அவ்வீரைத்துறை, சோழ நாட்டுக் கடற்கரையதாகலாம். இவனது துறைமுகப்பட்டினம் கானலம் பெருந்துறை. தன்னைப் புகழ்ந்து பாடிய பாணர்க்குப் பரிசுபல அளித்தவன். வீரமிக்க காலாட்படையினை யுடையவன். இவனது பட்டினத்துக்குப் பொன்னை ஏற்றிக்கொண்டு வந்து கொடுத்து, இந்நாட்டுப் பொருள் பல பெற்றுச் சென்ற வணிகச் செய்தியையும் சங்கப் பாடல்களில் காணமுடிகிறது (அகம்.152:5-8).

பெண்கொலை புரிந்த நன்னன்

நன்னன் குறுநில மன்னன் என்பதும் பெண்கொலை புரிந்தவன் என்பதும் சங்க இலக்கியங்கள் வழியே கண்ட வரலாற்றுச் செய்தியாகும். இவன் வேற்படை தாங்கிப் போர்புரிவதில் வல்லவன். விரைந்தோடும் குதிரைப் படையினையுடைய பிண்டன் முதலான சிற்றரசர்களைத் தோற்கடித்தவன் வேந்தரின் மகளிர் கூந்தலைக் களைத்த கொடுமையையும் பின்வரும் பாடலின் வாயிலாக அறிய முடிகிறது.

... பொற்புடை
விரிஉளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியின் கொடிதே... (நற். 270:7-10)

அம்பலும் அழுங்கல் ஊரும்

புறையாறு என வழங்கும் புறந்தை புன்னை மரங்கள் நிறைந்த சோலைகள் மலிந்த சோழ நாட்டுக் கடற்கரை நகர். பெரியன் என்னும் குறுநில மன்னனின் தலைநகர். பெரியன் குதிரைகளைப் பூட்டிய தேர்ப் படையையுடையவன். தன்னை நாடி வருபவர்களுக்குப் பரிசுகள் பல வழங்கும் வள்ளல் தன்மையுடையவன் என்று இப்பாடல் குறிப்பிடுகிறது.

ஓடை ஒண்சுடர் ஒப்பத் தோன்றும்
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நல்தேர்ப் பெரியன் விரிஇணர்ப்
புன்னைஅம் கானல் புறந்தை... (அகம்.100:10-13)

விச்சிக்கோ

இவன் குறுநில வேந்தன், விற்போரில் சிறந்து விளங்கியவன். வேந்தரோடு போர்க்களத்தில் இருந்து போர் புரிந்தகாலை போர்ப் பரணி பாடப் பாணர்கள் சென்றனர். கடுமையாகப் போர் இருந்ததால் காண்பவர்கள் நிலையை மாற்ற சிங்கப்பார்வை இருபுறமும் பார்த்தனர். அங்கெழுந்த பேரொலி, ஆரவாரம் மிக்க குறும்பூர் என்னும் ஊரில் எழும் பேரொலியினும் மிக்கு முழங்கியது என்று குறுந்தொகைப் பாடலொன்று (328:5-8) கூறுகின்றது. இந்த விச்சிக்கோ புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் புலவர்கள் பாடிப்புகழும் வள்ளல் விச்சிக்கோவாக இருக்கலாம் என உ.வே. சாமிநாதையர் கருதியுள்ளார்.

இராமாயண இதிகாசச் செய்தி

இராவணனுடன் போர்புரிந்து சீதையை மீட்டுவர இராமன் இலங்கை மாநகர்க்குச் சென்ற செய்தி நெய்தல் நிலப் பாடல்களில் வரலாற்றுச் செய்தியாக (அகம் 70:13-17) இயம்பப்படுகிறது. இராமன் இலங்கையை நோக்கித் தன் சேனையோடு புறப்படுதற்கு முன்னர்ப் பழமைமிக்க திருவாணைக்கரையில் (தனக்கோடியில்) ஆலமரத்தடியில் தங்கித் தம் துணைவர்களோடு ஆலோசனை நடத்தியபோது மரத்தில் தங்கிய பறவைகளின் ஒலி இடையூறாயிருந்தமையால்

பறவைகளின் ஒலியை நிறுத்தினர் என்ற இதிகாசச் செய்தியும் அந்தக் கோடியக்கரை பாண்டியர் ஆட்சியில் அன்று இருந்ததென்ற உண்மையும் காணமுடிகிறது.

வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழுங்கிரும் பவ்வம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலிஅவிந் தன்று (அக.70)

பதிகளும் பட்டினங்களும் - அலைவாய்

திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரைக்கண் பொலியும் முருகன் திருக்கோவிலான திருச்செந்தூர் திருச்சீரலைவாய் என இலக்கியத்தில் குறிப்பிடப் பெறுகிறது. அலைகள் மிகுந்து காணப்படுவதால் இதற்கு திருச்சீர் அலைவாய் எனப்படும். உழவனின் ஓசைக்கு அஞ்சிய மயில் அலைகளின் ஓசை அதிகம் உள்ள இடத்தில் வந்து தங்கின அச்சீரலைவாயமர்ந்தவன் வன்மைமிகு முருகன் என்று அகப்பாடல் 'திருமணி விளக்கின் அலைவாய்ச்' (அகம் 266:16-21) குறிப்பிடுகிறது.

குடந்தை

சோழ மன்னர்கள் வேற்படையில் சிறந்தும் மாற்றரசர்களை மாய்த்தும் பல வெற்றிகளைப் பெற்றனர். மன்னர்கள் பலர் தம்மிடம் தோற்றும் அவர்கள் அரசிறையாகப் பெற்ற பெருஞ்செல்வத்தை பாதுகாப்புடன் குடவாயில் நகரில் வைத்திருந்த செய்தி என்பது குறிப்பிடத்தக்கதாகும் என்று பின்வரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

...வெல்வேல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய (அகம்.60:12-14)

கொற்கை

கொற்கையைத் துறைமுகமாய்க் கொண்டு ஆண்ட மன்னன் பாண்டியன். இவனது தலைநகர் மதுரை. மலை போன்ற மாடமாளிகைகளைக் கொண்டும் கூடல் நகர் என்றும் பெயர் பெற்றது. அம்மாநகரில் பாண்டியன் நெடுஞ்செழியன் வெற்றி எனும் பெரிய வேற்படையும், யானைப் படையும், நெடிய தேர்ப்படையும் என இவ்வகை வலிமை படைத்த படையுடன் பல மன்னர்களைத் தோற்கடித்த செய்தியும் கொற்கை நகர் பற்றிய குறிப்பும் குறிப்பிடத்தக்கன (அகம் 296:10-12). மேலும் (அகம். 201:2-4, அகம். 27:6-9) ஆகிய பாடலடிகள் பாண்டியரின் அறநெறி பிறழாது செங்கோல் செலுத்திய சிறப்பையும் வெண்கோட்டு வெற்றிக் களிறுகளைத் திறையாகப் பெற்ற செய்தியையும் கொற்கையின் வரலாற்றினையும் பாண்டிய மன்னர்களின் போர்த்திறனையும் அறிய உதவுகின்றன.

பேர்இசைக் கொற்கைப் பொருநன் வெண்வேல்
கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்
மலைபுரை நெடுநகர்க் கூடல் (அகம்.296)

... பொன்னின்
அவிர்எழில் நுடங்கும் அணிகிளர் ஓடை
வினைநவில் யானை விறற்போர்ப் பாண்டியன் (அகம். 201)

பொறையன் தொண்டி

சேரநாட்டின் ஒப்பற்ற துறைமுகமாகத் தொண்டி விளங்கியது. இது அயல்நாடுகளுடனான வணிகத் தொடர்பு கொண்டதாகும். உலகம் போற்றக் கூடியதாக அமைந்தது தொண்டி

துறைமுகமாகும் (அகம்.60:8), பொறையன் தொண்டி என்றும் (நற்.8:9), குட்டுவன் தொண்டி (குறு.128:2) பொறைநாடு என்றும், வெண்தந்தங்கள் பொலியும் பெருங்களிற்றுப் படையினையுடையவன் (அகம் 290:12), திண்ணிய தேர்ப்படையுடன் திகழ்ந்தவன் என்றும் (அகம் 60:8), குதிரைப் படையினையும் தேர்ப் படையினையும் கொண்டு விளங்கிய குட்டுவன் என்றும் அறிய முடிகின்றது(அகம். 270:8-9). மேலும், தொண்டி இன்றும் குறும்பொறை நாட்டின் ஒரு சிற்றூராகவே இருந்து வருகிறது. இவ்வகையானும் பொறையன், குட்டுவர் குடவர் பொறையர் கடுங்கோ இவர்கள் சேர அரசகுடி வகைகளில் ஒருவன் என்ற கருத்தினை ஔவை துரைசாமிப் பிள்ளை நற்றிணை விளக்க உரையில் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பவத்திரி

என்றைக்கும் எக்காலத்தும் கெடாத இனிமையான புகழினையும், பொன்னவிர் பூணினையும் பூண்டிருந்த திரையன் என்ற மன்னன் பல்வண்ணப் பூக்கள் பூத்துப் பொலிந்த பொழில்பல சூழ்ந்த பவத்திரி நகரைத் தலைநகராய்க் கொண்டு செங்கோல் செலுத்திச் சிறப்புற ஆட்சி செய்த செய்தியைப் பின்வரும் பாடலடிகளில் காண முடிகிறது.

செல்லா நல்லிசை பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி... (அகம்.340:6-7)

முடிவுரை

நெய்தல் நிலம் என்பது பரதவர்களின் வரலாற்றினைச் சுட்டும் நிலம் மட்டுமன்று அதற்கு அப்பாற்பட்ட நிலையினைப் பார்க்கும்போது, நெய்தல் நிலத்தில் நடந்த போர்நிகழ்ச்சிகள், நெய்தல் நிலத்தை ஆண்ட மன்னர்கள், மற்றும் குறுநில மன்னர்கள், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஊர்கள், குறிப்பிடத்தக்க சிறப்பு நிகழ்ச்சிகள் இதுபோன்ற செய்திகளும் நெய்தல் நிலத்தை மையப்படுத்திய சங்கப்பாடல்களின்வழி அறியப்பெறுகின்றன.

துணைநின்றவை

- சுப்பிரமணியன், ச.வே.(உரை.), 2013(12ஆம் பதிப்பு), *தொல்காப்பியம்,* மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8.
- ……,(உரை.), 2003(மு.ப.), *பத்துப்பாட்டு,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- தமிழண்ணல்(உரை.), 2002(மு.ப.), *குறுந்தொகை,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- மகாதேவன் கதிர்.(உரை.), 2003(மு.ப.), *நற்றிணை,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- மீனவன் நா. (உரை.), 2004(மு.ப.), *அகநானூறு,* கோவிலூர் மடாலயம், கோவிலூர்.
- முத்துக் கண்ணப்பன் தி., 1978, *சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்,* அதிபந்தர் பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை

முனைவர் **மா.ஆசியாதாரா**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-18.

இடைச்சொற்கள் என்பன பெயர் வினைகளைச் சார்ந்து இயங்குவன எனினும், இடைச்சொற்கள் இன்றி மொழியில் சொல்லுருவாக்கங்கள் நிகழ்வதில்லை. காலந்தோறுமான தமிழ் இலக்கண நூல்களில் இடம்பெறும் இடைச்சொற்கள் குறித்த இயல் அமைப்புகளை நோக்கும்வழி இடைச்சொற்களின் இன்றியமையாமையை அந்நூல்கள் எவ்விதம் புலப்படுத்தியிருக்கின்றன என்பதை விளக்க இக்கட்டுரை முற்படுகிறது.

இடையியல் மாற்றங்கள்

தமிழ் மரபிலக்கண நூல்கள்; சீகன்பால்கு, பெஸ்கி, ரேனியஸ், கிரால் உள்ளிட்ட ஐரோப்பியர்களின் கற்பித்தல் இலக்கண நூல்கள்; தற்காலத் தமிழுக்கான இலக்கண நூல்கள் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இடையியல் தனது இயல் இருப்பு நிலையிலும் உள்ளடக்க நிலையிலும் காலந்தோறும் மாற்றம் கண்டுள்ளது.

அம்மாற்றங்கள்,

1. சொல்லதிகார இடையியல் இருப்புநிலை மாற்றம்
   I. வரிசைமுறை மாற்றம்
   II. தனிஇயல் அமைக்காமை
2. இடையியல் உள்ளடக்க நிலை மாற்றம்
   I. பிற சொற்றொகுதிகளை இணைத்தமை
   II. தனிச் சொற்கள் (பட்டியல்) குறிப்பிடப்படாமை

என்ற நிலைகளில் காணப்படுகின்றன.

சொல்லதிகாரத்தின் இடையியல் இருப்புநிலை மாற்றம்

தமிழின் மரபான சொல்லதிகார இயல் வைப்பு முறை பெயர், வினை குறித்த இயல்களுக்குப் பின்னர் இடையியலை வைத்து விவரிப்பதாகும். பின்வந்த இலக்கண நூல்கள் இவ்வரிசை மாறிய வைப்பு முறை ஏற்படுத்தியும், இடைச் சொற்களுக்குத் தனி இயல் ஏற்படுத்தாமலும் மாற்றத்தை உண்டாக்கியுள்ளன.

தொல்காப்பியம் இடையியல் வைப்புமுறைக்கான காரணத்தை இது பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றுதலின் அவற்றின்பின் கூறப்பட்டது (1986:1) என்று தெய்வச்சிலையார் கூறுகிறார். சார்ந்து வருதலால் அவை சிறப்புடையன அல்ல, முக்கியத்துவம் குறைந்தன (less important,1945:196) என்று குறிப்பிடப்பட்டன. தற்காலத் தமிழில் பெயரடை, வினையடை என்பன தனிச் சொல்வகுப்புகளாக நிலைபெற்றுவிட்ட நிலையில் பெயர், வினை, பெயரடை, வினையடை என்று தனித்தியங்கும் சொற்பிரிவுகளின் விளக்கத்திற்குப் பின்னரே இடை குறித்து விவரிக்கும் முறை கடைபிடிக்கப்படுகிறது.

எனினும், ரேனியஸ் (1846) தனது தமிழ் கற்பித்தல் இலக்கண நூலில், சொல்லியலின் முதன்மைப் பகுதியாக இடைச்சொல் பற்றி விளக்கிவிட்டு, அதன் பிறகே பெயர், வினை பற்றிய இயல்களை அமைக்கிறார். பிற சொல் வகைகளின் உருவாக்கத்திற்கு இடைச்சொற்களே மிகவும் உறுதுணையாயுள்ளன எனவும் இவ்இடைச் சொற்களை முதலில் கற்று அறிவு பெறுவது, மொழிக் கற்றலை எளிதாக்கிவிடும் (1846:37) என்றும் கூறுகிறார். விதி, விளக்கமுறை இலக்கண நூல்களில் சார்ந்து இயங்காதன என்ற நிலையில் இடைச்சொற்கள் பெற்ற இரண்டாம் நிலையும் கற்பித்தல்

நூலில் பிற சொற்பிரிவுகளின் தோற்றத்திற்கு இன்றியமையாதது என்ற நிலையில் அவை பெற்ற முதன்மை நிலையும் கருதத்தக்கன.

எனினும் ரேனியஸின் இயல் வைப்புமுறை பரவலாகப் பின்பற்றப்படவில்லை. ஏனெனில் பெயர், வினைகள் உருவாக்கத்திற்குத் தேவையான இடைச்சொற்கள் அவ்வவ் இயல்களிலேயே விளக்கிக் கூறப்பட்டுவருகின்றன.

மரபு இலக்கண நூல்களிலும் கூட இடையியலுக்கெனத் தனி இயல் அமைக்கப்படாமல் உள்ளது. இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியன இடைச்சொல்லுக்கெனத் தனி இயல் அமைக்கவில்லை. இலக்கணக் கொத்து, முத்துவீரியம் ஆகியன ஒழிபியலிலும் சுவாமிநாதம் எச்சமரபிலும் இடைச்சொல் குறித்துக் கூறியுள்ளன. இந்நூல்கள் அனைத்தும் வடமொழிச் சார்பின என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெஸ்கி எழுதிய கொடுந்தமிழ் (1728) இலக்கண நூலிலும் இடையியலுக்கெனத் தனி இயல் அமைக்கப்படாமல் நான்காவது இயலான தொடரியலின் ஆறாவது பகுதியாக இடைச்சொற்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பிற சொற் பிரிவுகளும் இடைச்சொல் பகுதியில் இடம் பெற்றமை, தொடர்ப் பயன்பாட்டு விளக்கமுறை ஆகியன இதற்குக் காரணங்களாகின்றன.

இக்காலத் தமிழ் மரபு நூலில் 'சில ஒட்டுகள்' என்ற தலைப்பில்தான் இடைச்சொற்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒட்டுக்களை முன்னொட்டு, பின்னொட்டு, உள்ளொட்டு எனப் பிரித்து வடமொழியிலிருந்து கடன்பெற்ற சொற்களில் முன்னொட்டுக்கள் உள்ளன என்றும் கூறுகிறார். பின்னொட்டுக்களே தமிழில் உள்ளன என்று கூறுபவர் -உம், -ஓ, -ஆவது ஆகியனவற்றை விவரிக்கிறார். இவற்றில் உம், ஓ என்பனவற்றைத் தமிழிலக்கண நூல்கள் இடைச்சொற்கள் எனக் கூறும் என்கிறார்(2011:266). ஆக,மொழியியல் வளர்ச்சி அடைந்த தமிழ்ச் சூழலில் இடைச்சொல்லிற்கான தனி இயல் அமைக்கப்படாமல் 'ஒட்டுகள்' என்ற பிரிவு முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

இடையியல் உள்ளடக்க நிலை மாற்றம்

குறிப்பிட்ட வகை இடைச்சொற்களின் பட்டியலைப் பொருண்மையுடன் கூறும் மரபாகவே தமிழ் இலக்கண நூல்களில் இடையியல் அமைக்கப்பட்டு வந்திருந்தது.

தொல்காப்பியத்தின்படி இடைச்சொற்கள் ஏழு வகையினதாகவும் நன்னூலின்படி எட்டு வகையினதாகவும் அமைகின்றன.

இடைச்சொல்லிற்கான தனி இயலில் தொல்காப்பியம், இலக்கண விளக்கம் ஆகியன அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பிற் பொருள் செய்வன குறித்தும்; நன்னூல் அசைநிலை, இசைநிறை, தத்தம் பொருள, குறிப்பு என்பனவற்றையும்; நேமிநாதம் தத்தம் குறிப்பில் பொருள் செய்வன குறித்தும் விவரித்துள்ளன. ஏனைய வகைகள் எழுத்ததிகாரம் (சாரியை, இடைநிலை, விகுதி), சொல்லதிகாரப் பிற இயல்கள் (சாரியை, விகுதி, வேற்றுமை, இசைநிறை), பொருளதிகாரம் (ஒப்பு உருபு) ஆகியவற்றில் விளக்கப்பட்டுள்ளன. எனவே மரபான இடையியல் அமைப்பு தத்தங் குறிப்பில் பொருள் செய்வன, அசைநிலை, இசைநிறை ஆகியனவற்றை விவரிப்பதாகவே உள்ளது.

நன்னூல் கூறும் எட்டு வகைகளைக் குறிப்பிடும் கிரால் அவற்றை ஒரு குழப்பமான பட்டியலாகக் கருதுகிறார் (1955:55). அவற்றில் பெரும்பாலானவை வினையடைகள், முன்னொட்டுக்கள், இணைப்பிடைச் சொற்கள் என எண்ணுகிறார். மேலும், ஐரோப்பியர்கள் எழுதிய இலக்கண நூல்களில் பிற புதிய சொல் வகுப்புகளும் இடைச்சொல் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளன. சீகன்பால்கு (1716) ஏழாவது இயலாக அமைத்துள்ள '*particles*' இயலில் பின்னுருபுகள், வினையடைகள், வியப்பிடைச் சொற்கள், இணைப்புச் சொற்கள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. பெஸ்கி முதற்கொண்டு பிறரும் இம்முறையைப் பின்பற்றியுள்ளனர். ஆங்கிலத்தின் முன்னொட்டுக்கள், பின்னொட்டுக்கள், இணைப்பிடைச் சொற்களுக்கு இணையான சொற்களைத் தமிழ் இடைச்சொற்களில் கண்டறிந்தும் கூறியுள்ளனர்(1891:113-135). வியப்பு,

இணைப்புச் சொற்கள் இடைச்சொற்களில் அடங்கும் எனினும் வினையடைச் சொற்களை இடையியலில் அமைத்துள்ளமை உற்றுநோக்கத்தக்கதாகும். தமிழில் தனிச்சொற் பிரிவாக அமையாத, தமது மொழிகளில் தனிச்சொற் பிரிவாக அமைந்தவற்றை ஒன்றிணைத்து இடையியலில் அமைக்கின்றனர். இவற்றை மோ.இசரேயல் இடைச்சொற்கள் எனக் கொள்ளாமல் ஒருநிலைச் சொற்கள் எனக் கொள்கிறார் (1977:16).

இக்காலத் தமிழ் இலக்கணம் நூலில் தனிச்சொல் நிலையில் அமைந்தவை, தனிச்சொல் போலத் தோன்றினாலும் விகுதி போலச் செயல்படுவன, மிதவை ஒட்டுகள், விகுதிகள் என்று இடைச்சொற்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் அடங்காதவற்றை ஏனையவை எனப் பிரித்துள்ளார் (2002:30-32). உரையாடல் குறிப்பான்கள், விளிசார் ஒட்டு, வியப்புக் கிளவிகள், நிரப்பிகள் போன்றனவும் இடைச் சொற்களில் அடக்கப்பட்டுள்ளன (2002:115-122).

இடையியலுக்கான இடைச்சொற்றொகுதியைக் கற்பித்தல் மற்றும் விளக்கமுறை இலக்கண நூல்கள் பட்டியலாகத் தரவில்லை. சீகன்பால்கு தொடங்கி மு.பரமசிவம் வரை இடைச்சொற்களைத் தொடரில் அமைத்து அவற்றின் செயல்பாட்டு நிலையை விளக்குகின்றனர்.

மாற்ற விளைவுகள்

மாற்றம் கண்ட அமைப்புதான் வளர்ச்சி அடைந்ததாகக் கருதப்படும். தமிழில் இடைச்சொல் என்னும் சொற்பிரிவு இயல் இருப்புமுறை, உள்ளடக்க நிலை ஆகியவற்றில் காலந்தோறும் மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. இம்மாற்றங்களின் தீவிரத்தால்தான் "இடைச்சொல்லுக்குப் புதிய வரையறை வேண்டும்"(2011:ix) என்ற கருத்து இந்நூற்றாண்டில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு இலக்கண நூலில் இடையியல் என்று தனி இயல் அமைக்கப்பட்டிருந்தாலும் இடைச்சொற்கள் பல்வேறு இயல்களில் விவரிக்கப்படுவதையும் அவற்றின் தொடரியல் பங்களிப்பினையும், புதுச்சொற்கள் பெருக்கத்தினையும் கருத்திற்கொண்டு அவ்வரையறை அமைக்கப்பட வேண்டும்.

துணைநூற்பட்டியல்

- இசரேயல், மோ., இடையும் உரியும், சிந்தாமணி வெளியீடு, 1977.
- சிவலிங்கனார், ஆ., தொல்காப்பியம் - சொல்லதிகாரம் (உரைவளம்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
- சுப்பிரமணியர், ச.வே., (ப.ஆ)., தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2007.
- நுஃமான் எம்.ஏ., அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம், புத்தாநத்தம், 2007.
- பரமசிவம், கு., இக்காலத் தமிழ்மரபு, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி, 2011.
- பொற்கோ, இக்காலத் தமிழ் இலக்கணம், பூம்பொழில் வெளியீடு, சென்னை, 2002.
- *Arden, A.H., A Progressive Grammar of Common Tamil, CLS, Madras, 1891.*
- *Bartholomeo Zegenbalg, Grammatical Damulica, 1716.*
- *Charles graul, D.D., Outline of Tamil Grammar, Leip Zig, 1855.*
- *Constanins Joseph Beschi, A Grammar of the common dialect of the tamul language called* கொடுந்தமிழ், *Madras, 1848.*
- *Rhenius, C.T.E., A grammar of the Tamil language with an appendix, Madras, 1936.*
- *Subrahmanya sastri, P.S., Tolkappiyam - collatikaram - with an English commentary, Annamalai University, Annamalai Nagar, 1945.*

இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்வுதழ்

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018

IIJIF

INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR

DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301

office@iijif.com
https://iijif.com/

This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE

OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]

THIS CERTIFICATE IS PRESENTED TO

Inam: International E-Journal of Tamil Studies

e-ISSN: 2455-0531

The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.

Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321

MANAGER

ஆ.மணி
அ.மோகனா
இரா.இராஜா
கி.சங்கரநாராயணன்
ப.திருஞான சம்பந்தம்
மு.நாகராஜன்
விஸ்வேஸ்வரன்
மௌ.அஸ்கர் அலி
மா. உமாமகேஸ்வரி
சு.பேச்சியம்மாள்
கு.தனலெட்சுமி
அ.பிரீதா
மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி
கு.சரஸ்வதி
இரா.வைதேகி
சி.யுவராஜ்
ந.மாலதி
இரா.பிரசன்னா
ப.மணிகண்டன்
ரா.ராஜராஜன்
நா.மலர்விழி
சே.செந்தமிழ்ப்பாவை
பெ.குபேந்திரன்
பெ.ராஜா
மா.ஆசியாதாரா
வி.மல்லிகா

இல.இராஜதுரை
க.தேவி
மீ.கோமதி
க.ரேவதி
வீ.மீனாட்சி
ம.பெட்ரிக் ஜெபராஜ்
ப.புவனேஸ்வரி
இரா.நித்யலெட்சுமி
சே.முனியசாமி
அ.அனேஜா
வி.வசந்தா
அ.புவியரசு
தி.நிரஞ்சனி
மா.யோகராஜ்
யே.டிலானி
மொ.சபீதாபானு
கா.தினேஷ்
ஆ.ஷைலா ஹெலின்
ம.சந்துரு
வசந்தமணி
பி.விஜி
த.சத்தியராஜ்
மா.பரமசிவன்

Inam ISSN : 2455 - 0531

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

An Internationally Refereed e_ Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி

முனைவர் த.சத்தியராஜ்

ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2018 மலர் : 4 இதழ் : 13

May 2018 Volume IV Issue 13

உள்ளே ...

தொகுதி - ஒன்று

தமிழ்ச் செவ்வியல்

ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?

முனைவர் ஆ.மணி | 4

பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்

முனைவர் அ.மோகனா | 12

யாப்பியலும் கணக்கியலும்

முனைவர் இரா. இராஜா | 19

வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்

முனைவர் கி.சங்கர நாராயணன் | 26

கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்

முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34

முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்

முனைவர் மு.நாகராஜன் | 40

திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை

விஸ்வேஸ்வரன் | 45

தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

திரவியராசா நிரஞ்சினி | 53

சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்

முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59

பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்

முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64

இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை

முனைவர் சு.பேச்சியம்மாள் | 69

பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்

கு. தனலட்சுமி | 75

பழந்தமிழரின் போர் முறைகள்

அ.பிரீதா | 79

முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு

மு.தமிழ்முல்லை | 83

பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்

ரெ. அருணா தேவி | 87

சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்

முனைவர் கு.சரஸ்வதி | 92

எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)

இரா. வைதேகி | 96

...

UGC APPROVED JOURNAL NO: 64244



அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்

சி. யுவராஜ் | 99

அகநானூற்றின் கட்டமைப்பு

ந. மாலதி | 104

குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்

இரா. பிரசன்னா | 107

நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்

ப.மணிகண்டன் | 111

குறுந்தொகை உணர்த்தும் அறம்

முனைவர் ரா. ராஜராஜன் | 115

நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்

முனைவர் நா. மலர்விழி | 119

சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்

பெ.ராஜா | 126

வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை

முனைவர் மா.ஆசியாதாரா | 130

தொகுதி - இரண்டு

காப்பிய இலக்கியம்

ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்

முனைவர் வி.மல்லிகா | 136

நளன்கதை கூறும் இலக்கியங்கள்

Rajadurai.L | 140

பக்தி இலக்கியம்

ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை

க. தேவி | 144

அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்

முனைவர் மீ. கோமதி | 148

ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்

க.ரேவதி | 152

தற்கால இலக்கியம்

'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்

முனைவர் வீ.மீனாட்சி | 155

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு

ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு

ப. புவனேஸ்வரி | 163

தினமணி இதழும் தலையங்கமும்

முனைவர் இரா. நித்யலட்சுமி | 167

வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்

சே.முனியசாமி | 171

பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்

அரியரெத்தினம் - அனேஜா | 182

சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு

வினாயகமூர்த்தி - வசந்தா | 192

சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்காலம்

முனைவர் அ.புவியரசு | 203

செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு

திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்

யேசுஜயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

வள்ளலார் வகுத்த இனம்

கா. தினேஷ் | 230

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்

ஆ. ஷைலா ஹெலின் | 233

வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்

யேசுஜயா டிலானி | 238

ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்

Shandru Mariyadas | 254

பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்

முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்

பி.விஜி | 269

நூல் மதிப்பீடு

சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை

த.சத்தியராஜ் | 277

வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்

முனைவர் மா.பரமசிவன் | 286

...

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 மே 2018 மலர்:4 இதழ்:13 136

மதிப்பிடப்பெற்றது

ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்

முனைவர் **வி.மல்லிகா**
தமிழ் உதவிப்பேராசிரியர்
மொழித்துறை
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி (த.)
கோயமுத்தூர் - 641 028

எந்தவோர் இலக்கியமானாலும் அதற்கு மையமாக விளங்குவது கதைக்களன் எனலாம். அக்கதையானது ஏதேனும் உண்மைப் பொருளையோ, அறக்கருத்துக்களையோ அடிக்கருத்தாய்க் கொண்டு விளங்கும். அத்தகைய கதைகளில் படைப்பாளன் தன் அனுபவத்தினால் தான் வாழ்ந்த காலச்சூழலையும் அடிப்படையாகக்கொண்டு தனது படைப்பில் சிறந்த கருவினை அமைக்கிறான். கதைக் கருவினை வாசகனுக்கு உணர்த்த பல்வேறு நிகழ்ச்சிகளைக் கட்டமைத்து ஒரு படைப்பாக வெளியிடுகிறான். இத்தகைய படைப்புக்கள் காலந்தோறும் சிற்சில மாற்றங்களைப் பெற்று வருவது இயல்பு. அவ்வகையில் தமிழில் புகழேந்திப் புலவர் எழுதியுள்ள நளவெண்பா, வடமொழிக் காப்பியத்தை மொழிபெயர்த்து எழுதிய அதிவீரராம பாண்டியரின் நைடதம், மலையாள மொழியில் உன்னை வாரியர் (UNNAYI WARRIYAR) எழுதிய நளசரிதம் இன்றும் நடப்பில் உள்ள நளன்கதை ஆகியவற்றை ஒப்பியல் நோக்கில் ஆய்ந்து அக்கதைகளையும் கதை வடிவங்களையும் கண்டறியும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

நளன்கதை - பழமை

காப்பியக் கதை பொதுவாகக் கடந்த பல தலைமுறைகளில் வழங்கி வந்ததாக இருக்க வேண்டும். "காப்பியக் கதையென்பது நினைவு தெரிந்த காலத்திலிருந்து நெடுங்காலமாக செவிவழியாக வழங்கி வரும் வீரச்சிறப்பு வாய்ந்த கதை இதிகாசம் அல்லது காப்பியத்தின் பொருளாகும்" என்று எஸ். வையாபுரிப்பிள்ளை கூறுவதாகத் த.ஏ. ஞானமூர்த்தி கூறுவார். (இலக்கியத் திறனாய்வு ப.269).

தருமர் சூதாடி நாடு நகரங்களையெல்லாம் இழந்த நிலையினை நினைத்து வருந்தும்போது தருமனுக்கு அறிவுரை கூறுவது போல நளன்கதை இடம்பெறுகிறது. மகாபாரதத்திற்கும் முற்பட்ட கதையாக விளங்குகிறது. அவ்வகையில் நளன் கதை வேதகாலப் பழமையுடையது. இந்திய இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்தின் கிளைக்கதையாக வழங்கப்படுகிறது.

கதைச் சுருக்கம்

நளவெண்பாவும் நைடதமும் நிடதநாட்டு மன்னன் நளன்கதையைக் கூறுகின்றன. நிடதநாட்டு மன்னன் நான்மாவிந்த நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்து வந்தான். ஒரு நாள் தடாகம் ஒன்றில் ஒரு பொன்சிறகையுடைய அரச அன்னத்தைக் கண்டான். அன்னமானது அச்சமுற்றது. நளன் அன்னத்தின் அச்சத்தைப் போக்கினான். அதனால் அன்னமானது வேந்தே, உனக்கு ஒரு நன்மை செய்ய நினைத்துள்ளேன் என்று கூறியது. பின்னர் வீமனின் மகள் தமயந்தியே உனக்கு ஏற்றவள், அவளை உன்னுடன் இணைப்பேன் என்று கூறியது. அவ்வன்னம் தமயந்தியிடம் தூது சென்று அவள் உடன்பாட்டினையும் பெற்றது. தமயந்தி நளனைப் பற்றி அறிந்து காதல் நோயால் வாடியதைக் கண்டோர் தமயந்தியின் நிலையை வீமனிடம் கூற வீமராசன் சுயம்வரத்திற்கு அழைப்பை விடுத்தான். பல நாட்டு மன்னர்களும், இந்திரன், வருணன், இயமன், அக்கினி முதலான தேவர்களும் வந்திருந்தனர்.

நளனைத் தமயந்தியிடம் தேவர்களுக்காகக் தூது அனுப்பினான். ஆனால் தமயந்தி மறுத்து நளனுருவில் உருமாறி வந்த தேவர்களைக் கண்டறிந்து நளனுக்கு மாலை சூட்டினாள். தேவர்கள் வருத்தத்துடன் வருவதைக் கண்ட கலி, தமயந்தி நளனுக்கு மாலை சூட்டியதை அறிந்து

கோபமுற்றான். தேவர்களை விடுத்து நளனுக்கு மாலையிட்ட தமயந்தியையும் நளனையும் கீழ்மைப்படுத்துகிறேனென்று சூளுரை செய்தான்.

கலி நளனைப் பற்றுவதற்காகக் காலம் பார்த்திருந்தான். நளனும் தமயந்தியும் இரு புதல்வர்களைப் பெற்றுப் பன்னிரண்டாண்டுகள் இன்பமாக வாழ்ந்தனர். ஒரு நாள் நளன் அதிகாலையில் சந்தியாவதனம் செய்யும்போது காலை நன்றாகக் கழுவாததால் கலி நளனைப் பற்றினான். புட்கரன் என்னும் மன்னனை நளனோடு சூதாடக் கலியானவன் ஏவினான். நளனும் அமைச்சர்களது அறிவுரையை நீக்கிச் சூதினை மேற்கொண்டு நாடுநகரத்தை இழந்தான். புட்கரனின் கட்டளையால் நாட்டைவிட்டுத் தன் மனைவி மக்களுடன் காடேகுகிறான்.

கலி காட்டில் பொற்பறவையாக வந்து அமர, நளனும் தமயந்தியும் அதனைப் பிடிக்க எண்ணி, ஒற்றைத் துகிலுடன் இருக்கின்றனர். கலியின் வலிமையால் நளன் தமயந்தியைப் பிரிக்கிறான். கார்க்கோடன் என்னும் பாம்பரசனால் கடியுண்டு உருவம் கருத்தான். பின்பு வாகுவன் என்ற பெயரோடு இருதுபன்னனிடம் தேர்த்தொழிலும் மடைத்தொழிலும் செய்துவந்தான். நளனைத் தேடிச்சென்ற அந்தணன் ஒருவன் நளன் இருதுபன்னனிடம் உள்ளமையைத் தமயந்தியிடம் கூறினான்.

தமயந்தி நளனை வரவழைக்க இரண்டாவது சுயம்வரத்தை அறிவித்தாள். இருதுபன்னனின் தேரோட்டியாக நளன் குண்டினபுரம் சென்றான். வாகுவன் நளன் என்பதைத் தமயந்தி அறிந்தாள். பின் வாகுவன் உருமாறி நளமன்னன் ஆனான். நளன் புட்கரனுடன் மீண்டும் சூதாடித் தன் நாடு நகரங்களை வென்றான்.

நளவெண்பாவும் நைடதமும்

பாரதக்கதையின் கிளைக்கதையான நளன் கதையைப் புகழேந்தியும் அதிவீரராம பாண்டியரும் காப்பியமாக அமைத்துத் தந்துள்ளனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்று கருதப்படும் புகழேந்தியார் வெண்பா யாப்பில் கடவுள் வாழ்த்து உட்பட 3 காண்டங்களையும் 427 பாடல்களையும் கொண்ட நளன் கதையைப் பாடியுள்ளார். இது தமிழ்ப் புலவரால் பாடப்பட்ட சிறுகாப்பியம் எனலாம்.

கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அதிவீரராம பாண்டியர் விருத்த யாப்பில் - பெருங்காப்பியம் என்று கருதத்தக்க அளவில் பாயிரம் உட்பட 1172 பாடல்களால் நைடதம் என்ற தலைப்பில் காப்பியமாகப் பாடியுள்ளார். வியாசரால் எழுதப்பட்ட மகாபாரதத்தில் மூன்றாம் பருவமாகிய வனபருவத்தில் நளன் கதை நளோபாக்கியானம் என்ற பெயருடன் காணப்படுகிறது. இப்பருவமே நளவெண்பாவிற்கு முதல்நூலாக அமைந்தது. இரண்டு காப்பியங்களுமே சூதாட்டத்தினை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளன.

நளசரிதம்

மலையாளத்தில் உன்னை வாரியர் எழுதிய நளசரிதம், 'ஆட்டக்கதா' என்று வழங்கப்படுகிறது. நளசரிதம் கதகளிக்காக எழுதப்பட்ட இலக்கிய வடிவமாகும். மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. நான்கு பகுதிகளை உடையது. நான்கு நாட்கள் இரவு முழுவதும் நடைபெறும். மலையாளத்தில் ரெங்கம் என்று அழைக்கப்படும் காட்சிகள் இடம்பெறும். மேலும் நளசரிதத்தின் வடிவம் ஆட்டத்தோடு சேர்ந்த கதைப்பாடலாகும். இதனைப் பதம் சுலோகம் என்பர். சுலோகம் சமஸ்கிருத வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆட்டம் தொடங்குவதற்கு முன்னதான காட்சிகளை உரையாடல் மூலம் விளக்குவது சுலோகம். சுலோகத்திற்கான ஆட்டம் 'பதம்' என்று வழங்கப்படுகிறது. இவை மலையாளமும் சமஸ்கிருதமும் கலந்த மணிப்பிரவாள நடையில் அமையும்.

முதல்நாள்	- 12 காட்சிகள்	- 33 பதங்கள்	22 சுலோகங்கள்
இரண்டாம்நாள்	- 12 காட்சிகள்	- 28 பதங்கள்	18 சுலோகங்கள்
மூன்றாம்நாள்	- 12 காட்சிகள்	- 28 பதங்கள்	18 சுலோகங்கள்

நான்காம் நாள் - 12 காட்சிகள் - 23 பதங்கள் 12 சுலோகங்கள்

என நான்கு நாட்கள் நடைபெறும். இதில் மொத்தம் 48 காட்சிகள், 112 பதங்கள், 70 சுலோகங்களைக் கொண்டுள்ளது.

கதையமைப்பிலும் காட்சியமைப்பிலும் நளவெண்பா நைடதத்தை விட சற்றே மாறுபட்டுள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு தாளத்தைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. பைரவி, பல்லவி, அனுபல்லவி, செம்படா போன்ற பல இராகங்களில் பாடப்படுகிறது. உன்னைவாரியர் சிறந்த எழுத்தாளராக, இசையமைப்பாளராக, நடன இயக்குனராக எனப் பல்வேறு தோற்றத்தில் பரிணமிப்பதை நளசரிதத்தில் காணலாம். போர் பற்றிய செய்திகள் இதில் இடம்பெறவில்லை. கலியோடு கலிதுவாபரனும் இணைந்து நளனுக்குத் தீங்கு விளைவிக்கின்றனர். இச்செய்தி நளவெண்பா நைடதத்தில் இடம்பெறவில்லை.

இலக்கியங்களில் நளன் கதைக் குறிப்புகள்

1. சிலம்பில் நளன்கதை

சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஊர்காண் காதையில்,

"வல்லாடயத்து மண்ணர சிழந்து
மெல்லிய றன்னுடன் வெங்காணடைந்தோன்
காதலிற்.....
பிரியா வாழ்க்கை பெற்றனை யன்றோ"

(சிலம்பு. ஊர்காண் : 50-57)

என வரும் அடிகள் நளன் கதையினை நினைவூட்டுகின்றன.

2. தேவாரத்தில் நளன்கதை

"விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்து
ஊளங்கொள இருத்திய ஒருத்தன் இடம் என்பர்
வுளங்கெழுவு நாளும் வழிபாடு செய்நள்ளாறே"

(தேவாரம், தொகுதி-2,)

என்று திருஞானசம்பந்தர் தனது தேவாரத்தில் திருநள்ளாற்றுப் பதிகத்தில் நளன்கதையைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

நாடக வடிவம்

இன்றும்கூட நளன் கதை நெல்லிவாசல் திருப்பத்தூர் என்ற இடத்தில் நாடகமாக நடிக்கப்படுகிறது. இதில் சாதாரண மக்களும் பெரும்பாலும் விவசாயிகளும் நடிகர்களாக நடிப்பர். ஊர் மக்கள் கூடும் பொதுஇடத்தில் ஊர் பெரியவர்களால் பந்தல் போடப்பட்ட மண் தரையில் மூன்று நாட்கள் இரவு முழுவதும் நாடகம் நடத்தப்படுகிறது. கோவில் திருவிழாக்களின் போது நளன்கதை, மகாபாரதக்கதை போன்றவை நிகழ்த்தப்படுகின்றன. பாட்டு வாத்தியார் என்பவரே கதைப்பாடல், கதை ஆகியவற்றைத் தீர்மானிப்பார். இந்நாடகத்திற்கான கதைமூலம் முன்னோர்கள் வாய்வழியாகப் பாடப்பட்டது என்றும் கதைப்புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது என்றும் கூறுகின்றனர்.

முடிவுரை

கதைகளும் கதைமூலங்களும் நமது பண்பாட்டுக் கருவூலங்களாகும். அவற்றைப் பதிவுசெய்வதும் இன்றைய தலைமுறையினருக்குக் கொண்டுசெல்வதும் நம் கடமை.

பார்வை நூல்கள்

- உன்னை வாரியர், 1993, நளசரிதம், எஸ்.பி.எஸ்.எஸ். பப்ளிகேசன்ஸ், கோட்டயம்.
- ஞானமூர்த்தி தா.ஏ., 2006, இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

- ……, 1961, நளவெண்பா, பாரி நிலையம், சென்னை.
- ……, 2005, நைடதம், பாரி நிலையம், சென்னை.

தகவலாளர்கள்

தேவேந்திரன், வயது 20, திருப்பத்தூர்.

பாட்டுவாத்தியார், வயது 45, திருப்பத்தூர்.

சுமிதா, வயது 38, சித்தூர்.

மதிப்பிடப்பெற்றது

நளன்கதை கூறும் இலக்கியங்கள்

Rajadurai.L
Research Scholar
ORI & MSS Library
University of Kerala
+91 8281471857, 09656903757
rajadurai0709@gmail.com

எந்தவொரு சிறப்பான படைப்பிலக்கியமும், பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும். அந்த வகையில் மகாபாரதத்தின் கிளைக்கதையாகத் தோன்றிய நளன்கதையானது தமிழ், மலையாளம், வடமொழி எனப்பல மொழிகளில் முழுநூலாக உருப்பெற்றதோடு, தமிழ் மொழியில் தோன்றிய பிற இலக்கியங்களிலும் ஆங்காங்கே எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றை எடுத்துரைக்கும் விதமாகவே இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ் இலக்கியங்களில் நளன்கதை

1. மகாபாரதத்தில் நளன்கதை

பாண்டவர்கள் சூதாட்டத்தில் நாட்டையும், நல்வாழ்வையும் இழந்து கானகத்தில் இருந்த போது வியாச முனிவர் வருகிறார். அவரிடம் தருமன், 'கண்ணிருந்தும் குருடன் போல் சூதாடி நாட்டை இழந்து காட்டை அடைந்தவன் வேறு யாரேனும் உளரோ' என வினவ,

"கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பே காண்"

என்கிறார். இது மன்னவர்களுக்கு இயல்பே. உன்னைப்போல் நளன் என்ற மன்னவனும் இருந்தான் என மகாபாரத 'வனப்பருவத்தில்' வியாசர் நளனின் கதையை எடுத்துரைக்கிறார்.

2. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில், கோவலன் என்னுடைய நெறி நீங்கிய ஒழுக்கத்தால், எல்லோருக்கும் துன்பத்தைக் கொடுத்து, நான் தற்போது அறியாத இடத்தில் நிற்கின்றேன். இப்பழமை வாய்ந்த ஊரில் என்நிலைமையை உணர்த்தி வருகின்றேன், எனக்கவுந்தியடிகளிடம் கூற, அதற்கு அவர் பெண்களும், உணவும் மட்டும் இன்பத்தைத் தருமென எண்ணியப் பலரும் துன்பத்தையே அடைந்தனர். என்கின்ற இடத்தில்,

"வல்லா டாயத்து மண்ணர சிழந்து
மெல்லிய றன்னுடன் வெங்கா னடைந்தேன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீதொடு படுஉஞ் சிறுமைய னல்ல
ளடவிக் கானகத் தாயிழை தன்னை
யிடையிருள் யாமத்திட்டு நீக்கியது
வல்வினை யம்றோ மடந்தைதன் பிழையெனச்
சொல்வது முண்டேற் சொல்லா யோநீ " (ஊர் - 50 முதல் 57)

என ஊழ்வினையை விளக்குவதற்கும், கோவலனின் உள்ளத் தளர்ச்சியை நீக்குவதற்கும் வேண்டி, நளன் புட்கரனோடு சூதாடி தன் நாட்டையும், அரசையும் இழந்தான். அவன் தன் மனைவியை விட்டு வேறு ஒரு பெண்ணையும் காதலிக்கவில்லை. அவளும் தீமை அடையக் கூடிய செயலையும் செய்யவில்லை. இருப்பினும் நளன் நள்ளிரவில் அவளைப் பிரிந்தான். இதற்குக் காரணம் ஊழ்வினையே என்று நளன் கதையைக் குறிப்பிடுப்பிடுகின்றார்.

3. கலித்தொகையில் நளன் கதை

தோழி, தலைவனிடம் இல்வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக் கூறுகையில், பொருளை எப்பொழுது வேண்டுமானாலும் தேடிச்செல்லலாம். ஆனால் இளமை என்பது மீண்டும் வராதது. எனவே ஓரே ஆடையைக் கிழித்து இருவரும் உடுத்தும் வறுமை ஏற்பட்டாலும், பிரியாது காதல் செய்வதே வாழ்க்கை என்பதனை,

"ஒன்றன்கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதுஅரோ
சென்ற இளமை தரற்கு" (கலித் - 18.10-12)

எனும் பகுதியில், நிடத நாட்டை இழந்து நளனும், தமயந்தியும் கானகத்தில் இருக்கின்ற போது, கலியின் சூழ்ச்சியால் தமயந்தி, பொன்னிறப் பறவையைப் பிடித்துத்தரக் கூறுகிறாள். இருவரும் உடுத்தியிருக்கும் ஆடையைத் தவிர வேறு இல்லை. தமயந்தியின் சேலையின் நுனியை நளன் அணிந்து தன் உடையால் அப்பறவையைப் பிடிக்க, அத்துணியைப் பற்றிக் கொண்டு அப்பறவை பறந்துசெல்கிறது. அன்று இரவு தமயந்தியின் துயரைப் பொறாத நளன், தாம் இருவரும் அணிந்திருந்த ஒற்றை ஆடையைக் கீறி அவ்விடம் விட்டு நீங்கினான் என்ற குறிப்பை, பாலைப்பாடுவதில் வல்லவரான பெருங்கடுக்கோ கலித்தொகையில் எடுத்துரைக்கின்றார்.

வில்லிபுத்தூரர் பாரதத்தில் நளன்கதை

வில்லிப்புத்தூரர் பாரதம் அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தில், பிருகதசுவர் முனிவர், தவம்புரியச் செல்லும் அருச்சுனனுக்கு,

"நீவிரே யல்லிர் முன்னா ணிலமுழு தாண்ட நேமி
நாவிரி கீர்த்தியாள னளனெனு நாம வேந்தன்
காவிரி யென்னத் தப்பாக் கருணையான் சூதிற்றோற்றுத்
தீவிரி கானஞ் சென்ற காதைநுஞ் செவிப்படாதோ" (செய் - 24)

என்னும் அடிகளில், நளன் புட்கரனோடுச் சூதாடி, நாட்டை இழந்து தன் மனைவியுடன் கானகம் சென்று, அங்கு தன் மனைவியைப் பிரிந்து, பின் மீண்டும் மனைவியையும், நாட்டையும் பெற்று இன்புற்று வாழ்ந்தான் எனும் செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. நல்லாப்பிள்ளை பாரதத்தில் நளன்கதை

தருமன் முதலிய ஐவரும் சூதாடித் தம் நகர், அரசாட்சி, சேனை முதலியவற்றை எல்லாம் இழந்து, திரௌபதியுடன் காமியவனம் புக்கமர்ந்த காலத்தில், வியாச முனிவர் அங்கு சென்று, அவர்களுக்கு நீதிகள் கூறித் தேற்றினார். அப்போது யுதிட்டிரர், முனிவரை வணங்கி 'எம்மைப் போன்று முன்னஞ் சூதாடிப் பு+மியைத் தோற்றுக் கானக மடைந்தாருளரோ' வெனக்கேட்க வியாசர், நளன் சரிதத்தைக் கூறினார்.

இதனை நல்லாப்பிள்ளை அவர்கள், 'நளன்கதை உரைத்த சருக்கம்' என்று தம் நூலில் ஒரு சருக்கமிட்டு, நூற்றைம்பத்து மூன்று செய்யுட்களால், நைடதத்தைச் சுருக்கமாக அழகுறப் பாடியுள்ளார்.

5. தேவாரத்தில் நளன்கதை

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இடம் பெறுகின்ற திருநள்ளாற்றுப் பதிகத்தில்,

"வளங் கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும் வழிபாடு செய் நள்ளாறே" (தேவா - 1821)

என்னும் அடிகளில் சிவபெருமான் இருக்கும் இடம், நளன் வந்து தங்கி நாள்தோறும் மலர்தூவி வழிபட்டு, கலி நீங்கப்பெற்ற திருநள்ளாறாகும் என நளன்கதை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

6. நளவெண்பா

வெண்பா பாடுதலில் வல்லவரான புகழேந்திப் புலவர் முரனைநகர்ச் சந்திரன்சுவர்க்கி என்னும் அரசனது விருப்பின்படி, வெண்பா யாப்பினாலே நளன்கதையை ஒரு காப்பியமாகவே 13 -ஆம் நூற்றாண்டில் விரிவாகப் பாடியுள்ளார். இந்நூலானது சுயம்வர

காண்டம், கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் எனும் மூன்று காண்டங்களையும், 418 பாடல்களையும் கொண்டுள்ளது.

7. நைடதம்

நளன் கதையை முழுக்காப்பியமாக, நளவெண்பாவிற்கு அடுத்து விருத்தப்பாவால், 16 - ஆம் நூற்றாண்டில் புவிச்சக்கரவர்த்தியாகிய அதிவீரராம பாண்டியர் 28 படலமாக இயற்றியுள்ளார். இந்நூல் 1172 பாடல்களைக் கொண்டது.

8. நிகண்டு

சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு போன்றவற்றில் வரைவின்றி யாவர்க்குங் கொடுக்கும் முதல் ஏழு வள்ளல்கள் பெயர் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 'நளன்' பெயரும் இடம்பெறுகின்றது. (செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன்)

"மிக்கசெம் பியனே காரி விராடனே நிருதி தானுந்
தக்கதுந் துமாரி தானுஞ் சகரனு நளனும் தாமும்" (சூடா- 2.23)

"சகரன் காரி நளன் றுந்துமாரி நிருதி
செம்பியன் விராடன் றலைவள்ளல்" (பிங்கல நிகண்டு)

என்னும் அடிகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

9. கூர்மபுராணம்

பு+ருவகாண்டம் 28-வது சந்திரன் மரபுரைத்த அத்தியாயத்தில்,

"விழுதுபட் டொழுகு முத்த வெண்ணிலா மாலை தாழு
மெழுவுத் குவவுத் திண்டோட் சுமந்துவி னெழில்கொண் மைந்தன்
கழுதுகை கொட்டி யால வொன்னலர்க் கடிந்த வாய்வாள்
முழுதுல கொருகோ லோச்சு நளனெனு மூரி வேலோன்" (செய்யு- 85)

என்னும் அடிகளில், நிடதநாட்டை சிறப்பாக ஆட்சிசெய்தான் நளன் என்னும் குறிப்பு காணப்படுகிறது.

10. நாடகம்

1872 - நளவிலாசம் - தாமோதர முதலியார்
1876 - நளநாடகம் - கிருஷ்ணசாமிப் பிள்ளை
1883 - நளநாடகம் என்னும் தமயந்தி நாடகம் - தஞ்சை கிருஷ்ணசாமிப்பிள்ளை
1971 - தமயந்தி நாடகம்

போன்ற நாடகங்களும் நளன்கதையை எடுத்துரைக்கின்றன.

11. நாட்டுப்புற இலக்கியம்

நாட்டுப்பாடலாக இருந்து இலக்கியமாக ஏற்றம் பெற்ற வகைகளுள் ஒன்று அம்மானை. நளன், தமயந்திக் கதையைக் கூறும் 'நளனம்மானை' நாட்டுப்புற வடிவமாகும்.

புராணங்களில் மணிப்படிக்கரைப் புராணமும், திருநள்ளாற்றுப் புராணமும், சிற்றிலக்கியங்களில் மன்விடுதூது, மதன வித்தார மாலை, செயங்கொண்டார் சதகம், திருவேங்கட சதகம் போன்ற பல்வேறு இலக்கியங்களும் நளன் கதையை எடுத்துரைப்பதாக குறிப்புகள் காணப்படுகின்றன. இருப்பினும் நளன் கதையைக் கூறும் முழுமையான நூற்கள் என்றால் நளவெண்பாவும், நைடதமும் தான்.

பிறமொழிகளில் நளன்கதை

வடமொழியில் நைஷதம்

ஹர்ஷரால் வடமொழியில் 12- ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற இந்நூலில் 22 சருக்கங்கள் உள்ளன. இச்சருக்கங்களுக்குப் பெயர்கள் இல்லை. இந்நூலில் நளன், தமயந்தி திருமண நிகழ்வு வரை மட்டுமே கதை இடம் பெறுகின்றது. இந்நூல் பல அணி நயங்களுடன் 22

சருக்கங்களைக் கொண்டுள்ளது. இந்நூலுக்கு 1. நாராயணர் 2. ஜினராசர் 3.சாரித்திரவர்த்த சூரி 4. நரஹரி 5. வித்யாதரர் 6.மல்லிநாதசூரி எனும் ஆறுபேர் உரையெழுதியுள்ளனர். இவர்களது உரைகள் நைஷதியப் பிரகாசம், சுகரவ போதம், திலகம், தீபிகை, சாகித்ய வித்தியாதரி, ஜீவரது போன்றவைகளாகும். இவற்றுள் ஸ்ரீமல்லிநாதசூரி இயற்றிய 'ஜீவரது வியாக்கியானமே' சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

மலையாள மொழியில் நைஷதம்

சம்பு இலக்கியம்

இடைக்கால சம்பு இலக்கியங்களில் 16 -ஆம் நூற்றாண்டில் தோன்றியது பாஷா 'நைஷத சம்பு'. இதனை எழுதியவர் 'மழமங்கலத்து நாராயணன் நம்பு+திரி' ஆவார். இந்நூல் பு+ர்வபாகம், உத்தர பாகம் எனும் இரண்டு பாகங்களைக் கொண்டு நளன்கதையை எடுத்துரைக்கின்றது.

ஆட்டக்கதை

கதகளியின் இலக்கிய அமைப்பு ஆட்டக்கதை ஆகும். 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலகட்டத்தில், உண்ணாயிவாரியரால் 'நளசரிதம் ஆட்டக்கதை' இயற்றப்பட்டுள்ளது. இவையின்றி குஞ்சன் நம்பியார் இயற்றிய 'நளசரிதம் - துள்ளல்', 'நளசரிதம் - கிளிப்பாட்டு', 'நளசரிதம் - மணிப்பிரவாளம்' போன்ற நூல்களும் நளன் கதையை எடுத்துரைக்கின்றன.

முடிவுரை

காலந்தோறும் பல இலக்கிய வடிவங்களைப் பெற்ற நளன்கதையானது துன்ப நிலையில் இருக்கக் கூடிய ஒவ்வொருவருக்கும், அத்துன்பத்தை நீக்கும் பொருட்டு, பல்வேறு கால கட்டங்களில் இலக்கியங்களாக உருப்பெற்றமையை நம்மால் இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளமுடியும்.

துணை நூற்கள்

- வழித்துணை ராமன் ஏ.எஸ். - 2005, நைடதம், பாரிநிலையம், சென்னை. 600 108
- கதிரைவேற்பிள்ளை. நா - 1930, நைடதம் மூலமும் விருத்தியுரையும், வித்யாரத் நாகர அச்சுக்கூடம், சென்னை.
- அருணாசலம்.மு - 2005,16- ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை. 600 014
- பாக்யமேரி- 2011, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை. 600 098
- பரமேஸ்வரன் நாயர் - 2014, மலையாள இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுடெல்லி. 110 001
- சைனபா. எம் - 2014, நளசரிதம் மணிப்பிரவாளம், கேரளப்பல்கலைக் கழகம், திருவனந்தபுரம். 695 581
- எரிமேலி பரமேஸ்வரன் பிள்ளை - 2010, மலையாள சாகித்யம் காலகட்டங்களிலூடே, கரண்ட் புக்ஸ், திருவனந்தபுரம்.

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 மே 2018 மலர்:4 இதழ்:13 144

மதிப்பிடப்பெற்றது

ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை

க. தேவி
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17.
kgsenterprisestry@gmail.com

வைணவ சமய முதன்மைக் கடவுளான திருமாலை ஆழ்வார்கள் பன்னிருவர் சேர்ந்து பாடிய நாலாயிரம் பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்விய பிரபந்தம் ஆகும். இப்பாடல்களை இசையுடன் அபிநயம் செய்து பாடும் அரையர்களைப் பற்றியும் அரையர் சேவையைப் பற்றியும் இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

வைணவத் திருக்கோயில்களில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களான பாசுரங்களை இசையுடன் பாடி அபிநயித்து அவற்றின் வியாக்கியானங்களை (தமிழும், வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் உள்ள உரைகளை வியாக்யானம் என்பர்) அழகுறப் பேசி நடிக்கும் முத்தமிழ்க் கலை 'அரையர் சேவை' எனப்படும்.

ஆழ்வார் பாசுரங்களை ஓதும்முன் தனியன் சொல்லிவிட்டு, பாசுரம் பாட வேண்டும் என்பது வைணவ மரபு. அரையர் மட்டுமே தனியன் பாடாமல் நேரடியாகப் பாசுரங்களைப் பாடும் உரிமை உடையவர். எனவே, இவர்கள் பாசுரங்களுக்கு அரசர்(1) (அறையர் என்று வல்லினமாக எழுதும் மரபும் உண்டு).

ஆழ்வாரின் பாசுரங்களைச் சொல்லுவதால் (அறைதல் - சொல்லுதல்) இக்கலைஞர் அறையர் (அரையர்) என்று அழைக்கப்பட்டனர். திருவரங்கத்தில் உள்ள இறைவன் நம்பெருமாள், இவர்களுக்கு அரையர் என்ற பட்டத்தை முதன் முதலாக அளித்தான் என்று கோயிலொழுகு என்ற நூல் கூறுகிறது(2).

அரையர்களை விண்ணப்பஞ் செய்வார், நம்பாடுவார், இசைக்காரர், தம்பிரான்மார் என்று பல்வேறு பெயர்களில் வைணவ வியாக்யானங்கள், குருபரம்பரை, ஆசார்ய ஹ்ருதயம், கல்வெட்டுக்கள் ஆகியன கூறும்.

அரையர் சேவை என்னும் இந்த முத்தமிழ்க் கலைக் கொண்டாட்டம் ஆழ்வார்களின் பாசுரத்தைப் பண்ணுடன் பாடுதல், பாசுரத்திற்கேற்ப அபிநயஞ்செய்தல், பாசுரத்தின் உரை கூறுதல், கொண்டாட்டம் என்று அமையும்.

தோற்றம்

அரையர் சேவை, கலை வடிவின் தோற்றம் பற்றிய இரு செய்திகளை வைணவ மரபில் காணலாம். இக்கலையைத் திருமங்கையாழ்வார் தோற்றுவித்தார் என்று கோயிலொழுகு பின்வருமாறு கூறுகிறது(3)

இக்கலையின் தோற்றம் பற்றி மற்றுமோர் வரலாற்றை வைணவ குருபரம்பரை நூல்கள் கூறும். இதன்படி இக்கலையைத் தோற்றுவித்தவர் நாதமுனிகள், தமிழ் வேதமான பாசுரங்களை வேதம் போல ஓதும் முறை, அரையர் சேவை ஆகியவற்றை உருவாக்கினார் இவர்.

நிகழ்ச்சி நடைபெறும் முறை

உற்சவரின் முன் மட்டுமே அரையர் சேவை நிகழ்கிறது. மார்கழி மாதத்தில் பகல்பத்து, இராப்பத்து ஆகிய நாட்களில் மட்டுமே மூன்று தலங்களிலும் இக்கலை ஒருசேர நடைபெறுகிறது. ஸ்ரீவில்லிபுத்துரில் மட்டும் வேறு சில நாட்களிலும் ஆடி மாதம், மார்கழி மாதம், மை மாதம்(4) அரையர் சேவை நிகழ்கிறது.

ஒருகாலத்தில் தமிழகம் முழுவதிலும் உள்ள வைணவக் கோயில்களில் நடைபெற்ற இக்கலை இப்போது ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம் ஆகிய மூன்றிடங்களில் மட்டும் நடைபெறுகிறது. மைசூரில் உள்ள மேல்கோட்டையில் அரையர் இசையுடன் பாடுவது மட்டும் உண்டு. அபிநயம் இல்லை.

சேவைக்காகத் தனியான ஒப்பனை, உடை, எதையும் அரையர் அணிவதில்லை. கூம்பு வடிவில் அமைந்த குல்லாய் ஒன்றைத் தலையில் அரையர் தரிக்கிறார். இறைவன் சூடிக் களைந்த இரு மாலைகளைக் கழுத்தில் அணிகிறார். குல்லாவைச் சுற்றி இறைவன் சூடிக் களைந்த பரிவட்டம் ஒன்றை அணிந்துகொண்டு, தம் கைகளில் வைத்துள்ள இரு தாளங்களைத் தட்டி ஒலியெழுப்பி அரையர் சேவையைத் தொடங்குகிறார்.

இத்திருநாள் மார்கழி மாதம் வளர்பிறையில் முதல் நாளான பிரதமையில் தொடங்கும். திருவரங்கத்தில் மட்டும் அதற்கு முந்தைய நாளான அமாவாசை அன்று இரவில் திருநெடுந்தாண்டகச் சேவையுடன் தொடங்கும்(5).

சேவையில் இடம்பெறும் பாசுரங்கள்

இன்று சேவைக்கென அரையர் எடுத்துக் கொள்ளும் பாசுரங்கள் பின்வருவன:

1) பகல்பத்திற்கு உரியன: திருப்பல்லாண்டு(6), அடியோமோடும்(7), சென்னியோங்கு(8), ஆற்றிலிருந்து(9), தன் நேர் ஆயிரம்(10) ஆகிய பெரியாழ்வார் பாசுரங்கள், ஆண்டாளின் திருப்பாவை முதற்பாடல்(11) (மார்கழித் திங்கள்) மட்டும், நாச்சியார் திருமொழி "கண்ணன் என்னும்" (12) என்ற பாசுரம், குலசேகர ஆழ்வாரின் பெருமாள் திருமொழியில் ஊனேறு செல்வம்(13, 'இருள் இரிய(14) என்ற பாசுரம், தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருமாலையில் "காவலில் புலனை"(15) மதுர கவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு(16) முதல் பாசுரம் மட்டும், திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியில் 'வாடினேன் வாடி'(17) தூவிரிய மலர்(18), பண்டைநான் மறை(19), தெள்ளியீர்(20), அக்கும் புலியின்(21), முந்துற உரைக்கேன்(22), திருநெடுந்தாண்டகம் முதல் பதினொரு பாசுரங்கள்(23) ('மின்னுருவாய்' தொடங்கி 'பட்டுடுக்கும்' முடிய) 'இரக்கம் இன்றி(24) ஆகியன பகல்பத்தில் இடம்பெறுகின்றன.

2) இராப்பத்திற்குரியன:

இராப்பத்து முழுவதிலும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரங்கள் சேவிக்கப்படுகின்றன. உயர்வற உயர்நலம்(25) (முதற்பாசுரம் மட்டும்) 'கிளரொளி இளமை(26) (முதற் பாசுரம் மட்டும்), 'ஒழிவில் காலம்'(27) (முதற் பாசுரம் மட்டும்) ஒன்றும் தேவும்(28) (முதற் பாசுரம் மட்டும்) 'எத்தனையோ'(29) (முதற்பாசுரம் மட்டும்) உலகம் உண்ட பெருவாயா(30) (முதற் பாசுரம் மட்டும்), 'கங்குலும் பகலும்(31), (முதற் பாசுரம் மட்டும்), 'நெடுமாறிகடிமை'(32), (முதற் பாசுரம் மட்டும்), மாலை நண்ணி(33) (முதற்பாசுரம் மட்டும்)'தாள தாமரை(34), முனியே நான்முகனே(35) (ஆழ்வார் மோட்சம் - இன்று சாற்றுமுறை) ஆகியன இராப்பத்திற்குரிய பாசுரங்கள்.

அரையர் பரம்பரை

இன்று ஆழ்வார் திருநகரியில் அரையர் குடும்பம் ஒன்று தான் உள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூரில் அரையர் குடும்பம் இரண்டு உள்ளது. திருவரங்கத்திலும் இதே போல் இரு அரையர் குடும்பங்கள் உள்ளன. சேவை நிகழ்த்தும்போது அரையர் இருவர் (தந்தையும், மகனும்) பாடுகின்றனர். ஒருவர் மட்டுமே அபிநயிக்கிறார்.(36)

இக்கலையை நிகழ்த்தத் தலைப்படுமுன் அரையர் 12 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் முடியப் பயிற்சி பெறுகிறார். கோயில்களில் இறைவனின் திருமுன் மட்டுமே நடைபெறும். கலையாதலால், தூய்மையும் புனிதமும் கருதிப் பெண்களுக்கு இக்கலையில் பயிற்சி அளிப்பதில்லை.

இக்கலையின் நோக்கமே எளிய மக்களும் உணருமாறு ஆழ்வார் பாசுரங்களைப் பண்ணும் கூத்துமாக வெளியிடுவதாகும். இக்கலையைப் பழமை குன்றாமல் போற்றிப் பாதுகாத்தல் இன்றியமையாத செயலாகும்.

முடிவுரை

ஆழ்வார் பாசுரங்களில் எந்தெந்தப் பாடல்கள் அரையர் சேவைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்பதையும் இச்சேவை எங்கெங்கு நடைபெறுகின்றது என்பதையும் அரையர் பரம்பரை பற்றியும் இக்கட்டுரை உணர்த்தி நிற்கின்றது.

அடிக்குறிப்புகள்:

1) நாலாயிர திவ்யப் பிரபந்த அகராதி, ப.96

2) கோயிலொழுகு, ப.34.

3) மேலது, பக்.7-9

4) ஆடி மாதம் (பிரும்மோற்சவத்தில் ஆடிப்பூர விழாவில் தேர் நிலைக்கு வந்து சேர்ந்த மறுநாள்) மார்கழி மாதம் (எண்ணெய்க் காப்பு உற்சவத்தில் தை மாதம் பொங்கலின் மறுநாள் காணும்பொங்கல் அன்று) ஆகிய மும்முறை நடைபெறும்.

5) வைணவமும் தமிழும், ப.115

6) பெரியாழ்வார் திருமொழி, 1 - 1

7) மேலது, 1 - 2

8) மேலது, 5 - 4 - 1

9) மேலது, 2 -10 - 1

10) மேலது, 3 - 1 - 1

11) திருப்பாவை, 1

12) நாச்சியார் திருமொழி, 13 - 1

13) பெருமாள் திருமொழி, 3 - 1 -1

14) மேலது, 1 -1

15) திருமாலை, 1

16) கண்ணி நுண் சிறுத்தாம்பு, 1

17) பெரிய திருமொழி, 1 - 1 - 1

18) மேலது, 3 - 6 -1

19) மேலது, 5 - 7 - 1

20) மேலது, 8 - 2 - 1

21) மேலது, 9 - 6 - 1

22) மேலது, 9 - 8 - 1

23) திருநெடுந்தாண்டகம், 1 - 11

24) பெரிய திருமொழி, 10 - 2 - 1

25) திருவாய் மொழி, 1 - 1 - 1

26) மேலது, 2 - 10 - 1

27) மேலது, 3 - 3 - 1

28) மேலது, 4 - 10 - 1

29 மேலது, 5 - 5 - 1

30) மேலது, 6 - 10 - 1

31) மேலது, 7 - 2 - 1

32) மேலது, 8 - 10 - 1

33) மேலது, 9 - 10 - 1

34) மேலது, 10 - 1 - 1

35) மேலது, 10 - 10 - 1

36) திருவரங்கத்தில் மட்டும் அரையர் ஒருவர் முதலிலும் அடுத்து ஒருவரும் ஆக இருவர் அபிநயிக்கும் மரபு உள்ளது. அதே போல் தந்தையும் பிள்ளையுமாக அனைவரும் பாடும் மரபு.

துணைநூற்பட்டியல்

- அண்ணங்காரம்சாரியார் பி.ப(பதி.), 1969, பெரியாழ்வார் திருமொழி வியாக்யானம், காஞ்சிபுரம்.
- கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார். எஸ்., 1976, கோயிலொழுகு, திருச்சி.
- சுப்புரெட்டியார் ந., 1998, வைணவமும் தமிழும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- பார்த்தசாரதி ஐயங்கார்(பதி.), 1963, நாலாயிர திவ்யப் பிரபந்த அகராதி, தேவத்தான பத்திரிக்கை வெளியீடு, ஸ்ரீ ரங்கம்.
- வேங்கடசாமி ரெட்டியார் கி. (பதி.), 1973, நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை,

மதிப்பிடப்பெற்றது

அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்

முனைவர் மீ. கோமதி
தமிழ் - உதவிப் பேராசிரியர்
சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர்
திருச்சிராப்பள்ளி.
mgomathi278@gmail.com

மக்கள் தம் வாழ்வியலுக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களைச் செவ்விய சொற்களால் கூறுவது இலக்கியமாகும். இச்சொற்றொடரை இலக்கு + இயம் எனப் பிரித்து, சொல்லாலும் பொருளாலும் செம்மை பெற்றொளிரும் நூல் எனப் பொருள் கொள்ள வேண்டும். 'இலக்கு' என்பது நோக்கு, கொள்கை எனப் பொருள்படும். இயம் என்பது 'தன்மை' அல்லது 'பண்பு' எனப் பொருள்படும். அவ்வகையில், ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மொழிப்படைப்பே அட்டப் பிரபந்தம்.

இவ்விலக்கியம் அழகுற அணிகளைப் பயில வைத்து ஆயிரம் எண்ணங்களை அடுக்கடுக்காய் அடுக்கிச் சென்று கருத்து உருவாக்கத்தில் திருவரங்கனின் பெருமைகளைக் கூறிச் செல்கிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள அணிநயத்தினை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். செய்யுளில் அமைந்து கிடக்கும் சொல்லழகு, பொருளழகு முதலியவற்றை வரையறுத்துக் கூறுவது அணி இலக்கணமாகும். தண்டியலங்காரம் அணிகளை முப்பத்தைந்து வகையாகக் கூறுகின்றது. அவற்றுள் உவமை, திரிபு, மடக்கு முதலிய அணிகள் அட்டப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளமையை காணலாம்.

அட்டப் பிரபந்தம்

அழகிய மணவாளதாசர் எனப்படும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய எட்டு நூல்களின் தொகுப்பு இந்நூலாகும். இந்நூலின் சிறப்பினை உணர்த்தவும், ஆசிரியரின் தமிழ்ப் புலமையை உணர்த்தவும் எழுந்ததாகும்.

இந்நூலின் செய்யுள் தொகை 751, புறம்பாகவுள்ளவை சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் 8 , அவையடக்கம் முதலியனவாக உள்ளவை 22, பிற்சேர்க்கைப் பாடல்கள் 9. ஆக, நூலுக்குப் புறம்பாக உள்ள 39 செய்யுட்கள் சேர்ந்தால் 790 ஆகும்.

உவமையணி

ஒருவன் தான் கூறக் கருதிய பொருளை அதனோடு ஒப்புமையுடைய மற்றொரு பொருளோடு இயைபுபடுத்திக் கூறுவது உவமையணியாகும்.

பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை

என்று தண்டியலங்காரம் உவமைக்கு இலக்கணம் கூறுகின்றது.

அட்டப்பிரபந்தத்தில் உவமைநயம்

திருவரங்கநாதரைப் புகழ்ந்து பாடியுள்ள அட்டப்பிரபந்தத்தில் அடி முதல் முடி வரையுள்ள உறுப்புகளுக்குப் பல உவமைகள் கொண்டு வருணிக்கப்பட்டுள்ளது. திருவரங்கநாதரின் அங்கங்களை மிகுதியாகத் தாமரை மலருக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் கலம்பக மாலையில் அதிகமாகவும் அந்தாதியிலும் ஊசலிலும் சிலவாகவும் வருணிக்கப்பெற்றுள்ளது.

திருமுகம்

திருமாலின் திருமுகத்தை முழுநிலவு போன்றுள்ளது எனவும் திருமுடியுள் கரிய மயிர்முடியும் அதில் அணிந்துள்ள மலர்மாலைகளில் மொய்க்கின்ற வண்டுகள் அசைந்தாடவும் பூரணசந்திரன் போன்ற திருமுக மண்டலத்தில் சிறுத்து அரும்புகின்ற வியர்வை நீரும் காதணிகளும் அசைந்தாடவும் ஊசல் ஆடுவீர் எனப் பொருள்படும்படி,

முடித்தலத்தில் கருங்குழலும் கரும்பும் ஆட
முகமதியில் குறுசேர்வும் குழையும் ஆட
குடித்தலத்தில் அரைநாணும் கலையும் ஆட
காவிரிசூழ் அரங்கேசர் ஆடிற் றூசல்

என்று அரங்கனின் திருமுகம் பூரணசந்திரனுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது.

திருக்கண்கள்

அடியோர்கள் கொணர்ந்த திருத்துழாய் மாலை அணிந்தவனே! கண்கள் தாமரை மலர்போல் அமையப் பெற்றவரே! என்று திருவரங்கனின் திருக்கண்கள் தாமரைமலரை ஒத்திருப்பதாக உவமை கூறப்பட்டுள்ளது.

தாரா கனமண் ணந்தவந் நாளன்பர் சாத்துந் துழாய்த்
தாரா கணம்புயம் போலரங் காதல மேழுங்குமா
தாரா கணமங்கை யாயும்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுநில் லாகாற்றிற் சூழ்வளந்தா னொக்குமே (சீரங்கநாயகர் ஊசல்)

எனும் பாடல் இக்கருத்தை வெளிப்படுத்துகின்றது.

திருவாய்

திருவரங்கநாதரின் திருவாயினைப் பெரும்பாலும் பவளத்திற்கு ஒப்புமையாக்கிக் கூறப்பெற்றுள்ளது. இதனை,

வாழும் மௌலித் துழாய்மணமும்
மகரக் குழைதோய் விழிஅருளும்
மலர்ந்த பவளத் திருநகையும்
மார்பில் அணிந்த மணிச்சுடரும்
தாழும் முளரித் திருநாபித்
தடத்துள் அடங்கும் அனைத்துயிரும்
சரண கமலத்து உமைகேள்வன்
சடையில் புனலும் காணேனால்... (திருவரங்கத்துக் கலம்பகம்)

தெய்வத்தன்மை பொருந்திய திருமுடியில் சூடிய திருத்துழாய் மாலையின் நறுமணத்தையும் திருக்கண்ணின் திருவருளையும் பவளம் போலச் சிவந்த திருவாய்மலரில் அழகிய புன்சிரிப்பையும் காண்கின்றேன் என்று திருவாய் பவளத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

திருவரங்கத்து மாலையில் கண்ணபிரானின் பெருமையைச் சொல்லும் அவர் பூமியையும் திசைகளையும் கடலையும் மலைகளையும் தன் வாயினுள்ளே காட்டிய திருவாயானது செவ்வாம்பல் மலர் போன்று உள்ளது என வர்ணிக்கப்பட்டுள்ளது.

பண்டு விழுங்கிய பாரும் திசையும் பனிக்கடலும்
சண்ட நெடுங்கிரித் தானம் எல்லாம் சண்பகாடவிமேல்
மண்டு பெரும்புனல் சூழரங் கேசர்தம் வாய்மலருள்
கண்டு மருவினள் சீர்நந்த கோபர்தம் காதலியே (திருவரங்கத்து மாலை)

என்பது அப்பாடல்.

திருநாபி

திருமாலின் திருநாபியில் தோன்றியவர் பிரம்மன். அந்தத் திருநாபியைப் பற்றி,

பூமரு பொங்கர் புடைசூழ் அரங்கர் பொலங்கழலால்
பாமரு மூவுலகும் கொண்டபோது பழிப்புஇல் பெருங்
காமரு மோலிச் சிகாமணி ஆகிக் கவுத்துவமாய்த்
தேமரு நாளிஅம் தாமரை ஆனது செஞ்சுடரே (திருவரங்கத்து மாலை)

எனப் பாடப்பெற்றுள்ளது. பொலிவு பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகள் கொண்ட திருவரங்கம் எனத் திருவரங்கத்தை வர்ணிக்கும் இப்பாடலில் தேன் பொருந்திய தாமரை மலர் போன்ற திருநாபி என வருணிக்கப்பட்டுள்ளது.

திருமேனி

திருவரங்கநாதரின் திருமேனி காளமேகத்திற்கு ஒப்பாகக் கூறப்பெற்றுள்ளது. இதனை உணர்த்தும் பாடல் பின்வருமாறு:

ஞாலத் திகிரி முதுநிர்த்திகிரி நடாத்தும் இந்தக்
காலத் திகிரி முதலான யாவும் - கடல்கடைந்த
நீலத் திகிரி அனையார் அரங்கர் நிறைந்த செங்கைக்
கோலத் திகிரி தலைநாளில் கொண்ட கோவலங்களே (திருவரங்கத்து மாலை)

திரிபு

திரிப என்பது முதல் எழுத்துத் தவிர இரண்டு முதலிய சில எழுத்துக்கள் ஒன்றி நிற்கப் பொருள் வேறுபட்டு வருவது ஆகும்.

புயம்நான்கு உடையயானை பொன்னரங்கத் தானை
ஆயனாம் திருவுந்தி யானை வியனாம்
புரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணாமல் நான் (திருவரங்கத்துக் கலம்பகம்)

பின்னிரண்டு அடிகளில் முதலெழுத்து மட்டும் வேறுபட்டு 2,3 முதலிய சில எழுத்துக்கள் ஒன்றுபட்டு நிற்கப் பொருள் வேறுபட்டு வருவது திரிபு எனும் சொல்லணியாகும்.

மடக்கு

மடங்கி வரும் தன்மை கொண்டதால் மடக்கு என்பது காரணப் பெயராகும். வந்த சொல் மீண்டும் வருதலே மடங்கி வருதல் எனப்படும்.

எழுத்தின் கூட்டம் இடைபிறிது இன்றியும்
பெயர்த்துவேறு பொருள்தரின் மடக்கெனும் பெயர்த்தே

என்று தண்டியலங்காரம் இதற்கு வரையறை தருகின்றது.

எழுத்துக்களின் கூட்டம் பிற எழுத்தானும் சொல்லானும் இடைவிட்டும் இடைவிடாது பின்னும் வந்து வேறு பொருள் தரும். அவ்வாறு பொருள் தருவது மடக்கு என்னும் அணியாகும்.

வேலை உலகிற் பிறக்கும் வேலை ஒழித்தோம் இல்லை
மாலை அரங்கேசனைநாம் மாலையிலும் காலையிலும்
உன்னிநைந் தோம்இல்லை உடலெடுத்த அன்றுமுதல்
என்னினைந் தோம்நெஞ்சே இருந்து (திருவரங்கத்துக் கலம்பகம்)

வேலை, மாலை எனும் சொற்கள் மீண்டும் மீண்டும் வந்து வேறுபடு பொருள் தந்தமையால் இப்பாடலில் மடக்கு இடம்பெற்றுள்ளது.

தொகுப்புரை

உருவமாய், உருவகமாய் என்றும் மாறாத இயல்புடைய திருவரங்கநாதனைப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அழகுற வருணித்துள்ளார். திருவரங்கநாதனின் பெருமைகளை அணிநயத்துடன் சிறப்புற உவமை, திரிபு, மடக்கு போன்ற அணிகளின்வழி ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ள திறம் அட்டப்பிரபந்தத்தில் சிறப்புடையதாக அமைந்துள்ளது.

துணைநின்றவை

- கமலக்கண்ணன் இரா.வ.(உரை.), 2007(மு.ப.), *அட்டப் பிரபந்தம் மூலமும் உரையும்,* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- ……,(உரை.), 2009, *நாலாயிர திவ்வியப் பிரபந்தம்,* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- சீதாராமன் மா., *நாளும் ஒரு நாலாயிரம்,* நர்மதா பதிப்பகம், சென்னை.
- வேந்தன் க.கோ., 2000, *சைவமும் வைணவமும்,* சங்கர் பதிப்பகம், வில்லிவாக்கம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்

க.ரேவதி
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17
paramu11978@gmail.com

திருமாலின் திருவருளைப் பெற்ற பன்னிரண்டு ஆழ்வார்கள் பாடிய தமிழ்ப் பாசுரங்களே நாலாயிர திவ்வியப் பிரபந்தம். இப்பாசுரங்களைத் திரட்டித் தந்தவர் வியாசர். இதனுள் திகழும் பாசுரங்கள் சொற்சுவை, பொருட்சுவைகளில் சிறந்தவை. இத்தகு ஆழ்வார் பாசுரங்களில் இடம்பெற்றுள்ள அணிநலன்கள் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

அணி

கவிஞனின் அழகு உணர்ச்சியை வெளிப்படுத்தும் உத்தியே அணியின் தோற்றத்திற்குக் காரணம். அணி செய்யுள் இடையே அமைந்து, செய்யுளை அழகுபடுத்துவதோடு மட்டுமல்லாமல், கற்றவரை மகிழச் செய்யும் பயனையும் அளிக்கின்றது.

தமிழில் அணி இலக்கணம்

தமிழில் அணியினை முழுமைபடக் கூறும் முதல் நூலாகத் திகழ்வது வீரசோழியம். வீரசோழியத்திற்குப் பின் தண்டியலங்காரம், மாறனலங்காரம், சந்திரலோகம், குவலயானந்தம், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கம் எனப் பல நூல்கள் உள்ளன.

தண்டியலங்காரம்

இந்நூல் 35 பொருளணிகளைக் கொண்டது. இந்நூலின் காலம் 12ஆம் நூற்றாண்டு ஆகும். இக்கட்டுரையில் தண்டியலங்காரத்தை அடியொற்றி ஆழ்வார் பாசுரங்களிலுள்ள அணிகள் விளக்கப் பெற்றுள்ளன.

1.தன்மை அணி

ஒரு பொருளின் இயல்புத் தன்மையை நேரில் கண்டாற் போல உள்ளபடி விளக்குவது தன்மையணி ஆகும். தன்மை என்பதற்கு இயல்பு என்பது பொருள். இதனைத் தன்மை நவிற்சி என்றும் குறிப்பிடுவர். வடநூலார் இதனைச் சுவபாவோக்தி அலங்காரம் என்றும் கூறுவர்.

பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்
எத்திசையும் சய மரம் கோடித்து
மத்த மாமலை தாங்கிய மைந்தனை
உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே (இரண்டாம் திருமொழி, 20)

இப்பாடலில் பன்னிரண்டாம் நாள் கண்ணனுக்குப் பெயரிடு விழா நடந்ததையும், அனைத்துத் திசைகளிலும் தோரணம் கட்டப்பட்டு இருந்ததையும், கூர்ம அவதாரம் எடுத்து மந்தார மலையினை முதுகில் தாங்கி அமிர்தம் கிடைக்க உதவிய பாலகனை இடையர்கள் கையில் எடுத்துக் கொஞ்சி மகிழ்ந்ததையும் இயல்பாகவே கூறப்பட்டுள்ளதால் இது தன்மை நவிற்சி அணி ஆயிற்று. இதுவல்லாமல் 16, 19, 281, 174, 338, 475, 481, 485, 487, 488, 489, 490, 492, 493, 501, 502, 503, 135, 282, 1158, 1232, 1260, 1499, 1152, 1166, 1280 ஆகிய பாடல்களிலும் தன்மை அணி அமைந்துள்ளது.

2.உவமை அணி

ஒருவன் தான் கூறக் கருதிய பொருளை அதனோடு ஒப்புமை உடைய மற்றொரு பொருளோடு இயைபுபடுத்திக் கூறுவது உவமை அணியாகும்.

உருவார் பிறவிக்கண் இன்னம் புகப் பெய்து
திரிவாயென்று சிந்தித்தி என்றதற் கஞ்சி
இருபாடெரி கொள்ளியினுள் எறும்பேபோல்
உருகாநிற்கும் என்னுள்ளம், ஊழி முதல்வா! (எட்டாம் திருமொழி,2025)

திருமாலே! பிரளய காலத்தில் உலக முழுவதையும் வயிற்றில் வைத்துப் பாதுக்காக்கிற தலைவனே! பலவகைப் பிறப்புக்களில் இன்னமும் என்னைப் பிறக்க வைத்துத் திரியக் கடவாய் என்று எண்ணுகின்றாயோ என்று பயந்து இருபுறத்திலும் நெருப்புப் பற்றி எரியும் மரக்கட்டையின் நடுவில் தவிக்கும் எறும்பு போல் என் உள்ளம் உருகித் தவிக்கின்றது என்று ஆழ்வார் சொல்கிறார். இப்பாசுரத்தில் 'போல' என்னும் உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதால் இது உவமை அணி ஆயிற்று.

மேலும், கீழ்க்கண்ட பாசுரங்களில் இதுபோன்ற உவம உருபுகள் இடம் பெறுகின்றன. அந்தப் பாசுர எண்கள்: 24, 30, 36, 93, 94, 86, 108,271, 273, 477, 478, 494, 495, 496.

3.உருவக அணி

உவமானம், உவமேயம் என்னும் இரண்டுக்கும் வேற்றுமை இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும். ரூபகம் என்னும் சமற்கிருதச் சொல்லே உருவகம் என்றாயிற்று.

பவ்வ நீருடை ஆடையாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியாப் பவனம் மெய்யா
செவ்வி மாதிர மெட்டும் தோளா, அண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர் (திருவிருத்தம்,2550)

திருமாலுக்குக் கடல்நீரே உடையாகவும், உலகப் பரப்பளவு பாதங்கள் ஆகவும் காற்றே திருமேனியாகவும் எட்டுத் திசைகள் திருத்தோள்கள்களாகவும் அண்டமே திருமுடியாகவும் உருவகப்படுத்தியுள்ளார் ஆழ்வார். மேலும் இதுபோன்ற உருவகம் பின்வரும் பாடல்களிலும் காணப்படுகின்றன. அவை : 2946, 2724, 269, 2182, 2134, 2546.

4.விரோத அணி

இவ்வுலகத்தில் ஒன்றற்கொன்று மாறுபட்ட சொற்களும் உண்டு; பொருள்களும் உண்டு. அவற்றைக் கொண்டு மாறுபாட்டுத் தன்மையின் விளைவு தோன்றக் கூறுவது விரோத அணியாகும். இதற்கு 'முரணனி' என்னும் வேறு பெயரும் உண்டு.

நல்குரவும் செலவும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய் (மூன்றாம் திருவாய்மொழி, 3365)

இதில் வறுமை, செல்வம், நரகம், சொர்க்கம், பகை, நட்பு என்பன ஒன்றோடு ஒன்று மாறுபட்டு நிற்பதால் இது விரோத அணி ஆயிற்று. மேலும் இதுபோன்ற முரண்பாடான சொற்கள் கீழ்க்கண்ட பாடல்களில் காணப்படுகின்றன. 3366, 3367, 3368, 3369, 3370, 3374, 3535.

5.அதிசய அணி

கவிஞன் தான் கூறக் கருதிய ஒரு பொருளின் உண்மைத் தன்மையினை உள்ளபடி கூறாமல் உயர்த்திக் கூறுதலை விரும்புவான். அக்கவிஞனின் கூற்றானது சான்றோருக்கும் வியப்பைத் தருவதாய் உலக இயல்புக்கு மாறானதாய் அமைவதே அதிசய அணி ஆகும். இது உயர்வு நவிற்சி அணி என்றும் அழைக்கப்படும்.

சாறுகொண்ட மென்கரும் பிளங்கழை தகைவிசும்புற மணிநீழல்
சேறு கொண்ட தண்பழனத் தெழில்திகழ் திருவயிந் திரபுரமே
(பெரிய திருமொழி - முதல் திருமொழி,1157)

இப்புனிதத் தலம் ஒன்றோடொன்று நெருங்கி, சாறு நிறைந்து கரும்புகள் தடை செய்யும் ஆகாயத்தைத் தொட்டு வளர்ந்திருப்பதால் அதன் சாறு வழிந்து கழனிகள் சேறு நிறைந்ததாய்க் காணப்படுவதால் இது உயர்வு நவிற்சி அணி எனப்படும். இவையல்லாமல் 1179, 341, 1153, 1231, 1235, 1243, 1297, 1362, 2356, 2370, 2484 ஆகிய பாடல்களிலும் அதிசய அணியின் கற்பனைத் திறன்கள் மிக்குக் காணப்படுகின்றன.

6.தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மேல் கவிஞன் தான் கூறக் கருதிய பொருளை ஏற்றிச் சுவைபட உரைப்பது தற்குறிப்பேற்றணியாகும்.

சோலைத்தலைக் கண்மாமயில் நடமாட மழைமுகில் போன்றெழுந்து
எங்கும் ஆலைப்புகை கமழும் அணியாளம்மானே

(பெரிய திருமொழி - ஐந்தாம் திருமொழி.1189)

மயில்கள் மேகங்களைக் கண்டு தோகை விரித்துக் கூத்தாடுவது இயல்பு. ஆனால் ஆழ்வார் கரும்பாலைகளில் கருப்பஞ்சாறு அடுவதனால் விசேசமாகப் புகைகிளம்பி எங்கும் பரவியிருப்பதைக் கண்ட மயில்கள் அப்புகைத்திரளை மேகத்திரளாக மயங்கிக் களித்துக் கூத்தாடுகின்றனவாம் என ஏற்றிக் கூறியதால் இது தற்குறிப்பேற்ற அணி ஆகும். இவையல்லாமல் 1154, 1752, 2529, 2484, 2515, 2519 ஆகிய பாடல்களிலும் தற்குறிப்பேற்ற அணி காணப்படுகின்றது.

7.சொற்பொருள் பின்வரு நிலையணி

முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடத்தும் வருவது சொற்பொருட் பின்வரு நிலையணி ஆகும்.

கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்
கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்... (ஆறாம் திருமொழி, 3288)

கடல்களால் சூழப்பட்ட இந்த உலகத்தைப் படைத்தும் நானே என்றும், இந்த உலகமாக இருப்பதும் நானே என்றும் 'நானே' என்ற சொல் பலவிடத்தும் வந்து ஒரே பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. இவையல்லாமல் 3289, 3290, 3291, 3292, 3293, 3294, 3295, 3296, 3297, 3507, 3474, 3408, 3536 ஆகிய பாடல்களிலும் சொற்பொருள் பின்வரு நிலையணி வந்துள்ளது.

முடிவுரை

படைப்பாளனின் அறிவுச் சிறப்பையும், கற்பனைத் தன்மையையும் வெளிப்படுத்தக் கிடைத்த களமே படைப்பு. அப்படைப்பில் தான் கூறவந்த பொருளை வாசகர்க்குக் கொண்டுசேர்க்க வருணனை, கற்பனை உள்ளிட்ட புலமைநலங்களைத் தாண்டி அணிநலன்களை இடம்பெறச் செய்வதும் படைப்பாளனின் படைப்புத் திறனைக் காட்டுவதாக அமையும். அவ்வகையில், திருமாலின் அருட்சிறப்புகளைப் பாசுரங்களாகப் பாடிய ஆழ்வார்கள் பல்வேறு அணிகளைக் கையாண்டு சிறப்பித்துள்ளனர். இதனை அவர்கள் பாடிய நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின்வழிக் கண்டுகொள்ள முடிகின்றது.

துணைநின்றவை

- கண்ணன் இரா., 2003, அணியிலக்கண வரலாறு, கூத்தன் பதிப்பகம், சென்னை.
- பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ சுவாமிகள் (பதி.), 2013, நாலாயிர திவ்வியப் பிரபந்தம், வனிதா பதிப்பகம், சென்னை.
- பிரஸில்லா அ., 2007, ஆழ்வார் தாலாட்டு, சேகர் பதிப்பகம், சென்னை.
- ....., 2002 (21ஆம் பதி.), தண்டியலங்காரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 மே 2018 மலர்:4 இதழ்:13 155

மதிப்பிடப்பெற்றது

‘தவுட்டுக் குருவி’ எழுப்பும் கலகக்குரல்

முனைவர் வீ.மீனாட்சி
உதவிப் பேராசிரியர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 17
mahizhnila@gmail.com

படைப்பிலக்கியம் என்பது மனித மனவுணர்வுகளின் உந்துதலால் வடிவமைக்கப்படுகிறது. இந்த உணர்வுகள் உரிமை வேட்கையின் தூண்டுதலால் எழும்போது இலக்கியவெளியில் பேரதிர்வை ஏற்படுத்துகின்றன. இதனடிப்படையில் இன்றைய தமிழிலக்கிய வெளியில் தலித்தியம் குறித்த படைப்புகள் விளிம்புநிலை மக்களின் மனக்குமுறல்களை வெளிப்படுத்தும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை ஒடுக்கப்பட்ட பெருந்திரள் மக்களின் கலகக்குரலாக அமைந்துள்ளன. சமூகத்தில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் வலிகளை வீரியத்துடன் எடுத்துரைக்கும் நோக்கில் பூமணி, கரு.அழ.குணசேகரன், சோ.தர்மன், சிவகாமி, பிரதிபா ஜெயச்சந்திரன், சுதாகர் கதக், சந்துரு, தய்.கந்தசாமி, மதிவண்ணன், ஸ்ரீதர கணேசன், பாப்லோ அறிவுக்குயில், பெருமாள் முருகன், ரவிக்குமார், விழி பா.இதயவேந்தன், அழகிய பெரியவன், உஞ்சைராசன், ராஜ்கௌதமன், அன்பாதவன், ஆதவன் தீட்சண்யா, அன்பழகன், பாரதி வசந்தன் எனப் பல்வேறு தலித் எழுத்தாளர்கள் சிறுகதை, புதினம், புதுக்கவிதை, நாடகம் என அனைத்துத் தளங்களிலும் முத்திரை பதித்து வருகின்றனர்.

இவர்களுள் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் தனது அனுபவ மொழியால் புதிய செல்நெறியை உருவாக்கியவர் எழுத்தாளர் பாமா. இவரின் *‘தவுட்டுக் குருவி’* எனும் சிறுகதைத் தொகுப்பின்வழி, தலித் மக்கள் எழுப்ப வேண்டிய கலகக்குரலைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தலித் - பொருள் விளக்கம்

“தலித் என்ற சொல் மராட்டிய மொழியிலிருந்தும் இந்தியிலிருந்தும் நேரடியாகத் தமிழுக்குப் பெறப்பட்டது. இது ‘தல்’ என்ற எபிரேய மூலச்சொல்லிலிருந்து பிறந்தது. பைபிளை இந்தியில் மொழியாக்கம் செய்தபோது எடுத்தாளப்பட்ட சொல். இந்தத் ‘தல்’ என்ற சொல்லைத் தமிழ் பைபிளில் ‘ஏழைகள்’ என்றே மொழியாக்கம் செய்துள்ளனர்” (க.பஞ்சாங்கம், 2011:244).

> *“தமிழகத்தில் திராவிட இயக்கங்களும் பொதுவுடைமை இயக்கங்களும் உருவான நேரத்தில் தென்னிந்தியாவில் வாழ்ந்த பண்டைய திராவிட இனத்தினரை பஞ்சமர் என்ற சொல் தலித் மக்களிடையே மிகவும் இழிவாகக் கருதப்பட்ட நேரத்தில் தாழ்த்தப்பட் வகுப்பினர் அட்டவணை இனத்தவர் என்றும் ஆந்திராவில் ஆதி ஆந்திரர் என்றும் கர்நாடகாவில் ஆதி கர்நாடகர் என்றும் தமிழகத்தில் ஆதி திராவிடர் என்ற வழக்கும் வழங்கலாயிற்று”* (விழி பா.இதயவேந்தன், 2009:10).

எனும் கூற்றுத் தமிழகத்தில் தலித் என்பவர் யார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. பொதுவாக,

> *“தலித் என்பவர் யார் என்ற கேள்விக்கு, தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், நிலமற்றவர்கள், புதிய பௌத்தர்கள், உழைக்கும் மக்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மதத்தின் பெயராலும் சுரண்டப்படும் அனைவருமே தலித்துகள் தான் என 1972 ஆம் ஆண்டு தலித் பேந்தர்கள் பம்பாயில் அறிவித்ததைக் கெயல் ஓம்வெத் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகின்றார்” (மேலது, 2009:11)*

இத்தகைய தலித் மக்கள் தலைமுறை தலைமுறையாகச் சமுதாயக் கட்டமைப்பால் பொருளாதார ரீதியாகவும் கல்வி மற்றும் அரசியல் ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட நிலையினை

எடுத்துரைப்பதாக மட்டுமல்லாமல் அம்மக்கள் தம் அடிமைவாழ்வைத் தகர்த்தெறியச் செய்ய வேண்டிய செயல்பாடுகளை ஆழமாக, வலிமையாக, கலகக்குரலாக எழுப்பியுள்ள பாமாவின் *'தவுட்டுக் குருவி'* சிறுகதைத் தொகுப்பானது இருபத்தைந்து சிறுகதைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. தனது 31 ஆண்டு ஆசிரிய அனுபவத்தில் தான் சந்தித்த மனிதர்கள் தனக்குள் ஏற்படுத்திய தாக்கங்களே இக்கதைகளின் களம் என ஆசிரியர் தன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதற்கேற்ப இச்சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதைகள் பெரும்பாலானவை குழந்தைகளின் உலகினைக் காட்சிப்படுத்துவனவாக அமைக்கப்பட்டுள்ளன. மனித வாழ்வில் குழந்தைப்பருவம் என்பது மெழுகில் பொம்மை செய்வது போன்றது. மெழுகை நெகிழச்செய்து விரும்பும் வடிவம் கொடுப்பது போல இப்பருவத்தில்தான் மனிதன் இச்சமூகத்தில் வாழ்வதற்குத் தகுந்தபடியான பண்புகள் பெற்றவனாக உருவாக்கப்படுகின்றான். இப்பண்புகள் குழந்தையின் மறைவுள்ளத்தில் (*Unconscious mind*) பதிவாக அமைந்து பிற்காலத்தில் அதன் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன எனும் உளவியல் ஆய்வாளர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இச்சிறுகதைத் தொகுப்பை அணுகும்போது மேல், கீழ் வர்க்க அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்பில் சாதி வேற்றுமை என்பது குழந்தைப்பருவம் முதலே கற்பிக்கப்படுவதைக் *'கொண்டாட்டம்'* சிறுகதையில் மங்களம் டீச்சர், கரோலின் மேரி ஆகியோருக்கிடையேயான பின்வரும் உரையாடல் இனம் காட்டுகின்றது.

''என்ன, மழ பேயவும் இதாஞ் சாக்குன்னு பாதிப் பேருக்கு மேல நின்னுட்டானுக போல'' டீச்சர் கேட்டாங்க.

''ஆமா டீச்சர். இந்தச் சேரிப் பசங்கல்லாம் நின்னுட்டாங்க டீச்சர்'' கரோலின் சொன்னா.

''... நாங்கள்ளாம் ஊர்ப்பசங்க டீச்சர்... எங்கம்மா அப்படித்தான் சொல்லுவாக...

இவுங்கெல்லாம் காலனிப் பசங்க டீச்சர்...

அவுங்கள்ளாம் தலித்துங்க டீச்சர்'' ரோஸலின் ரொம்ப அழுத்தந் திருத்தமாகச் சொன்னா.

''இந்த வயசுலே ஒங்களுக்குத் தலித்துகள்ளாம் தெரியுமா?''

''ஆமா டீச்சர். தலித்துங்கன்னா கீச்சாதிப் பசங்களாம் டீச்சர்; நாங்கள்ளாம் மேச்சாதிப் பசங்க டீச்சர்''

இப்பதிவானது குழந்தைப்பருவம் முதலே சாதிவெறியை ஊட்டி வளர்க்கின்ற மேல்வர்க்கத்தினரின் போக்கு, காலங்காலமாக எத்தகைய கட்டமைப்பை உருவாக்கினார்களோ அதனைத் தக்கவைக்க அவர்கள் கைக்கொள்ளும் உத்தியைத் தெளிவாக்குகின்றது.

தலித் பிள்ளைகள் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்று மேல்சாதியினர் ஏற்படுத்தி வைத்திருக்கும் கருத்தாக்கத்தை *'வயிறும் வாழ்க்கையும்'* எனும் சிறுகதை எடுத்துரைக்கின்றது. இச்சிறுகதையில் மேல்சாதிப் பெண் ஒருத்தி தன் பிள்ளையை வேறு பள்ளியில் சேர்க்கக் காரணம் சொல்லும்போது, சுந்தரி டீச்சரிடம் கீழ்க்காணும் முறையில் உரையாடுகிறாள்.

''அதுவந்து டீச்சர் இந்த ஸ்கூல்ல பாதிக்குமேல சேரிப்பசங்க படிக்கிறாங்களா. எங்க பிள்ளைக அதுங்களோட சேந்தா, அதுங்களோட கெட்ட பழக்கம் எங்க பிள்ளைங்களுக்கும் வந்துரும் பாருங்க. அதனாலதான் ... அந்தச் சாதியப் பத்தி ஒங்களுக்குத் தெரியாது டீச்சர். திருட்டு பசங்க, சுத்தமில்லாத பசங்க... திருடித் திங்கிற பசங்க டீச்சர்.''

என்று பாமா பதிவு செய்திருப்பது, மேல்சாதியினரின் மனநிலை கீழ்சாதி மக்களை எந்த அளவுக்குத் தாழ்வாகக் கருதுகிறது என்பதை வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. கல்விநிலையங்களில் தலித் பிள்ளைகள் ஆசிரியரால் சாதியின் அடிப்படையில் அடையாளம் காட்டப்படும் அவலத்தையும் *'அந்த...'* எனும் சிறுகதையில் குறிப்பிட்டுள்ளார்.

தலித் குழந்தைகள் வளர்க்கப்படும் சூழலில் அவர்கள் மேல்சாதியினருக்கு அடங்கிப் போகும்படி அறிவறுத்தப்படுவதை, *'கோடை மழை'* கதையில் வரும் மக்காளி, தன் மகன் தங்கராசு பள்ளிக்கூடத்தில் அடிவாங்கி வரும்போது,

"யாராச்சும் ஒனிய அடிச்சாக்கூட நீயித் திருப்பி அடிக்கக் கூடாதுடா. நம்மளால அவுகள எதுத்துச் சண்ட போட முடியாது. பெசாரியாரியா மூர்க்கத்தனமா இருக்கலாம். நம்மளப்போல ஆளுகளுக்கெல்லாம் கோவமே வரக்கூடாதுடா... வாத்தியார் ரொம்ப அடிச்சார்னா கையெடுத்துக் கும்புட்டு அடிக்காதிங்க சார்னு சொல்லுடா. வேற நம்ம என்னடா செய்ய முடியும்? சொல்லு"

என்று தலித் குழந்தைகள் வளர்கின்றபொழுதே எதிர்க்கும் தன்மை தவறு எனும் கற்பிதம் புகுத்தப்பட்டு வளர்க்கப்படுவதைப் பாமா பதிவு செய்துள்ளார்.

மனிதனின் உள்ளார்ந்த மனஆற்றல்களை, அறிவுத்திறன்களை வெளிப்படுத்தி அதனை வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் செய்வது கல்வி. மனிதனின் சுயத்தை அறிந்துகொள்ளச் செய்வது கல்வி. இத்தகைய கல்வியானது ஆண்டைகளால் தலித் மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்திருப்பதை *'விட்டு விடுதலையாகி'* கதையில் அனந்தம்மாள் தன் மகன் எளையராசாவிடம், தான் ஆண்டைகளுக்கு அடிமையான வாழ்வு குறித்துக் கூறுகையில்,

"நம்மள ஒத்த எழுத்து படிக்க உடாமெ கெடுத்ததே அந்தாளு தான். சின்னதுல இருந்தே அவரோட ஆடுமாடுகள் மேச்சு அவருக்குச் சொத்து சேத்து வச்சிட்டு இன்னைக்கு நாம முட்டாக் கழுதைகளா அலைறோம்"

என்று குறிப்பிடுவதன்வழி அறிய இயலுகிறது.

தஞ்சை மாவட்டப் பண்ணையார்களின் நிலங்களில் பண்ணையாள் என்ற உழைக்கும் மக்கள் பட்ட அவலத்தை கா.வீரையன் 'தமிழ்நாடு விவசாய இயக்கத்தின் வீர வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுவதாக ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிடும் செய்தி பின்வருமாறு:

> *"ஒரு மிராசுதாரிடம் வேலை செய்யும் பண்ணையாள் அந்த மிராசதாரின் இடத்தில்தான் குடிசை போட்டுக் குடியிருக்க வேண்டும்... அவன் உடல்நிலை சரியில்லை என்று வேலைக்கு வராமல் இருந்தால் மாட்டுச்சாணத்தைத் தண்ணீரில் கரைத்து அவனுக்குக் கொடுக்கப்படும். அதை அவன் குடிக்க வேண்டும். அவன் மனைவியும் பிள்ளைகளும் மிராசுதார் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். மாடு மேய்க்க வேண்டும். பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாது; படிக்க வைக்கக் கூடாது" (2015:54).*

என்பது குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது.

தலித்துகள் வாழ்வு முன்னேற்றம் பெற அடிப்படைக் கல்வி பெறுவது அவசியம். அவர்கள் உயர்கல்வி கற்று, தங்களுக்குள் இணைத்து, சமூகச் சிந்தனையுடன் சாதியத்தை எதிர்க்க வேண்டும் எனக் குரல் கொடுத்தார் அம்பேத்கார். அவர் கூற்றுப்படி, கல்வி கற்க முனையும் தலித் பிள்ளைகள் கல்வி நிலையங்களில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தனது படைப்பில் வெளிப்படுத்தியுள்ள பாமா, தலித்துகளின் முன்னேற்றத்திற்கான அடுத்தகட்ட நகர்வாக, "கற்க! இணைக! கலகம் செய்!" எனும் அம்பேத்காரின் பொன்மொழிகளை முன்மொழியும் மருதமுத்துவை *'ஏடாகூடம்'* எனும் கதையில் பேசவைத்துள்ளார். நன்றாகப் படிக்கும் திறமை பெற்ற மாணவன் மருதமுத்து சாதியின் அடிப்படையில் அடையாளம் காட்டப்படும்போது அவனது மனவோட்டத்தை,

"நாம நல்லாப் படுச்சாக்கூட அத ஏத்துக்க முடியல. இவுகளுக்கு எஸ்சி ன்னா கருப்பா இருப்பான்; முட்டாளா இருப்பான்; படிக்க லாயக்கில்லாதவனாகத்தான் இருப்பான்; அசிங்கமா இருப்பான்; அசுத்தமா இருப்பான், இப்படியே சொல்லிச் சொல்லி இப்ப நாம நல்லாப் படிச்சாலோ, சுத்தமா வந்தாலோ இவுகளால சீரணிச்சுக்க முடியல. அம்பேத்கார் சரியாத்தான் சொல்லி இருக்காரு. முதல்ல நல்லாப் படிக்கணும். அப்புறம் எல்லாரும் இணைஞ்சு இந்த சாதி

அமைப்ப ஒழிக்கிறதுக்குக் கலகம் செய்யணும். ஆமா, அதுனால மொதல்ல இந்த கல்விங்ற ஆயுதத்தக் கைல எடுத்துக்கணும்''

என்று காட்சிப்படுத்தியிருப்பதன்வழி உணர முடிகின்றது. *'விட்டு விடுதலையாகி'* எனும் கதையில் ஆண்டைகளிடம் அடிமைப்பட்ட குடும்பத்திலிருந்து வரும் எளையராசா ஆண்டையை எதிர்க்கும் துணிவு பெறுவதை,

''ஏங்கிட்ட வேல செஞ்ச, கூலி வாங்கித் தின்ன காலமெல்லாம் மறந்தா போச்சு? ஏ முன்னாலயே சவுடாலா நாற்காலியில் ஒக்காந்துக்கிட்டு, ஏங்கிட்டயே பழத்துக்கு ரூவா கேக்குற நாயி? எல்லாம் நேரம்டா!''

''நேரந்தான் அருப்புக்கோட்ட வண் வார நேரந்தான். சட்டுனு நாலு ரூவாய எடுங்க.'' குப்ப(எளையராசா) சொன்ன தோரணயப் பாத்து பரசுராமரு அசந்து போனாரு''

என்று தலித் மக்கள் கலகக்குரல் எழுப்பும் காலம் வந்துவிட்டது எனும் தனது உரத்த சிந்தனையினைப் பாமா தலித் சமூகத்தின் முன்னால் வைத்துள்ளார்.

> *''தலித் இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட சாதியின் அடையாளமாய்க் குறுகிப் போகாமல் பரந்துபட்ட, ஒடுக்கப்படும் எல்லா தேசிய இன மக்களின் குரலாகவும் ஒலிக்க வேண்டும். தலித் படைப்புகள் என்பது ஏதோ ஏழ்மையை, வறுமையைச் சித்திரிக்கிற படைப்பாக மட்டுமே உள்ள பார்வை அகல வேண்டும். அடிமைவாழ்வைச் சித்திரிப்பதோடல்லாமல் அதன் விலங்குகளை நொறுக்குகிற முற்போக்கான அம்சமாக அதன் போக்கு அமைய வேண்டும்''*

எனும் விழி பா.இதயவேந்தனின் கருத்திற்கேற்ப, பாமாவின் இச்சிறுகதைத் தொகுப்பானது தலித் மக்களின் வாழ்வியலைச் சித்திரிப்பதோடு அம்மக்களின் மேம்பாட்டிற்கான வழிமுறைகளையும் இனங்காட்டியுள்ளது. மேலும், குழந்தைகளை மையப்படுத்திக் கதைக்களத்தை அமைத்து, இனிவரும் காலங்களில் தலித் மக்களின் வாழ்வு மேம்பட எங்கிருந்து சிக்கலைக் களைய வேண்டும் என்பதை அறிவுறுத்தியிருப்பது தலித் படைப்புவெளியில் புது முயற்சியாக அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

- இதயவேந்தன் விழி பா., 2009, *தலித் எனும் கலகக்குரல்*, ருத்ரா பதிப்பகம், தஞ்சாவூர்.
- சிவசுப்பிரமணியன் ஆ., 2015, *தமிழகத்தில் அடிமை முறை*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில்.
- தூரன் பெ., 2012, *குழந்தை உள்ளம் உளவியல் நூல்*, சாரதா பதிப்பகம், சென்னை.
- பஞ்சாங்கம் க., 2011, *இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்*, அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.
- பாமா, 2015, *தவுட்டுக் குருவி*, விடியல் பதிப்பகம், கோவை.
- மல்லிகா அரங்க., 2011, *தலித் அறம்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- வாசுகி சி., 2014, *தலித்தியச் சிக்கல்களும் தீர்வுகளும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு

ம.பெட்ரிக் ஜெபராஜ்
தமிழ் உதவிப் பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17
fetricjeba@gmail.com

தமிழின் சிறந்த படைப்பாளிகளில் தனக்கெனத் தனி நடை அமைத்துக்கொண்டு புதினம், சிறுகதைகள் எழுதிப் புகழ் பெற்றவர் சுஜாதா. இவரது இயற்பெயர் ரங்கராஜன். இவர் ஒரு பொறியியல் பட்டதாரி. சென்னை அண்ணா பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட எம்.ஐ.டி பொறியியல் கல்லூரியில் எலக்ட்ரானிக்ஸ் மின்னணுவியல் படித்தவர். மத்திய அரசு விமானப் போக்குவரத்து இலாகாவிலும் பெங்களூர் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திலும் 30 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர். தமிழில் சிறுகதை, புதினம், விளக்கவுரை, ஆய்வுக்கட்டுரைகள், அறிவியல் கேள்வி பதில்கள் என முதன்மையான எழுத்தாளராகத் தடம் பதித்தவர். 'அம்பலம்' என்னும் இணைய இதழில் பொறுப்பாளராகப் பணிபுரிந்தவர். திரைப்படத்துறையில் கதை, வசனம் எழுதி வந்தவர். இவர் எண்ணற்ற நூல்கள் எழுதியிருப்பினும் இவரது 'விஞ்ஞானச்சிறுகதைகள்' தொகுப்பில் மொத்தமுள்ள 50 சிறுகதைகளில் 6 சிறுகதைகளை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அச்சிறுகதைகளில் தொடக்கம் வளர்ச்சி முடிவு எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

சிறுகதை

சிறுகதை என்பது பண்பு, குறுநிகழ்ச்சி, அனுபவம், சிக்கல், வெற்றி போன்ற ஏதாவதொரு(மனித வாழ்வின்) சிறு பகுதியைக் கருவாகக் கொண்டு இயல்வது. சிறுகதைக்குத் தொடக்கம், வளர்ச்சி, முடிவு இருக்க வேண்டும் என்பது முன்னோர் வகுத்த கோட்பாடு. நிகழ்வு, பண்பு, சூழல் ஆகியவற்றுள் ஏதாவதொன்றின் பின்னணியில் தான் உலகக் கதைகள் இயங்குகின்றன என்பார் ஆர்.எல்.ஸ்டீவன்சன். அரைமணி முதல் 2 மணிக்குள் படித்து முடிக்கக் கூடியது சிறுகதை என்பர் எட்கார் ஆலன்போ. சுருங்கச் சொல்லலும் சுருக்கெனச் சொல்லலும் இதன் உத்திகள். எனவே நீண்ட வருணனைக்கும் நிகழ்ச்சி மற்றும் பண்பு விளக்கத்திற்கும் இங்கே இடமில்லை. 'குதிரைப் பந்தயம்' போல தொடக்கமும் முடிவும் சுவை மிக்கனவாக இருத்தல் வேண்டும் என்பார் செட்ஜ்.

அறிவியல் புனைகதை

முதலில் 'சைன்ஸ்ஃபிக்ஷன்' என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல் 'விஞ்ஞானக்கதை' அல்லது 'அறிவியல் புனைகதை' என்பதாகும். தமிழில் அறிவியல் சார்ந்த புனைகதைகள் மிகவும் குறைவு.

கோத்திக்(*Gothic*) வகைக் கதைகளிலிருந்துதான் விஞ்ஞானக் கதைகள் வந்தன என்பது ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். 'கோத்திக்' என்றால் இயற்கையை மீறின அல்லது அதற்கு மேம்பட்ட அல்லது வினோதமான என்பது பொருள். கதைமாந்தருக்கு இயற்கைக்கு அதிகமான சக்தி இருத்தல், அசாதாரண சம்பவங்கள் நிகழ்வதாக இருத்தல்.

'அறிவியல் புனைகதைகளில் அறிவியல் அறிந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. எதிர்காலத்தைத்தான் எழுத வேண்டும் என்ற கட்டாயமில்லை. புராண காலத்துக் கதைகளைக் கூட அல்லது புராண காலத்து கதாப்பாத்திரங்களை நிகழ்காலத்திற்குக் கொண்டு வந்தாலே அது வினோதமான புனைகதைதான்' என்பது சுஜாதாவின் கருத்து.

அறிவியல் கதைகளில் காலமுரண்பாடு - இடமுரண்பாடு - கலாச்சார முரண்பாடு என்ற ஏதாவது வினோதமான ஒரு முரண்பாடு இருந்தாலே போதும். எடுத்துக்காட்டாக புதுமைப்பித்தனின் 'கடவுளும் கந்தசாமி பிள்ளையும்' கதையில் சிவபெருமான் வருவது. கைலாசத்திலிருந்து சென்னை பிராட்வே வருவது. ரிக்ஷாவில் பயணிப்பது இதுபோல் அசாதாரண கதாப்பாத்திரங்கள் அமைப்பது.

கோத்திக் கதை இலக்கியங்களில் இருப்பதை அறியலாம். சீவகசிந்தாமணியில் சச்சந்தனின் கர்ப்பிணி மனைவி மயிற்பொறி மேல் ஆகாய வழியில் சென்று ஒரு சுடுகாட்டில் இறங்கிச் சீவகனைப் பெற்றாள். அதேபோல் கம்பராமாயணத்தில் வரும் புஷ்பக விமானம், கலிங்கத்துப் பரணியில் பேய்களின் முறையீடு, மணிமேகலையில் வரும் அட்சயபாத்திரம், காப்பியங்களில் வரும் உருமாற்றம், விக்கிரமாதித்தன் கதைகள், தமிழக நாட்டுப்புறக் கதைகளில் ஒரு சில, மந்திர தந்திரக் கதைகள் ஆகியவற்றைக் கூறலாம்.

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம், வளர்ச்சி, முடிவு

இங்கு ஆறு சிறுகதைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 1.'ராகவேனியம் 227' 2. '1000 வருடங்கள் உயிருடன் இருப்பது எப்படி?' 3. கம்ப்யூட்டரே ஒரு கதை சொல்லு என்ற மூன்று சிறுகதைகளும் ஒன்றன் தொடர்ச்சியாக மற்றொன்று அமைகின்றது. இம்மூன்று கதைகளிலும் டாக்டர், மாலதி, பையா இக்கதாபாத்திரங்கள் பொது. 4. 'காலயந்திரம் 5. 'நச்சுப்பொய்கை' 6. 'ஒரு பூச்சியின் உரையாடல் ஆகிய இந்த ஆறுகளிலும் தொடக்கம், வளர்ச்சி, முடிவு எவ்வாறு அமைகின்றன என்பதைக் காண்போம்.

1.ராகவேனியம் 277

1.ராகவேனியம் 277 எனும் சிறுகதையில் டாக்டர் எப்படிப்பட்ட ஆய்வு வல்லுநர் என்ற அறிமுகப்படுத்தலோடு தொடங்குகிறது. டாக்டர் 16 ஆண்டுகளாகக் கண்டறிந்த சிறிய பிளாஸ்டிக் வடிவத்திலான சிவப்பு நிற ' ராகவேனியம் 277' எனும் சக்தி வாய்ந்த வெடிபொருளைத் தன் மகள் மாலதி தொலைத்துவிடுகிறாள். அப்பொருள் ஆறுமணி நேரம்தான் அமைதியாக இருக்கும். அதற்கு மேல் அது வெடித்துச் சிதறிவிடும். அப்படி வெடித்தால் உலகமே அழிந்துவிடும். அதைத் தேடுவதாக அச்சிறுகதைகயின் வளர்ச்சிநிலை அமைகிறது. முடிவில் டாக்டர் தான் குறித்த நேரம் தாண்டியும் அது வெடிக்கவில்லை. காரணம் தனது ஆய்வில் டாக்டர் ஏதோ தவறு செய்துவிட்டார் என்று கதை முடிகிறது.

2. 1000 வருடங்கள் உயிருடன் இருப்பது எப்படி?

தொடர்ச்சியாக அமைந்த கதை 1000 வருடங்கள் உயிருடன் இருப்பது எப்படி? என்ற சிறுகதை. 1000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த செந்தில்நாதப் புலவரின் வாழ்க்கை முறை பற்றி ஒரு கருத்துக்கூட்டம் நிகழ்கிறது. அக்கூட்டம் முடிந்ததும் டாக்டரை ஒருவர் சந்திக்கிறார். அவர் தான் செந்தில்நாதப் புலவர் என்றும் டாக்டரை நம்ப வைக்கிறார். இது கதையின் தொடக்கம் கதையின் வளர்ச்சி நிலைகளில் 1000 ஆண்டு வாழ்வதற்கான இரகசியங்களை செந்தில்நாதப் புலவர், டாக்டருக்கும் பையாவுக்கும் உரைப்பதாக வருகிறது. அதற்கான மூலிகைகள் சிலவற்றைப் பட்டியலிட்டு வாங்கிவரச் சொல்வதாகக் கதை நகர்கிறது. செந்தில்நாதப் புலவர் கொடுத்த மூலிகைச் சாற்றினை டாக்டரும் அவரது மாணவரான பையாவும் அருந்துகிறார்கள். முடிவில் இப்பொழுதுதான் மருந்து சாப்பிட்டிருக்கிறேன் 2069இல் பார்ப்போம் என்று கதை முடிவில்லாமல் முடிகிறது. இச்சிறுகதையின் முடிவு அடுத்துவரும் சிறுகதையான கம்ப்யூட்டரே ஒரு கதை சொல்லு' எனும் சிறுகதையில் அமைந்துள்ளது.

3. கம்ப்யூட்டரே ஒரு கதை சொல்லு

1000 வருடங்கள் உயிருடன் இருப்பது எப்படி? என்ற சிறுகதையின் தொடர்ச்சி 'கம்ப்யூட்டரே ஒரு கதை சொல்லு' எனும் சிறுகதையில் அமைந்துள்ளது. செந்தில்நாதப்புலவர் நாலு

டெரிலின் சட்டை, நாற்பது ரூபாய் சில்லறை, பால்பாயிண்ட் பேனா, ஒரு ரெயில்வே டைம்டேபிள் இவற்றுடன் ஓடிவிட்டார் என்கிற செய்தி கிடைக்கிறது.

கம்ப்யூட்டரே ஒரு கதை சொல்லு எனும் சிறுகதையின் தொடக்கத்தில் டாக்டர் ஒரு கதை சொல்லும் கம்ப்யூட்டார் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அது பேசாது ஆனால் நமக்குத் தேவையான கதை அம்சங்களைப் பதிவு செய்தால் அந்த அமைப்புடன் கூடிய கதையை கம்ப்யூட்டர் தட்டச்சு செய்தளித்துவிடும். எடுத்துக்காட்டாக கதை 50, கவர்ச்சி 50, நடை 2 என்று பதிவு செய்தால் அந்த அமைப்புடன் கதை வெளிவரும். இச்சிறுகதை முடிவில் டாக்டர் கண்டறிந்த கம்யூட்டர் அதிக மின்சாரத்தால் செயலிழந்ததாகக் கதை முடிகிறது.

4.காலயந்திரம்

இறந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பயணம் செய்யும் கால யந்திரத்தை வல்லுநர் ஒருவர் கண்டுபிடிப்பதாகவும், அந்த எந்திரத்தைப் பற்றிய அறிமுகமும் கதைத் தொடக்கமாக அமைகிறது. கால எந்திரத்தில் 'ஆத்மா' எனும் பெயர் கொண்ட ஒருவர் பயணம் செய்வதாகவும் அந்த எந்திரம் பல நூற்றாண்டுகளுக்கு முன் அரசர் காலத்திற்குக் கூட்டிச் செல்வதாகவும் கதை அமைகிறது. பின்னர் தொல்காப்பியர் பாடம் சொல்லிக் கொடுக்கும் பாட சாலைக்கு அழைத்துச் சென்று நகரப் பேருந்தில் சேர்க்கிறது. முடிவில் ஆத்மா பேருந்திலிருந்து இறங்கும்போது அவர் வைத்திருந்த கண்ட்ரோல் பெட்டியை யாரோ பிக்பாக்கெட் அடித்துவிட, எந்த நூற்றாண்டில் இருக்கிறோம் என அறியமுடியாமல் போகிறது. இக்கதையும் முடிவில்லாமல் அமைகிறது.

5.நச்சுப்பொய்கை

மகாபாரதக் கதையின் நிகழ்வுகளில் ஒன்று பாண்டவர்களின் வனவாசம் பன்னிரண்டு வருட முடிவுக்காலத்தில் தாகத்தால் நச்சுப்பொய்கையில் யுதிஷ்டிரன் அந்த நச்சுப்பொய்கையில் அசரிரீயின் கேள்விக்கு பதிலளிப்பதாக அமைந்திருந்தது. இச்சிறுகதையின் தொடக்கமும், வளர்ச்சியும் புராண காலத்தவையே! முடிவு மட்டும் சற்று வேறுபடுவதாக அமைகிறது.

6.ஒரு பூச்சியின் உரையாடல்

பிளேபாய் இதழில் வெளிவந்த 'ஜாக்ஷார்க்லி' என்பவர் எழுதிய சிறுகதையை சுஜாதா தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இச்சிறுகதையில் சிலந்தி வலையில் சிக்கி ஆபத்தில் மாட்டிக்கொண்ட 'குளவி' ஹென்றியை உதவிக்கு அழைப்பதாகக் கதை தொடங்குகிறது. குளவி பேசுகிறது. இக்கதையில் வரும் அக்குளவி கேட்டதைத் தரும் சக்தி வாய்ந்தது. ஹென்றியிடம் தன்னைக் காப்பாற்றினால் கேட்டதைத் தருவேன் என்கிறது. ஹென்றி குளவியைக் காப்பாற்ற, சிலந்தியை அடித்துக் கொன்று விடுகிறான். முடிவில் தன்னிடம் இதுவரை பேசியது குளவியல்ல சிலந்தி என்று முடிவு அமைகிறது.

முடிவுகள்

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைத் தொகுப்பிலிருந்து ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 6 சிறுகதைகளிலும் தொடக்கம் கதாப்பாத்திரத்தை அறிமுகப்படுத்துவதாகவும், சில வர்ணனைகள் கொண்டும் காணப்படுகின்றன. வினோதமான கருவி கதையில் வருகிறபோது அதைப்பற்றிய சிறப்புகள் கதைத் தொடக்கமாக அமைந்திருக்கின்றன.

வளர்ச்சி விறுவிறுப்பாகவும் படிப்பவரின் ஆர்வத்தைத் தூண்டும் விதத்திலும் அமைந்திருக்கின்றன.

கதையின் முடிவுகளில் எதிர்பாராத முடிவாக 1,3,6 ஆகிய சிறுகதைகளும், முடிவில்லாதவையாக 2,4 ஆகிய சிறுகதைகளும், 5-ஆம் சிறுகதை புராண காலத்தவையாக இருப்பினும் முடிவில் மட்டும் மாற்றம் கொண்டவையாகவும் அமைகின்றன.

இத்தகைய விஞ்ஞானச் சிறுகதைகள் சாதாரணக் கதைகளிலிருந்து வேறுபடுகின்றன. புதிய உலகத்தை, புதிய சூழலை வாசகர்க்கு அறிமுகப்படுத்துகின்றன.

துணைநின்றவை

- சுப்பிரமணியன் ச.வே., 2000, *தமிழ் இலக்கிய வரலாறு,* மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
- சுஜாதா, 2007(மூ.ப.), *விஞ்ஞானச் சிறுகதைகள்,* உயிர்மை பதிப்பகம், சென்னை.
- புதுமைப்பித்தன், 2006(நா.ப.), *புதுமைப்பித்தன் சிறுகதைகள்,* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு

ப.புவனேஸ்வரி
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 24

சமுதாயத்தில் மக்கள் பலவிதமான பிரச்சினைகளையும் சிக்கல்களையும் சந்திக்கின்றனர் என்றாலும் பெண்களின் உரிமைப் போராட்டமும் சமுதாயத்தில் முக்கிய பிரச்சினையாக அமைகின்றது. ஆதிகால சமுதாயத்தில் பெண்கள் அடிமைப் பட்டவர்களாக வாழ்ந்தனர். எனினும், அன்றைய அடிமைத்தனத்தைப் போக்க இன்றைய பெண்கள் விழிப்புணர்வுடன் சிந்திக்கத் தொடங்கி உள்ளனர். அவ்வகையில், பெண்கள் சமுதாயத்தில் எவ்வாறு ஆட்படுத்தப்படுகின்றனர் என்பதை ரமணிசந்திரனின் 'தீக்குள் விரலை வைத்தேன்' என்ற புதினத்தின் மூலம் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண் வளர்ப்பு

"உலகம் ஆண்-பெண் என்னும் இருபாலராலும் ஆக்கப்பட்டிருக்கிறது. இரண்டும் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது. இருபாலரும் ஒன்றி இயங்கினாலன்றி உலகம் நல்வழியில் நடைபெறாது" என்று ஆண் - பெண் நிலைப்பாட்டினைத் திரு.வி.க. குறிப்பிடுகின்றார். குடும்பத்தில் பிள்ளைகளை வளர்ப்பதில் தாய் தந்தை இருவருக்குமே சமபங்கு இருக்க வேண்டும். பிள்ளைகளைச் சிறந்தவர்களாக உருவாக்க வேண்டுமென்றால் அவர்களின்மீது இருவரும் அன்பும், கண்டிப்பும் காட்டி வளர்க்க வேண்டும். இப்புதினத்தில் வரும் பராசரன் தன் மனைவி தனலட்சுமியை மகள் மகிமாவைக் கண்டிப்பாக வளர்க்கவில்லை என்று குறை கூறக்கூடிய கதாப்பாத்திரமாக ரமணிசந்திரன் படைத்திருக்கிறார். இதனை,

> *"யாருடீ இவள்? உன் மகள்தானே? இதுவே ஆண்பிள்ளை என்றால், நான் பார்த்து வளர்த்திருப்பேன். ஆனால், பெண்ணைப் பெற்றுப் போட்டதோடு எல்லாம் தீர்ந்ததா? பெற்றவளாக இருந்து, அதை ஒழுங்காக வளர்க்க வேண்டாம்? இருபது வயதானால், மகளுக்குக் கௌரவமாக ஒரு கல்யாணம், காட்சி செய்து பார்க்கனுமே என்று, கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாம்"* (ப.14)

என்று கூறுவதிலிருந்து பெண் பிள்ளையை வளர்ப்பதில் தனக்குப் பொறுப்பில்லாதது போன்றும் மனைவிக்கே அதிக பொறுப்புண்டு என்றும் பராசரன் செயல்படுவதைப் புதின ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

பெண்ணின் பொறுமை குணம்

சமுதாயத்தில் பெண்கள் மென்மையுடையவர்களாகக் கருதப்படுகின்றனர். அம்மென்மைக் குணம் உடைய பெண்களுக்கு ஆண்கள் பலவிதமான இன்னல்களைச் செய்கின்றனர். ஒரு பெண் கணவனை எஜமானாக மட்டுமல்ல தெய்வமாகவும் மதிக்கின்றாள். கணவன் மனைவியைத் திட்டினாலும் அடித்தாலும் அவள் பொறுத்துக் கொள்வதோடு அவன் குடி, சூதாட்டம், ஒழுக்கக்கேடு ஆகியவைகளைக் கொண்டிருந்தாலும் எதிர்த்துக் கேட்கும் திறனின்றி அவனுக்கு ஆட்பட்டு வாழ வேண்டிய சூழலில் பெண் காணப்படுகிறாள்.

இத்தகைய பெண்ணடிமைத்தனம் இருபதாம் நூற்றாண்டிலும் நடைமுறையில் இருப்பதை, *"பெண் மக்களை இன்று ஆண் மக்கள் நடத்தும் மாதிரியானது மேல்சாதிக்காரன் கீழ்சாதிக்காரனை நடத்துவதை விட பணக்காரன் ஏழையை நடத்துவதை விட எசமான் அடிமையை நடத்துவதை விட மோசமானதாகும்"* என்ற பெரியார் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

ரமணிசந்திரனின் 'தீக்குள் விரலை வைத்தேன்' என்ற நாவலின் வாயிலாகப் பெண் எவ்வளவு பிரச்சனைகளைச் சந்தித்தாலும் எவ்வாறு பொறுமையுடன் இருக்கிறாள் என்பதைப் பதிவு செய்துள்ளார். இதனை,

> *''பகலெல்லாம் உடல் ஓய உழைப்பதும் கொஞ்சம் குடித்துவிட்டு வந்து படுப்பதும் பொதுவாக அவர்களுள் தவறாகக் கருதப்படுவது இல்லை. குடி கொஞ்சம் கூடி விடும் போது தான் தகராறு.''* (ப.60)

என்றும்,

> ''பாவம்மா உடம்பு அலுப்பாகக் குடித்தது கொஞ்சம் கூடிப் போச்சுது போல!''(ப.60)

என்றும் மகிமாவின் வீட்டில் சுற்று வேலை செய்கிற சரோஜா தன் கணவர் குடித்து விட்டு அடிப்பதைக்கூட பொறுத்துக்கொள்ளும் பண்புடையவளாகக் காணப்படுகிறாள். இதேபோன்று தனலட்சுமியும் தன் கணவருக்கு உணவளிக்கும்பொழுது, குறைவாக உணவளிக்கிறாள் எனக் கருதி,

> *''எதற்கு இந்தக் கஞ்சப் பிசுநாரித்தனம்? உன் அப்பன் வீட்டில் இருந்து கொணர்ந்ததா? நான் சம்பாதித்ததுதானே''* (ப.122)

என்று தனது ஊதியத்தில் உணவு பெறப்படுகிறது என்றும் உன் தந்தை வீட்டிலிருந்து கொண்டு வந்தாயா என்றும் கணவன் தன்னை இழிவாகப் பேசுகிறான் என்பதை அறிந்தும் தனலட்சுமி பொறுமையாக இருக்கிறாள் என்பதை இப்புதின ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

பெண் கட்டுப்படுத்தப்படுதல்

சமுதாயத்தில் பெண் அடிப்படைக் கல்வி பெறுவதென்பது இன்று எளிதாகிவிட்ட ஒன்று. ஆனால் பழங்காலத்தில் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டு அவர்கள் வீட்டினுள்ளே முடக்கப்பட்டனர். பெண்கல்வி பற்றிப் பாரதியாரும் பாரதிதாசனும் பெரியாரும் நிரம்பக் கூறியுள்ளனர். பாரதியார் கூறுகையில்,

> *''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
> *பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்''*

என்றும், பாரதிதாசன் கூறுகையில்,

> *''கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்''*

என்றும் கூறுவதன்மூலம் இவர்களின் சிந்தனை வெளிப்பாட்டினை அறிந்து கொள்ள முடிகிறது. இன்றைய காலத்தில் பெண்கள் பலர் கல்வியறிவு பெற்றுள்ளனர். இருப்பினும் ஒருசில அதிகார வர்க்கத்தில் பெண்கள் கௌரவத்திற்காக உயர்கல்வி வரை பயிலலாம். ஆனால், வேலைக்குச் செல்வதன் மூலம் தங்களின் குடும்ப கௌரவம் குறைந்து விடுமென்றெண்ணிப் பெண்கள் வேலைக்குச் செல்வதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுகின்றது. இதனை,

> *''நீ போய், ஒருவரிடம் கை கட்டி வேலை செய்வதோ? கை நீட்டி அவர்களிடம் சம்பளம் வாங்குவதோ, நடக்காதக் காரியம். யாரிடமும் உன்னை வேலைக்கு நான் அனுப்பப் போவது கிடையாது''* (ப.5)

என்று பராசரன் தன் மகள் மகிமாவிடம் கூறுவதிலிருந்து பெண் கட்டுப்படுத்தப்படுகிறாள் என்பதைத் தம் புதினத்தின்வழி ரமணிசந்திரன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குடும்பத்தில் பெண்களின் நிலை

கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாழும் ஓர் அமைப்பே குடும்பம் எனப்படுகிறது. இதில் கணவன் என்றால் உயர்ந்தவன் என்றும் மனைவி என்றால் தாழ்ந்தவள் என்றும் ஒருசில ஆண்கள் கருதுகின்றனர். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்ற பழமொழிக்கேற்ப வாழக்கூடியவர்கள் பெண்கள். இப்புதினத்தில் வரும் சந்தானத்தின் மனைவி மஞ்சரி என்பவள் தன்

கணவனின் சொற்கேட்டு நடக்கக் கூடியவளாகவும், பராசரனின் மனைவி தனலட்சுமி கணவனின் தவறைத் தட்டிக் கேட்கக் கூடியவளாகவும் நாவலாசிரியர் படைத்திருக்கிறார். இதனை,

> *"ரொம்ப ரோஷம் பார்க்கிறார்கள், ஆன்ட்டி. கணவரிடமிருந்து வந்தது. உயிர் போகிற நிலையில் கூட, அடுத்தவர் உதவியை மாமா நாடவில்லை. அதேபோல ஆன்ட்டியும் அடுத்தவர் உதவியை ஏற்பதில்லை. தன் காலிலேயே நிற்கிறார்கள். எங்களிடம் உதவியை மறுக்கிறார்கள்"* (ப.150)

என்று நிகிலன் மகிமாவிடம் கூறுவதிலிருந்தும்,

தனலட்சுமியைச் சதானந்தத்திற்கு நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. அப்பொழுது சதானந்தம் காதல் திருமணம் செய்து கொண்டதால், பராசரனைத் தன் பிள்ளை எனக்கூறி சதானந்தத்தின் தந்தை தனலட்சுமியைப் பராசரனுக்கு மணம் முடித்து வைத்தார். பராசரன் அம்முதியவரின் சொத்துக்கள் அனைத்தையும் ஏமாற்றி வாங்கியபோது தனலட்சுமி அவனை எதிர்த்துக் கேட்கும் பொழுது,

> *"ஏன் சொந்த மாமியார், மாமனாராக மனதில் வரித்திருந்தாயோ? வேண்டுமானால், கூடவே போய்ப் பணிவிடை செய்யேன்"* (ப.140)

என்று பராசரன் தனலட்சுமியிடம் கூறுவதிலிருந்தும் நாவலாசிரியர் குடும்பத்தில் பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றனர் என்று பெண்ணின் நிலைப்பாட்டினைக் குறிப்பிடுகிறார்.

பெண்ணின் துணிவு

பழங்காலந்தொட்டே பெண் என்பவள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு, அவர்களின் கீழ்நிலையிலேயே வைத்து எண்ணுவது மரபு. நாகரிக வளர்ச்சியின் காரணமாக ஆண் - பெண் சமம் என்ற நிலை பரவலாகக் காணப்படுகிறது. இன்றைய நிலையில் ஆண்கள் செய்யக்கூடிய தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தும் அளவிற்குப் பெண்களின் நிலை சற்று உயர்ந்திருக்கிறது என்று கூறலாம்.

'தீக்குள் விரலை வைத்தேன்' புதினத்தில் மகிமா தன் தந்தை தவறான வழியில் சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்துள்ளார் என்பதையறிந்தவுடன் தந்தையைக் கண்டிக்கிறாள். சொத்துக்கள் அனைத்தையும் சதானந்தத்தின் மனைவி மஞ்சரியிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் இல்லையென்றால் வீட்டைவிட்டு வெளியேறுவதாகவும் கூறுகிறாள். இதனை,

> *"அதெப்படிப்பா? நீங்கள் ஏமாற்றி அடையவில்லை என்றே வைத்துக்கொள்வோம். கீழேக் கிடந்து எடுத்த பொருள் என்றாலும், உடையவர் யார் என்று அறிந்து தெரிந்து கொடுத்துவிட வேண்டாமா? பதின்மூன்று ஆண்டுகள் கழித்து வந்த பாண்டவர்களிடம் அவர்களது சொத்தைத் துரியோதனன் ஒப்படைக்காததால் தானே, மகாபாரத யுத்தமே நடந்தது? அதை விடுங்கள் மனிதாபிமான நிலையில் பாருங்கள்"* (ப.130-131)

என்பதிலிருந்து தந்தை செய்யும் தவறினைத் தட்டிக்கேட்டு மகாபாரதக் கதையை எடுத்துக்காட்டாகக் கூறி, தன் தந்தையிடம் துணிவாகப் பேசக்கூடியக் கதாப்பாத்திரமாகப் புதின ஆசிரியர் மகிமாவைப் படைத்திருக்கிறார். மேலும்,

> *"இந்தப் பாவச் சொத்தில் ஒருபிடி சோறு கூட இனிநான் உண்ண மாட்டேன் இந்த வீட்டை விட்டே வெளியேறிப் போய் அவர்களுக்கு என்னாலான உதவியைச் செய்வேன்"* (ப.35)

என்று தன் தந்தையிடம் நேரடியாகவே தவறைத் திருத்திக் கொள்ளாவிட்டால் நான் வீட்டை விட்டு வெளியேறிவிடுவேன் என்று கூறுவதன் மூலம் பெண்கள் துணிவுடன் சமுதாயத்தில் காணப்பட வேண்டும் என்னும் நம்பிக்கை உணர்வை வெளிப்படுத்துகின்றார் புதின ஆசிரியர்.

பழிவாங்கும் கருவியாகப் பெண்

பெண் என்பவள் ஆண்களின் ஆசை உணர்வுகளுக்குப் பயன்படும் போகப்பொருளாகக் காணப்படுகின்றாள். பெற்றோர்கள் செய்கின்ற பாவம் பிள்ளைகளைத்தான் வந்து சேரும் என்று முன்னோர்கள் கூறுவர். பராசரனைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட நிகிலன் மகிமாவிடம்,

> *"அந்த மானம் கெட்ட வாழ்வு வாழ்ந்து அவனுக்குத் தண்டனை கொடு. பிறர் அறிய திருமணமில்லாமல் எவனோடாவது நீ அசிங்கமாக வாழ்ந்துக்காட்டுவது மட்டும் தான் அசுரனுக்கு உரிய தண்டனை. அந்தக் கேவலத்தை நீ மட்டும் தானே அவனுக்குக் கொடுக்க முடியும்? என்ன இந்தத் தண்டனையை உன் தகப்பனுக்குக் கொடுப்பாயா?"* (ப.180)

என்று வினவுவதிலிருந்து பெற்றோரைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காகப் பெண்ணைத் தவறான வழியில் வழிநடத்தும் மனப்போக்கு உடையவர்களாக ஆண்கள் திகழ்கின்றனர் என்பதை இப்புதினம் காட்டுகின்றது.

முடிவுரை

பெண்ணானவள் ஆண்கள் தங்களுக்கு எவ்வளவு இன்னல்களை இழைத்தாலும் அவர்கள் செய்யும் செயல்களைப் பொறுத்துக் கொண்டு வாழும் மனப்பாங்கு உடையவர்களாகத் திகழ்கின்றனர்.

பிள்ளைகளை வளர்ப்பதில் ஆண் பெண் இருவருக்கும் சமபங்கு இருத்தல் வேண்டுமென்பதையும் கணவன் மனைவி எனும் பாகுபாடின்றி இருபால் பிள்ளைகளையும் வளர்க்க வேண்டுமென்பதையும் தம் புதினத்தின்வழி ரமணிசந்திரன் எடுத்தியம்புகிறார்.

பெண்ணுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுதலையும் குடும்ப நிலையில் மனைவி என்பவள் கணவனுக்குக் கட்டுப்பட்டும், கணவன் செய்யும் தவறினைத் தட்டிக் கேட்கும் பாங்கினையும் இப்புதினம் வெளிப்படுத்துகின்றது.

பெண் துணிவுடன் தந்தையைத் திருத்துவதற்காக வீட்டைவிட்டு வெளியேறுவதாகவும் பெண்ணைப் போகப்பொருளாக எண்ணும் ஆண்களின் மனப்போக்கினையும் புதின ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கதாகும்.

துணைநின்றவை

- கல்யாணசுந்தரனார் திரு.வி., 2008, பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, சாரதா பதிப்பகம், சென்னை.
- பெரியார், 2012, பெண் ஏன் அடிமையானாள்? பாரதி புத்தகாலயம், சென்னை.
- ரமணிசந்திரன், 2010, தீக்குள் விரலை வைத்தேன், அருணோதயம், சென்னை.
- ……, 2007, பாரதியார் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், பிராட்வே, சென்னை.
- ……, 2010, பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

தினமணி இதழும் தலையங்கமும்

முனைவர் **இரா.நித்யலட்சுமி**
தமிழ் துறை உதவிப் பேராசிரியர்
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர் - 28.

மக்கள் தொடர்பு சாதனங்களில் இதழ்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மக்களின் வாழ்க்கையில் செய்தியைப் பரப்பவும், ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும் ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. மனிதன் தோன்றும்பொழுதே செய்திப் பரிமாற்றமும் தோன்றிவிட்டது எனலாம். மொழியைப் படைத்துக் கொள்ளும் முன்னர், குறிப்பால் மனிதன் செய்திகளைப் பரிமாறிக் கொண்டுள்ளான்.

தொல்காப்பியர் குறிப்பிடும் 'மெய்ப்பாடு' என்பது இலக்கியம் சார்ந்தது என்றாலும் அதுவும் செய்திப் பரிமாற்றத்தில் ஓர் அங்கமாகும். எனவே தான் இதழியல் அறிஞர்கள் 'முகமே ஒரு செய்தித்தாள்' என்றனர். அதற்கேற்ப இதழ்களின் கடமைகளில் குறிப்பதற்குரியதான அறிவுறுத்தல் சார்ந்த சமுதாயப் பணியில் தினசரி இதழ்கள் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுள் தினமணி இதழானது தலையங்கங்கள்வழி அறிவுறுத்தல் பணியைத் திறம்படச் செய்து வருகின்றது. இவ்வகையில் தினமணி முதல் இதழ், முதல் தலையங்கம், தலையங்கத்தின் வழியாகக் கூறப்படும் கருத்து ஆகியன குறித்துச் சுருங்கக் கூறுவதனை நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை.

தினமணி - முதல் இதழின் அமைப்பு

தினமணி முதல் இதழ் 'டெம்மி' அளவில் 8 பக்கங்கள் வெளிவந்தது. இதழின் விலை அரை அணா. பம்பாயில் சதானந்தம் தமது 'ப்ரீபிரஸ் ஜர்னல்' மற்ற ஆங்கில நாளேடுகளைக் காட்டிலும் மலிவான விலைக்கு அதாவது ஆறு பைசாவிற்கு ஒரு பிரதி என்று விற்பனை செய்ததுபோல தினமணியின் விலையையும் அரை அணாவாகவே இருந்துள்ளது. முதல் பக்கத்தில் இதழின் பெயர் "தின" "மணி " என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரண்டிற்கும் இடையில் அமைந்த படத்தில் கைராட்டினம் உள்ள இரு காங்கிரஸ் மூவண்ணக் கொடிகளும் பொறிக்கப்பட்டிருந்தன .இதன் கீழே "தினமணி" என்ற பெயர் ஆங்கிலத்தில் தரப்பட்டிருந்தது. அதற்கு கீழே "ஆசிரியர் எஸ்.வி.சாமி, டி.எஸ்.சொக்கலிங்கம் என்று அச்சிடப்பட்டுள்ளது.

தினமணியின் தலையங்கம்

இதழின் இதயப் பகுதியான தலையங்கம் மக்களை நல்வழியில் நடத்தும் முயற்சியில் அறிவார்ந்த நிலையைத் தன்னகத்தே கொண்டது. நல்லதொரு சமுதாய அமைப்பினை உருவாக்க நாட்டின் நான்காவது தூணான இதழ்களின் பங்கு இன்றியமையாதது. மக்களுக்குத் தக்க நேரத்தில் எடுத்துரைக்க வேண்டிய கருத்துக்களைக் காரணகாரியத்தோடு அறிவுறுத்தலோடுகூடிய சமுதாயப் பணியினையும் தினமணி இதழ் ஆற்றி வருகிறது.

முதல் தலையங்கம்

1934 பவ வருடம் ஆவணி மாதம் 26 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை முதல் இதழ் வெளியானது. இதழ் வெளியான முதல் நாளே "அறிமுகம்" எனும் தலைப்பில் மூன்று தலையங்கங்கள் வெளியாயின.

அ) சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் மக்களைப் போற்றியும் தேற்றியும் "தினமணி" துணைபுரியும் என்ற நிலையிலும்

ஆ) அடிமைத்தனத்தை அகற்றுவதற்காக தினமணி ஓயாது பாடுபடும் எனவும்,

இ) சுரண்டலைத் தடுப்பதற்காக முதலாளித்துவ ஜமீன்தார் முறையை ஒழித்து தொழிலாளர்களுக்கு புதியதோர் சமூகம் அமைக்க தினமணி பாடுபடும் என்ற மூன்று நிலைகளில் மூன்று தலையங்கங்களை வெளியிட்டுள்ளது.

தலையங்க அமைப்பு

பொதுவாக தலையங்கம் இதழில் 6 அல்லது 8 ஆம் பக்கத்தில் வெளிவருகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் தலையங்கம் வெளிவருவது இல்லை. தலையங்கத்திற்கு முடிவில் திருக்குறள் ஒன்றும் வெளியிடப்படும். இத்திருக்குறள் அன்று வெளியான தலையங்கத்தோடு தொடர்புடையதாக இருக்கும். தலையங்கத்திற்கு 'editorial' என ஆங்கில அகராதி பொருள் தந்துள்ளது. தலையங்கத்தின் முதற் பகுதி மக்களின் பிரச்சனை அல்லது அவர்களுக்குக் கூற வந்த செய்திப் பகுதியாகும். அடுத்த பகுதி அச்செய்தி பற்றிய தற்போதைய நாட்டின் நிலவரம். அடுத்து, செய்தியின் உண்மை நிலை, அது தொடர்பான சரியான ஆதரப்பூர்வமான பல செய்திகள். இறுதியில் பிரச்சினைக்கான தீர்வு பற்றிக் கூறப்பட்டிருக்கும்.

"நீரின்றி அமையாது உலகு" என்பர். அதற்கேற்ப நீரின் அருமையும், அதை அறிந்த நமது முன்னோர் அதை வளப்படுத்தவும் பாதுகாத்துப் பயன்படுத்தவும் செய்துள்ள வழிமுறைகள் பற்றியும் தலையங்கத்தில் கூறியுள்ளனர். மேலும் நாம் நம் முன்னோர்களை மறந்ததைப் போல அவர் உருவாக்கி வைத்திருந்த வழிமுறைகளையும் அழித்து வருவதைக் சுட்டிக் காட்டியுள்ளனர்.

> *"நமது முன்னோர்களின் முன்யோசனையுடன் ஊருக்கு ஊர் கோயில்கள் கட்டியதுடன், கோயில் குளம் என்று பெரிய குளங்களை வெட்டினர். அந்தந்த குளங்களுக்குப் புனிதத் தன்மை இருப்பதாக ற மது முன்னோர்கள் கூறிய ஒரே காணத்தால் தான் பல இளங்களும் பாழடைந்த நிலையிலும் கூட இன்னும் முழுமையாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகாமல் இருக்கின்றன".* (தினமணி -தலையங்கம்16.4.09)

இது போன்ற நமது முன்னோர்களின் செயல் அனைத்திலும் கடவுள் என்ற நிலை ஒன்றுடன் ஒன்று கலந்திருப்தையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இன்றைய நவநாகரீகமான சூழலில் நாம் புதியதாக ஒன்றை உருவாக்கி அதில் இருந்து செயல்படுவதை விட நமது மூதாதையர் செயற்பாடுகளை அழிக்காமல் பாதுகாத்தலே போதும் என்ற கருத்துருவாக்கத்தை தலையங்கம் எடுத்துரைக்கின்றது.

கடல் வாணிகம் சார்ந்த தலையங்கம்

கடல் தான் உயிருக்கு மூலம், வாழ்வுக்கு ஆணிவேர். அது இடைவிடாது உயிர்களைப் படைத்துக் கொண்டும் அழித்துக் கொண்டும் இருக்கிறது. கடலின் அலையும் ஆழமும் பிரம்மாண்டமானவை. இதில் பிறந்து வளர்கின்ற உயிரினங்கள் ஏராளம் என்கிறார் பரமேஸ்வரன் அவர்கள். அதற்கேற்ப, கடலின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக் கூறி அதில் மீன்பிடித் தொழில் செய்வதில் அரசு அறிவித்த (ஒழுங்கு முறை மற்றும் மேலாண்மை) கடல்சார் மீன்பிடித் தொழில் சட்ட முன்வரைவுக்குத் தமிழ்நாட்டின் அனைத்து எதிர்க்கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்தது. இதனை மேலோட்டமாகப் பார்க்கும் போது இது சரி என்று தோன்றும். ஆயினும் இதனால் சிறு விவசாயிகள் போன்று சிறு மீனவர்களுக்கு நஷ்டம் இல்லை என்றும் இந்தியப் பெருநிறுவனங்களுக்கே அதிக நஷ்டம் என்பதை எடுத்துரைக்கிறார்.

"12 கடல் மைல்களுக்கு அப்பால் சென்று மீன் பிடித்தால் ரூ 9 லட்சம் அபராதம் மற்றும் சிறைத் தண்டனை என்பதைத் தமிழக அரசியல் தலைவர்கள் அனைவருமே கண்டித்துள்ளனர் " (தினமணி - தலையங்கம் 27.11.09)

பொதுவாக கடல்சார் மீன்பிடித் தொழிலில் கடல் பகுதியை மூன்றாகப் பிரித்துள்ளனர். இதில் கரையிலிருந்து 12 கடல் மைல்கள், 24 கடல் மைல்கள், 200 கடல் மைல்கள் என்கின்றனர். இதில் 12 கடல் மைல்கள் தொலைவில் 90 சதம் பேர் மீன் பிடிப்பதாகவும் இவர்கள் சாதாரண மீனவர்கள் என்ற புள்ளி விவரத்தை ஆசிரியர் முன்வைக்கிறார். 200 கடல் மைலுக்கு அப்பால் மிகப்

பெரும் படகுகளைக் கொண்டு மீன்பிடித் தொழிலைச் செய்வோர் இந்தியரை உரிமையாளராகக் கொண்ட பெரிய நிறுவனங்கள் இவர்களின் லாபம் குறைந்து விடும் என்பதாலேயே இச்சட்டத்தை அரசியல் தலைவர்கள் எதிர்ப்பதாக விளக்குகின்றனர். தலையங்கம் எழுதுவோரின் அறவிதிகளான,

"தம்மிடமிருக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் கூறுகின்ற விவரங்களை ஆதாரமாகக் கொண்டு சமுதாய நலனை முன்னிறுத்த் அறிவார்ந்த முடிவுகளை வழங்க வேண்டும்"(குருசாமி மா.ப : இதழியல் கலை)

எனும் தலையாங்கம் எழுதுவோர்க்கான விதிக்கேற்ப இத்தலையங்கத்தில் ஆசிரியர் செயல்பட்டுள்ளார். ஒரு செய்தியை மக்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் அதை எதிர்ப்பதைத் தவறு என்று கண்டிக்கிறார். இவற்றோடு ஆசிரியர் தன் கருத்துக்களுக்கு ஏற்பச் சரியான சான்றுகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறிச் செய்தியின் முழு விபரத்தையும் மக்கள் அறியும்படி செய்கிறார். இது தலையங்கம் எழுதுவோரின் தலையாய கடமையைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

கடலின் தூய்மை, கடலில் மீன்பிடித் தொழில்

"இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணல் கஞ்சும் துறைவ"

எனும் அகப்பாடலில் பெருங்களத்துமேட்டில் நெல்லைத்தொகுத்த உழவர்களைப் போல், தொகுத்த மீன்களைத் தங்களிடம் வந்து இரந்தோறின் வெற்றுக்கலம் நிறையுமாறு வழங்குவர் மீன்வணிகர். எஞ்சியவற்றை விலை கூறி விற்பதாகக் கூறப்பட்டுள்ளது. இன்றைய மீன்பிடித் தொழிலில் மிகப்பெரும் நிறுவனங்கள் நமது முன்னோர்களைப் பின்பற்றாமல் இருப்பினும் வறியவர்களை மேலும் வறுமைக்குள் தள்ளாமல் இருக்கலாம்.

கடலின் தூய்மை

கடலைப் பயன்படுத்துவதில் இருக்க வேண்டிய சரியான வழிமுறைகளை எடுத்துக் கூறுவதோடு கடல் பற்றியும் கடலில் கலக்கும் குப்பைகள் மற்றும் அதன் விளைவுகளும் இத்தலையங்கம் வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் கடலில் கலக்கப்படும் கழிவுப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து வரும் கழிவுகள் என்ற நிலையில் அதில் அதிகமான நச்சுப்பொருட்கள் இருப்பதாகவும் இவை கடலில் கலக்கப்படுவதால் இயற்கையான சூழல் பாதிக்கப்பட்டுக் கடல்வாழ் உயிரினங்களைப் பாதிப்புக்குள்ளாக்குகிறது என்கிறார்.

*"சென்னைத் துறைமுகத்தில் பழைய பேப்பர் என்று தவறான தகவல் அளித்து சுமார் **150** Lன்கள் ஆறு கன்டெய்னர்களில் வந்து இறங்கின. துறைமுக அதிகாரிகளுக்கும், சுங்க இலாகாவினருக்கும் சந்தேகம் ஏற்பட்டதால் மாசுக்கட்டுப்பாட்டுத்துறையினரின் உதவியை நாட , அந்த **150** டன்களில் சுமார் **50** சதவீதம் எலக்ட்ரானிக் கழிவுகளும் நகராட்சிக் குப்பைகளும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது".* (தினமணி - 14. 4.09)

வெளிநாடுகளில் பொருட்களை இந்தியாவில் விற்கலாம். அதற்கு நாமே விளம்பரச் சாதனங்களாகப் பயன்படுவோம் என்ற நிலையில் வெளிநாட்டவரின் கழிவுகளையும் இந்தியாவிலேயே கலக்கலாம் எனும் அவர்களின் எண்ணத்தை மாற்ற வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

"உண்மையில் இயற்கையை மனித நுகர்விற்கான ஒரு சாதனமாகக் கருதுவது அழிவிற்கான் அடிப்படை சூழலமைப்புச் சேதப்படாமல் இருக்கும் வரை மட்டுமே பூமியில் உயிர் வாழ்க்கை சாத்தியம். மனிதன் இல்லாமல் சூழலமைப்பு இயங்கும். ஆனால் சூழலமைப்பு இல்லாமல் மனிதன் உயிர் வாழவே முடியாது என்பதை மனித இனம் மறந்து கொண்டிருக்கின்து பூமியில் இன்று வாழ்ந்து வரும் மனித இனம் வரப்போகும்

தலைமுறைக்கு இதைப் பாதுகாத்து அளிக்க வேண்டிய கடமை உள்ளது ". (பதினெண் கீழ் கணக்கு நூல்களில் சூழலியல் விழிப்புணர்வு) எனும் அருள்சீலியின் கருத்திற்குஏற்ப தலையங்கம் தன் அறிவுறுத்தலைச் செய்துள்ளது.

நமது கடல் வாணிகம்

"வாலிதை யெடுத்த வளி தருவங்
பல்வேறு பண்டமிழி தரும் பட்டி
தொல்லே னிமிழிசைமானக் கல்லென
நனந்தலை வினைஞர் கலங் கொண்டு மறுகப்
பெருங்கடற் குட்டத்துப் புலவுத் திரையோ தம்"

எனும் மதுரைக் காஞ்சியின் பாடலுக்கேற்ப கடலில் வாணிபத்திற்காகத் தமிழ்நாட்டில் செய்யப்பட்ட பொன் அணிகலன்களை வணிகர்கள் வெளிநாட்டிற்குக் மரக்கலத்தில் ஏற்றி நடுயாமத்தே இறக்குவதாகக் கூறப்பட்டுள்ளது. இன்றும் அதே நடைமுறையைப் பின்பற்றுகிறோம். ஆனால் இறக்குமதி செய்வது வெளிநாட்டினரின் கழிவுகளை எனலாம்.

தொகுப்புரை

தினமணி இதழே நாளிதழ் என்ற நிலையில் முதன்முதலில் தலையங்கம் வெளியிட்டது. இந்நிலை அன்று முதல் இன்று வரை தொடர்கிறது. இத்தலையங்கம் மக்களின் அன்றாட பிரச்னைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வையும் தருகிறது.

துணைநின்றவை

- அருள்சீலிச.கே : பதினென்கீழ்கணக்கு நூல்களில் சூழலியல் விழிப்புணர்வு (2014) சிவகுருபதிப்பகம்
- குருசாமிமா.ப :இதழியல்கலை (1999) குருதேன்மொழி பதிப்பகம். சிதம்பரம்
- தனஞ்செயன்.ஆ: சங்கஇலக்கியமும் பண்பாட்டு சூழலியலும் (2010) நியூ சென்சுரி புக் ஹவுஸ்.சென்னை
- ராமமூர்த்தி .இரா: மதுரைக்காஞ்சி(2010) கங்கை புத்தக நிலையம் சென்னை
- தினமணி நாளிதழ்

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 மே 2018 மலர்:4 இதழ்:13 171

மதிப்பிடப்பெற்றது

முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்

சே.முனியசாமி
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஜெ.பீ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அகரக்கட்டு, தென்காசி
திருநெல்வேலி மாவட்டம்

இராமநாதபுர மாவட்ட மண்ணில் சங்கப்புலவர்கள் முதல் முந்தைய நூற்றாண்டுப் புலவர்கள் வரை பலர் காணப்பட்டுள்ளனர். ஏனெனில் சங்கம் வைத்து தமிழ்வளர்த்த மதுரை மண்ணிற்குரிய புலமைத்திறன் மண்சார்ந்த உறவுநிலையின் தாக்கம் பரவப்பட்டமையால் கவிபாடும் புலமைகளாக வெளிப்பட்டுள்ளனர். மண்ணைப் பொறுத்தே மக்கள். மண்வளம் செழித்தோங்கியதால் கவிவளமும் வளப்பமாயின. இறுதியாக அரைநூற்றாண்டுக்கு முந்தைய காலகட்டத்தில் கணக்கிலடங்காப் புலவர் பெருமக்கள் வாழ்ந்தும், இலக்கியம் படைத்தும் சென்றுள்ளனர். அவ்வகையில் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியம் எனும் நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் 1908 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. சுப்பையாபிள்ளை பற்றியும் இந்நூல் பற்றியும் விளக்கி எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் கடந்த நூற்றாண்டில் பல்வேறுபட்ட புலவர்கள் வாழ்ந்துள்ளனர். கூர்ந்த மதிநுட்பமும் அளவற்ற தமிழ்மீது கொண்ட வேட்கையும் பிரதிபலித்ததின் விளைவாக இலக்கியங்களாகப் பரிணமித்துள்ளன. அவ்வரிசையில் *சரவணப்பெருமாள் கவிராயர், ஆறுமுகம்பிள்ளை, சொஸ்திகைப் புலவர், பிச்சைப் புலவர், ஐயாத்துரைப் பிள்ளை, நல்லவீரப்ப பிள்ளை, தெய்வநாயகம் பிள்ளை, பொன்னம்பலப் புலவர், சுப்பிரமணிய பிள்ளை, கல்யாணசுந்தரம் பிள்ளை, முத்து இருளப்பப் பிள்ளை, ஆறுமுகப் புலவர், இராமலிங்கம் பிள்ளை, முதுகுளத்தூர் புலவர் ஒருவர் (பெயர் தெரியாதவர்)* முதலான புலவர் பெருமான்கள் இம்மண்ணில் பிறந்து பல இலக்கியங்களைப் படைத்துப் பெருமை சேர்த்துள்ளனர்.

மேற்சுட்டிய புலவர்கள் பற்றியும் அவர்கள் இயற்றிய நூல்கள் பற்றிய செய்திகளும் கிடைக்க அரிதாக அமைகின்றன. புலவர்களின் சந்ததினரிடம் நேரடியாகச் சென்று கள ஆய்வில் கேட்டாலும் போதுமான சான்றுகள் கிடைக்கப் பெறுவதில்லை. முதுகுளத்தூரில் பிறந்த புலவர்களின் வரலாற்றையும் படைப்புகளையும் வெளிக்கொணரப் பல்வேறு கட்டங்களில் முயற்சியெடுப்பினும் தோல்வி நிலையினையே அடையமுடிகிறது. புலவர் சார்ந்த உறவுகளை நாடினாலும் முழுமையான தரவுகள் கிடைக்காதது கவலைக்குரியதாகும். முதுகுளத்தூர் புலவர்களின் அடிச்சுவடுகள் களையப்பட்டு வெற்றுக்கோடுகளாக காணப்படுகின்றன.

சுப்பையா பிள்ளை

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் தெய்வப்புலமை பெற்றவராக விளங்கியிருந்த நல்லவீரப்பப் பிள்ளை என்பவருடைய பெயரனாகத் தோன்றியவர் சுப்பையாபிள்ளை என்னும் வித்தியானந்த சுவாமிகள் ஆவார். இவரது தந்தை இராமசாமிப் பிள்ளை. துவாத்திரிம் தசாவதானி சரவணப்பெருமாட் கவிராயருக்கு இவர் மருமகர். ஆதிநல்லவீரப்பபிள்ளை என அழைக்கப்படுபவர் இவரது தந்தையின் தாத்தா ஆவார். இவர் எழுதிய நூல் *'கொடுமலூர்க் குறவஞ்சி'*. இவ்வாறு கவிபாடும் புலவர் குடியில் பிறந்த சுப்பையாபிள்ளை செந்தமிழில் செய்யுள் பாடி *'மதுரகவி'* என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

மதுரகவி யாதெனில், 'கவிதை புனையும் புலமையை வெளிப்படுத்தும் ஒரு பாங்கு. ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி என்னும் நான்கு வகைப் புலமைகளில் பலர் சிறப்புற்று விளங்கிய புலமைநெறி' என விளக்கம் தருகிறது விக்கிப்பீடியா.

சேதுபதி மன்னர்களது பரிசுகளும் பாராட்டுகளும் பெற்ற தமிழ்ப் புலவர்களில் சுப்பைபிள்ளையும் அடங்குவார். மூன்றாம் முத்துராமலிங்க சேதுபதி ஆட்சிக்காலத்தில் (கி.பி.1911-1929) தனிப்பாடல்கள் பாடிப் பரிசில் பெற்றுள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. (சேதுபதி மன்னர் வரலாறு, ப.196)

புவனேந்திர காவியம்

முத்துராமலிங்க சேதுபதியின் பொருளுதவியால் மதுரைத் தமிழ்ச்சங்க அச்சியந்திர சாலையில் இந்நூல் 1908 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. ஐம்பத்து மூன்று (53) படலங்கள், மூவாயிரத்துத் தொண்ணூற்றாறு (3096) பாடல்கள் கொண்டு அமைக்கப்பட்டு முந்நூற்றியறுபது (360) பக்கங்களுடன் திகழ்கின்றது இந்நூல்.

நாட்டுப்படலம் (45), நகரப்படலம் (55), அரசியற்படலம் (34), தாலபுரந்தரன் தவசுப்படலம் (26), மகார் உற்பத்திப்படலம் (81), மந்திராலோசனைப் படலம் (86), நகர்நீங்குபடலம் (29), வளங்காண்படலம் (35), சோலையைக் கண்ணுற்ற படலம் (33), அசனங்குணர்தற்கேகு படலம் (26), நாகம் வெட்டிய படலம் (41), பூலோகரம்பையைக் கண்ணுற்ற படலம் (119), வரலாறு கூறிய படலம் (21), மந்திரி சோக படலம் (38), அரண் சோக படலம் (46), விஜயதரன் வேட்டைப் படலம் (45), பூலோகரம்பையின் வடிவுரைத்த படலம் (30), விசையதரன் மோகமுற்ற படலம் (17), புவனேந்திரன் முனிவுற்ற படலம் (31), புனல்குளியோடு படலம் (61), விசையதரன் கைக்கிளைப் படலம் (40), வஞ்சனைப் படலம் (143), பூலோகரம்பை சோகப்படலம் (57), பெண்ணழைத்த படலம் (83), பூலோகரம்பை பூசாவிதிப் படலம் (92), புவனேந்திரனுயிர் பெற்ற படலம் (35), பூலொகரம்பையைத் தேடவிட்டபடலம் (42), எழுச்சிப் படலம் (33), வெங்கட்டம்மால் காவற் படலம் (60), சமர்த்தன்றூதுப்படலம் (96), புவனேந்திரன் கேள்விப் படலம் (25), புவனேந்திரன் படையெழுச்சிப் படலம் (25), தருமன் தசமுகன் கதையுரைத்த படலம் (196), படைத்தலைவர் வதைப்படலம் (18), சித்திர கேசரிசிங்கன் வதைப்படலம் (212), விஜயதரன் சோகப்படலம் (42), வீரசிங்கன் விசையதரன் படலம் (298), ஈமவிதிப்படலம் (22), தருமன் பட்டாபிஷேகப்படலம் (41), விரிஞ்ச நகரடைந்த படலம் (21), தாலபுரந்தரன் விரிஞ்ச நகரடைந்த படலம் (14), திருக்கலியாணப் படலம் (78), தன்னகர் சென்ற படலம் (34), மீட்சிப்படலம் (19), கார்க்கோடகன் வதைப்படலம் (57), புத்திசிகாமணிக் கிடையூறுற்ற படலம் (56), புத்திசிகாமணி கல்லுருவான படலம் (53), புத்திசிகாமணிக் கல்லுருக்கழிந்த படலம் (13), புவனேந்திரன் முடிசூடு படலம் (15) எனும் அமபத்தி மூண்ரு படலங்களில் காணப்பெறுகின்றன.

பா வகையும் அமைப்பு முறையும்

இக்காவியம் விருத்தப்பாவால் பாடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இக்காவியத்திற்குச் சாற்றுகவி பாடிய ஏழு புலவர்பெருமான்களில் இரு புலவர்களைத் தவிர ஏனைய புலவர்கள் விருத்தப்பா வகையில் பாடியுள்ளனர்.

அனைத்துப் பாடல்களும் விருத்தப்பா என்ற போதிலும் அதை எடுத்துரைக்கும் முறையில் மூன்று வகைகளில் பாக்களைச் சீர்பிரித்து அமைக்கப்பட்டுள்ளன. அவையாவன:

பா அமைப்பு முறை: 1

தன்மகன் பாற்கூறுத லுந்தங்கள் குலத்தொருவனைப் பொய்ச்சனகியாக்கிப்
பொன்னகர் விட்டெழுந்து வடபாற் போனமாருதிபாற்பு கன்றுகாட்டி
மின்வடிவா ளாலெறிந்து மாறிநிகும்பலை புகுந்தான் விறலோனங்கண்
மன்னவன் யாற்சொல மருகுந்தன்மை கண்டுவீடணன் போய்வந்துசொல்ல

- (தருமன் தசமுகன் கதையுரைத்த படலம் :166)

மேற்கண்ட பாவகையானது நீண்ட சீர்களைக் கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

பா அமைப்பு முறை: 2

உலகமெலாந் தன்னுளத் திலடக்கிச்சு த்த
வொளியானவெறு வெளியை யுணர்ந்து நித்தங்
கலலமிலா திருந்து சுகம் பெற்றவன்பர்
கண்மணியை யானந்தக் கடலை மெய்யின்
றிலகமென விளங்கிய பொன் மலையைவானத்
தெள்ளமுதைக் கற்கண்டதைத் தேனைப்பாலை
யிலகைய தென்மணிமாடக் கூடன் மேவு
மெம்மிறையை யெப்போது மேத்திவாழ் வாம் (சமர்த்தன் தூதுப்படலம்: 1)

மேற்கண்ட பாவைகயானது சிறிய அடிகளால் எட்டுச் சீர்களைக் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது.

பா அமைப்பு முறை: 3

புவனவிந்திர னெனப்புலி யெலாம்புகழ்
நவம்விளம்பிய திருநாயகன் றனக்
குவமையெவ்வு லகினுமுரைக்க நேருமோ
தவமெலாந்தனை விலகாது தாங்கினான் (தருமன் நீதியுரைத்த படலம்:1)

மேற்கண்ட பாவகை குறைந்த சீர்களில் நான்கு அடிகளில் அமைக்கப் பெற்றுள்ளது. ஆக, சீர், அடி போன்றவை மாறினாலும் இவை அனைத்தும் விருத்தப்பா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

சாற்றுக்கவியும் பாடியோரும்

நூலொன்று வெளியிடுவதற்கு முன் தொடர்புடைய புலமைவாதிகளிடம் நூல் குறித்தான கருத்தாக்கங்களையோ அல்லது மதிப்பீடுகளையோ பெற விழைவது நூலுக்கு அணிசேர்க்கும். ஒரு நூலுக்கு முகவுரை, பதிகம், அணிந்துரை, புறவுரை, தந்துரை, புனைந்துரை போன்றவை இடம்பெற வேண்டுமென்பதைப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலில் ,

'முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்' - (நன். எழுத்து.1)

எனப் பவணந்தியார் எடுத்துரைக்கின்றார்.

நூலின் பெருமைகளை அந்நூலுக்கு அணிவிப்பது அணிந்துரை. நூலைப் பற்றிய புனைந்துரை கூறுவது புனைந்துரை. நூலில் கூறப்படாத பொருளைப் பற்றிக் கூறுவது புறவுரை. நூலில் சொல்லப்பட்டுள்ள பொருள் அல்லாதவற்றைத் தந்து விளக்குவது தந்துரை.

சாற்றுக்கவி என்பது முந்தைய காலத்தில் நூல் உருவாக்குவோர் தங்கள் நூலுக்காகப் பெரும் புலவர்களிடம் கேட்டுப் பெறும் கவிதையாகும்.

இக்காவியத்திற்கு தசாவதானி சரவணப்பெருமாள் கவிராயர், சோடசாவதானி வேலாயுதக் கவிராயர், அட்டவதானி கல்யாண சுந்தரம்பிள்ளை, சித்திரகவி எம்.தெய்வநாயகம்பிள்ளை, வெண்பாச்சிலேடைப்புலி வேம்பத்தூர் பிச்சுபாரதியவர், சர்க்கரை ராமசாமிப் புலவர், தமிழ்ச்சங்க கவிவித்துவான் சதாசிவம்பிள்ளை ஆகியோர் சாற்றுக்கவியும், நான்காம் தமிழ்ச் சங்க வித்வான் சோதுகுடி எம்.கே. அப்துல் காதிறு ராவுத்தர் சிறப்புப் பாயிரமும் பாடியுள்ளனர்.

அ. தசாவதானி சின்ன சரவணப்பெருமாள் கவிராயர்

சரவணப் பெருமாள் கவிராயர் இருவர் உண்டு.

1. அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர்

2. தசாவதானி சிறிய சரவணப்பெருமாள் கவிராயர்

அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் முதுகுளத்தூரில் பிறந்தவர். சிவஞானயோகிகளின் மாணாக்கருளொருவராகிய சோமசுந்தரம் பிள்ளையின் மாணாக்கர். இவர் கல்வியில் தேர்ச்சியுற்று அட்டாவதானம் செய்து சேது சமஸ்தான வித்துவானாயிருந்தார். (தனிப்பாடல் திரட்டு, ப.542)

இராமநாதபுரம் சமஸ்தானம் மகாவித்துவான் துவாத்திரிம் தசாவதானி சிறிய சரவணப்பெருமாள் கவிராயர் முதுகுளத்தூரில் பிறந்தவர். இவர் சேதுநாட்டின் புலவர் பரம்பரையைச் சேர்ந்தவர். அஷ்டாவதானம் ஆதி சரவணப்பெருமாட் கவிராயரின் பேரர். தான் இயற்றிய சேதுபதி விறலிவிடுதூது எனும் நூலில் தன்னைப் பற்றிப் பின்வரும் அடிகளில் பேசுகின்றார்.

”..... ஆதி முதுகுளத்தூர்
மேவுவடி வேலன் அருள் மேவிவளர் - நாவலவ
தீர அவதானம் செய்சரவ ணப்பெருமாள்
பேரன்ன வந்த பிரபலவான் - சாரம்
தரும்துவாத் ரிம்சதாவ தானிபுல வோர்யா
வருந்துதிக்கும் பூங்கணைவில் மாரன் - திருந்தும் எழில்
நாடு புகழ்சரவணப்பெருமாள்” (முன்னுரை -vii)

திருச்சுழிய அந்தாதி, புவனேந்திர அம்மானை, கயறகண்ணி மாலை, கந்தவருக்கச் சந்த வெண்பா, குன்றக்குடிச் சிலேடை வெண்பா முதலிய நூற்களைப் படைத்துள்ளார். தமிழ்ப் பற்றும் அறப்பற்றும் பெரிதும்கொண்ட இவர் இக்காவியத்திற்கு சாற்றுக்காவியத்திற்கு,

கலைமகளுக்கொரு மகனிங்கினெனச் சொலலேன துமருமக னாங்கன்னற்
சிலைமகனுக்குக் கழகுதவும் முதுகுளத்தூர்ச் சுப்பயவேள் தெளிந்துகற்ற
நிலைவிளங்கப் பலகலையி னெறியாய்வுற் றொருங்குபட நிரைத்தேமுன்னீ
ருலகமெலாம்புதுமை தரப்புவனேந்திர காவியமின்றுரை செய்தானே

எனப் பாடியுள்ளார்.

ஆ. சோடசாவதானி வேலாயுதக் கவிராயர்

ஒரே நேரத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவரை சோடசாவதானி என அழைப்பர். இவர் சமஸ்தான வித்துவானாவார். இக்காவியத்திற்கு,

கல்லார்க ளெளிதினிற் கற்றிடக்கற்றாரிது போலுங்கற்க நாமோ
வல்லாரென்ற திசயிருப்பமனுநீதி நெறிக்கியது வோர்வரம்பாமென்னத்
தொல்லாரும்பு வனேந்திரகாவிய மென்றாருபுது நூற்சொற்றான்மற்றை
யெல்லாநூலும் பழநூலெனப்பு கலச்சுப்பயவேளிசை வலோனே

எனும் அடிகளில் சாற்றுக் கவி பாடியுள்ளார்.

இ. அட்டாவதானி கல்யாணசுந்தரம்பிள்ளை

ஒரே நேரத்தில் எட்டு வேலைகளைக் கவனித்துச் செய்யக் கூடியவரை அட்டாவதானி என்பர். இவர் முதுகுளத்தூரில் பிறந்தவர். மெய்யரிச் சந்திர நாடகம் (1905) எனும் நூலை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் சுப்பையாபிள்ளையை பாக்கியவான் எனவும், முதுகுளத்தூர் எனும் ஊரிற்கு உயர்ந்த கர்ணன் போல் செஞ்சொல் கொண்டவர் எனப் பாடியுள்ளார். இதனை,

நோக்கிய கண்களிப்பேற நுவன் றிடுநாவினிப் பேறநுவன் மற்றோர்க

ளாக்கிய நூல்கசப்பேறப் புவனேந்திர காவியமின்றறைந்தானெங்கள்
பாக்கியவான் முதுகுளத்தூர்ப் பதிநிலைமைக்குயர் கர்னன்பால்போற்செஞ்
சொல் வாக்கியுயர் சுப்பயவேள் மலர்வேதனாவிலுரை வாணிமாதோ

எனும் சாற்றுக்கவிவழி அறியலாம்.

ஈ. சித்திரகவி எம்.தெய்வநாயகம் பிள்ளை

நால்வகைக் கவிகளுள் ஒருவகை சித்திரக்கவி. சித்திரகவியை அணியிலார் சொல்லணியில் அமைத்தனர். இதனை மிறைக்கவியென்றும் கூறுவர். சோமூர்த்தி, கூடசதுக்கம், மாலைமாற்று, எழுத்து வருத்தனம், நாகபந்தம், வினாவுத்தரம், காதைகாப்பு, கரந்துறைச் செய்யுள், சக்கரம், சுழிகுளம், அருப்பதோபத்திரம், அக்கரச்சதகம் முதலியவை.

முதுகுளத்தூரைச் சேர்ந்த இவர் தமிழ்ச்சங்க வித்துவான் ஆவார். தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்ற இவர் சித்திரகவிகள் இயற்றுவதில் வல்லவர். வெண்ணீர்வாய்க்கால் கா.கூ.வேலாயுதப்புலவர் இயற்றிய திருப்பாடல் திரட்டு எனும் நூலிற்குச் சாற்றுக்கவி(23.05.1910) பாடியுள்ளார். இக்காவியத்திற்கு நான்கு பாக்களில் சுப்பையாபிள்ளையை, *'விவாதங்களைத் தீர்க்கநின்ற தர்மகர்த்தா', 'விருத்தங்களைப் பாடுவதில் நற்கவி' 'நவீன கற்பி', 'தாலங்காரப் பிரசங்கி'* எனப் பாடியுள்ளார்.

சுப்பையாபிள்ளையவர்களை வாதங்களைத் தீர்க்கவந்த தீர்க்கதரிசி எனவும், விருத்தங்களைப் பாடுவதில் சிறந்தவரெனவும் அவர் பாடிய காவியத்தை பெருமிதப் படுத்தித் தம் சாற்றுக்கவியில் உரைத்துள்ளார்.

சேதுசமஸ் தானத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர்
ராதிக்கிரா மாந்தரகளின் வி- வாதங்
களைத்தீர்க்கா நின்றதர்ம கர்த்தாவிருத்தங்
களைப்பாடு வதிற்கவி

சக்ரவர்த்தியான கம்பனுக்குச் சமானங்கொத்
துக்கணக்குப் பாத்யசுபயோகி - முக்கணனை
யேசியவன் பிர்மாவிஷ்ணு யேசுமகமூதெனும்
தாசம்ப்ர தாயச்சமா

தானநிர்மாணந் தெரிந்த தத்துவ விசாரியெனம்
மானருமையாய்ப் பெற்றமைத்துனர்- வீனகற்பி
தாலங்காரப்ரசங்கி சற்சனர்சினேகரிந்த்ர
சாலவல்லவர் மஹாராஜ

ராஜஸ்ரீ சுப்பையாபிள்ளையவர்கள் ராஜ
ராஜன் புவனேந்த்ர ராஜனது- வீசுபுகழ்
பெற்றகதையைப் பந்தமாயியற்றினார்களைக்
கற்றவர்கண் ணென்று சொன்னார்கள்

உ. வெண்பாச் சிலேடைப்புலி வேம்பத்தூர் பிச்சுவையர் (1882-1921)

இவருடைய வழிமுறையினர் கல்விச் சிறப்புடையவர்களாய் இருந்தமையால் 'பாரதி' எனும் சிறப்புப் பெயர் பெற்றனர். பாரதி எனும் சொல்லிற்கு *'பண்டிதன்'* எனும் விளக்கத்தை முன் வைக்கின்றது தமிழ் விக்சனரி. *'சௌந்தரிய லஹரியை'* தமிழாக்கம் செய்த வேம்பத்தூர் வீரை கவிராஜ பண்டிதர் பரம்பரையில் பிறந்தவர். இவரின் தந்தை 'சாம ஆண்டி ஐயர்' எனும் புலவர் ஆவார்.

'இவர் சிலேடைச் செய்யுட்களை விரைவாக இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தமையால் சிலேடைப்புலி பிச்சுவையார் என அழைக்கப்பெற்றார்.' (தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம், தொகுதி - மூன்று, ப.355)

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணவரான வன்தொண்டரிடத்தில் கல்வி கற்றுத் தன் கவித்திறமையை வளர்த்துக் கொண்டார். முறையூர் சண்முகம் செட்டியார், பாஸ்கர சேதுபதி மன்னர், சிவகங்கை நாட்டுத் தலைவர் முத்துவடுகநாதர் போன்றவர்களிடம் செய்யுள் இயற்றி பரிசில்களையும், நன்கொடைகளையும் பெற்றுத் தன் வாழ்க்கையை நடத்தி வந்துள்ளார். பாஸ்கர சேதுபதி மன்னரின் அரசவையில் ஆஸ்தான புலவராய்த் திகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை சோமசுந்தரப் பெருமாளுக்கும் திங்களுக்கும் சிலேடையாக ஒரு வெண்பாவும், மீனாட்சி அம்மைக்கும் திருமண மண்டபத்திற்கும் சிலேடையாக ஒரு வெண்பாவும் பாடியுள்ளார். முத்துவடுகநாதரின் அவைக்களப் புலவராக அமர்ந்து அவர்மீது காதல் பிரபந்தம் என்ற நூலைப் பாடியுள்ளார்.

இயற்றிய நூல்கள்

1. ஜெய சிந்தாமணி விநாயகர் பதிகம்
2. திருப்பரங்குன்ற முருகன்மேற் பாடிய சிந்து
3. தடுத்தான்மாலை
4. ராஜராஜேஸ்வரி பதிகம்
5. பனங்குடி பெரிய நாயகியம்மை பதிகம்
6. மதுரை நிரோட்டக யமகவந்தாதி
7. பொன்மாரிச் சிலேடை வெண்பா மாலை
8. வல்லைக் கும்மி, உமையாண்டாள் கும்மி
9. ஸ்ரீ சிருங்கேரி ஆச்சாரியர் பதிகம்
10. அரிமளம் சிவானந்த சுவாமிகள் பதிகம்
11. சங்கராச்சாரியார் பதிகம்
12. குன்றக்குடி சண்முகநாதர் உலா

சுப்பையாபிள்ளை இயற்றிய புவனேந்திர காவியத்திற்குப் பாடிய சாற்றுக்கவி பின்வருமாறு:

சீரார் முதுகுளத்தூர்ச் செல்வனுயர் மால்முருகன்
பேரார் தருசுப்பிர மணுய - னேராரும்
சீலப் புவனேந்திரன் கதையைச் செப்பினன்கூர்
தாலத்தார் கொண்டாடத்தான்

ஊ. இராமசாமிப் புலவர்

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் சர்க்கரைப்புலவர் மரபில் உதித்தவரும், சோடக்குடி சேதுப்புலவரின் குமாரரும், மன்னார்குடி காலேஜ் தலைமை யாசிரியருமான சர்க்கரை இராமசாமிப் புலவர் இக்காவியத்திற்குச் சாற்றுக்கவிப் பாடியுள்ளார். இக்காவியச் சாற்றுக்கவியில் சுப்பையாபிள்ளையை முக்கனித்தேன், வானமுதுப்புலவர் என்று அவரது கவிச்சிறப்பை புகழ்ந்துள்ளார். அதனை,

முக்கனித்தேன் வானமுதெனப்புலவர் முடிதுளக்கிச் செவியேற்கத்
தக்கவர்புகழு முதுகுளத்தூர்வாழ் தருதமிழுணர்ந்த சற்குணனித்
திக்கெலாம்வியந்து செப்பிடப்புவனேந்திரன் கதைபாடினன் குகனன்
பர்க்கெலாமினிய சுப்பையாவேளென் பாலுமிக்குறை வுடையோனே

எனும் அடிகளில் அறிய முடிகிறது.

எ. சதாசிவம்பிள்ளை

இவர் நாகை நீலலோஜனிப் பத்திராதிபதிரும், தமிழ்ச்சங்க வித்துவானும் ஆவார். புவனேந்திர காவியத்திற்கு சாற்றுக்கவியில், சுப்பையாபிள்ளையவர்களை "செந்தே மணக்கும் முதுகுளத்தூர்" எனப் பாடியுள்ளார். இதனை,

பூமணக்கும் புவனேந்திரன் புகழ்மணக்குங் காவியத்தைப் புலவோர்தங்கள்
நாமணக்கச் செவிமணக்க நல்லறிவெலாமணக்க நக்லிணான்செந்
தேமணக்கு முதுகுளத்தூர்த் திசைமணக்கும் புகழான்செல்வமிக்கு
மாமணக்குஞ் சுப்பையாவாய் மணக்குந்திருப்பெயர் கொண்மகிமையோனே

எனும் அடிகள் மூலம் அறியலாம்.

ஏ. எம்.கே.எம். அப்துல்காதிறு ராவுத்தர்

சிவகங்கைத் தாலூகா போர்டுமெம்பராகவும், இராமநாதபுரம் விவசாயசங்க நிர்வாக சபை மெம்பர்களிலொருவரும், இளையான்குடி மாஜிஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டும், நான்காம் தமிழ்ச்சங்க வித்துவான்களில் ஒருவராகவும் திகழ்ந்தவராவார்.

இளையான்குடிக்கு அருகிலுள்ள சோதுக்குடி என்னும் ஊரில் பிறந்தவர். குலாம் காதிறு நாவலரிடம் தமிழ் பயின்றார். ஆங்கில மொழியையும் நன்கு கற்றறிந்தவர். சேது மன்னரது அரிய நட்பினைப் பெற்றவராகத் திகழ்ந்துள்ளார். மன்னரது உயர்ந்த உள்ளத்தையும் உன்னத செயல்களையும் கண்டு மனம் நெகிழ்ந்த காரணத்தால் தாம் பாடிய மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம் எனும் சிற்றிலக்கியத்தில் சேதுபதிகளது செழுங்கெழு குடியையும், கொடைப் பெருமைகளையும் பாடியுள்ளார். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். அவை,

1. மகுமூது பஞ்சரத்தினம்
2. மதுரைத் தமிழ்ச் சங்க மான்மியம்
3. நாமகள் நவமணிமாலை
4. சோதுக்குடிச் சிங்கார வழிநடைச் சிந்து
5. கட்டோம்பு அத்திவா வழிநடைச்சிந்து
6. நாகூர் நாயகர் கீர்த்தனாரத்தினம்

என்பன.

புவனேந்திர காவியத்திற்குப் பன்னிரண்டு பாடல்களில் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். பாடப்பட்ட பன்னிரண்டு பாடல்களில் சுப்பையா பிள்ளையின் ஊர், பிறப்பு, சிறப்பு போன்றவற்றைக் காணமுடிகிறது.

முதலிரு பாடல்களில் பாண்டி நாட்டின் சிறப்பு, சேதுபதி மன்னனின் சிறப்பினைக் கூறும்விதமாக

'நாமருவுஞ் சுவைவேட்டு மீட்டுவரும் வளப்பாண்டி நாட்டினோர்பால்'
'தென்னாட்டுக் கணியாகுஞ் சேதுபதி மன்னரவை சிறப்பு மேவும்'

எனப் பாடியுள்ளார்.

மூன்றாவது பாடலில் முதுகுளத்தூர் மண்ணில் வாழ்ந்த புலவரான சரவணப்பெருமாள் கவிராயரை,

'வண்டமிழ்நா வலர் பலருட் சிறந்தசர வணப்பெருமாள் வலவன் முன்னே
விண்டபுவனேந்திரனம் மானையெனு முன்னூலை விரும்பி யாய்ந்துட்'

போற்றும் விதமாகப் பாடியுள்ளார்.

அடுத்த மூன்று பாடல்களில் சேதுபதி மன்னர்களான பாஸ்கர சேதுபதி, ராஜராஜேஸ்வரி, முத்துராமலிங்க சேதுபதி போன்றோரைப் புகழும் விதமாக வரிசைப்படுத்தி

மற்றதனுக் குற்றபெயர் புவனேந்த்ர காவியமா வழுத்தி முன்னஞ் சொற்றபுகழ்ச் சேதுபதி மன்னர்குலப் பாற்கடலிற் றோன்று தோன்ற

லூற்றதரு நீதிமணியா னோருருக்கொண் டெனக் கொடையாலோஞ்குசீர்த்தி
பெற்றிருந்த பாற்கரரா ஜன்புரிந்த பெருந்தவத்தாற் பிறந்த செல்வன்

தேசமுழு வதும் புகழுந் தன்மரபு மன்னர்குல தெய்வ மென்றே
நேசமுடன் பணிபுரியும் ராஜரா ஜேசுவர் நெடுந்தாட் கஞ்சம்
வாசமுறு மணமேவி யருள்வாரி யிடைமூழ்கி வளர்தற் கேற்ப
ராஜரா ஜேசுவர துரையென்னப் புகலருமை நாம பூமன்

போற்றிசெயும் பொலங்கழலான் புந்தியினாற் கருணையினாற் புகழா லன்பா
லேற்றமிகு மகிபன்முத்து ராமலிங்க சேதுபதி யினிது கேட்ப

எனப் பாடியுள்ளார்.

'முதுகுளத்தூ ரெனப்பகருந் தென்குளந்தை யிலங்க வாழ்வோன்'

புலவரவர் பிறந்த (தற்போதைய) முதுகுளத்தூர் எனும் ஊரிற்கு முந்தைய பெயர் தென்குளந்தாபுரி என அழைக்கப்பட்டு வந்ததென மேற்சுட்டிய அடி மூலம் அறியமுடிகிறது.

புலவரவர் பல நூற்களைக் கற்றறிந்தவரெனவும், கவிகள் இயற்றியவதில் சிறப்புமிக்கவர் என்பதையும் பகரும் விதமாக

'பொங்கும்பெரும் பேர்படைத்தான் பன்னூலுங் கற்றறிந்த புலமை யாளன்'

எனும் அடியினைக் குறிப்பிட்டுள்ளார்.

புலவரவர்களின் பரம்பரையைச் சிறப்பிக்கும் வண்ணம் அவரது தந்தை இராமசாமிப்பிள்ளை, அவரது தாத்தா ஆதிநல்லவீரப்பப் பிள்ளையைப் பற்றி எடுத்துக்கூறி கவிமழை பொழியும் வாக்குக்குரியோர் என்கிறார்.

'திருந்துதெய்வப் புலமைநல்ல வீரப்பக் குரிசில்பவுத் திரனாஞ் செம்மல்
முருந்தனைய நகைமடவார் மடலெழுது வடிவழகன் முதியோர் நெஞ்சு
ளிருந்துவஅர் தருராம சாமிமகீ பதிதவத்தா லெய்து மெய்யன்
பொருந்துபெரு மழைவானஞ் சொரிந்ததெனக் கவிமாரி பொழியும் வாக்கான்'

புலவரவர்களின் கல்வி ஞானத்தை போற்றும் விதமாகவும், செய்யுள் இயற்றுவதில் கவிச்சிங்கமாய்த் திகழ்ந்து சுவைமிகு பாடல்களை இயற்றுவதில் வல்லவர் என்பதை ,

'குப்பையாம் பிறநூலென் றறிந்தறநூன் முழுதறியுங் குணவான் யாண்டுந்
தப்பையாய் தருபுலவர் தலைவணங்க நவைசிறிதுஞ் சாரா மேலோன்
சுப்பையா பிள்ளையெனுங் கவிச்சிங்க மிவன்பாடற் சுவையை நோக்கி
ணோப்பயாங் கண்டதிலையெனப் புவன முழுவதுமின்று வந்தமாதோ'

எனும் அடிகளின் மூலம் அறியலாம்.

சுப்பையாபிள்ளையின் இறுதி வாழ்க்கை

காசிக்கு நடைபயணம் சென்று காசி குருநாதரிடம் தீட்சை பெற்றுள்ளார். காசியிலிருந்து படிக லிங்கத்தைக் கொண்டு வந்து முதுகுளத்தூர் அரசு மருத்துவமனை அருகிலுள்ள இடத்தில் மடம் (தற்போது வழக்கில் உள்ளது) ஒன்றை ஏற்படுத்தினார். 1918ஆம் ஆண்டு மடத்தைப் புனரமைத்தல் தொடர்பாக கைப்பிரதி அடிக்கப்பட்டதென அறிய முடிகிறது. அதன்பின்னர் 1920 ஆம் ஆண்டில் அவரது குடும்பத்தார் குருபூஜை நடத்தியுள்ளனர். ஆக இடைப்பட்ட ஆண்டான 1919 ஆம் ஆண்டில் இவர் இறந்திருக்கலாமென யூகிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் சுப்பையாபிள்ளையவர்கள் தோற்றுவித்த மடத்தை மீண்டும் தொடங்கி இறைப்பணி

யாற்றுவோமென அவரது சந்ததினர் கூறுகின்றனர். இவரைப்போல் மறைந்து கிடக்கும் பல்வேறு புலவர்களின் படைப்புகளையும் வரலாற்றையும் வெளிக்கொணர்வது தமிழர்தம் கடமையாகும்.

துணைநூற்பட்டியல்

- அறிவொளி,அ, (உ.ஆ), 2008, *தனிப்பாடல் திரட்டு,* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- இராமசாமிப் புலவர்,சு.அ, 1960, *தமிழ்ப் புலவர் வரிசை* (பகுதி-1), சைவ சித்தாதந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை..
- ....., 1960, *தமிழ்ப் புலவர் வரிசை* (பகுதி-2), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- ....., 1960, *தமிழ்ப் புலவர் வரிசை* (பகுதி-3), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- ....., 1960, *தமிழ்ப் புலவர் வரிசை* (பகுதி 5), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- கந்தையா .ந.சி, 2003, *தமிழ்ப் புலவர் அகராதி,* அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
- சிரஞ்சீவி (பதி.), 2005, *சேதுபதி விறலிவிடு தூது,* பிரேமா பிரசுரம், சென்னை.
- சுப்பிரமணியபிள்ளை.கா, 1953, *இலக்கிய வரலாறு* (பகுதி-2), ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சுப்பையாபிள்ளை, 1908, *புவனேந்திர காவியம்,* மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.
- சொக்கலிங்கன் ராய. (பதி.), 1947, *சேதுபதி விறலிவிடுதூது,* இலக்கியப் பதிப்பகம், காரைக்குடி.
- பழநியப்பன் .வெ, & பழநி.உ, (தொ.ஆ.), 1989, *தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்,* (தொகுதி 3), அண்ணாமலைப் பலகலைக்கழகம்.
- வைத்தியநாதன். எச் (பதி.), 2000, *பிற்காலப் புலவர்கள்,* உ.வே.சா, நூல்நிலையம், சென்னை.
- *கள ஆய்வு:* நடராசன், முதுகுளத்தூர்.

புவனேந்திர காவியம் - முகப்பு

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

புவனேந்திரகாவியம்.

இஃது

இராமநாதபுரம் ஸமஸ்தானவித்துவானும்,

முதுகுளத்தூர் கர்னம் தெய்வப்புலமை மகா-ா-ா-ஸ்ரீ

நல்லவீரப்பபிள்ளையவர்கள்

பௌத்திரரும், மகா-ா-ா-ஸ்ரீ

இராமசாமிபிள்ளையவர்கள்

புத்திரருமான மதுரகவி மகா-ா-ா-ஸ்ரீ

சுப்பையாபிள்ளையவர்கள்

இயற்றி,

இராமநாதபுரம் ஸமஸ்தான மஹாவித்வான் துவாத்திரீம் சதவதானி ஸ்ரீமத்-

சரவணப்பெருமாள்க்கவிராயர் அவர்களாற்

பரிசோதித்து,

ஹிரண்ய கர்ப்ப யாஜி இரவிதல மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீமான்

M. B. முத்துராமலிங்க சேதுபதி

மஹா ராஜா அவர்கள் பொருளுதவியின் பேரில்

மதுரைத் தமிழ்ச்சங்க அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

சீலக-ஸு ஆவணி-மூ

இதன் விலை] 1908. [ரூபா 2.

சுப்பையாபிள்ளையின் குடி மரபு



மதிப்பிடப்பெற்றது

பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்

செல்வி. **அரியரெத்தினம் - அனேஜா**
கலைமாணி மாணவர்
மெய்யியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை
கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை, இலங்கை.
anejaariyarethnam@gmail.com

அறிமுகம்

மாறிவரும் இவ்விஞ்ஞான உலகிலே மனித முயற்சியினை மட்டுப்படுத்திவிட முடியாது. நாளுக்கு நாள் பல்வேறுபட்ட புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் நம்மை வியப்பில் ஆழ்த்தவே செய்கின்றன. நாகரிகத்தினதும் விஞ்ஞான தொழில்நுட்பத்தினதுமான தேவை நம்மை அடிமைகளாக்கி வைத்திருக்கின்றது. உலக நடப்புக்களில் புதிதுபுதிதாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பலவற்றையும் நாம் முழுமையாக புரிந்து கொள்ள எடுக்கும் காலத்திற்குள் அதனையும் முந்திக்கொண்டு புதிய புதிய மாற்றங்கள் அரங்கேறுகின்றன. வேறு எந்தத் துறைகளையும்விட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையிலே இந்த மாற்றங்கள் அதிகளவில் உணரப்படுகின்றன. இத்தகைய வளர்ச்சியினால் உருவாக்கப்படுகின்ற பல சாதனங்கள் ஒன்றுக்கொன்று போட்டியாக வெளிவந்தவண்ணமே இருக்கின்றன.

இன்றைய இயந்திரத் தொழில்மயமான யுகத்தில் புவியானது பல்வேறுபட்ட சூழல் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கின்றது. இன்று உலகில் உள்ள பெரும்பாலானவர்களால் ஒரு மாபெரும் பிரச்சினை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதும், காலதாமதம் இன்றித் தீர்க்கப்பட வேண்டும் என உணரப்பட்டதுமான பிரச்சினையாக உலக சூழல் மாசுபடுதல் காணப்படுகின்றது. அந்தவகையில் இன்றைய காலகட்டத்தில் புவிச்சூழலின் இயல்புநிலைக்குப் பெரிதும் அச்சுறுத்தலாக அமையும் மாசாக்கிகளின் வரிசையில் புதியவரவாக மின்னணுக் கழிவுகள் அமைகின்றன.

மின்னணுக் கழிவுகள்

மின்னணுக் கழிவுகள் என்பன மனிதர்களால் பாவனைக்கு உட்படுத்திக் கைவிடப்பட்ட இலத்திரனியல் சாதனங்கள் ஆகும். சுருங்கக் கூறின் கைவிடப்பட்ட இலத்திரனியல் சாதனங்களே மின்னணுக் கழிவுகள் எனப்படும். இன்று அதிகம் பாவனையில் இருக்கின்ற இலத்திரனியல் சாதனங்களாக கணினிகள், தொலைக்காட்சிப்பெட்டி, தொலைபேசி, குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள், மின்னடுப்பு என பலவற்றைக் குறிப்பிட முடியும். இவற்றுள் சந்தையில் நிலவும் போட்டித்தன்மை காரணமாக நாளுக்கொரு புதிய வகை என உருவாகிக் கொண்டிருக்கும் கையடக்கத் தொலைபேசிகள், கணினிகள் என்பன புவியை மாசாக்குவதில் அதிக பங்களிப்பினை வழங்கி வருகின்றமை அறியப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்ப விருத்தியின் விளைவாகவும், மனிதனது தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், வேலைகளை இலகுவாக்கிக் கொள்வதற்கும், சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும், மின்னணுப் பொருட்களும், கருவிகளும் அதிகளவில் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படுவதுடன் இன்றைய சனத்தொகைப் பெருக்கத்தின் விளைவாக இப்பொருட்களிற்கான கேள்வியும் அதிகரித்து வருவதனால் மின்னணுப்பொருட்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்து சேருகின்றன. இவ்வாறு பயன்பாட்டிற்குள் ஊடுருவும் மின்னணுப்பொருட்கள் சிறிது காலத்திலேயே மின்னணுக் கழிவுகளாக வெளியேறுகின்றன. அதாவது இத்தகைய கருவிகள் பொதுவாக பழையதாகி செயலிழந்து விடுவதன் காரணமாகவோ அல்லது அவற்றினை விடவும் வினைத்திறன் மிக்க கருவிகளை பயனாளர்கள் கொள்வனவு செய்து விடுவதன் காரணமாகவோ அவை கழிவுகளாக

வெளியேற்றப்படுகின்றன. சாதாரணமாக நோக்கின் இன்று பாவனைக்கு உட்படுத்தப்படும் இவ் இலத்திரனியல் உபகரணங்களின் பாவனை ஆயுட்காலம் மிகக் குறுகியதாக இருப்பதுடன் அவை பழுதடைந்து விட்டால் திருத்தம் செய்து பாவனைக்கு உட்படுத்துவதைவிட புதிதாக ஒன்றை கொள்வனவு செய்தல் இலகுவாகவும், திருப்திமிக்கதாகவும் அமைகின்றது. அதுமட்டுமன்றி பொருளாதார ரீதியில் குறைவான வசதி கொண்ட மக்களும் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் சந்தையில் இவற்றின் மலிவான கிடைப்பனவும் மின்னணுக்கழிவுகளின் துரித உருவாக்கத்தைத் தூண்டுகின்றன. சுருங்கக்கூறின் தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கேற்ப மின்னணுக் கழிவுகளின் வெளியீடும் தற்காலத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

உலகமயமாதல் நன்மை, தீமை என்னும் இரண்டு வடிவத்தில் பூமியை இன்று தன்வசமாக்கியுள்ளது. இதில் நன்மைகள் நன்மைகளாக இருப்பதையிட்டே மக்கள் அதிக கவனம் செலுத்துகின்றார்கள். அதில் நன்மைகளை தொடரவே விளைகின்றார்கள். ஆனால் ஒரு நன்மையை காண மக்கள் ஏற்படுத்தும் முயற்சிகள் தெரிந்தோ, தெரியாமலோ பல்வேறுபட்ட தீமைகளை ஏற்படுத்துகின்றன என்பதை யாரும் கண்டுகொள்வதில்லை. கண்டாலும் கவனிப்பதும் இல்லை. தொழில்நுட்பங்கள் மக்களிற்கு நேரடியாக அள்ளித்தரும் நன்மைக்கு அப்பால் மறைமுகமாக செய்யும் தீமைகள் பற்றி அவர்கள் இன்னும் விழிப்படையவில்லை என்றே கூறலாம்.

தொழில்நுட்பங்கள் இலத்திரனியல் என்னும் வடிவில் மக்களின் பணிகளை இலகுவாக்கியுள்ளது. ஆனால் பூமியின் இருப்பை அது எந்த அளவில் கேள்விக்குறியாகியுள்ளது என்பதனை அண்மைக்காலங்களில் உலகம் புரிய ஆரம்பித்துள்ளது. இன்று சாதாரண பாமர மக்கள் முதல் கற்றறிந்த அறிஞர்கள்வரை தொழில்நுட்பங்களிற்கு அதாவது இலத்திரனியலிற்கு அடிமைகள். அதுவும் புதுப்பிக்கப்படும் நவீன தொழில்நுட்பங்களின் மீதான தீராத அடிமைகள் என்றே கூறவேண்டும். வீட்டின் அங்கத்தவர்கள் ஆகிவிட்ட தொழில்நுட்பப் பொருட்களுடன் மக்களின் வாழ்க்கை நகர்கின்றன. புதிய வருகைகள், பழுதுகள் காரணமாக மக்கள் மின்னணுச்சாதனங்களை கைவிடும் போது மின்னணுக்கழிவுகள் உருவாக்கப்படுகின்றன. அதாவது உலகளாவிய ரீதியில் நாளுக்கு நாள் 112,000 கணினிகள் மற்றும் பல இலட்சக்கணக்கான மின்கலங்கள், 140 மில்லியன் கையடக்கத்தொலைபேசிகளின் உதிரிப்பாகங்கள், வீட்டுப்பாவனை இலத்திரனியல் சாதனங்கள், இறுவெட்டுக்கள் என சமயலறை முதல் தொழிற்சாலை வரை மின்னணுக்கழிவுகள் உருவாக்கப்படுகின்றன. இதனால் வருடத்திற்கு 40 மில்லியன் முதல் 50 மில்லியன் தொன் வரையிலான மின்னணுக்கழிவுகளை பூமி சேர்த்துக் கொள்கின்றது.

அதிகளவான கழிவுகளை ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற கண்டங்கள் வெளியேற்றுகின்றன. இந்தியா இலத்திரனியல் கழிவு வெளியேற்றத்தில் ஐந்தாம் இடத்தில் உள்ளது. ஆசிய நாடுகளில் சீனா, யப்பான் போன்ற நாடுகள் அதிகளவான கழிவுகளை வெளியேற்றுகின்றன. ஆபிரிக்க நாடுகள் மிகவும் குறைந்த அளவான கழிவுகளையே வெளியேற்றுகின்றன. பல அபிவிருத்தி அடைந்த நாடுகள் அன்பளிப்பு என்ற போர்வையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற்கு தமது இலத்திரனியல் குப்பைகளை ஏற்றுமதி செய்கின்றன. இதனால் குறைவிருத்தி நாடுகள் கழிவுத்தொட்டியாகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இப்பிடியில் இலங்கையும் சிக்கிக் கொண்டது. இவ்வாறு நாட்டுக்கு நாடு மின்னணுக் கழிவுகளின் பெருக்கம் அதிகரித்த வண்ணமே செல்கின்றது. இவை இன்று மக்களை பாதிக்க காலம் எடுத்தாலும், காத்திருந்து அவர்களின் அடுத்த சந்ததிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டவையே.

மின்னணுக்கழிவுகளால் ஏற்படும் விளைவுகள்

மின்னணுக்கழிவுகளின் விளைவுகள் எனும்போது இரண்டு வகையான விளைவுகள் பற்றி ஆராயவேண்டியது அவசியமாகின்றது. ஒரு நாட்டின் மின்னணுக்கழிவு இன்னுமொரு நாட்டினால் இறக்குமதி செய்யப்படுவதன் காரணம் மின்னணுக்கழிவுகளின் உள்ளே இருக்கின்ற நன்மையினை கருத்திற்கொண்டேயாகும். மின்னணுக்களிவுகளில் பாரியளவிலான பாதிப்புக்கள் இருந்தாலும்கூட சில குறிப்பிடத்தக்க சாதகமான விளைவுகளும் காணப்படவே செய்கின்றன.

மின்னணுக்கழிவுகளினால் ஏற்படும் சாதகமான விளைவுகள்

மின்னணுச்சாதனங்கள் அபாயகரமான பொருட்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. அவற்றுள் பெறுமதிமிக்க பொருட்களும் இருக்கின்றன. மடிமேல் கணினியை எடுத்துக்கொண்டால் அதில் கிட்டத்தட்ட 60 விதமான பொருட்கள் இருக்கின்றன. அவற்றுள் பலவற்றை மக்களால் மீண்டும் பயன்படுத்த முடியும். மின்னணுச்சாதனங்களில் தாமிரம், வெள்ளி முதலான உலோகங்கள் மட்டுமன்றி தங்கமும் கூட பயன்படுத்தப்படுகின்றது. உலக அளவில் அகழ்ந்து எடுக்கப்படும் தங்கம் மற்றும் வெள்ளியில் மூன்று சதவீதமானவை மின்னணுச்சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றது. உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் பல்லாடியம் என்ற உலோகத்தில் 13 சதவீதமும், கோபால்ட் என்ற உலோகத்தில் 15 சதவீதமும் மின்னணுச்சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மிகவும் அபூர்வமான உலோகம் என அழைக்கப்படுகின்ற ஹஃப்னியம் போன்ற உலோகங்களும்கூட மின்னணுச்சாதனங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

இம்மின்னணுச்சாதனங்கள் கழிவுகளாக மாறும்போது இதில் உள்ள உலோகங்களைப் பிரித்தெடுக்கின்றனர். இது இலாபமான ஒரு தொழிலாகக் காணப்படுகின்றது. மின்னணுக்கழிவுகளில் உள்ள உலோகங்களைப் பிரித்தெடுக்கும் தொழிலானது உலகில் பல்வேறு இடங்களில் இப்பொழுதும் நடந்து வருகின்றது. இதன்மூலம் பல்வேறுபட்ட வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

நாடுகளிற்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் இவை உதவுகின்றன. இதனால் வெளிநாடுகளிலிருந்து வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ளவும் அன்னியச்செலாவணி வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. இதனால் நாடுகளிடையே ஒற்றுமையும், சிறந்த இடைத்தொடர்பினையும் ஏற்படுத்திக் கொள்ளவும் முடிகின்றது.

கழிவாக்கப்பட்ட மின்னணுச்சாதனங்களின் சில பாகங்களை மீண்டும் பயன்படுத்தக்கூடிய தன்மையும் காணப்படுகின்றது. அது மட்டுமல்லாது சில மின்னணுச் சாதனங்களை திருத்தம் செய்தும் உபயோகிக்கலாம். மற்றும் அவற்றை வேறு ஒரு பொருளாக மாற்றியும் உபயோகிக்க முடியும். உதாரணமாக குளிர்சாதனப்பெட்டி பழுதடைந்து விட்டால் அதனை அலுமாரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஒரு கையடக்கத் தொலைபேசி உடைந்துவிட்டால் அதன் மின்கலத்தை (Battery) இன்னுமொரு கையடக்கத் தொலைபேசிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு குறிப்பிடத்தக்க சில நன்மைகளையே மின்னணுக்கழிவுகள் கொண்டுள்ளது.

மின்னணுக்கழிவுகளினால் ஏற்படும் பாதகமான விளைவுகள்

மின்னணுக்கழிவுகளின் மிகையான அதிகரிப்பினால் பூகோளம் பாரிய பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றது. அவையாவன,

1. சூழல் பிரச்சினை
2. மானிடப் பிரச்சினை
3. பொருளாதாரப் பிரச்சினை

சூழல்பிரச்சினை

மின்னணுக்கழிவுகளினால் ஏற்படும் சூழல்பிரச்சினைகளாக பின்வரும் பிரச்சினைகளை இனம்காணக்கூடியதாக உள்ளது.

1. வளிமாசடைதல்
2. நிலம் மாசடைதல்
3. நீர் மாசடைதல்

வளி மாசடைதல்

மின்னணுப்பொருட்கள் உலோகங்களையும், சில தீவர நச்சு இரசாயணப் பொருட்களையும் கொண்டுள்ளன. இத்தகைய மின்னணுப்பொருட்களை முறையாக மீள்சுழற்சிக்கு உட்படுத்தாமல்

வெறுமனே எரிக்கப்படுவதனால் அவற்றில் இருந்து நச்சு வாயுக்கள் கலந்து வளியை மாசடையச் செய்கின்றது. இந்த வளி மாசடைவதால் அமிலமழை, பச்சைவீட்டுவிளைவு, ஓசோன்படைத்தாக்கம் போன்றன ஏற்பட்டு பூகோளச்சூழல் பாதிப்படைகின்றது.

புறஊதாக்கதிர்களில் இருந்து புவியை பாதுகாக்கின்ற ஒரு படையாக ஓசோன்படை காணப்படுகின்றது. இத்தகைய ஓசோனின் சிதைவிற்கான பல்வேறு காரணிகளில் ஒன்றாகவே மின்னணுக்கழிவுகள் காணப்படுகின்றது. மின்னணுக்கழிவுகளை எரிக்கும் போது பல நச்சு வாயுக்கள் வளிமண்டலத்தை அடைந்து ஓசோன்படையை பாதிக்கச் செய்கின்றது. ஓசோன்படையை பாதிப்படையச் செய்வதில் குளோரோ புளோரோ காபன் (*CFC*) வாயுக்கள் முக்கியபங்கு வகிக்கின்றது. 1950 களிலும் 1960 களிலும் குளோரோ புளோரோ காபன் வாயுக்களின் அளவானது 10 - 15 சதவீதமாக அதிகரித்தது. இதனால் வளிமண்டலத்தில் குளோரின் மட்டம் உயர்வடைந்தது. 1980 களின் பின்னர் பூகோள கவனம் இவ்வாயுக்கள் மீது திருப்பப்பட்டது. கைத்தொழில் செயற்பாடுகள் காரணமாக குறிப்பாக குளிர்சாதனப்பெட்டிகள், குளிரூட்டிகள் மூலம் உருவாக்கப்படும் குளோரோ புளோரோ காபன் வாயுக்கள் ஓசோனை அழிக்கின்றது. வளிமண்டலத்தை நோக்கிச் செல்லும் இம்மூலக்கூறுகளின் வெளியேற்றத்திற்கு முற்றுமுழுதாக மனித நடவடிக்கைகளே காரணமாகும்.

குளிர்சாதனப்பெட்டிகள், குளிரூட்டிகளில் இன்றைய காலத்தில் குளோரோ புளோரோ காபன் குறைக்கப்பட்டிருந்தாலும் மின்னணுச்சாதனங்கள் மின்னணுக் கழிவுகளாக மாறும்போது அவை எரிக்கப்படுகின்றன. இதனால் சல்பர்ஒட்சைட்டு, கந்தகவீர் ஒட்சைட்டு, ஓசோன் போன்ற வாயுக்கள் வளிமண்டலத்துடன் கலந்து ஓசோன்படையை பாதிப்படையச் செய்கின்றன. வளிமண்டலத்தில் ஓசோன்படை அழிக்கப்படுவதனால் ஞாயிற்றின் அகச்சிவப்புக் கதிர்கள் (*Ultraviolet Rays*) பெருமளவில் புவியை வந்தடையும். இதனால் தாவரங்கள் மற்றும் உணவுப்பயிர்கள் குறைவடையும். மனித சுகாதாரம் பாதிக்கப்படும், வனவிலங்குகளில் இழப்பு ஏற்படும். இத்தகைய பாரிய விளைவிற்கு ஓசோன்படைத் தேய்வு காரணமாக அமைகின்றது.

மின்னணுக்கழிவுகளை எரிப்பதனால் தோன்றுகின்ற மற்றுமொரு பிரச்சினையாக அமிலமழை காணப்படுகின்றது. அமிலமழையானது இன்றைய காலகட்டத்தில் சூழலை மாசடையச் செய்து மக்களை அச்சுறுத்தும் ஓர் விடயமாகக் காணப்படுகின்றது. அதாவது தொழிற்சாலை மயமாக்கலும், சுவட்டு எரிபொருட்களின் பாவனையின் அதிகரிப்பின் காரணமாகவும், கழிவுகளை கையாழ்வதன் காரணமாகவும் தோன்றிய ஒன்றாகவே அமில மழை காணப்படுகின்றது. அமிலமழை என்பது எரிபொருட் படிமங்களை, மின்னணுக்கழிவுகளை எரிக்கும் போது தோன்றுகின்ற சல்பர் ஒட்சைட்டு, நைதரசன் போன்ற வாயுக்கள் இரசாயனமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு வளிமண்டலத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மீண்டும் மழையாக பொழிதலைக் குறிக்கும். மின்னணுக்கழிவுகளைக் கையாளுவதற்கான ஆலைகளில் இருந்து பல நச்சு வாயுக்கள் வெளியேற்றப்பட்டு அமிலமழையாக பொழிகின்றது. இதனால் நீர்வாழ் உயிரினங்கள் பாதிப்படைகின்றது, பயிர்கள் மற்றும் காட்டுச்சூழல் பகுதிகள் பாதிப்படைகின்றது, வன விலங்குகளும், மனிதனும் பாதிப்படையும் நிலை தோன்றுகின்றது, மண்வாழ் அங்கிகளும், மண்வளமும் பாதிப்படைகின்றது, வரலாற்றுச்சிறப்புமிக்க இடங்கள் பாதிப்படைகின்றது, ரயில் தண்டவாளங்கள் போன்றனவும் பாதிப்படைகின்றது.

வளிமண்டலத்தில் ஏற்படும் மற்றுமொரு பிரச்சினையாகிய பச்சைவீட்டு விளைவிற்கும்கூட மின்னணுக்கழிவுகள் காரணமாக அமைந்துவிடுகின்றன. பசுமைக் குடில் வாயுக்களான நீராவி (H_2O), காபனீரொட்சைட்டு வாயு (CO_2), மீதேன் வாயு அல்லது சாண வாயு (CH_4), நைதரசன் ஒட்சைட்டு (NO_2), ஓசோன் (O_3), குளோரோ புளோரோ காபன் (*CFC*) போன்ற வாயுக்கள் சூரிய ஒளிக் கதிர்களை வெளியே விட்டு விடாமல் தன்னகத்தே அடக்கி வைத்துக் கொள்கின்றன. இப்படி தேக்கிவைத்த கதிர்கள்தான் பூமியை சூடாக்கி வைத்திருக்கின்றன. இதுவே பச்சை வீட்டு விளைவு அல்லது பசுமை இல்ல விளைவு என அழைக்கப்படுகின்றன. இத்தகைய பசுமை இல்ல விளைவே

புவி வெப்பமாதலுக்கு அடிப்படைக் காரணமாகும். பசுமைக்குடில் வாயுக்களானது பூமியின் மேற்பரப்பில் அதாவது பூமியில் இருந்து 15 - 60 கிலோமீற்றர் உயரத்தில் கண்ணாடிக் கூண்டுபோல் காணப்படும் ஓசோன் படலத்தை தாக்குகின்றன. ஓசோன் படையானது எம்மை புறஊதாக் கதிர்களில் இருந்து பாதுகாக்கின்றது. ஆனால் பசுங்குடில் வாயுக்கள் அதனைப் பாதிக்கின்றது.

இதற்கு முக்கிய காரணம் மனிதனின் செயற்பாடுகளே ஆகும். இத்தகைய செயற்பாடுகளின் விளைவாக வரலாறு காணாத முறையில் அதிகரித்து வரும் வெப்பநிலை, உயர்ந்து வரும் கடல் மட்டம், வடதுருவத்தில் குறைந்துவரும் பனியின் அளவு, காலநிலை மாற்றம், ஓசோன்படைத் தேய்வு, பாலைவனமாதல், அமிலமழை, காட்டுத்தீ, சுற்றாடல் பிரச்சினைகள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இத்தகைய மின்னணுக்கழிவுகளின் முறையற்ற விதத்திலான செயற்பாடுகளினால் வளிக்கோளம் பெரிதும் மாசுபடுகின்றமையைக் காணலாம்.

நிலம் மாசடைதல்

நிலம் மாசடைதலில் முக்கிய காரணியாக மின்னணுக்கழிவுகள் செல்வாக்கு செலுத்துகின்றன. நிலம் இயற்கை வளங்களில் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. ஆண்டிற்காண்டு அதிகரித்த மக்கள் தொகைக்கு உணவூட்டுவது நிலமாகும். இந்த நிலம் மாசடைவதற்கு பல்வேறுபட்ட காரணங்கள் இருந்தாலும் மின்னணுக்கழிவுகளும் ஒரு முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. மின்னணுக்கழிவுகளை புதைப்பதனால் மண்ணின் இயல்பு நிலை, மண்ணீர், மண்வளம் என்பன பாதிக்கப்படுகின்றது. மண்வளம் பாதிப்படைவதால் தாவரங்கள் வளர்வது தடை செய்யப்படுகின்றன. அதனால் தாவரங்களில் வளர்கின்ற பூச்சிகள், பறவைகள், விலங்குகள் என்பன அழிகின்றன, மண்ணரிப்புக்களும் ஏற்படுகின்றது.

மின்னணுக்கழிவுகள் பூமிக்குள் இட்டுப் புதைக்கப்படுகின்றன. இதன் காரணமாக மண்ணீர், மண்வளம், நிலத்தடிநீர் என்பன மாசடைகின்றன. நிலத்திற்குள் மின்னியல் சாதனங்கள் புதைக்கப்படுவதனால் மண்தரமிழப்பு ஏற்படுகின்றது. இலத்தீன், அமெரிக்க நாடுகளில் மண்வள இழப்பும், உவர்தன்மையின் அதிகரிப்பும் பிரதான பிரச்சினையாக உள்ளது. வட ஆபிரிக்க பகுதிகளில் மண் தரமிளப்பினால் சூழல் அகதிகள் உருவாகிவருகின்றனர். மண்ணின் போசாக்கு குறைவடைந்து பயிர்ச்செய்கையும் பாதிப்படைகின்றது. மேலும் இந்தியாவின் மேற்கு டெல்லிப் பகுதியில் மின்னணுக்கழிவிலுள்ள தாமிரத்தை எடுத்துக்கொண்ட பின்னர் எஞ்சியுள்ள பாதரசக் கலவை மற்றும் ஈயம் போன்றவற்றினை விளைநிலங்களில் வீசிவிடுகின்றனர். இதனால் அந்த விளைநிலங்களில் வளரும் உணவு தானியங்கள் மூலம் ஆபத்தான நோய்கள் வரும் என்பதை அறியாமல் இப்படிப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறாக மின்னணுக்கழிவுகளினால் நிலமானது தரமிழந்து மாசுபடுகின்றது.

நீர் மாசடைதல்

மின்னணுக்கழிவுகளின் வெளியேற்றத்தினால் புவிக்கோளத்திலுள்ள தரைக்கீழ் நீரும், மேற்பரப்பு நீரும் பல்வேறுபட்ட வகைகளில் மாசடைதலுக்கு உட்படுகின்றன. மின்னணுக்கழிவுகளால் எவ்வாறு தரைக்கீழ் நீர் மாசடைதலுக்கு உட்படுகின்றது என நோக்கும்போது, அசுத்தமாக்கிகள் (*Pollutants*) தரையில் ஊடுருவி நீர்ப்பீடத்தை சென்றடைகின்றன. இதற்கு மின்னணுக்கழிவுகளும் காரணமாக உள்ளன. பொதுமக்களினால் வெளியேற்றப்படும் மின்னணுக்கழிவுகள் பிரதான சூழல் பிரச்சினைக்கு காரணமாக அமைகின்றன.

மின்னணுக்கழிவுகள் சில இடங்களில் புதைக்கப்படும் போது அவற்றிலிருந்து வெளியேறும் நச்சுவாயுக்கள் தரைக்கீழ் நீருடன் கலந்து விடுகின்றன. மின்னணுக்கழிவுகளில் இருந்து பல்வேறு வகையான இரசாயணக்கூட்டுக்களை இவை சேர்த்துக்கொண்டு நீர்நிலைகளுடன் கலந்து விடுகின்றன. இவ் நிலக்கீழ் நீரானது கிணறுகளையும் அடையும் நிலை ஏற்படுகின்றது. இந்நீர் மனித நுகர்விற்கு பொருத்தமற்றதாகக் காணப்படும். சில வளர்ந்த நாடுகளில் மின்னணுக்கழிவுகளை மண்ணுக்குள் இட்டுப்புதைக்கின்றனர். இதன் காரணமாக தரைக்கீழ் நீர் பெரிதும் மாசடைந்து காணப்படுகின்றது.

மின்னணுக்கழிவுகளினால் எவ்வாறு மேற்பரப்பு நீர் மாசடைதலுக்கு உட்படுகின்றன என நோக்கும்போது இரசாயனத்தன்மை கொண்ட அசுத்தமாக்கிகளான சல்பேற்று, குளோரைட்டு, சோடியம் நைத்திரேற்று, பொசுபேற்று, கல்சியம் மற்றும் அயன்கள் ஆகியவற்றால் மேற்பரப்பு நீரானது மாசுபடுத்தப்படுகின்றது. மின்னணுணக்கழிவுகளை ஆறுகள், ஏரிகள், கடல், நீர்நிலைகள் போன்றவற்றில் தூக்கி வீசுவதனால் அந்த நீர்ச்சூழலானது பல்வேறுபட்ட வகையிலும் மாசடைவிற்கு உள்ளாகின்றது. இதனால் நீர்வாழ் உயிரினங்களும் தாவரங்களும் பாதிப்படைகின்றன. நீர்நிலைகளுக்கடியில் இரசாயனப் படிவுகள் தங்கி நீரை போசாக்கற்றதாக மாற்றிவிடுகின்றன. நீர்வாழ் உயிரினங்களின் பெருக்கம் குறைந்தும், மடிந்தும் விடும் நிலை ஏற்படுகின்றது. இரசாயணம்மிக்க கழிவுகளை உண்ணும் நீர்வாழ் உயிரினங்களை மனிதன் உண்ணும் போது மனித சுகாதாரமும் பாதிப்படைகின்றது. இவ்வாறு மின்னணுக்கழிவுகளின் வெளியேற்றத்தால் நீரானது பல்வேறுபட்ட முறையில் மாசடைந்து மனிதனுக்கும், சூழலுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது.

மானிடப்பிரச்சினை

மின்னணுக்களிவுகளினால் ஏற்படும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக மானிடப்பிரச்சினை காணப்படுகின்றது. அந்தவகையில் மானிடப்பிரச்சினையானது இரண்டு வகைக்குள் பிரித்து நோக்கப்படுகின்றது.

1.உடலியல் பிரச்சினைகள்

2.உளவியல் பிரச்சினைகள்

உடலியல் பிரச்சினைகள்

மின்னணுக்கழிவுகளினால் மனிதன் பல்வேறுபட்ட உடலியல் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றான். அந்தவகையில் மின்னணுக்கழிவுகள் 100 ற்கும் மேற்பட்ட இரசாயனப்பொருட்களைக் கொண்டு காணப்படுகின்றது. இவற்றில் பெரும்பாலானவற்றை நாம் முறையாகக் கையாளாத சந்தர்ப்பத்தில் அவை அபாயகரமான பின்விளைவுகளை எமக்கு ஏற்படுத்தவல்லவை. மின்னணுக்கழிவுகளின் பட்டியலில் கையடக்கத் தொலைபேசிகள், கணினிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள் பிரதானமானவையாகக் காணப்படுகின்றது. இவற்றினால் ஏற்படுகின்ற உடலியல் ரீதியிலான பிரச்சினைகளைப்பற்றி ஆராய்வது முக்கியமானதாகும்.

மின்னணுக்கழிவுகளில் உள்ளடக்கப்படும் இரசாயனப்பதார்த்தமான ஈயத்தினை எடுத்துக்கொண்டால் அது மனிதனின் மத்திய நரம்பு மண்டலத்தையும், புறநரம்பு மண்டலத்தையும் பாதிக்கக் கூடியதாகும். இரத்தமண்டலம், சிறுநீரகங்கள் மற்றும் இனப்பெருக்க மண்டலத்திற்கு காரணமான சுரப்பிகளையும், குழந்தைகளின் மூளை வளர்ச்சியையும் பாதிக்கக்கூடியதாகும். அதுமட்டுமல்லாமல் இதனை சுற்றுப்புறச்சூழலில் எரிப்பதனாலும், புதைப்பதனாலும் தாவர, விலங்கு, மற்றும் நுண்ணுயிர்கள் பாதிப்படைகின்றது. அதேபோல் கட்மியம் எனும் உலோகம் குறிப்பாக மனித உடலின் சிறுநீரகத்தைப் பாதிக்கக் கூடிதாக காணப்படுகின்றது.

மின்னணுக்கழிவுகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்ற பாதரசத்தினை எடுத்துக்கொண்டால் அது பெரும் பாதிப்பினை மனிதனிற்கும் ஏனைய உயிரினங்களிற்கும் ஏற்படுத்தக்கூடியது. மூளை மற்றும் சிறுநீரகங்களிற்கு சேதம் விளைவிக்கின்றது. வளர்ச்சியடையும் கருவைக்கூட பாதிக்கக் கூடியது. மின்னணுக்கழிவுகளில் பெரிதும் பாவனையில் உள்ள பிளாஸ்டிக் வகைகளில் ஒன்றான $P.V.C$ எரிக்கப்படும் போது அது மனித சுவாசத்திற்கு மட்டுமன்றி அனைத்து உயிரினங்களிற்கும், தாவரங்களிற்கும் தீங்காகிவிடுகின்றது. குறைந்தகால அளவிற்கு பேரீயம் பாதிப்புக்கு உட்பட்டாலே மூளைவீக்கம், தசைத்தளர்வு, இதயம், கல்லீரல், மண்ணீரல் போன்றவை சேதத்திற்கு ஆளாகும் என நவீன ஆய்வுகள் கூறுகின்றன. பெரிலியம், டோனர்ஸ் போன்ற பல நச்சு இரசாயனங்கள் மின்னணுக்கழிவுகளில் காணப்படுவதினால் அவற்றினை எரிக்கும் போதோ இல்லது மீள்சுழற்சி செயன்முறைகளில் ஈடுபடும் போதோ மனிதன் உள்ளிட்ட பல உயிரினங்கள் உடலியல் ரீதியான பாதிப்புக்குள்ளாகின்றது.

இவற்றினால் வயது வந்தோருக்கு உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, அதிர்ச்சி என்பனவும் ஏற்படுகின்றது. குழந்தைகள் வயதுவந்த தோற்றத்தினை அடையும் நிலையும் ஏற்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் இத்தகைய மின்னணுக்கழிவுகள் மீழ்சுழற்சி தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெரும்பாலானோர் புற்றுநோய், குழந்தைப்பேறின்மை போன்ற பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான தொழில்களில் ஈடுபடும் சில தொழிலாளர்கள் கைக்கவசம் இன்றியும், முகக்கவசம் இன்றியும் தொழில்களில் ஈடுபடும் போது தோல் நோய்களும் ஏற்படுகின்றது. மேற்குறிப்பிட்டவாறு மின்னணுக்கழிவுகளினால் பல உடலியல் பிரச்சினைகளும், உயிர் ஆபத்துக்களும் ஏற்படுகின்றமையை அறியக்கூடியதாக உள்ளது.

உளவியல் பிரச்சினை

மின்னணுக்கழிவுகளினால் பல்வேறு வகையான உளவியல் தாக்கங்கள் ஏற்படுகின்றன. அந்தவகையில் மின்னணுக்கழிவுகளினால் பல்வேறு வகையான நோய்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக புற்றுநோய், குழந்தைப்பேறு இன்மை, சிறுநீரக நோய், மூளைநோய் போன்ற பலவகையான நோய்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான நோய்கள் சமூகத்தின் மத்தியில் மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற உளவியல் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. மின்னணுக்கழிவுகள் கரையோரங்களில் கொட்டப்படுவதனால் கடல் நீர் மாசடைகின்றது. இதனால் கடல்வாழ் உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது. இதனால் கடலை நம்பி வாழ்கின்ற மக்களின் பொருளாதாரம் பின்னடைவான நிலையினை அடைவதனால் அச்சமூகச்சூழல் உளவியல் ரீதியிலான பாதிப்பிற்கு உள்ளாகின்றது.

மின்னணுக் கழிவுகளின் மீழ்சுழற்சிப்பணிக்காக சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் போன்றோரை அமர்த்துவதனால் அதிகமான வேலைப்பழு காரணமாகவும், குறைந்த ஊதியம் கிடைப்பதனாலும், மின்னணுக்கழிவுகளை முறையற்ற விதத்தில் கையாழ்வதன் காரணமாக ஏற்படும் நோய்கள் மூலமாகவும் அவர்கள் இயல்பாகவே உளவியல் ரீதியிலான பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

பொருளாதாரப் பிரச்சினை

மின்னணுக் கழிவுகளினால் பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ள நிலையில் இக்கழிவுகளினால் பொருளாதாரத்திலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் மின்னணுக்கழிவுகளினால் ஏற்படும் பொருளாதாரப்பிரச்சினைகளை நோக்கும் போது இப் பொருளாதாரப் பிரச்சினையானது மக்களுடைய வாழ்க்கையிலும் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. மின்னணுக்கழிவுகளை எரிக்கும்போதோ அல்லது மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் போதோ அதனால் ஏற்படுகின்ற கழிவுகளை நிலத்திலே புதைக்கின்ற போதோ பல பாதிப்புக்கள் இடம்பெறுகின்றன. இந்த மின்னணுக்கழிவில் உள்ள நச்சுக்கள் மண்ணினால் உறிஞ்சப்படும்போது வளமான மண் பாதிக்கப்படும். இதனால் விவசாய நடவடிக்கைகளிற்குத் தேவையான மண்வளம் அற்றுப் போகின்றது. இதனால் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ளும் மக்கள் மண்வளத்தை சீர்செய்ய கூடுதலான பணத்தைச் செலவிடுகின்றனர். இதனால் மக்கள் பெரிதும் பொருளாதாரச் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இத்தகைய மின்னணுக் கழிவுகளினால் மக்களிற்கு ஏற்படுகின்ற நோய்களுக்காகவும் மக்கள் அதிகளவான பணத்தினை செலவிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இது அவர்களின் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது. மக்கள் இவற்றினால் கடன்சுமைகளில் சிக்கிக் கொள்ளவும், வறுமைக் கோட்டினை அடையவும் காரணமாகின்றது. மின்னணுக்கழிவுகள் கரையோரங்களில் கொட்டப்படுவதனால் கடல் நீர் மாசடைகின்றது இதனால் கடல்வாழ் உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது. இதனால் கடலை நம்பி வாழ்கின்ற மக்களின் பொருளாதாரம் பின்னடைவான நிலையினை அடைவதனால் அவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்படுகின்றனர். மின்னணுக்கழிவுகளினால் நிலக்கீழ் நீர் மாசடைகின்றது. இதனால் மக்களின் அன்றாட தேவைக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக பணத்தை செலவிட வேண்டிய

நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறான தாக்கங்கள் பொருளாதார ரீதியில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி மக்கள் வாழ்க்கையில் பெரும் பிரச்சினைகளையும் ஏற்படுத்திவிடுகின்றது.

பரிந்துரைகள்

புவிச்சூழலின் அதிகரித்துவரும் மாசாக்கிகளின் வரிசையில் புதிய வரவாக மின்னணுக்கழிவுகள் விளங்குகின்றது. இம் மின்னணுக்கழிவுகளானது ஆபத்தான கழிவுகளாகும். இது தற்கால சமூகத்தை மட்டுமல்லாது எதிர்கால சந்ததியினரின் இருப்பிற்கும் ஆபத்தினை விளைவிக்கக்கூடிய ஒன்றாகும். காலத்தின் தேவையில் இலத்திரனியல் சாதனங்கள் என்பது இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது. மனிதனின் பிரதான தேவையாக இடம்பிடித்துவிட்ட இவ் மின்னணுப்பொருட்களை மனித வாழ்வில் இருந்து அகற்றிவிடவோ, முற்றாக நிறுத்திவிடவோ முடியாது. எனவே இது சிக்கலான ஒரு பிரச்சினையே ஆகும்.

இச்சிக்கலான பிரச்சினைக்காக சர்வதேச ரீதியில் பல உடன்படிக்கைகள் இயற்றப்பட்டு உள்ளன. அபாயகரமான கழிவுகளின் எல்லை இடமாற்ற நகர்விற்கான பேசல் உடன்பாடு, ரொடெர்டம் உடன்பாடு, ஸ்டொக்ஹோம் உடன்பாடு போன்ற பல உடன்படிக்கைகள் இயற்றப்பட்டிருந்தாலும் அவை எந்த அளவிற்கு சிறப்பாக இயங்கிவருகின்றது என்பது கேள்விக்குறியான ஒன்றாகவே காணப்படுகின்றது. பல்வேறுபட்ட உடன்படிக்கைகளும், சட்டங்களும் இயற்றப்படுவது முக்கியமானதல்ல அவை சிறந்த முறையில் கடைப்பிடிக்கப்படவும், செயற்படவும் வேண்டும்.

கணினி, தொலைக்காட்சிப் பெட்டி, கையடக்கத் தொலைபேசி மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களாகிய மின்னணுச்சாதனங்களின் தயாரிப்பாளர்கள் மின்னணுக்கழிவுகளினால் சுற்றுச்சூழலிற்கும், பொது நலன்களிற்கும் விளையும் தீங்கைப்பற்றிய விளிப்புணர்வினை நுகர்வோருக்கும், பொதுமக்களிற்கும் வழங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் முறையான மின்னணுக்கழிவு முகாமை பற்றியும் மக்களிற்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

இன்றைய முதலாளித்துவப் பொருளாதாரச் சூழலில் பொருட்களின் உற்பத்திச் செயற்பாடுகள் போட்டித்தன்மையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே உற்பத்தி நிறுவனங்கள் ஒவ்வொன்றும் நுகர்வோரது பயன்பாட்டினைக் கருத்திற்கொள்ள மறந்துவிடுகின்றன. கூடியளவான இலாபத்தை பெற்றுக் கொள்ளவும், போட்டிச் சூழலில் தம்மை தக்கவைத்துக் கொள்ளவுமே அவை முயற்சிக்கின்றன. நிறுவனங்களை பொறுத்தவரையில் இலாபம் என்பதை அதிகரித்துக் கொள்வதற்கு தமது பொருட்களின் அளவினை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தொடர்ந்து செயற்ப்பட்டு வருகின்றன. இவ்வாறே தொழில்நுட்ப சந்தையில் மின்னணுச்சாதங்களின் உற்பத்தியும் அதிகரித்து வருகின்றமையினையும் காணலாம். இதன் காரணமாக மின்னணுக் கழிவுகளின் பெருக்கம் மக்கள் மத்தியில் பரவலாக அதிகரிக்கின்றது. எனவே இது தொடர்பில் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் அக்கறையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். எனவே தமது உற்பத்தியின் தொகையினை அதிகரிப்பதை விட மாற்றுவழிகளில் எவ்விதம் இலாபத்தை உழைக்க முடியும் என்பதனை சிந்திக்க வேண்டும். அந்தவகையில் பொருட்களின் பாவனையை நீண்டகாலம் என்கின்ற ரீதியில் மாற்றியமைக்க முனைய வேண்டும்.

மின்னணுச் சாதனங்கள் மீள்நிர்மாணத்திற்கும், மீள்சுழற்சிக்கும் ஏற்ற விதத்தில் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும் பாகங்களை இலகுவாக அடையாளம் காணும் வகையில் மின்னணுச்சாதனங்களின் பாகங்கள் கட்டாயமாக அடையாளப்படுத்தப்பட்டு எந்தவகையான பிளாஸ்டிக் அல்லது உலோகம் என குறிக்கப்படல் வேண்டும். அவ்வாறு மீள்சுழற்சி செயற்பாட்டின் போதோ, பிரித்தெடுப்பின் போதோ ஏதெனும் தீங்கு விளைவிற்கும் பொருட்களை மின்னணுச்சாதனங்கள் கொண்டிருப்பின் அது பற்றிய எச்சரிக்கைக் குறிப்பு வழங்கப்படல் வேண்டும்.

அனைத்து விதமான தீங்கு விளைவிக்கும் மின்னணுப்பொருட்களின் ஏற்றுமதியையும், மின்னணுக்கழிவுகளின் ஏற்றுமதியையும் உலக நாடுகள் தடை செய்ய வேண்டும். வளர்ச்சியடைந்த

நாடுகள், கொடை அல்லது மீள்பயன்பாடு என்னும் வகையில் வளர்முக நாடுகளுக்கு மின்னணுக்கழிவுகளை வழங்கி வருகின்றன. இத்தகைய விடயம் தொடர்பில் அந்நாட்டு அரசாங்கம் சிறந்த பகுப்பாய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும். மின்னணுக்கழிவு மீள்சுழற்சி இடம்பெறும் இடங்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் இயங்க வேண்டும். அவ்வாறு அரசாங்க அனுமதியுடன் இயங்கும் இடங்களை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். இத்தகைய இடங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பிலும் அரசு கவனம் செலுத்துதல் அவசியமானதாகும்.

மின்னணுக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுவதை முற்றாகத் தடை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மின்னணுக்கழிவுகளை கொட்டுவதற்கு தனியான இடத்தை தெரிவு செய்ய வேண்டும். அதற்கான இடத்தினை தெரிவு செய்யும் போது மக்களிற்கும், சுற்றுப்புற சூழலிற்கும் பாதிப்பு ஏற்படாதவாறு அமைய வேண்டும். மக்களின் வாழ்விடங்களை அண்டிய பிரதேசங்களில் கொட்டப்படுவதை தவிர்த்து மக்கள் நடமாட்டமற்ற இடங்களை தெரிவுசெய்தல் வேண்டும்.

மின்னணுக்கழிவைக் கையாளும் தொழிலில் ஈடுபடுபவர்கள் தம் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் அவர்களிற்கான பாதுகாப்பினை உரிய நிறுனவம் பெற்றுக்கொடுக்க வேண்டும். இவ்வாறான தொழில்களில் ஈடுபடும் போது பாதுகாப்பான முகக்கவசம், கையுறை என்பவற்றை பயன்படுத்துதல் வேண்டும். ஆபத்துவிளைவிக்கக் கூடிய பொருட்களின் கையாளுகையானது முற்றாகத் தடை செய்யப்படவும், தவிர்க்கப்படவும் வேண்டும். மீள்சுழற்சி தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களிற்கு நீதியான சம்பளம் வழங்கப்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

முடிவுரை

தொழில்நுட்ப வளர்ச்சிகண்ட இவ் உலகிலே மின்னணுச்சாதனங்களின் உற்பத்தியையோ, உபயோகத்தினையோ தடை செய்ய முடியாது. இதனால் மின்னணுக்கழிவுகளின் உருவாக்கமும் தடை செய்ய முடியாததாகும். ஆனால் இத்தகைய மின்னணுக்கழிவுகளினால் பூகோளத்தில் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டு செல்கின்ற போக்கினையே அவதானிக்க முடிகின்றது. மின்னணுக்கழிவுகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்புக்கள் பல்வேறு வடிவங்களாக உருவெடுத்துள்ளது. சூழல், மானிடம், பொருளாதாரம் போன்ற பல்வேறு அம்சங்களில் இதன் தாக்கத்தினை உணரக்கூடியதாக உள்ளது. இத்தாக்கம் மக்கள் மத்தியில் உள்ள தெளிவின்மை காரணமாகவும், மின்னணுப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களினது சுய இலாப நோக்கத்தின் காரணமாகவும் வெளியுலகிற்கு கொண்டுவரப்படாமல் உள்ளது.

எனவே இத்தகைய விடயம் குறித்து ஆராய வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மின்னணுக் கழிவுகள் குறித்துக் கவலை கொள்ள வேண்டிய கட்டத்தில் இன்றைய மனித சமுதாயம் தள்ளப்பட்டிருக்கின்றது. எனவே இதற்கான சரியான தீர்வானது அனைத்து நாடுகளின் அரசகொள்கைகளிலும் மக்கள் அனைவரினதும் மனநிலைகளிலுமே தங்கியிருக்கின்றது என்பதே உண்மையாகும். மின்னணுச் சாதனங்கள் இன்றைய சந்ததியினருக்குப் பாரிய அளவிலான தேவைகளைத் திருப்திபடுத்துவனவாக இருந்தாலும் கூட நாளைய தலைமுறையினரின் பாதுகாப்பு என்பது சவால் நிறைந்ததொன்றாகவே காணப்படுகின்றது.

எனவே மின்னணுக் கழிவுகள் ஏற்படுத்தும் பாதக நிலை என்பது இன்றைய தலைலமுறையினை மட்டும் பாதிக்கும் விடயமல்ல என்பதை உணர்தல் வேண்டும். எம் எதிர்கால சந்ததியின் வாழ்க்கையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே பகுத்தறிவான மனிதனின் ஆக்க பூர்வமான மின்னணுக் கழிவுகள் மனித குலத்தையே அழிக்கும் பேராபத்தான நிலையினை உருவாக்கியுள்ளது. எனவே இது சாதாரண விடயம் அல்ல என்பதை அனைவரும் உணர வேண்டும்.

இத்தகைய பாரிய பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிவகைகளினை ஆராய்ந்து அதற்கேற்பச் செயற்பட வேண்டியது நம் அனைவரது கடமையாகும்.

துணைநின்றவை

- அன்ரனி நோர்பேட். எஸ், 2003, சூழல் புவியியல் வளங்களும் முகாமைத்துவமும், யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், கொழும்பு.
- குணராசா. க, 2002, சூழலியல், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
- http://www.who.int/ceh/risks/e-waste
- http://www.electronicstakeback.com
- http://www.treehugger.com/clean-technology
- http://www.greenpease.org/the-e-waste-problems
- http://feeco.com/electronic-waste-recycling
- http://www.weforum.org/how-can-we-solve-the-electronic-waste
- https://thebalance.com/e-waste-and-the-importance-of-electronics-recycling

மதிப்பிடப்பெற்றது

சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு

செல்வி வினாயகமூர்த்தி - வசந்தா
கலைமாணி மாணவர்
பொருளியல் துறை, கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை, இலங்கை.
nirovasa2919@gmail.com

இந்துமகாசமுத்திரத் தீவில் தன்னிறைவு கொண்ட அரசாட்சியின்வழி நடைபோட்டுக் கொண்டிருக்கும் இலங்கை அரசின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? சிறந்த திட்டமிடல்களுடன் கூடிய செயற்றிட்டங்களை நாட்டு மக்களுக்கும் எதிர்கால சந்ததிக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் பேண்தகு அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு பயணிக்க வேண்டும் என்பதேயாகும். இலங்கை நாடானது 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் அந்நிய நாட்டவரின் கைக்குள் சொல்பேச்சுக் குழந்தையாகிச் சிக்கித் தவித்தது. அத்தகைய அடிமைத்தனத்தில் இருந்து பல போராட்டங்களுக்கு மத்தியில் மீண்டும் என்ன பயன்? இன்று சர்வதேச வர்த்தகம், அபிவிருத்தி என்னும் பெயரில் உலக நாடுகளின் சதிவலைகளில் இலங்கையும் வீழ்ந்திருக்கிறது.

முப்பந்தைந்து ஆண்டு கால இலங்கையின் இனவாதப் போரினை இலங்கை அரசு முடிவுக்குக் கொண்டுவரப் போராடிக் கொண்டிருந்த காலத்தில் இலங்கையின் மீது பல நாடுகளின் பார்வை திரும்பியது. இலங்கை அரசுக்குப் பல நாடுகள் உதவிக்கரம் நீட்டின. அன்று அந்த நாடுகள் கொடுப்பதற்காகத் தனது கரங்களை நீட்டவில்லை. இங்கிருக்கும் வளங்களை எடுத்துக் கொள்ளவே கரங்களை நீட்டின என்பதை யாரும் கண்டு கொள்ளவில்லை. ஏனைய உலக நாடுகள் தத்தமது நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை மையப்படுத்தி இத்தகைய சதிதிட்டங்களை நகர்த்திச் சென்றிருக்கின்றன. ஆனால் இலங்கை அரசு இனவாதப் போரினை நிறைவுக்குக் கொண்டுவருவதே தமது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டிருந்தது. அதனைத் தமக்குச் சாதகமாக மாற்றியமைத்துக் கொண்ட உலக நாடுகளில் சீனா ஒரு முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

அண்மைக்காலத்தில் சீனாவின் மேலாதிக்கம் இலங்கையில் உச்ச அளவில் இடம்பெறுவதனைக் காணலாம். இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் சீனாவின் தந்திரோபாய செயற்றிட்ட உடன்படிக்கைகள் மூலம் கட்டியெழுப்பப்படுகின்றது. இலங்கையில் அதிகளவான முதலீடுகளைச் செய்யும் நாடுகளின் வரிசையில் சீனா முதலிடத்தினைப் பிடித்துள்ளது. இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் நீண்ட காலமாகவே அரசியல் ராஜதந்திர உறவுகள் நிலவுகின்றன. துறைமுகங்கள், விமான நிலையங்கள், பாதை அபிவிருத்திகள் மற்றும் துறைமுக நகரம் போன்ற பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் சீனாவினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இன்று அனைவராலும் பேசப்படுகின்ற விடயங்களுள் ஒன்றாக "**முத்துமாலைத் திட்டம்**"அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்தவகையில் சீனாவின் பாரிய பொருளாதார செயற்றிட்டங்களில் ஒன்றான முத்துமாலைத் திட்டத்தில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளது. இதனால் இலங்கை நாடானது பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் இலங்கை எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்கும் நிலை மற்றும் இலங்கையின் ஆட்சி சூழ்நிலைகள் ஆகிய காரணிகளின் தாக்கங்கள் இலங்கையை சீனாவின் புதிய சில்க் சாலை திட்டத்துடன் ஒருங்கிணையச் செய்தது எனலாம். இவ்வாறான சீன செயற்றிட்டங்கள் மூலம்

இலங்கை நாடானாது தனது அபிவிருத்தி பயணத்தில் நன்மை, தீமை என்கின்ற இரண்டு விடயங்களையும் விரும்பியும், விரும்பாமலும் அனுபவிக்கும் சூழ்நிலையில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

பட்டுப்பாதை

உலக வல்லரசாக உருவாகுவதற்கும், தன்னுடைய பொருளாதார செயற்றிட்டங்களை உலக அளவில் முன்னெடுப்பதற்கும் சீனா ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை பல நகர்வுகளை முன்னெடுத்துச் செல்கின்றது. அந்தவகையில் சீனாவின் பட்டுப் பாதை மிகவும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. பட்டுப்பாதை என்பது சீனாவின் பண்டைக்கால நாகரிகம் பற்றி மேலைநாடுகளுக்கு பிரச்சாரம் செய்யும் ஒரு முக்கிய வழிமுறையாகும். கீழைத்தேய மற்றும் மேலைத்தேய பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தொடர்பை இணைக்கும் பாலமாக இது அழைக்கப்படுகின்றது. பண்டைய காலத்தில் முக்கிய வர்த்தகர்கள், இந்தியர்கள் மற்றும் பாக்ட்ரியன் மக்கள், பின்னர் ஐந்தாம் நூற்றாண்டில் இருந்து எட்டாம் நூற்றாண்டுவரை சொக்டியன் வர்த்தகர்களும், பின்னர் அரபு மற்றும் பாரசீக வர்த்தகர்களும் பட்டுப்பாதையை பயன்படுத்தினர். கண்டம் முழுவதும் இணைக்கும் வகையிலான வர்த்தக பாதைகளில் ஓர் இலாபகரமானதான சீன பட்டு வணிகம் நடைபெற்று வந்த காரணத்தினால் இப்பாதைக்கு பட்டுப்பாதை என்று பெயர் வந்தது.

பட்டுப் பாதை திறப்பினை நோக்கும்போது கி.மு.முதல் நூற்றாண்டில் சீனாவின் டாயுவான், பார்த்திய மற்றும் பக்திரிய நாடுகளுடனான அரசாங்க உறவு பேணும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்தியா மற்றும் மேற்கத்தேய உலகத்தை ஒருங்கிணைக்கும் ஒரு சாலை உருவானது. இந்தப் பட்டுப்பாதை மக்கள் பொருட்கள் மற்றும் கலாசாரத்தைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்புக் கொடுத்தது. ஐரோப்பாவில் ஆரம்ப நவீனத்தின் காரணமாக பிராந்திய மாநிலங்கள் ஒருங்கிணைந்தன. ஆனால் பட்டுப்பாதையில் இது எதிர் தாக்கத்தை ஏற்படுத்தியது. மங்கோலியப் பேரரசின் ஒருங்கிணைப்பைத் தக்கவைக்க முடியாமல் வர்த்தகம் குறைந்தது. கொன்ஸ்தாந்துநோபிளில் ஒட்டோமன் மேலாதிக்கத்தைத் தொடர்ந்து 1453இல் பட்டுப்பாதை வழியே வணிகம் மேற்கொள்வது நிறுத்தப்பட்டது. அந்நாளைய ஒட்டோமான் ஆட்சியாளர்கள் மேற்கத்திய எதிர்ப்பாளர்களாக இருந்தனர். யுரேசிய நில பாலம் சில நேரங்களில் ‘‘புதிய சில்க் சாலை’’ என குறிப்பிடப்படுகிறது. அதாவது சீனாவிலிருந்து பாரசீகம் வழியாக மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஆபிரிக்க நாடுகளுக்கு நடைபெற்ற தரைவழி வர்த்தகத்தில் முக்கியமான மார்க்கம் சில்க் பாதை என்றழைக்கப்பட்டது. இது சீனா, இந்தியா, பெர்சியா, அரேபியா, எகிப்து, ஐரோப்பா, என்று நீண்டது. பட்டுப்பாதை வழியாக உள்ள ரயில் பாதையின் கடைசி இணைப்பாக, 1990 இல் சீனா மற்றும் கஜகஸ்தான் ரயில் அமைப்புக்கள் அலாட்டா கணவாயில் இணைக்கப்பட்டுள்ளது.

ஆனால் காலமாற்றத்தில் பட்டுச் சாலை என்பதே மறைந்துவிட்டது. நாடுகளுக்கிடையேயான வரத்தகத்திலும் பல மாற்றங்கள் உருவாகிவிட்டன. எல்லா நாடுகளும் தங்களது பாரம்பரிய வர்த்தக முறைகளுக்கு நவீன வடிவங்களைக் கொடுத்து வருகின்றன. நாடுகளிடையே வர்த்தகம் செய்ய கடல் மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு புதிய சந்தைகள் உருவானது என்றால் அதற்கு முன்பிருந்தே சீனா சர்வதேச வர்த்தகத்தில் முக்கிய இடத்தில் இருந்துள்ளது. பண்டமாற்றுக் காலத்திலிருந்தே உலகம் தழுவிய வர்த்தக நடவடிக்கைகளை சீனா மேற்கொண்டு வருகின்றது.

இப்போது சீனா இந்தப் பட்டுச்சாலை மார்க்கத்தை புதிய வடிவில் ரயில்வழிப் பாதையாக உருவாக்கியுள்ளது. இதற்காக பல ஆயிரம் கோடியை ஒதுக்கி முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் இந்த பட்டுச் சாலை மார்க்கத்தில் சரக்கு ரயில் சேவையையும் தொடங்கிவிட்டது. சீனாவின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் முகமாக இந்தத் திட்டத்துக்கு நவீன வடிவம் கொடுத்ததாக சீனா கூறியுள்ளது. சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் உள்ள யிவூ இன் சர்வதேச ஏற்றுமதி மையத்திலிருந்து புறப்பட்டுள்ள ரயில் கஜகஸ்தான், ரஷ்யா, பெலாரஸ்,

போலந்து, ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ் வழியாக லண்டன் சென்றடைகிறது. சுமார் 12,000 கிலோமீற்றர் தூரத்தை 18 நாட்களில் கடந்து லண்டனை சென்றடையும் என்று சீனா குறிப்பிட்டுள்ளது. இதில் சாதனையும் நிகழ்த்தியுள்ளது.

இலங்கையுடனான முத்துமாலைத் திட்ட உடன்படிக்கை

உலகளவில் மிகப்பெரிய வல்லரசாக வளர்ந்து வரும் சீனா, தனது பொருளாதார மற்றும் வர்த்தக ஆதிக்கத்தை உலகளவில் விரிவுபடுத்துவதற்காகவும், நிலைப்படுத்துவதற்காகவும் பல ஆண்டுகளுக்கு முன்பு "பட்டுப்பாதைத் திட்டம்" என்ற திட்டத்தை அமல்படுத்தியது. இதன் மூலம், சீனாவின் பொருளாதார சந்தையுடன் பல்வேறு உலக நாடுகளை சாலை மார்க்கமாக இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. பழமையின் நவீன வடிவங்களை ஒவ்வொரு நாடுகளும் தங்களுக்கு ஏற்ப உருவாக்கி வருகின்றன. அந்தவகையில் சீனாவும் ஒரு புதிய முயற்சியில் இறங்கியுள்ளது. அதுதான் புதிய சில்க் பாதை ஆகும்.

தற்போது இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும்விதமாக "ஒரே மண்டலம், ஒரே பாதை" என்ற புதிய திட்டத்தை அமல்படுத்துகிறது. இத்திட்டமானது முத்துமாலைத் திட்டம், புதிய சில்க் பாதைத் திட்டம், புதிய பட்டுப்பாதைத் திட்டம் எனப் பல்வேறு பெயர்களினாலும் அழைக்கப்படுகின்றது. சீனாவின் பொருளாதார சந்தையை ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 68 நாடுகளை சாலைகள், துறைமுகங்கள், ரயில், விமானங்கள், சர்வதேச மின்பாதை, பைப்லைன்கள் மூலம் இணைப்பதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இந்த அடிப்படைக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தவதற்காக சீனா ரூ.80 இலட்சம் கோடியில் பிரம்மாண்ட திட்டம் வகுத்தது. அதை நிறைவேற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சீனாவின் பொருளாதாரம் அதன் ஏற்றுமதியிலேயே அதிகம் தங்கியுள்ளது. சீனாவினுடைய ஏற்றுமதி வர்த்தகம் நடக்கும் பாதையினை "புதிய பட்டுப்பாதை" என்று அழைக்கின்றனர். ஏற்றுமதியில் தங்கியிருக்கும் தனது பொருளாதாரம் உலக நெருக்கடியினால் பாதிப்படையாமல் இருக்க கடல்வழி பட்டுப்பாதையை சீனா உருவாக்கியுள்ளதுடன் மத்திய ஆசியாவினுடைய ஒரு தரைவழி பட்டுப்பாதையையும் உருவாக்கியுள்ளது. இந்தவகையில் முதலாம் கட்டமாக கடல் மார்க்கமாக "முத்துமாலைத் திட்டம்" என்னும் பெயரில் தொடராகப் பல துறைமுகங்களை சீனா தன்வசப்படுத்தி அபிவிருத்தி செய்து வருகின்றது. சீனாவின் முத்துமாலை திட்டத்தில் உள்ள துறைமுகங்களில் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகமும் உள்ளடங்கியுள்ளது.

கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையில் இடம்பெற்ற இனமோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இலங்கையின் அண்மைய நாடான இந்தியாவை விடவும் சீனா பாரிய பங்களிப்பினைச் செய்துள்ளது. யுத்த வெற்றியினை இலங்கை பெற்றாலும் தற்போது சீனாவுக்கு 8 பில்லியன் டாலரை இலங்கை கடனாகக் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது (*China - Sri Lanka economics affiliations*). இந்தவகையில் இலங்கையின் கடன்சுமையினைக் குறைப்பதற்காக வேண்டி இவ்ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் தொடர்பிலும் சீனா அறியாமல் இல்லை. படிப்படியாகத் தன் இருப்பை இலங்கையில் நிலைப்படுத்தி அதனூடாக உயரிய இலாபத்தைப் பெற்று வல்லரசாகும் எண்ணத்துடன்தான் சீனா தனது காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சே ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. சீனாவுக்கு 80 வீத பங்குகளும் இலங்கைக்கு 20 வீத பங்குகளும் ஒதுக்க முடிவு செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தினைத் தொடர்ந்து சீனாவுடனான உறவுகளைப் பேணுவதில் உடன்படமாட்டேன் என அதிபர் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். எனினும் 2017.07.29 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு விடுவதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டன. அதன்படி அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு 1.12

பில்லியன் டாலர் பெறுமதிக்கு 99 ஆண்டு கால குத்தகைக்கு விடல் மற்றும் துறைமுகத்தையொட்டிய 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலத்தை மையப்படுத்தித் தொழிற்சாலை மண்டலம் அமைத்தல் என்பன முடிவாகியுள்ளது.

அத்துடன் மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் சீனாவிடம் 69.55 சதவீத பங்குகளும், இலங்கை அரசிடம் 30.45 சதவீத பங்குகளும் ஒதுக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இதனை சீன அரச நிறுவனமானது *Merchant Port Holdings*க்கு வழங்க முன்வந்துள்ளது. 09.12.2017 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை முறைப்படி சீனாவிடம் ஒப்படைத்தது. இதேவேளை பாகிஸ்தானுடன் இணைந்து சி.பி.இ.சி எனப்படும் சீன - பாகிஸ்தான் பொருளாதார பாதையை, சீனா உருவாக்கி வருகிறது. பாகிஸ்தான் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காஷ்மீர் ஊடாக இந்த பாதை அமைக்கப்படுகின்றது.

சீனாவின் நோக்கம்

புதிய பட்டுப்பாதை திட்டம் சீன தேசத்திற்கு புத்துயிரூட்டும் என்பதில் அந்நாட்டு அரசாங்கம் எதிர்பார்ப்போடு செயற்படுகின்றது. 2049 ஆம் ஆண்டிற்குள் பழைய பட்டுப் பாதை சகாப்தத்தின் பெருமையை மீட்டெடுக்க வேண்டும் என்ற காலக்கெடுவையும் சீன அதிபர் விதித்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையில், சீனாவினுடைய பங்களிப்பு இலங்கையில் அதிகரித்துச் செல்வதற்கு இலங்கை சீனாவை சார்ந்து நிற்பது மட்டுமன்றி, சீனாவும் இலங்கையை சார்ந்து நிற்கின்றமையும் காரணம் என்றே குறிப்பிட வேண்டும்.

சீனாவில் அமைக்கப்பட்டுள்ள இப்பட்டுப்பாதையானது பல நாடுகளுக்கூடாக ஊடறுத்துச் செல்கிறது. இதனடிப்படையில் இப்பாதையின் வழியே இலங்கையின் அமைவிடம் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்ற நிலையில், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தன்னுடைய கவனத்தினைச் செலுத்தியுள்ளது. அதாவது பட்டுப்பாதையின் வழியே அம்பாந்தோட்டை துறைமுகம் காணப்படுவதால் ஓர் இணைப்பினை ஏற்படுத்தும் வகையில் இது முக்கியப்படுத்தப்படுகின்றது. இத்துறைமுகமானது பொருளாதார தொடர்பகளுக்கு ஏதுவாகவும், கப்பல்களை தரித்து வைக்கும் இடமாகவும் சீன அரசினால் பார்க்கப்படுகின்றது.

1995ஆம் ஆண்டுக்கும் 2005ஆம் ஆண்டுக்கும் இடையில் சீனா தனது மசகு எண்ணெய்க்கான கேள்வியை இரண்டுமடங்காக அதிகரித்தது. 2020ஆம் ஆண்டளவில் இது மேலும் இரண்டு மடங்காக அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு சீனா தனது கைத்தொழில் முயற்சிக்காக நாள் ஒன்றுக்கு 7.3மில்லியன் பரல் எண்ணெயினை இறக்குமதி செய்ய வேண்டும் என்பதே எதிர்வு கூறலாகும். 2015ஆம் ஆண்டில் சீனா தனது மொத்த எண்ணெய் தேவையில் 70 சதவீதமானவற்றை மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க பிராந்தியங்களில் இருந்து கடல்வழிப் போக்குவரத்து மூலமாகவே இறக்குமதி செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து கடல்வழிப் போக்குவரத்தினைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்புடன் சீனா செயல்படுகிறது (*China - Sri Lanka economics affiliations*).

இவ்வாறான எதிர்பார்க்கையே முத்துமாலைத் தொடர் தந்திரோபாயத்தின் உருவாக்கத்துக்கு அடித்தளமாக அமைந்தது. இதனால் அம்பாந்தோட்டையில் முன்னெடுக்கப்படும் முத்துமாலைத் திட்டமானது எதிர்காலத்தில் இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா நடத்தப்போகும் பாரிய அரசியல் ராஜதந்திர மற்றும் பொருளாதார ஆதிக்கத்துக்கான எடுகோளாக அமையலாம்.

முத்துமாலைத் திட்டத்தின் சாதக விளைவுகள்

சீனாவின் முத்துமாலைத் திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. சீனாவின் இச்செயற்றிட்டத்தின் மூலம் பல நன்மைகளைப் பெறமுடியும். அந்தவகையில் பொருளாதார ரீதியாக முன்னெடுக்கப்படும் பாரிய செயற்றிட்டங்கள் நாட்டின் பொருளாதார செயலாற்றுகைக்கு உதவுவதாகக் காணப்படும். எனவேதான் முத்துமாலைத் திட்டத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேன்மையடையும் என்பதில் ஐயமில்லை. இவ்வேலைத்திட்டத்தினால் பாரியளவு முதலீடு நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தகைய

நிலைமையானது முதலீடு தொடர்பான சகல நன்மைகளையும் நாட்டிற்கும், நாட்டு மக்கள் எல்லோருக்கும் பெற்றுக்கொடுக்கும். மேலும் ஏனைய நாடுகளும் இலங்கை மீது முதலீடு செய்வதற்கு முன்வருவதுடன் இலங்கையில் முதலீடு மேற்கொள்வது தொடர்பான ஏனைய நாடுகளின் நம்பகத்தன்மையும் அதிகரிக்கும்.

முத்துமாலைச் செயற்றிட்டம் என்பது நீண்ட கால வலுவுள்ள ஒரு செயற்றிட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இலங்கை நாட்டவர்களுக்கு பல புதிய தொழில் வாய்ப்புக்களை இவ் செயற்றிட்டம் உருவாக்கிக் கொடுக்கும். எனவே வேலையின்மை குறையவும், தனிநபர்களினுடைய வருமானங்கள் அதிகரிக்கவும், தனிநபர்களின் ஆற்றல்கள் விருத்தியடையவும் வழிவகுக்கும். நவீன உற்பத்தியின் விஷேட பண்புகளான தொழிற்பிரிப்பு, சிறப்புத்தேர்ச்சி என்பனவும் சிறந்த முறையில் உருவாவதற்கு வழிவகுக்கும்.

அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு புதுப்பொலிவுடன் தனது வேலைதிட்டங்களை முன்னெடுத்துச் செல்வதோடு மட்டுமல்லாமல் புதிய தொழில் முறைகளை அறிமுகம் செய்வதன்மூலம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் நிலை தோன்றலாம். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை அதிகரிக்கச் செய்யலாம். சர்வதேச உறவுகளை வளர்த்துக் கொள்வது என்பது ஒவ்வொரு நாட்டினதும் பலத்திற்கு துணை புரியும். இவ்வாறான பாரிய நீண்ட கால உடன்படிக்கைகள் மூலம் சீனாவுடன் இலங்கை நாடானது மிக நீண்டதொரு நட்புறவை பேண வழிவகுக்கும். இதன் மூலம் சீன - இலங்கை நாடுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளில் விரிவாக்கம் ஏற்படுவது மட்டுமல்லாமல் பாரிய சர்வதேச வர்த்தக செயற்பாடுகள் விரிவாக்கம் அடைய வழிவகுக்கும்.

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகால இனவாத போரினால் ஆக்கபூர்வமான விடயங்களைவிட அழிவின்பால் பெற்றுக்கொண்டவைகளே ஏராளம். எனவே இத்தகைய ஒரு சூழ்நிலையில் நாட்டினைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற குறிக்கோளோடு அரசாங்கம் செயற்பட்டிருந்தாலும் பாரிய அளவில் முதலீடுகளை வழங்க எந்த நாடுகளும் முன்வரவில்லை. இத்தகைய ஒரு நிலையில்தான் சீனா பல நிதி உதவிகளையும், கடன்களையும் இலங்கைக்கு வழங்கியது. எனவே நாட்டின் கடன் சுமை அதிகரித்தது. சீனாவுக்கு இலங்கை கடன் செலுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கின்றது. எனவேதான் இவ் முத்துமாலைத் திட்டம் இலங்கையின் கடன் சுமையினைக் குறைப்பதற்கான ஒரு வழிவகை எனக் கருதி இலங்கை அரசாங்கம் சீனாவோடு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. எனவே முத்துமாலை உடன்படிக்கை இலங்கையின் கடன்சுமைக்கு ஒரு நல்ல தீர்வினைப் பெற்றுத்தரும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை நாடானது என்னதான் தன்னிறைவு கொண்ட ஒரு நாடாக இருந்தாலும்கூட சில விடயங்களில் அது உயர்வடைவது என்பது இயலாத காரியமாகத்தான் இருக்கிறது. ஆனால் கால ஓட்டத்தில் சில விடயங்கள் மாறித்தான் ஆக வேண்டும் என்ற நம்பிக்கையில் இலங்கையும் பயணித்துக் கொண்டிருக்கிறது. எனவே நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற முத்துமாலை செயற்றிட்டம், உலக நாடுகளின் தரவரிசையில் இலங்கையும் ஒரு நல்ல நிலையினை பெற்றுக்கொள்ள ஒரு சூழலை ஏற்படுத்தலாம். மேலும் தடையற்ற ஒரு பொருளாதார உருவாக்கத்திற்கு இவ் உடன்படிக்கை உதவுவதாகவும் காணப்படும். எனவே முத்துமாலை உடன்படிக்கை இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி உடன்படிக்கையாக மட்டுமன்றி பல வழிகளிலும் நாட்டுக்கு நன்மையினை வழங்குவதாக காணப்படுகின்றது.

முத்துமாலைத் திட்டத்தின் பாதக விளைவுகள்

சீன முத்துமாலைத் திட்டமானது பல்வேறுபட்ட நன்மைகளைப் பெற்றுத்தருவதாக இருந்தாலும் கூட மறுபுறம் அதன் பாதகமான தாக்க விளைவுகள் என்பது மிக மோசமானதாகவே காணப்படுகின்றன. பாரிய அளவில் முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தினை அண்டிய பிரதேசங்கள் பல உள்ளடக்கப்படுவதனால் அந்த பிரதேசங்களை தமது

சொந்த இடங்களாகக் கொண்ட மக்களது காணிகள் அரசினால் சூறையாடப்படுகின்றன. எனவே அங்கு வாழும் மக்களின் இறைமை மீது அரசு வலுக்கட்டாயமாகத் தனது அதிகாரத்தினைப் பயன்படுத்துவதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் சீனத் தொழிலாளர்கள் இலங்கைக்குப் படிப்படியாக வரும் நிலை ஏற்படலாம். இந்நிலையில் சீனத் தொழிலாளர்கள் இலங்கை நாட்டிலே தங்கியிருப்பதுடன் அம்பாந்தோட்டை பிரதேசம் சிறிய சீன நாடாக உருவாகலாம். சீன தொழிலாளிகள் தமது குடியேற்றங்களை இங்கு அமைத்துக் கொண்டால் சங்கிலித் தொடர் போல பல பிரச்சினைகள் நாட்டில் ஏற்படலாம். சீனர்களின் பண்பாடு, மொழி, தொழில்கள் ஆகியன இலங்கை நாட்டின் சுதேச மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தினை உண்டாக்கும். எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏற்படும் மாறுதல்கள் பல வன்முறைகளைத் தூண்டிவிடும். இருமொழி கொண்ட நாடு மும்மொழியால் பிளவுபடும் நிலை தோன்றலாம்.

இந்த ஒப்பந்தமானது இலங்கையினுடைய இறையாண்மையைப் பாதிக்கின்றது. இத்தகைய ஒரு நிலை வெளிப்படையாகவே தென்படுகின்றது. இலங்கை நாட்டுக்குச் சொந்தமான வளம் சீனாவிடம் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் மக்கள் அந்நியவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இந்த திட்டத்தினால் உள்நாட்டு உற்பத்திகள் பாதிக்கும் நிலை தோன்றலாம். இன்று உலக நாடுகள் அனைத்திலும் சீனாவின் உற்பத்திளை வாங்கமுடியும். அந்த அளவிற்கு சீனா தனது வர்த்தக ஆதிக்கத்தை அனைத்து இடங்களிலும் நிலைப்படுத்தியுள்ளது. இந்நிலையில் சீனாவுக்கு இவ் உடன்படிக்கை மூலம் பாரிய நன்மை கிடைத்துள்ளது. தனது வர்த்தக செயற்றிட்டங்களை மேலும் சீனா விரிவுபடுத்திக் கொள்ளும். எனவே இதனால் உள்நாட்டு உற்பத்திகள் பாதிக்கப்படும்.

பாரிய திட்டமாகக் காணப்படும் முத்துமாலைத் திட்டமானது அதிகளவான இலாபத்தினைப் பெற்றுக்கொடுக்கும். இத்தகைய இலாபம் முழுவதும் இலங்கைக்குச் சொந்தமானது அன்று. ஏறக்குறைய 30 சதவீதமான இலாபமே இலங்கை அரசுக்குச் சொந்தமானதாகும். எனவே இலாபத்தில் முக்கால் பங்கு சீனாவுக்குக் கொண்டு செல்லப்படும். எனவே நாட்டின் வெளிநாட்டுக்கு அனுப்பும் தேறிய முதன்மை வருமானம் அதிகரிப்பதுடன், நாட்டின் வெளிநாட்டு தேறிய முதன்மை வருமானம் குறைவடையும் நிலை தோன்றலாம். இது ஒட்டுமொத்த ரீதியாகப் பார்க்கும்பொழுது நாட்டினுடைய மொத்த தேசிய உற்பத்தியினைக் குறைவடையச் செய்யும். இலங்கையில் புவியியல் பௌதீக அமைப்பை முற்றாக இத்திட்டம் மாற்றியமைக்கும் என்றே கூறவேண்டும். அது மாத்திரமின்றி அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அருகில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்படுவது உள்ளக ரீதியாக அரசாங்கத்துடன் விரிசலை ஏற்படுத்துவது போலவே சீனாவுடனான இவ்வுறவானது இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் நிலவும் உறவில் விரிசலை ஏற்படுத்தும் என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

புதிய பட்டுப்பாதை திட்டமானது இலங்கையில் மாத்திரமின்றி அமெரிக்கா - ஆப்பிரிக்கா போன்ற நாடுகளின் செயற்பாடுகளிலும் தாக்கத்தைச் செலுத்தி வருவதன் காரணமாக சீனா மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் சுமூகமற்ற சூழலை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இத்தன்மையானது இலங்கையின் அரசியல் செயற்பாட்டிலும் தாக்கத்தினைச் செலுத்தும் என்பதில் ஐயமில்லை. அதாவது யுத்த காலப்பகுதியில் சீனாவுடனான நெருங்கிய உறவு பல சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. எனினும் இலங்கை அரசாங்கம் மேற்கு நாடுகளில் இருந்தும் இந்தியாவின் உறவில் இருந்தும் விலகுவதற்கும், இலங்கைக்கு வழங்கி வந்த பொருளாதார மற்றும் ஆயுத ரீதியான உதவிகளை அந்நாடுகள் குறைத்துக் கொள்வதற்கும் பிரதான காரணம் சீனா இலங்கையில் ஆதிக்கம் செலுத்தியமையாகும்.

யுத்தகாலப் பகுதியில் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எதிரானதொரு வெளிநாட்டுக் கொள்கையினை இலங்கை கடைப்பிடித்தமையானது யுத்த முடிவினைத் தொடர்ந்து இந்நாடுகள்

இலங்கைக்கு எதிராகச் செயற்படுவதற்கு சந்தர்ப்பமாக அமைந்தது. இதன் விளைவே இந்நாடுகளில் இருந்து வரும் நன்கொடைகள், கடன் உதவிகள் மற்றும் முதலீடுகள் என்பன தடை செய்யப்பட்டன. இந்நிலையானது யுத்தத்துக்கு பின்னர் இடம்பெறக்கூடிய தேச அபிவிருத்திக்குத் தடையாக அமைந்தது. மேலும் போர்க்குற்றங்களைக் காரணம் காட்டியே ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானத்தை நிறைவேற்றியது.

இதனையடுத்து இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் மேலும் விரிசல் ஏற்பட்டது. இதனால் இலங்கைக்குக் கொடுக்கும் உதவியில் 29சதவீதம் அதாவது 11மில்லியன் டாலரை அமெரிக்கா குறைத்துக் கொண்டது. இது இலங்கையின் பொருளாதாரத்தில் கணிசமான அளவு பாதிப்பினை ஏற்படுத்தியது. இந்நிலையில் தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ள துறைமுக ஒப்பந்தமானது ஏனைய நாடுகளுடனான இலங்கையின் வெளியுறவுகளில் விரிசலை ஏற்படுத்துவதுடன் உள்நாட்டிலும் பல்வேறு தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாக அமைந்துள்ளது. இவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டமைக்கு இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான நெருங்கிய உறவே மூல காரணமாகும். சீனாவினுடைய இம் முத்துமாலைத் திட்டத்தில் இலங்கை அரசும் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனாவின் சதித்திட்டங்களுக்குள் இலங்கையர்கள் கூலிகளாக மாற்றப்பட்டுத் தங்கிவாழும் நிலைக்குத் தள்ளப்படுவர். குறைந்தளவான ஊழியத்தில் தமது ஆற்றலை வீணடிக்கும் நிலை உருவாக்கப்படும். எனவே இலங்கையில் ஊழியத்தினுடைய கூலிமட்டம் பாதிக்கப்படும். சீனாவின் ஆதிக்கம் இத்திட்டத்தின் மூலம் வலுப்பெற்றுள்ளதுடன் இதனைக் காரணம் காட்டி வேறு பாரிய திட்டங்களையும் சீனா தனது சதிவலையில் பின்னலாம். இதில் இலங்கையும் மீனாய்ச் சிக்கிக் கொள்ளலாம். இந்நிலை சீனாவின் காலுக்குக்கீழ் இலங்கை வாழ்வதற்கு ஏற்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளிவிடும். அதாவது இலங்கை சீனாவுக்கு அடிமையாகிவிடும். சீனாவினை நம்பியிருக்க வேண்டிய நிலை தற்போது காணப்பட்டாலும் கூட இந்நிலை மேலும் மேலும் அதிகரிக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன.

சீனா தனது முத்துமாலை செயற்றிட்டத்தில் பாரிய தொழிற்சாலைகளை நிறுவும் போது தொழிற்சாலைக் கழிவுகள் உரிய முறையில் நீக்கப்படாவிட்டால் தொற்று நோய்களும் சூழல் மாசடைவும் ஏற்படும். இதனால் நாட்டு மக்கள் பாதிப்படைவது மட்டுமல்லாமல் அரசாங்கமும் மக்களின் சுகாதார நிலைமைகளின் கீழ் வருடாந்தம் ஒதுக்குகின்ற செலவீனங்களும் அதிகரிக்கும் நிலை தோன்றலாம். அதனை ஈடுசெய்யும் வகையில் வருமானம் கிடைக்காத நிலையில் அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம். மேலும் சீனா மெல்லமெல்ல இலங்கையின் அரசியல் விடயங்களுக்குள் தலையினை நுழைத்துக் கொள்ளும் நிலையும் உருவாகலாம்.

தற்போது இலங்கையின் பாதுகாப்பு என்பதும் சிறிதும் உத்தரவாதமின்மை கொண்டதாகவே காணப்படுகின்றது. அம்பாந்தோட்டை துறைமுக கடற்கரை பிரதேசம் சீனாவின் பிடியில் இருக்கும்போது இலங்கை எவ்வகையில் பிற நாட்டின் அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்புப் பெறமுடியும்? அரசாங்கம் எந்தவகையில் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியும்? என்பது ஒட்டுமொத்த இலங்கை மக்களின் கேள்வியாக இருக்கின்றது. பல வகைகளிலும் இலங்கையின் இறைமையில் இத்திட்டம் குறுக்கீடு செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை.

முத்துமாலைத் திட்டத்தின் ஒட்டுமொத்த ஆதிக்கமானது உலக மக்கள் தொகையில் 60சதவீதத்தையும் அதாவது 450கோடி மக்களையும், உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கையும் சீனா தன்வசப்படுத்திவிடும். இதன்மூலம் வர்த்தக ரீதியாக உலகளவில் சீனா மிகப்பெரிய பொருளாதார பலம்மிக்க நாடாக மாறும். இவ்வாறானதொரு ஒப்பந்தமானது இலங்கை அரசாங்கம் காலம்காலமாகச் சீனாவின் ஆதிக்கத்தின்கீழ்ச் செயற்படுவதற்கு வழிவகுத்துள்ளது என்பது வெளிப்படையான உண்மையாகும். கடலாதிக்கப் பாதையில் இலங்கை

சீனாவின் தந்திரோபாய பங்காளியாக்கப்பட்டுள்ளமையும் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகத்தான் உள்ளது.

இலங்கை அரசின் வினைத்திறனற்ற செயற்பாடுகள்

நாட்டின் ஆட்சி ஒரு குறிப்பிட்ட குழுவிடமே காணப்படுகிறது. நாட்டின் நன்மை கருதிச் சில தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரம் அரசாங்கத்திடமே உள்ளது. இலங்கை அரசு சீனாவின் வலைக்குள் வீழ்ந்திருக்கிறது, இதனால் நாடு தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், எதிர்காலத்தில் இலங்கை எதிர்கொள்ளக் காத்திருக்கும் மோசமான விளைவுகளின் எதிர்வுகூறல்களையும் திட்டமிடமுடியாத நிலையில் இலங்கை அரசின் செயற்றிறன் மறைந்து போய்விட்டதா? கண்ணுக்கு முன் நாட்டின் வளங்கள் சூறையாடப்படுகிறது என்பதை அறிந்திருந்தும் அதற்குக் குரல் கொடுப்பவர்களும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலையில் உள்ள அதிகாரம் படைத்தவர்களும் ஆழ்ந்த மௌனத்தில் இருக்கின்றார்கள்.

இலங்கை நாட்டினுடைய முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சே வெளிநாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி அளித்திருந்தபோது விடுதலைப்புலிகள் இயக்கம் ஒடுக்கப்பட்ட பிறகு இலங்கையில் சீனா அதிகளவான முதலீடுகளைச் செய்து வருகின்றது எனவும், இலங்கையில் சீனா செலுத்தும் ஆதிக்கத்தால் இந்தியா கவலை கொள்ளத் தேவையில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் நாட்டின் ஒரு உயரிய அரசியல் அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டு நாட்டு மக்கள் மீது அக்கறையற்றவர்களாகவும், பொறுப்பற்றவர்களாகவும் செயற்படுவதனால் இறுதியில் சீனாவின் ஆதிக்கத்தில் முழுமையாக அடங்கிப் போகப் போவது இதுவரை காலமும் பாதுகாத்து வந்த சுதந்திரம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

மகிந்த ராஜபக்சே ஆட்சியில் சீனாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்புக் கட்டுமானப் பணிகள் தொடர்பிலும் புதிய அரசாங்கம் ஆய்வு நடத்தவுள்ளதாக அறிவித்திருந்தது. சீனாவின் கட்டுமான வேலைத் திட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள செலவுகள் தொடர்பில் சுயாதீனமான கணக்காய்வு நிறுவனங்களைக் கொண்டு ஆய்வு நடத்தவுள்ளதாக கொள்கை வகுப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான புதிய துணை அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருந்தார். குறிப்பாக 1.5பில்லியன் டாலர் பெறுமதியில் துறைமுக கட்டுமானத்துக்காக சீன நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் ஆய்வு நடத்தப்பட இருக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தகைய கருத்துக்கள் புதிய ஒரு நல்ல தீர்வினைப் பெற வழிவகுக்கும் என்ற நம்பிக்கையினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதாக இருந்தாலும் இத்தகைய அரசாங்கத்தின் கருத்துக்கள் மக்களை ஏமாற்றும் பேச்சுக்களாகவேதான் பதியப்படுகின்றன. புதிய ஆட்சிக்கு வந்த அதிபர் மைத்திரிபால சிறிசேன சீனாவின் முத்துமாலைத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க மாட்டேன் எனக் குறிப்பிட்டிருந்தாலும் அது வெறும் வாய்வார்த்தையாகவே போய்விட்டது. இலங்கையில் நிரந்தர அமைதியின்மையும், அரசியல் ஸ்திரத்தன்மையும் இருப்பதாலேயே சீனா இலங்கையில் முதலீடு செய்கின்றது. இதனை இலங்கை அரசாங்கம் கண்டு கொள்ள மறுக்கின்றது.

பரிந்துரைகள்

சீனாவுடனான இலங்கையின் முத்துமாலை உடன்படிக்கையானது 99ஆண்டுகால நீண்ட உடன்படிக்கையாகும். இவ்உடன்படிக்கையினை மேற்கொள்வதனால் ஏற்படப்போகும் பாதிப்புக்களை இலங்கை அரசாங்கம் அறியாமல் இல்லை. மக்கள் இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்த போதிலும் அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவில்லை. இதற்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களின் கருத்துக்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. இலாபம், கடன் சுமை ஆகிய காரணங்களைக் கூறியே இறுதியில் ஒப்பந்தத்தையும் முடித்துக் கொண்டுள்ளது. இலங்கை அரசு இந்த முத்துமாலை உடன்படிக்கையினை நிராகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும்

கால அவகாசங்களைக் கொண்டிருந்த போதிலும் அது தொடர்பில் எந்தவகையான முயற்சிகளுக்கும் அரசாங்கம் முனையவில்லை என்பதுதான் உண்மை.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை எவ்வாறு தன்னுடைய மிகப்பெரிய தவற்றைத் திருத்திக் கொள்ள முடியும்? உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அரசாங்கம் எத்தகைய அமைதியைப் பேணியதோ அதே அமைதியை மக்கள் இத்திட்டத்தினால் பிரச்சினைகளை அனுபவிக்கும் போதும் வெளிப்படுத்துமானால் அது அரசாங்கத்தின் மோசமான நிலையினை வெளிப்படுத்துவதோடு நாட்டின் அழிவிற்கும் அது வழிவகுத்து விடும் என்பது மறுக்க முடியாத உண்மைதான். ஆழம் அறிந்தே இலங்கை அரசாங்கம் காலை விட்டுள்ளது. இதனால் நாட்டின் நிம்மதி சீர்குலையும் என்பதில் ஐயமில்லை. எனவே இனி வரும் காலங்களில் அரசாங்கம் தனது தவற்றினை உணர்ந்து நாட்டுக்கு ஏற்படும் பாரிய சவால்களினை எவ்விதம் தீர்க்கலாம் என ஆலோசனை செய்ய வேண்டும்.

இதற்காக ஒரு திறமை வாய்ந்த ஆலோசனைக் குழு ஒன்றை அரசாங்கம் நியமிப்பதுடன், அந்த குழுவில் நிர்ணயிக்கப்படும் ஒவ்வொரு உறுப்பினர்களும் நாட்டின் மக்கள் மீதும், நாட்டின் மீதும் பற்றுக் கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும். முத்துமாலைத் திட்டத்தினால் மக்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படுமானால் அது குறித்து சீனாவின் முத்துமாலைத் திட்ட உடன்படிக்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவதற்கும், மக்கள் பாதிப்படையாத வகையில் சீன அரசு மாற்று நடவடிக்கைகளைப் பேணவும் வழிவகை செய்ய வேண்டும்.

மேலும் அம்பாந்தோட்டை கடற்கரை பிரதேசத்தை அண்டிய பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் காணிகளை அரசாங்கம் தவறான முறையில் பயன்படுத்த முயலக்கூடாது. மக்களின் சொந்த விருப்பத்தின் பேரில் அவற்றை அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டுமே தவிர வலுக்கட்டாயமாக மக்களை வெளியேற்றக் கூடாது. அவர்களின் சொந்த விருப்பின் பேரில் காணிகள் பெற்றுக் கொள்ளப்பட்டாலும் அதற்கு ஈடான நட்ட ஈடுகளை அரசாங்கம் மக்களுக்கு வழங்குவதுடன், அவர்களின் வாழ்க்கை முறை பாதிக்காத வகையில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சீனாவில் இருந்து தொழிலாளர்கள் வரவழைக்கப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் மிக இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். அவ்வாறு சீன தொழிலாளிகள் இங்கு வருகை தந்தாலும் கூட அவர்கள் இங்கு குடியேற்றங்களை அமைக்க முற்றாக தடை விதிக்க வேண்டும். முத்துமாலைத்திட்ட தொழிச்சாலைகளில் எமது நாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கு சிறந்த முறையில் ஊழியம் வழங்கப்பட்டு வேலைக்கு அமர்த்தப்படுதல் வேண்டும். நாட்டு மக்களின் பண்பாடுகள், கலாசாரம் ஆகியனவற்றுக்கு எந்த இடையூறுகளும் ஏற்படாத வண்ணம் அரசு சிறந்த நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும்.

தொழிற்சாலைக் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்பட அரசு சீனாவிடம் கோரிக்கை விடுக்க வேண்டும். இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் அம்பாந்தோட்டை நிலப்பரப்பின் ஆக்கத் தன்மையினைப் பாதிக்குமானால் அதற்கு முழு பொறுப்பினையும், மாற்றீடான வழிவகையினையும் வழங்கும் பொறுப்பு சீன அரசினையே சாரும் என்பதை எடுத்துக் கூறுதல் வேண்டும். அதுமட்டுமல்லாது உள்நாட்டு உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத நிலையினை அரசு உறுதி செய்தல் வேண்டும். மேலும் இலங்கையின் பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக அரசாங்கம் கடற்கரைப் பிரதேச பாதுகாப்பினைச் சரியான முறையில் பின்பற்ற வேண்டும்.

உண்மையில் சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் இருந்து முற்றாக ஒழித்துவிடமுடியாது. ஏனெனில் இலங்கை நாட்டு அரசாங்கத்தின் பொருளாதாரம் இன்று சீனாவினை நம்பியே இருக்கின்றது. இந்த நிலையில் சீனாவை எதிர்க்கும் நிலை உருவானால் அது நாட்டின்

பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. சீனாவின் முத்துமாலைத் திட்ட உடன்படிக்கையானது சட்டவலுவுள்ள ஒரு உடன்படிக்கையாகும். எனவே இதில் இருந்து மீள்வதற்கான உபாயங்களை அரசு சிந்திக்க வேண்டும். உடன்படிக்கைதானே என ஏளனமாக விட்டுவிடக் கூடாது. இலங்கை அரசு ஒரு நூற்றாண்டுக்குரிய இலங்கையின் வளத்தினையும் எதிர்கால சந்ததியின் சுதந்திரத்தையும் சீன நாட்டிற்குத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளது என்பதை உணர வேண்டும்.

இலங்கை அரசாங்கம் சீனாவுடன் பல உடன்படிக்கைகளை செய்துள்ளது. அனைத்து உடன்படிக்கைகளையும் முற்றாக அகற்ற முடியாது. அதிலும் குறிப்பாக சட்ட வலுவுள்ள எந்த உடன்பாட்டையும் ரத்து செய்ய முடியாது. எனவே சட்ட வலுவற்ற உடன்படிக்கைகள் அனைத்தையும் அரசாங்கம் நீக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். இத்தகைய அரசின் அதிரடியான நடவடிக்கையானது ஏனைய உடன்படிக்கைகளுக்குத் தயாராகும் சீனாவிற்குப் பதிலடி கொடுப்பதோடு, முத்து மாலைத்திட்டம் வலுவிழந்து நாடு நன்மையடைய வாய்ப்பு உருவாகும்.

நீண்டகாலத் திட்டங்கள், முதலீடுகளுடனும், கடன்களுடனும் இலங்கை சீனாவுடன் தொடர்புபட்டுள்ளதால் இது குறுகிய காலத்திற்காக்க் கட்டியெழுப்பப்பட்ட திட்டம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே சீனாவின் பொருளாதார செயற்றிட்டங்கள் இலங்கை நாட்டினைப் பொறுத்தவரையில் நீண்டகால வலுக் கொண்டதாகக் காணப்படுகின்றது. எனவே இனிவரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமாயினும் இதுகுறித்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். சீனாவின் எந்தவொரு நீண்டகாலச் செயற்றிட்டங்களுக்கும் தலைவணங்கக் கூடாது. அவற்றை ஏற்றுக்கொள்ளவும் கூடாது.

இலங்கையில் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக, இலங்கையை சீனா பொருளாதார ரீதியாக அச்சுறுத்துவதாக இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராணன் குற்றம் சாட்டியிருந்தார். இதனைக் கருத்திற்கொண்டு இரு நாடுகளும் உறவினைப் பேணுவது நன்று. அத்துடன் ஏனைய நட்பு நாடுகளுடனும் இலங்கை சுமுகமான முறையில் உறவினைப் பேணுவது, இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் இருந்து கிடைக்கும் அழுத்தத்தை வகைசெய்ய உதவலாம்.

முடிவுரை

இந்துமகா சமுத்திரத் தீவில் பல்வேறு சிறப்பம்சங்களினைக் கொண்ட ஒரு தீவாக இலங்கை காணப்படுகின்றது. நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட நாடாக விளங்குகின்றது. இலங்கைக்கு ஆபத்து என்பது இயற்கையினால் உண்டானால் அதைத் தடுப்பதற்கு வழிகள் இல்லை. ஆனால் ஒரு நாட்டினால் அடிமைப்படுகின்றோம், ஆபத்து வரும் என அறிந்திருந்தும் குழந்தைத்தனமாக பாரிய அந்நிய நாட்டு உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடுவது தற்போதைய நிலையில் சாதாரண ஒரு நிலையாக தெரியலாம். காலமாற்றத்தில் ஆட்சிகள் மாறிப் போகலாம். நாட்டின் எண்ணங்களும் மாறிப் போகலாம். நாடுகளுக்கிடையிலான உறவுகளும் உடைந்து போகலாம். இந்நிலையில் இலங்கையுடனான உடன்படிக்கை, நாடுகளின் உறவில் விரிசல் ஏற்படும் நிலையில் இலங்கையின் நிலை என்னவாகும்? சாதாரண ஒரு உடன்படிக்கை நிகழ்கால சந்ததி கொண்ட சமூகத்தை மட்டுமல்ல எதிர்கால சந்ததியினையும் பிற நாட்டிற்கு அடிமைப்படுத்த வரையப்பட்ட காகிதமாகிவிடும்.

நாட்டின் நன்மை கருதிய ரீதியில் ஒரு தீர்மானம் ஒன்று எடுக்க முனைகின்றபோது தற்காலச் சூழ்நிலையினை மட்டும் கருத்திற்கொள்ளாது எதிர்கால சமூகம் எத்தகைய பாதிப்பினை எதிர்கொள்ளும் என்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். காலமாற்றத்தில் ஏற்பட இருக்கும் இலங்கைக்கு எதிரான பிரச்சினைகள் தொடர்பில் சிறந்த எதிர்வுகூறலை மேற்கொள்ள வேண்டும். இனிமேலும் இத்தகைய எந்தவொரு பாரிய நீண்டகால உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் சற்றுத் தீர்மானம் எடுத்துச் செயற்பட வேண்டும்.

அறிந்தும் அறியாமலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டது. இதனால் இலங்கை மக்கள் நன்மைகளை அடைந்து கொள்ள முடியுமானாலும் அதனைவிட பல மடங்கு தீமைகளை

அடைந்து கொள்ளும் சூழலும் காணப்படுகின்றது. எனவே முத்துமாலைத் திட்டத்தினால் மக்களுக்கு எத்தகைய பாதிப்புக்கள் ஏற்படலாம் என்பதை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். 99வருட காலப்பகுதியில் பல ஆட்சி மாற்றங்கள் உருவாகும். எனவே ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமாயினும் முத்துமாலைத் திட்டத்தினால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்படும் பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்தி அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க மறந்துவிடக் கூடாது. இனிவரும் காலங்களில் நாட்டிற்கு எந்தவகையிலும் தீமை பயக்காத புதிய பொருளாதார செயற்றிட்டங்களை அரசாங்கம் உருவாக்கிக் கொள்வதுடன் அதன்மூலம் கிடைக்கும் நன்மை நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்படும் வகையில் வழிவகை செய்ய வேண்டும்.

துணைநின்றவை

- *Elisseeff, Vadime, 2001, "The Silk Roads : Highway of culture and Commerce",UNESCO publishing, Berghahn Books.*
- *Jerry H, Bentley, 1993, "Old World Encounters : Cross - Cultural Contacts and Exchanges in Pre - Modern Times", New York : Oxford University Press.*
- *Sri Lanka Supports China's Initiative of a 21st Century Maritime Silk Route.*
- *Reflections on maritime partnership : Building the 21st Century maritime Silk Road.*
- *http://news.bbc.co.uk/2/hi/asia-pacific/8102422.stm*
- *http://english.cri.cn/12394/2015/03/29/2941s872030_1.htm*
- *http://mckinsey.com*
- *http://athavannews.com*
- *http://hirunews.com*
- *http://elukathir.lk*
- *http://puthithu.com*
- *http://www.bbc.com*
- *http://economist.com*

மதிப்பிடப்பெற்றது

சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்காலம்

முனைவர் **அ.புவியரசு**
பட்டதாரித் தமிழாசிரியர்
தூய சேவியர் மேனிலைப்பள்ளி
புறத்தாக்குடி
திருச்சிராப்பள்ளி - 621 111.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடமொழி மரபுக்கு எதிரான குரல்கள் தமிழகத்தில் வலுவடைந்தன. இந்தியப் பெருநிலப் பரப்பின் விடுதலைக்காகப் போராடிய காங்கிரசு இயக்கத்தின் தமிழ்நாடு கிளைக்குள்ளேயே எதிரெதிர் முகாம்கள் அமையும் அளவுக்கு இக்குரல்கள் வலுவடைந்தன. இவ்வாறு எழுந்த வடமொழி மரபுக்கு எதிரான போக்கினைக் கூர்மைப்படுத்திய நிகழ்வுகளில் முதன்மையானதாகக் கருதப்படுவது சேரன்மாதேவி குருகுலப் போராட்டம் ஆகும்.

இக்குருகுலப் போராட்டமே இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகத்தில் சமத்துவச் சிந்தனை பெருகுவதற்கும், பார்ப்பனரல்லாதார் என்ற அடையாளத்தோடு தமிழ் மக்கள் அரசியல், சமூக, பொருளியல் தளங்களில் தங்களை வலுப்படுத்திக் கொள்வதற்கும் தொடக்கப் புள்ளியாக அமைந்தது. இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்கால நிகழ்வுகள் குறித்த வரலாற்றுப் பதிவுகளை இக்கட்டுரை முன்வைக்கிறது.

குருகுலத் தோற்றம்

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் ஆங்கில அரசால் தேடப்பட்டு வந்த வ.வே.சு. ஐயர், பிரெஞ்சு ஆட்சியில் இருந்த புதுச்சேரியில் தங்கியிருந்தார்; ஆங்கில அரசின் பொது மன்னிப்புக்குப் பிறகே அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட இந்தியப் பகுதிக்குள் வந்து வெளிப்படையாக இயங்கத் தொடங்கினார். இதனை ரா.அ. பத்மநாபன், 'வ.வே.சு. ஐயர்' என்ற நூலில் பின்வருமாறு குறித்துள்ளார்:

> *ஐயர் 1920-இல் பொது மன்னிப்பு வந்த பின்பே பிரிட்டிஷ் இந்தியாவுக்குத் திரும்பினார். பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் திருச்சிராப்பள்ளிக்குத் திரும்பிய அவர் புதிதாக எதிலும் ஈடுபடுவதற்கு முன் இந்தியா முழுதும் யாத்திரை போய் வருவதென்று தீர்மானித்தார். புனா, பம்பாய், நாஸிக், ஸபர்மதி (அஹமதாபாத்தில் காந்தி ஆசிரமம் உள்ள இடம்), டெல்லி, ஆக்ரா, அயோத்தி, கயை, காசி முதலிய ஊர்களுக்குப் போய் வந்தார் ஐயர். காசியில் அவர் இரண்டு விரதங்கள் எடுத்துக் கொண்டார். ஒன்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுவது; இரண்டு காங்டியில் உள்ள ஆரிய ஸமாஜ் குருகுலம் போலத் தமிழ் நாட்டில் ஒரு கல்வி நிலையம் துவக்குவது.* (ரா.அ. பத்மநாபன், 1991:188, 189)

ஆங்கிலக் கிறித்தவக் கல்விக்கு மாற்றாக மரபுவழிக் குருகுலக் கல்வியை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென்று பாரதியா பி.க. போன்றோர் விரும்பினர். அவர்களின் விருப்பத்தை ஒத்த சிந்தனையுடையவராகவே வ.வே.சு. ஐயரும் இருந்துள்ளார். இதனை இவர் காசியில் எடுத்துள்ள விரதங்கள்வழி அறிய முடிகிறது. காசியில் மேற்கண்டவாறு உறுதி எடுத்துக் கொண்ட வ.வே.சு. ஐயர், 1920 சூன் திங்கள் சென்னை திரும்பினார். அப்போது 'தேசபத்தன்' ஆசிரியர் திரு.வி.க. வுக்கும் அதன் நிர்வாகி சுப்பராய காமத்துக்கும் கருத்து வேறுபாடுகள் எழுந்திருந்தன. எனவே திரு.வி.க. ஆசிரியப் பொறுப்பிலிருந்து விலகினார். அவருக்குப் பதிலாக வ.வே.சு. ஐயரை ஆசிரியர் பொறுப்பேற்குமாறு சுப்பராய காமத் வேண்டினார். இந்நிலையில் 1920 சூலை 31-ஆம் நாள் 'தேசபக்தன்' ஆசிரியராக வ.வே.சு. ஐயர் பொறுப்பேற்றார். இவர் பொறுப்பேற்றதிலிருந்து ஒன்பது திங்கள் வரை வெளிவந்த 'தேசபக்தன்' அதன் பின்னர் நிர்வாகச் சிக்கல்களால் நின்றுபோனது. வ.வே.சு. ஐயர், 'தேசபக்தன்' ஆசிரியராக இருந்த போது அவ்விதழில்

வெளியான தலையங்கத்தின் பொருட்டு ஆங்கில அரசு அவரைக் கைது செய்து 'பெல்லாரி' சிறையில் அடைத்தது. ஒன்பது திங்கள் சிறை வாழ்க்கை முடிந்து தமது சொந்த ஊரான திருச்சிராப்பள்ளி வரகனேரிக்கு வந்து சேர்ந்தார் வ. வே.சு. ஐயர். வந்தவுடன் ஏற்கனவே தாம் காசியில் எடுத்த உறுதியின்படி குருகுலம் அமைப்பதில் நாட்டம் செலுத்தினார்.

> *தாம் ஆரம்பிக்க விரும்பிய கல்விக் கூடத்துக்குத் தக்க இடம் தேடி, ஐயர் பல இடங்களைப் பார்த்தார். சென்னையில் கோடம்பாக்கம், மன்னார்குடி, வெண்ணாற்றங்கரை (தஞ்சாவூர்) முதலிய ஊர்களில் அவர் பார்த்த இடங்கள் திருப்தி தரவில்லை. இந்தச் சமயம் திருநெல்வேலி ஜில்லாவில் கோயில்பட்டியில் ஒரு காங்கிரஸ் மகாநாட்டில் தலைமை வகிக்கும்படி ஐயரை அழைத்தார்கள். மகாநாடு முடிந்தபின், அவர் அதே ஜில்லாவில் உள்ள கல்லிடைக்குறிச்சி என்ற ஊருக்குப் போக நேர்ந்தது. கல்லிடைக்குறிச்சி தாலுக்கா போர்டு பள்ளிக்கூட ஆசிரியர்கள் காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து அந்தப் பள்ளியில் வேலை செய்வதில்லையென்று தீர்மானித்து விட்டார்கள். அவர்கள் பிறகு தாங்களே சொந்தமாக 'திலகர் வித்தியாலயம்' என்ற தேசீயப் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்தார்கள். ஐயர் கல்லிடைக் குறிச்சிக்குப் போனபோது திலகர் வித்தியாலயத்தை எடுத்துக் கொண்டு நடத்தும்படி எல்லாரும் அவரை வேண்டினார்கள் ஐயர் சம்மதித்தார்.* (மேலது, 1991:215, 216)

'திலகர் வித்தியாலயம்' வ.வே.சு. ஐயரின் பொறுப்புக்கு வந்த பின்னர் 'தமிழ்க் குருகுல வித்தியாலயம்' என்று பெயர் மாற்றப்பட்டது. இக் குருகுலத்தை நடத்துவதற்குப் பாரத்வாஜ ஆசிரமத்தையும் ஐயர் தோற்றுவித்தார்.

வ.வே.சு. ஐயரால் நடத்தப் பெற்ற தமிழ்க் குருகுல வித்தியாலயத்தின் தோற்றம் குறித்து அறிஞர்களிடம் மாறுபட்ட கருத்துகள் உள்ளன. ரா.அ.பத்மநாபனும் (மேலது, ப. 227) புலவர் அரசும் (1966, ப. 86.) பழ. அதியமானும் (2013, ப. 23) குருகுலம் 1922-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகக் கருதுகின்றனர். பெ.சு. மணியும் (2003, ப. 166) கோ.செல்வமும் (2000 ப.9), குருகுலம் 1923-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகக் கருதுகின்றனர்.

குருகுலத் தொடக்கவிழாக் குறித்து, குருகுலவாசியான ஸ்ரீராமநந்தன் 15.12.1922 (துந்துபி ஆண்டு கார்த்திகை 30-ஆம் தேதி) நாளிட்ட நவசக்தி வார இதழுக்கு அனுப்பிய செய்தியில்,

> *இன்று (கார்த்திகை, 23உ) வித்தியாலயமானது ஊருக்கு (கல்லிடைக் குறிச்சிக்கு)த் தென்புறத் திலுள்ள ஓர் அழகிய தோப்பில் திறந்து வைக்கப் பட்டது. நேற்றே தோப்பிலுள்ள கட்டடத்தில் புண்ணியா விவாசனம் வேதமுறைப்படி நடந்தது. இன்று காலை 4 மணிக்கு ஸ்ரீமான் வ.வே. ஸுப்ரமண்ய ஐயரும் ஸ்ரீமகா தேவய்யரும் சிஷ்யர்களும் குருகுல மாணாக்கர்களும் இதுவரையில் இருந்து வந்த கிருகத்திலிருந்து பஜனை செய்து கொண்டு தோப்புக்குச் சென்றார்கள். தேசீயப் பள்ளிக்கூட உபாத்தியாயர் ஸ்ரீமான் கிருஷ்ணய்யர் பனியை லட்சியம் செய்யாமல் ஆசிரமத்தின் கிருகப் பிரவேச காலத்திலேயே வந்து உதவினார். புதிய இடத்தில் எல்லோரும் பஜனை செய்துவிட்டுத் தாமிர பரணியின் நிர்மலமான தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து விட்டுத் திரும்பி வந்து காலை 8 மணிக்கு எல்லோரும் பஜனை செய்து கொண்டு உஞ்சவிருத்தி செய்தார்கள். ஜனங்கள் மிக உற்சாகத்தோடு அரிசி பிட்சை இட்டார்கள். சாயங்காலம் 5 மணிக்கு லட்சுமீவராக ஸ்வாமி ஸன்னிதானத்தில் ஸ்ரீமான் வ.வெ.ஸு. ஐயர் குருகுலத்தைப் பற்றி 1 மணி நேரம் ஒரு பிரசங்கம் செய்தார்..... பாட வகுப்புகள் தை மாதம் முதலே முறையாகத் துவக்கப்படும். அப்போது தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.* (நவசக்தி, 15.12.1922)

என்று கூறியுள்ளார். இச்செய்தியின் தொடக்கத்தில் உள்ள 'கார்த்திகை 23-ஆம் தேதி' என்ற குறிப்பை வைத்துக் கணக்கிட்டால் 8.12.1922 அன்று குருகுலம் தொடங்கப்பட்டது உறுதியாகிறது. குருகுலம் தொடங்கப்பட்டது குறித்த மேற்கண்ட நால்வரின் குறிப்புகளில் பழ. அதியமானின்

குறிப்பு மேற்குறித்த மேற்கோள் செய்தியுடன் ஒத்து உள்ளது. அவர் குருகுல தினசரிக் குறிப்பேட்டைச் சான்று காட்டி இம் முடிவுக்கு வந்துள்ளார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. மற்றவர்கள் அடிப்படைத் தரவுகள் இன்றிக் கூறியுள்ளனர்.

சேரன்மாதேவியில் குருகுலம்

கல்லிடைக்குறிச்சியில் தமது குருகுலத்தைத் தொடங்கிய வ.வே.சு.ஐயர், குருகுலத்தைப் பெரிய அளவில் நடத்துவதற்காகத் தக்க இடம் தேடிக் கொண்டிருந்தார்.

திருநெல்வேலியை அடுத்த சேரமாதேவியில் ஒருவர் தமது முப்பது ஏக்கர் நிலத்தை விற்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். ஐயர் அந்த நிலத்தைப் போய்ப் பார்த்தார். முப்பது ஏக்கருக்கும் ரூபாய் மூவாயிரம் விலை சொன்னார்கள். ஐயர் அந்த முப்பது ஏக்கர் நிலத்தை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று நினைத்தார். பத்திரிகைகளில் ஒரு வேண்டுகோள் விடுத்தார். செட்டி நாட்டில் உள்ள கானாடுகாத்தான் என்ற ஊரில் வயி.சு. சண்முகனார் என்ற இலட்சியவாதி ஒருவர் இருந்தார். அவர் காந்தியடிகளிடத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவர்..... காந்தியவாதியான ஐயர் காந்தியடிகளின் நெறிமுறையில் குருகுலம் நடத்துவார் என்று எண்ணிய சண்முகனார் சற்றும் காலம் தாழ்த்தாது குருகுலம் அமைக்க நிலம் வாங்குவதற்கு வேண்டிய தொகை மூவாயிரத்தையும் உடனடியாகக் கொடுத்து உதவினார். (நாரா நாச்சியப்பன், 1994:32-34)

நிலம் வாங்கியபின் தமிழ் மக்களின் ஆதரவுடன் குருகுல அமைப்புப் பணிகள் முழு வீச்சில் நடைப்பெற்றன. கல்லிடைக்குறிச்சியில் இயங்கிய குருகுலம் சேரன்மாதேவிக்கு மாற்றப்பட்டுப் புதுப்பொலிவுடன் தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிலையில் வ.வே.சு. ஐயரால் புதுவையில் நடத்தப்பெற்ற அச்சுக்கூடம் சேரன்மாதேவி குருகுலத்துக்கு மாற்றப்பட்டது. மூவாயிரம் நூல்கள் அடங்கிய நூல்நிலையம் ஒன்றும் குருகுலத்தில் உருவாக்கப்பட்டது. வ.வே.சு. ஐயரை ஆசிரியராகக் கொண்ட 'பாலபாரதி' என்ற திங்கள் இதழ் குருகுலத்திலிருந்து வெளியாயிற்று.

நன்கொடை திரட்டும் முயற்சி

கல்லிடைக்குறிச்சியில் குருகுலத் தொடக்கவிழா நடைபெறுவதற்கு முன்பே வ.வே.சு.ஐயர் தாம் தொடங்க இருக்கிற குருகுலத்தின் நோக்கத்தையும் செயல்திட்டத்தையும் அதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டியதன் இன்றியமையாமையும் விளக்கி விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையின் பிற்பகுதி,

வித்தியாலயத்தின் உத்தேசங்களனைத்தையும் நிறை வேற்ற லக்ஷ1தி லக்ஷ ரூபா மூலதனமாக வேண்டும். ஹரித்துவாரத்திலுள்ள ரிஷிகுலத்தையும் குருகுலத் தையும் ஸ்ரீரவீந்திரநாத டாகூரின் சாந்தி நிகேதனத்தையும் மகாத்மாவின் சந்தியாக்கிரக ஆசிரமத்தையும் குஜராத் வித்யாபீடத்தையும் ஆதரிக்க வடநாட்டுச் செல்வர் மூலதனம் உதவி வருகிறது போலத் தமிழ்நாட்டுச் செல்வரும் நமது வித்தியாலயத்தை ஆதரித்துப் போஷிக்க முன் வருவார்கள் என்று நம்புகிறோம். ஹரித்துவார குருகுலத்துக்கு ஒரு மிராசுதார் எழுநூறு ஏக்ரா பூமி உதவினார். குஜராத் வித்யாபீடத்துக்கு ஒரு மாதத்திற்குள் பத்து லக்ஷ ரூபா மூலதனமாகச் சேர்ந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இத் தமிழ்நாட்டுக் குருகுலத்துக்குத் தங்களால் இயன்ற உதவி புரிந்து தமது பேரை அழியாப் புகழுடையதாகச் செய்யும்படி தமிழ்நாட்டுச் சீமான்களை வேண்டுகிறோம்.

வித்தியாலயத்துக்கு உதவி செய்ய விரும்பு கிறவர்கள் அடியிற் கண்ட வழிகளுள் ஒரு வழியால் அல்லது பல வழிகளாலும் உதவி புரியலாம்.

(க்) மூலதனத்துக்காக மொத்தத் தொகையாக ஒரு தொகை கொடுத்துவிடலாம்.

(ங்) பூமிகள் தானம் செய்யலாம்.

(ச்) வருஷா வருஷம் ஒரு தொகை அனுப்பி வரலாம்.

(ஞ்) தங்கள் வருமானம் அல்லது லாபத்தில் ஒருபாகத்தை மகமைப் பணமாக எடுத்து வைத்து அதை மாதாமதம் ஆசிரமத்துக்கு அனுப்பி வரலாம்.

(ட்) தினம் ஆசிரமத்துக்கென ஒரு பையில் கொஞ்சம் அரிசி எடுத்து வைத்து மாதா மாதம் அல்லது வாராவாரம் ஆசிரமத்தின் வசூல்தாரர்களிடம் கொடுத்து வரலாம்.

(ண்)விவாகம் முதலிய சந்தர்ப்பங்களில் ஆசிரமத்துக்குச் சம்பாவனைகள் செய்தனுப்பலாம்.

(த்) அறுவடையாகும்போது ஆசிரமத்துக்குக் களத்திலேயே நெல் முதலிய தானியங்கள் தானமாகக் கொடுக்கலாம்.

முதல் வருஷத்தில் எதிர்பார்க்கப்படும் செலவு பின்வருமாறு :

		ரூ.
வித்தியாலய மாணவர், உபாத்தியாயர், அவர்கள் குடும்பம் ஆகிய இவர்களின் சாப்பாட்டுச் செலவு சுமார் ௩௮ பேருக்கு	-	*ரு௪௦௦*
வேலைக்காரர்	-	*௪௦௦*
விளக்கு	-	*௧௦௦*
புத்தகங்கள்	-	*௭௦௦*
சிகிச்சைச் சாமக்கிரியைகள்	-	*௨௦௦*
அச்சுக்கூலி, பிரயாணச் செலவு, தபால், காகிதம் முதலிய செலவுகள்	-	*௭௦௦*
பர்ணசாலைகள் கட்ட	-	*௧௦௦௦*
பாடசாலைத் தளவாடங்கள்	-	*ரு௦௦*
பயிர்த்தொழிலுக்கு வேண்டிய மூலதனம்	-	*௧௦௦௦*
ராட்டினங்கள், பருத்தி	-	*௨௦௦*
ஆக மொத்தம் ரூ.	-	*௧௦,௨௦௦*

அன்பர்கள் செய்ய உத்தேசிக்கும் உதவியைத் தாமதமில்லாமல் ஸ்ரீ.வ.வே. ஸுப்ரஹ்மண்ய ஐயரின் அடியிற் கண்ட விலாசத்துக்கு அனுப்பும்படி வேண்டுகிறோம். அனுப்பும் பணங்களின் கணக்கு சென்னை தினசரிப் பத்திரிக்கைகளில் வெளியிடப்படும். வித்தியாலயத்துக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்ப விரும்புவோரும் வித்தியாலயத்தில் உபாத்தியாயராய்ச் சேர விரும்புவோரும் அடியிற் கண்ட விலாசத்துக்கே எழுதிக் கொள்ளவேண்டும்.

வ.வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர், 'பாரத்துவாஜ ஆசிரமம்',கல்லிடைக் குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.(நவசக்தி, 17.11.1922)

என்று அமைந்துள்ளது. வ.வே.சு ஐயரின் இவ்வறிக்கையை 17.11.1922 நாளிட்ட நவசக்தி வார இதழின் முதல் பக்கத்தில் திரு.வி.க. வெளியிட்டதுடன் குருகுலத்துக்கு ஆதரவாகத் தாமும் ஓர் அறிக்கையை அவ்விதழிலேயே வெளியிட்டார். அவ்வறிக்கையில் திரு.வி.க.,

நமது நாட்டின் விடுதலைக்கு முப்பத்தாறு ஆண்டுகளாக நாம் பல வழிகளிலும் முயன்று வந்தோம். இப்பொழுது சத்தியாக்கிரக நெறியில் தேசீய வாழ்வில் விடுதலை விளங்குவதைக் கண்டோம். சத்தியமும் சுதேசமும் பாரத மாதாவின் கட்டை அறுக்குஞ் சிறந்த கருவி களாகும். இவ்விரண்டை அடிப்படையாகக் கொண்டே ஒத்துழையாமை இயங்குகிறது. இவ்வொத் துழையாமையால் வெற்றி நிகழ வேண்டுமாயின் நாம் இரண்டு பொருள் நாடி உழைத்தல் வேண்டும். ஒன்று கதர்; மற்றொன்று நாட்டுக்கல்வி. நாட்டுக் கல்வியால் நமது நாடு 'நாடாகும்' என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாட்டுக்கல்வி என்று சொல்லிக் கொண்டே மேல் நாட்டுக் கல்விமுறையில் நமது நாட்டை நுழைப் பதனால் நமது நாடு காடாகும் என்று உறுதியாகக் கூறுகிறோம். நமது நாட்டுக் கல்வியை நமக்குரிய குருகுல முறையில் போதித்தல் வேண்டும். வட இந்தியாவில் பல குருகுல வித்தியாலயங்கள் காணப்பட்டு

ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் குருகுல வித்தியாலயங்களில்லையே இல்லையே என்று வருந்திக் கொண்டிருந்தோம். இப்பொழுது தமிழ்க் குருகுல வித்தியாலயம் கல்லிடைக்குறிச்சியில் காணப்பட்டிருப்பதைக் கேட்டு நாம் வரம்பிலா இறும்பூதெய்துகிறோம். அதைப் பற்றிய அறிக்கை முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. நேயர்கள் அதை வாசிக்க. அன்பர்கள் அறிக்கையை வாசிக்கும் அளவோடு நின்று விடாது, வேண்டுவன செய்ய எழுச்சி கொள்வார்களாக. கல்லிடைக்குறிச்சி குருகுலம் ஸ்ரீமான் வ.வே. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறுமென்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறோம். குருகுலத்துக்குத் தக்க தலைவர் கிடைத்தது தமிழ்நாட்டின் அதிர்ஷ்டமென்றே கூறலாம். ஸ்ரீமான் வ.வே.சு. ஐயர் அவர்கள் மேல்நாட்டு மொழிகளில் - ஏறக்குறைய நான்கு மொழிகளில் புலமை பெற்றவர்; கீழ் நாட்டு மொழிகளில் நான்கு ஐந்து மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்; நமது தாய்மொழியாகிய தமிழில் பெருங்காதலுடையவர். பன்மொழிப் புலமையோடு ஐயர் அவர்கள்பால் வைதிக ஒழுக்கமும் தேச பக்தியும் தியாகமும் அடக்கமும் மலர்ந்திருப்பதைக் குறித்து நாம் விரித்துக் கூற வேண்டுவதில்லை. இத்தகைய பெரியார் ஒருவர் தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் வழங்கக் குருகுலத்தை நடத்துமாறு வெளிவந்துள்ள இச்சமயத்தைத் தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். வடஇந்தியாவிலுள்ள குருகுல வித்தியாலயங்களுக்கு ஆங்குள்ளவர்களால் இலட்சக் கணக்காகப் பொருள் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்காக வாவது பொருள் வழங்க லாகாதா? தமிழ் நாட்டில் வீண் வழக்குகளில், களியாடல்களில், ஆலயங்களில், அபிஷேகங்களில், திருவிழாக்களில் எவ்வளவு பொருள் செலவழிக்கப் படுகிறது, அவ்வளவில் ஒரு பகுதியாவது குருகுல வித்தியாலயத்துக்கு செலவழிக்கலாகாதா? போதிய நிதி உதவ நேயர்கள் முற்படுவார்களாக. பண்டைக் காலத்தில் தேசத்தில் தருமம் வளர்ந்தது; இக்காலத்தில் அதர்மம் வளர்கிறது என்று சொல்லப்படுகிறது. பண்டை நாளில் குருகுல வித்தையால் தருமம் வளர்ந்தது. இந்நாளில் அஃதின்மையால் அதர்மம் வளர்கிறது. ஆதலால் நேயர்கள் குருகுலத்தின் அவசியத்தை யுணர்ந்து போதிய உதவி புரிவார்களாக. (மேலது)

என்று வேண்டுகோளும் விடுத்திருந்தார்.

டாக்டர் வரதராசுலு நாயுடு தமது 'தமிழ்நாடு' இதழின் வாயிலாகக் குருகுலத்துக்கு ஆக்கந் தேடினார். குமரன், சுதேசமித்திரன், இந்து ஆகிய இதழ்களும் குருகுலத்துக்கு ஆதரவாக எழுதின. இந்நிலையில் குருகுலத்தின் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில்,

ஆரம்பித்த நான்கு மாதங்களை உத்தேசித்து வளர்ச்சி மிகத் திருப்திகரமாக இருந்தும், குஜராத்து நாடு தனது வித்தியா பீடத்தை கவனித்தது போலத் தமிழ்நாடானது தன்னதாக இருக்கிற இவ்வித்தியாலயத்தை இன்னும் கவனிக்கத் துவங்காமலிருப்பது பரிதபிக்கத் தகுந்த விஷயமாக இருக்கிறது. வெளிநாடுகளில் அங்கங்கேயுள்ள தமிழரும் நகரத்தாரும் ஆசிரமத்தின் மீதும் வித்தியாலயத்தின் மீதும் அபிமானம் காட்டி வருவதற்காக ஆசிரமம் அவர்களுக்குப் பெரிதும் நன்றி காட்டுகிறது. ஐக்கிய மலேய நாடுகளிலுள்ள சுங்கேசிப்பட்டில் வசிக்கும் ஸ்ரீவீராசாமி என்பவர் இக்குருகுலம் ஸ்தாபிக்கப் பட்டதாகக் கேள்வியுற்றதினின்று ரயிலில் இரண்டாவது வகுப்பு வண்டிகளில் ஏறுவதில்லை யென்றும் ரிக்ஷா வண்டி கூட அனாவசியமாக ஏறுகிறதில்லையென்றும் சங்கற்பித்துக் கொண்டு அவ்விதம் மூன்றாவது வகுப்பில் ஏறிச் செல்வதாலும் பாதசாரியாகச் செல்வதாலும் ஏற்படக்கூடிய லாபத்தை ஆசிரமத்துக்கு அனுப்பி விடுகிறதாகத் தீர்மானித்து இதுவரையில் இம்மாதிரியாக நூறு ரூபா மிகுத்து நமக்கனுப்பி யிருக்கிறார். இவருடைய அபிமானத்தையும் உதவி செய்ய முயலும் போக்கையும் தமிழராய்ப் பிறந்த அனைவருக்கும் உதாரணமாய் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். ஒவ்வொருவரும் தங்களுடைய பழக்கவழக்கங்களில் சில

சாமானியமான மாறுதல்கள் செய்து கொண்டு ஆசிரமத்துக்கு வெகு இலேசாக ஸ்திரமான மூலதனம் சேருவதற்கு உதவி புரிந்துவிடலாம். எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் ஸ்திரமான வரும்படியளிக்கத் தக்க மூலதனம் சேருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரம் வித்தியாலயம் கல்வியனைத்துக்குமே ஒரு தாயகமாக விளங்கித் தமிழ்நாட்டுக்கு மாத்திர மல்லாமல் பாரத நாடனைத்துக்கும் உலகப் பொதுவுக்கும் கூட எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி வழியைக் காட்டும் ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கும்.

தற்பொழுது ஆசிரமத்துக்காகச் சேரமாதேவியில் சுமார் 40 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள ஒரு பூமி வாங்க ஏற்பாடு செய்தாகிவிட்டது. அதில் பர்ண சாலைகளும் கெட்டிக் கட்டடமாக ஒரு புஸ்தக சாலையும் அமைக்க வேண்டும். கல்வி புகட்டற்குரிய நவீன சாதனங்களும் சாமக் கிரியைகளும் வாங்க வேண்டியிருக்கிறது. வித்தியார்த்திகளுக்கு ஒரு தொழிற்சாலையும் அச்சடுக்கக் கற்பிப்பதற்கும், ஒரு பெரிய மாதாந்தரப் பத்திரிக்கையும் தமிழ் நூல்களும் அச்சிடுவதற்கும் ஓர் அச்சுக் கூடமும் தேவையாக இருக்கிறது. இவையனைத்துக்கும் இவ்வருஷத்தில் குறைந்தது முப்பதினாயிரம் ரூபா வேண்டியிருக்கிறது. தவிர ஆசிரமம் நிலைபெற்று நிற்பதற்கு மூலதனம் ஐந்து லட்ச ரூபாயாவது வேண்டும். தமிழ் நாட்டவர் அவர்களுடைய இயற்கைக் குணமாகிய கொடைக் குணத்தைக் காட்டி ஆசிரமத்தின் பெரு நோக்கங்களை நிறைவேற்றித் தருவார்கள் என்று நம்புகிறோம். ஆசிரமவாசிகள் தங்களால் இயன்ற தியாகம் அனைத்தும் காட்டி வருகிறார்கள். உபாத்தியாயர் ஊழியமாக ஒன்றும் பெறவில்லை. உபாத்தியாயர்களின் பத்தினிகளோ யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் இதுவரையில் சமையற் கைங்கர்யத்தை ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள்.

ஆசாரியார் ஸ்ரீ.வ.வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர் அவர்கள் தமக்குச் சொந்தமான குறள், கம்பராமாயண ஆங்கில விமரிசனம் ஆகிய இரண்டு நூல்களின் பதிப்புரிமை யனைத்தையும் ஆசிரமத்துக்கே தத்தம் செய்து விட்டார்கள். இவற்றின் மதிப்பு ரூ.8000 ஆகிறது. தவிர தமக்காகக் கிடைக்கும் பணத்தையெல்லாம் ஆசாரியார், ஆசிரமத்தின் நிதிக்கே சேர்த்து விடுகிறார். சிங்கப்பூரிலுள்ள செந்தமிழ்த் திலகமான ஸ்ரீ மகேச குமார சர்மா தம்முடைய அரிய நூல்களான வால்மீகி விஜயம், வர்த்தமான பாரதம் ஆகிய இரண்டு நூல்களிலிருந்தும் கிடைக்கும் பணத்தில் சரி பகுதியை ஆசிரமத்துக்கெனத் தத்தம் செய்துவிட்டார்கள். தங்கள் கையைக் குறுக்காமல் தாராளமாய் உதவி செய்து இந்தத் தியாகங்களை யெல்லாம் பயனுள்ள தியாகமாக்கித் தமிழ் நாட்டுக்கு அழியாப் புகழ்தேடி வைக்க வேண்டும் என்று தமிழ் நாட்டவரை மறுபடியும் வேண்டிக் கொள்வோம். (மேலது, 4.5.1923)

என்று கூறப்பட்டுள்ளது.

இத்தகு சூழலில் வ.வே.சு. ஐயர் குருகுல வளர்ச்சிக்கு நிதி உதவி செய்யுமாறு தமிழ்நாடு காங்கிரசிடம் விண்ணப்பித்தார்.

அடுத்துக் கூடிய செயற்குழுவில் இவ்விண்ணப்பம் ஆலோசனைக்கு வைக்கப்பட்டது . . . . குருகுலம் ஒரு தேசீய நிறுவனம். எனவே அதன் வளர்ச்சிக்கு காங்கிரஸ் செயற்குழுவிலிருந்து பத்தாயிரம் வழங்குவதென்று ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது. முதல் பகுதியாக ரூபாய் ஐயாயிரம் வழங்குவதாகவும் சிறிது காலம் கழித்து ஐயாயிரம் கொடுப்பதாகவும் செயலாளர் பெரியார் அறிவித்தார். உடனடியாக காங்கிரஸ் பணத்திலிருந்து ரூபாய் ஐயாயிரத்துக்குச் செக் வழங்கப்பட்டது. (நாரா நாச்சியப்பன், 1994:35-37)

இந்நிலையில் வ.வே.சு. ஐயர் 'பாலபாரதி' முதல் இதழில் குருகுலத்துக்குத் தமிழ் மக்களின் ஆதரவு இன்னும் பெருக வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தி வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். அவ்வேண்டுகோளில்,

காலக்கிரமத்தில் புதிய யந்திரங்கள் நிர்மாணிக்கத் தகுந்த கூரிய அறிவுள்ள மாணவர்கள் இவ் ஆசிரமத்தில் தோன்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் தமிழ்நாட்டு

வியாபாரிகள் இவ் ஆசிரமத்திற்கு ஓர் நியதமான வருவாயை ஏற்படுத்தித் தர இருக்கிறார்கள். இதற்கென ஓர் 'மகமையை' எடுத்து வைப்பது அவர்களுக்கு அசாத்தியமில்லை. இவ்வாறு ஏற்படுத்தித் தந்துவிட்டார்களானால் ஓர் சிறந்த கொல்லு பட்டடை வைத்து மாணவர்களுக்கு யந்திரங்களை அமைக்கும் ஆற்றலை உண்டாக்கித் தர ஏற்பாடு செய்வோம். அப்பொழுது அவர்களது ஐயம் தமிழ் நாட்டின் ஐயமாகும். அப்பொழுது நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் தோன்றிய யந்திர சிருஷ்டனை இயக்கமும், அதனால் பெருகிய கைத்தொழில் அபிவிருத்தியும், அவற்றின் குற்றமின்றி, இன்றைக்கு நம் செல்வத் திருநாட்டில் தோன்றும் வியாபாரிகள் எடுத்து வைக்கும் சிறு 'மகமை' இத்தனை வேலை செய்து விடும்.

குருகுலத்துக்குப் பொருள் ஈட்ட ஆசிரமவாசிகள் பல இடங்களுக்கும் எப்பொழுதும் போய்க் கொண்டிருத்தல் அசாத்தியமாக இருக்கும். ஆகையால் தமிழபிமானிகளும் தேசாபிமானிகளும் நாங்கள் வந்து கேட்காமலே தங்களால் கூடிய உதவிகளைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுவேன்.

சிங்கப்பூர் முதலிய கீழ்நாடுகளுக்குப் பழுத்த தேசாபிமானியும் இக்குருகுலத்தின் உபாசிரியரு மான பிரம்மஸ்ரீ மகாதேவய்யர் தமது சொந்தக் காரியங்களையெல்லாம் விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார். தன்னலம் கருதா அவருடைய தேசாபிமான தர்மாபிமானங்களின் பயனாக அந்தப் பிரதேசத்துத் தமிழபிமானிகள் இது வரையில் சுமார் க0,000(பதினாயிரம்) வெள்ளிகள் அவரிடம் குருகுலத் துக்காக உதவி செய்திருக்கிறார்கள். தொகைகள் இன்னும் வசூலாகிக் கொண்டு வருகின்றன. ஆனால் பொது நிதிக்கு மொத்தமாக உதவுவதுடன் இம் மாகாணத்திலும் கீழ் நாடுகளிலும் உள்ள குருகுல அபிமானிகள் குருகுலத்துக்காக ஓர் சிறு 'மகமை' யை எடுத்து வைத்து, அதை விடாமல் குருகுலத்துக்கு அனுப்பி வந்தால் அது அமோகமாய்ப் பெருகி, சாஸ்திர வகுப்புகளும் தொழிற்சாலைகளும் வைத்து விமரிசையாக நடத்த எமக்குச் சக்தியைத் தரும். நமது நாட்டு மடங்களும் கோபுரங்களும் இதே மாதிரி 'மகமை' யினாலேயே வெகு லேசாகக் கட்டப்பட்டும் காக்கப்பட்டும் வந்தன என்பதை உணர்ந்து தமிழ் மக்கள் அனைவரும் தங்கள் வருமானத்திலும் இலாபத்திலும் அவர்களுக்குத் தோன்றிய பிரகாரம் ரூபாய்க்கு இத்தனை பைசா என்று எடுத்து வைத்து, வருஷத்தில் நான்கு தடவைகளிலோ அல்லது கௌகரியப்பட்ட பிரகாரமோ குருகுலத்துக்குச் சேர்ப்பித்து வரவேண்டும் என்று மிகவும் வேண்டிக் கொள்ளுவேன். (பாலபாரதி, அக். 1924)

என்று கூறியுள்ளார். குருகுல வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு காங்கிரசு செய்த உதவி, தலைவர்களின் ஆதரவு, வ.வே.சு. ஐயரின் உருக்கமான வேண்டுகோள் ஆகியவற்றால் குருகுலம் ஓர் இலட்சிய நிறுவனம் என்று நாட்டு மக்கள் நம்பினர். விடுதலை பெற்ற ஒரு சமத்துவ நாட்டை உருவாக்கக் கிடைத்துள்ள அருமருந்து என அவர்கள் நினைத்தனர். அதன் வளர்ச்சிக்குத் துணை நின்றனர். நன்கொடைகள் குவியத் தொடங்கின. புதுப்பொலிவுடன் குருகுலம் இயங்கத் தொடங்கியது. இவற்றின் பயனாகக் குருகுலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை கூடியது.

மாணவர் சேர்க்கை

வ.வே.சு. ஐயர் தாம் நடத்திய குருகுலத்தில் பயில விரும்பும் மாணவர்களுக்கான தகுதிகள், மாணவர்களுக்குரிய கட்டணம், மாணவர்கள் உடன் எடுத்து வர வேண்டிய பொருட்கள் ஆகியன குறித்த அறிவிப்புகளை அவ்வப்போது இதழ்களின் வாயிலாக வெளியிட்டு வந்தார்.

மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி கற்பிக்கக் கடமையுணர்வும் தியாக உள்ளமும் கொண்ட ஆசிரியர்கள் தேவையாதலால் அத்தகைய ஆசிரியர்களை உருவாக்கும் ஆசிரியப் பயிற்சி வகுப்பு ஒன்று குருகுலத்தில் தொடங்கப்பட்டது. அப்பயிற்சி வகுப்புக்கான மாணவர் சேர்க்கை குறித்துக் குருகுல நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இப்பொழுது ஒரு பத்து மாணவருக்குத் தேசிய முறையில் கல்வி போதிக்கும் முறையைக் கற்பிப்பதற்காக ஒரு போதனாமுறை வகுப்பு வருகிற பங்குனி மாதம் 14ந் தேதி துவக்கப் போகிறோம். தேசியக் கல்விக்காக உழைக்க விரும்பும் வாலிபர் இவ்வகுப்பில் சேர்ந்து பயில விரும்பினால் நமது குருகுலக் காரியஸ்தருக்கு எழுதிக் கொள்ளலாம்.

அபேஷகர்கள் ஸ்கூல் பைனல் அளவு வரையாவது படித்திருக்க வேண்டியது. தமிழிலக்கியம் படித்திருக்கிற அபேக்ஷகர் அதிகமாகப் பாராட்டப்படுவர். பயில விரும்புகிறவர்கள் சாப்பாட்டுக்காகவும் குடியிருப் புக்காகவும் கல்விக்காகவும் சேர்த்து மாதம் ரூ.15 கொடுக்க வேண்டியது. பிரவேச மனுவில் அபேக்ஷகர் தங்கள் யோக்கியதை (அதாவது எதுவரையில் படித்திருக்கிறார்கள் என்பது), முன்னே செய்துள்ள தற்காலம் பார்க்கின்ற அலுவல்கள், தற்கால வயது ஆகிய இவைகளைக் குறித்து அனுப்ப வேண்டியது. அவர்களுடைய சீலத்தையும் ஒழுக்கத்தையும் பற்றி அறிந்திருக்கிற சில கிரகஸ்தர்களின் பெயர்களையும் அபேக்ஷகர் குறித்தனுப்ப வேண்டும். மனுவோடு அவர் களுடைய சீலத்தைக் குறித்து ஒரு நற்சாக்ஷிப் பத்திரமாவது சேர்த்தனுப்பப் படவேண்டும். பயில வேண்டிய காலம் ஒரு வருஷமாகும். கையினால் வேலை செய்யப் பின்வாங்காதவர் தாம் ஆசிரம வாழ்க்கைக்கு அருகராவார் என்று நாம் சொல்லாமலே அபேக்ஷகர் அறிந்து கொள்வார் என நம்புகிறோம். (நவசக்தி, 9.2.1923)

என்று கூறப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, குருகுலத்தில் ஆசிரியப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தமிழ் இலக்கியம் படித்தவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் உடல் உழைப்புக்குத் தயங்காதவர்களாகவும் தேசியக் கல்விக்காக உழைக்க விரும்புபவராகவும் இருக்க வேண்டும் என்ற வ.வே.சு. ஐயரின் எதிர்பார்ப்பை அறிய முடிகிறது.

மேலும் ஆசிரியப் பயிற்சி அல்லாத பிற படிப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பது குறித்துக் குருகுல நிர்வாகம் அவ்வப்போது நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த வண்ணம் இருந்தது. குறிப்பாக 4.5.1923 தேதியிட்ட நவசக்தி வார இதழில் குருகுலத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

குழந்தைகளை இங்குச் சேர்க்க விரும்புகிறவர்கள் எத்துணைச் சிறிய பிராயத்தில் இங்கு அனுப்ப முடியுமோ அத்துணைச் சிறிய பிராயத்திலேயே அனுப்ப வேண்டும். வயதாக ஆகப் பிள்ளைகளை நல்வழிப் படுத்தும் சிரமம் அதிகமாகிறது. பிரமசாரிகளுக்காக மாதம் பன்னிரண்டு ரூபாயும் பிரமசாரிணிகளுக்காக மாதம் பதினைந்து ரூபாயும் முன்பணமாக அனுப்பி வருவது முறையாக இருக்கிறது. தவிர ஒவ்வொரு வித்தியார்த்திக்காகவும் அவர்களுடைய சில்லறைச் செலவுகளுக்காகப் பத்து ரூபா ஆசிரமத்தில் முன்பணமாகக் கொடுத்து வைக்க வேண்டியது. வித்தியார்த்திகளின் உடை, வைத்தியச் செலவு, புஸ்தகங்கள், லேகனங்கள் முதலிய செலவு களுக்காக இது உபயோகப்படும். இது செலவானதும் மறுபடியும் அதே மாதிரி முன்பணமாகப் பணம் அனுப்ப வேண்டியது. வித்தியார்த்திகள் வரும்போது டம்ளர் உள்ள வெண்கலக் கூஜா, ருத்திருணி, மடிசஞ்சி, சாரணருக்கேற்ற பை, ஒரு ஜமக்காளம், தலையணை, வஸ்திரங்கள், நல்லதோர் பெட்டி, இரண்டங்குலப் பூட்டு முதலியன கொண்டுவருவது நலம். வஸ்திரங்கள் முதலியவனைத்தும் கைநூலாடையாக (கதராக) இருக்க வேண்டியது. (நவசக்தி 4.5.1923)

என்று கூறப்பட்டுள்ளது. இவ்வறிக்கை இளமைக் கல்வியின் இன்றியமையாமை, குருகுலக் கட்டண முறை, மாணவர்கள் உடன் எடுத்து வரவேண்டிய பொருட்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

1924-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள், 1925-ஆம் ஆண்டு ஜனவரி, மார்ச், ஏப்ரல், சூலை, ஆகசுடு ஆகிய திங்கள்களில் வெளியான 'பாலபாரதி' இதழ்களில் குருகுல மாணவர் சேர்க்கை குறித்த அறிவிப்புகள் வெளியிடப்பெற்றுள்ளன. (1925 ஆம் ஆண்டு சூலை, ஆகசுடு ஆகிய

திங்கள்களில் வெளியான இதழ்கள் வ.வே.சு. ஐயர் மறைவுக்குப் பின் சுத்தானந்த பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு வெளியானவை.) இவற்றுள்,

> *புதிய கல்வி வருஷம் தை ௯ ரு உ ஆரம்பித்து விட்டது. ஆங்கிலத்தில் பி.ஏ. வகுப்புக்குச் சரியான கல்வி வரையில் கொடுக்கப்படுகிறது. தமிழில் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் வரையில் கற்கலாம். ஐரோப்பிய முறையில் ஆராய்ச்சிகள் செய்யவும் மாணவர் பயிற்றப்படுகின்றனர். கணிதம், தேச சரித்திரம், சம்ஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாடங்கள் செவ்வையாக நடக்கின்றன.*
>
> *நெசவுத்தொழில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பயிர்த் தொழில் செய்யவும் வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது. பிள்ளைகளை இலக்கியக் கல்வியும் ஓர் தொழிலும் அப்பியாசிக்கச் செய்ய விரும்பும் தந்தையர் உடனே முந்துக.*
>
> *விவரங்களுக்குக் காரியஸ்தனுக்கு எழுதித் தெரிந்து கொள்ளுக.*

என்ற அறிவிப்பு இங்குக் குறிப்பிடத்தக்கது.

குருகுல நிர்வாகம் நன்கொடை வழங்குதல் குறித்தும் மாணவர் சேர்க்கை குறித்தும் அவ்வப்போது இதழ்களின் வாயிலாக வெளியிட்டு வந்த அறிக்கைகளை உற்று நோக்குமிடத்து அவை இந்தியத் தமிழர்கள் மட்டுமின்றி உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழர்கள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்தில் வெளியிட்டிருப்பது தெளிவாகிறது.

முடிவுகள்

1. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கல்லிடைக் குறிச்சியில் 8.12.1922 அன்று வ.வே.சு. ஐயர் தமிழ்க் குருகுல வித்தியாலயத்தைத் தோற்றுவித்தார். அது பின்னாளில் 'சேரன்மாதேவி குருகுலம்' என்று அழைக்கப்பட்டது.
2. வெளிநாடுகளில் வாழும் தமிழர் - குறிப்பாக நகரத்தார் சேரன்மாதேவி குருகுலத்திற்காக மிகுதியான பொருளுதவி செய்துள்ளனர்.
3. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க பலர் தங்களின் வாழ்க்கையில் சில மாறுதல்களைச் செய்து கொண்டு அவற்றின் வாயிலாக திங்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் குருகுலத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.
4. வ.வே.சு. ஐயர் தமது குறள், கம்பராமாயண ஆங்கிலப் பதிப்பு ஆகிய நூல்களின் பதிப்புரிமையைக் குருகுலத்துக்குக் கொடுத்துவிட்டார். சிங்கப்பூரைச் சேர்ந்த மகேச குமார சர்மா என்பவர் தமது வால்மீகி விஜயம், வர்த்தமான பாரதம் ஆகிய இரண்டு நூல்களில் இருந்து கிடைக்கும் பணத்தில் சரிபாதியைக் குருகுலத்துக்குக் கொடுத்து வந்தார்.
5. தமிழ்நாட்டு வணிகர்கள் தங்கள் வருமானம் அல்லது இலாபத்தில் ஒரு பங்கை மகமைப் பணமாக எடுத்து வைத்து அதை மாதாமாதம் குருகுலத்துக்கு அனுப்பி வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.
6. குருகுல வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு காங்கிரசு செய்த உதவி - தலைவர்களின் ஆதரவு - வ.வே.சு. ஐயரின் உருக்கமான அறிக்கைகள், செயல்கள் ஆகியவற்றால் குருகுலம் ஓர் இலட்சிய நிறுவனம் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் தோன்றியது. அதன் பயனாகக் குருகுலத்துக்குப் பல வழிகளிலிருந்தும் நன்கொடைகள் குவியத் தொடங்கின.
7. சேரன்மாதேவி குருகுலத்தின் நோக்கங்களுக்கு ஆதரவாக வ.வே.சு.ஐயரால் 1924ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் 'பாலபாரதி' என்ற திங்கள் இதழ் வெளியிடப்பெற்றது.

துணை நின்றவை

நூல்கள்

- அதியமான் பழ., 2013 முதல் பதிப்பு, சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும் திராவிட இயக்கத்தின் எழுச்சியும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் - 1.

- அரசு., 1966 மறுபதிப்பு (முதல் பதிப்பு 1957), வ.வே.சு ஐயர், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை - 1.
- செல்வம் கோ., 2000 முதல் பதிப்பு, வ.வே.சு ஐயர், சாகித்திய அக்காதெமி, இரவீந்திர பவன், புதுதில்லி - 110 001.
- நாச்சியப்பன் நாரா., 1994 முதல் பதிப்பு, குருகுலப் போராட்டம், அன்னை நாகம்மை பதிப்பகம், பாலவாக்கம், சென்னை - 600 041
- பத்மநாபன் ரா.அ., 1991 இரண்டாம் பதிப்பு (முதல் பதிப்பு 1981) வ.வே.சு. ஐயர், நேஷனல் புக் ட்ரஸ்ட், இந்தியா, கிரீன் பார்க், புதுதில்லி -110 016.
- மணி பெ.சு., 2003 முதல் பதிப்பு, வ.வே.சு ஐயர் கடிதங்கள், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600 108.

இதழ்கள்

நவசக்தி -	17.11.1922	பாலபாரதி -	அக்டோபர் - 1924
	15.12.1922		நவம்பர் - 1924
	09.02.1923		டிசம்பர் - 1924
	04.05.1923		ஜனவரி - 1925
	27.02.1925		பிப்ரவரி - 1925
	13.03.1925		மார்ச் - 1925
	01.05.1925		ஏப்ரல் - 1925
	08.05.1925		மே - 1925
	22.05.1925		ஜூன் - 1925
	26.06.1925		ஜூலை - 1925
	சிதைந்த இதழ்		ஆகஸ்ட் - 1925
			செப்டம்பர் - 1925

மதிப்பிடப்பெற்றது

செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு

திரவியராசா நிரஞ்சினி
முதுகலைமாணி
பேராதனைப்பல்கலைக்கழகம், இலங்கை.
nironiru03@gmail.com

மா.யோகராஜ்
முதுகலைமாணி
பேராதனைப்பல்கலைக்கழகம், இலங்கை.
yogaraj.yogi02@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

இன்றைய உலகில் விஞ்ஞான தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மனிதனின் அத்தியாவசிய தேவைகளுக்கு பயன்பட்டாலும் அதன் வரம்பு மீறிய செயல்கள் மக்கள் மத்தியில் ஒழுக்கமீறல்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே பிரயோக ஒழுக்கவியலின் தோற்றம் இடம் பெற்றது. பிரயோக ஒழுக்கவியலின் வகைகளில் ஒன்றான வைத்தியவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களினால் கருமாற்றங்களும், கருத்தடைகளும் புதிதாக வெற்றியளித்துள்ள போதிலும் கருத்தடை முறைகள் மூலம் இனப்பெருக்கம் தடை செய்யப்படுகிறது. ஆனாலும் இன்றைய நிலையில் நம்பகமான கருத்தடை முறைகள் மூலமாக பாலியலும் இனப்பெருக்கமும் வேறுபடுத்தப்பட்டுள்ளது. அதுவே செயற்கைக் கருத்தரிப்பு முறை ஆகும். இம் முறை குழந்தை பேறில்லாத தம்பதியினருக்கு நடைமுறைத் தீர்வாக உள்ள போதிலும் பல்வேறு வழிகளிலும் உளவியல் ரீதியிலான தாக்கங்கள் இடம்பெறுகின்றன.

திறவுச்சொற்கள்

செயற்கை முறைக் கருக்கட்டல் , உளவியல் தாக்கங்கள்

1.1 ஆய்வுத்தலைப்பு

செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு

1.2 ஆய்வு அறிமுகம்

செயற்கை முறையிலான கருக்கட்டல் என்பது இயற்கையான முறையில் கருத்தரிக்க தாமதிக்கும் தம்பதிகளுக்கு சிகிச்சைகள் மூலம் விந்தணுவையும், சூல்முட்டையையும் சேரவைத்துக் கருக்கட்டலுக்கு உதவும் முறை ஆகும். செயற்கை முறையிலான கருக்கட்டல் மூன்று முறைகளில் மேற்கொள்ளப்படும்.

1.2.1 செயற்கைக் கருத்தரிப்பு முறையின் வகைப்பாடுகள்

1. IUI - INTRAUTERINE INSEMINATION (கருப்பையகமான கருவூட்டல் முறை)
2. IVF - IN VITRO FERTILISATION; (ஆய்வு கூடச்சோதனை முறை மூலமான கருத்தரித்தல் முறை)
3. ICSI - INTRA - CYTOPLASMIC SPERM INJECTION (குழிய முதலுருவுக்குரிய விந்து ஊசி உட்செலுத்தும் முறை)

1. IUI - INTRAUTERINE INSEMINATION (கருப்பையகமான கருவூட்டல் முறை)

திருமணமாகி குறுகிய காலத்தில் குழந்தைப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு இம்முறை சிறந்ததாகும். இம்முறையின் வெற்றிக்கு ஒழுங்கான சூல் முட்டை வளர்ச்சி, அடைப்புகள் இல்லாத பலோப்பியன் குழாய், கருவை தாங்கக்கூடிய கருப்பை போன்றன அவசியம்.

(IUI) முறையின் படிமுறைகள்

பெண்களுக்கு கருமுட்டை உருவாகுவதற்கான மருந்துகளைக் கொடுத்து அதனூடாக அவர்களுக்கு Ovulation (அண்டவிடுப்பு) இ னைத் தூண்டுதல்.

- கணவனின் விந்தை எடுத்து சுத்தப்படுத்திப் பெண்ணின் கருப்பையினுள் செலுத்துதல்.
- மருந்துகள் சிகிச்சைகள் மூலம் சூல் முட்டையின் வளர்ச்சியைத் தூண்டி பன்னிரண்டு நாட்களில் Scanning முறை மூலம் சூல் முட்டையின் பருமனை அறிதல்.
- சூல்முட்டையின் பருமன் (18-20mm) ஆக இருந்தால் ஹேர்மோன் ஊசியை வழங்கி முட்டையினை வெளியேற்றுதல்.
- 36மணித்தியாலயங்களில் விந்துக்களை செறிவாக்கி ஊசி மூலம் கருப்பையினுள் செலுத்துதல். சிகிச்சை முறைகளை மேற்கொள்ளுதல்.

2. IVF - IN VITRO FERTILISATION (ஆய்வு கூடச்சோதனை முறை மூலமான கருத்தரித்தல் முறை)

நீண்டகாலமாகக் குழந்தைப்பேறு இல்லாத தம்பதியினருக்கு இம்முறை பொருத்தமானது. அதாவது பலோப்பியன் குழாய்கள் இரண்டும் முற்றாக அடைக்கப்பட்ட நிலையில் உள்ள பெண்களுக்கும், விந்தணுக்கள் குறைவான ஆண்களுக்கும், IUI முறையினை பல தடவைகள் மேற்கொண்டு தோல்வியடைந்தவர்களுக்கும் இம்முறை சிறந்தது. உடலுக்கு வெளியே ஆய்வு கூடத்தில் பெண்ணின் முட்டையினைச் சினைப்படுத்தி அதனால் உண்டாகும் கருவைக் கருப்பையில் பதித்து இயற்கையாக வளரச் செய்யும் முறை இதுவாகும். அதாவது ஓர் ஆணின் விந்தணுவையும் பெண்ணின் கரு முட்டையையும் ஒன்றாகச் சேர்த்து ஆய்வுகூடத்தில் கருத்தரிக்கச் செய்யும் முறை இதுவாகும்.

(IVF) முறையின் படிமுறைகள்

- நன்கொடையாளருடைய ஆரோக்கியமான விந்தணுவை எடுத்தல்
- விந்தணுவைக் கண்ணாடிப்பாத்திரத்தினுள் இடுதல்.
- ஆய்வுகூடப் பரிசோதனை
- கருவுற்ற பெண்ணின் முட்டைகளைப் பெண்ணின் கருப்பைக்குள் ஊசி மூலம் செலுத்துதல்.
- கருப்பைச் சுவரில் பதித்;து வெற்றிகரமாக ஒரு கருவாக வளர்வதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ளுதல்.

3. ICSI - INTRA - CYTOPLASMIC SPERM INJECTION (குழிய முதலுருவுக்குரிய விந்து ஊசி உட்செலுத்தும் முறை

ICSI (குழிய முதலுருவுக்குரிய விந்து ஊசி உட்செலுத்தும் முறை) முறையிலான கருக்கட்டல் என்பது ஒரேயோரு ஆரோக்கியமான விந்தணுவைத் தேர்ந்தெடுத்துக் கருப்பையினுள் செலுத்தும் முறை இதுவாகும்.

1.2.2 செயற்கை முறை கருத்தரிப்பின் முக்கிய படிமுறைகள்

1. கருமுட்டை சேகரித்தல்
2. கருவாக மாற்றுதல்
3. கருவை உட்செலுத்தல்

1. கருமுட்டை சேகரித்தல் செயற்பாடுகள்

- பெண்ணை நேராகப் படுக்க வைத்தல்.
- பெண்ணின் கர்ப்பப்பை, முட்டைப்பைகளை SCAN மூலம் கண்டறிதல்.
- பெண்ணின் முட்டைப் பைகளுக்குள் இருக்கும் Follicle (நுண்ணறை) களைக் கண்டறிந்து அதனுள் இருக்கும் கருமுட்டையை கண்டறிதல்.
- ஊசி மூலமாக Follicle (நுண்ணறை) இல் இருக்கும் கருமுட்டையைச் சேகரித்தல்.

2. கருவாக மாற்றும் செயற்பாடுகள்

- தம்பதியினரின் முழு சம்மதத்துடன் தானம் செய்பவரின் விந்தணுவைச் சேகரித்தல்.
- சேகரிக்கப்பட்ட ஆணின் விந்தணுவுடன் கருமுட்டைகளைச் சேர்த்துக் கருவாக மாற்றுதல்
- கருமுட்டையினுள் விந்தணுவைச் செலுத்துதல்.
- விந்தணுவை உட்செலுத்தியதும் கரு இரட்டிப்பான முறையில் மாற்றமடைதல்.
- தொடர்ச்சியாக மூன்று நாட்கள் கருவின் வளர்ச்சி கண்காணிக்கப்படுதல்.
- நன்கு வளர்ந்த கருவை பெண்ணின் கருப்பையினுள் செலுத்துதல்.

3. கருவை உட்செலுத்தும் செயற்பாடுகள்

- பெண்ணின் யோனியில் கர்ப்பப்பை வாசலைக் கண்டறிதல்.
- சிறிஞ் மூலம் கருவை கர்ப்பப்பையினுள் செலுத்துதல்.
- 15 நாட்களுக்குப் பின்னர் இரத்தப்பரிசோதனை செய்து கொள்ளுதல்.
- 30 நாட்களுக்கு பின்னர் Scanமுறை மூலம் குழந்தை கருவில் இருக்கிறதா? குழாயில் இருக்கிறதா? என்பதனைக் கண்டறிந்து சிகிச்சைகளை மேற்கொள்ளுதல்.

1.3 ஆய்வுப் பிரச்சினைகள்

1. சம்பிரதாய நடைமுறைகளுக்கு முதன்மை கொடுக்கும் சமூதாயத்திற்கு இம்முறை பொருத்தமற்றதாக உள்ளமை.

2. செயற்கைக்குழந்தைப் பேற்றினால் உருவாக்கப்பட்ட குழந்தைக்கும், தாய், தந்தையருக்குமிடையில் அன்னியோன்னிய உறவு கட்டியெழுப்பப்படாமை.

3. செயற்கைக் கருத்தரிப்பினால் உருவாக்கப்பட்ட குழந்தையால் குடும்பத்தின் பரம்பரை அலகுகளில் (DNA) மாற்றங்கள் ஏற்படல்.

4. செலவு அதிகம்.

1.4 ஆய்வு நோக்கங்கள்

1. செயற்கைக் கருக்கட்டல் முறையினை அறிமுகப்படுத்தலும், அதன் வகைகள் மற்றும் செயற்பாடுகளை இனங்காணுதலும்.

2. செயற்கைக் கருக்கட்டலின் முறையினால் உருவாக்கப்பட்ட குழந்தை சமூதாயத்தில் எதிர்கொள்ளும் சவால்களைக் கண்டறிதல்.

3. செயற்கைக் கருக்கட்டல் செயன்முறையின் போது நிகழும் உளவியல் ரீதியிலான தாக்கங்களைக் கண்டறிதல்.

4. செயற்கை கருக்கட்டல் செயன்முறையின் பின்னரான உளவியல் ரீதியிலான தாக்கங்களைக் கண்டறிதல்.

1.5 ஆய்வின் முக்கியத்துவம்

1. இன்றைய நிலையில் திருமணமாகி நீண்டகாலமாகக் குழந்தைப் பேறில்லாத தம்பதியினர் சமூகத்தில் பல்வேறு விமர்சனங்களுக்கும், உளவியல் ரீதியிலான தாக்கங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். இத்தகைய தம்பதியினருக்கு இம்முறை சிறந்த தீர்வாகும்.

2. விNஸ்ரீட திறன்களையுடைய குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இம்முறை பொருத்தமானது.

3. உடலுறவை விரும்பாத தம்பதிகளுக்கு ஏற்புடையது.

1.6 ஆய்வு முறையியல்

இவ் ஆய்விற்கான தரவுகளும், தகவல்களும் இரண்டாம் நிலைத்தரவுகள் மூலம் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் என்பது ஏற்கனவே திரட்டப்பட்டு வெளியிடப்பட்டவையாக உள்ளவை ஆகும். அந்தவகையில் இணையத்தளம் மூலம் பெறப்பட்ட தரவுகள், தகவல்களைப் பயன்படுத்தியே இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1.7 ஆய்வுக் கருதுகோள்

செயற்கைக் கருத்தரிப்பு மகப்பேற்றிற்கு சிறந்த முறையாக இருந்தாலும் அதிக அளவிலான உளவியல் தாக்கங்களுக்கும் இம் முறையே காரணமாகவும் உள்ளது.

1.8 தரவின் பகுப்பாய்வும் வியாக்கியானமும்

செயற்கைக் கருத்தரிப்பினால் இரண்டு நிலைகளில் உளவியல் ரீதியிலான தாக்கங்கள் இடம்பெறுகின்றன.

1.8.1 செயற்கைக் கருக்கட்டல் செயன்முறையின் போது நிகழும் உளவியல் ரீதியிலான தாக்கங்கள்

1.8.2 செயற்கைக் கருக்கட்டல் செயன்முறையின் பின்னரான உளவியல் ரீதியிலான தாக்கங்கள்

1.8.1 செயற்கைக் கருக்கட்டலின் செயன்முறையின் போது நிகழும் உளவியல் ரீதியிலான தாக்கங்கள்

செயற்கைக் கருத்தரிப்பின் மூன்று முக்கிய படிமுறைகளில் (கருமுட்டை சேகரித்தல், கருவாக மாற்றுதல், கருவை உட்செலுத்தல்) குழந்தை உருவாக்கப்படும் போது குழந்தையின் உருவாக்கம் வெற்றியளிக்குமா? இல்லையா? என்ற நிலையில் தம்பதியினருக்கு இடையில் பல்வேறு வழிகளிலும் மன அழுத்தங்கள் ஆரம்பிக்கின்றன. மேலும் இந்நிலையில் இவர்கள் பல்வேறு வகையிலான உளவியல் ரீதியிலான தாக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

- **கருச்சிதைவு**

செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் அதிக வயதுடைய பெண்கள் கருத்தரிக்கும் சந்தர்ப்பத்தில் கருப்பையில் வளர வேண்டிய கரு பலோப்பியன் குழாயில் அல்லது கருப்பைக்கு வெளியில் தங்கும் தங்குவதால் கருச்சிதைவு ஏற்படும். இந்நிகழ்வு கர்ப்பத்தின் ஆரம்ப கட்டத்திலும், கர்ப்பத்தின் போதும் ஏற்படலாம். இவ்வாறு ஏற்படுவது தம்பதியினருக்கு உளரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தும்.

- **பலகரு வளர்ச்சி**

செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட கருவுற்ற முட்டைகள் கருப்பையில் செலுத்தப்படும் போது இரட்டைக்கரு உருவாகும் நிலை ஏற்படும். இது தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் உடல், உள நலம் சார்ந்த பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

- **சினைப்பை மிகைத் தூண்டல் நோய்த் தொகுப்பு**

செயற்கைக் கருத்தரிப்பு முறையில் சினைப்பை அளவுக்கு மீறித் தூண்டப்படுகிறது. இதனால் சினைப்பைகள் பெரிதாகி வலி ஏற்படும். இதன் காரணமாகப் பெண்கள் மனரீதியாகப் பல தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

- **குறைப் பிரசவம்**

செயற்கைக் கருத்தரிப்பு முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட கருவுற்ற முட்டைகள் பெண்ணின் கருப்பையில் செலுத்தப்படும் போது ஒன்றுக்கு மேற்பட்ட கரு உருவாகும். இதனால் குறைப்பிரசவத்தில் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் நிலை உருவாகும். இது குழந்தையின் நிறையிலும், வளர்ச்சியிலும் தாக்கத்தைச் செலுத்தும். மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட கருக்களைக் பெண்கள் கருப்பையில் சுமப்பதனால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் மகப் பேற்றின் போதான வலிப்பு முதலான பல்வேறு வகையிலான பாதிப்புக்களை அதிகம் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். இதனால் இரும்புச்சத்துக் குறைபாடு, இரத்தச்சோகை முதலியன நோய்கள் ஏற்படும்.

- **விஷேட தேவையுடைய குழந்தைகள்**

செயற்கைக் கருத்தரிப்பு முறையினால் விஷேட தேவையுடைய குழந்தைகள் பிறக்கின்றன. மேலும் இம்முறை மூலம் உருவாக்கப்படும் ஆண் குழந்தைகள் தரம் குறைந்த விந்தணுவினாலும் பாதிப்படைகின்றன. இத்தகைய செயற்பாடுகள் உளவியல் ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

- **நோய்த் தொற்றுக்களால் உளரீதியாக பாதிப்படைதல்**

செயற்கைக் கருத்தரிப்பு முறையினால் கரு இடமாற்றப்படுவதனால் நோய்த் தொற்றுக்கள் அதிகளவில் ஏற்படுகின்றது. இந்த நோய்த் தொற்றுக்களால் தாய் மன அழுத்தத்திற்கு ஆளாக்கப்படுவார்.

1.8.2 செயற்கைக் கருக்கட்டல் செயன்முறையின் பின்னரான உளவியல் ரீதியிலான தாக்கங்கள்

செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் குழந்தை உருவாக்கப்பட்ட பின்னர் குழந்தை உட்பட இம்முறையினை நாடும் தம்பதியினர். பல்வேறு வகையிலான உளவியல் ரீதியிலான தாக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

- **தந்தை உயிரியல் தந்தை என்கின்ற தகுதியினை இழத்தல்**

நன்கொடையாளருடைய விந்தினால் மனைவி குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் போது தந்தை குழந்தையின் உயிரியல் தந்தை என்ற தகுதியினை இழக்கின்றார். அதாவது குழந்தை பிறந்தவுடன் குழந்தைக்கு இரண்டு தந்தைகள் (சமூகத்தந்தை , உயிரியல் தந்தை) இவர்களில் குழந்தை எவரைத் தந்தையாக அழைப்பது? விந்தினை வழங்கியவரையா? அல்லது சமூகத் தந்தையையா? என்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் இம் முறையில் அதிகம் இடம்பெறும். இதனால் இது தந்தை பிள்ளை உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

- **தாய்மை இரு கூறாக்கப்படுதல்**

செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் பெண்ணிற்குக் கணவனின் விந்து செலுத்தப்பட்டாலும் குழந்தையைப் பெற்றெடுப்பவள் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மற்றொரு பெண்ணாகும். இங்கு தாய்மை இரு கூறாக்கப்படுகின்றது. இந்நிலையில் குழந்தை பெற்றெடுத்தவளுக்கா? அல்லது சமூகத் தாய்க்கா? என்ற கேள்வி எழுகின்றது. இது தற்போது உள்ள குடும்ப அமைப்பிற்கு சவாலாக அமைந்துள்ளதோடு சொத்துரிமையிலும், தாய் தந்தை மரபிலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

- **பாலியல் உறவு**

செயற்கைக் கருத்தரிப்பு முறை உடல் உறவை அவசியமற்றதாக்கியுள்ளது. ஏனெனில் இன்றைய உலகில் மகப்பேறு வியாபார நிறுவனங்களால் தீர்மானிக்கப்படுவதோடு விந்து வங்கிகளில் விற்பனை செய்யப்படுகிறது. இவ்விந்தினைச் செயற்கைச் சினைப்படுத்தலின் மூலமாகப் பெண்ணிற்குச் செலுத்திக் குழந்தை பெற்றுக் கொள்ளும் போது பிறக்கின்ற குழந்தைக்கு தந்தை இல்லாத நிலைமை ஏற்படும். இதனால் குழந்தை வளர்ந்து வருகின்ற போது சமூகத்தினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

- **பதில் தாய்**

செயற்கைக் கருத்தரிப்பு முறைக்கு பெண்கள் ஏற்பாடு செய்யப்பட்டுப் பிறிதொரு ஆணின் விந்தின் ஊடாகக் குழந்தையைப் பெற்றெடுப்பதனால் சமூகத்தில் பெண்கள் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். இத்தகைய பெண்கள் திருமண வாழ்க்கையை வெறுப்பவர்களாகவும், விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களாகவும் விளங்குவர். இதனால் இவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கி ஓரங்கட்டப்படுவர்.

- **குழந்தைக்கு உரிமை கோருபவர் இல்லாத தன்மை**

செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் குழந்தைப்பேறு இல்லாத தம்பதியினர் பதில் தாய் ஒருவரை ஏற்பாடு செய்து குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு முன்னர்த் தவிர்க்கமுடியாத காரணத்தினால் அத் தம்பதியினர் பிரிந்தால் அக்குழந்தை யாருக்குச் சொந்தமானது? என்ற கேள்வி எழுகின்றது. இதனால் குழந்தைக்கு உரிமை கோருபவர் இல்லாத தன்மை ஏற்படும். இந்நிலை குழந்தையின் எதிர்காலத்தில் தாக்கத்தை செலுத்தும்.

- **விந்திற்கு உரிமை கோருபவர் இல்லாத தன்மை**

விந்து வங்கியில் பாதுகாப்பாக வைப்புச் செய்யப்பட்டுள்ள கணவனின் விந்தினைக் கணவன் இறந்த பின்னர் மனைவி தனக்குரியதென உரிமை கோரி அதன் மூலம் குழந்தையினைப் பெற்றுக் கொள்வதனால் பிறக்கின்ற குழந்தைக்கு தந்தை இல்லாத குறை ஏற்படுகின்றது. இது உளவியல் ரீதியிலான தாக்கங்களுக்கு வழிவகுக்கின்றது.

- **குழந்தையின் வளர்ச்சியும் - சமூதாய பார்வையும்**

சம்பிரதாய நடைமுறைகளை மீறி செயற்கைக் கருத்தரிப்பு முறையால் உருவாக்கப்பட்ட குழந்தை சமூதாயத்தோடு இணைந்து வாழும் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் உளவியல் தாக்கங்களுக்கு முகம் கொடுக்கின்றது. இது குழந்தையின் கல்வி, நடத்தைகள், உரிமைகள், எதிர்காலம் முதலியனவற்றில் செல்வாக்குச் செலுத்துகிறது.

- **செலவு அதிகம்**

செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் குழந்தையைப் பெற்றுக் கொள்வதற்கான செலவு அதிகமாக உள்ளமையால் ஏழைகளுக்கு இம்முறை சாத்தியமற்றது. இதனால் ஏழைகள் உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

1.9 முடிவுரை

ஒரு சந்ததியின் இருப்பினைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளுள் ஒன்றாகக் குழந்தைப்பேறு உள்ளது. திருமணமான தம்பதிகளுக்குக் குழந்தைப்பேறு இல்லாத சந்தர்ப்பத்தில் அவர்களின் சந்ததி கேள்விக்குறியாகிறது. இந்த நிலையில் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அதீதமான வளர்ச்சியினால் செயற்கை முறை மூலமான கருக்கட்டல் குழந்தைப்பேற்றினை சாதகமாக்கியுள்ளது. எனினும் இம்முறையால் பல்வேறு வகையிலான உளவியல் தாக்கங்கள் ஏற்படுவதோடு, ஆராக்கியமான குழந்தையினை இம் முறை மூலம் பெற்றுக்கொள்ளலாமா? என்பதும் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே திருமணமாகிக் குழைந்தைப்பேறு இல்லாத தம்பதியினர் இம் முறையினை நாடுவதனால் பல்வேறுபட்ட உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாவதை வெளிப்படையாகக் காணலாம்.

1.10 துணைநின்றவை

- *hainallama. blogspot. com/2008/01// blog-post. html?m=1*
- *www.valaitamil.com/medicine-men-only-libido-sperm-developing/baby-issues-infertity*
- *https://www.tinystep.in/blogs/parisothanaikulai-kulai -test tube kulanthai karutthrippu*
- *infertillity treatment centre blogspot.com/?m=1*
- *www.vivegamnews.com/pageaspy? Id =23831*
- *study viji. Blogspot .com/?m=1*
- *https:/ mullainews.blogspot.com/2016/09/blog -post45 html?=m=1*
- *https:// www. Google.lk amb/m.dinamalar.com/detail.php/3/fid=32487*
- *www.dinakaran.com/news.detail.asp?nid =32487*
- *http://www.medicalnews today.com/articles/262798 php*

மதிப்பிடப்பெற்றது

விசேட தேவையுடைய பிள்ளைகளும் விசேட வழிகாட்டல் ஆலோசனையும்

யேசுஐயா டிலானி
உதவி விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
dilanijesuiyah@gmail.com

மொகமட் கனீபா சபீதா பானு
கல்வியியல் சிறப்புக்கற்கை மாணவி
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

பாடசாலைகளில் சில மாணவர்கள், சாதாரண மாணவர்களைவிட உடல், உள, மனவெழுச்சிப் பண்புகளிலும் நடத்தைகளிலும் குறிப்பிடத்தக்க அளவில் வேறுபாடு உடையவர்களாகக் காணப்படுவர். இவர்களுக்கு விசேட வழிகாட்டல் ஆலோசனை தேவைப்படும். இவ்வேறுபாடுகள் பிறவியிலிருந்தோ அல்லது காலப்போக்கில் சில பருவங்களிலோ வெளிப்படலாம். நோய், விபத்து, சமூகம், சூழல் ஆகிய காரணிகளாலும் குறைபாடுகள் ஏற்படலாம். சில பிள்ளைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடுகளையும் அவதானிக்கலாம்.

சில மாணவர்கள் சாதாரண மாணவர்களிலும் பார்க்க மிக உயர்வான ஆற்றல்கள், உளத்திறன்கள் ஆகிய மீத்திறன், ஆக்கத்திறன் பெற்றவர்களாகவும் காணப்படுவர். இவ்வாறான விசேட தன்மைகளும், தேவைகளும் உள்ள பிள்ளைகளைப் பெற்றோர், ஆசிரியர், ஆலோசகர் ஆகியோர் இனங்கண்டு, அவர்களுக்குப் பொருத்தமான விசேட வழிகாட்டல் ஆலோசனை வழங்க வேண்டும். இவ்வேறுபாடுகள் அதிகூடிய அளவில் காணப்படின், இவர்களைத் தனிப்பட்ட வகுப்புகளில் அல்லது அவர்களுக்கென அமைக்கப்பட்ட தனிப்பாடசாலைகளில் கற்பிக்கலாம். ஓரளவு வேறுபாடுள்ள பிள்ளைகளைச் சாதாரண பிள்ளைகளுடன் சேர்ந்து பழகுமாறு வழமையான வகுப்பில் வைத்துக் கற்பிப்பது விரும்பத்தக்கது.

விசேட தேவைகள் உள்ள மாணவர்களும் மற்றவர்களைப் போல சமூக வாழ்க்கையில் திருப்திகரமாகப் பங்குகொண்டு பயனுள்ள வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டுமெனச் சர்வதேசப் பிரகடனங்கள், உரிமைச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆகவே, பாடசாலை இவர்களுக்கு விசேட கவனிப்பு வழங்கக் கடமைப்பட்டுள்ளது. விசேட உதவி தேவைப்படுவோரைப் பின்வருமாறு வகுக்கலாம்

- மீத்திறனுடைய பிள்ளைகள்
- ஆக்கத்திறனுடைய பிள்ளைகள்
- உடற்குறைபாடுடைய பிள்ளைகள்
- உளக்குறைபாடுடைய பிள்ளைகள்
- கற்றலில் பின்தங்கிய, மெல்லக் கற்கும், கற்றல் இடர்பாடு உடைய பிள்ளைகள்
- பொருத்தப்பாடற்ற நடத்தையுடைய பிள்ளைகள்
- நெறிபிறழ்ந்த இளங்குற்றவாளிகள்

மீத்திறனுடைய பிள்ளைகள்

நுண்மதியின் கணிப்பின்படி நு.ஈ 140 இற்கு மேல் பெற்றுள்ளவர்கள் மீத்திறன் உடையோரென ரெர்மன் வகுத்துள்ளார். இவரின் கருத்து மீத்திறனையும் ஆக்கத்திறனையும் வேறுபிரித்துக் காட்டத் தவறிவிட்டதால், கில்போட் (புரடைகழசன்) என்பவர் ஆக்கத்திறன்

நுண்மதியின் ஒரு தனிப்பட்ட கூறு என்பதை விளக்கியுள்ளார். மீத்திறன் பெற்றவர்கள் யாவரும் ஆக்கத்திறன் உடையோரெனக் கருத முடியாது என்பது மக்கினஸ்என்பவரது கருத்து. அவர் சிந்தனையைக் குவிசிந்தனை, விரிசிந்தனை என வகுத்து, குவிசிந்தனையுடையோர் மீத்திறன் உடையோர் எனவும், ஆக்கத்திறனுடையோர் விரிசிந்தனையுடையோர் எனவும் கூறினார்.

மீத்திறனுடைய மாணவர் நுண்மதிச் சோதனையில் நு.ஈ.140 இற்கு மேல் பெறுவர். பொதுவாகப் பாடஅடைவில் மேல்மட்டத்தில் காணப்படுவர். கிரகித்தல், பகுத்தல், தொகுத்தல் ஆகிய உள ஆற்றலில் மேம்பாடு தர்க்கரீதியாகச் சிந்தித்தல், பிரச்சினை விடுவித்தல் ஆகியவற்றில் விசேடதிறன் பெற்றிருப்பர். மீத்திறனுடையோர் கல்விசார் ஏட்டுப்படிப்பில் மிகுந்த திறமை உடையவராயினும், படைப்பாற்றல் சார்ந்த ஆக்கத்திறன் அற்றவர்களாகக் காணப்படுவர்.

ஆக்கத்திறனுடைய பிள்ளைகள்

ஆக்கத்திறனுடையோர் தனித்துவம் மிக்கோராவர். அபூர்வமான ஆக்கற் செயற்பாடுகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், கலை, இசை, இலக்கியம் போன்ற துறைகளில் விசித்திரமான தனித்துவம் வாய்ந்த படைப்புக்களை ஆக்கும் திறமை பெற்றவர்கள். ஆக்கத்திறன் சோதனையில் சிறப்புப்பேறு பெறுதல் குறிப்பிட்ட உளச்சார்புச் சோதனைகளில் சிறப்புப்பேறு பெறுதல், விரிசிந்தனை, நெகிழ்ச்சிசிந்தனை பெற்றிருத்தல், புதியன புனைதலில் ஆர்வம், படைப்பாற்றல் பெற்றிருத்தல், துருவி ஆராய்தலில் விருப்பம், செயற்பாடுகளில் நீடித்த ஆர்வமும் ஈடுபாடும், சுதந்திரமாகச் செயற்படுவதில் விருப்பம் ஆகிய பண்புகளை ஆக்கத்திறனுடையோர் கொண்டிருப்பர். இவர்களின் விளையாட்டிலும் செயல்களிலும் பெற்றோரும் ஆசிரியரும் ஆக்கத்திறன் வெளிப்பாட்டை அவதானிக்கலாம்.

ஆக்கத்திறன் சார்பான பண்புகளை இனங்காண்பதற்குப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயிரியலாளர், பௌதிக விஞ்ஞானிகள், உளவியலாளர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை ஆராய்ந்து, ஆக்கத்திறன் சார்பான சில பண்புகளை இனங்கண்டார். மெக்கினன் என்பவர் கணித நிபுணர்கள், கட்டிடக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரில் காணப்படும் ஆக்கத்திறன் பண்புகளை ஆராய்ந்தார். கெட்சலும் ஜக்சனும் ஆக்கத்திறன் பெற்றுள்ள இளம்பராயத்தினரில் ஆய்வுகளை மேற்கொண்டனர். இவர்களின் ஆய்வுகளின் அடிப்படையில் முக்கியமான சில ஆக்கத்திறன் பண்புகள் இனங்காணப்பட்டன, அவை பின்வருமாறு :

- குழந்தைப் பருவத்திலேயே உயர் நு.ஈ பெற்றிருத்தல்.
- சுதந்திரமான உளப்போக்கு, சுதந்திரமாகத் தொழிற்படுதல்.
- வகுப்பு மாணவருடன் நெருங்கிப் பழகாமல் தனித்திருத்தல்.
- சுயநலமான போக்கு.
- பலவகையான ஆர்வங்களையும் ஆற்றல்களையும் பெற்றிருத்தல்.
- புதிய அனுபவங்களைத் திறந்த மனதுடன் அணுகுதல்.
- நெகிழ்ச்சித் தன்மை.
- கவின்கலை இரசனையுணர்வு பெற்றிருத்தல், அழகியற் கலையில் ஈடுபடுதல்.

லீடன் என்பவர் மாணவர்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஆக்கத்திறன் சார்பான சில பண்புகளை இனங்கண்டுள்ளார். அவையாவன:

- துருவி ஆராயும் சிந்தனைப்போக்கு சம்பவங்கள் ஏன், எப்படி நடைபெறுகிறதென்று ஆராய்தல், பலவகையான வினாக்களைக் கேட்டல் மேல்வாரியான விடைகளில் திருப்தியடையாமை.
- உயர்மட்ட தர்க்கரீதியான சிந்தனைஞ எண்ணக்கருக்களை, விளக்கங்களை, சம்பவங்களைத் தொடர்புபடுத்தல்.

- தொடங்கிய செயல்களைப் பூர்த்திசெய்து வெற்றிகாணும் வரையான நீடித்த முயற்சிஞ கவனத்தை ஒருமுகமாகக் குவித்து வேலைகளில் ஈடுபடல்.
- அதிவேகமாகச் சிந்தித்தல், புதிய கருத்துக்களுக்கு உடனடியாகத் துலங்குதல்.
- வேகமாகவும் இலகுவாகவும் கற்றல்.
- சிறந்த ஞாபகசக்தி.
- விரிவான சொற்களஞ்சியம் பெற்றிருத்தல்.
- கூர்மையாக அவதானித்தல்.
- விரிவான கற்பனாசக்தி.
- விரிசிந்தனை ஆற்றல்.
- சுதந்திரமாகத் தொழிற்பட்டு, புதியனவற்றில் ஈடுபடுதலில் விருப்பம்.

ஆக்கத்திறன் பெற்ற மாணவர்களை வழிகாட்டல் :

மிகச்சில மாணவர்களே மீத்திறனை அல்லது ஆக்கத்திறனைப் பெற்றிருப்பர். இவர்களில் காணப்படும் உள்ளார்ந்த திறன்களுக்குப் பரம்பரை ஒரு காரணமாகக் கொள்ளப்படுகின்றது. அதனை உச்சநிலைக்கு விருத்தி செய்வதற்குப் பாடசாலையில் விசேட வழிகாட்டல் ஆலோசனை அவசியம். ஆதிக்க மனப்பான்மையும் நுண்மதியும் குறைந்த ஆசிரியர்கள் அநேகமாக இம்மாணவர்களை மட்டந்தட்டி அடக்கி வைப்பார்கள். இதனால் இவர்களின் திறன் விருத்தியடையாமல் மொட்டிலேயே கருகிவிடச் சந்தர்ப்பம் உண்டு. அத்துடன் இவர்களின் விசேட திறன்கள் விரயமாகி, அவற்றால் சமூகம் அடையக்கூடிய நன்மைகள் இழக்கப்பட்டுவிடும். இவர்களின் திறன் பிழையான வழிகளில் திசை திருப்பப்பட்டால் அழிவுக்கும் காரணமாக அமையலாம். எனவே, ஆசிரியர்கள் இவர்களுக்கு விசேட வழிகாட்டல், கணிப்பு, மதிப்பு, அங்கீகாரம், ஊக்கல் ஆகியன வழங்குவது அவசியம். ஆக்கத்திறனுடையயோர் குழுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுச் சகபாடிகளுடன் ஒத்துழைப்பதில் இடர்பாடு உடையவர்களாகக் காணப்படுவர். அவர்களை மற்றவர்களால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாதாகையால் மனவெழுச்சிச் சிக்கல், சமூகப் பொருத்தப்பாடின்னை ஏற்படலாம். இவ்வாறு ஏற்படாமல் தடுப்பதற்கு வழிகாட்டல் ஆலோசனை அவசியம்.

சில்வியா அஸ்டன் (ளுடஎலைய யுளவழn) என்பவர் 'பிள்ளையின் உள்ளமாகிய ஊற்றிலிருந்து வெளிப்படும் ஆக்கத்திறன் வெளிப்பாட்டுத் துவாரத்தைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் ஆசிரியர் காரணமாகச் செயற்பட முடியும்' என, ஆக்கத்திறன் உடையோரைப் பற்றிக் கூறிய கூற்று ஆசிரியரின் சிந்தனைக்குரியது. மீத்திறனுடைய, ஆக்கத்திறனுடைய மாணவர்களைச் சாதாரண வகுப்புக்களில் வைத்துக் கற்பிக்கும் போது அவர்களுக்குப் படிப்பில் சலிப்பு ஏற்படலாம். மேலைநாடுகள் சிலவற்றில் இவர்களுக்கெனத் தனிப்பட்ட பாடசாலைகளும் உண்டு அல்லது சாதாரண பாடசாலைகளில் இவர்களுக்கெனத் தனிப்பட்ட வகுப்புகளை நடாத்துவார்கள்.

இலங்கைப் பாடசாலைகளில் இவர்களுக்கெனத் தனிப்பட்ட கல்விமுறை அமையவில்லை. எனினும், விசேட செழுமையான பாடவிதானம் அமைத்து, விடய ஆழத்தையும் கற்பித்தல் முறையையும் மேம்படுத்தலாம்.

ஆக்கத்திறன் விருத்தியை ஊக்குவிப்பதற்கு பின்வரும் வகுப்பறைச் செயற்பாடுகளை அமைக்கலாம் :

- வினாக்களை ஆசிரியரிடம் கேட்பதற்கு மாணவர்களை ஊக்குவிக்கலாம்.
- மாணவர் புதிய கருத்துக்களை முன்வைக்கும்பொழுது ஆசிரியர் அவற்றை கலந்துரையாடி, அவற்றுக்குப் பெறுமதி உண்டென்பதை ஏற்றுக்கொள்ளல்.
- விரிசிந்தனையை ஊக்குவித்தல்.
- செயற்றிட்டங்கள், ஒப்படைகள் ஆகிய சுயகற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

- பலவகையான நூல்களை வாசிப்பதற்கு ஊக்கமளித்தல்
- சிந்தனைக் கிளறல் தனிமையாகவும், குழுவாகவும் நடைமுறைப்படுத்தல்.
- வழமையான பாடங்களுக்கு மேலதிகமாக ஆர்வத்தையூட்டி விடயங்களைக் கலந்துரையாடல்.
- மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடுகளுக்கு கணிப்பைக் கொடுத்தல்.
- இவர்களை வளமான பாடசாலையில் அனுமதித்தல்.
- புலமைப்பரிசு வழங்கல்.
- விரைவான வகுப்பேற்றல்.

உடற் குறைபாடுடைய பிள்ளைகள்

பார்வை, கேள்வி, பேச்சு, அங்கங்கள், உடலியக்கம் ஆகியவற்றில் குறைபாடு உடையவர்கள், உடற்குறைபாடுடையோர் எனப்படுவர். பார்வையற்றோர், காதுகேளாதோர், வாய்பேசாதோர், வலது குறைந்தோர் ஆகியோருக்கெனத் தனிப்பட்ட பாடசாலைகள் உள்ளன. ஓரளவு உடற் குறைபாடுடையோர்களே சாதாரண பாடசாலைகளில் கல்விபயில்வர். அவர்களுக்கென இங்கு விசேட உதவி வழங்கப்பட வேண்டும்.

பார்வைக்குறைபாடு உடையோரை இனங்காணல் :

வாசிக்கும் போது புத்தகங்களைக் கண்ணுக்கு மிக அண்மையில் அல்லது தூரத்தில் வைத்து வாசித்தால் கண்சிவத்தல், கண்வீக்கமடைதல், கண்ணில் நீர் வடிதல், கண்கூசுதல், அடிக்கடி தலைவலி ஏற்படுதல் ஆகியவற்றை அவதானித்து இவர்களை இனங்காணலாம்.

கேள்விக்குறைபாடு உடையோரை இனங்காணல் :

ஒலி பேதங்களைக் கிரகித்துக் கொள்ள முடியாமை தவறுதலாக விடயங்களை விளங்குதல் மிகச் சத்தமான குரலில் பேசுதல் பிழையான உச்சரிப்பு கல்வியில் பின்தங்குதல் தனிமையாக ஒதுங்கியிருத்தல் பகற்கனவு காணுதல் ஆகியவற்றை அவதானிக்கலாம்.

இக்குறைபாடுடைய மாணவர்களை ஆசிரியர் ஆரம்பத்திலேயே இனங்காணல் அவசியம். அவ்வாறு இனங்காணப்பட்ட குறைபாடுகள் சிலமருத்துவ சிகிச்சையுடன் பரிகாரம் காணக்கூடியனவாக இருக்கலாம். சில குறைபாடுகளின் பாதிப்பும் தீவிரமும் மூக்குக்கண்ணாடி, செவிப்புலச்சாதனம், சக்கர நாற்காலி போன்றவற்றால் ஓரளவு குறைக்கப்படலாம். இவற்றை மாணவர் பெற்றுக்கொள்வதற்குப் பாடசாலையின் வழிகாட்டல் தேவைப்படும். வகுப்பறையில் இவர்கள் தமது குறைபாடுகளால் பாதிக்கப்படாமல் இயன்றளவு விசேட வசதிகளையும் கவனிப்பையும் வழங்க ஆசிரியர்கள் கடமைப்பட்டுள்ளார்கள் கட்புலன் செவிப்புலன் குறைபாடுடையோரை வகுப்பின் முன்வரிசையில் அமரும்படி செய்தல், இயக்கக் குறைபாடு உடையோருக்கு வசதியான ஆசனங்களை வழங்குதல் போன்றவை பயனுள்ளன.

உடல் குறைபாடுடையவர்களின் ஆளுமைச் சமநிலை சீர்குலைவதற்கு வாய்ப்புண்டு. இவர்களை மற்ற மாணவர்கள் இகழாமல் ஏற்றுக்கொள்ளவும், சமூகப் பொருத்தப்பாடு காணவும், தன்னம்பிக்கையை விருத்தி செய்யவும் ஆலோசனை தேவை. இக்குறைபாட்டின் காரணமாக இவர்கள் கல்வியில் பின்தங்கியவராகக் காணப்படின் அதற்கென விசேட வழிகாட்டலும் தேவைப்படும்.

பேச்சுக் குறைபாடு :

சொற்களைத் திருத்தமாக உச்சரிக்க முடியாமைஸ ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் திக்கித்திக்கிக் கூறுதல்ஸ பேச்சை ஆரம்பிக்க முடியாமல் திணறுதல்ள திக்குதல்ள மிக மெதுவாகப் பேசுதல் போன்றவை பேச்சுக் குறைபாடுகளாகும். இத்துடன் முகஞ்சுழித்தல், கண்சிமிட்டுதல் ஆகியனவும் பேசும்போது ஏற்படலாம்.

பேச்சுடன் தொண்டை, குரல்வளை, நாக்கு, உதடு, பிரிமென்தகடு ஆகியவை தொடர்புள்ளன. இவ்வுறுப்புகளில் உடலியல் ரீதியான குறைகளும் பேச்சுக் குறைபாட்டுக்குக் காரணமாக அமையலாம். எனினும் மனவெழுச்சிக் காரணங்களே பேச்சுக் குறைபாட்டைப் பெருமளவில் ஏற்படுத்துகின்றன எனக் கருதப்படுகிறது. திக்கு வாய்க்கு முக்கிய காரணம் தொண்டை, குரல்வளை, பிரிமென்தகடு ஆகியவற்றிலுள்ள தசைநார்கள் இறுக்கமடைவதே. இயல்பாகவே மனப்பதட்டம் உள்ள குழந்தைகளில் பேச்சுக் குறைபாடுகள் ஏற்படலாம். அவர்கள் கோபம், கவலை, பதட்டம் போன்ற உணர்ச்சிகளால் தூண்டப்படும் போது திக்குதல் மேலும் அதிகரிக்கும்.

திக்குவாய் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் இரண்டு வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆரம்பமாகின்றது. திக்குவாய் ஆரம்பமாவதற்குத் தூண்டியாக அமையக்கூடிய காரணிகள் பின்வருமாறு:

- குழந்தைப் பருவத்தில் தாயைப் பிரிவது.
- நெருங்கிய உறவினர் ஒருவர் இறப்பது.
- அந்நிய சூழ்நிலைக்கு இடம்பெயர்தல்.
- குழந்தைகளை தீவிர தண்டனை, துன்புறுத்தல் ஆகியவற்றுக்கு உட்படுத்தல்.

குழந்தைக்கு ஒரு சகோதரர் பிறக்கும் போது இக்குழந்தைக்கு முன்பு கிடைத்துவந்த கவனிப்பு, அன்பு ஆகியவை பெற்றோரால் புதிய சகோதரருக்குக் கொடுக்கப்படுவதை உணரும்போது அக்குழந்தைக்கு பொறாமை ஏற்படுகின்றது. இப்பொறாமை உணர்வைப் புதிய சகோதரரிடம் காட்டாமல், பெற்றோரின் கவனிப்பைத் தன்னிடம் ஈர்ப்பதற்காகத் தான் பேசும்போது திக்கித்திக்கிப் பேசுகின்றது. இதற்குப் பரிகாரமாகப் பெற்றோர் இப்பிள்ளை மீது காட்டும் அன்பு, கரிசனை ஆகியன குறையவில்லை என்பதைப் பல வகையில் உணரச் செய்வதேயாகும்.

- இயற்கையிலேயே இடது கைப்பழக்கம் உடையவராக இருந்தால், குழந்தை பேச ஆரம்பிக்கும் காலத்தில் அவரைக் கண்டித்து வலது கைப் பழக்கத்துக்கு மாற்ற முற்படுதல்.

திக்குவாய் பெரும்பாலும் இரண்டு நிலைகளில் ஆரம்பமாகிறது. குழந்தைப் பேசத் தொடங்கும்போது ஒரு சொல்லின் முற்பகுதியை உதாரணமாக, 'அ...அ...அம்மா' எனத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறது. இது குழந்தையின் மழலைப் பேச்சேயன்றிக் குறைபாடு அல்ல. சில பெற்றோர் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து மிகைப்படுத்தி, குழந்தை பேச்சுக் குறைபாடுள்ளது என எண்ணி, குழந்தையின் பேச்சைத் திருத்த முற்படுகிறார்கள். இதனை அவதானிக்காததுபோல் இருந்து விட்டால் அதன் பேச்சு தானாகவே திருந்திவிடும். பெற்றோர் பதட்டப்பட்டுத் திருத்த முற்படும் போது தன் பேச்சிலுள்ள இயற்கையான குறைபாட்டைப் பற்றிக் குழந்தை தன்னுணர்வு பெறுகின்றது.

இத்தன்னுணர்வு இரண்டாம் நிலைக்கு இட்டுச்செல்லுகிறது. பேசும் பொழுது குழந்தை தனக்குக் குறைபாடு உள்ளதென உணர்ந்தபடியால், அதற்குப் பயம், பதட்டம் ஏற்படுகின்றது. தன் முயற்சியால் அதனைத் திருத்த முற்படுகின்றது. இதனால் தொண்டை, குரல்வளை, பிரிமென்தகடு தெறிவினை காரணமாக இறுகித் திக்குவாய் ஏற்படுகின்றது. ஆகவே முதல்நிலையில் குழந்தையைத் திருத்த முற்படக்கூடாது.

முன்பள்ளிப் பாடசாலை, ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் சகபாடிகள் ஆகியோர் குழந்தையைப் பயமுறுத்தல், துன்புறுத்தல், தண்டித்தல் ஆகியனவும் திக்குவாய்க்குக் காரணமாக அமையலாம். குழந்தையின் மனதில் சஞ்சலம், பயம், பொறாமை ஆகிய உணர்வுகள் ஏற்பட்டுவிட்டால், அதனை நிவர்த்தி செய்வதற்கு முயற்சியெடுக்க வேண்டும். அவசியமேற்பட்டால், பேச்சுப் பரிகாரியிடம் உதவி பெறல் இக்குறைபாட்டை நீக்குவதில் பயனளிக்கும்.

உடல் அங்கவீனம் :

பிறவியிலோ அல்லது நோய், விபத்து ஆகியவற்றாலோ உடலில் அங்கவீனம் அல்லது உடலமைப்பில் விகாரம் ஏற்படலாம். சாதாரணமாகப் பாடசாலைகளில் இவ்வாறான பிள்ளைகளைக் காணலாம். இவ்வங்கவீனத்தால் இவர்களின் உளத்திறன் பாதிப்படையாமல், மனவெழுச்சி பாதிக்கப்படாமல் வழிகாட்டல் ஆலோசனை தேவைப்படும். சகமாணவர்கள் இவர்களைத் தனிமைப்படுதல், இகழ்தல் ஆகியன ஏற்படாமல் ஆசிரியர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். வைத்திய சிகிச்சை பெறவும், சக்கர நாற்காலி, ஊன்றுகோல்கள் போன்ற சாதனங்களைப் பெற்றுக்கொள்ளவும் உதவியளித்தல் பயனுள்ளது. வகுப்பில் இவர்களது ஆசனங்களை இவர்கள் இயங்குவதற்கு வசதியாக அமைத்தல் வேண்டும்.

உளக்குறைபாடுடையோர்

பிள்ளைகளில் நுண்மதி மிகத் தாழ்மட்டத்தில் காணப்படின் அவர்கள் உளக்குறைபாடுடையோர் எனக் கருதப்படுவர். அவர்களைப் பின்வருமாறு வகுக்கலாம் :

நு.ஈ 25 இற்குக் கீழ் உள்ளோர் - தீவிர உளக்குறைபாடுடையோர், இவர்கள் சாதாரண பாடசாலைகளில் காணப்படமாட்டார்கள். தங்கள் சொந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மற்றவர்களின் உதவியை இவர்கள் நாடி நிற்பர். இவர்களின் சிந்தனை மனவெழுச்சி முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும்.

நு.ஈ 25-55 வரை உள்ளவர்கள் - உளப் பிற்போக்கு உடையவர்கள். இவர்களும் சாதாரண பாடசாலைகளில் காணப்படமாட்டார்கள். விசேட பாடசாலைகளில் இவர்களுக்கு ஓரளவு பயிற்சி அளிக்கலாம்.

நு.ஈ 55-75 வரை உள்ளவர்கள் - ஓரளவு உளக்குறைபாடு உடையவர்கள். ஆரம்பப் பாடசாலைகளில் விசேட கற்பித்தல் முறைகள் மூலம் இவர்களுக்கு அடிப்படைக்கல்வி கற்பிக்கப்படலாம்.

உளக்குறைபாடுடையோர் சுயபொருத்தப்பாடு, சமூக பொருத்தப்பாடு ஆகியவற்றைப் பெறவும், கைவேலை சார்பான தொழில்களில் பயிற்சி பெறவும் வழிகாட்டப்பட வேண்டும்.

கற்றலில் பின்தங்கியோரும் மெல்லக் கற்போரும்

கற்றலில் பின்தங்கல், மெல்லக் கற்றல் ஆகிய இரு சொற்றொடர்களும் நெருங்கிய தொடர்புடையன. பெரும்பாலும் இவை ஒன்றையே குறிக்கலாம். பின்தங்கியநிலை மாணவரின் வயதுக்கேற்ற வகுப்பு நியமத்தைக் குறிக்கின்றது. ஒரு பிள்ளை தனது வயதுக்குரிய வகுப்பு நியமத்திலும் தாழ்வான வகுப்பில் காணப்படில், அவர் கற்றலில் பின்தங்கியவர் எனப்படுவார். கற்றலில் குறைபாடுடையோர் மெதுவாக அல்லது தாமதித்துக் கற்போர் எனக் கருதப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் நுண்மதி ஈவின் அடிப்படையில் இவர்கள் இனங்காணப்பட்டனர். 1969ஆம் ஆண்டின் பின்னர் கல்விசார் பின்தங்கிய நிலையை மீள்வரையறை செய்தனர். பாட அடைவுகளின் தகுதி நிலமையில் ஒரு மாணவன் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துக்குரிய மட்டத்தை அடையத் தவறுவானாயின், ஒரு வகுப்பு அல்லது பல பாடங்களில் அல்லது ஒரு பாடத்தில் குறைவாக இருந்தால், அவன் பின்தங்கியவன் எனக் கருதப்படுகின்றான்.

பின்தங்கிய நிலைக்கான காரணிகள் :

- வீட்டுச்சூழல் தொடர்பான காரணிகள்
- பாடசாலை தொடர்பான காரணிகள்
- தனியாள் தொடர்பான காரணிகள்

வீட்டுச் சூழல் தொடர்பான காரணிகள் பின்வருமாறு :

- பெற்றோரின் தாழ்ந்த பொருளாதார நிலை, சேரி வாழ்வு, இட வசதிக் குறைவு போன்றவை.

- பாடசாலை நேரங்களில் பிள்ளைகளை வேலைகளில் ஈடுபடுத்தல்.
- பிளவுபட்ட குடும்பங்கள், பெற்றோர் நீண்டகாலம் வீட்டில் இல்லாமை.
- பெற்றோரின் கல்வித்தரக் குறைவு, அறியாமை.
- சீரற்ற குடும்ப உறவுகளால் மனவெழுச்சித் தாக்கங்கள் ஏற்படுதல்.
- பிள்ளைகளின் படிப்பில் கரிசனைக்கொள்ளாமல், படிப்பைப்பற்றிய எதிர் மனப்பாங்கு, ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பாமை.

பாடசாலை தொடர்பான காரணிகள் பின்வருமாறு :

- பொருத்தமற்ற பாடசாலைப் பாடவிதானம்.
- பிழையான கற்பித்தல் முறை, மாணவரின் தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாமல் ஆசிரியர் கற்பித்தல்.
- ஆசிரியர் மாணவர் தொடர்புகளில் முரண்பாடுகள்.
- அளவுக்கதிகமான கற்றல் சுமை.
- கற்றலில் ஆர்வமற்ற சகபாடிகளின் குழு அங்கத்துவம்.
- தடையற்ற வகுப்பேற்றம்.
- அடிக்கடி பாடசாலையை மாற்றுதல்.

தனியாள் தொடர்பான காரணிகள் பின்வருமாறு :

- நுண்மதிக் குறைவு.
- உடல், உளக் குறைபாடுகள்.
- போசாக்குக் குறைபாடு, உடல் ஆரோக்கியமின்மை, நோய்.
- முதிர்ச்சிக்கு முன்கற்றலை ஆரம்பித்தல்.
- மனவெழுச்சிச் சிக்கல்கள்.

கற்பித்தல் பரிகார முறைகள்

கற்றலில் பின்தங்கியோர், மெல்லக் கற்போர் ஆகியோருக்கு விசேட முறைகளைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். அவையாவன :

- தொடர்ச்சியாகப் பலமணி நேரம் கற்பிக்காமல் சிறிய பாடவேளைகளாகப் பிரித்துக் கற்பித்தல்.
- பாடத்தைச் சிறுசிறு அலகுகளாகப் பிரித்துக் கற்பித்தல்.
- கற்றதை நன்கு உறுதிப்படுத்துவதற்காக மிகையாகக் கற்றல், மீண்டும் மீண்டும் கற்று அதிக பயிற்சிகள் செய்தல்.
- செயற்பாடுகள் மூலம் கற்றல்.
- கட்புல சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பித்தல்.
- ஒவ்வொரு கற்றல்படியின் பின்பும், மீளவலியுறுத்தலின் பொருட்டு வெகுமதி, பொருளாதார அடையாளக் கட்டளைகள் ஆகியவற்றை வழங்குதல்.
- கற்றலில் சிறிய முன்னேற்றம் அடைந்தபோதும் அதிக அளவில் ஊக்கல் பாராட்டுகள் வழங்குதல்.
- சுய எண்ணக்கரு மட்டத்தை மேம்படுத்தித் தன்னம்பிக்கையை ஏற்படுத்துதல்.
- விரைவாகக் கற்பதை விட திருத்தமாகக் கற்பதில் கவனஞ் செலுத்தல்.
- பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் விசேட கவனஞ்செலுத்தல்.
- ஆசிரியர் மேலதிக விசேட வகுப்புக்களை நடத்துதல்.

கற்றலில் இடர்ப்பாடுடையோர்

கற்றல் இடர்ப்பாடுடைய மாணவர்கள் ஆரம்பக் கல்விநிலையில் வாசித்தல், எழுதுதல், எண் ஆகியவற்றைக் கற்பதில் இடர்பாடுகளை எதிர்நோக்குவர். இதற்கு இவர்களின்; நுண்மதிக்குறைவு காரணமல்ல. இக்குறைபாடுகளில் சில பின்வருமாறு :

- எழுதுதல் வாசித்தல் குலைவு
- எண்சார் குறைவு
- கவனித்தல் குறைபாட்டுக் கோளாறு
- கவனித்தல் குறைபாடு, அதீத செயற்பாடு கோளாறு

எழுதுதல் வாசித்தல் குலைவு :

எழுதுதல் - வாசித்தல் குலைவின்போது எழுத்துக்களை இணைத்து சரியாக வாசிக்கமுடியாமல் முன்பின்னாக மாற்றி ஒலிப்பர். அதேபோல் எழுத்துக்களையும் முன்பின்னாக மாற்றி எழுதுவர். ஒலிக்கு உரிய சரியான எழுத்துக்களைக் கோவைப்படுத்தி வாசிக்க, எழுத இடர்படுவர்.

எண்சார் குலைவு :

எண்சார் குலைவும் மேற்கூறியது போல் இலக்கங்களை பிழையாக மாறிஎழுதுவர். மனதில் 12 என நினைத்து 21 என எழுதுவர். அதேபோல் நேர், மறை ஆகியவற்றை விளங்குவதில் குழப்பநிலை அடைவர்.

சிலர் இயக்கம் சார்பான குழப்பநிலையையும் பெற்றிருப்பர். பார்வையுடன் கைகளை இணைத்து வேலைகளில் ஈடுபடுவதில் தடுமாற்றமடைவர். உ-ம் : ஆடைகளில் பொத்தான பூட்டுதல், காலணி அணிதல் ஆகிய செயல்களில் இடர்படுவர்.

மேற்கூறிய குலைவுகள் யாவும் மாணவர்களில் மிகக்குறைந்த மட்டத்திலிருந்து தீவிர மட்டம் வரை காணப்படும். இவ்விடர்பாடுகளுக்குப் பரம்பரை அலகே காரணியாகக் கூறப்படுகின்றது.

கவனித்தல் குறைபாட்டுக் கோளாறு

இக்குறைபாடு உடையோரில் பின்வரும் நடத்தைகளை அவதானிக்கலாம்.

- கற்றலிலும் மற்றைய செயற்பாடுகளிலும் கவனத்தைத் தொடர்ந்து குறுகிய நேரத்திற்கேனும் வைத்துக்கொள்ள முடியாமை.
- சிந்தனையை ஒருமுகப்படுத்தி ஒரு விடயத்தில் நிலைநிறுத்த முடியாமை. இத்தன்மையினால், கற்றலிலும் இடர்பாடு ஏற்படுகின்றது.
- செயல்களில் அளவுக்கதிகமான அவசரம், திடீர் விசைத் தூண்டல் அல்லது உந்தல் ஏற்படுதல்.
- ஒரு செயலைத் தொடர்ந்து செய்வதில் குழப்பநிலை.

கவனித்தல் குறைபாடு, அதீத செயற்பாட்டுக் கோளாறு - ADHD :

இக்குறைபாடு உடையோரில் ADDஇல் கூறிய நடத்தைகள் மேலும் அதீத நிலையில் காணப்படும். அவர்களில் மேலும் பின்வரும் நடத்தைகளையும் அவதானிக்கலாம்.

- தொடர்ச்சியான அமைதியின்மை, ஒரு இடத்தில் சில நிமிடங்களுக்கு மேல் அமர்ந்திருக்க முடியாமை, எப்பொழுதும் உடலை கைகால்களை ஆட்டி அசைத்தல்.
- ஒரு செயற்பாடு முடியுமுன் வேறோன்றை ஆரம்பித்தல்.
- மற்றவர்கள் பேசும் போது நடுவில் குறுக்கிடல்.
- சொல்வதைப் பொறுமையாகச் செவிமடுக்காமை.
- தனது முறை வருமுன் இடையில் முன்னுக்குப் புகுதல்.
- ஆபத்தான செய்கைகளில் முன்யோசனையின்றி ஈடுபடுதல்.

ஆரம்பப் பாடசாலைகளில் மேற்கூறிய நடத்தைகளை ஆசிரியர் மாணவரின் துடினத்தனம் என நினைக்கலாம். இந்நடத்தைகள் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மேல் காணப்படின், கற்றலில் இடர்பாடுகள் உடையவர்கள் எனக்கொள்ளலாம். இந்நடத்தைகளின் தீவிரம் தணிந்துபோகாமல் பதினைந்து வயதுக்கு மேலும் தொடர்ச்சியாகவும் காணப்படின், இவர்களின் மைய நரம்புத்தொகுதி, பக்க நரம்புத்தொகுதி பாதிக்கப்பட்டுள்ளதாக ஊகிக்கலாம். இவர்களை நரம்பியல் மருத்துவரிடம் சிபார்சு செய்தல் அவசியமானது. ஏற்படுவதற்குக் காரணம் மூளை பிறப்புக்கு முன் அல்லது பிரசவத்தின் போது அல்லது நோய்கள், மருந்துகள், விபத்துக்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டமையே. பொதுவாக இந்நடத்தைகள் மூளை தொடர்பாகச் சுரக்கப்படும் ஓமோனின் குறைபாட்டினால் ஏற்படுகின்றது எனக் கருதப்படுகிறது.

இவ்விடர்ப்பாடுகள் உடையோரை ஆசிரியர், பெற்றோர் தண்டிப்பதால் பிரச்சினை மேலும் கூடுதலாவதுடன், ஆளுமை, மனவெழுச்சி ஆகியவற்றில் தாக்கமும் ஏற்படும். இவர்களுடன் பொறுமையுடனும் அனுதாபத்துடனும் பழக வேண்டும். இவர்களுக்கு விசேட கற்பித்தல் முறைகள், வழிகாட்டல் ஆலோசனை ஆகியன இத்துறையில் விசேட பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்பட வேண்டும். மருத்துவ சிகிச்சைக்கும் சிபார்சு செய்யப்பட வேண்டும்.

பொருத்தப்பாடற்ற நடத்தையுடைய பிள்ளைகள்

மனவெழுச்சி, சமூகத் தொடர்புகள் ஆகியன தொடர்பாகப் பொருத்தப்பாடற்ற பிரச்சினைக்குரிய நடத்தை உடையவர்கள் இதனுள் அடங்குவர். நியம நடத்தை எதுவென்பதை சமூகமே தீர்மானிக்கின்றது. நியமம், நியமமற்ற நடத்தைகள் ஆகியன கலாசாரம், காலம், வயது, சந்தர்ப்பம் ஆகியவற்றைப் பொறுத்துச் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியவை. பொருத்தப்பாடு என்பது ஒருவருக்கும் அவரது சூழலுக்கும் இடையேயுள்ள இசைவாக்கத்தைக் குறிக்கும்.

பிள்ளைகளில் காணப்படும் பொருத்தப்பாடற்ற நடத்தையை இங்குக் கவனிப்போம். இவர்களை மூன்று பிரிவுகளாக வகுத்து ஆராயலாம்.

(1)நியம நடத்தையிலிருந்து ஓரளவு விலகிய நடத்தை உடையவர்கள்.

(2)சாதாரண, அசாதாரண நடத்தைகளுக்கு இடைப்பட்ட நிலையில் உள்ளோர்.

(3)அசாதாரண நடத்தைத் தீவிர ஆளுமைச் சீர்குலைவு உடையோர்.

மேற்கூறிய முதலிரு பிரிவிலும் உள்ளவர்களைப் பாடசாலைகளில் காணலாம். அவர்கள் பொருத்தப்பாடற்ற நடத்தையுடையவர்கள் எனக் குறிப்பிடப்படுவர். மூன்றாம் பிரிவில் குறிக்கப்பட்டுள்ள ஆளுமைச் சீர்குலைவுடையோரை சாதாரண பாடசாலைகளில் அபூர்வமாக காணலாம்.

முதலிரு பிரிவுகளில் அடங்கும் மாணவர்களில் காணப்படும் அறிகுறிகள் பின்வருவன:

உடலியல் சார்ந்தவை : அமைதியின்மை, உடலில்நோய் அற்ற வேளைகளிலும் வாந்தியெடுத்தல், உணவு சமிபாடடையாமை, அடிக்கடி தலையிடி ஏற்படுதல், முகஞ்சுழித்தல் ஆகியன.

நடத்தை சார்ந்தவை : பிறருக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்தல், எடுத்ததற்கெல்லாம் பொய் பேசுதல், களவு செய்தல், சொல்வதற்கெதிராக வேண்டுமென்றே செய்தல், அடம்பிடித்தல், தீவிரமான வெருட்சி, அதிகரித்த உணர்ச்சி நிலைகள், காரணமற்ற பயங்கள், தாழ்வுச் சிக்கல், ஆதிக்கத்தன்மையான நேர்முக அல்லது மறைமுக எதிர்ப்புச் செயல்களில் ஈடுபடுதல், தம்மிலும் நலியோர் சிறுபிள்ளைகள் அங்கவீனர் வயோதிபர் ஆகியோரைத் துன்புறுத்துதல், பிராணிகளை வதைத்தல், தணிமையை விரும்பி வகுப்பில் ஒதுங்கியிருத்தல் ஆகியன. இத்தகைய நடத்தைகள் சில அத்தியாயம் 3இல் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

மாணவரின் வன்செயல்கள் : வன்செயல்கள் மூவகைப்படும். அவையாவன, நேரான வன்செயல், மறைமுக வன்செயல், இடம்பெயர்ந்த வன்செயல் ஆகியனவாகும். இவ்வன்முறைகள் பல வடிவங்களில் மாணவர்-மாணவர்களுக்கிடையில், மாணவர்-ஆசிரியருக்கிடையில், மாணவர்-

அதிகாரிகளுக்கிடையில் பல மட்டங்களில் காணப்படுவனவாகும். பொதுவாக கட்டிளமைப்பருவத்தில் இத்தகைய மாணவரில் புகைப்பிடித்தல், மதுவருந்துதல், போதைப்பொருள் பாவனை, முறையற்ற பாலியல் நடத்தை, குழுச்சண்டைகளில் ஈடுபடுதல், பாடசாலை உடைமைகள் பிறரின் உடைமைகள் ஆகியவற்றைச் சேதப்படுத்தல், தகாத வார்த்தைகளைப் பேசுதல், பகிடிவதையில் ஈடுபடுதல், ஆசிரியர் கற்பிக்க முடியாதவகையில் தொல்லை கொடுத்தல் ஆகிய நடத்தைகளும் காணப்படலாம்.

தனிமை நாடல் : சில மாணவர்கள் வகுப்பில், பொதுவாகப் பின் ஆசனங்களில் பிறருடன் சேராது ஒதுங்கித் தனிமையாக இருப்பதை அவதானிக்கலாம். இவர்கள் மற்றவர்களுக்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தாமல் தனிமையாக இருப்பதால், ஆசிரியர்களுக்கு இவர்களால் எவ்வித தொல்லைகளும் ஏற்படாததால், அவர்கள் மீது கரிசனை எடுக்காமல் விட்டுவிடுகின்றார்கள். இவர்கள் இவ்வாறு மற்றவர்களுடன் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளாமலும் சேர்ந்து விளையாடாமலும் இருப்பதற்கு காரணம் மனமுறிவு ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கே ஆகும். தனிமை விரும்பும் நடத்தையைச் சீராக்கம் செய்யாவிடில், அது நீடித்துத் தொடர்ந்து பிற்காலத்தில் உளக்கோளாறாக விருத்தியடையலாம். ஆரம்பத்திலேயே இவர்கள் இனங்காணப்பட்டு வழிகாட்டல் ஆலோசனை வழங்குவது நற்பலனை அளிக்கும்.

பொருத்தப்பாடின்மையை ஏற்படுத்தும் காரணிகள் : பொருத்தப்பாடின்மை ஏற்படுவதற்கு மூன்று முக்கிய காரணங்களைக் கூறலாம். அவையாவன உடலியற் காரணிகள், உளக்குறைபாடு, சூழற் காரணிகள் ஆகியனவாகும். உடலியற் காரணிகளாவன உடல் குறைபாடு, விகாரமான தோற்றம் அதிக உயரம், அதிக பருமன் ஆகியனவாகும். உளக்காரணிகளாவன நுண்மதிக் குறைவு, உளத் தேவைகளைத் திருப்திகரமாகப் பெறமுடியாமல் ஏற்படும் மனமுறிவு, விரக்தி, உளத்தாக்கம் ஆகியவையாகும். குடும்பம், பாடசாலை, சமூகம், ஆகியவற்றினிடையேயான தொடர்புகள் திருப்திகரமாக இல்லாமை, தேவைகள் பூர்த்திசெய்யப்படாமை என்பன சூழற்காரணிகளாகும்.

பொருத்தப்பாடற்ற பிள்ளைகள் அதீத உணர்ச்சிவசப்படுதல், பயந்து பின்வாங்கும் சுபாவம், தாழ்வுச்சிக்கல், கற்றலில் குறைபாடு ஆகியவற்றால் ஆளுமைச் சீர்கேடுகளுக்கு உள்ளாகின்றனர். பொருத்தப்பாடின்மை ஆரம்பத்திலேயே சீராக்கம் செய்யப்படாவிடில் நெறிபிறழ்வும் ஏற்படலாம்.

நெறிபிறழ்ந்த இளங்குற்றவாளிகள்

நீதித்துறையின் தண்டனைக்குரிய செயல்களில் ஈடுபடும் பிள்ளைகள் நெறிபிறழ்நத இளங்குற்றவாளிகள் எனப்படுவர். 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் வன்முறைகள், களவு, போதைப்பொருள் விற்பனை, பாலியல் குற்றங்கள், கொலை போன்ற சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டால் பாடசாலையிலிருந்து நீக்கி, தனிப்பட்ட பராமரிப்பு இல்லங்களில் காவலில் வைக்கப்படுவர்.

நெறிபிறழ்வுக்குரிய காரணங்களை அறிவதற்குப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேர்ட் என்பவர் தமது ஆய்வின் அடிப்படையில் பின்வரும் முக்கிய காரணிகளை இனங்கண்டு அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நிரற்படுத்தியுள்ளார்.

- வீட்டில் ஒழுங்கான கட்டுப்பாடுகள் இல்லமைஸு தீவிரமாக கட்டுப்பாடுகள் விதித்தல் அல்லது அளவுக்கதிகமான சுதந்திரம் கட்டுப்பாட்டில் உறுதியின்மைஸு பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறையின்மை.
- குழந்தைப் பருவத்தில் உளவியல் தேவைகள் பூர்த்தியடையாமல் மனமுறிவு, மனவெழுச்சிச் சீர்குலைவு ஆகியன ஏற்படல்.
- அதிதமான இயல்பூக்கங்களைப் பெற்றிருத்தல். உதாரணமாக போர் ஊக்கம், பால் ஊக்கம், திருட்டூக்கம் போன்றவை.

- குடும்ப வரலாற்றில் குற்றம் புரிந்தோர் காணப்படல். தகப்பன் தாய் தமையன் மாமன் போன்றோர் குற்றச்செயல்களில் ஈடுபட்டால் அவர்களின் நடத்தையைப் பிள்ளைகள் முன்மாதிரியாகக் கற்றுக் கொள்ளுதல்.
- குறைந்த நுண்மதியும், கல்வியில் பிற்போக்கும் காணப்படல், இதற்குக் காரணம் ஒரு மாணவன் பாடசாலைவேளைகளில் தனது திறமையைக் காட்டிப் பிறரது கணிப்பையும் மதிப்பையும் பெற முடியாத போது வேறு வழிகளில் இவற்றைப் பெற முயலுகிறான். குழுக்களின் கணிப்பைப் பெறும்பொருட்டுச் சமூகவிரோத செயல்களில் ஈடுபடலாம்.

பேர்ட் கூறிய காரணிகளுக்கு மேலதிகமாக வேறு சில முக்கிய காரணிகளையும் போள்பி என்பவரின் ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. அவரது ஆய்வின்படி, நெறிபிறழ்வுக்கு முக்கிய காரணங்களாவன :

- ஒரு குழந்தை தனது முதல் ஐந்து வருடங்களுக்கும் பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழ்தல்.
- பெற்றோரால் புறக்கணிக்கப்படல்.
- பெற்றோரின் வறுமை, தொழிலின்மை, ஒழுக்கச் சீர்கேடுகள்.
- நகரங்களுக்கு இடம்பெயர்தல், கேசரிகள் போன்ற சனநெருக்கமான பகுதிகளில் குடியிருத்தல்.

ஆரம்ப நிலையிலேயே நெறிபிறழ்வு ஏற்படாமல் தடுப்பதற்குப் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை பயனுள்ளது. பிள்ளைகளின் தன்னம்பிக்கைளை வளர்ப்பதற்குப் பாடசாலைகள் சகல வசதிகளையும் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். மேலும் இவ்விடயத்தில் சமூக நலன் கருதும் தாபனங்கள், சமயம் சார்ந்த நிறுவனங்கள், இளைஞர் மன்றங்கள், காவல் நிலையங்கள் போன்றவற்றுடன் பாடசாலை தொடர்புகொண்டு மாணவரிடத்தில் நல்ல சமூக ஒழுக்க விழுமியங்களையும், சுயகட்டுப்பாடுகளையும் விருத்திசெய்ய முயற்சியெடுக்க வேண்டும். இவ்வாறாக விசேட தேவையுடைய பிள்ளைகளது வாழ்கைமுறைகளும் , பல்வேறு இன்னல்களும் எதிர்நோக்கும் வேளை விசேட தேவையுடையோரிற்கு ஏற்ற வழிகாட்டல் வழங்கப்படும்போது அவர்களது வாழ்க்கை வளம் பெறும் எனலாம்.

துணைநின்றவை

நூல்கள்

- மகேசன்கே., 2010, விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், ஹீரா அச்சகம், மட்டக்களப்பு.
- முத்துலிங்கம்ச., 2002, கல்வியும் உளவியலும், லங்கா புக் டிப்போட்.
- விமலாகி., 2003, வழிகாட்டலும் ஆலோசனைகளும் ,கேகிராபிக்ஸ்.யூ.எஸ்., ராஜகிரி.

சஞ்சிகைகள்

- அரசரத்தினம் பூக.., 2007 ' பிள்ளைகளை எப்படி அணுக வேண்டும் ,அகவிழி.
- கேதீஸ்வரன் க.., 2010, கல்வி, கல்வி மாணிச்சங்கம், கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.
- சந்திரசேகரம் ப., 2004, செவித்திறன் குறைவானோருக்குக் கற்பித்தல், அகவிழி.
- ஜெயராசா சபா, 2004, ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர், அகவிழி.
- ஜெயராசா சபா, 2006 ,சமூக உளவியல் நோக்கில் அந்நியமாதல், அகவிழி.
- ஜெயராசா சபா, 2008, கற்றல் தொடர்பான இடர்களை எதிர்கொள்வோர், அகவிழி.

மதிப்பிடப்பெற்றது

வள்ளலார் வகுத்த இனம்

கா. தினேஷ்
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர், எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்ற உயரிய எண்ணத்தை உலகிற்கு உணர்த்தி அதன்படி வாழ்ந்து காட்டியவர் வள்ளலார். வடலூரில் சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்து, சாதி, மதம், மொழி, இனம் இவற்றையெல்லாம் தவிர்க்க வழிவகை செய்தவர். எவ்வுயிரையும் தம்முயிர் போல எண்ணிய வள்ளலார் தாம் இயற்றிய அருட்பாவிலும் அன்பர்களுக்குச் சொன்ன உபதேசங்களிலும் இனப் பேதமையைச் சுட்டுகிறார். அவ்வகையான இனம் எத்தன்மையது என்பதை ஆய்வதே இக்கட்டுரை.

இனம் - பொருள் விளக்கம்

இனம் என்பது அடையாளப்படுத்துதல், அப்பொருளின் தன்மை என்று கலைக் களஞ்சியம் பொருள் கூறுகிறது. தன்மை என்பதை வடமொழியாளர்கள் 'லட்ஷணம்' என்று கூறுகின்றனர். இது தமிழ்மொழியில் இலக்கணம் எனப்படுகிறது. தமிழ்மொழி அகராதி இனம் என்பதற்கு, குலம், வகுப்பு, சுற்றம், சேர்ந்த கூட்டம் என்பதாகப் பொருள் கூறுகிறது. இனம் என்பது பொதுவாக சேர்ந்த கூட்டம் என்று இலக்கியங்கள் பல எடுத்தியம்புகின்றன. தொல்காப்பியர் இனம் என்பதனை,

நேர்இன மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓர்இனப் பொருளை ஒருவழி வைப்பது (தொல்.பொருள் - 1417)

என்று கூறுகிறார். ஒரே தன்மை கொண்ட பொருளை ஓர் இனமாக வைப்பது என்பது ஒரே வகையான மணிகளைக் கோவைப்பட வைப்பது போன்று என்று உரையாசிரியர் விளக்கம் தருகிறார். ஆகவே, இனம் என்பது ஒரே தன்மை பொருந்தியவர்கள் ஒன்று சேரும் கூட்டம் என்பது புலனாகிறது. இவ்வினம் என்பது எல்லா உயிர்க்கும், உயிரல்லாதற்கும் பொருந்தும். குறிப்பாக உயிர்களுக்கு அதிலும் மானுடர்களுக்கு இவ்வினம் அகஒழுக்கத்தையும், புறஒழுக்கத்தையும் பொறுத்தே இனம் பகுக்கப்பட்டிருக்கிறது. உயிர்களிலே ஊர்வன, பறப்பன, நடப்பன என்ற அடிப்படையில் இனம் வகைப்படுத்தப்பட்டாலும் மனிதனுக்கு அவனின் அறிவினைப் பொறுத்தே இனம் சுட்டப்படுகிறது. இதனை வள்ளுவர்,

நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு (குறள்.452)

என்று கூறுவதன் வாயிலாக இனத்தியல்பால் அத்தன்மையான அறிவைப் பெறக்கூடும் என்று கூறுகிறார். சிற்றினம் சேராமை என்னும் அதிகாரத்தின் வாயிலாக அறிவைப் பொறுத்தே அவன் இனப்படுகிறான் என்றும் கூறுகிறார்.

வள்ளலார் குறிப்பிடும் இனம்

ஓரறிவு முதல் ஆறறிவு வரை எவ்வுயிரிடத்தும் அன்புபூண்டு ஒழுகிய வள்ளலார், தாம் இயற்றிய அருட்பாவில் இனப்பேதமையைச் சுட்டுகிறார். அவர் ஆறாம் திருமுறையில்,

உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர் அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றை பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்

நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே
மயர்ப்பறு மெய்த்தவர் போற்றப் பொதுவில் நடம்புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலை அணித் தருளே (திருவருட்பா-4160)

என்று கூறுகிறார். சன்மார்க்க சங்கம் வைத்து, சமரசம் கண்ட வள்ளலார் மானுடர்களை உறவினத்தார், புற இனத்தார் என்று சுட்டுகிறார். தம் அன்பர்களுக்கு உபதேசம் செய்யுங்கால் ஒவ்வொரு முறையும் அகவினத்தார், புறவினத்தார் என்றே சுட்டிக் கூறுவார்.

அக இனமும் புறஇனமும்

வள்ளலார் சுட்டும் இவ்விரு இனமும் மனிதர்களின் செய்கையைப் பொறுத்தே அமைகிறது. அதிலும் அடிப்படைத் தேவைகளின் முதலாவதாக் கொள்ளும் உணவு முறையில் சன்மார்க்கத்தின் அடிப்படைத் தகுதியாகிக் கொண்டார். உயிர்க்கொலை செய்பவனும், அவ்வுயிரைக் கொன்று அதனைப் புசிப்பவனும் நம்மவர் இல்லை என்றும், அவன் புறஇனம் என்றும் சுட்டுகிறார். எவன் ஒருவன் உயிர்க்கொலை செய்வதைத் தவிர்த்தும் அதனை உண்பதை மறுக்கிறானோ அவனே அகவினம் அதாவது உறவினம் என்று கூறுகிறார். புறவினத்தாரின் இச்செய்கைகூட அவனது அறியாமையே என்று கூறுகிறார். ஆகையால் அவ்வினத்தினரை வெறுத்துவிடாமல் அவர்களுக்கும் பசிதவிர்த்தல் மட்டுமே செய்க என்று தம்பாடலில் குறிக்கிறார். மற்றபடி அவர்களுக்கு 'பண்புரையேல் நண்புதவேல்' என்று கூறுவதன்மூலம் அவர்களுக்குப் பண்பான சொற்களோ நட்புப் பாராட்டி அவர் செய்கைக்கு உதவவோ வேண்டாம் என்று கூறுகிறார். அவர்கள் சன்மார்க்க நெறியை மேற்கொள்ளும்வரை இதுவே அவர்களுக்குச் செய்ய வேண்டியது. இத்தகைய செயலைச் செய்பவரை வள்ளலார் குறிப்பிட்டபடி பல சான்றோர்களும் உயிர்க்கொலையையும் புலைப் பொசிப்பையும் கண்டிக்கின்றனர்.

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையார்
புன்மை தெரிவார் அகத்து (குறள்-329)

என்று கூறுவதன்மூலம் கொலையையே செய்தொழிலாக உடைய மக்களை மாக்கள் (விலங்கு) என்று கூறுகிறார் வள்ளுவர். கொலைத்தொழிலின் இழிவை உணர்ந்தவரிடத்தில் தாழ்ந்த செயலினராகவே தோன்றுவர். இதில் மனித இனமாக இருந்தாலும் கொலைத் தொழிலால் விலங்கினமாகக் குறிப்பிடுகிறார். மேலும், ஏலாதி என்னும் நூலில் கணிமேதாவியார்

...கொல்லான் உடன்பாடன் கொல்வர்
இனஞ்சேரான் புல்லான் (ஏலாதி-42)

என்று கூறுகிறார். கொலைத்தொழிலைச் செய்யும் இனத்தைச் சேர்ந்தவன் புல்லறிவை உடையவன் என்கிறார். புல்லறிவு என்பது அற்ப அறிவாகும், அல்லது அறியாமையைக் குறிப்பதாகும். இதுபோன்று இலக்கியங்கள் பல கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் எடுத்துக் கூறி அவற்றை மேற்கொள்பவனையும் தவிர்ப்பவனையும் இனத்தால் வேறுபடுத்துகின்றன.

முடிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளரச்செய்யும் நோக்கத்திலேயே வள்ளலார் மானுடர்களை அகவினத்தார், புறவினத்தார் என்று வேறுபடுத்தினாரே தவிர பிறிதொன்றில்லை. பிறப்பால் எல்லா உயிர்களும் சமம் என்பதனை மேம்படுத்த புலையும், கொலையும் தவிர்ப்பது அவசியமாகும். உயிர்களின் அறிவு வளர்ச்சியைப் பொறுத்தே இன வேறுபாடு அடைகின்றது. அவற்றைக் களைந்து, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செய்வதால் புறவினத்தார் எல்லாம் அகவினத்தாராகி ஓர் இனமாக இன்புற்று வாழலாம் என எண்ணியவர் வள்ளலார்.

துணைநின்றவை

❖ கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), 2009, தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை, சென்னை சாரதா பதிப்பகம், சென்னை.

- துரைசாமிப்பிள்ளை ஔவை சு.,(உரை.), 1989, திருவருட்பா - மூலமும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர்.
- புலியூர்க் கேசிகன்(உரை.), 1998, திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், சென்னை.
- ……., 1959, கலைக் களஞ்சியம், தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை.
- ……., 2001, பதினெண் கீழ்க்கணக்கு மூலமும் உரையும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- www.tamilmozhiagarathi.com

மதிப்பிடப்பெற்றது

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்

ஆ. ஷைலா ஹெலின்
முனைவர் பட்ட ஆய்வாளர்
பல்கலைக்கழகக் கல்லூரி
பாளயம், திருவனந்தபுரம், கேரளா.
shylras@gmail.com

இலக்கியம் என்பது மனிதன் தனது சிந்தனைகளையும் எண்ணங்களையும் கற்பனைகளையும் சமூகத்திற்குக் கடத்தப் பயன்படும் ஓர் ஊடகம். சமுதாயத்தின் நிலைப்பாடுகளையும் அதன் பல்வேறு அங்கங்களையும் அதன் நிறுவனங்களையும் அதன் மரபுகளையும் சித்திரிப்பதும் விமர்சனம் செய்வதும் தொன்றுதொட்டு இலக்கியங்களில் பல வடிவங்களில் காணப்பட்டு வருகிறது.

இலக்கியம் என்றும் வெறும் வெட்ட வெளியிலிருந்து பிறப்பதில்லை. குறிப்பிட்ட சமுதாயச் சூழலில்தான் அது பிறக்கிறது. அவ்வாறு தோன்றும் இலக்கியம் ஒரு சமுதாய அமைப்பில் இயங்குகிறது, ஒரு சமுதாயத்தை நோக்கிச் செல்கிறது. ஒரு படைப்பாளியின் சமுதாய நோக்கம், தேவை முதலியன அவனுடைய இலக்கியத்தில் வெளிப்படுகின்றன. காலந்தோறும் அமைந்த பின்புலங்களால் உருவாகிய படைப்புகள் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் ஒவ்வொரு வகையான போக்கில் வளர்ந்தன.

எந்தக் கவிஞனும் தன் கால சகநிலையைப் பிரதிபலிப்பது போலவே, அதனைத் தன் போக்கில் மறுபடைப்புச் செய்யவும் செய்கிறான். ஒரு படைப்பாளன் உருவாவதற்கு ஒரு பின்புலம் காரணமாக அமைவது போல இலக்கியப் படைப்புத் தோன்றுவதற்கும் ஒரு குறிப்பிட்ட பின்புலம் அல்லது சூழல் காரணமாக அமைகிறது. பின்புலம் என்பது படைப்பிற்கும் படைப்பாளனுக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

ஒரு சமுதாயப் பின்புலத்தில் பிறக்கின்ற இலக்கியம் அந்த சமுதாயத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ புலப்படுத்துகின்றது. இங்கே வேதநாயகம் பிள்ளை எழுதிய சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலத்தை ஆய்வதே நோக்கமாகும்.

வேதநாயகம் பிள்ளையின் சர்வ சமய சமசரக் கீர்த்தனைகள்

இசைப்பாட்டு வடிவத்தின் முதிர்ந்த நிலையே கீர்த்தனைப் பாடல்களாகும். கீர்த்தனைப் பாடல்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மூன்று நிலைகளில் அமையப்பெறும். இவற்றை எடுப்பு, தொடுப்பு, படுப்பு என்ற பெயர்களிலும் அழைப்பர். இத்தகைய கீர்த்தனைப் பாடல்களைச் சமரச நோக்கோடு பாடியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆவார். தான் பாடிய இசைப் பாடல்களுக்குச் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்'என்று பெயரிட்டழைத்தார். இதில் 192 கீர்த்தனைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் பெயருக்கு ஏற்ப, கீர்த்தனைப் பாடல்களில் எந்த மதத்தினையும் எந்தக் தெய்வத்தையும் சுட்டாதவாறு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையியல் இசைப்பாடல்களாகப் அமைத்திருப்பது சிறப்பிலும் சிறப்பாகும்.

இவர் 1878-ல் "சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்" என்னும் கீர்த்தனைப் பாடல்களின் தொகுப்பை வெளியிட்டார். இவர் காலத்திற்கு முன்பெல்லாம் கீர்த்தனைகள் என்பது இறைவன் புகழைப் பாடுபவைகளாகும். கீர்த்தனைகள் என்ற சொல்லின் பொருளே இறைவன் கீர்த்தியைச் சொல்வது. ஆனால் இத் தொகுப்பே முதன்முதல் உலகினருக்கு நல்ல நீதியைப் புகட்டவதற்கு என்று எழுந்ததாகும். இவர் உத்தியோக சங்கடம், கோள், லஞ்சம், மகளுக்கும் மகனுக்கும் புத்திமதி, பெண்பார்த்தல், கணவனுக்குக் கீழ்ப்படிதல், மைத்துனன் பரிகாசம் முதலிய பாடுபொருள்களில் கீர்த்தனைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

அரசியல்

சமுதாயத்தில் பலர் கூடி வாழ்வதற்கும், பொருளியல், ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழிவகுக்கிறது. நாட்டின் தன்மை, ஆட்சியின் இயல்பு ஆகியவற்றின் நிலைகளை எடுத்துக் கூறுவது அரசியலேயாகும். அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம் அல்லது கொள்கை. அரசியல் ஒரு சமூகத்துள் வாழும் மக்களின் செயல்களின் நிலையை எடுத்துக்காட்டும்.

19 -ம் நூற்றாண்டு வரையிலான தமிழக அரசியல்

கி.மு 500 முதல் கி.பி 500 வரை தொல்பழங்குடி மரபாக தமிழகம் வளர்ச்சியுற்றது. கி.பி.5 முதல் 9-ம் நூற்றாண்டுகள் வரை நில உரிமையாளரின் கீழ், அவர்கள் சொல்படி வாழும் மக்கள் கொண்ட சமூகமாக புதிய நிலைகள் தோன்றின எனக் கருதப்படுகிறது.. தொல்காப்பிய, சங்க இலக்கிய சமயச் சார்பற்ற மரபு சைவ, வைணவம் ஆட்சிக்கு வந்தபின் மதம் விதித்த மரபாக மாற்றப்படுகிறது. சமண, பௌத்தம் சார்ந்த தமிழகம் வைதிக, பிராமணீய ஆதிக்கத்தை எதிர் கொள்கிறது. 9 முதல் 12 -ம் நூற்றாண்டுகளில் சோழர்களின் பிரமாண்டமான கட்டும் கலை உருபெறுகிறது. தஞ்சைப் பெரியகோவில் அதற்கு எடுத்துக்காட்டு. சாதாரண மக்கள் அரசகுடிக் கோவில், நிலம், மடம் சார்ந்து வாழத்து வருகின்றனர். 12-ம் நூற்றாண்டு முதல் முகலாயர்கள், விஜயநகரப் பேரரசு, நாயக்கர் காலம் தொடங்கி, குட்டி அரசுகள், பாளையக்காரர்கள் என உருவாகி, வட்டாரம் சார்ந்த குறுநில மன்னர்கள் தோன்றிய காலம். விக்டோரிய மகாராணியின் நிர்வாகச் சீர்படுத்தல் நிறுவியதற்குப் பின், இதுவரை இல்லாத எழுத்தறிவைப் பெற்ற குறிப்பிட்ட பகுதி பார்ப்பனர்களும், குறிப்பிட்ட பகுதி பண்டிதர்களும் அரசு வட்டாரத்தில் இடம் பெற்றனர். சித்த வைத்தியர், கணக்குப்பிள்ளை என்ற கிராமப்புற அமைப்பு இருந்தது. 19-ஆம் நூற்றாண்டில் தலைகீழ் மாற்றமாகத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் உருவாகின. பின்னர் கல்விக்கூடங்கள் உருவாகின. அதனைத் தொடர்ந்து கல்விக்கூடங்கள் உருவாக்கப்பட்டு பாடத்திட்டக் குழு ஏற்படுத்தப்பட்டது. புது எழுத்தறிவு முறை ஒடுக்கப்பட்டோருக்கும் சாத்தியமானது. கல்வி எழுத்தறிவு கொடுத்தலோடு கிறிஸ்தவத்துக்கு சமயப் பிரச்சார நோக்கம் இருப்பினும், அவர்கள் அளித்த கல்விமுறை சமூகத்தின் முகத்தையே மாற்றியது.

1840-களில்தான் ஏழைக் குடும்பத்து மாணவர்கள் கல்வி பெறமுடிந்தது. பல்கலைக்கழகங்கள் உருவாக புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன. 'சதி' என்ற உடன்கட்டைக்குத் தடை, பலி கொடுக்கத் தடை என்பதாக மனிதனை மனிதன் மதிக்கும் சட்டங்கள், எல்லோரும் அச்சிடலாம், பத்திரிகை நடத்தலாம் என்பதற்கு சட்டங்கள் உருவாக்கப்பட்டன. எழுத்தறிவு பெற்றவர்களிடையே பத்திரிக்கை, புத்தகம் வாசிப்புப் பழக்கமும், பண்பும் வளர்ந்து பத்திரிக்கைத் துறையாக பரிணமித்தது. சிறுசிறு பகுதிகளில் வாழ்ந்த மனிதர்கள் ஜனநாயம் என்ற புதிய கருத்தாக்கத்துக்கு ஆட்பட்டனர். இப்படியே 40, 50 ஆண்டுகள் கடந்தன. சமூக ஆதிக்க சாதியினர் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று பயின்றனர். ஐரோப்பிய புத்தொளி அறிவின் மரபு மேலோங்கியது. இதை நமது மரபாக வளர்தெடுக்க முயற்சிகளும் தோன்றியதோடு அதற்கான சூழலும் நிலவியது.

வேதநாயகம் பிள்ளை காலத்து அரசியல் நிலை

1639-ல் ஆங்கிலேயர்கள் மதராஸில் (சென்னை) கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவிய பிறகு தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கியது. தமிழ்நாட்டுச் சிற்றரசர்களிடையே நிலவி வந்த சச்சரவுகளைப் பயன்படுத்தி அவர்களைப் பிரித்தாண்டு அவர்களில் மேல் ஆங்கிலேயர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினர். ஆங்கிலேயர் அதிகாரத்தைத் தம் வசப்படுத்திய இந்த காலகட்டத்தில் அவர்களை எதிர்த்துப் போராடிய தமிழ் ஆட்சியாளர்களில் கணிசமானோர் இறந்தனர்.

ஐரோப்பிய நாடுகளின் பாதிரிமார் நமது மொழி, மொழிக் குடும்பம் பற்றி ஆய்வுகளில் தோய்ந்தனர். ஓலைச்சுவடியாக வாசித்தவர்களை லட்சக்கணக்கில் அச்சிட்ட பிரதிகளைப் படிக்க வைப்பவர்களாக மாற்றியது. நமது மதம், மூட நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவைகளில் மாற்றங்கள் நிகழ்ந்தன.

1823-ல் சிதம்பரம் அருகிலுள்ள மருதூரில் பிறந்த இராமலிங்கம் 1858 வரை சென்னையிலும், பின்னர் வடலூரிலும் சென்று 1867-ல் சத்திய தருமச்சாலை எனும் மடத்தை நிறுவினார். அவரது இயக்கம் சைவ மரபு என்று சொல்லப்பட்டாலும், சாதிக்கொடுமையைக் கண்டித்தது. அவரது ''அருட்பெருஞ்சோதி தனிப்பெரும் கருணை'' சைவ மதத்தின் இன்னொரு கட்டமைப்பாக மாறியது.

தென்னாற்காடு மாவட்டத்தில் இராமலிங்கர் பரபரப்பான முறையில் தனது இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்த அதே காலத்தில், தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்தில் அமைதியான முறையில் தனது எழுத்துக்களின் மூலம் சமூக - சீர்திருத்தப் பிரச்சாரம் செய்துவந்தார் வேதநாயகம் பிள்ளை. இராமலிங்கர் பிறப்பால் சைவர், இவரோ கிறிஸ்தவர். இராமலிங்கர் முறையான கல்வி கற்காது இயல்பாய்க் கவிஞர் ஆனவர். இவரோ மேனாட்டுக் கல்வி கற்றவர். அவர் சந்நியாசி, இவரோ சம்சாரி. அதிலும் முன்சீப் (நீதிபதி) என்கிற அரசு உத்யோகஸ்தர். இப்படி இரு வேறு உலகத்தாராயினும் மனித நேயத்திலும், சகோதரத்துவத்திலும் இருவரும் ஒன்றுபட்டு நின்றனர்.

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் 1850 முதல் 1900 வரையிலான அரையாண்டு காலக்கட்டம் மாபெரும் மாறுதல்களுக்குள் கடந்து சென்ற வருடங்களாகும். ஐரோப்பியரின் வரவால் கல்வி முறைகளில் மாறுதல் ஏற்பட்ட காரணத்தின் விளைவாக குறிப்பிட்ட சதவிகித தமிழ் மக்களால் சிறந்த கல்வி முறையினைப் பெறவும் ஏன் ஆங்கில மொழியும் ஆங்கில மொழிவழி வழிக் கல்வி பெறவும் தருணம் அமையப்பெற்றவர்களும் உண்டு. சமுதாயச் செல்வாக்கினாலும் பண பலத்தினாலும் சமயம் சார்ந்த தொண்டர்களின் உதவியினாலும் ஆங்காங்கே குறிப்பிட்ட குறைந்த சதவீத தமிழர்களால் உயர்கல்வி பெறவும் அரசியலில் ஆங்கிலேயருக்கு நிகராக உயர் அதிகாரம் பெறவும் வாய்ப்பும் பெற்றிருந்தனர்.

வேதநாயகரின் காலத்தில் குறிப்பாக மேனாட்டவரே உயர் பதவி வகித்திருந்தும் சில சட்டங்கள் தளர்த்தப்பட்டதால் தமிழர்களுக்கும் உயர்பதவி கிடைக்கப்பெறவே மேனாட்டுக் கல்வியிலும் தமிழ்ப் புலமையும் பெற்ற வேதநாயகம் பிள்ளை முதலில் திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தின் பணிமனையில் நியமிக்கப்பட்டு> பின் கி.பி. 1850-ம் ஆண்டு திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நேர்மையும் திறமையும் மிக்க வேதநாயகர் சட்டங்களின் நுணுக்கங்களையும் சிக்கலான தீர்ப்புகளையும் பொதுமக்கள் அறிய வேண்டும் என உணர்ந்து ஆங்கில மொழியில் இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புகளை 'சித்தாந்த சங்கிரகம்'என்ற பெயரில் 1862-ம்; ஆண்டு தமிழில் மொழிபெயர்த்தார்.

சென்னையில் 1801-ல் தலைமை நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. 1803-ல் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளுக்கு குற்ற விசாரணை அதிகாரம் வழங்கப்பட்டது. நிலம், நிலவரி, நூற்றுக்கணக்கான பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், சாத்திரங்கள்> சூத்திரங்கள் ஆகியவற்றின் கீழ்க் குற்றங்களும் சொத்துரிமை வழக்குகளும் விசாரிக்கப்பட்டு வந்தன.

சர்வ சமய சமரச கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்

வேதநாயகம் பிள்ளை பணியாற்றிய காலத்தில் நீதிபதிகள் பலர் முறைகேடர்களாக நடந்துள்ளனர். இலஞ்சம், ஊழலும் அவர்கள் இடையே நிரம்பி மலிந்து கிடந்துள்ளன. இலஞ்சப் பழக்கத்தை அறவே வெறுத்தவர் அந்த வெறுப்பின் எதிரொலியினாலேயே வெளிவந்த பாடல் வரிகள் இவை:

ஒரு காசாகிலும் வாங்குதல் துரோகம்
ஊர் கொள்ளையடிக்கவே உனக்குத்தியோகம் (ச.ச.ச.கீ- 174-4)

என்று இலஞ்சம் வாங்குவதை வன்மையாகக் கண்டித்து வேதநாயகர் இகழ்ந்தார். நியாதிபதிகளில் சிலர் நீதிமன்றத்துக்குப் போகின்ற நேரம் ஒரே தன்மையில் இருக்காது. ஒருநாள்

மாலையிலும் மறுநாள் நடுப்பகலிலும் வேறோர் நாள் மாலையிலும் செல்வது அவர்கள் வழக்கம். கட்சிக்காரர்கள் அதனால் எந்த நேரத்தில் தாங்கள் நீதிமன்றத்திற்குப் போவது என்று புரியாமல், தெரியாமல் அவதிப்பட்டார்கள். அவர் வருவார் என்ற வழக்காளி காத்திருந்தால் அவரோ கட்சிக்காரர் இல்லாத நேரத்திலே தோன்றி கட்சிக்காரர் ஆஜராகவில்லை என்று வழக்கைத் தள்ளி வந்தார். ஆஜராகுகிறவர்களின் வழக்கையோ விசாரிப்பதில்லை.

இவர் காலத்தில் தமிழ்நாட்டில் மராத்தியரின் சூறையாடலும் சொத்து வரிக்கொடுமையும் பாளையக்காரரின் சுரண்டலும் ஊருக்கு ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற முறைகேடும் நிலவியது. திருச்சி மாவட்ட நீதி மன்றத்திலே குற்ற வழக்குகள் விசாரணை நடக்கும் போது வேதநாயகர் நீதிபதி அருகே அமர்ந்து காசியார் வாக்குக் கொடுப்பது வழக்கமாகும். முஸ்லீம் ஆட்சி நடைபெறும் போது அதே காசியர்கள் நீதி வழங்கிடும் முறை இருந்தது. முன்பு நடந்த முஸ்லீம் ஆட்சிகளின் வழக்கம் போலவே ஆங்கில நீதிபதிகள் அருகே காசியார்கள் அமர்ந்து நியாய வழக்கிலே உதவி செய்வார்கள்.

பல வழக்குகளில் நீதிபதியின் கருத்துக்கு முரணாகக் காசியார் கருத்து இருந்தது. அவற்றை எல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நீதிபதியின் ஒப்புதலுக்கு முன்வைத்தார் வேதநாயகம். இக்காலகட்டத்தில் ஆங்கிலேய நீதிபதிகளின் தவறான குற்றச்சாட்டுகளுக்கும் தீய பெயருக்கும் துன்பத்தின் மேல் துன்பமும் வேலையிழப்பும் நோய்வாய்பட்டும் பொய்யுரைகளுக்கும் இடையில் அவதிப்பட்டுள்ளார். எனவே "நியாயபரிபாலனஞ் செய்ய வரம் வேண்டும்" என்ற தலைப்பில் பாடிய பாடல்களில் சில வரிகள்,

நானே பொதுநீதி தானே செலுத்திட நல்வரம் அருள்கோனே
சகல உயிர்களும் என் தன்னுயிர் போல் பாராட்டிச்
சிட்ட பரிபாலனனெனு முடிசூட்டித்
தீயர்மொழிபுகாமற் செவிவழிபூட்டிக் கொட்டஞ் சேய்துட்டர்
கண்ணில் விரலை விட்டாபடிக்கூட எனப்பெயர் கதறும்படி மாட்டி (*ச.ச.ச.கீ-162*)

தான் நீதிபதியாக இருந்த காலத்தில் பல்வேறு தரப்பட்ட துர்வழக்காளிகளைச் சந்தித்திட, அவர்களைக் குறித்ததாகப் பாடப்பெற்ற பாடல்கள் வரிகள்,

இந்த வழக்குக்கெல்லாம் நாம்தானா - கோர்ட்டில்
வந்தவன் எல்லாம் நமக் கெஜமானா
தந்தை துன்மார்க்கஞ் செய்து கெட்டானால் - பிள்ளை
தாரங்களைத் தெருவில் விட்டானாம்

முந்த அதிகக்கடன் பட்டானாம் - நிலம்
முழுதுந் துர்விநியோகம் இட்டானாம் (*ச.ச.ச.கீ- 163*)

கோட்சொல்லும் உத்தியோகஸ்தரைப் பற்றிய பாடல் வரிகள்>

எரிகிற வீட்டில் பிடுங்குவ துலாபம்
என்று சொல்வார் அந்த வண்ணமே
பெரிய கோட்சொல்லி நம் உத்தியோகத்தைப்
பிடுங்குவதிவர் எண்ணமே (*ச.ச.ச.கீ-167*)

அதிகாரிகளின் அதிகார தர்பார்

அதிகார தர்பார் நடந்த வேதநாயகர் காலத்தில் தயவு தாட்சண்யம் இல்லாமல் ஆட்சியை எதிர்த்து எழுதியவர் இவர் ஒருவர்தான். வரம்பு மீறிய அதிகாரிகளைக் கேலிசெய்து பரிகாசத்துக்குள்ளாக்கினார். குத்தலாகக் கூறி அவர்கள் நேர்மையைத் தூண்டிட முற்பட்டார்.

உத்தியோகஸ்தர்களை குறித்து இவர் எழுதியக் கேலி, கிண்டல், பரியாசங்கள் தமிழிலே மிக உயர்ந்த அங்கதங்கள்.

இந்தியாவில் 1885-ம் ஆண்டு வரை இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றவில்லை. இந்நிலையில் நெறி தவறிய நீதிபதிகளை நையாண்டி செய்தும் கண்டித்தும், எழுதவும் எச்சரிக்கை செய்தவர் நமது வேதநாயகம் பிள்ளை ஒருவரே. எடுத்துக்காட்டாகச் சில பாடலடிகள்,

முரட்டுமார்க்கம் சென்றிழைகிறாய் - அணு
முனையின் உள்ளும் நீ நுழைகிறாய் - இந்த

புரட்டெல்லாம் எங்கே படித்துக் கொண்டனை
பொருளைத் தந்தவன் அருளை மறந்து
பொருளுக்கே உபசாரம் - செய்யும்
மருளர் போல் அற்பப் பொருளை விரும்பி
வான்பரன் உபகாரன் - தன்னை
மறந்தாய் - என்னைத் துறந்தாய் பொன்னைச்
சிறந்தாய் - பன்னை பறந்தாய் (ச.ச.ச.கீ.159)

முடிவுரை

அரசியலின் பயன் அரசியலை நடத்துபவர்களுக்கு அன்று மக்களுக்கே. ஆனால் வேதநாயகர், தன் காலத்தின் ஒழுங்கற்ற அரசியல் நிலையை அறிந்து, சீர்பொருந்த தன் உள்ளக் குமுரலாக மனதில் எழும் சிந்தனைகளைக் இங்ஙனம் கீர்த்தனைப் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளார். சமுதாய வாழ்க்கைக்கு அமைதியைத் தருவதும் அரசியலே என்பது இதன் மூலம் புலனாகிறது.

துணைநூற்பட்டியல்

- மாயூரம் வேதநாயகம் பிள்ளை - சாவ சமய சமரசக் கீர்த்தனைகள்,
- திருமகள் விலாச அச்சகம், சென்னை - 1, 1878.
- கலைமணி. என். வி. புலவர் - மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சிவகாசி புக் பப்ளிகேஷன்ஸ், 160, பெரிய தெரு, திருவல்லிக்கேணி,
- சென்னை - 5. 2009.
- சரளா இராசகோபாலன். முனைவர் - வேதநாயகரும் பெண்மையும்,
- ஒளிப் பதிப்பகம், 63, ரங்காச்சாரி சாலை, சென்னை - 18. 1985.
- கே.கே.பிள்ளை. டாக்டர். - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை- 13, 2009.
- மம்மது. நா - தமிழிசைப் பேரகராதி, இன்னிசை அறக்கட்டளை, மதுரை, 2010.
- சுந்தரம். வீ.ப.கா. முனைவர் - தமிழிசைக் கலைக்களஞ்சியம் (தொகுதி 1-4), பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி, 2006.

மதிப்பிடப்பெற்றது

வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்

யேசுஜியா டிலானி
உதவி விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை
dilanijesuiyah@gmail.com

"இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்
இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டுவாய் .."

எனும் மகாகவி பாரதியின் நாட்டிற்கான கல்வி பற்றிய கவிதையானது, கல்வியின் மீதான விலையேறப்பெற்ற மகத்துவத்தைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது. இத்தகு மனித வாழ்கையையே மாற்றியமைக்கும் "கல்வி" எனும் சொல்லை நாம் சுயாதீனமாகப் பயன்படுத்திய போதிலும் அதனால் கருதப்படுவது யாது என வினாவப்பட்டால் அதற்காக வழங்கக்கூடிய குறித்த விடை ஏதும் கிடையாது. அது ஒரு கருத்துப்பொருளான எண்ணக்கருவாக அமைந்திருப்பதே அதற்கான காரணமாகும். வெறுங்கண்ணால் காணக்கூடிய மற்றொருவருக்கு அது பற்றிய விளக்கக்கூடிய ஒன்றாகிய கூட்டுப்பதத்தைவிட, கருத்துப்பொருளான சொல்லுக்கு வரைவிலக்கணம் கூறுவது இலகுவானதொன்றல்ல. கல்வி என்பதால் கருதப்படுவது யாது எனும் வினாவைக் கல்வித்தத்துவ ஞானியே எழுப்புகின்றான். இதற்கான பற்பல விடைகள் கிடைக்கப்பெறலாம். அவ்வொரு விடையையும் கவனத்திற் கொண்டு அப்பதத்தினால் கருதப்படுவது யாது என ஆய்ந்தறிவது பொருத்தமானதாகும். அந்தவகையில் கல்வி எனும் எண்ணக்கருவானது காலத்திற்குக் காலம் விருத்தியடைவது. இவ்வெண்ணக்கருக்கள் சிலவற்றில் நிலையான அம்சங்கள் இருந்தாலும் சமுதாய காலமாற்றங்களுக்கேற்ப புதுக்கேள்விகள், புதுத்தேவைகள் என்பவற்றிற்கேற்ப அவை மாற்றமடைகின்றன. அதன் காரணமாக கல்வி பற்றிய திட்டமான வரைவிலக்கணம் ஒன்றை முன்வைப்பது கடினமான விடயம் எனலாம். ஆகவே கல்வி தொடர்பான மாற்றமுறுகின்ற எண்ணக்கருவை அக்காலகட்டங்களில் வாழ்க்கை நடாத்திய தத்துவ ஞானிகள், அறிஞர்கள் , ஆசிரியர்கள் மூலமாக நாம் அறிந்து கொள்ள முடியும். அந்தவகையில் கல்வி தொடர்பாக எண்ணக்கருவை பற்பல காலகட்டங்களில் உள்ள வரைவிலக்கணங்கள் கொண்டு ஆராய்வதற்கு ஆதாரமாக கல்வி என்பது யாது, கல்விக்கான சுருக்கமாக வரைவிலக்கணங்கள், அவை மாற்றம் பெறுவதற்கான காரணங்கள் யாவை, கல்வியின் நோக்கங்களுடன் இணைந்த துறைகள் யாவை என்பன பற்றி சுருக்கமாக நோக்குவது வினாவினடத்து முழுவிளக்கத்தை எமக்கு அளிப்பதாக அமையும் எனலாம்.

கல்வி என்ற சொல்லானது *EDUCARE* என்ற லத்தீன் மொழிச்சொல்லில் தோன்றியதாகும். "கல்" எனும் வினையடியோடு "வி" எனும் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து கல்வி என்றாகிறது. இது கல்லுதல் அல்லது அகழ்தல் எனப்பொருள் கொள்ளப்படுகிறது. உள்ளே இருப்பதனை வெளிக்கொண்டு வருதல் எனவும் இதனைக் கூற முடியும். சோக்கிரட்டீஸ் தொடக்கம் ஜோன் டூயி வரையான மேனாட்டு சிந்தனையாளர்களும் யக்ஞவல்லியர் தொடக்கம் மகாத்மா காந்தி வரையிலான கீழைத்தேய சிந்தனையாளர்களும் அவர்களது வாழ்கைத்தத்துவங்களின் அடிப்படையில் கல்வியை வரையறை செய்துள்ளனர். தத்தமது வாழ்கை அனுபவங்களையும், சிந்தனைகளையும், எண்ணக்கருக்களையும் அடிப்படையாகக் கொண்டு இவர்கள் வழங்கியுள்ள வரைவிலக்கணங்களை சுருக்கமாக நோக்க முடியும். கல்வி என்றால் என்ன ? என்ற வினாவிற்கு விடைதேடும் நோக்கில் பல்வேறு அறிஞர்கள் கருத்துகளை கூறியுள்ளனர்.

கல்வி என்பது தனிமனிதனின் வளர்சியாகும் ஆனால் இத்தனித்தன்மை வளர்ப்பதுடன் சமூக ஊழல்களையும் அகற்ற வேண்டும். சமுதாய பொருளாதார வளர்ச்சிக்கு உயிர் நாடியாக காணப்படுவது கல்வியாகும். அத்துடன் மனிதன் இருவிதமான அறிவைக் கொண்டவன் .ஒன்று இயலறிவு மற்றயது அனுபவ அறிவு . "இயலறிவிற்கும் அனுபவ அறிவிற்கும் செம்மையளிக்கும் திட்டவட்டமான ஒழுக்கம் கல்வியாகும்" என பொதுவாக கல்வி வகைப்படுத்தப்படுகின்றது. உலகை ஒன்றாக காண்பதே கல்வி" என தற்கால நெறியிலாளர்களையே வியக்கச் செய்யும் வகையில் ஔவையார் நமக்கு கல்வி பற்றி கூறியுள்ளார் . அத்துடன் "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி" எனக் கொன்றை வேந்தனிலும், "உற்றுழியுங் கைக்கொடுக்கும் கல்வியினூங்கிலைச் சிற்றுயிர்க்குற்ற துணை" என நீதி நெறி விளக்கத்திலும் கல்வியின் பொருள் அமைந்துள்ளது.

- கல்வி என்பது ஏட்டறிவை மட்டும் குறிப்பதன்று. ஒருவர் பெறுகின்ற அனுபவங்கள் கல்வி என்ற செயற்பாட்டில் உள்ளடக்கப்படும் கல்வி என்பது மனிதனுடைய ஆளுமையை வளர்சியடையச் செய்கின்ற செயற்பாடாகும்.
- முழு நிறைவான ஆளுமையை வளர்க்கும் கல்வி என்பது கருவறை முதல் கல்லறை வரை வாழ்நாள் முழுதும் இடம்பெறுகின்ற செயன்முறையாகும்.
- கல்வி என்பது அறிவு விருத்தி, உடல் விருத்தி, உள விருத்தி, அழகியல் விருத்தி, ஆன்மீக விருத்தியை முன்னெடுக்கின்ற செயற்பாடாகும்.
- கல்வி என்பது உள்ளிருக்கும் பல்வேறு ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக்கொணர உதவும் செயன்முறை என்பது கல்வி எனும் சொல்லுக்கு முழுமையை கொடுக்கிறது.
- கல்வி கற்றல் எனும் கருத்தைப் பெற்று வாழ்கையில் கல்வி மூலம் உயருதல் எனும் கருத்தையும் பெறுகின்றது.
- மக்களின் பண்புகளையும் ஆற்றல்களையும் உயர்த்தி வளப்பதன் முலம் மக்களின் ஆளுமை வளர்ச்சிக்கு வழிகோலுவது கல்வியாகும்.
- கல்வி என்பது ஆய்வை பெற்றுக்கொள்வதாகும்
- கல்வி என்பது அறிவை பெற்றுக்கொள்வதாகும்
- புறத்தே இருந்து கொண்டு வரப்பட்டு உட்படுத்திக்கொள்ளப்படும் விடயங்கள் இ நிகழ்வுகள் ஆகியவற்றினூடாக கட்டியெழுப்பப்படும் ஒரு சக்தியாகும்.
- மனித தன்மையினை மனிதர் பெறத்துணையாக விளக்குவது என்று ஆங்கில கவிவாணன் வில்லியம் வோட்ஸ்வர் கூறியுள்ளார்
- "கல்வி, தவறுகண், இசைமை கொடையென சொல்லப்பட்ட பெருமிதம் என்பது நான்கே" என்பது தொல்காப்பியனார் வாக்கு. அதாவது மக்களுக்கு வாழ்கையை கொடுக்கும் நான்கினுள் கல்வியும் ஒன்று என அவர் குறிப்பிட்டுள்ளார்.
- கல்வியானது நுண்மதியாற்றலையும் திறன்களையும் வளர்க்கின்றது. அத்துடன் வாழ்கைக்கு வேண்டிய நற்பண்புகளையும் வளர்க்க வேண்டும். நற்பண்புகளை வளர்ப்பதன் மூலமே வாழ்கையின் குறிக்கோளை கல்வியால் பெற்றுக்கொடுக்க முடியும். வாழ்கைக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. வாழ்கையின் குறிக்கோளை அடைய வழி கல்வியாகும். "கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வியாகும்."

கீழைத்தேய அறிஞர்கள் கூறும் வரைவிலக்கணங்கள்

"தனியாளுக்குத் தேவையான அறிவைக் கொடுப்பதுடன், தனியாளின் உடல், உள, மனவெழுச்சி, சமூக இணக்கம், நடத்தை, ஆளுமை, விழுமியம் என்பவற்றை விருத்தி செய்யும் முகமாக அனுபவத்தை வழங்கி சமூகத்தோடு இயைபுபடுத்தும் செயற்பாடு கல்வியாகும்." - (பொதுவான கருத்து)

1.அரவிந்தர் - ‘‘ஆன்மாவுக்குள் இருக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வர உதவுவதே கல்வி’’

2.மகாத்மா காந்தி - ‘‘பிள்ளையினுள் அடங்கியுள்ள அனைத்து ஆற்றலையும் வெளிக்கொண்டு வருவது கல்வியாகும்’’

‘‘வாழ்க்கைக்காக வாழ்க்கை அனுபவங்கள் ஊடாக முழு வாழ்க்கையிலும் பெறப்படும் செயன்முறையாகும். அல்லது தலை,உள்ளம், கை என்பவற்றை வளர்ச்சியடையச் செய்வதே கல்வி ’’ ஆகும்.

3.சங்கரர் - ‘‘ கல்வி என்பது தன்னை உணர்தலாகும் ’’

4.இரவிந்திரநாத் தாகூர் - ‘‘மாயை நீங்கி உண்மை உலகைக் கண்டறிய உதவுவதே கல்வி’’

5.விவேகானந்தர்- ‘‘மனிதனுள் ஏற்கனவே அமைந்துள்ள அல்லது புதைந்துள்ள தெய்வீகப்பூரணத்துவத்தை வெளிக்கொண்டு வருவதே கல்வி’’

மேலைத்தேய அறிஞர்கள் கூறும் வரைவிலக்கணங்கள்

1.சாக்ரடீஸ் - உறுதியான உடலில் உறுதியான மனதைத் தோற்றுவிப்பதாகும்

2.சேர் பேர்சிலன் - தனித்தன்மையில் பூரண விருத்தியாகும். (ஒருவர் மானிட வாழ்க்கைக்கு அவராலான ஆகக் கூடிய தனித்துவமான பங்களிப்பை வழங்கல்)

3.பிளெட்டோ - கல்வியானது உடலிலும் ஆன்மாவிலும் எல்லா நன்மைகளையும் விருத்தியாக்க வேண்டும். மனிதனது ஆற்றல் முழுவதையும் விருத்தியாக்க வேண்டும்

4.ஜோன் டீயூவி - ஒருவனது சூழலைப் பயன்படுத்த உதவுவதும்இ அவனது பொறுப்புக்களை நிறைவு செய்ய உதவுவதுமான ஆற்றல்களை விருத்தியாக்குவதே கல்வி

5.றெட்டின் - முதியோர், இளையோர் மீது செலுத்தும் செல்வாக்கு (இவ்விருத்தி உடல், அறிவு, அழகியல், சமூகம், ஆத்மீகம் என்பவற்றில் ஏற்படல். வாழ்வின் இறுதி நோக்கம் இறைவனுடன் கலத்தல். இவை சமூக தனிமனித நன்மைக்காகவிருத்தல்)

6.தொம்சன் - ஒரு தனியாளின் வாழ்க்கையில் நடத்தை, சிந்தனை, மனப்பாங்கு போன்றவற்றில் நிரந்தரமாக மாற்றத்தை ஏற்படுத்தும் சூழல் செல்வாக்கு கல்வியாகும்.

7.பெஸ்டலோஜி - இயற்கையாகவும் இசைவாக்கமானதுமான அபிவிருத்திக்கு மனிதனின் உள்ளாற்றலை இட்டுச் செல்லல். (மனிதனிலுள்ள ஆற்றல்களை அபிவிருத்தி செய்து, பிள்ளையின் தன்மைக்கும், திறமைக்குமேற்ப உரிய இடம் வழங்கப்படல் வேண்டும்.)

8.ரூஸோ - இயற்கைக்கு ஏற்ப விருத்தியடையும் செயற்பாடே கல்வி

9.அரிஸ்ரோடில் - மனிதனின் திறமையை, குறிப்பாக அவனுடைய மனதை வளர்க்கின்ற செயற்பாடு கல்வி.

மேற்குறிப்பிட்டவாறு பல்வேறு எண்ணக்கருக்கள் வரைவிலக்கணங்களாக கல்வியில் தோற்றம் பெறலாயிற்று . இவ்வாறான எண்ணக்கருக்கள் பல்வேறு காரணங்களால் மாற்றம் பெறலாயிற்று.

கல்வி தொடர்பான வரைவிலக்கணங்கள் வேறுபடக் காரணங்கள்

கல்வி தொடர்பான விடயப்பரப்புக்கு பல்வேறு அறிஞர்களும் பல்வேறு விதமான கருத்துக்களை முன்வைத்திருப்பதானது ‘ கல்விக்கு வரைவிலக்கணம் கூறுவது மிகவும் சிக்கலான தன்மையுடையது.’ என்ற விடயத்தை கூறுகின்றது. குருடன் யானையைக் கண்ட கதை போல பல்வேறு துரை சார்ந்தவர்களும் (தாவரவியலாளன், மத போதகன், உளவியலாளன், தத்துவஞானி, அரசியலறிஞன், ஆசிரியன், ஓவியன் முதலியோர்) அவர்களது இயல்புகளுக்கேற்ப தமக்கேயுரிய சொந்த வரையரைகளை கல்வியைப் பொறுத்துக் கொண்டுள்ளனர். இவ் வரையறைகளை மக்கள் காலத்திற்கும் சூழலிற்கும் ஏற்ப ஏற்று நடைமுறைப்படுத்தி வந்துள்ளனர். கல்விக்கான பல்வேறு விதமான வரையறைகள் தோன்ற ஏதுவான காரணங்களை கீழ்வருமாறு எடுத்துக்காட்டலாம். இவை கல்விக்கான எண்ணக்கருவில் மாற்றத்தை உருவாக்க தவரவில்லை.

01.மனித ஆளுமையின் சிக்கலான தன்மை

கல்வியின் பிரதான நோக்கம் ஆளுமையை விருத்தி செய்வதாகும். ஒருவர் இவ்வுலகில் பெற்றுக்கொள்கின்ற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பு கல்வி எனப்படும். ஒருவர் பெறுகின்ற கல்வியானது அவரது ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் அடித்தளமாக இருந்து அவரின் ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்ய வழிவகுக்கும். கல்வியைப் பெற்றவர்கள் மக்களிடமிருந்து மாறுபட்டு மற்றவர்களுக்கு வழிகாட்டுகிற சிறப்பு பெற்றவர்களாக இருப்பார்கள்.

மேலும் இவர்கள் நுட்பமாகச் செயற்படுகின்ற கூர்மையான அறிவுடையவராக இருந்து வழிநடாத்துவர். ஆனால் இங்கு கல்வியில் ஆளுமையானது மிகவும் சிக்கலான தன்மையுடையதும் பல்வேறு அம்சங்களைக் கொண்டதுமாகும். எடுத்துக்காட்டாக சமூகம், அறிவு, பௌதீகம், ஒழுக்கம், ஆத்மீகம், அழகியல் முதலியனவாக அவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் சிலவற்றின் மீதான அழுத்தமானது கல்வி பற்றிய பல்வேறு விதமான வரைவிலக்கணங்களுக்கும் வழிவகுக்கின்றது.

மேலும் ஒவ்வொருவருடைய எண்ணக்கருக்களுக்கும், ஆளுமைக்கும், திறன்களுக்கும் பாரிய வேறுபாடு நிலவுவதைக் காணலாம். அது ஒவ்வொருவருடைய வயது மட்டத்தையும் பொருத்து அமைந்திருக்கலாம். எனவே இவ்வாறான நிலையில் கல்விக்கான எண்ணக்கருவும் வேறுபடலாம். இதனாலேயே ஆத்மீகவாதிகள், 'தன்னை உணர்தலே கல்வி' எனவும் வரைவிலக்கணம் கூறியுள்ளனர். எனவே மனிதருடைய ஆளுமையின் சிக்கலான தன்மை கல்விக்கான வரைவிலக்கணங்கள் ஒவ்வொருவருக்கும் வேறுபட காரணமாக உள்ளது.

02.மனித சூழலின் சிக்கலான தன்மை

கல்விக்கான எண்ணக்கரு வேறுபட்டமைக்கான மற்றுமொரு காரணமாக மனித சூழலின் சிக்கலான தன்மையைக் குறிப்பிடலாம். அதாவது, 'ஒரு மனிதன் தனது சூழலுக்கேற்ப இசைவாக்கம் பெறும் செயன்முறையே கல்வி' என்பர். இங்கு சூழலானது ஒவ்வொரு காரணிகளிலும் தங்கியுள்ளதைக் காணலாம். கண்டுபிடிப்புக்கள், தொழிநுட்பச்செறிவு, சுருங்கிப்போன உலகம், பொருளாதார வளர்ச்சி போன்றன நாட்டுக்கு நாடு வேறுபடுவதைக் கானலாம்.

மேலும் சூழல், சமூகம், பௌதீகம், கலாசாரம், பொருளாதாரம் என்று பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சூழலை எடுத்து நோக்கும் போது நாட்டுக்கு நாடு இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது என்பது கல்வியின் எண்ணக்கருவின் மாற்றத்திலும் செல்வாக்கு செலுத்துகின்றதை காண முடியும். உதாரணமாக : இந்தியாவின் கல்வி வரையரையிலிருந்து அமெரிக்காவின் கல்விக்கான வரையறை மாற்றம் பெறுவதைக் குறிப்பிடலாம்.

அவ்வாறே மேற்கூறப்பட்ட பௌதீகம், கலாசாரம், சமூகம், தொழிநுட்பம், பொருளாதாரம் விருத்தியடைந்து காணப்படும் பிரதேசங்களிலும் இவை விருத்தியடையாது காணப்படும் பிரதேசங்களிலும் கல்விக்கான வரையறைகளில் பாரிய வேறுபாடிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ரூஸோ போன்ற அறிஞர்கள் இயற்கைச் சூழலை மையப்படுத்தி வரையரை செய்துள்ளார்.

ஆரம்ப காலத்தில் மக்களுடைய வாழ்க்கை சிக்கலின்றி இலகுவானதாக காணப்பட்டது. ஆனால் தற்போது அவ்வாறில்லை. மனிதவாழ்க்கை பல்வேறு சிக்கல்களினைக் கொண்டிருப்பதனை எம்வாழ்வில் நாம் காணலாம். மேலும் ஆரம்ப காலத்தில் தொழில் வேறு அதற்கான கல்வி வேறு என்று இருக்கவில்லை. தொழிற்கல்விக்கு அழுத்தமும் கொடுக்கப்படவில்லை. மாணவர்களும் அதனைப் பெரிதுபடுத்தி துன்பமடையவும் இல்லை. ஆனால் பொருளாதார சூழல் மாற்றமடைந்த போது கல்விக்கான எண்ணக்கருவிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

இத்தொழிற்கல்வியானது ஆங்கிலேயரின் வருகைக்குப்பின்பே அமுல்படுத்தப்பட்டது. எனவே தற்காலப் பொருளியலாளர்கள் 'பொருளாதார ரீதியில் சமூகத்திற்கான ஆக்கத்திறனுள்ள அங்கத்தவனாக மனிதனை மாற்றும் செயன்முறையே கல்வி' எனக் கூறுகின்றனர். எனவே மனித சூழலின் சிக்ககலான தன்மையும் கல்வியின் எண்ணக்கருவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதைக் காணலாம்.

03.பல்வேறு தத்துவங்கள்

கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தும் மற்றுமொரு காரணியாக அறிஞர்களின் பல்வேறு தத்துவங்கள் விளங்குகின்றது. வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்த சில அறிஞர்கள் தமது வாழ்வில் கண்ட அனுபவங்கள், சிந்தனைகள், நிகழ்வுகள், சம்பவங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கல்விக்கான வரைவிலக்கணங்களை கூறியுள்ளனர். இதில் நமது முன்னோர்கள், பெரியோர்கள் மற்றும் அறிஞர்களின் வாழ்வினில் இடம்பெற முக்கியமான சில நிகழ்வுகளைக் கொண்டு வரையறை அமைந்திருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக வாழ்க்கையில் நிலையாமையை ஆராய்ந்த புத்தர் 'ஆசையே துக்கத்தின் காரணம்' எனக் கூறுகிறார்.

புத்தர் வாழ்க்கையை வாழ்ந்த பிறகு அவ்வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து நிலையாமையை அறிந்ததனாலேயே அவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறுவதாவது ஆசையைத் துறத்தலே துக்கம் நீங்குவதற்கான வழி இதுவே பரிநிர்வாணத்துக்கான செயற்பாடே கல்வியாக வேண்டும்.' என்று அவருடைய தத்துவக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

மேலும் முன்னைய பாரம்பரியர், சான்றோர்கள் வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து அறம், பொருள், இன்பம், வீடடைதல் போன்றவற்றுக்கான செயன்முறையே கல்வி என்று கூறினர். இவர்கள் திருவள்ளுவர் கூறிய கருத்துக்களையே முன்வைத்துள்ளனர். எனவே திருவள்ளுவரையும் ஒரு தத்துவ ஞானியாகக் கொள்ளலாம். அவர் திருக்குறளில் கற்றாங் கொழுகுதலே கல்வி என்று கல்வி பற்றி கூறியுள்ளார்.

இவ்வாறு பல்வேறுபட்ட தத்துவக்கருத்துக்கள் கல்வியின் வரையரையை மாற்றியமைப்பதில் செல்வாக்கு செலுத்தியமையால் கல்விக்கான வரைவிலக்கணமும் ஒவ்வொரு தத்துவ ஞானிகளின் கருத்துக்களுக்குமேற்ப வேறுபடுகின்றது.

04.கல்விக்கோட்பாடுகளும் அவற்றின் பிரயோகங்களும்

கல்வியின் கோட்பாடுகளும் கல்விக்கான வரைவிலக்கணத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது. சில கல்விக் கோட்பாடுகளும் அவற்றின் பிரயோகங்களும் கால, சூழல்களுக்கேட்ப மாற்றமடைவதனால் கல்வியின் வரைவிலக்கணமும் மாறுபட்டு காணப்படுகின்றது. இக்கல்விக் கோட்பாட்டில் உலவியல் கோட்பாடுகளும் காணப்பட்டன. அதாவது பல்வேறுபட்ட உளவியலாளர்கள் மாணவர்களின் உள்ளத்தை ஆராய்ந்து சில கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆரம்பகால உளவியலாளர்கள் பிள்ளையின் மனம் தெளிவான கரும்பலகை, அதன் மீது எதனையும் அழுதலாம். என்றும் பிள்ளையின் மனம் களிமண் போன்றது அதனைப் பயன்படுத்தி எவ்வாறான வடிவத்தையும் அமைக்கலாம் என்று சில உளவியலாளர்கள் கருதினர்.

மேலும் சிலர் குழந்தையின் மனம் வெற்றுக்குடம் போன்றது அதில்அறிவை அள்ளி ஊற்றி நிறைக்கலாம் எனக் கருதினர். வேறு சிலர் மனப்பாடம் செய்வித்தலே கல்வி என்றும் தண்டனையே கல்விக்கு வழி என்றும் அடியாத மாடு படியாது போன்று பல்வேறு பொருட்களுக்கு ஒப்பிட்டு கூறியிருப்பதால் அறிஞர்களிடையே சில கருத்து வேறுபாடுகள் நிறைந்திருப்பதைக் காணலாம். எனவே இதுவும் கல்வி என்னும் எண்ணக்கரு வேறுபடக் காரணமாகும்.

மேலும் பின் வந்த கல்விக்கோட்பாடுகள் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் நவீன கல்வியின் வரையறைக்கு வழி செய்தமையும் குறிப்பிடத்தக்கது. அவற்றின் படி வாழ்வாங்கு வாழ்வதற்கான செயற்பாடே கல்வி நல்ல பிரஜைகளை உருவாக்குவதே கல்வி,அறிவு, திறன்,மனப்பாங்குகளில் நிரந்தர மாற்றம் தருவதே கல்வி போன்ற வரைவிலக்கணங்கள் தோற்றம் பெற்றன. இதனால் சட்டங்களிலும் கல்வியை கட்டாயமாகக் கொண்டு வரும் நிலை ஏற்பட்டு 0 - 14 வயது வரை கல்வி கட்டாயமாக்கப்பட்டது. இது இலங்கை இந்தியாநாடுகளில் பிரயோகிக்கப்பதுகின்றது. எனவே கல்விக்கோட்பாடுகளும் அவற்றின் பிரயோகங்களும் கல்விக்கான வரைவிலக்கணத்தில் வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய கல்விக்கான பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுவதோடு அதனை அடியொற்றி பல்வேறு துறைகளுடன் தொடர்புபட்டு முழுமையடைந்து காணப்படுகின்றது. அவையாவன : சூழ்நிலையும் கல்வியும், சமூக வாழ்கையும் கல்வியும், பண்டைய காலமும் கல்வியும், கல்வியும் தனியாளும், சமூகமும், கல்வியில் சமூக நோக்கம், கல்வியில் அறிவு நோக்கம், கல்வியில் ஒழுக்க நோக்கம், கல்வியில் சமய நோக்கம்,கல்வியில் தொழில் நோக்கம், கல்வியில் சர்வதிகார நோக்கம் போன்றவற்றை வகைகளாக குறிப்பிட முடியும்.

மேற்காட்டப்பட்ட விளக்கங்கள் கல்வின் வரைவிலக்கணத்திற்கும், அதனை அடியொற்றி கட்டமைக்கப்படுகின்ற விடயங்களையும் கொண்டதாக அமையப்பெற்றது. இந்தவகையில் முன்னரே சுருக்கமாக காட்டப்பட்ட வரைவிலக்கணங்களில் வெ;வேறு காலகட்டத்திற்கு பொருத்தமான ஐந்து கல்வித்தத்துவஞானிகளை அடிப்படையாக கொண்டு அவர்களது கல்வி வரைவிலக்கணங்களை அடிப்படையாக கொண்டு கல்வி பற்றிய எண்ணக்கருக்களை விரிவாக நோக்குவோம்.

சாக்ரட்டீஸின் காலப்பகுதியில் எழுந்த கல்வி எண்ணக்கருக்கள்

"தன்னைப்பற்றிய விளக்கத்தை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அறிவை வழங்கும் செய்முறையே கல்வியாகும்"

"எனக்குத் தெரிந்திருப்பதெல்லாம் எனக்கு எதுவுமே தெரியாது என்பதுதான். எனது அறியாமை அறிந்து கொள்வதற்கான ஞானம் எனக்குண்டு . நான் ஞானத்தை விரும்பும் ஒரு ஒரு தனியாள் ஆவேன்" என்று தனது கருத்தை கல்வி பற்றி கூறிப்பிடுகின்றார். அவரது இந்த வரைவிலக்கணமானது அவரது காலத்தில் இருந்து தற்போது வரை முக்கியமானதாக காணப்படுகிறது. கல்வி எனும் எண்ணக்கருவானது அவரது வரைவிலக்கணத்தில் செல்வாக்கு செலுத்திய நிலையினை அவரது காலகட்டத்தில் உள்ள வாழ்கை, சிந்தனைகள், செயற்பாடுகள் மூலமாக நாம் ஒவ்வொரு விடயத்திலும் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

சாக்ரட்டீஸ் உலகின் முதற்தரமான தலைசிறந்த ஆசிரியர் என்ற பெருமைக்குரியவர். அவரது வினாவிடை முறையும் , உரையாடல் முறையும் காலத்தால் அழியாத கற்பித்தல் அணுகுமுறையாக விளங்குகின்றது. அவர் கல்வி பற்றி ஒரு சமயம் தனது மாணாக்கரோடு உரையாடும் போது "எனது தாய் குழந்தை நலம் பேணும் மருத்துவமாது. எனது தாயைப்போலவே எனது கவனம் முழுவதுமே மாணவர் மனதில் கருக்கொண்டிருக்கும் அனைத்தையும் சுகப்பிரசவமாக வெளிக்கொணர்வதிலேயே கவனம் செலுத்துகின்றது". என்றார். கல்வியின் உண்மை நோக்கை, கற்பித்தலின் நுட்பத்தை இக்கருத்து பிரதிபலிக்கின்றது. ஆசிரியர் பற்றி சாக்ரட்டீஸ் கூறும்போது "ஆசிரியர் பொருளுக்காக தம் அறிவை விற்கக்கூடாது. ஏவர் பணம் கொடுத்துக்கேட்பினும் அறிவை விற்பவர் ஞான விளக்குகள் அல்லர். பொருளின் பொருட்டு அறிவை விற்பவர் அறிவுப் பரத்தையர்" என்று குறிப்பிட்டார். இக்கருத்தும் அவரது கல்வியிடைய எண்ணக்கருவை அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியது.

சாக்ரட்டீஸின் மெய்யியல் சிந்தனைகள் அவரது உரையாடல்கள் மூலம் வெளிவந்தன. ஒரு சிறந்த கல்வியூட்டும் அணுகுமுறையாகவே இந்த உரையாடல் விளங்கியது. "ஒவ்வொரு புதிய விடயங்களை அறியும் போது எனது அறியாமையே எனக்குப்புலனாகிறது. எனக்கு எதுவுமே தெரியாது என்ற சிந்தனையே அறிவைப்பெற உந்துதலாக அமையுமென அவர் எண்ணினார்." இக்கருத்து முன்னரே கூறிய வரைவிலக்கணத்தின் நிலைப்பாட்டை எமக்கு காட்டியது. இக்கருத்து இன்றைய நிலைக்கும் பொருந்துவதாக அமைகிறது. அதாவது தற்போதய மாணவர் மையக்கற்றலில் தேடியறிந்து புதியவற்றை உள்வாங்கவும் செயற்பட்டு கற்கவும் மேலும் புதியவிடயங்களை தேடவும் ஆதாரமாக அமைகிறது.

சாக்ரட்டீஸின் சிந்தனைகள் எதுவும் எழுத்து வடிவில் இல்லை . ஆனால் அவரது கருத்துக்கள் யாவும் பிளெட்டோ தனது உரையாடல் நூல்களில் விரிவுபட தொகுத்துத் தந்துள்ளார். பிளெட்டோவின் சிந்தனைகள் சோக்கிரட்டீஸின் கருத்துக்களின் விரிவான விளக்கமே என்று குறிப்பிடுவர். ஆனால் பிளெட்டோ சில இடங்களில் முரண்பாடான கருத்துக்களையும் முன் வைத்துள்ளார் என்பது பிளெட்டோவின் சிந்தனைகள் சாக்ரட்டீஸின் சிந்தனைகளில் இருந்து வேறுபட்டு புதிய கருத்துகளை வெளியிட்டதன் விளைவே. "மக்கள் உண்மையென்று கருதும் கொள்கைக்காக உயிரைத்தியாகம் செய்தல் வேண்டும்" என்ற கருத்து தலைசிறந்த கல்வி எண்ணமாகும். கல்வி இத்தகையதோர் மனஒழுக்கத்தை வளர்ப்பதாக இருக்க வேண்டும். இதனால் சாக்ரட்டீஸ் ஒழுக்க மெய்யியலின் தந்தை எனக் கொள்ளப்படுகிறார். மனிதச் செயலின் நோக்கத்தை ஒழுக்கமே தீர்மானிக்கிறது என்று கருதினார். இத்தகைய கல்வி நோக்கமானது பாடசாலைகளில் ஒழுக்கத்தை வலியுறுத்தி மாணவர்களை ஒவ்வொரு விடயங்களின் ஊடாகவும் கட்டுப்பாட்டுப்பாட்டிற்குள் கொண்டுசெல்லவும் அவற்றிற்கு ஏற்ப பாடசாலையில் பல்வேறு ஆளணியினர் நியமிக்கப்பட்டு இருப்பதையும் காணலாம்.

சாக்ரட்டீஸிற்கு எழுபதாவது வயதில் ஏதென்ஸ் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. அவர் தப்பிப்பதற்கு வழிகள் பல இருந்தும் "எனது தாய்நாடு எனக்கு அளித்த தண்டனையை மறந்து நான் உயிருடன் வாழ்தல் எனது தாய்நாட்டிற்கே களங்கம் தருவதாகும் எனக் கூறி மறுத்தார். அவரது மரணவாசகம் " புதைக்கப்படுவது எனது உடல் அன்றி எனது சிந்தனைகள் அன்று" என்று கூறினார். சிந்தனைக்கு முக்கியமளித்தார். இத்தகைய நிலையானது தற்காலக் கல்வி முறையில் முக்கியமாக உள்ளது எனலாம். சிந்தனையைக் கிளறி மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் கல்விச் செயற்பாட்டில் வழிநடத்தப்படுவது இவரது காலகட்டத்தை நமக்குக் கண்முன் காட்டுகிறது.

உண்மை என்பதே அறிவுக்குச் சாக்ரட்டீஸ் கண்ட பொருள் உண்மை என்பது உள்ளுணர்வாகப் பெருகும்போது அறிவு தன்னை அறியும் அறிவாக அமைகிறது. வாழ்க்கை என்பது மனட்சாட்சி அடிப்படையிலானது. ஒவ்வொருவனும் தனது மனட்சாட்சிக்குத் தன்னைத்தானே உண்மையானவன் என்பது புலப்பட வேண்டும். "தன்னையறிவதன் மூலமே மக்களாட்சி மலர்கிறது." கல்வியே கல்வியினால் விளையும் அறிவே நல்லாட்சிக்கு இலக்கணமாக அமைய வேண்டும் என்பது இவரது கருத்து. இக்கருத்து இன்றைக்கும் பொருத்தமாகும். சுய விளக்கத்தை போல வாழ்கைக்கு பொருத்தமான வேறு விடயங்கள் இல்லையென்றே கூறலாம். தனது ஆற்றல், குறைபாடு, தான் செய்வது சரியா, தவறா என்பதனை புரிந்து கொள்வதைப்போல முக்கியமானது மாவர்களிடத்தில் வேறொன்றுமில்லை.

அறிவினால் ஆகும் இன்பமே மேலான இன்பம். நடைமுறைக்கு ஏற்ற கருத்துக்களை வேண்டும். கருத்தியல் என்பது சாதனைக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். அறிவும் உண்மையும் நிரம்பிய சமூதாயமொன்றை இவர் தனது உயர் சிந்தனையாகக் கொண்டார். சாக்ரட்டீஸ்(கி.மு.469-399) ஏறக்குறைய 70 ஆண்டுகள் வாழ்ந்த இவர் 50 ஆண்டுகளிற்கு மேலாக ஏதென்ஸ் நகர வீதிகளிலும் பூங்காக்களிலும் தன் வாழ்நாளை உரையாடிய வண்ணமே களித்தார். நூல்கள் எழுதவுமில்லை "எனது சிந்தனை ஏட்டில் எழுதப்படாதது" என்றார். உண்மை தேடல் முறை, மனித சமூகத்தில் உண்மையை நோக்கி முகப்படுத்தும் சமூகச் செயற்பாடு என நம்பினார். அவரது ஆழ்ந்த உண்மையின் தன்மை சோக்கிரட்டீஸிற்கு முற்பட்ட காலம் - பிற்பட்ட காலம் என நோக்க வைத்தது. கல்வி முறையில் உரையாடல் முறை என்பது சோக்கிரட்டீஸ் முறை என குறிப்பிட வைத்தது. வினாக்களை அணுகி விடையை அறியும் இத்தகைய முறை தற்போது அனைவராலும் பின்பற்றப்படுகிறது.

இவ்வாறு சாக்ரட்டீஸின் கல்வி தொடர்பான எண்ணக்கருக்கள் அவரது வாழ்க்கைமுறை, செயற்பாடுகள், மக்களுடன் தொடர்புபட்ட நிலைமை அவர் கூறிய கருத்துக்கள் போன்ற

பலவற்றின் மூலமாக அறிந்து கொள்ள முடியும். இவ்வாறான அனைத்தையும் ஒன்றிணைத்ததாக "தன்னைப்பற்றி விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அறிவை வழங்கும் செயன்முறையே கல்வியாகும்" என்ற வரைவிலக்கணம் காட்டி நிற்கிறது. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது உலகினில் பிறந்த மனிதன் கல்வியினால் மட்டுமே தன்னையறிந்து கொள்கின்றான். தாயின் வயிற்றிலிருந்து கற்க ஆரம்பிக்கும் குழந்தை சூழலில் வளரும் போது அதற்கு சரியான கல்வி வழங்கப்பட்டு பாடசாலை, பல்கலைக்கழகம் என்று சென்று தனது இருத்தலை தக்கவைத்து நாட்டிற்கு சிறந்த பிரஜையாகிவிடுகிறது. ஆனால் கல்வியை சூழலில் பெறாத பிள்ளை வாழ்கையை கொண்டு செல்லும் நிலையறியாது ஒழுக்கரீதியாக பின்னடைவை ஏற்று தானும் தன்னையறியாது தன் மூலமாக நாட்டின் எதிர்காலத்தை பாழாக்கி விடுகிறது. தன்னையறிவதே கல்வி என்ற சோக்கிரட்டிஸ் பெருந்தகையின் கல்விக்கான வரைவிலக்கணம் அன்றும், இன்றும் எமது வாழ்வை வழிநடத்திச் செல்வதற்கு உறுதுணையாக அமைகின்றது என்றால் ஐயமில்லை.

ரூசோவின் காலப்பகுதியில் எழுந்த கல்வி தொடர்பான எண்ணக்கருக்கள் (1722-1778)

"பிள்ளைக்கு கல்வியை அவனது ஆற்றல்கள், தேவைகள், விருப்பங்கள் என்பவற்றிற்கேற்பப் பெற்றுக் கொடுக்க வேண்டும்."

"மனிதன் சுதந்திரமாக பிறக்கின்றான். ஆனால் எங்கும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறான். மனிதன் இயற்கையில் நல்லவனாகப் பிறக்கின்றான். ஆனால் கெடுக்கப்பட்ட சூழலின் தாக்கத்தினால் தீயவனாகின்றான். சூழலின் பிடியிலிருந்து மனிதனை மீட்பதாகவே கல்வி அமைய வேண்டும் என்றார்." இவரது இத்தகைய வரைவிலக்கணங்களானது அவரது காலகட்டத்தில் இருந்த கல்வி பற்றிய எண்ணக்கருவை எமக்கு தெளிவுபடுத்துகின்றது. பிள்ளையை மையமாகக் கொண்டே கல்வியானது கட்டமைக்கப்பட வேண்டும் என்றும் கல்வியை வழங்குவதற்கு ஏற்ற சூழலை அமைக்கவேண்டும் என்றும், சூழலின் எதிர்மறையான தாக்கங்களில் இருந்து பிள்ளையைப் பாதுகாப்பதே இவரது கல்வி பற்றிய வரைவிலக்கணத்தின் மையப்பொருளாக காணப்பட்டது. மேலும் கல்வி பற்றிய எண்ணக்கருவானது வரைவிலக்கணத்தில் செல்வாக்கு செலுத்திய நிலையினை கல்விக்கு அவர் கூறிய கருத்துக்கள் கல்வியை வகைப்படுத்திய வகைப்பாடுகள் மூலமாக அறிந்து கொள்ளலாம். பழையதை அழிக்கப் பிறந்தவர் வால்டர். ஆனால் புதுமையை ஆக்கப்பிறந்தவர் ஜீன் ஜக் ரூசோ என றோமன் றோலன்ட் என்ற பேரறிஞர் குறிப்பிடுகிறார். அத்தகையளவில் இவரது கல்விக்கான தன்மை காணப்பட்டது. தற்காலத்தில் பாடசாலையில் பிள்ளையை மையமாக கொண்டு கல்வியானது கட்டமைக்கப்பட்டுள்ளது இவரது எண்ணக்கருவின் தார்ப்பரியத்தை காட்டுகிறது. அத்துடன் பாடசாலையில் மாணவணையை மையப்படுத்தி பல்வேறு செயற்பாடுகள் முன் பள்ளி தொடங்கி உயர் கல்வி வரை உலகம் முழுவதும் செயற்படுத்தப்படுவதை நாம் காணமுடிகிறது. இத்தகைய நிலைப்பாடு முன்னரே கூறிய அவரது வரைவிலக்கணம் வாயிலாக அறிய முடிகிறது.

ரூசோ இயற்கை வாதத்தின் முன்னோடியாகக் காணப்பட்டார். இவருடைய கருத்தின்படி ஒழுக்கக் கல்வியை போதனையாக மட்டுமன்றி அனுபவமாக்கவும் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். ஒழுக்கக் கல்வி இயற்கையான செயற்பாடுகளாக இருக்குமானால் அதுவே மாணவர்களுக்கு இலகுவில் ஒழுக்க அனுபவமாக்கப்படும் என்கிறார்.

இயற்கை தான் குழந்தையின் முதல் ஆசிரியர். இயற்கை தான் குழந்தைக்கு முதலில் கற்றலை ஏற்படுத்துகின்றது. இயற்கைக்குப் பிறகுதான் தாய், தந்தை, குரு எல்லாம். ஒவ்வொரு குழந்தையும் இயற்கையின்படி வளர அனுமதிக்கப்பட வேண்டும் என ஆசிரியர்களுக்கு வலியுறுத்துகின்றார். இத்தகைய நிலைப்பாடும் இயற்கை - கல்வி என்று மையப்படுத்திய வரைவிலக்கணம் சுட்டிக் காட்டி நிற்கின்றது.

பிள்ளைக்குத் தேவைக்கு அதிகமாகவோ அல்லது முரணாகவோ மேலதிக கல்வியைத் திணிக்கக் கூடாது என ரூசோ குறிப்பிடுகின்றார். அத்தோடு பிள்ளைகள் இயற்கையோடு

இணைந்து அதனை அவதானித்துக் கற்க வேண்டும் எனவும் குழந்தைகளின் தேவைகளுக்கேற்பவே கற்றல் இடம்பெற வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். "குழந்தை பிறப்பின்போதே மாணவனாகி விடுகின்றது இயற்கையால்" என்பது ரூசோவின் கருத்தாகும். இத்தகைய நிலையினை தற்போது முன்பள்ளி மாணவர்களது கற்றல் செயற்பாட்டில் அதிகளவு நோக்க முடிகிறது. அதாவது இயற்கையுடன் ஒன்றிக்கும் வகையில் பல்வேறு மூலைகள் வகுப்பறையில் காணப்பட்டு மாணவர்களிற்கு இயற்கையூடாக கற்றல் இடம் பெறுகிறது. இத்தகைய நிலையும் கல்வி பற்றிய அக்காலத்தில் இருந்த எண்ணக்கருவை வரைவிலக்கணம் வாயிலாக தற்போதும் புடமிட்டு காட்டுகிறது. பின்வரும் ஒவ்வாரு வகைப்பாடுகளும் முன்னரே கூறிய கல்வி பற்றிய எண்ணக்கருக்களை விளக்குகின்றது.

ரூசோவின் நவீன கல்விக் கருத்துக்கள்

1.குழந்தையை சமூகத்திற்காகப் பலியிடக் கூடாது.

2.தனியாளின் விருப்பங்கள் பிரதான அம்சத்தினை விட மேலானதாகக் கருதப்பட வேண்டும்.

3.கல்வி பிள்ளையின் தேவைக்கேற்ப இயைபாக்கம் பெறவேண்டும்

4.சகல கல்விச் செயன்முறைக்கும் பிள்ளையே மையம்.

5.கல்வி நுட்பங்கள் பிள்ளையின் இயற்கைக்கும், வளர்ச்சிக்குமேற்ப தீர்மானிக்கப்பட வேண்டும்.

6.கல்வி என்பது இயற்கை விதியைக் கண்டறிதல்.

7.ஒழுக்கத்தினைப் போதிப்பதனை விட அதை அனுபவமாக்க வேண்டும்.

8.நூல்களில் அதிகம் தங்கியிருப்பது அறிவு விருத்திக்குத் தடையாகும்.

9.மனிதனை எல்லாவகையான செயற்கையிலிருந்தும் இயற்கைக்குத் திருப்ப வேண்டும்.

10.ஒவ்வொரு பிள்ளையும் தனது உள்ளத்தை விருத்தியாக்க அனுமதிக்கப்படல் வேண்டும்.

ஆசிரியர் தொடர்பாக ரூசோ முன்வைக்கும் கருத்துக்கள்

'ஆசிரியர்கள் ஞானவிளக்குகள்' என்ற சாக்ரட்டீஸின் கருத்தினைத் தழுவியே இவருடைய கருத்துக்களும் காணப்படுகின்றன.

1.ஆசிரியர்கள் போதனையிலும், சாதனையிலும் மற்றவருக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்.

2.நிறைந்த ஞானமுள்ளவராகக் காணப்பட வேண்டும்.

3.சமூக ஊழல்களை அகற்றும் ஆற்றல் கொண்டவராகக் காணப்பட வேண்டும்.

4.கடமைகளை உணர்ந்து குழந்தைகள் செய்யும் தவறகளை தாமே பொறுப்பேற்கும் தன்மை இருக்க வேண்டும்.

5.மன்னுயிர்த் துன்பங்களை தன்னுயிர் துன்பங்களாக மதிப்பவராகவும், கருணையுள்ளம் கொண்டவர்களாகவும், துன்பம் துடைக்கும் தூய உள்ளம் கொண்டவர்களாகவும் இருந்து குழந்தையிடம் நற்பண்புகளை வளர்க்க வேண்டும்.

6.அடக்குமுறையாலன்றி அன்பால் குழந்தைகளை ஆட்கொள்ள வேண்டும்.

ரூசோவின் பெண்கல்வி பற்றிய இன்றைய நிலைப்பாடு

1.ஆணுக்குப் பணிவிடை செய்து அன்பு செலுத்தும் குடும்பத்தலைவியே அவள்(பெண்) ஆண்களுக்குரிய கல்வியோ, உயர் கல்வியோ பெண்ணுக்குத் தேவையில்லை.

2.நன்மைகளைப் பெற்றெடுக்கக் கூடிய உடல் நலம் தரும் உடற்பயிற்சியும்இ கலையறிவுமே அவளுக்குத்தேவை.

3.ஆணின் உள்ளத்தைப் புரிந்து வாழ்பவளாக விளங்க உதவும் அறிவு மட்டும் போதுமானது.

என்பது தொடர்பாகக் கூறினாலும் பெண்களிடம் அறனும் அறிவும் வளர்க்கப்பட வேண்டும் உயரிய பண்புகளை அவர்கள் அடைய வேண்டும் அவர்களது கருத்துக்கள் மதிக்கப்பட வேண்டும் அவர்கள் பெறும் கல்வியானது இறுதி நாள் வரை பயனளிக்கப்படுவதாக இருக்க வேண்டும். எனவும் கருத்துரைத்திருந்தார்.

எவ்வாறாகக் காணப்பட்டாலும் பெண்கள் ஆண்களுக்காகவே படைக்கப்பட்டனர் என்பதும் அவர்களுக்கு உயர்கல்வி தேவையில்லை என்பதும் இன்றைய பெண் விடுதலை விரும்பிகளினால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையவில்லை. ஆனால் ரூசோ இவ்வாறு கருத்துரைப்பதற்குக் காரணம் குழந்தைகளின் நல்ல சிறப்பான வளர்ச்சிக்கும் அன்பால் கணவளுக்குப் பணிவிடை செய்ய விரும்பும் துணைவியின் முக்கியம் பற்றிய நல்ல நோக்கத்தினாலேயே ஆகும்.

ரூசோவும் சமயக் கல்வியும்

மதபீடங்களின் மமதயைக் கண்டித்தார். ரூசோ மதம் எனும் போர்வையில் ஏற்படும் மாசுக்களைக் கண்டித்தாரே தவிர சமயம் தேவையில்லை எனக்கூறவில்லை.

சமயமே மனித வாழ்வின் ஒழுக்க நெறிக்கு வழிவகுக்கும் எனவும் கூறினார். எனவே சமய உணர்வுகளைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கொடுப்பது நல்லது என்கின்றார். இதன் மூலம் அவர் சமயத்தினை ஆதரிப்பவராகவே விளங்குகிறார்.

ரூசோவும் கலைத்திட்டமும்

<u>முதலாம் நிலை 1-5 வயது</u>

உடலாலும், உள்ளத்தாலும் மென்மையான குழந்தைக்கு இயற்கையான வீட்டுச் சூழலே கல்விக்குரிய சூழலாகும். குழந்தைகளின் விருப்புக்களுக்கிணங்கவும் எதிர்காலக் கல்வியின் முன்னாயத்த செயற்பாடாக இருக்க வேண்டும்.

<u>இரண்டாம் நிலை 5-12 வயது</u>

புலன்களின் வளர்ச்சி அவசியம். புத்தகக் கல்வி தேவையில்லை. உணர்வுகளை விருத்தியாக்க வேண்டும். உ-ம் தீர்வு ஒன்றினைக் காணச் செய்தல்.

எல்லாக் கற்றலும் விளையாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுவது சிறப்பானது. மனனம் செய்யும் முறைகள் பயன்படுத்துவது நீக்கப்பட வேண்டும்.

<u>மூன்றாம் நிலை 12-15 வயது</u>

ஆராயும் மனப்பான்மை கொண்ட பருவம் என்பதனால் பிரச்சினைகளைக் கொடுத்து அவற்றினைத் தீர்ப்பதற்கான ஆற்றலினை வளர்க்க வேண்டும்.

நூல்களின் வாசிப்பு, கணிதம்,கைப்பணி, நுண்கலை ஆகிவற்றினைக் கற்பிக்கலாம். அறிவுக்கான ஆர்வமே இங்கு தூண்டப்பட வேண்டும்.

<u>நான்காம் நிலை 15-20 வயது</u>

கட்டிளமைப் பருவம் என்பதால் சமூகத்தோடு இணைந்து உறவாடக்கூடிய சமூகத்தினை விளங்கிக் கொள்ளக் கூடிய பாடங்கள் புகட்டப்பட வேண்டும். உ-ம் சமூகவியல், பொருளியல், வரலாறு, சமயம்

<u>ஐந்தாம் நிலை 20 வயதுக்கு மேல்</u>

சமூக உறுப்பினனாக மாறி உயர்வடையும் பருவம் என்பதனால் சமுதாயத்தினை உருவாக்கும் தொழில் சார் பாடங்கள் புகட்டப்பட வேண்டும்.

மேற்காட்டப்பட்ட ரூசோவினுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் கல்வியில் அவை செல்வாக்கு செலுத்திய நிலைகளும் அக்காலத்தில் காணப்பட்ட கல்வி பற்றிய எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டேயாகும். அவை பிள்ளையை மையமாகக் கொண்டும், இயற்கைக்கு ஏற்ப சீரிய விதத்தில் கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும் இயற்கை அதற்கு ஏற்றதாக காணப்பட

வேண்டும் என்றும் காட்டியது. இத்தகையவற்றை அன்றும் இன்றும் வலியுறுத்துவதாக ரூசோவினுடைய கல்வி பற்றிய வரைவிலக்கணம் அமைந்துள்ளது.

கல்வியில் ஜோன்டியூவியின் கல்வி பற்றிய எண்ணக்கருக்கள்(1859-1952)

> "கல்வி வாழும் செயன்முறையே தவிர எதிர்காலத்தில் வாழ்க்கைக்கு ஆயத்தமாக்குவதன்று"
>
> "கல்வி என்பது அனுபவங்களை ஒழுங்கமைப்பதும், மீளமைப்பதுமாகும்"
>
> "உயிர்ப்பற்ற - செயற்படாத பிள்ளை தனியே கருத்துக்களை கிரகித்துக் கொள்பவனேயாவான். உயிர்ப்பான செயற்படுகின்ற பிள்ளை கருத்துக்களை தோற்றுவிப்பவனாவான்"

என்று ஜோன்டியூவி தனது கல்விக்கான வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுகின்றார். இவ்வரைவிலக்கணமானது அவரது காலகட்டத்தில் இருந்த கல்வி பற்றிய எண்ணக்கருவை எமக்கு தெளிவுபடுத்துகிறது. அமேரிக்க நாட்டினைச் சேர்ந்த இவர் கல்வி முறை, கல்வித்தத்துவம், கல்வி உளவியல் இம் மூன்றையும் இணைத்து கல்விச் செயன்முறையாக்கினார். இவரது கல்விக்கான எண்ணக்கருக்கள் வரைவிலக்கணத்தின் விளக்கத்தை எமக்கு விளக்குகின்றது.

மனிதன் பெற்ற சக்தி சிந்தனைதான் எனவும். சிந்தனைச் சக்தியை விருத்தியாக்கிக் கொண்டு சாதனைகள் ஆக்கிப் பயன்படும் விலங்கே மனிதனானவன் எனவும் விளக்கியுள்ளார். இதனை உயிர்ப்பான - உயிர்பற்ற பிள்ளையினது வரைவிலக்கணம் தெளிவு படுத்துகிறது. உதாரணமாக இத்தகைய நிலையானது தற்போது ஆசிரியர்கள் கல்வியை வழங்கி கணிப்பீடுகள் பரீட்சைகள் வாயிலாக சிந்திக்க தூண்டுவதை நோக்க முடியும்.

மனிதன் அறிவைப் பெறுகின்ற வழியானது செயல் ரீதியான அனுபவம் எனவும் கல்வி என்பது அனுபவம் மூலம் கிடைக்கப்பெற வேண்டும். ஒரு பாடசாலை உருவாக்குகின்ற மனிதன் சமூகத் தேவைகளோடு பின்னிப்பிணைந்தவனாகக் காணப்படுகின்றான். பிரச்சினைகளோடு திண்டாடி தனிப்பட்ட முறையில் பெறும் அனுபவங்களே உண்மையான கல்வியாகும். எதிர்கால அனுபவங்களைப் பெறுவதில் நிகழ்காலத்தினை விழிப்புடன் பயன்படுத்தும் போதுதான் கல்வி அபிவிருத்தி பேணப்படும் என்றும் குறிப்பிட்டார். தற்கால அனுபவத்தில் பெறப்படாத அறிவு ஏட்டுச்சுரக்காய் போலத் தென்படும். இவருடைய கருத்துப்படி பாடசாலைக் கல்வி மூலம் பெறும் அனுபவமும், பிள்ளை வாழும் சமூகத்தில் இருந்து பெறும் அனுபவமும் ஒற்றுமையாகக் காணப்பட வேண்டும் இல்லையேல் கல்வியின் உயிரோட்டம் நலிவுறும். எனவே பாடசாலைக் கற்றல் அனுபவங்கள் வாழ்க்கைக் கற்றல் அனுபவங்களோடு தொடர்புபட்டுக் காணப்பட வேண்டும் என்கிறார். இதனை கல்வி என்பது அனுபவங்களை ஒழுங்கமைப்பதும் மீளமைப்பதாகும் என்ற வரைவிலக்கணம் கல்விக்கான எண்ணக்கருவை எமக்கு விளக்குகிறது.

காலம் மாறுகின்றபோது நிரந்தரமான கல்வி நோக்கங்கள் என எதுவும் இருக்க முடியாது. கல்வி என்பது வாழ்வதற்குத் தயாராகுதல் அல்ல வாழ்வதே கல்வி. கல்விக் குறிக்கோள்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். கல்வியின் நோக்கங்களை முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது. அவை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.அத்துடன் முயன்று தவறுதல் மூலம் பயன்பாட்டுவாதி கற்றல் முறையை விருத்தியடையச் செய்கின்றான். எனவே கல்விச் சிந்தனைகள் உருவாக்கப்படும்போது பிள்ளைகளையும் தற்காலச் சமூக அறிவியலையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இவ்வாறான கல்வி மூலமே சமூகம் சீர்திருத்தப்படுகின்றது. 'பரிசோதனை ரீதியான விஞ்ஞான முறைகள் அறிவு பெறுவதற்கான ஊடகம்' எனக் குறிப்பிட்ட இவர் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை மறுதலித்தார். இத்தகைய அனைத்துக் கருத்துகளையும் ஒன்றிணைத்ததாக கல்வியானது வாழும் செயன்முறையானது எதிர்காலத்தில் வாழ்வதற்கு ஆயத்தமாவதல்ல என்று காட்டுகின்றது. அத்துடன் கீழ்வரும் ஒவ்வொரு நிலைகளும் ஜோன் டியூவியின் கல்வி எண்ணக்கருக்களை மேலும் விளக்குகின்றது.

ஜோன் டியூவியின் ஆசிரியர் தொடர்பான கருத்துக்கள்

- குழந்தையை விளங்கிக்கொண்டு அவனின் விருத்திக்கும் முதிர்ச்சிக்குமேற்ப பொருத்தமான அனுபவங்களை வழங்குவதே ஆசிரியரது கருமமாக இருத்தல் வேண்டும்.
- ஆசிரியர் வெறுமனே அறிவைக் கொடுப்பவராக அல்லாமல் அறிவைத் தோற்றுவிப்பதற்கான வழிகாட்டியாகவே அமைய வேண்டும்.
- புதிய அனுபவங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை நுண்ணாய்வு செய்பவராக இருந்து மாணவர்களின் ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கு வழிசெய்பவர்.
- முன்கூட்டிய குறிப்பிட்ட அனுபவங்களை மட்டும் ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் ஆசிரியர் மாணவர்களின் உள்ளார்ந்த நலன்கள் வெளிவருவது தடைப்படுகின்றது என்றும் கூறினார்.

தொகுத்து நோக்கும் போது ஜோன் டியூவியின் கல்வி தொடர்பான எண்ணக்கருக்கள் ஒவ்வொன்றும் விலையேறப்பெற்றதாக அமைகின்றது. இவை மாணவர்களின் முற்போக்குக் கல்வியாகவும் அனுபவத்தை மையப்படுத்தியதாகவும் பாடசாலை கல்வி வாய்ப்புகள் மனிதனை சுற்றாடலுடன் இடைத்தொடர்புடன் அமையச் செய்ய வேண்டும் என்றும் மணல் செங்கற்கள் வகுப்பறைக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் நூற்கல்வி குறைந்தளவே முக்கியப்படுத்த பட வேண்டும் என்றும் " நான் பார்கிறேன் இ நான் கேட்கிறேன் நான் எழுதுகின்றேன் என்று உணராது நான் செய்கிறேன் செயற்படுகிறேன் எனும் உயிர்பான அனுபவக்களமாக வகுப்பறை மாற்றப்பட வேண்டும் என்றார். பயன்பாடுடைய செயலை செய்கின்றேன் என்ற உணர்வு தரும் ஆர்வம் ஆசை அதன் விளைவான அனுபவம் என்பனவே அறிவை பெறும் சிறந்த வழியாகும் என்றார். இத்தகைய அனைத்தையும் முன்னரே கூறிய அவரது வரைவிலக்கணம் சுருக்கமாக கூறிநிற்கிறது. இம்முறை இன்றைய காலகட்டத்தில் மேற்கத்தேய நாடுகளிலும் கீழைத்தேய நாடுகளிலும் கல்வியில் பரிணமிக்கின்றதை யாராலும் மறுக்க முடியாது.

மகாத்மா காந்தியின் கல்வி தொடர்பான எண்ணக்கருக்கள்(1869-1948)

20ஆம் நூற்றாண்டில் அறிவினை மட்டும் மையமாகக் கொண்ட கல்விச் சிந்தனைகள் மாற்றமடைந்து குழந்தையை மையமாகக் கொண்ட வாழ்க்கை மையக் கல்விமுறை எழுந்தது. வாழ்கை மையக் கல்விக்கு மிகவும் பெரும் பணியாற்றியவர் காந்தியாவார். வாழ்கையை நெறிப்படுத்தக் கூடியதான ஆதாரக் கூறுகளை கல்வி கொண்டிருத்தல் வேண்டும் என்பது இவருடைய கருத்து.

கல்வி என்பது அறிவை வளர்ப்பது ஆற்றல்களை வளர்ப்பது உணர்வுகளை பண்படுத்துவது மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது மனிதனின் நடத்தையை சமூகத்துக்கேற்ப மாற்றியமைப்பது எனக் குறிப்பிட்டிருந்தார். "மனிதனுள் காணப்படும் ஆளுமைப் பண்புகளை படிப்படியாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்துவது கல்வி என்று கூறினார்." (கல்வி மனிதனின் உரிமை என்பதும் இவரின் கருத்தாகும்). நான் கல்வி எனக்குறிப்பிடுவது பிள்ளையிடமும் வளர்ந்தோரிடமும் உடல், உள்ளம், ஆன்மா என்ற வகையில் உயர் நிலைகளை வெளிக் கொணர்தலே" என்று குறிப்பிட்டார். அவரது இந்த வரைவிலக்கணமானது கல்விக்கான வெளிக்கொணர்தலை மையப்படுத்தியதை காணலாம். கல்வி பற்றி இவர் கூறிய விடயங்கள் அனைத்தும் அக்கால கட்டத்தில் கல்வி பற்றி இருந்த எண்ணக்கருவை மையமாக கொண்டே கட்டமைக்கப்பட்டதனை மேற்கூறிய அவரது வரைவிலக்கணங்கள் எமக்கு காட்டி நிற்கின்றது. இதனை மேலும் வலியுறுத்தும் வகையில் பின்வரும் ஒவ்வொரு விடயங்களும் அமையப்பெற்றது. ஆரம்பக் கல்வி பற்றி இவர் குறிப்பிடுகையில்

1. எல்லாக் கல்விக்கும் முதலுணர்வு ஏற்படுத்தும் கல்வியாகும்.
2. இதன் மூலம் கல்வியின் உயர்ந்த படிகளை அடையலாம்.
3. "குழந்தைகள் பிற் காலப் பெரியார்கள்" என்பது ஆரம்பக் கல்வியின் நோக்கமாகும்.

ரசிய நாட்டிலுள்ள டால்ஸ்டாய் எனும் தத்துவஞானியின் கருத்துக்கள் விவசாய அடிப்படையில் கல்வி சமரச அடிப்படையில் கல்வி உலக நெறியை வளர்க்கும் கல்வி என்பவற்றினை மையப்படுத்தியது. இவரின் இக்கருத்துக்களில் கவர்ந்த காந்தி அவற்றினை ஆரம்பக் கல்வியின் மூலம் மாணவர்களுக்கு வளர்த்தெடுக்க அதிகம் முக்கியத்துவம் கொடுத்தார். இவை அவரது வரைவிலக்கணத்தில் பொதிந்துள்ள கல்வியின் அடிப்படையை காட்டி நிற்கின்றது.

ஆசிரியர் தொடர்பாகக் கூறுகையில்,

ஒரு ஆசிரியன் தன்னால் ஆற்றமுடியாத கருமத்தினை மாணவன் ஆற்றவேண்டும் என போதித்தல் கூடாது. ஆசிரியர் மாணவர் தொடர்பு அன்பாகக் காணப்பட வேண்டும். இத்தொடர்பு கல்விக்கு நிறைவு தரும் எனவும் குறிப்பிட்டார். கல்வியின் சிறப்பு ஒரு மாணவன் தன் ஆசிரியரிடத்திற்கொள்ளும் ஈடுபாட்டிலும் அவன் மீது வைத்திருக்கும் மதிப்பிலும் தங்கியுள்ளது என்றார். எனவே தான் இவருக்கு குருகுலக் கல்வி முறை மிகவும் கவர்ந்ததாகும்.

உ-ம் செயற்பாட்டு அனுபவங்களால் ஆன கல்வி

"வெறும் ஏட்டுக்கல்வி மட்டும் கல்வியாகாது" எனவும் அதனோடு தொழிற் பயிற்சியும் கொடுக்க வேண்டும் எனவும் கூறிய இவர் உடல் உழைப்பை கல்வியோடு இணைத்தார்.

உ-ம் 1937 யூலை 31 இல் ஹர்ஜன் பத்திரிகையில் அவர் குறிப்பிட்டதன் படி கல்வி பயனுள்ள உற்பத்தித் தொழிலை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதிலிருந்து புலனாகிறது.

உடல், உளம், ஆன்மா என்பனவற்றில் சமமான உலகியல் அறிவினைப் பெறுதல், உடலினைப் பேணுதல் போன்ற வளர்ச்சிக்குக் கல்வி பொருத்தமுடையதாய் இருத்தல் வேண்டும் என்கிறார். ஜோன் ரஸ்கின் "கடையனுக்குக் கடைத்தேற்றம்" என்கின்ற நூலானது காந்திக்கு சர்வோதயம் தொடர்பான கருத்தினை ஏற்படுத்தியது.

இவரின் சர்வோதய இயக்கம் பின்வரும் துறைகளில் தனது குறிக்கோளினைக் கொண்டது.

- ஆதாரக்கல்வி
- முதியோர் கல்வி
- கைத்தொழில் வளர்ச்சி தாய் மொழி வளர்ச்சி
- மாணவனின் முன்னேற்றம்
- மாதர் முன்னேற்றம்
- உழவர் நிலை உயர்தல்
- தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை உயர்தல்
- பூர்வீகக் குடிமக்கள் நிலை உயர்தல்
- சன்மார்க்க நெறி
- உடற் சுகாதாரம்
- குடும்பசுகாதாரம்

உடல் உழைப்பு மூலம் பொருளைச் சம்பாதித்து உயர்வடைய எல்லோருக்கும் சந்தர்ப்பம் உண்டு ஆகையால் "ஒரு வழக்கறிஞருக்குக் கொடுக்கும் அதே மதிப்பினை ஒரு நாவிதனுக்கும் கொடுக்க வேண்டும்" என்கிறார். குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் கல்வியின் மூலம் சமவாய்பை அடைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவருடைய தத்துவக் கருத்துக்கள் சில.

1.இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும். காந்தியின் கலைத் திட்டத்தின் படி கல்வி மொழி தாய்மொழி. அன்னிய மொழியில் கல்வி கற்பிக்கும் போது தாய் மொழி தேசப்பற்று என்பன குறைவடையும்.

2.செய்து கற்றல் மூலம் மாணவனின் கற்றலின் நாட்டமும் விடயமும் அதிகரிக்கின்றது.

3.பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறாயோ அதையே நீ பிறருக்கும் செய்.

4.பல்கலைக்கழகங்கள் பல்வேறு வகையான கலைகளையும் ஒருங்கிணைக்கும் நிலையமாகத் திகழ்ந்து சமுதாய நலனுக்காக உழைக்க வேண்டும்

என்று பல்வேறுபட்ட விடயங்களைக்குறிப்பிட்டார். "மனிதனுள் காணப்படும் ஆளுமைப் பண்புகளைப் படிப்படியாகவும் முழுமையாகவும் வெளிப்படுத்துவது கல்வி என்று கூறினார்." எழுத்தறிவு மட்டும் குறிக்கோள் அல்ல அது ஒரு ஊடகம். கற்பவர் உள்ளத்திலும் ஆன்மாவிலும் காணப்படும் சிறந்த இயல்புகளை வெளிக்கொணரச் செய்து அவனிடத்தே முழுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதே கல்வி என்பதை ஆணித்தரமாகக் காட்டினார். மேற்காட்டிய காந்தியடிகளாரின் ஒவ்வொரு செயற்பாடுகளும் அவர் கல்விக்கு கூறிய விடயங்களும் ஆசிரியர்கள் மாணவர்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் கல்வி கட்டமைக்கப்பட வேண்டிய விதங்களும் அவை எத்தகையளவில் மனித வாழ்வில் முக்கியமானது என்பதை எமக்கு காட்டிநிற்கிறது. இன்றைய நிலையில் அனைவர்க்கும் கல்வி தாயுணர்வுடைய ஆசிரியர்களாக காணப்படல் வேண்டும் என்று முன் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதும், தாய்மொழி ரீதியாகக் கல்வி மையப்படுத்தப்படுவதும் மாணவர்களில் உள்ளிருந்து கற்றல் கொண்டுவரப்படுவதற்கான வழிகள் நடைமுறையில் இருப்பதும் இவரது கால கட்டத்தில் காணப்பட்ட வரைவிலக்கணத்தின் உள்ளார்ந்த உண்மைத்தன்மையை எமக்கு காட்டி நிற்கின்றது.

இரவீந்திர நாத் தாகூர் காலகட்டத்தில் கல்வி பற்றிய எண்ணக்கருக்கள் (1863-1941)

" மாயை நீங்கி உண்மை உலகைக் கண்டறிய உதவுவதே கல்வி "

"இயற்கையில் ஈடுபட்டு ஒன்றிணைந்து பெறப்படும் அன்பு சமூகத்துடன் இணையும் சேவையாக மாறக் கல்வி உதவவேண்டும்" என்று கல்வி பற்றித் தனது வரைவிலக்கணத்தைக் குறிப்பிட்டார் தாகூர். இவரது இந்த வரைவிலக்கணத்திற்கு வித்திடுவதாகவும், வளர்த்துச் செல்வதாகவும் பின்வரும் ஒவ்வொரு விடயங்கள் காணப்பட்டது .

சிறுவர்களே உலகின் தந்தைகள் எனக்கூறி "சாந்தி நிகேதன்" என்ற பள்ளியை ஆரம்பித்தார். சுதந்திரம், விளையாட்டு, இசைப்பாடல் அவர்களது ஆத்மாவை விழிப்படையச் செய்து கல்வயூட்டுவதே அவர் கையாண்ட கல்வியின் நுட்பம், எளிமை, இனிமை ஆகிய சூழலை அமைப்பவர் ஆசிரியர். ஆசிரியர் மாணவரை நெருங்கிய தொடர்புடன் அமைப்பதே சாந்திநிகேதன் ஆகும். இங்கு நாடகங்கள் கல்வி ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் "விஸ்வபாரதி" என்ற பல்கலைக்கழகத்தை நிறுவி கல்விக்கு முக்கியமளிக்க உதவினார். மேற்குறிப்பிட்ட விடயங்கள் கல்வியின் மூலம் உண்மை உலகை கண்டறிவதற்கு பிள்ளைகளை வழிப்படுத்துவதற்கு உதவியாக அமைந்தது என்பதைக் காணலாம்.

பண்பாட்டு விடுதலை பெறுவதே முதன்மையான நோக்கமாகக் கொண்ட தாகூர் கல்வியென்றால் பண்பாடு என்று கருதினார். பண்பட்ட மனிதன் கல்வி கற்றவன். அவன் பண்பாட்டில் பற்றுறுதி கொண்டவன் பண்பாடில்லாத கல்வி பெறுமதி அற்றது என்பதைக் காட்டினார். இந்திய பண்பாடும் அதன் கல்வியும் அமரத்துவ நோக்குடையது என்பதை வலியுறுத்தினார். இவை சமூகமான பண்பாட்டுடன் தொடர்புபடுத்திய வரைவிலக்கணத்தை நமக்குக் காட்டுகின்றது. அதாவது கல்வியானது சமூகத்துடன் ஒன்றிணைந்த நிலையாக அமைய வேண்டும் என்பதைக் கூறுகின்றது.

தாகூர் நாடகங்கள் ஊடாகத் தனது கருத்துக்களை வெளியிட்டார். துறவி, சதி போன்ற பல நாடகங்கள் மனிதன் இவ்வுலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்பவற்றை அழகுடனும் விழிப்புணர்வுடனும் காட்டின. அன்பே எல்லாவற்றிற்கும் முக்கியமானது என்பதைக் கூறினார். "அன்பின் ஆள்புலம்" என்ற வார்த்தையினூடாக அன்பின் புனிதத்தன்மையை வெளிக்காட்டினார்.

இதனை இயற்கையுடன் கொண்டிருக்கும் அன்பை சமூகத்துடன் கொண்டு வரல் வேண்டும் என்ற வரைவிலக்கணம் எமக்கு காட்டி நிற்கிறது.

அழகுப்பண்பு, அன்பு நிலை, அறிவுத்திறன், ஆற்றலின் வலிமை இவை மானிட முழுமையை வளர்க்கும் கூறுகளாக தாகூர் கருதினார். புலனுனர்வுகளை பகுத்தாராய்ந்து அறிவாக்கி அந்த அறிவின் மூலம் வாழ்கையை பல வகைகளிலும் செம்மை பெறச் செய்யும் போது பண்பு உருவாகிறது. அந்த பண்பும் அறமும் உடைய சமூகத்தை தோற்றுவிக்கிறது. கல்வி அத்தகைய பயன்பாட்டின் கருவூலம் என்பது தாகூரின் கருத்தாகும். ''அறிவொன்றே ஆளுமை ஆகிவிடாது'' என்று தாகூர் கூறியுள்ளார். அறிவு ஆளுமையினின்று வேறுபட்டது என்பதுடன் ஒழுக்கம், ஒழுக்கத்தை வரவழைக்கும் அழகியலுணர்வு மனிதனை மனிதனாக்கும் என்பது தாகூரின் கருத்து.

இன்றைய நவீன கல்விச்சிந்தனை தாகூரின் பங்களிப்பினை ஏற்றுள்ளது. அதாவது அறிவை மட்டும் வளர்ப்பது கல்வியன்று ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும் என்ற இவரது கருத்து இன்றைய மாணவர்களது வாழ்வில் முக்கியமுடையதாக உள்ளது. பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசகர்கள் பல்வேறு காரணங்களிங்கான நியமிக்கப்பட்டாலும் ஒழுக்கத்தை முக்கியப்படுத்தியமையும் ஒன்றென்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆகவே மேற்குறிப்பிட்ட பல்வேறு விடயங்கள் தாகூரின் மூலம் எழுந்த கல்வி எண்ணக்கருவாக உள்ளது. உண்மைத்தன்மையை கண்டறிய கல்வி உதவுவதுடன் அவை சமூகத்துடன் இணைந்து செயற்பட முக்கியமென்பதே இதன் சாராம்சமாகும். இவை தற்காலத்தில் கல்வியின் குறிக்கோளாக நாம் உணர்ந்து கொள்வதை நோக்க முடியும். ஆகவே இவரது காலகட்டத்தின் கல்வி எண்ணக்கருக்களை வெளிப்படுத்துவதாக வரைவிலக்கணமும் அமையப்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகையில் கல்வி தொடர்பாக ஒவ்வொரு அறிஞர்களாலும் அவர்களது காலகட்டத்தில் உள்ள எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வரைவிலக்கணங்கள் தோற்றம் பெற்றது. அன்றும் இன்றும் சில வரைவிலக்கணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டும் சில வரைவிலக்கணங்கள் மாற்றம் பெற்றும் வருகின்றது. ''கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு'' என்ற முதுமொழியைக் கொண்டே இக்கல்வியும் அதற்கான வரைவிலக்கணமும் இன்று வரை முடிவில்லாத தேடலாக அமையப்பெறுகிறது. நவீனத்துவத்தை அடிப்படையாக கொண்ட இந்தக் காலப்பகுதியானது செல்கின்றது. தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டும், தொழிற் கல்வியை மையப்படுத்தியும் அனைவரையும் கல்வியின்பால் ஈர்க்க வேண்டும் என்று நாடுகளுக்கிடையே சட்டங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகவே கல்வியானது மனித வாழ்வை மனிதனிற்கே உணர்த்தும் தேடலாக பொருள் கொள்ளப்பட்டு வருகின்றது என்றால் அது மிகையாகாது . இத்தகைய கல்வியை நாம் பெறுவதுடன் அதனை எதிர்காலத்திற்கும் வளமுடையதாக வழங்குவதற்கு ஏற்ற செயற்பாடுகளை நாம் பாரியளவில் முன்வைக்கும் போது எமது கல்வி எண்ணக்கருக்கள் கூட நாளைய தலைமுறையினர்க்கு ஒரு வரைவிலக்கணமாக உருவாக வாய்ப்புண்டு.

துணைநின்றவை

- ஆனந்தராஜ் ந., 2005, தேசியத்தை நோக்கிய கல்வி, நந்திப் பதிப்பகம், வல்வெட்டித்துறை.
- ஆறுமுகம் வ., 2000, கல்விப்பாரம்பரியங்கள், உயர் கல்விச்சேவை பதிப்பகம், யாழ்ப்பாணம்.
- கருணாநிதி மா., 2008, கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம்கொழும்பு .
- கினிகே எல்.ஜ., 2008, புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும், கல்விவாண்மை தேர்ச்சி விருத்தி மைய வெளியீடு, பாதுக்கை

- சந்திரசேகரம் ப., கல்வித் தத்துவம், யாழ்ப்பாணக் கூட்டுறவு தமிழ் நூற்பதிப்பு விற்பனை நிலைய வெளியீடு.
- செல்வராஜா மா., 2005, முன்பள்ளி கல்விச் சிந்தனைகளும் செயற்பாடுகளும், கௌரி வெளியீட்டகம்.
- செல்வராஜா மா., 2009, தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
- ஜெயராசா சபா., 2006, கல்வியில் புதிய சீர்திருத்தங்கள், அகவிழி வெளியீடு, கொழும்பு.
- ……., 2007, கலைத்திட்டம், அகவிழி வெளியீடு, கொழும்பு.

மதிப்பிடப்பெற்றது

ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்

(Impact of teacher's classroom management effect on educational Growth of primary students)

Shandru Mariyadas (Lecturer- prob),
Faculty of Arts and Culture,
Dept. of Education and Childcare,
Eastern University, Srilanka.
chandrumariyadas@yahoo.com

இன்றைய நிலையில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் காரணமாகச் சமூகமும், சமூகம் சார்ந்த நிறுவனங்களும் துரிதகதியில் இயங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வாறான மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பாடசாலைகளும் பல்வேறு மாற்றங்களை உள்வாங்கி வினைத்திறனாகச் செயற்பட்டு, மாறிவரும் சமூதாயத்திற்குப் பொருத்தமான மாணவர்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். எனவே, இவ்வாறான மாற்றங்களைச் செயற்படுத்தும் வகையில் பாடசாலைகள் ஆரம்ப பிரிவிலிருந்தே அவற்றுக்கான அடித்தளத்தை அமைக்க வேண்டும். அப்போதுதான் அம்மாணவர்களின் எதிர்காலக் கல்வி சிறப்பாக அமைவதோடு சமூகம் எதிர்பார்க்கின்ற மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியும். ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நம்பிக்கை நிதியமானது சிறார்களின் கல்வி தொடர்பில் அதிக அக்கறை செலுத்தி செயற்பட்டு வருகின்றது. அந்தவகையில் கற்கும் நடைமுறையில் பிள்ளைகள் முழுமையாக பங்குபெற வேண்டியது அவசியம் என்பது வலியுறுத்தப்படுகின்றது. அத்துடன் மாணவர்கள் பாடசாலையில் கௌரவமாக நடத்தப்படல் வேண்டும், வாழ்நாள் முழுவதும் கைகொடுத்து உதவக்கூடிய வகையில் தம் அனுபவத்தினூடாக சுயமதிப்பு, சுய கட்டுப்பாடு, கல்வி பயில்வதில் ஆனந்தம் ஆகியவற்றை அவர்கள் வளர்த்துக்கொள்ள இடமளிக்க வேண்டும் இவைபோன்ற பல்வேறு உயரிய எதிர்பார்ப்புக்களைக் கொண்டுள்ளது. இவ்வாறான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றனவா என்பது சிந்திக்கப்பட வேண்டியதாக உள்ளது. அந்தவகையில் அனைத்து மாணவர்களும் ஆரம்ப நிலைக்கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு சகல கல்வி சார்ந்த நிறுவனங்களும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இருப்பினும் வகுப்பறை, பாடசாலை, குடும்பம், சமூகம் போன்றவற்றில் காணப்படும் சில குறைபாடுகள் மாணவர்கள் முழுமையாக ஆரம்பக் கல்வியைப் பெற தடையாக அமைகின்றன. எனவே அவ்வாறான காரணிகளை கண்டறிந்து அவற்றில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளுக்குத் தடையாக அமைகின்ற காரணிகளின் தாக்கங்களை இயன்றவரை குறைத்துப் பெரும்பாலான மாணவர்களுக்கு முறையான வகையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அவற்றுக்கான சில தீர்வுகளைக் கண்டறிவதாக இவ்ஆய்வு அமைகிறது.

❖ **திறவுச்சொற்கள்:** ஆரம்பப் பிரிவு மாணவர்கள், கல்வி வளர்ச்சி, வகுப்பறை முகாமைத்துவம்

❖ **ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்**

ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் வகுப்பறை முகாமைத்துச் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு தடையாக அமைகின்ற காரணிகளை கண்டறிந்து அவற்றுக்கான தீர்வு,

ஆலோசனைகளை முன்வைப்பதனூடாக மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஏற்படுத்தும் எதிர்மாறான தாக்கங்களை குறைத்து அனைத்து மாணவர்களும் இயன்றவரை ஆரம்பப்பிரிவு கல்வியைத் தடையில்லாமல் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுதல்.

சிறப்பு நோக்கம்

அ. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்விக்கான முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ளல்.

ஆ. ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளை அறிந்து கொள்ளல்.

இ. ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு தடையாக அமையும் காரணிகளை இனங்காணல்.

ஈ. வகுப்பறை முகாமைத்துவ குறைபாடுகள் மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கங்களை அறிந்து அவற்றுக்கான தீர்வு ஆலோசனைகளை பற்றி ஆராய்தல்.

ஆய்வுப் பிரச்சனை

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குச் சிறந்த வளமான கல்வியைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். அந்தவகையில் முன்பள்ளிக்குச் சென்று கற்பதற்கான ஆயத்தநிலையினையும், மகிழ்ச்சிகரமான உணர்வினையும் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் அடுத்து காலடி எடுத்து வைப்பது ஆரம்பப் பிரிவிலே ஆகும். எனவே இதுவரை பெற்றுக் கொண்ட கல்விக்கான ஆயத்தநிலையுடன் அடிப்படைக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக புதிய எதிர்பார்ப்புக்களுடன் பாடசாலையில் காலடி எடுத்து வைக்கின்றனர். அவ்வாறான மாணவர்களுக்கு சிறந்த அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் இம்மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியறிவை வழங்குவதில் சில தடைகள் காணப்படுகின்றன. அதாவது ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதாவது நான் ஆய்வுக்காக தெரிவு செய்த பிரதேசத்தின் சமூக, பொருளாதார நிலமை பின்தங்கியதாகக் காணப்படுகிறது. அத்துடன் இங்கு கல்வி வளர்ச்சியும் பின்தங்கியதாகவே காணப்படுகிறது. இதனால் கல்விக்கான முக்கியத்துவம் இங்கு குறைவாக உள்ளது. இருப்பினும் அச்சமூகத்தை முன்னேற்ற வேண்டுமாயின் கல்வி நிலை உயர்வடைய வேண்டும். கல்வி நிலை உயர வேண்டுமாயின் பிள்ளைகளுக்கு சிறந்த ஆரம்பக் கல்வி வழங்கப்படவேண்டும். இப் பிரதேசத்தில் ஆரம்பப் பிரிவு கல்வியை மாணவர்களுக்கு சிறந்த முறையில் அளிப்பதில் ஆசிரியர்கள் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதாவது கிராமப்புற பாடசாலையாக இருப்பதால் வளப்பற்றாக்குறை என்பது தவிர்க்க முடியாதுள்ளது. மேலும் பெற்றோரின் ஒத்துழைப்புக் குறைவு, பெற்றோரின் தொழில், வறுமை காரணமாகவும் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டாத நிலமை காணப்படுகிறது. மேலும் தொழில் நிமித்தம் பெற்றோர் அதிலும் குறிப்பாக தாய் வெளிநாடு செல்வதனால் பிள்ளைகள் உறவினர் வீட்டில் தங்கியிருக்கின்ற நிலமை காணப்படுகிறது. இவ்வாறாக குடும்ப ரீதியில் மாணவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு இவர்கள் முகம் கொடுப்பதனால் ஆரம்ப நிலைக் கல்வியை இவர்களால் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. எனவே இவ்வாறான மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதில் முகாமைத்துவ ரீதியாக சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மேலும் மாணவர்களின் ஒழுங்கான வரவின்மை காரணமாகவும் திட்டமிட்ட வகையில் கற்றல், கற்பித்தலை முன்னெடுக்க முடியாதுள்ளது. மேலும் பாடசாலை அமைந்துள்ள சமூகத்திற்கேற்ப பாடசாலையும் ஆசிரியரும் இசைவாக்கமடைவதால் இவ் ஆசிரியர்களும் ஒழுங்கான முறையில் மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளை திருத்திக் கொடுக்காமை, சரியான முறையில் பின்னூட்டல்களை வழங்காமை, மாணவரைக் கவரக் கூடிய வகையில் திட்டமிட்ட வகையில் சிறந்த கற்றல், கற்பித்தலை முன்னெடுக்காமை. அத்துடன் ஆசிரியர்களுக்கான பயிற்சி, உளவியலறிவு என்பன குறைவாக காணப்படுகின்றமை, ஆசிரியர்கள் தூர இடத்தில் இருந்து வருகை தருதல், அத்துடன் ஆசிரியர்கள் மாணவருடனான தொடர்பாடல் சிறந்த முறையில் அமையாமை

போன்ற ஆசிரியர்கள் சார்பான பிரச்சனைகள்; காரணமாகவும் மாணவர்களுக்கு சிறந்த ஆரம்ப நிலைக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் பிரச்சனைகள் காணப்படுகிறது.

எனவே மாணவர்கள் தமது எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் ஆரம்பப் பிரிவிலேயே கற்றுக் கொள்கின்றனர். அதாவது அடிப்படை எண்அறிவு, எழுத்தறிவு, வாசிப்பறிவு, பழக்கவழக்கங்கள், ஒழுக்கம் போன்ற பல்வேறு விடயங்களையும் இங்கேயே கற்றுக் கொள்கின்றனர். எனவே இவ்வாறான அடிப்படை அறிவை முழுமையாக மாணவர்கள் பெற வேண்டியது அவசியமாகும். இல்லையெனின் அம்மாணவர்களுடைய எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும். எனவே இவர்களுக்கு சிறந்த கல்வியறிவைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது ஆசிரியரதும், பெற்றோரதும் கடமையாகும்.

இலக்கியமீளாய்வு

ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள்

ஒரு பிள்ளை பிறந்து பெற்றோரினதும் உற்றார் உறவினரதும் அரவணைப்பிலும் அன்புத் தொடர்பிலும் சுதந்திரமாக வளர்ந்து சுமார் ஐந்து வருடங்கள் கழித்து தனக்கு முற்றிலும் பழக்கப்படாத புதிய சூழலைக் கொண்ட பள்ளிக் கூடத்தினுள் பிரவேசிக்கின்றது. இவ்வாறு பல்வேறு சூழல்களில் வாழ்ந்து பழக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பிள்ளைகள் சுமூகமான திட்டமிடப்பட்ட ஒரு சூழலில் ஒன்றிணைகின்றனர். இவர்கள் பிற்காலத்தில் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கேற்ற வகையில் சமூகமயப்படுத்த வேண்டிய பொறுப்பை ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். தம்மிடம் ஒப்படைக்கப்படும் பச்சைக்களியைப் பயனுள்ள பாத்திரங்களாகப் படைப்பதும் மண்ணாங்கட்டியாகப் பாழாக்கி விடுவதும் படைப்பாளியின் ஆற்றலைப் பொறுத்தது. பிள்ளைகளிடத்திலே மறைந்து கிடக்கின்ற உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை வெளிக்கொணரவும், விருத்தி செய்யவும் வேண்டிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும். இந்த வகையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை எதிர்காலத் தலைவர்களாக மாற்றியமைக்கும் பொறுப்பு ஆசிரியருடையதாகும்.

வீட்டுச் சூழலில் இருந்தும், முன்பள்ளியிலிருந்தும் நேராகப் பாடசாலை வருகின்ற பிள்ளைகள் அன்பு, காப்பு, அரவணைப்பு போன்ற தேவைகளை ஆசிரியரிடமிருந்தே எதிர்பார்க்கின்றனர். எனவே இவ்வாறான பண்புகளை உடையவராக ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆரம்ப வகுப்பு மாணவர்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவது ஆசிரியர்களேயாவர். எனினும் ஆசிரியரின் நேரடிப் பங்கு நிகழவில்லை என்று எண்ணக் கூடிய வகையில் மிக நுட்பமாக அத்திட்டத்தை அறிமுகம் செய்தல் வேண்டும். (ஜெயமலர், 2003)

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் எவையென்பது பற்றிய பல்வேறு ஆய்வுகளும் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் இவற்றுள் ஒரு சிலவற்றினை எவையென்பதனை அடையாளம் காணலாம். ஐவன்றீஸ் மற்றும் வோக்கர் (*Ivan reece and walker*)(1994) ஆய்வின் பிரகாரம் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகளாகப் பின்வருவன எடுத்துக் காட்டப்பட்டன.

1. கற்றல் - கற்பித்தலில் வினைத்திறன் மிக்க அணுகுமுறையினை விருத்தி செய்தல் (*Establish an effective approach to teaching and learning*)
2. பாடத்திட்டமிடலில் பொருத்தமான கோட்பாட்டுப் பண்புகளைப் பயன்படுத்தல் (*Use positive aspects of theory in the design of lesson*)
3. பொருத்தமான குறிப்பிடத்தக்களவிலான கற்பித்தல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் (*Use a range of techniques appropriately*)
4. கற்பித்தலுக்கான வளங்களை ஆக்குதல், பயன்படுத்தல், மதிப்பிடல் (*Produse,Use and evaluate learning resources*) அகவிழி) 2007)

மேலும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் சிலவற்றின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டபோது பின்வரும் தேர்ச்சிகள் ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுவதாக எடுத்துக்காட்டப் பட்டது. (அனுஷ்யா,2007)

1. மாணவர்களைக் கையாள்வதற்கான திறன் (*The skills of handling children*)
2. மாணவர் தரத்திற்கேற்ப கற்பிக்கும் திறமை (*Ability to teach to the level of children*)
3. கற்பித்தல் மட்டுமன்றி மாணவர்களுக்குப் பொருத்தமான வழிகாட்டலைச் செய்தல் (*Ability no only teach but to guide them properly*)
4. அண்மைக்கால கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் ஆற்றல் (*Ability to use the latest methodology*)
5. சூழலுடன் சார்ந்ததான கற்பித்தலை மேற்கொள்ளும் ஆற்றல்;.(*Ability to teach according to their environmental factor*)
6. மாணவர்களுக்கான அறிவினைப் பொருத்தமான முறையில் வழங்குவதற்கான ஆற்றல் (*Ability to impart knowledge to their children*)

முதலில் ஆரம்பக் கல்வி ஆசிரியரிடம் பரந்த தெளிந்த அறிவு இருக்க வேண்டும். பாட அறிவுடன் சுற்றாடல் விளக்கம், உலகப் பொது அறிவையும் பெற்றிருக்க வேண்டும். அதாவது மாணவர் நிலை, கற்றலுக்கு அவர்களைத் தூண்டல், அவர்களின் தேவைகள், அவர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் கையாளப்படும் நுட்பங்கள், அவர்களின் கல்வி வளர்ச்சியினை மதிப்பிடுதல் போன்ற தொழில் சார்ந்த அறிவினையும் ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் மாணவர்களைப் புரிந்து கொள்வதற்கும், முறையான வகுப்பறை ஒழுங்கமைப்பிற்கும், சிறந்த வகுப்பறை நிர்வாகத்திற்கும், சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் வாய்ப்பாக அமையும். (அலியார்.யூ.எஸ்.1999)

ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு இன்றியமையாத மற்றுமொரு பண்பு கவர்ச்சி அல்லது வசீகரத்தன்மை. குழந்தைகளை தன்பால் ஈர்க்கும் வசீகரத்தன்மையானது பிள்ளைகள் வகுப்பறைச் செயற்பாடுகளில் உற்சாகத்துடன் ஈடுபடத் துணை புரியும். நளினமான சுபாவம் கவர்ச்சியான கற்பித்தலுக்கு ஒரு காரணமாக அமையலாம். ஆசிரியரின் அன்பான வார்த்தைகளும், மகிழ்ச்சியூட்டக்கூடிய நடத்தைகளும் பிள்ளைகளைப் பெரிதும் வசீகரிக்கின்றன. உளவியல் ரீதியில் அவை பிள்ளைகளின் கணிப்புத் தேவை, அன்புத் தேவை, காப்புணர்வு என்பனவற்றை நிறைவு செய்வதாக அமைகின்றன. கலைத்திறன், படைப்பாற்றல், அழகுணர்வு போன்ற திறன்களும் ஆசிரியருக்கு இன்றியமையாதன. சில பயனுள்ள பொழுதுபோக்குகளையும் ஆர்வங்களையும் ஆசிரியர் கொண்டிருப்பதோடு அவற்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பவர்களாகவும், கற்பனை வளம், படைப்புத்திறன் என்பனவற்றைக் கொண்டவராகவும், விநோதமான நுட்பங்களைத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். வரைதல், பாடுதல், ஆடுதல், நடித்தல், வாத்தியக் கருவிகளை வாசித்தல், விளையாடுதல், விளையாட்டுப் பொருட்களைச் செய்தல் போன்ற கலைத்திறன்களைப் பெற்றுள்ள ஆரம்பக் கல்வி ஆசிரியரால் பிள்ளைகள் அதிக பயன் பெறுவார்கள். படைப்பாற்றல் பெற்றுள்ள ஆசிரியர்கள் சுற்றாடலில் காணப்படும் வளங்களைக் கொண்டு பல்வேறு கைவினைகளில் ஈடுபடத்தக்களவு திறனைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

எப்போதும் சுறுசுறுப்பான இயக்கமுள்ளவராகவும் ஆசிரியர் இருத்தல் வேண்டும். எப்போதும் மேசை அருகே வீற்றிருக்கும் ஆசிரியர் மாணவர்களை ஆர்வமூட்டக்கூடியவராக இருக்க மாட்டார். பிள்ளைகள் தனித்தனியாகவோ, குழுக்களாகவோ பாடப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது ஆசிரியர் தாமும் பிள்ளைகளுடன் சேர்ந்து செயற்பாடுகளில் ஒத்துழைப்பவராக இருத்தல் வேண்டும். மேலும் பிள்ளைகள் கற்பதற்குத் தேவையான கருவிகளையும், வளங்களையும் தேடிக் கொடுப்பதோடு புதிய அணுகுமுறைகளுடன் பிள்ளைகளை ஆர்வமூட்டக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

இத்தகைய திறன்களுடன் சில குறிப்பிட்ட மனப்பாங்குகளும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கு அவசியமானவையாகும். முதற்கண் ஆசிரியத் தொழிலில் விருப்பம் இருக்க வேண்டும். மேலும் தன்னல மறுப்பு, தியாகம் ஆகிய மனப்பாங்குகளையும் கொண்டிருக்க வேண்டும். தன்னலனை விட தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் நலனே உயர்வு எனக்கருதி முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். மற்றவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், பொறுமை, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, கருணை போன்ற பண்புகளும் ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு இன்றியமையாதனவாகும்.

அத்துடன் அமைதி, பொறுமை, நிதானம் ஆகிய பண்புகளும் இன்றியமையாதன. உதாரணமாக கணிதத்தில் தசமதானங்களுக்கு மாறற்றுதல் தொடர்பாக ஒரு மாணவனுக்கு 24 தடவைகள் விளக்க வேண்டியும் ஏற்படலாம். அப்படி நேரிடும் போது முதலாவது தடைவ எவ்வாறு ஆர்வத்துடன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதோ அதுபோன்று பொறுமையுடன் இருபத்து நான்காவது முயற்சியிலும் ஆசிரியர் விளக்குதல் வேண்டும்

இத்தகைய பொறுமை ஆரம்ப நிலை ஆசிரியருக்கு இன்றியமையாததாகும். சடுதியாக ஏற்படும் சிக்கல், விபத்து சங்கடம் ஆகிய நிலமைகளில் பிரச்சினையை அமைதியாகவும் நிதானமாகவும் அணுகுபவராகவும் சமயோசிதமாகவும் விரைவாகவும் இயங்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பண்புகளுடன் நல்லொழுக்கம், முன்மாதிரியான நடத்தை, மாணவர்களுடனும் பெற்றோர்களுடனும் சுமூகமான தொடர்புகளை வைத்திருத்தல் என்பனவும் இன்றியமையாதவை. ஆசிரியரின் எண்ணம்,சொல்,செயல் என்பன எப்போதும் தூய்மையானதாகவும் ஒழுங்கானதாகவும் அமைந்திருப்பதன் மூலம் முன்மாதிரியான நடத்தை உருவாகும் வகுப்பறையில் ஆசிரியர் மாணவருடன் மகிழச்சியான ஆர்வமான சுமூகமான தொடர்;புகளை வைத்திருப்பது எவ்வாறு கற்பித்தல் செயற்பாடடிற்குத் துணையாக அமைகின்றதோ அதெ போன்று பெற்றோரடனும் சுமூகமான தொடர்புகளை வைத்திருக்க வேண்டும். பெற்றோர் சில வேளை ஆசிரியரிடமிருந்து பல்வேறுபட்ட ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுவர். அதேபோன்று ஆரம்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களையும் ஆசிரியர் பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொள்ள அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகைய திறன்களுடன் சில குறிப்பிட்ட மனப்பாங்குகளும் ஆரம்பப் பிரிவு ஆசிரியருக்கு இருக்க வேண்டும். முதற்கண் ஆசிரியத் தொழிலில் விருப்பு இருத்தல் வேண்டும்.

இது சம்பளத்துக்கும் சமூக அந்தஸ்துக்கும் அப்பால் அமைந்த ஒன்றாகும். வாழ்வதற்காகக் கிடைத்த ஏதோ ஒரு தொழில் என்ற நிலையில் தான் இருந்தாலும் இத் தொழில் பற்றிய நல்ல மனப்பாங்குகளை உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். நாட்டின் எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் உயரிய பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் இலட்சியத்தை ஆசிரியர்கள் தம் மனதில் விதித்துக் கொள்ள வேண்டும். தன் இலட்சியத்திலும் பணிகளிலும் நம்பிக்கை உடையவராகவும் சுதந்திரமாக தீர்மானம் எடுக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

பிள்ளைகளின் அடிப்படைக் கல்வியில் ஏற்படும் அடைவே அடுத்த கட்ட விருத்திக்கு தளமாக அமையும். அந்தவகையில் அடிப்படைத் தளத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு அந்தக் காலப்பகுதியில் தொடர்பு கொள்ளும் ஆசிரியர்களினால் தீர்மானிக்கப்படுகின்றது. மேலும் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் அதனுடன் இடைவினை கொண்டு செயலாற்றும் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியும் கவனத்தில் கொண்டு ஆசிரிய வாண்மைத்துவ நிலையங்கள் செயற்படுவது மிக அவசியமாகின்றது. (இராN; ஜஸ்வரன்.ப 2005)

மாதிரித்தெரிவு

அந்தவகையில் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட ஏறாவூர் பற்று கல்விப்பிரிவில் உள்ள 13 பாடசாலைகளில் எனது ஆய்வின் பொருட்டு 05 பாடசாலைகளைத் தெரிவு செய்துள்ளேன்.

இவ் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் பின்தங்கிய கிராமப்புறத்தில் இருப்பதனாலும், தூரஇடங்களில் அமைந்து இருப்பதனாலும் போக்குவரத்துச் சிரமங்கள் காரணமாகவும் வசதி மாதிரி அடிப்படையில் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு,

அட்டவணை 3.2 ஆய்வுக்கான மாதிரிப் பாடசாலைகளின் விபரம்

இல	பாடசாலையின் பெயர்	வகை	ஆரம்பப்பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை	மாதிரித் தெரிவு
01	மட்.கரடியனாறு இந்து வித்தியாலயம்	03	212	21
02	மட்.இலுப்படிச் சேனை அம்பாள் வித்தியாலயம்	02	166	17
03	மட்.காயன்மடு கண்ணகி வித்தியாலயம்	02	122	12
04	மட்.வேப்ப வெட்டுவான் அ.த.க பாடசாலை	03	70	07
05	மட்.கொடுவாமடு சக்தி வித்தியாலயம்	03	48	05

அடுத்து, ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மொத்தமாக 78 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். அவர்களில் ஆய்வுத் தலைப்பிற்கு பொருத்தமான வகையில் நோக்க மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பப்பிரிவில் கற்பிக்கும் மொத்த ஆசிரியர்கள் 29பேரும், ஐந்து பாடசாலைகளிலுமுள்ள 5 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏனெனில் ஆய்வுத் தலைப்பானது ஆரம்பப் பிரிவினை மட்டும் அடிப்படையாகக் கொண்டுள்ளமையால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் மட்டுமே இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளனர். எனவே தரம் 1-5 வரை கற்பிக்கின்ற 29 ஆசிரியர்களும், அப்பாடசாலை அதிபர்கள் 05 பேரும் என மொத்தமாக 34 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதிபர், ஆசிரியரின் தொகை குறைவாக உள்ளதால் மாதிரித் தெரிவு இன்றி அனைவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மொத்தமாக 618 மாணவர்கள் ஆரம்பப் பிரிவில் கல்வி பயில்கின்றனர். அவர்களில் 10:1 என்ற விகிதத்தில் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் 62 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டுள்ளது. அவை பற்றிய விபரம் பின்வருமாறு. அடுத்து பெற்றோருக்கான மாதிரித் தெரிவானது மாணவர் தொகையின் அடிப்படையில் 10:1 என்ற விகிதத்தில் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் 62 பெற்றோர்கள் ஆய்வுக்காக தெரிவுசெய்யப்பட்டு ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டுள்ளது. இவ்வாறாக ஆய்வுக்கான மாதிரிகள் ஆய்வு நோக்கத்தை அடையும் பொருட்டு திட்டமிட்ட வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் பாடசாலைத் தெரிவு வசதி மாதிரி அடிப்படையில் 05 பாடசாலைகளும், 05 பாடசாலைகளிலுமுள்ள ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் 29 பேரும், 05 அதிபர்களும் மாதிரித் தெரிவின்றி மொத்தமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மாணவர் தெரிவு எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் 62 மாணவர்களும், பெற்றோர் தெரிவானது இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் 62 பெற்றோரும் என மொத்தமாக 158 பேர் ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தரவுப்பகுப்பாய்வுகள்

1. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் எழுத்து, வாசிப்பு செயற்பாடுகள்



2. எழுத்து வாசிப்பு செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர்

பிள்ளைகளுக்கு வீட்டில் எழுத்து, வாசிப்பு தொடர்பான பயிற்சிகள் வழங்கி பிள்ளைகளின் கற்றலில் அக்கறை செலுத்துவீர்களா? என்பது தொடர்பாக பெற்றோரிடம் பெறப்பட்ட தரவுகளின் படி 34 மூ பெற்றோர்கள் ஆம் எனவும், 57மூ மான பெற்றோர் ஓரளவு எனவும், 09 மூ மான பெற்றோர் இல்லை எனவும் குறிப்பிட்டனர். இதனை பின்வரும் வரைபு காட்டி நிற்கின்றது.

ஆசிரியர்கள் தொடர் கணிப்பீட்டு செயன்முறைகளை பயன்படுத்தல்

இவ்வரைபடத்தின்படி நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிக்கும் ஆசிரியர்கள் என்ற வகையில் தொடர் கணிப்பீட்டு செயன்முறையை பயன்படுத்துவது அவசியமாகும். இதனை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தும் போது மாணவர் கற்கும் நேரத்தினை அளவிட முடியும். ஆனால் தொடர் கணிப்பீட்டுச் செயன்முறையை அமுல்படுத்தும் ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர். ஓரளவு, இல்லை என்பதே அதிகமாகக் காணப்படுகிறது.

தீர்வுகளும் ஆலோசனைகளும்

- **ஆரம்பப் பிரிவு ஆசியர்களின் வாண்மைத்துவ நிறுவன அமைப்பும் செயற்பாடுகளும் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்**

ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திச் செயற்பரிமாணங்களில் பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற்கல்லூரி, ஆசிரியர் கலாசாலைகள், தேசிய கல்வி நிறுவகம், ஆசிரியர் வள நிலையம், திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, தொலைக்கல்வி நிறுவனம், அரச சார்பற்ற நிறுவன அமைப்புக்கள் பங்கு கொண்டு வருவதைக் காணமுடிகின்றது.

ஆசிரிய வாண்மைத்துவ மேம்பாட்டில் இந்நிறுவனங்கள் சேவை முன்பயிற்சி, பட்டப்படிப்புக்கு பின்னரான பயிற்சி, தொடர் கல்விச் செயற்பாடுகள், செயலமர்வுகள், விசேட கருத்தரங்குகள், என்ற முறைகளினூடாக வாண்மைத்துவ அணுகுமுறைகள் இடம்பெற்று வருவதைக் காணமுடிகின்றது. ஆரம்பக் கல்வி துறையை பொறுத்தமட்டில் சேவை முன்பயிற்சி என்பது சிறுபிள்ளைகளை வழிப்படுத்தவும் அவர்களுடன் இணைந்து செயற்படுத்த வழிப்படுத்துவதாக

அமைதல் முக்கியமானதாகும். அதற்கேற்ப பயிற்சி முறைகள் இவ்வமைப்புக்களுடாக நன்கு திட்டமிடப்பட்டு வழங்கப்படுதல் நன்று.

ஆரம்பக்கல்வியைப் பொறுத்தமட்டில் ஆளனியினரைப் பயிற்றுவித்தல் என்பது முக்கியமான விடயம், க.பொ.த சாதாரண தரம் உயர்தரம் கற்றவர்கள் ஆரம்ப வகுப்பு கற்பிக்கும் நிலை காணப்படுகின்றது. இவர்களுக்கு ஒழுங்கமைந்த முறையிலான பயிற்சி வழங்குதல் இன்றியமையாததாகின்றது. இச் செயற்பாட்டை ஆசிரிய கலாசாலைகள் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றதை காணமுடிகின்றது.

தேசிய ரீதியில் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திச் செயற்பாட்டில் பதினேழு தேசிய கல்வியற் கல்லூரிகள், மூன்று ஆசிரியகல்வி நிறுவனங்கள், நூறு ஆசிரிய மையங்கள் செயற்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது. அத்துடன் கல்வி அமைச்சு, தறந்த பல்கலைக்கழகம், தொலைக்கல்வி நிறுவனம், தேசிய கல்வி நிறுவனம், பல்கலைக்கழகங்கள் ஆசிரியர்களைத் தரமுயர்த்தல், விரிவாக்குதல், மீள் பயிற்சி அளித்தல், சேவைக்காலப் பயிற்சி, புத்தூக்கப்பயிற்சி, வதிவிடப்பயிற்சி என்ற அடிப்படையில் செயற்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது. ஆரம்ப ஆசிரியர்களின் வாண்மைவிருத்திக்காகப் பயிற்சி நிறுவனங்களின் ஆற்றல்களை மேம்படுத்தல் ஆசிரியக்கல்வி நிறுவனங்களின் வசதியை விரிவாக்குதல், ஆசிரியர்கள், கல்வியாளர் தொழில்சார் விருத்தி என்ற அடிப்படையில் மாற்றம் பெற்றுச் செயற்படுத்தல் உணரப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரிய மையங்கள் கல்விசார் ஆராய்சி மையங்களாகச் செயற்படுத்தலும் ஆசிரிய கல்வி நிறுவனமும், ஆசிரிய மையமும் தனது மாணவர்களின் தேவையை இனங்கண்டு அவைக்கேற்ப தமது பாடவிதான விடயங்களை வடிவமைத்து சுயஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை விருத்தி செய்ய விளைதல் அவசியமாகும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

ஆரம்ப ஆசிரிர்களின் தேவையை உணர்ந்து ஆரம்ப ஆசிரிய வள ஆளணியினரை விருத்தி செய்து வாண்மைத்துவ நிறுவனங்களின் பொறுப்பாகும். ஆத்துடன் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரிர் தொடர்ச்சியாக நிலைத்து நிற்கக் கூடிய செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தலும் முக்கியமாகின்றது.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்குரிய பயிற்சியை நன்கு திட்டமிட்டு வழங்குவதனூடாகவும், ஊக்குவிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும், ஆரம்பக் கல்வித்துறையில் கல்வி மாணிப் பட்டப்படிப்பு வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதனூடாகவும், கஷ்டப்பிரதேச ஆரம்ப பாடசாலையில் சேவை செய்வோருக்கு கஷ்டப் பிரதேச ஊக்குவிப்பு வழங்குவதன் மூலமும், ஒப்பந்த அடிப்படையில் ஆரம்ப ஆசிரியர் நியமனங்களை வழங்குவதன் மூலமும் ஆரம்பக் கல்வியில் ஈடுபாடும், விருப்புணர்வும், அர்ப்பணிப்புள்ள மனநிலை தோன்றுவதனூடாகவும், அரசியல் ரீதியானதும், பிரதேச அடிப்படையிலான பாகுபாடு இன்றிய ஆசிரியர் நியமனம் இடம் பெறுதல் ஊடாகவும், ஆரம்பக் கல்வித் துறையில் அபிவிருத்தி என்ற முழுமையான வடிவத்தைக் காண அதிக வாய்ப்பு உண்டாகும்.

- **ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தல் வேண்டும்**

ஒருவர் வாழ்க்கையில் வெற்றி பெறவும், மன நலத்துடன் வாழவும், சமூகத்தில் பொருந்திப் போகவும் மனவெழுச்சி முதிர்ச்சியடைதல் இன்றியமையாதது. மனவெழுச்சி முதிர்ச்சி பெறாமல் ஒரு மாணவர் எவ்வளவு தான் அறிவு, ஆற்றல் என்பனவற்றைப் பெற்றிருப்பினும் அவை பயனற்றதாகும். எனவே அதற்கமைவான கல்விச் சூழ்நிலையை உருவாக்குவதில் மனவெழுச்சியின் பங்கு மிக முக்கியமானதாகும். இதற்கு கற்றல் - கற்பித்தலுக்கேற்ப நல்ல வகுப்பறை சூழ்நிலையைத் தோற்றுவிப்பது ஆசிரியரின் முதற் கடமையாகும்.

இதில் ஆரம்பப் பருவத்தில் மாணவர்கள் வீட்டுச் சூழலிலிருந்து பாடசாலைச் சூழலுக்குள் நுழையும் போது அவர்களது பாடசாலை வாழ்க்கையிலும், அவர்கள் மீது ஆசிரியர் கொண்டுள்ள இடைவினையின் தன்மையிலும் மனவெழுச்சியின் செல்வாக்கு மிகுந்துள்ளது. இதில் விஷேடமாக

- ஆசிரியர் மாணவர்களுக்கான இடைவினை அன்பு, பரிவு, மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மகிழ்ச்சியுடையதாக இருப்பின் வகுப்பறையில் கற்றல் - கற்பித்தலுக்கேற்ப நல்லதோர் சூழ்நிலை காணப்படும். இவ்வாறான சூழ்நிலையில் வகுப்பறையில் கற்கப்படும் பாடம், செயல்கள் என்பன மாணவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி, கற்றலில் மிகுந்த ஆர்வத்துடன் அவர்களைக் கற்க தூண்டும். மாறாக,
- ஆசிரியர் மாணவர்களுக்கான இடைவினை அச்சம், சினம் போன்றவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பின் அது வகுப்புச் சூழ்நிலையில் பாதிப்பை ஏற்படுத்தி பல நடத்தைப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

- **ஆரம்பப்பிரிவு மாணவர்களது கற்றல் கற்பித்தல் முறைகளை மாற்றயமைத்தல்**

கற்பித்தலில் ஆசிரியர்கள் வெறும் சொற்களை அதிகம் பயன்படுத்திக் கற்பது அனேக சந்தர்ப்பங்கள் பயனற்றுப்போகும்;. பல்வகைக் காட்சிப் பொருட்களைப் பயன்படுத்திக் கற்பித்தல் வண்ணப்படங்கள், கருத்துப்படங்கள், மாதிரி உருக்கள், உண்மைப் பொருட்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கற்பித்தல் பிள்ளைகளுக்கு கூடிய பயனை அளிப்பதுடன், மிகப் பொருத்தமான புலக்காட்சி அனுபவங்களையும் வழங்கும். "காட்சிப் பொருட்களில் இருந்து கருத்துக்குச் செல்லல்" என்பது குழந்தைகளின் கற்பித்தலில் மிக முக்கியமானதாகும். அத்துடன் "சொற்களுக்கு முன் பொருள்" என்ற பெஸ்டொலொஜியின் கருத்தும் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றை ஆசிரியர்கள் கவனத்திலெடுத்து கற்பிப்பதற்கும் பிள்ளைகளின் கற்றலில் ஆர்வத்தைத் தூண்டச் செய்து அவர்களின் கற்றலை அதிகரிக்கச் செய்யலாம்.

இறுக்கமான, கண்டிப்புக்கூடிய வகுப்பறையைவிட மகிழ்ச்சி;யும் காப்புணர்ச்சியும் நிரம்பிய வகுப்பறைச் சூழ்நிலையே பிள்ளைகள் விரும்புவது இயல்பு. ஆசிரியர் மாணவரிடம் அன்பும், பரிவும் காட்டி செயற்படின் இச்சூழ்நிலை இலகுவாகவே ஏற்படும். வகுப்பறைச் சூழ்நிலை பிள்ளைகளுக்கு மனநிறைவைத் தருவதாக அமையும் போது கற்றல் இயல்பாகவே இடம்பெறும். இதனைக் கல்வியாளரான புரோபல் என்பவரின் கல்விச் சிந்தனையில் நாம் காணலாம். ஆகவே மாணவர்களது கற்றலை விரைவு படுத்த முனையும் ஆசிரியர், இவ்வாறான வகுப்பறைச் சூழ்நிலையைத் தோற்றுவிப்பது கூடிய பயனை அளிக்கும்.

கற்பிக்கும் போது ஆசிரியர் புதிய ஆசிரியர் புதிய கருத்துக்கள், அனுபவங்கள் என்பனவற்றை உள்வாங்கக் கூடிய பின்னணி அறிவு ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ளதா? என்பவற்றைக் கண்டறிந்து தேவையான கருத்துக்களை அறிமுகப்படுத்தி பின் புதிய கருத்துக்கள் அனுபவங்கள் வழங்கும்போதே அது கற்றலை இலகுபடுத்தும். வகுப்பறையில் ஆசிரியர் மாணவர் உறவு சிறந்த முறையில் பேணப்படுதல் முக்கியமானது. ஒரு வினைத்திறன் உடைய ஆசிரியர் மாணவரின் தேவைகளைக் கவனிப்பவராகவும், மாணவர் பிரச்சினைக்குள்ளாகும் போது அவர்களை நன்கு புரிந்து கொண்டு செயற்படுபவராகவும் விளங்குவார். வகுப்பறையிலே மாணவர் வெறுமனே கற்றல் என்ற கருத்துடனின்றி அவர்கள் கற்பதற்கு ஏற்ற வகையிலான உதவிகளை வழங்கக் கூடிய தொடர்புகளைப் பேணுபவர்களாகவும் விளங்குதல் பயன்தரும். ஆரம்பப்பிரிவு மாணவர்களது கற்றல் கற்பித்தல் முறைகள் தொடர்பாக நோக்கும் போது

- சகலவற்றிலும் திருப்திகரமான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பிள்ளைகளுக்கு இடமளிப்பதோடு அதற்கு போதியளவு திட்டமும் ஆயத்தமும் செய்து கொள்ளுதல்.

- கருத்துக்களுக்கு ஏற்ப அறிமுகங்களையும், கற்பித்தல் முறைகளையும் பிரயோகித்து பாடங்களை திட்டமிடல்.

- தகவல்களை தேடியறிதல் போன்று அவற்றை அறிக்கைப்படுத்தலும் முக்கியமானதாகும்.

- ஆரம்பக் கட்டத்தில் வாய் மொழியாகவும் பருமட்டான படங்கள் மூலமும் தனது அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கும் பிள்ளைகளை ஊக்குவித்தல்.

- கிரமமாக சொற்களையும் வாக்கியங்களையும் ஓரளவு விபரமான படங்களையும் பிரயோகிப்பதற்கு வழிப்படுத்தல், சகல வேலைகளையும் முயற்சிகளையும் மதித்தல்.

- பிள்ளைகளை குழுக்களாக வேலைகளில் ஈடுபடுத்தல். ஆரம்ப சந்தர்ப்பங்களில் குழு ஒன்றில் ஒருவர் செயலாற்ற வேண்டிய முறை தொடர்பாக பிள்ளைகளுக்கு வழிகாட்டலும் உதவி புரிதலும் அவசியம்.

- கற்றல், கற்பித்தல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது படிப்படியாக சேகரிக்கப்படும் தகவல்களையும், பொருட்களையும் முறையாக கட்டியெழுப்புவதோடு கண்காட்சியாகவும் மாற்றுதல்.

- பொருத்தமான வேளையில் கருப்பொருள்களைத் தெரிவு செய்து வளங்களை பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்.

- புதிய பாடத்திட்டத்திற்கேற்ப ஆக்கம், அழகியல், உடற்கல்வி என்பனவற்றில் உரிய தேர்ச்சிகளை அடைவதற்கான விரிந்த வீச்சுள்ள கற்றல், கற்பித்தல் அனுபவங்களை வழங்குவதற்கு வசதிகள் அளித்தல்.

- சுற்றாடல் சார் செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் போது அறிவு, திறன,; மனப்பாங்கு, பழக்கவழக்கங்கள் என்பனவற்றை கவனத்தில் கொள்ளல்.

- திறன்களிடையே கற்றல் திறன்களுக்கு புறம்பாக சமூகத்திறன்கள் மீதும் விசேட கவனம் செலுத்தல்.

- பிள்ளைகளின் குறைபாடுகளை கற்றல் நடவடிக்கைகளின் போது நிவர்த்தி செய்யும் நோக்குடன் மதிப்பீடு செய்தல்.

- சுற்றாடல் சார் செயற்பாடுகளை கணிப்பீடு, மதிப்பீடு செய்யும் போது அநேகமாக முறை சாரா அணுகு முறைகளை கடைப்பிடிக்க நேரிடலாம்.

- மாணவர்கள் வேலை செய்யும்போது அவர்களை அவதானிப்பதன் ஊடாகவும், செவிமடுப்பதனூடாகவும், கலந்துரையாடுவதனூடாகவும் கணிப்பீட்டு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி உரிய கணிப்பீட்டு படிவங்களில் அறிக்கைப்படுத்தி வைத்தல்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் பூரணமாக அக்கறை செலுத்தி செயற்படுவதன் மூலம் மாணவர்களின் கற்றலில் தொடர்ச்சியான ஆர்வம் ஏற்படுவதுடன் அவர்களிடம் சிறந்த நடத்தை மாற்றங்களையும் காண முடியும்.

சாராம்சம்

ஆரம்பப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களே ஒரு பிள்ளையின் வாழ்க்கைக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பவர்களாக இருப்பதனால் அவர்களது வகுப்பறை முகாமைத்துவம் சரியான முறையில் இருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் சில சில பிரசசனைகள், தடைகள் காரணமாக அவர்களது முகாமைத்துவத்தை சிறப்பாக முன்னெடுக்க முடியாதுள்ளனர். எனவே அவற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகளை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். அப்போது தான் மாணவர்களுக்கு சிறந்த அடிப்படைக் கல்வியைப் பெற்றுக் கொடுத்து சமுதாயத்திற்குப் பொருத்தமான மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இன்றைய நிலையில் கல்வி வளர்ச்சியினை எடுத்து நோக்கும் போது நகர்ப்புறங்களோடு ஒப்பிடுகையில் கிராமப் புறங்களின் கல்வி வளர்ச்சி குறைந்த மட்டத்திலே காணப்படுகின்றமையினை அறியக்கூடியதாகவுள்ளது. அதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்ற போதிலும் எந்தவொரு இடத்தில் இருக்கின்ற பிள்ளைக்கும் சிறந்த முழுமையான அடிப்படைக் கல்வியை ஏற்படுத்திக் கொடுப்பது கல்வித் துறை சார்ந்த அனைவரினதும் கடமையாகும். பிள்ளைகள் மூன்று தொடக்கம் ஏழு வயதிலேயே அதிகளவில் நுண்ணறிவு

விருத்தியைப் பெற்றுக் கொள்கின்றனர், இவ்வயதிலேயே அதிகளவான மனப்பதிவுகளையும் பெற்றுக் கொள்கின்றனர். எனவே இவ்வயதில் கற்றுக் கொள்ளும் விடயங்கள் அனைத்தும் பசுமரத்து ஆணி போல இலகுவாக, ஆழமாக மனதில் பதியக் கூடியது. இதனால் தான் இவ்வயதில் சமுதாயத்திற்கு பொருத்தமான, சமுதாயம் எதிர்பார்க்கின்ற சிறந்த நற்பண்புகளை கொண்ட பிரஜைகளாக மாணவர்களை உருவாக்குவதற்காக பாடசாலைக்கு அனுப்பப் படுகின்றனர். இவ்வாறாக நாட்டின் தேசிய குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு முதலில் ஆரம்பநிலைக் கல்விக்கான அடித்தளம் சரியாக இடப்படவேண்டும். ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் முதலில் வகுப்பறை மட்டத்திலான விசேட குறிக்கோளை சரியாக அமைக்கும் போதே உண்மையில் நாட்டின் தேசிய குறிக்கோளை நோக்கி செயற்படமுடியும். எனவே ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் முகாமைத்துவப் பிரச்சனைகளுக்கான காரணிகளை இனங்கண்டு தீர்க்க வேண்டியது அவசியமாகும். அப்போது தான் மாணவர்களின் எதிர்காலத்தை சரியாக அமைத்துக் கொடுக்க முடியும்.

துணைநின்றவை

- அலியார் யூ.எல்., 1999, இருநூற்றாண்டுகளில் கல்வி, பைதுல் ஹிக்ஹாக் சம்மாந்துறை.
- அனந்தராஜ் ம., 2005, தேசியத்தை நோக்கிய கல்வி, நந்தி பதிப்பகம் வல்வெட்டித்துறை.
- இராஜேஸ்வரன் ப. & தனபாலன்.பா, 2005, தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி, கல்வியியல் வெளியீட்டுத் திணைக்களம், 257, பலாலி வீதி - கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
- இராஜேஸ்வரன் ப. & திருவாசகன் ந., 2003, கல்வியியலாளன், 257, பலாலி வீதி - கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
- கருணாநிதி மா.,2008, கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம்,
- சத்தார் எம்.பிர்தௌஸ், 2009, நிலைமாற்று முகவர், அன்னை வெளியீட்டகம், 251ஏ பிரதான சாலை, மருதமுனை.
- சந்திரசேகரம் சோ., 2004, கல்வி - ஒரு பன்முக நோக்கு, உமா பதிப்பகம், கொழும்பு.
- https://www.researchgate.net/topic/Primary-Education
- https://www.tes.com/.../school.../primary-school-where-teacher-led-research-having-a-..
- https://www.theguardian.com/teacher...blog/.../priorities-improve-primary-education

மதிப்பிடப்பெற்றது

பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்

முனைவர் **வசந்தமணி இராமலிங்கம்**
தமிழ் - உதவிப்பேராசிரியர்
முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
இராசிபுரம், நாமக்கல்-637 408
tasrvi@muthayammal.in

இம்மண்ணில் தோன்றி வளர்ந்த ஒவ்வொரு நாகரிகமும் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முயலும் சமூக போராட்டத்தில் ஏராளமான கலைகளைத் தனக்கென்று தனி அடையாளமாக விட்டுச் சென்றுள்ளன. அவை கடந்தகால வரலாற்று நிகழ்வுகளின் பின்னணிகளாய் மட்டுமே பார்க்கப்படுவதில்லை. ஒருவேளை அவ்வாறு சாதாரணமாக எண்ணிக் கடந்து செல்ல முயன்றோமானால் அது அந்த நாகரிகத்தின் அழிவுப்பாதைக்கே மனித குலத்தைக் கொண்டு செல்கிறது. மருத்துவம் தொடங்கி ஏறுதழுவல் வரை அவற்றின்மீதான கவன ஈர்ப்பைக் காலம் இயல்பாய்த் தம்மிடம் ஈர்த்துக் கொண்டுள்ளது. அவற்றை நோக்கி நம்மை நகர்த்திச் சென்றுள்ளது.

பாட்டி வைத்தியத்தைக் (நாட்டுப்புற மருத்துவம்) கேலி செய்து, புறந்தள்ளி விட்டு ஆங்கில மருத்துவத்தைக் கொண்டாடிய நமக்குக் காலம் நல்ல பாடம் கற்றுத் தந்தது; தருகின்றது. டெங்கு காய்ச்சல் பரவியபோது மாண்டு போன மானிடரைக் கண்டு மரண பயத்தில் உறைந்து கிடந்த நம்மை நிலவேம்புக் கசாயம் எனும் நாட்டுப்புற மருத்துவத்தை நோக்கி ஓடவைத்தது அரசாங்கமோ, பிற மருத்துவ முறைகளோ கிடையாது. நம்மையும் நம் அடையாளத்தையும் நாம் துறக்க முயலும்போது காலம் விடுக்கும் எச்சரிக்கையே இதுபோன்ற நிகழ்வுகளாகின்றன. இப்படி அடுக்கடுக்காய்க் கூற எண்ணிலடங்கா உதாரணச் சிதறல்கள் உள்ளன. அந்த வரிசையில் நம் முன்னோர்களின் மிக நுணுக்கமான கலையான சிற்பக்கலையைப் பற்றிய குறிப்புகளை முன்வைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

சிற்பக் கலை அறிமுகமும் வியத்தகு சிற்பங்களும்

உள்ளம் உவந்து உற்றுநோக்கின் கருங்கல்லிலும் கடவுளைக் காணும் சமூகம் நமது சமூகம். அதற்கு உறுதுணையாக நிற்பது சிற்பக் கலையாகும். கண்ணையும் கருத்தையும் கவர்ந்து தன்வயம் இழந்து வியந்து பார்க்கச்செய்யும் அளவிற்கு, அழகுணர்வைத் தாண்டிய பிரமாண்டப் படைப்பாய்ச் சிற்பங்கள் உயர்ந்து நிற்கின்றன. சாமானிய மனிதனால் யூகிக்கக்கூட முடியாத உருவ அமைப்புகளைச் சிற்பிகள் உளியின் நுனியில் சிந்திக்கின்றனர். சிங்கத்தின் வாயில் உருளும் உருண்டைக்கல் (தாராசுரம்), வாலி வதை சிற்பம் (தாராசுரம்), பால் நீல நிறமாக மாறும் நாகர்சிலை (திருநாகேசுவரம்), இசைத்தூண்கள் (சுசீந்திரம்), இரதக்கோயில்கள் (மாமல்லபுரம்), ஆயிரங்கால் மண்டபம் (மதுரை மீனாட்சியம்மன் கோவில்) என ஏராளமான உதாரணங்கள் சிற்பக்கலைஞனின் விசாலமான கலைத்திறனைப் புலப்படுத்துகின்றன.

இச்சிற்ப வடிவங்கள் யாவற்றிற்கும் அளவுக் கணக்கீடுகள் பயன்படுத்தப் படுகின்றன. அக்கணக்கீடுகளே அவற்றின் வடிவங்களைத் தீர்மானிக்கின்றன. சிறியது முதல் பெரியது வரையிலான அத்தனைக் கோவில்களிலும் தெய்வ வழிபாட்டிற்கு உரிய சிற்பங்கள், தெய்வ வழிபாடுகளற்ற அலங்காரச் சிற்பங்கள் என இரண்டு வகையான சிற்ப உருவ அமைப்புகள் காணப்படுகின்றன. தெய்வ வழிபாடுகளற்ற சிற்பங்களுள் மிக முக்கிய இடத்தைப் பிடிப்பவை அலங்கார சிற்ப வடிவங்களாகும். இவை ஒப்பனைப் பட்டை என்றும், கரைப்பட்டைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவ்வகை வடிவமைப்பில் மலர்கள், கொடிகள், நீண்ட வரிகள், கட்டம்,

சதுரம், நாற்கோணம், சிக்கலான வலைப்பின்னல்கள், பறவைகள், விலங்குகள் முதலானவற்றின் உருவங்கள் செதுக்கப்படுகின்றன.

சமச்சீர் தன்மை

ஒரு வடிவம் அதன் அமைப்பில் எந்தவிதமான மாற்றமும் அடையாமல் அமைக்கப்படுமானால் அது சமச்சீர் தன்மை எனப்படும். ஒரு புள்ளியிலிருந்து தொடங்கப்படும் வடிவத்தைச் சீரான இடைவெளியில் அதே புள்ளியுடன் இணைக்கும் சமஅளவை உருமாற்றமே சமச்சீர் தன்மையாகும். இவை தொடங்கப்படும் புள்ளியிலிருந்து முடியும் புள்ளி வரையிலான இரண்டு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் மாற்ற முறாமல் அமைக்கப்படும்.

அலங்காரப் பட்டை வடிவமைப்பு முறை

அலங்காரப் பட்டை என்பது வரிவடிவில் உருவாக்கப்படும் கலையாகும். சீரான இடைவெளியுடன் நேர்கோட்டு அமைப்பில் மீண்டும்மீண்டும் தன்னை இணைத்துக் கொள்ளக்கூடிய ஒரு வடிவத்தைத் தொடர்ச்சியாக அமைப்பதன் மூலமாகப் பல வகையான உருவங்களை உருவாக்க முடியும். இவ்வுருவங்களை வடிவமைக்கும் பொழுது அவற்றிற்கு இடையிலான இடைவெளி சீரான சமநிலையுடன் இடம்பெறுவது மிக முக்கியமானதாகும். இந்த வடிவங்கள் சமச்சீர் தன்மையை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றன. ஆடைகளில் கரைப்பட்டைகள், தரைவிரிப்புகள் முதலானவற்றை நேர்த்தியாக வடிவமைப்பதில் இக்கலை பெரிதும் பயன்படுகின்றது.

பழமையான கட்டிடங்கள், கோவில் கட்டிடச் சுவர்கள் ஆகியவற்றில் இவ்வலங்காரப் பட்டை வடிவமைப்புகளைக் காண முடியும்.

அலங்காரப் பட்டை வடிவமைப்பின் வகைகள்

அலங்காரப் பட்டை வடிவமைப்பு முறை என்பது ஏழு வகைகளாகக் கருதப்படுகின்றது. அவை,

1. இடப்பெயர்ச்சிச் சமநிலை
2. சருக்கல் பிரதிபலிப்பு
3. செங்குத்துப் பிரதிபலிப்பு
4. சுழற்சிச் சமநிலை
5. சறுக்கல் பிரதிபலிப்பு, மற்றும் சுழற்சிச் சமநிலை
6. கிடைமட்ட பிரதிபலிப்பு மற்றும் சுழற்சிச் சமநிலை
7. கிடைமட்ட பிரதிபலிப்பு மற்றும் செங்குத்துப் பிரதிபலிப்பு

ஆகியனவாகும்.

கீழ்க்காணும் பகுதியில் ஒவ்வொரு வகையின் விளக்கத்தின் கீழும் அவற்றிற்கான மாதிரி வரைபடம் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு நான் 'அ' என்ற எழுத்தைப் பயன்படுத்தி வரைபடத்தை வரைந்துள்ளேன். இதைப்போல வேறு எந்த எழுத்துக்களை வேண்டுமானாலும் பயன்படுத்தி வரைபடங்களை உருவாக்க முடியும். இம்மாதிரி வரைபடங்களின் அடிப்படையில்

உருவங்களைச் செதுக்கும்பொழுது அவை கலையம்சம் கொண்ட சிற்பங்களாகத் தோற்றம் பெறுகின்றன.

1.இடப்பெயர்ச்சிச் சமநிலை

இரண்டு புள்ளிகளுக்கு இடையே அமைக்கப்படும் வடிவமைப்பானது அதன் அளவீட்டில் சிறிய மாற்றம்கூட இல்லாமல் தொடர்ச்சியாக அமைக்கப்படுவது இடப்பெயர்ச்சிச் சமநிலை எனப்படும். இவ்வமைப்புமுறை இதன்கீழ் மேலும் ஆறுவகையான சமச்சீர் வடிவங்களைத் தோற்றுவிக்க அடிப்படையாக அமைகின்றது.

படம் : 1

2.சருக்கல் பிரதிபலிப்பு

இரண்டு புள்ளிகளுக்கு இடையே அமைந்துள்ள சமஅளவிலான இடைவெளியுடன் கூடிய வடிவங்கள் அதன் அமைப்பில் மட்டும் சிறிய உருமாற்றத்தின்கீழ்த் தலைகீழான பிம்பத்தை எதிரொலிக்கிறது. இது நேருக்கு நேரான பிம்பமாக இல்லாமல் குறிப்பிட்ட இடைவெளியில் சறுக்கல் வடிவில் அமைகின்றது.

படம் : 2

3.செங்குத்துப் பிரதிபலிப்பு

செங்குத்துப் பிரதிபலிப்பு என்பது சமச்சீரான தன்மை கொண்ட உருவ அமைப்புகள் ஒன்றோடு ஒன்றாக எதிரெதிரான வரி அமைப்பில் உருவாக்கப்படுகிறது. இது 180 டிகிரி கோண அளவில் அரைசுழற்சி முறையில் அமைக்கப்படுகின்றது.

படம் : 3

4.சுழற்சிச் சமநிலை

இவ்வகை வடிவமானது இரு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தொலைவில் அமைக்கப்பட்டுள்ள உருவங்களை மேலிருந்து கீழாகச் சுழற்சி முறையில் எதிரொலிக்கிறது. செங்குத்துப் பிரதிபலிப்பைப் போலவே இதுவும் 180 டிகிரி கோண அளவில் அரைசுழற்சி முறையில் அமைக்கப்படுகின்றது.

படம் : 4

5.சறுக்கல் பிரதிபலிப்பு மற்றும் சுழற்சிச் சமநிலை

இம்முறையில் உருவாக்கப்படும் வடிவங்கள் சறுக்கல் மற்றும் சுழற்சிச் சமநிலை ஆகிய இரண்டு வகைகளையும் தம்முள் இணைத்துக் கொண்டு உருவாக்கப்படுகின்றன.

படம் : 5



6.கிடைமட்ட பிரதிபலிப்பு மற்றும் சுழற்சிச் சமநிலை

சமச்சீரான இடைவெளியுடன் காணப்படும் உருவங்கள் அவற்றின் இடைவெளியில் மாற்றமின்றித் தன் பிம்பத்தைக் கிடைமட்டமாகவும் சுழற்சி முறையிலும் எதிரொலிக்கின்றன.

படம் : 6

7.கிடைமட்ட பிரதிபலிப்பு மற்றும் செங்குத்துப் பிரதிபலிப்பு

இடப்பெயர்ச்சிச் சமநிலையை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் ஏழு வகையான உருவ அமைப்புகளில் இறுதியான வடிவம் இதுவாகும். இது சீரான இடைவெளியுடன் கிடைமட்டமாகவும், செங்குத்தாகவும் இணைந்த உருவங்களை உருவாக்குகிறது.

படம் : 7

மேற்கண்ட ஏழு வகையான கணிதக் கணக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டே சிற்பங்களைத் துல்லியமாகச் செதுக்கியுள்ளனர். இவற்றில் உருவ எதிரொலிப்புத் தன்மை என்பது அடிப்படை விளைவாக அமைந்தாலும், அவற்றிற்கு இடையே உள்ள இடைவெளி சமச்சீர் தன்மையுடன் அமையும் பொழுதே அலங்காரச் சிற்ப வடிவங்களாகத் தோற்றம் பெறுகின்றன.

முடிவுரை

இறைவன் உறையும் ஆலயங்கள் பக்திக்கு மட்டுமே உரியவையாக இல்லாமல் கலைகளின் பிறப்பிடமாகவும் திகழ்ந்துள்ளன. அச்சில் வார்த்தது போல அத்தனைச் சிற்பங்களும் அளவில் மாற்றமின்றி இருப்பது சிற்பிகளின் கலைத்திறனைக் காட்டும் நல்லதொரு சான்றாகும். இவை யாவற்றையும் காணும்பொழுது பழங்காலச் சிற்பக் கலைஞர்கள் வெறும் சிற்பக் கலைஞர்களாக மட்டுமே இருந்துவிடவில்லை என்பது புலனாகிறது. வடிவவியல் கணிதத்தைச் சிற்பக்கலையில் புகுத்திய கணிதவியலாளர்களாகவே அவர்களை அடையாளப்படுத்தத் தோன்றுகின்றது. சிற்பங்களின் உருவாக்கத்திற்குப் பின்புலமாகக் காணப்படும் இத்தகைய அறிவியல் கோட்பாடுகளை இனியாவது புரிந்துகொண்டு இக்கலைநுட்பங்களை அழியாமல் பாதுகாக்க முயலவேண்டும் என்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

பார்வை நூல்

- *Gallian, Joseph A., 2011(4th edi.), Contemporary Abstract Algebra - Special topics (Freize patterns), Narosa Publication, Srilanka.*

மதிப்பிடப்பெற்றது

கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்

VIJI.P
Research Scholar
Ori & Mss Library
University of Kerala
09496411153, 08281471857
vijimarayoor@gmail.com

கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்ட வளாகம், கீழ்த்திசைச் சுவடியியல் நூலகமானது இந்தியாவில் உள்ள சுவடியியல் நூலகங்களில் 65,000க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளைக் கொண்ட முதன்மையான நூலகம் என்ற பெருமையைக் கொண்டது. இப்பெருமைக்கு முதன்மைக் காரணமாக அமையக்கூடியவர்கள் திருவிதாங்கூர் அரச குடும்பங்களும், அவர்களால் இத்துறையில் நியமிக்கப்பெற்ற பொறுப்பாளர்களும், இயக்குநர்களுமே ஆவர். இத்துறையின் வரலாற்றை எடுத்துரைக்கும் விதமாகவே இக்கட்டுரை அமைகின்றது.

துறை வரலாறு

திருவிதாங்கூர் அரச குடும்பத்தினர் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சியில் சிறந்து விளங்கினர். 1903இல் அரசராக இருந்த ஸ்ரீமூலம் திருநாள் அவர்கள் வடமொழியில் பண்டிதரான T.கணபதி சாஸ்திரி அவர்களைச் சுவடிகளைப் பதிப்பிக்க நியமித்ததோடு, 1908இல் 'வடமொழிப் பொறுப்பாளர் நிறுவனம்' எனும் தனி நிறுவனத்திற்கு முதல் பொறுப்பாளராகவும் பணியமர்த்தினார். இவர் எண்பத்து ஏழிற்கும் மேற்பட்ட நூற்களைப் பதிப்பித்துள்ளார்.

இவர் 1924இல் பதிப்பித்த பாஷ நாடகத்திற்காக 'மகாமகோ பாத்தியாய' எனும் பட்டமும், ஜெர்மனியில் உள்ள டுபிங்கன் பல்கலைக்கழகம் 'முனைவர்' பட்டமும் அளித்துச் சிறப்பித்தன. இதே ஆண்டு 'மலையாளப் பொறுப்பாளர் நிறுவனம்' தொடங்கப்பட்டு, முதல் பொறுப்பாளராக உள்@ர் S. பரமேஸ்வரன் ஐயர் பணியமர்த்தப்பட்டார். இவர் பல்வேறு சுவடிகளை ஆராய்ந்து எழுதிய மலையாள இலக்கிய வரலாற்றுக் கையெழுத்துப் பிரதிகள் இன்றளவும் நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

1938இல் இந்த இரண்டு நிறுவனங்களும் கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, 'கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் நூலகம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1966இல் 'கீழ்த்திசைச் சுவடியியல் நூலகம் மற்றும் ஆய்வு நிறுவனம்' என்ற பெயரையும் பெற்றது. இறுதியாக கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம் வளாகத்தில் 1982இல் அரண்மனை வடிவில் கட்டப்பட்ட இந்நூலகத்திற்குச் சுவடிகள் கொண்டு வரப்பட்டு இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து 1982இல் இத்துறையின் இயக்குநராகப் பணியாற்றிய இராகவன் பிள்ளை அவர்களின் முயற்சியால் வடமொழி முனைவர்பட்டப் படிப்பும், பின் தமிழ் முனைவர் பட்டப்படிப்பும், மலையாள முனைவர் பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டன.

சுவடிகளின் பொருண்மை வகைப்பாடு

இங்கு வேதம், மந்திரம், இலக்கணம், தந்திரம், மருத்துவம், ஜோதிடம், புராணம், சங்கீதம் போன்ற பொருண்மைகளில் ஓலைச்சுவடிகளும், காகிதச் சுவடிகளும் காணப்படுகின்றன.

எழுத்து முறைகள்

மேற்கண்ட பொருண்மைகளில் அமைந்த ஓலை மற்றும் காகிதச் சுவடிகள் வட்டெழுத்து, கோலெழுத்து, மலையாண்மா, தேவநாகரி, நந்தி நாகரி, அரபிக், பர்மிஷ், கிரந்த எழுத்து, நேவாரி, ஆங்கிலம் முதலான எழுத்து முறைகளில் எழுதப்பட்டுள்ளன.

மொழி

தமிழ், மலையாளம், சமஸ்கிருதம், கன்னடம், பர்மிஷ், ஹிந்தி, ஒரியா, குஜராத்தி, மராத்தி, ஆங்கிலம் முதலான மொழிகளில் எழுதப்பெற்ற ஓலை மற்றும் காகிதச் சுவடிகள் இங்குக் காணப்படுகின்றன.

எழுதுபொருட்கள்

ஓலை, செப்பேடு, துணி, பேப்பரஸ், பு+ர்ஜபத்ரம், அகருமரத்தோல், யானைக்கொம்பு, கையால் செய்யப்பட்ட காகிதங்கள், பழங்கால எழுதுபொருட்கள் போன்றவை இங்குக் காணப்படுகின்றன.

இதழ்கள்

இத்துறையில் ஆண்டுதோறும் '*Journal of Manuscript Studies*' எனும் ஆங்கில மற்றும் சமஸ்கிருத இதழும், 'பிராஜீன கைரளி' எனும் மலையாள இதழும் வெளிவருகின்றன. இவை பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதழ்களாகும்.

பராமரிப்பு

இங்குள்ள ஓலைச்சுவடிகள் இரண்டு முறைகளில் பராமரிக்கப்படுகின்றன. ஒன்று பாரம்பரிய முறை, மற்றொன்று நவீன முறை.

பாரம்பரிய முறை

கட்டிவைக்கப்பட்ட சுவடிகளை அவிழ்த்து, பொடி நீக்கி, கற்பு+ரப்புல் எண்ணெய் தேய்க்கப்படுகிறது. மற்றும் கற்பு+ரப்புல் எண்ணெய்யும் ஐசோபுரொபைலும் சரிவிகிதத்தில் எடுத்துத் தேய்க்கும் முறையையும் பின்பற்றுவதோடு, சுவடிக்கட்டுகள் இருக்கும் அறைகளில் சிவப்பு துணியில் கற்பு+ரம் சேர்த்துக் கட்டிவைக்கப்படுகிறது. காகிதச் சுவடிகளுக்கு இடையே பாம்பின் தோல் வைத்திருப்பதால் அவை நீண்ட நாள் அழிந்து போகாமல் இருக்கின்றன.

நவீனமுறை

ஓலைச்சுவடிகளை மின்படிவங்களாகச் சேகரிக்கும் முறை விரைவில் பின்பற்றப் பெறவுள்ளது.

அரியவகைச் சுவடிகள்

- இத்துறையில் 611 ஓலைகளைக் கொண்ட தமிழ்ச்சுவடியான 'கந்தபுராணம்' அதிக ஓலைகளைக் கொண்ட சுவடி எனும் பெயர் பெருகின்றது.
- எண்ணிக்கையில் ஆறு ஓலைகளை மட்டுமே கொண்ட வைத்தியச் சுவடி மிகவும் சிறிய சுவடி எனும் பெயர் பெறுகின்றது.
- 67 செ.மீ உடைய 'ஜாதக பல விசேஷ நிரூபணம்' மிகவும் நீளம் கூடிய சுவடியாகும்.
- AD 1521இல் மலையாள மொழியின் முதல் வடிவமான ஆரிய எழுத்தில் எழுதப்பட்ட 'தெய்வாகமம் பாஷ' எனும் சுவடியே மிகப் பழமையானது.

- AD 1390இல் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்ட சாமவேதத்தின் ஒரு பகுதியான யாகத்தைக் குறிப்பிடும் 'ஊக கானம்' எனும் பெயரிலான சுவடி காகிதச் சுவடிகளில் மிகவும் பழமையானது.
- மகாராஷ்டிராவில் இருந்து கிடைக்கப்பெற்ற 300 ஆண்டுகாலப் பழமையான 'சித்திர மகாபாரதம்' காகிதச் சுவடியானது, மகாபாரதக் கதையை மராட்டி மொழியில் விளக்குகின்றது. இச்சுவடியில் தங்கமுலாம் பூசப்பெற்றுள்ளது.
- AD1522இல் எழுதப்பட்ட 'அத்யாத்ம இராமாயணம்' எனும் சுவடியானது இராமாயணக் கதையை 98 ஓலைகளில் 318 வரைபடங்களாக விளக்குகின்றது. இதனை அவ்வாறே புத்தக வடிவமாக்கியவர் விஜயன் ஆவார்.
- 'இந்தோனேஷியன் சித்திர இராமாயணம்' இராமாயணக் கதையை இந்தோனேஷியன் மொழியில் ஆங்கில எழுத்துப் பயன்படுத்திப் படங்களுடன் விவரிக்கின்றது.
- 'சிவலிங்காங்க சாசனம்' எனும் தந்திர சுவடியில் இரண்டு ஓலைகளை ஒட்டிவைத்தால் மட்டுமே பொருள் புரியும் வண்ணம் படம் வரையப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் மணலிக்கரை மடத்திலிருந்து கிடைக்கப் பெற்ற 'ஆர்ய மஞ்சுஸ்ரீ மூலகல்பம்' எனும் புத்தமதச் சுவடியானது, 'சீதாளம்' எனும் ஓலையில் 'நேவாரி' எழுத்துமுறையைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது.
- திருவிதாங்கூரின் அரசராக இருந்த ஸ்ரீமூலம்திருநாள் அவர்களின் 'சங்கீத நூல்கள்' இங்கு உள்ளன.
- 'சாமுத்திரிகா லக்ஷணம்' எனும் தமிழ்ச்சுவடியைப் படியெடுத்தவர் ஓலையின் ஒரு பக்கம் 'முப்பது' வரிகள் வருமாறு எழுதியுள்ளார். இதனை நுண்ணோக்கியைப் பயன்படுத்தி மட்டுமே வாசிக்க முடியும்.
- 'அக்ஷரப்ரஷ்ணம்' எனும் ஜோதிடச் சுவடியின் ஒரு பக்கம் இராமாயணப் பாடல் வரிகளும், அதன் மறுபுறம் அச்சுவடியின் ஓலையைத் தேர்ந்தெடுப்போரின் பலன்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பல காகிதச் சுவடிகளில், இலைச்சாறு போன்ற இயற்கையாகக் கிடைக்கக் கூடிய நிறம் பயன்படுத்திக் குதிரைகள், பகவத்கீதை படங்கள் போன்றவை வரையப்பட்டுள்ளன.
- சுவடி எழுதுவதற்காகத் தயாரிக்கப்பட்ட ஓலைகளின் இருபுறமும் மரப்பலகைகள் வைத்துக் கட்டப்படும். இவற்றிற்கு மாறாக யானைக் கொம்புகளில் திருமாலின் உருவம் மற்றும் இயற்கை நிறப்பூச்சுச் செய்த சுவடிகளும் இங்குக் காணப்படுகின்றன.
- AD 1770இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முன்சிறமடத்தின் குடும்ப விவரங்கள் எழுதப்பட்ட செப்பேடுகள் இங்குக் காணப்படுகின்றன.
- AD 1674இல் வட்டெழுத்தில் எழுதப்பெற்ற 'இராம சரிதம்' என்னும் சுவடியானது மலையாள மொழிக்குச் செம்மொழித் தகுதி கிடைப்பதற்கு முக்கியக் காரணமாக இருந்துள்ளது.
- ஓலைச்சுவடிகளை வட்டமாக வெட்டி ருத்திராட்சம் போல நூலில்கட்டி வடிவமைக்கப்பட்ட சுவடியில் 'தேவி மகாத்மீயம்' 11ஆவது பகுதி எழுதப்பட்டுள்ளது.

வெளியீடுகள்

இத்துறையின் பதிப்புகள் அனைத்தும் *Trivandrum Sanskrit Series, Trivandrum Malayalam Series, Trivandrum Tamil Series* மூலம் வெளிவருகின்றன.

வடமொழிப் பதிப்புகள்

- அத்வைத சாதக - T.பாஸ்கரன்
- இராமாத்யுதயம் - P.விசாலாக்ஷி

- பு+ர்வபாரதம் சம்பு, முஷிகவம்ச - K.இராகவன் பிள்ளை

தமிழ்ப் பதிப்புகள்

- இராமாயணத் திருப்புகழ், நன்னூல் புதுவுரை, கீதாசாரத் தாலாட்டு - ஓ.பத்மகுமாரி

மலையாளப் பதிப்புகள்

- பாடகதாமாலிகா - N. சாம்
- வாதில்துறபாட்டுகள் - P.K.சுமதிக்குட்டி
- கோபால லீலாமிர்தம் கம்ச பாட்டு - K.G.ஸ்ரீலேகா
- நளசரிதம் மணிப்பிரவாளம் - M.ஸைனபா
- மருந்துகளும் யோகங்களும் - ரஜினி R.S

அட்டவணைகள்

இங்குள்ள சுவடிகள் அனைத்தும் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

வடமொழி

வடமொழிச் சுவடி அட்டவணை - Vol : 1 - 7

தமிழ்

தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை : 1-3 பத்மநாபன் தம்பி, மற்றும் ஓ.பத்மகுமாரி

தமிழ்ச் சுவடிப் பெயர்கள் -ஓ.பத்மகுமாரி

மலையாளம்

மலையாளச் சுவடி விளக்க அட்டவணை - Vol : 1

மலையாள அட்டவணை - 1

இத்துறையில் பதிப்பிக்கக் கூடிய நூல்கள், இதழ்கள் மற்றும் ஓலைச்சுவடி அட்டவணைகள் கேரளப் பல்கலைக்கழகத்தின் பதிப்பியல் துறையில் கிடைக்கும்.

சுவடியியல் - விருப்பப் பாடம்

பிற துறைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது விருப்பப் பாடமாகச் சுவடியியலைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுக்கும் சுவடியியல் துறையின் முன்முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் வட்டெழுத்து, கிரந்த எழுத்து, தமிழ், மலையாளம், பிராமி முதலான எழுத்து முறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கையெழுத்துப் பிரதிகள்

வடமொழி மற்றும் மலையாள மொழிகளில் சிறந்த கவிஞர்களாகக் கருதப்படுகின்ற கணபதி சாஸ்திரிகள், உள்@ர் S.பரமேஸ்வரய்யர், வள்ளத்தோள் நாராயண மேனோன், குட்டிக்கிருஷ்ணனார், T.கோவிந்தபிள்ளை, கேரளவர்மா வலியகோயித் தம்புரான், சர்தார் K.M. பணிக்கர் ஆகியோர் படைப்பின் கையெழுத்துப் பிரதிகளும், தமிழ்ப் புதின ஆசிரியரான அ.மாதவனின் 'கிருஷ்ணப் பருந்து' புதினத்தின் கையெழுத்துப் பிரதிகளும் இங்கு காணப்படுகின்றன.

விருதுகள்

- இந்திய அரசால் 2007இல் 'ஆர்யமஞ்சு ஸ்ரீ மூலகல்பம்' எனும் சுவடிக்காக 'vijnananidhi' பட்டம் கிடைத்துள்ளது.
- Bhashakkoru Dollar - K.G. ஸ்ரீலேகா அவர்களுக்கு சிறந்த நெறியாளர் விருது.
- Malayalabhasha Parishath - M.சைனபா அவர்களுக்கு 'சி.வி. இராமன் பிள்ளை' நினைவு விருது.

- *Bhashakkoru Dollar* - ஸஜினா, மாயா.K.S. ஆகியோர்க்குச் சிறந்த ஆய்வேட்டிற்கான விருது.

நிறைவுரை

நீண்ட வரலாற்றைக் கொண்ட கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் நூலகச் சுவடிகள் பல்வேறு அரண்மனைகள், குடும்பவீடுகள், தனிநபர் போன்றோர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். இத்துறையில் உள்ளோர் இன்றளவும் சுவடி சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வுகளையும் பல்வேறு இடங்களுக்குச் சென்று செய்து வருகின்றனர்.

துணைநின்றவை

1. *Journal of Manuscript Studies - Vol : XXXI and XXXII*
2. *Thalakshara -2018 - M.சைனபா*

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 மே 2018 மலர்:4 இதழ்:13 274

மதிப்பிடப்பெற்றது

சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை

த.சத்தியராஜ்
தமிழ் உதவிப் பேராசிரியர்
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி (த.)
கோயமுத்துர் - 28
neyakkoo27@gmail.com

கவிதைத் தொகுப்பு : சொல் நிலம், ஆசிரியர் : மகாராசன், பதிப்பாண்டு : 2007 (முதல் பதிப்பு), வெளியீடு : ஏர், 28, காந்தி நகர், செயமங்களம், பெரியகுளம். பக்கங்கள் : 88, விலை: உரூபாய் 100.

***

"எந்த ஒரு படைப்பாளியும், ஒரு படைப்பில் அடைய வேண்டிய உச்ச நிலையை நோக்கிய தேடலில் ஈடுபடாமல் இருக்க இயலாது. அத்தகைய அவர்களின் தேடல்கள், பிற படைப்பாளியைப் பற்றிக் கூறுகிற கூற்றுக்கள், இலக்கியம் பற்றிய ஆழமான கணிப்புக்களாக அமைந்து கிடக்கின்றன" **என்று** க.பஞ்சாங்கம் (2011:43) படைப்பாளனையும் படைப்பையும் நிறுத்துப் பார்க்கிறார். அவ்வகையான படைப்பாகச் சொல் நிலம் அமைந்திருக்கிறது. இருப்பினும் சிற்சில முரண்களும், பிழைகளும் இல்லாமல் இல்லை. இது எந்தவொரு படைப்பும் முழுமையாகவோ பிழையற்ற தன்மையுடையதாகவோ அமைந்துவிடாது என்பதைக் காட்டுகிறது. தொடக்கக்கால இலக்கியங்களையும் இலக்கணங்களையும் இவ்வரிசையில் நிறுத்திப் பார்க்கமுடியும். அதனைக் கருத்தில் கொண்டு சொல் நிலம் எனும் கவிதைத் தொகுப்பின் வெளிப்பாட்டுத் திறனைப் பார்க்க முயலுகிறது இவ்வெழுத்துரை.

சொல் நிலம் - உருவாக்கம்

பண்டித, எளிய நடைகளில் இருப்பது, உவமை மிகுதியாக இடம்பெறுவது, இருண்மை நிலையில் இருப்பது, தொன்மம், புராணத்தொடர்பு, சமகாலம் - அரசியல் முறை, சமூகம், வாழ்க்கைமுறை எனப் பல்வேறு முகங்களைக் காட்டுவதுதான் கவிதை எனப் பெரும்பான்மையானோர் கருதுவர். அப்படிப்பட்ட ஓர் இலக்கியப் பிரதியாகத்தான் சொல் நிலமும் அமைந்திருக்கிறது.

இப்பிரதி தொல்காப்பியம், சங்கப்பனுவல்கள் போன்ற வாசிப்புத் தளத்தை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் உருவாகியிருக்கலாம். இதனை இக்கவிதைப் பிரதியும், கவிஞருடனான உரையாடலும் உணர்த்தின.

மதிப்பீட்டு முகங்கள்

ஒரு பனுவலின் மதிப்பீடானது அதனை வாசிக்கும் வாசகனின் வாசிப்புக்கு ஏற்ப மாறுபடும். ஒரு கவிதையின் தன்மை நுகர்வோருக்கு, அவர்தம் புலன்வழிக் கிடைக்கும் காட்சிகள் படிமங்களாக விரியும். *"கவிதைகளில் அறிவுப்பூர்வமான எண்ணங்களைச் சிந்தனை அலைகளாக வெளிப்படுத்துதல் ஒரு முறை. இதற்கு மாறாக, கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் சுவைத்தும், மூக்கால் முகர்ந்தும், உடலால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புல உணர்வுகளை உள்ளத்தே எழுப்புதல் அல்லது உணரச் செய்தல் மற்றொரு முறை. புலனுணர்வுகளுக்கு விருந்தளிக்கும் முறையில் கவிதையைப் படைக்கும் இத்தன்மையையே புலனுகர்வுத் தன்மை*

(Sensuousness) என்கிறோம்" (பா.ஆனந்தகுமார்,2003:33). இப்படிப்பட்ட அடையாளம் சொல் நிலம் தொகுப்பில் காணப்படுகிறது.

குணம் என்பதை 'நற்கருத்து, சொற்சுருக்கம், வடிவமைப்பு, எடுத்துரைப்பியல், நடையழகு' போன்ற கவித்திறன்களை உள்ளடக்கியவை என்பதாகப் புரிந்துகொள்ளலாம். குற்றம் 'சொற்பிழை, கருத்துப்பிழை, மொழிப்பிழை' போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள், குணம் மிகுதியாக அமைந்திருப்பதையே சிறந்த கவிதை என்பர்.

"நல்ல கவிதை என்பது குற்றங்கள் (Dosha) இல்லாதது, குணங்கள் (Guna) நிறைந்தது; அணிகள் அமைந்தது (Alankara) என்று வாமனர் கருதுகிறார். குணங்களைச் சேர்த்து குற்றங்கள் இல்லாமல் செய்யுளை யாப்பதற்காக, கவிஞன் இரண்டையும் நன்றாக அறிந்திருக்க வேண்டும் என்கிறார் வாமனர். இவை தவிர வெளிப்படப் புலப்படாது மறைந்திருக்கும் குற்றங்கள் (சூட்சும தோஷங்கள்) பற்றிய அறிவும் கவிஞனுக்கு வேண்டும் என்று வற்புறுத்துகிறார் வாமனர்" (கி.இராசா, 2016:99). இக்கருத்தின் அடிப்படையில் இக்கவிதைத் தொகுப்பை அணுகிப் பார்க்கும்பொழுது குணம் - குற்றம் ஆகிய இரண்டு தன்மைகளையும் இனங்காண முடிகின்றது. இவ்வகையில் இந்தத் தொகுப்பை, கவித்திறம் (குணம்), போலி (குற்றம்) என்ற இருவகைகளில் மதிப்பிடலாம்.

கவித்திறம் (குணம்)

மேலே சுட்டிக்காட்டிய குணத்தின் வரையறைகள் இங்கு மதிப்பீட்டுத் தன்மைகளாக அமையவில்லை. மாறாக, கவித்திறம் சார்ந்து கவிஞனின் படைப்பாளுமையை, சமுதாயச் சிக்கலை எடுத்துரைக்கும் முறை, நடை, மனிதம், கவிதை - விளக்கம், மொழித்தூய்மை காத்தல், தலைப்பிடல், பாலுணர்வுக் கருத்தாக்கம், ஒரு சொல் பலபொருள், வரலாற்றுணர்வு எனும் வகைகளில் இங்கு இனம் காணப்படுகின்றன.

சமுதாயச் சிக்கலை எடுத்துரைக்கும் முறை

இக்கவிதைகள் முழுமையும் மனிதன், மனிதப்பண்பு, அடக்குமுறை, உலகத்தின் சுருக்கம் என அமைந்துள்ளன. இப்பார்வை மார்க்சியம் வலியுறுத்தும் பொதுவுடைமைச் சிந்தனை உள்ளோரிடத்து மட்டுமே கூடுதலாக அமைந்திருக்கும். அதனை, கெடுநகர் எனும் தலைப்பில் எழுதப்பெற்ற கவிதையின் சில வரிகள் சுட்டிக்காட்டும். அவ்வரிகள் வருமாறு:

கொளுத்தவர் வலுக்கவும்
இளைத்தவர் இறக்கவுமான
நிகழ்வெளியாய்ச்
சுருங்கிப் போனது
உலகம்

இவ்வரிகள் உலகத்தில் பொருளாதாரம் ஒரு பகுதியினருக்கு மட்டுமே சேருகிறது என்கின்றன. இதனால் உலகம் நிகழ்வெளியாய்ச் சுருங்கிப் போய்விட்டது என்கிறார் கவிஞர். பல்லாயிரம் ஆண்டு வரலாறு தமிழ்ச் சமுதாயத்திற்கு உண்டு. இச்சமுதாயத்திற்காக எழுதப்பெற்ற இலக்கியங்கள் இக்கவிஞரின் பார்வையோடு ஒத்தன. இது இக்கவிஞரையும் அவ்வரிசையிலே சிந்திக்க வைத்திருக்கிறது. அவ்வாறெனில் இன்னும் சமுதாயத்தில் சிக்கல் தீரவில்லை எனலாம். தீர்வை நோக்கிய நகர்வு கவிதைகளில் அமைந்திருக்கலாம்.

நடை

ஒவ்வொரு கவிஞரும் ஒவ்வொரு நடையைக் கையாள்வர். அது அக்கவிஞரை அடையாளப்படுத்தும். அழகிய நடை, சாதாரண நடை, கடின நடை என நடைகள் இருப்பதாக கி.இராசா (2016:98) குறிப்பிடுகிறார். இந்த மூன்று நடைகளையும் இக்கவிஞர் ஆண்டிருக்கிறார் என்பதை அறியமுடிகின்றது. வட்டார வழக்குகளை மிகுதியாக யாரும் பயன்படுத்துவது கிடையாது. ஆனால், இக்கவிதைக்குள் சில இடங்களில் வட்டார வழக்கை அறிய முடிகின்றது. சான்றாக,

...
ஒனக்காகத் தானப்பா
உசுர வச்சுருக்கேன்னு
சொல்லும் போதெல்லாம்,
ஓயாம
இதயே சொல்லாதவென
ஓங்கி நான் கத்தும் போது,
பொசுக்கென அழுது
பொலபொலன்னு
சிந்தும் கண்ணீரெல்லாம்
பொய்யென நினைத்தது
விடலை மனம் ***(அம்மா)***

எனும் வரிகளைக் காட்டலாம். இவ்வரிகள் அனைத்தும் சிவகங்கை வட்டார மொழியை எடுத்துக்காட்டுவன. இதில்தான் கவிஞரின் முகமும் புதைந்திருக்கிறது. இதுதான் யார்? எங்கிருந்து? கவிதைகள் எழுதுகின்றனர் என்பதைத் தெளிவாகக் காட்டிவிடும் தன்மையுடையது. இது நீரோட்டமான நடையையும் வெளிக்காட்டுகிறது. இவ்வழக்காற்று மொழிகளில்தான் ஒரு மொழிக்கான அடையாளத்தைக் காணமுடிகின்றது. அத்தகு நிலையில் அக்கவிதைத் தொகுப்புக்கான சிறப்பும் கூடுகிறது. ஆங்காங்கு முரண் நடையையும் கவிதைக்குள் காணமுடிகின்றது.

மனித
நிழல் போர்த்திய
நாடுதான்
வெயிலில்
வெந்து சாகிறது.

எட்டிய
காட்டுக்குள்ளிருக்கும்
மரங்களும்
பூக்களும்
இப்போது
சிரித்துக் கொண்டிருக்கின்றன ***(நிழல் வானம்)***

இக்விதை வரிகளில் காணலாகும் நிழல் = வெயில், சிரிப்பு = சிரிப்பின்மை; காடு = நாடு, மரம், பூ = மனிதர் ஆகியன முரண் கருத்துக்களைத் தாங்கியவை. அதாவது,

நிழல் + சிரிப்பு = காடு ➔ மரம், பூ

வெயில் + சிரிப்பின்மை = நாடு ➔ மனிதர்

எனும் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவதைக் கூறலாம். இவ்வாறு அணுகிப் பார்க்கக் கூடிய தன்மைகள் மிகுதி.

மனிதம்

மனிதனின் நற்பண்பைக் குறிப்பது மனிதம். இதை மனிதர்களிடத்தில் தேடிப் பார்க்கின்ற கவிதைகளையும் காணமுடிகின்ற**து.** தமிழகச் சூழல்கள் மட்டுமின்றி உலகச் சூழல்களே மனிதம் இன்றிக் காணப்படுகின்றன என்பதைப் பல கவிதைகள் வெளிப்படுத்தியுள்ளன. சான்றாக,

சுள்ளி அடுக்குகளாய்
பெருங்குழிக்குள்
மனிதங்களை அடுக்கிச்
சாவை மூட்டிச் சென்றது
கடல். ***(அலை நிலத்து அழுகை)***

விழுந்திருக்கும் துணியில்
விழுந்த காசுகள்
சிதறிய கோலங்களாய்க்
கிடந்ததில் தெரிந்தன
மனித முகங்கள்

குழல் தடவிய விரல்கள்
காசு முகங்களைத்
தடவுகையில் தெரிந்தன
மனிதர்களின் நிறங்கள் ***(அகக் கண்ணர்கள்)***

அதிகாரம்
இந்த முறையும்
மனிதத்தைத்
தின்று விட்டது ***(இதுவும் ஓர் ஆணவப் படுகொலை)***

இக்கவிதை வரிகள் பல்வேறு சூழல்களில் மனிதத்தைத் தேடும் தன்மையை வெளிக்காட்டுகின்றன. இப்படிப்பட்ட முரண்சிந்தையோடு மனிதன் வாழ்வதற்கு, அவன் போர்த்திக் கொண்ட சமயம், சாதி, இனம் தன்மைகளைக் காரணம் காட்டலாமா? காட்டலாம். இவை மூன்றும் மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு நடத்தேறி வருகின்றன. இதனை வரலாற்றுப் படிப்பினைகள் நமக்குக் காட்டிக் கொண்டேதான் இருக்கின்றன. அத்தகு நீட்சியில் இக்கவிஞரும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

கவிதை - விளக்கம்

கவிதையின் வடிவம் என்ன? எளிமை, கடினம், இருண்மை, உவமை எனப் பல வடிவங்களைக் காட்டுவர். கவிதைக்கான பண்பு என்ன என்றால் விளங்கக் கூடாத தன்மையில் அமைந்திருத்தல், எளிதில் புரிதலைத் தருவது, வட்டார வழக்கில் அமைந்திருப்பது எனக் காட்டுவர். இப்படிப் பல்வேறு கருத்தியல்கள் இன்று நிலவுகின்றன. இக்கவிதைத் தொகுப்புக்குள் கவிதைக்கான விளக்கங்கள் சில முன்வைக்கப் பெற்றுள்ளன. அவை வருமாறு:

நனவிலும் கனவிலும்
பாடாய்ப் படுத்தும்
நினைவுகள்
இப்படியான
கவிதைகளில் தானே
செழித்து நிற்கின்றன. ***(கூதிர் காலம்)***

கவித்தனம் காட்டவே
எழுதி எழுதித் தீர்கின்றன

சொற்கள் (மனங்கொத்தி)

மொழித்தூய்மை காத்தல்

இலக்கியப் புலவனாக இருந்தாலும், இலக்கணப் புலவனாக இருந்தாலும் காலந்தோறும் மொழித்திருத்தத்தையும் மொழித்தூய்மை காத்தலையும் செய்து வந்திருக்கின்றனர் என்பது வரலாறு காட்டும் உண்மை. அதனால்தான் நமக்குக் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணப் பனுவலாகிய தொல்காப்பியத்தில்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (தொல்.சொல்.401)
"சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" (தொல்.சொல்.402)
"கடிசொல் இல்லை காலத்துப் படினே" (தொல்.சொல்.452)

என்ற கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் இக்கவிதைத் தொகுப்பும் அமைந்துள்ளது. குருதி என்பது தூய சொல். அது ரத்தம் எனது வழங்கப்பட்டது. அதனை இக்கவிஞர் 'அரத்தம்' (ப.51) என்ற சொல்லாடலால் தூய்மைப்படுத்துகிறார். தேவநேயப் பாவாணர் கூறுவார் பிற மொழியாளர்களின் பெயர்களைக்கூட தமிழ் படுத்துங்கள் என்று. அவரே சேக்ஸ்பியர் என்பதைச் சேக்சுபியர், செகப்பியர் என்றெல்லாம் மாற்றி அழைத்திருக்கிறார். இது ஒரு மொழியைக் கலப்படம் இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கான வழிமுறையாகும். அதனை இக்கவிஞரும் பின்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனை,

"ஆனந்த ராசுக்கு
என் அழுகைத் தமிழ்
அஞ்சலி ஆகட்டும்" (அழுகைத் தமிழ்)

எனும் கவிதைவரிகள் அறிவுறுத்தும். இதன் முதல்வரியில் 'ஆனந்த ராசு' எனும் பெயர் இடம்பெற்றுள்ளது. இது 'ஆனந்த ராஜ்' என்று அமைதல் வேண்டும். இப்பெயரில் உள்ள 'ராஜ்' என்பது ராசுவாக மாறுகிறது. தமிழ் தவிர்த்த பிற இந்திய மொழிகளில் 'ச' ஒலிப்போடு தொடர்புடைய ச², ஜ¹, ஜ², ஸ, ஸ¹, ஷ, க்ஷ ஆகிய எழுத்துக்கள் உண்டு. அவ்வெழுத்துக்களின் வரிவடிவமும் தனித்தனி. ஆனால், தமிழ்மொழியைக் கட்டமைத்த இலக்கண அறிஞர்கள் நேர்த்தியுடன்தான் செயல்பட்டனர் எனக் கருத இடம் தருகின்றது. இதனை,

பச்சை - *pacchai - c*
மஞ்சள் - *manjal - j*
வம்சம் - *vamsam - s*
சட்டம் - *cattam - ca*
சக்கரம் - *chakkaram - ch*

எனவரும் சான்றுகள் காட்டும். இதில் 'ச' ஒலிப்பு அதனுடன் தொடர்புடைய பிற ஒலிப்புடன்தான் ஒலிக்கப்படுகிறது. இது கற்றலுக்கான எளியமுறை. இதை ஒப்புக்கொண்டு பிறமொழி ஒலிப்பு வடிவத்தை நீக்கி, தூய்மையைக் காத்துள்ளது எனலாம். அவ்வகையில் இக்கவிஞரும் மொழித்தூய்மை காப்பதில் கவனம் செலுத்தியுள்ளார் எனலாம்.

தலைப்பிடல்

இத்தொகுப்புநூல் 'சொல் நிலம்' எனும் பெயரைத் தாங்கி, 52 உட்தலைப்புகளைக் கொண்டுள்ளது. கவிதை நூலின் தலைப்பைத் தெரிவு செய்வதிலும், உட்தலைப்பிடலிலும் மெனக்கெட்டுள்ளார் என்பதை முதல்கவிதையின் தலைப்பான 'கருச்சொல்' காட்டும். இது கவிதையின் முழுச்சாரத்தையும் உள்வாங்கித் தரப்பெற்றுள்ளது என்பது அக்கவிதையை வாசிப்போருக்குப் புலப்படும். இப்படி, 'கெடுநகர், ஆயுட்காலம், நிழல் வனம், உறவுக் கூடு, துயர்ப்

படலம், ஆழி முகம், செந்நெல் மனிதர்கள், பாழ் மனம்' போன்ற உட்தலைப்புகளை அமைத்துள்ளார். இவரின் உட்தலைப்பிடல் முறையைப் பின்வரும் கருத்துக்கள் தெளிவுபடுத்தும்.

- கருத்தைக் கொண்டு தலைப்பிடல் (கருச்சொல், கெடுநகர் போல்வன).
- அடிச்சொற்கள் தலைப்பாதல் (கருச்சொல், கெடுநகர், பாழ்நிலம் போல்வன).
- கவிதைவரிச் சொல்லைத் தலைப்பாகத் தருதல் (உறவுக்கூடு, செந்நெல் மனிதர்கள் போல்வன).
- முதல் கருத்தின் முடிவுச் சொல்லும், இறுதிக் கருத்தின் முதற்சொல்லும் தலைப்பாகுதல் (பாழ்மனம், வலித்தடம் போல்வன).
- ஒருவரிச் சொற்கள் தலைப்பாதல் (அகக் கண்ணர்கள், கார்காலச் சொற்கள் போல்வன).
- கவிதைவரிச் சொல்லும் கருத்தும் தலைப்பாதல் (செல்லாக் காசுகளின் ஒப்பாரி, உயிர்க்கூடு போல்வன).
- வெளிப்பாட்டுத் திறன் தலைப்பாதல் (முரண் செய்யுள்).

பாலுணர்வுக் கருத்தாக்கம்

பிராய்டு கூறுவார் ஒருவரின் ஆழ்மனப் பதிவுகள் ஏதாவதொரு சூழலில் வெளிப்பட்டுவிடும். அப்படி வெளிப்பட்ட வரிகள் நிரம்ப உண்டு. அவற்றுள்,

ஈசல் வயிற்றுப்
பால் கவுச்சியில்
கசிந்து கிடந்தது
நிலத்தாளின் முலைப்பால் ***(ஈசப்பால்)***

எனும் கவிதை வரிகள் கவிஞரின் உள்ளத்து ஆழ்மனப் பதிவை வெளிக்காட்டுகின்றன. ஓர் ஆணுக்குப் பெண் மீதும், ஒரு பெண்ணுக்கு ஆண் மீதும் ஈர்ப்பு அமையும். அந்த ஈர்ப்பு காமம் சார்ந்து அமையும். அதனையே மேற்கண்ட வரிகள் சுட்டிக்காட்டுகின்றன. அவ்வரிகளில் காணப்படும் 'பால் கவுச்சியில், முலைப்பால்' என்ற சொல்லாடல்கள் ஓர் ஆணிடத்துப் புதைந்திருக்கும் காம உணர்ச்சி சொல்லாடல்களின் மூலம் வெளியேறும் தன்மையைக் காட்டுகின்றன. "*மனித உள்ளத்தின் வாழ்க்கைமுறையைப் பகுத்துக்கூறும் ஓர் அறிவியலே உளவியல். ஒருவனது உள்ளம் அவனுடைய செயல்களின் மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறது. எனவே செயலை அறிந்து ஆராய்வதன்வழி உள்ளத்தை நேரடியாக அறிய முடியும். மேலும் உள்ளத்தை நேரடியாக அறிவதற்கு உபகரணங்கள் மூலம் கணிக்க முடியும். இங்ஙனமே இலக்கியங்கள் கவிஞனின் உள்ளத்துள் சென்று உணர்வாக்கப்பட்டுப் பின்னர் உணர்ச்சியாக மாற்றம் செய்யப்படுகிறது*" (பா. கவிதா, ஃபிரா**ய்**டிய உளவியலும் பாலுணர்வு மேன்மைக் கருத்தாக்கம் (சங்க அகக்குறியீடுகளை முன்வைத்து), 2017:11) இதனைக் காலந்தோறும் எழுதப்பெற்ற இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டும். அதிலும் குறிப்**பாக** ஆண் கவிஞர்களின் பாடல்களில் இதனை மிகுதியாகக் காணமுடியும். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களை வாசிப்போர் இதனை நன்கு உணர்வர்.

ஒருசொல் பலபொருள்

கவிதை, வாசிக்கும் வாசகனுக்கு ஏற்பப் புதியப் புதிய விளக்கங்களைத் தரவேண்டும். அப்பொழுதுதான் அந்தக் கவிதை காலம் கடந்தும் பேசப்படும். அப்படியொரு தன்மை இத்தொகுப்புநூலுக்கு உண்டு.

வடுக்களோடும் வலிகளோடும்
வயிற்றுப் பாட்டோடும்

நெருப்பையும் சுமந்து
சாம்பலாகிப் போனார்கள்
வெண்மணி வயலின்
செந்நெல் மனிதர்கள் (செந்நெல் மனிதர்கள்)

எனும் வரிகள் உழவரின் வாழ்க்கைமுறையை எடுத்துக்காட்டுகின்றன. இக்கவிதை வரிகளின் இறுதிவரி கவனிக்கத்தக்கது. அவ்வரியின் 'செந்நெல்' எனும் சொல் 'சிறந்த, நல்ல, முற்றிய' எனும் பொருண்மைகளைத் தந்தாலும், உழைக்கும் வர்க்கத்தினருக்குக் குரல் கொடுத்து வரும் கம்யூனிசத்தை முக்கியமாகப் பதிவுசெய்கிறது. ஆக, ஒருபுறம் உழவரின் வாழ்க்கை**யை**யும் மறுபுறம் கம்யூனிசக் கொள்கையாளரின் வாழ்க்கை**யை**யும் அவ்வரிகள் வெளிக்காட்டுகின்றன. இக்கவிதையில் இடம்பெற்ற 'வெண்மணி' எனும் சொல் நாகை மாவட்டத்தில் அமைந்துள்ளது கீழவெண்மணி ஊரின் வரலாற்று நிகழ்வையும் நிறுத்திச் செல்கின்றது. அதனைப் பின்வரும் கருத்து தெளிவுறுத்தும்.

> *தற்போதைய நாகை மாவட்டத்தில் அமைந்துள்ளது கீழவெண்மணி. (தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான பழைய தஞ்சை மாவட்டத்தில் முன்னர் இருந்தது.) தமிழகத்தின் 30% விளைநிலங்களை தன்னகத்தே கொண்டு அமோக விளைச்சல் தரும் பூமி. இப்பூமியில் எங்கு சுற்றினும் பச்சை பசேலேன பசுமை போர்த்திய நெற்பயிர்கள். சில்லென்று வீசும் காற்று, தென்னந்தோப்பு, கரும்புத் தோட்டம் என மனம் வருடிச் செல்லும் இயற்கை சூழல். இங்கு பலதரப்பட்ட நிலமில்லா மக்களும், கூலித் தொழிலாளர்களாக வேலை செய்து வந்தனர்.*
>
> *இவர்கள் நல்ல வாழ்க்கை முறையை அடைய முயற்சி செய்தும் அதை நிலக்கிழார்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 1960களில் தஞ்சையில் பண்ணையார்கள், நிலச்சுவான்தார்கள் ஆதிக்கம் வேருன்றி மரமாக வளரத் தொடங்கியிருந்த காலம். பண்ணையார்களிடம்தான் அதிக நிலமும் பணமும் இருந்தது. பண்ணையார்களிடம் வேலை செய்து தங்கள் வாழ்கையை நகர்த்திச் சென்ற கூலித் தொழிலாளர்களை பண்ணையார்கள் தங்கள் அடிமைகளாகவே கருதினர். குறைந்த கூலிக்கு அதிக வேலை வாங்கினார்கள். ஐயா, ஆண்டை என்றுதான் அழைக்க வேண்டும். குறைந்த கூலி, அதுவும் அணாவாக கிடையாது (ஒரு படி நெல்லும் கேப்பை கூழும்தான்) சம்பளம்.*
>
> *பண்ணையார்கள் தொழிலாளர்களிடம் இரக்கமில்லாமல் வேலை வாங்கினர். வயலில் நடவு நடும் பெண், ஒருமாதம் முன் பிறந்த தன் பச்சைக் குழந்தையை அங்குள்ள மரத்தில், சேலையை கட்டி கிடத்திவிட்டு வேலைசெய்வார். அந்த குழந்தை பசியில் அழுதால் கூட வேலையை முடிக்காமல் பால் கொடுக்கச் செல்லக் கூடாது. மீறினால் வேலை கிடையாது அன்று. சில நேரங்களில் பால் கொடுக்கும் தாயின் மார்பில் எட்டி உதைவிட்டுவிட்டு செல்வர். அங்குள்ள பெண்களை தவறாக அணுகிய சம்பவங்களும் நடந்ததுண்டு.*
>
> *எதிர்த்தால் கட்டி வைத்து அடித்து உதைதான். ஆபாச வார்த்தை அர்ச்சனைகளால் பெண்கள் கூனிக் குறுகிவிடுவர். எதிர்த்தால் பிழைப்பு கெட்டுவிடும். ஒரு பண்ணையாரிடம் முறைத்துக்கொண்டு மற்றொருவரிடம் செல்ல முடியாதபடி பண்ணையார்கள் தங்களுக்குள் நல்ல பிணைப்பை உருவாக்கி வைத்திருந்தனர். சாணிப்பால், சவுக்கடி இவையெல்லாம் சர்வசாதாரணமான தண்டனைகள் அங்கே.*

இந்த நிலையில்தான் 1960களில் இந்திய - சீனப் போரால் பஞ்சம் தலைவிரித்தாடியது. இது கீழவெண்மணி கிராமத்தையும் விட்டுவிடவில்லை. பஞ்சத்தால் குறைந்த கூலியுடன் பிழைப்பை நடத்த முடியாது என்பதால் கூலி உயர்வு கேட்டனர் தொழிலாளர்கள். ஆனாலும் பயனில்லை. இவர்களுக்காக விவசாய தொழிலாளர் சங்கத்தை ஆரம்பிக்கின்றனர் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மணியம்மை மற்றும் சீனிவாசராவ். இதில் இணைந்து தங்களுக்கு கூலி உயர்வு கேட்டனர் தொழிலாளர்கள். இவர்களுக்கு போட்டியாக நெல் உற்பத்தியாளர் சங்கம் என்ற சங்கத்தை ஆரம்பிக்கின்றனர் நிலக்கிழார்கள்.

தொழிலாளர்கள் கூடுதலாக கேட்கும் அரை படி நெல்லை தருவதற்கு மனமில்லை. உழைப்புக்கு ஏற்ற கூலி கொடுக்காமல் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றது. ஆனாலும் நேற்று வரை நமக்கு கீழ் கைகட்டி வாய்பொத்தி வேலை பார்த்தவர்கள், நமக்கு எதிரே அமர்ந்து நம்மிடமே பேச்சுவார்த்தை நடத்துவதா என்ற பெருங்கோபம் சம்பந்தப்பட்ட பண்ணையார்களிடம் கனன்று வந்தது. 'எங்களுக்கு எதிராக சங்கம் ஆரம்பிக்கிறீங்களா..?' என்று கீழவெண்மணியை சேர்ந்த முத்துகுமார், கணபதி இருவரை கட்டிவைத்து அடித்தனர். இதை எதிர்த்து தொழிலாளர்கள் மோதலில் ஈடுபட்டனர். இதனால் கீழவெண்மணியில் கலவரம் மூண்டது.

1968 டிசம்பர் 25 அன்று உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் தினம் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்க, கீழவெண்மணி மக்களுக்கோ அன்று இருண்ட நாளாக அமைந்தது.

'தனக்கு அடிமையாக இருந்தவர்கள் தன்னை எதிர்ப்பதா?' என்று ஆத்திரம் கொண்ட பண்ணையார் கோபாலகிருஷ்ணன் என்பவர், தனது அடியாட்களுடன் பெட்ரோல் கேன்கள், நாட்டுத் துப்பாக்கி சகிதம் வந்திறங்கினார். அவர்களுக்கு போலீசாரும் துணை நின்றனர். அவர்கள் முன்னிலையில் அந்த கொடிய சம்பவத்தை அரங்கேற்றினர். காட்டில் மிருகம் வேட்டையாடப்படுவது போல் கண்ணுக்கு கிடைப்பவர்கள் எல்லாம் சுடப்பட்டனர்.

இப்படி சுடப்பட்டவர்கள் கிட்டத்தட்ட 10 பேருக்கு மேல் இருப்பார்கள். இதனைக்கண்டு பயந்து நாலா மூலைக்கும் சிதறி ஓடி, வாய்க்கால் வரப்புகளில் ஓடி ஒளிந்துகொண்டனர் தொழிலாளர்கள். அனைத்து குடிசைகளும் எரிக்கப்பட்டன. நிராயுதபாணியாக நிற்கும் அப்பாவி பெண்கள், வயதானவர்கள், குழந்தைகள் உயிரைக் காத்துக்கொள்ள தெரு மூலையில் உள்ள ராமையா என்பவரின் சிறிய கூரைவீட்டில் ஓடி ஒளிந்தனர். வெறிபிடித்து அலைந்தவர்கள் அந்த வீட்டை கண்டுபிடித்து வீட்டை வெளியே தாழிட்டு பெட்ரோலை ஊற்றி எரிக்கின்றனர்.

பூட்டிய வீட்டுக்குள் பெரும் அலறல் சத்தம் எழுந்தது. 'ஐயோ, அம்மா ஆ...ஆ....எரியுதே!' என்ற சத்தம் மட்டும் திரும்ப திரும்ப கேட்கிறது. தான் பிழைக்காவிட்டாலும் தன் குழந்தையாவது பிழைக்கட்டும் என்று ஒரு பெண் தன் குழந்தையை தூக்கி எறிகிறார். கொடூரர்கள் குழந்தை என்றும் பாராமல் வெட்டி வீழ்த்தி தீயில் எரித்தனர். வெளிய வர முயற்சித்தவர்களை மறுபடியும் உள்ளே தள்ளினர்.

வெளியில் நின்று அழுத மூன்று பிஞ்சுக் குழந்தைகளையும் தீயின் உள்ளே தள்ளினர். தீயின் கோர நாக்குகளுக்கு சற்று நேரத்தில் 20 பெண்கள், 19 குழந்தைகள், 6 ஆண்கள் என 44 உயிர்கள் தீக்கிரையானது. ஒரு பெண் தனது மகளையும் சேர்த்து கெட்டியாக அணைத்துக் கொண்டு கருகியிருந்தார்.

மறுநாள் தினசரிகளில் கிழவெண்மனி படுகொலை சம்பவம்தான் தலைப்புச்செய்தி. நாடு முழுவதும் அதிர்வலைகள் உருவானது. தலைவர்கள் கண்டன அறிக்கை வெளியிட்டனர். சீன வானொலிகளில் திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்பட்டன இச்செய்தி. இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. முதல் வழக்கில் தொழிலாளர்கள் 120 பேரின் மீதும் இரண்டாவது வழக்கில் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட சிலர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதற்கு சரியான தண்டனை கிடைத்ததா...? இரண்டாவது வழக்கில் கோபாலகிருஷ்ணனுக்கும் அவருடைய ஆதரவாளர்கள் 7 பேருக்கும் 10 வருடம் சிறைத் தண்டனை

மேற்முறையீட்டுக்காக வழக்குகள் உயர்நீதிமன்றம் சென்றன. முதல்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளர்களுக்கு ஜாமீன் மறுத்த நீதிமன்றம், கோபாலகிருஷ்ணன் மற்றும் அவரோடு சேர்ந்து தண்டனை பெற்ற 7 மிராசுதார்களுக்கும் ஜாமீன் வழங்கியது. அப்பாவி தொழிலாளர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது.

இது மட்டும்தானா...? இல்லை, இன்னும் இருக்கிறது. இறுதித் தீர்ப்பில் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இதற்கு உயர் நீதிமன்றம் சொன்ன காரணம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது தொழிலாளர்களுக்கு.

"இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவருமே நிலக்கிழார்களாக இருப்பது வியப்பாக உள்ளது. அவர்கள் அனைவரும் பணக்காரர்கள். கவுரவமிக்க சமூக பொறுப்புள்ள அவர்கள் இந்த குற்றத்தை செய்திருக்க மாட்டார்கள் என நம்புகிறோம்" -இதுதான் தீர்ப்பு. ஒருவர் விடுதலையாவதற்கான தகுதி அவர் பணக்காரர். இந்த ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு அப்பாவி தொழிலாளர்களை, அவர்களின் குழந்தைகளை எரித்துக் கொண்றவர்களுக்கு தீர்ப்பு விடுதலை. இதுதான் அன்றைக்கு தொழிலாளர்களின் நிலை (விகடன், 25.12.2015).

இக்கருத்தியல் அடிப்படையில் நோக்கும்பொழுது அக்கவிதை ஒருசொல் பலபொருளில் கம்யூனிசக் கொள்கையை வெளிப்படுத்தி நிற்பதாகக் கொண்டாலும் நாகை மாவட்டம் கீழவெண்மணியில் விவசாயிகளை (தேவேந்திரகுல வேளாளர்களை) நெருப்புக்கு இரையாக்கிப் படுகொலை செய்த முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தைத் தோலுரித்துக் காட்டும் வரலாற்றுக் கவிதையாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (மு.முனீஸ்மூர்த்தி:மதிப்பீட்டுரையில் தெரிவித்த கருத்து).

வரலாற்றுணர்வு

கவிதை வெறுமனே சமகாலப் பிரச்சினையை மட்டும் பேசிவிட்டுச் செல்லக் கூடாது. அதில் வரலாறு சார்ந்த கருத்துக்கும் இடம் வேண்டும். அதிலும் அந்தக் கருத்துப் பொருத்தப்பாட்டோடு அமைதல் வேண்டும். அப்படிப்பட்ட தன்மையையும் இதனுள் காணமுடிகின்றது. சான்றாக 'செந்நெல் மனிதர்கள்' எனும் தலைப்பில் எழுதப்பெற்ற கவிதையில்,

அரைப்படி நெல்மணி

கூடக் கேட்டாரென

நெருப்பின் ஒரு துளி விதையைக்

குடிசைக்குள்

*எரிந்துவிட்டுப் போனர்கள் (**செந்நெல் மனிதர்கள்**)*

எனும் வரிகள் ஒரு காலக்கட்டத்தில் உழைக்கும் வர்க்கம் எங்களின் உழைப்பிற்கு இவ்வூதியம் போதாது எனக் கேட்டதற்காக அவர்கள் பட்ட துயரங்களை இன்றும் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. இக்காட்சிப் படிமங்கள் காலந்தோறும் உழைக்கும் வர்க்கத்தினரைச் சுரண்டித் தின்பதைக் காட்டுகின்றன. இதனை மேற்காண் கருத்தியல் தெளிவுறுத்தும்.

இவ்வளவு சிறப்புகளைக் கவிஞர் கொண்டிருந்தாலும், சிலவிடங்களில் மொழியமைப்பில் சறுக்கலைக் கண்டுள்ளார்.

போலி

இரண்டு பிழைவாதங்கள் தென்பட்டன. ஒன்று: போலி வலியுறுதல். மற்றொன்று: சொற்றொடர் அமைப்புக் கருத்துப்பிழையும் மொழிப்பிழையும்.

போலி வலியுறுதல்

தமிழ் மொழியமைப்பில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்கள் இன்றும் **சிக்கலு**க்குள்ளாகின்றன. ஏனென்றால் இவ்விரு எழுத்துக்களும் அ+இ, அ+ய்=ஐ; அ+உ, அ+வ்=ஔ எனத் தோன்றியதாக ஆய்வாளர்களும் இலக்கணப் புலவர்களும் கருதுவர். தொல்காப்பியரும் அதற்கு உட்பட்டவர்தான் என்பதை,

*அகர இகர மைகார மாகும் (தொல்.எழுத்.**54**)*

*அகர உகர மௌகார மாகும் (தொல்.எழுத்.**55**)*

என்ற இரண்டு நூற்பாக்கள் சுட்டிக்காட்டும். அப்படியென்றால் அவ்விரு எழுத்துக்களும் போலி எழுத்துக்கள்தானே. இவ்வெண்ணம் இந்தக் கவிஞருக்கும் இருக்கும் போலும். அதனால்தான் 'அய்ம்பூத, அய்ம்புலன்கள் (ப.11), அய்க்கியமாகி (ப.40)' ஆகிய சொல்லாடல்களைக் கையாண்டிருக்கிறார். இங்குத் தொல்காப்பியரின் கருத்தை இவர் உணராதிருந்திருக்கிறார் என்றே தோன்றுகின்றது.

எழுத்துச் சீர்திருத்தத்தைக் காலந்தோறும் அறிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அவ்வெழுத்துச் சீர்திருத்ததில் ஐ, ஔ ஆகியனவும் அடங்கும். அவ்வடிப்படையில் நோக்கும்பொழுது ***போலி எழுத்தாக எண்ணி அவர் இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரியவில்லை. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தில் கவிஞர்க்கு உடன்பாடாய் இருத்தல் வேண்டும். ஐ, ஔ தேவையில்லை என்றார் பெரியார் (மு.முனீஸ்மூர்த்தி:மதிப்பீட்டுரையில் தெரிவித்த கருத்து).*** அதனால் கவிஞர் ஐ, ஔ ஆகிய எழுத்துக்களை அய், அவ் என எழுத முனைந்திருக்கிறார்.

இருப்பினும் அவ்விரு எழுத்துக்களும் அவ்வொலியமைப்பில் ஒலிக்கப்பட்டாலும், அவை, தனித்த எழுத்துக்களாக உணரத்தக்கன என்பதைத் தொல்காப்பியர்,

"எழுத்தெனப்படுப

அகரமுத

னகர விறுவாய் முப்பஃ தென்ப

*சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே" (தொல்.எழுத்.**1**)*

"ஆ ஈ ஊ ஏ ஐ

ஓ ஔ என்னு மப்பா லேழு

*மீரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப" (தொல்.எழுத்.**4**)*

"ஔகார விறுவாய்ப்

பன்னீ ரெழுத்து முயிரென மொழிப" (தொல்.எழுத்.8)

எனும் நூற்பாக்கள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது இவ்வெழுத்து வடிவங்களை நான் கொண்டு வரவில்லை, எனக்கு முன்பு வாழ்ந்த இலக்கணப் புலவர்கள் கொண்டு வந்தது என்பதை 'மொழிப, என்ப' என்ற சொல்லாட்சிகளில் விளக்கியுள்ளமையாகும். இதன் வடிவ வளர்ச்சியை ஏற்றுக்கொள்வது சாலச் சிறந்தது. அப்படியிருக்க, இன்றைய 'ஜ, ஷ, ஸ, க்ஷ' ஆகிய எழுத்துக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானே என்ற எண்ணம் மேலுறும். அவ்விரு எழுத்துக்களை இவ்வெழுத்துக்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க முடியாது. ஏனெனில், தமிழ்மொழி இயல்பான, எளிமையான மொழி. அதனால் பண்டைய இலக்கணப்புலவர்கள் க, ச, ட, த, ப எழுத்துக்களை வருக்கங்களாக அமைக்காமல், அதற்குள் அவ்வருக்கங்களை அடைத்துவிட்டனர் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே அவ்வாறு பயன்படுத்தும் முறையை மறுபரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

சொற்றொடர் அமைப்புக் கருத்துப்பிழையும் மொழிப்பிழையும்

இன்றைய வழக்கில் "தான்" என்ற ஒட்டைப் பயன்படுத்துவதைப் பெரும்பான்மையான எழுத்துரையாளர்களிடம் காணமுடிகின்றது. இச்சொல் தனித்து நிற்கும் போதும், ஒட்டி நிற்கும் போதும் வெவ்வேறு பொருட்களைத் தரும். சான்றாக, அன்று தான், அன்றுதான் என்ற சொற்றொடரை நோக்குவோம்.

1. நான் அவனை அன்று தான் பார்த்தேன்.
2. நான் அவனை அன்றுதான் பார்த்தேன்.

இவ்விரு தொடரில், முதல் தொடரை, 'நான் அவனை அன்று நான் (தான்) பார்த்தேன்' என்ற பொருளைத் தருகிறது. இத்தொடரில் உள்ள 'தான்' - யான் அல்லது நான் எனும் தொனியைத் தருகின்றது. ஆனால் இரண்டாவது தொடரில் உள்ள 'அன்றுதான்' என்பது 'அன்று' எனும் பொருண்மைத் தொனியை மட்டுமே தருகிறது. இவ்விரு உணர்தலைப் பெறுவோர் இங்குப் பிழையென்று நம்புவர்.

இப்பிழையை 'அன்று தான், அது தான் (ப.20); ஆகியிருக்கலாம் தான் (ப.26); கவிதைகளில் தானே (ப.30), படுகொலை தான் (ப.37), மாட்டீர்கள் தான் (ப.41), ஆறுகள் தான் (ப.44); மானமும் தான் (ப.48); தொலைக்கத் தானா (ப.53); கொடியது தான் (ப.54), குறுணி தான், ஊமத்தையும் தான் (ப.63), சொற்கள் தான் (ப.68) ஆகிய சொற்றொடர்களில் காணமுடிகின்றது. அப்படியொன்றும் கருத்துப்பிழை வரவில்லையே என வினவத் தோன்றும் சிலருக்கு. அவர்களின் புரிதலுக்காக, 'கற்கள் - கற் கள், பற்கள் - பற் கள், சொற்கள் - சொற் கள்' இச்சொற்றொடர்களைப் பொருண்மையியல் நோக்கில் வாசித்துப் பார்க்கவும்.

சிலவிடங்களில் சரியான தொனியுடனும் பயன்படுத்தியிருக்கிறார் கவிஞர். அவ்விடங்கள் வருமாறு: நாடுதான் (ப.17), சீவகன்களும்தான் (ப.32), நாடுதானே (ப.38), அதுதான் (ப.45), என்னதான் (ப.46), எச்சம்தான் (ப.50), வாழ்க்கைதான் (ப.52), தவித்தேதான் (ப.63), குண்டர்கள்தான் (ப.83).

மொழிப்பிழைகள் குறைவு. இருப்பினும் கவனக்குறைவால் ப.76இல் 'மு(ண்)டியடித்து' என்பதற்குப் பதிலாக 'மு(ன்)டியடித்து' என வந்துள்ளது. மொழிப்பிழையில் மற்றொரு பிழை புணர்ச்சிப் பிழை. அது கவனக்குறைவால் வந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் ப.55, 79களில் 'தொப்பூள்க் கொடி' என்ற பிழை வந்துள்ளமையாம். ***தொப்புள் என்பது பேச்சுவழக்கு; கொப்பூழ் தூய வழக்கு. தொப்பூள் எனும் வழக்குத் தவறு (மு.முனீஸ்மூர்த்தி:மதிப்பீட்டுரையில் தெரிவித்த கருத்து).*** இப்பிழைகள் தவிர்க்கப்பெற்றிருந்தால் இந்நூல் இன்னும் கூடுதல் சிறப்பைப் பெற்றிருக்கும்.

துணைநின்றவை

- ஆனந்தகுமார் பா., 2005, இலக்கியமும் பண்பாட்டு மரபுகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட், சென்னை.
- இராசா கி., 2016, ஒப்பிலக்கியம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி.) லிட், சென்னை.
- கவிதா பா., 2017, "ஃபிராய்டிய உளவியலும் பாலுணர்வு மேன்மைக் கருத்தாக்கமும்," தமிழ்ச்செவ்விலக்கிய மேன்மை (மகளிர் உடலியல் - பாலியல்சார் பதிவுகளை முன்வைத்து, காவ்யா, சென்னை.
- கழகப் புலவர் குழு, 2003, நன்னூல் காண்டிகையுரை எழுத்ததிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே. (உரை.), 2006, தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- சுப்புரெட்டியார் நா., 1982, குயில்பாட்டு ஒரு மதிப்பீடு, பாரிநிலையம், சென்னை.
- ஞானசம்பந்தன் அ.ச., 1916, இலக்கியக் கலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை.
- பஞ்சாங்கம் க., 2011, தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அன்னம், தஞ்சாவூர்.
- பொன்னையா நா. (பதி.), 1937, தொல்காப்பிய முனிவரால் இயற்றப்பட்ட தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும், திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
- ..., 1937, தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும், திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
- மகாராசன், 2007, சொல்நிலம், ஏர், பெரியகுளம்.
- ரகுநாதன், 1980, இலக்கிய விமர்சனம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
- https://www.google.co.in/amp/s/www.vikatan.com/amp/news/tamilnadu/56826-kilvenmani-massacre.html
- http://vaettoli.blogspot.in/2016/10/blog-post_15.html?m=1
- https://www.vinavu.com/2014/12/24/december-25th-venmani-martyr-day/

INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES

மதிப்பிடப்பெற்றது

வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்

முனைவர் **மா.பரமசிவன்**
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணசாமி கலை அறிவியல் கல்லூரி
மேட்டமலை, சாத்தூர்.
9585641647, mpssiva85@gmail.com

இன்றைய தமிழ்ச் சமூகத்தளத்தில் 'பாலியல்' என்பது ஒரு தீண்டத்தகாத சொல். அதனால்தான் சில முக்கியமான தமிழ் அகராதிகளில் கூட (அபிதான சிந்தாமணி, நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, கழகத் தமிழ்க் கையகராதி) இச்சொல் காணப்பெறவில்லை. ஆனால், இச்சொல் ஒரு தெளிவான பொருளுடையது. இருப்பினும், இது தீண்டத்தகாத, கெட்ட வார்த்தையாக மாறியது எப்போது? என்ற வினா ஆய்ந்து சிந்தித்தற்குரியது.

பாலியல் = பால் + இயல். இச்சொல் ஒவ்வொரு பாலுக்குமான (ஆண்பால், பெண்பால்) இயல்பைக் குறிக்கக் கூடியது என்று இதற்குப் பொருள் குறிக்கலாம். உயிரினங்களின் இயல்புகள் குறித்து நோக்கினால், அவற்றின் முக்கிய இயல்பாகக் கருதப்பெறுவது இனப்பெருக்கமாகும். இந்த இனப்பெருகத்திற்குப் பாலியலறிவு கட்டாயம் தேவை. இந்த அளவிற்கு முக்கியமான சொல்லைத் தீண்டத்தகாத சொல்லாக மாற்றியது நம் அறியாமையன்றி வேறென்ன?

வேட்டைச் சமூகத்தில் பாலியல் பெண்ணை மையமிட்டதாகவும் கட்டுப்பாடற்றதாகவும் இருந்திருக்கிறது. குறிஞ்சித்திணையில் இருக்கின்ற 'புணர்தல்' எனும் ஒழுக்க வரையறையும் குறிஞ்சித்திணைப் பாடல்களில் வருகின்ற 'புணர்ச்சி' தொடர்பான பதிவுகளும் இக்கருத்தை மெய்ப்பிக்க வல்லனவாகும். பகற்குறி, இரவுக்குறி எனும் எத்தகைய குறியிடமாக இருந்தாலும் தலைவனின் இடப்பெயர்ச்சி (தலைவியைத் தேடிச் செல்லுதல்) முதன்மையானதாக இருந்திருக்கிறது. தலைவி தலைவனைத் தேடிச் சென்றதான எத்தகைய பதிவையும் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடியவில்லை. மேலும், புணர்தல், புணர்ச்சி தொடர்பான இடங்களில் தலைவி, தோழி ஆகியோர் கூற்று நிகழ்த்துவதும் தலைவன் அல்ல குறிப்பிடும்போது தம் நெஞ்சிற்குள்ளோ அல்லது பாங்கனிடமோ புலம்புவதும் பெண்ணை மையமிட்ட பாலியல் சார்ந்த வேட்டைச் சமுக எச்சங்களாகக் கருதத்தக்கன. இத்தன்மை குறிஞ்சி, நெய்தல் பாடல்களில் மட்டும் மிகுதியாகக் காணப்பெறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும் (குறிஞ்சி - விலங்கு வேட்டை என்றால் நெய்தல் - மீன்வேட்டை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்). சங்கப் பனுவல்களின் இப்பதிவுகள், பாலியல் தொடக்கத்தில் பெண்ணை மையமிட்டதாக இருந்திருக்கிறது என்பதற்கான சான்றுகளாக அமைவனவாகும்.

சொத்துடைமையும், அதனை மையப்படுத்திய ஆண் தலைமையும், மனித சமூகத்தில் ஏமாற்று வேலைகளும் உருவானதோ? அன்றுதான் பாலியல் ஒரு கட்டுக்குள் வந்திருக்க வேண்டும். அதாவது, ஆணை மையமிட்டதாக மாறியிருக்க வேண்டும்.

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

(தொல்.பொருள்.கற்பு.இளம்.4)

என்ற தொல்காப்பிய நூற்பாவை இந்தத் தன்மையில்தான் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. ஆண் தலைமை உருவாகிய சூழலில், கட்டற்ற பாலியலின் இறுதிக்கட்டத்தில் பெண்ணை உடல்சார்ந்து ஏமாற்றும் ஏமாற்று வேலைகளும் இருந்துள்ளன என்பதை இது உணர்த்துகிறது. மேலும்,

"யாரு மில்லை, தானே கள்வன்;
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?

திணைத்தா ளன்ன சிறுபசுங் காஅல
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே" **(குறுந்.25)**

என்ற குறுந்தொகைப் பாடலும் இதைத்தான் வலியுறுத்துகிறது என்று குறிப்பிடத் தோன்றுகிறது. இப்பாடல் பாலியல் சார்ந்து ஏமாற்றப்பெற்ற ஒரு பெண்ணின் அழுகுரலாகவே தெரிகிறது.

முல்லைத்திணைப் பாடல்கள் இதற்கு நேர்மாறனவையாக அமைகின்றன. பொருள் காரணமாகப் பிரியும் தலைவன் வரும்வரைத் தலைவி ஆற்றியிருக்க வேண்டிய நிலையினதாகக் காணப்பெறுகின்றன. 'அல்குல் அவ்வரி வாடத்' தலைவி காத்திருக்கின்ற தன்மையைப் பழந்தமிழ்ப் பனுவல்கள் காட்டுகின்றன. "பெண் தன்னுடைய பாலியல் விருப்பத்தை அடக்கிக்கொண்டு, கணவனின் நலத்தைப் பேணி மென்மையான பண்புகளுடன் வாழ்வது கற்புடைய மகளிரின் இலக்கணமாகப் போதிக்கப்பட்டது" (2011:பக்.18,19). அதுதான் கற்புநிலை என்பதும் வற்புறுத்தப்பெற்றுள்ளது. குடும்பம் எனும் அமைப்பிற்கு ஆண் தலைமையும் சொத்துக்கள் ஆணைச் சார்ந்திருக்க வேண்டிய தன்மையும் உருப்பெற்ற பின்னர் இந்நிலை உருவாகியிருக்கின்றது.

இத்தகைய கற்புநிலை வளர்ச்சிக்கு மத்தியில்தான் பரத்தைமையும் உருவாகியுள்ளது. இங்குப் பெண்ணின் பாலியல் வரையறுக்கப்பெற்று ஆண்பாலியல் கட்டற்றதாக மாற்றப்பெற்றிருக்கிறது. இங்கும் பாலியல் ஆணை மையமிட்டதாகத்தான் திகழ்ந்திருக்கிறது. மனைவி, காமக்கிழத்தி, இற்பரத்தை, காதற்பரத்தை, சேரிப்பரத்தை எனப் பல்வேறு பாலியல்சார் உறவுகள் ஆணைச் சுற்றி இருந்திருக்கின்றனவே அன்றிப் பெண்ணைச் சுற்றி இத்தகைய ஆண் உறவுகள் இருந்தமைக்கான பதிவுகள் ஏதும் காணப்பெறவில்லை. ஆணை இடித்துரைப்பதான பரத்தன் எனும் சொல்கூடச் சங்கப் பனுவல்களில் மிக அரிதாகவே [மாயப்பரத்தன் (அகம்.146), பரத்த (கலி.75)] காணப்பெறுகிறது.

ஆநிரைச் சமூக எச்சமாகக் கருதப்பெறுகின்ற முல்லைத்திணைப் பாடல்கள் பெண்ணுக்கான பாலியலைக் கட்டுப்படுத்த வேளாண்மைச் சமூக எச்சமான மருதநிலச் சமூகம் ஆணுக்கான பாலியலைக் கட்டற்றதாக ஆக்கியிருக்கின்றது என்பதனை மேற்கண்ட விளக்கங்கள் வழி அறியமுடிகின்றன. அதாவது, 'பாலியில் => பெண்கட்டற்ற நிலை + பெண் மையம் => ஆண் தலைமை + பெண் கற்புநிலை => ஆண் கட்டற்றநிலை + ஆண் தலைமை' என்று மாறியிருக்கிறது.

ஆண் தலைமையும் சொத்துடைமையும் பாலியலைப் பெண் மையத்திலிருந்து ஆண் மையத்திற்கு மாற்றியிருக்கிறதேயன்றிப் பாலியலைத் தவறானதாகவோ, முகம் சுளிக்கக் கூடியதாகவோ கருதவில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. பாலியல் உறுப்புகளையும் அவை சார்ந்த சொல்லாடல்களையும் கூடத் தவறென்று கருதவில்லை. பெண்ணுக்கான கட்டுப்பாடுகளுடன் பாலியல், அதற்குரிய அறிவுத் தெளிவுடன் வழக்கில் இருந்திருக்கின்றது. ஆனால், தற்போது பாலியல் உறுப்புகளின் சொல்லாடல் கூடத் தவறென்று கருதும் நிலை உருவாகியிருக்கின்றது. பல்கலைக்கழக, கல்லூரிப் பாடத்திட்டங்களில் கலிங்கத்துப்பரணி - கடைத்திறப்பு நீங்கலாக, திருக்குறள் - காமத்துப்பால் நீங்கலாக (காமத்துப்பால் என்று கூடக் குறிப்பது இல்லை; இன்பத்துப்பால் என்றே குறிக்கின்றனர்) என்றெல்லாம் அமைக்கப்பெறுவதும் பாலியல் குறித்த புரிதல் தீண்டத்தகாததாகியதன் பின்விளைவே என்றுதான் கூறத் தோன்றுகிறது. இந்நிலையில் இச்சொல், இச்சொல்லுடன் சேர்ந்த பிற சொற்கள், அவற்றின் புரிதல், பண்டைத் தமிழர் வாழ்க்கையில் அவை இடம்பெற்றிருந்த திறம் ஆகியன கவனத்தில் கொள்ளத்தக்கனவாகவும் ஆய்வுப்பரப்பில் எடுத்துக்கொள்ள வேண்டிய பொருண்மையாகவும் உள்ளன என்பது இங்குக் குறிக்கத்தக்கதாகும். அந்தவகையில், இந்நூலை ஒரு முன்னோடி நூலாகப் பாராட்டி வரவேற்க வேண்டியது நம் கடமையாகும்.

சங்க இலக்கியத்தில் சமூக மாற்றங்களுக்கு மத்தியில் தவறாகக் கருதப்பெறாத பாலியல் பிற்காலத்தில் தவறாக, நினைக்கத்தகாததாக மாற்றம் பெற்றதன் காரணம் குறித்து ஆராயவேண்டிய தேவை உள்ளது. சங்க இலக்கியத்தில் காணப்பெறும் பாலியல் சார்ந்த சொல்லாடல்களையும்

அதற்கடுத்த காலக்கட்டமான சங்கம் மருவியகால இலக்கியங்களில் காணப்பெறும் பாலியல் சார்ந்த சொல்லாடல்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன்வழி இதற்கான காரணத்தைக் கண்டறியலாம் என்று கூறத் தோன்றுகிறது.

சங்க இலக்கியத்தில் புணர்ச்சி, புணர்ச்சியுடன் தொடர்புடைய சொற்கள் 226 இடங்களில் காணப்பெறச் சங்கம் மருவிய கால இலக்கியங்களில் 41 இடங்களில் காணப்பெறுகின்றன. இது விழுக்காட்டு அளவில் 18.14% பயன்பாடு ஆகும். மேலும் அல்குல், அல்குலுடன் தொடர்புடைய சொற்கள் சங்க இலக்கியத்தில் 102 இடங்களிலும் முலை, முலையுடன் தொடர்புடைய சொற்கள் 181 இடங்களிலும் காணப்பெறுகின்றன. இதே சொற்களுக்கான பதிவுகள் சங்கம் மருவியகால இலக்கியங்களில் முறையே 12, 51 என்ற எண்ணிக்கையில் காணப்பெறுகின்றன. சங்க இலக்கியத்தோடு ஒப்பிடும் நிலையில் அல்குல், அல்குலுடன் தொடர்புடைய சங்கம் மருவியகால இலக்கியப் பயன்பாட்டு விழுக்காடு 11.76% ஆகவும் முலை, முலையுடன் தொடர்புடைய சொற்பயன்பாட்டு விழுக்காடு 28.17% ஆகவும் அமைகின்றன.

விழுக்காட்டு அளவில் தொடர்ந்து இரண்டு காலக் கட்டங்களின் பாலியல் குறித்த சொற்பயன்பாடுகள் மிகப்பெரிய அளவிற்கு வேறுபட்டிருக்கின்றன என்பதை அறியமுடிகிறது. மேற்கண்ட பதிவுகள்வழி மேலும் சொற்பயன்பாடுகள் மட்டுமின்றிப் பொருட்புரிதலிலும் மாறுபாடுகள் காணப்பெறுகின்றன.

"கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குலென் மாமைக் கவினே" (குறுந்.27)

"முட்டு வேன்கொல், தாக்குவேன்கொல்;
ஓரேன் யானும்; ஓர்பெற்றி மேலிட்
டாஅ பொல்லெனக் கூவு வேன்கொல்;
அலமர லசைவளி யலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே" (குறுந்.28)

என்றெல்லாம் சிறப்பாகப் பாடப்பெற்ற பாலியல், புணர்ச்சி, பாலியலோடு தொடர்புடைய உறுப்புகளின் பெயர்கள் சங்கம் மருவிய காலத்தில் அவற்றின் சிறப்பை இழந்திருக்கின்றன.

"செருக்கினால் வாழும் சிறியவனும், பைத்துஅகன்ற
அல்குல் விலைபகரும் ஆய்தொடியும் நல்லவர்க்கு
வைத்த அறப்புறம் கொண்டானும் - இம்மூவர்
கைத்துஉண்ணார் கற்றறிந் தார்" (திரி.25)

"கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று" (குறள்.402)

"ஏமாந்த போழ்தின் இனியார்போன்று, இன்னாராய்த்
தாம்ஆர்ந்த போதே தகர்க்கோடாம்; - மான்நோக்கின்
தம்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரை
செம்நெறிச் சேர்தும்என் பார்" (நாலடி.378)

என்பன அதற்கான சில சான்றுகளாகும். மேலும், சங்கப் பனுவல்களில் காணப்பெறும் 'புணர்ச்சி' எனும் சொல்லும் பொருள் உணர்த்தலில் சங்கம் மருவிய கால இலக்கியங்களிலிருந்து முற்றிலும் மாறுகின்றது.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்" **(குறள்.785)**

"உணர உணரும் உணர்வுஉடை யாரைப்
புணரப் புணருமாம் இன்பம்; - புணரின்
தெரியத் தெரியும் தெரிவுஇலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்" **(நாலடி.247)**

என்னும் சான்றுகள் இதை உணர்த்தவல்லன. இதற்கான காரணத்தை ஆராய்ந்து நோக்கும்போது 'மதங்களின் வளர்ச்சியே இம்மாற்றத்திற்கான காரணம்' என்று குறிப்பிடத் தோன்றுகிறது.

நிறுவனமயப்பட்ட மதங்களின் எவ்வித ஊடாட்டங்களும் இல்லாத சங்க காலத்தில் இருந்த பாலியல் புரிதல் சங்கம் மருவிய காலத்தில் தேய்ந்துள்ளது. சங்கம் மருவிய காலத்தில் சமணம் செல்வாக்குடன் விளங்கியது. சமணர்தம் கொள்கைகளை,

"கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, காமத்தை
ஒல்லாமை, ஒண்பொருளை வரைதலோ டிவைபிறவும்
பொல்லாத புலைசுதேன்கள் இருளுண்ணா நிலைமையொடு
நல்லாரைப் பணிவதுவும் நாமுறையே பயனுரைப்பாம்"
(மேற்கோள் 2003:68)

என்ற திருக்கலம்பகப் பாடல் வெளிப்படுத்தும். இத்தகு கொள்கைகளில் திளைத்த சமணம் துறவை வலியுறுத்திப் 'பெண் என்பவள் பேய், பெண்ணாசை பெருந்தவறு, தவத்திற்குக்கூடத் தகுதியற்றவள் பெண்' என்பன போன்ற கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கியதால் பாலியல் தீண்டத்தகாததாக ஏன்? நினைக்கவும் தகாததாக மாறியிருக்கிறது என்று குறிப்பிடத் தோன்றுகிறது.

இதனால்தான், சமணத்தின் செல்வாக்கு மிகுதியாக இருந்த சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் காணலாகும். புணர்ச்சி, அல்குல், முலை போன்ற சொற்களும் பதிவுகளும் அவற்றின் இயல்பை மறுத்துக் கேவலப்படுத்தப்படுவதாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

இவ்வாறாகத் துறவை வலியுறுத்தி வந்த சமணம்தான் தமிழரின் பாலியல் சொற்களையும் பாலியல் புரிதலையும் தீண்டத்தகாதவையாக ஆக்கியிருக் கின்றது. பின்னர் வளர்ந்த வைதீக சமயங்களும் தம்முடைய புனிதத்துவத்திற்கு மெருகேற்றச் சமணத்திலிருந்து இத்தன்மையைக் கடன்வாங்கிக் கையாண்டிருக்கின்றன. இந்தச் சூழல்தான் பாலியலும் பாலியல்சார் சொற்களும் சங்க காலத்தில் மேன்மையாகப் பதிவு செய்யப்பெற்றதற்கும் சங்கம் மருவிய காலம் தொடங்கி இதுவரை தவறாகப் புரிந்துகொள்ளப் பெறுவதற்கும் காரணங்களாகியிருக்கின்றன.

செவ்வியலின் இத்தகைய மேன்மைத் தன்மையைக் கொண்டு உருவாக்கப்பெற்றிருக்கும் இந்நூல் 7 எழுத்துரைகளைக் கொண்டு திகழ்கிறது. இவ் வெழுத்துரைகள் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் உணர்த்துகின்ற தொல்தமிழ்ச் சமூகப் பின்புலங்களோடு மேல்நாட்டுக் கருத்தியல், உரையாக்க காலச் செயல்பாட்டில், பிறமொழி இலக்கிய ஒப்பீட்டுக் கருத்தியல் எனும் நிலைகளில் விளங்குகின்றன. தமிழில் இத்தகையதொரு முயற்சி ஏற்படுவதென்பது இதுவே முதல்முறை என்பது இங்குக் குறிக்கத்தக்கது. அவ்வகையில் இது பாராட்டத்தக்க முயற்சியே ஆகும்.

துணைநின்றவை

* அறவேந்தன் இரா. (ஆய், பதி.), 2016, **குறுந்தொகை**, என்.சி.பி.எச்., சென்னை.

* கோபாலையர் தி.வே., அரணமுறுவல் ந. (பதி.), 2003, **தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம் -1**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.

* கௌமாரீஸ்வரி எஸ். (பதி.), 2009 (ஆ.ப), **ஆ.சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணி**, சிதைபதிப்பகம், சென்னை.

*... (பதி.), 2009 (4ஆம். பதி), **நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி**, சாரதா பதிப்பகம், சென்னை.

* சகதேவ முதலியார் சேவை, கண்ணுசாமிப் பிள்ளை காழி.சிவ. (பதி.), 2003 (ஒ.ப), **கழகத் தமிழ்க் கையகராதி**, கழக வெளியீடு, சென்னை.

* சிதம்பரனார் சாமி. (உரை), 2006, **நாலடியார் மூலமும் உரையும்**, மல்லிகா, ஆலந்தூர், சென்னை.

* சுப்பிரமணியன் ச.வே. (பதி.), 2007, **பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

* தாமோதரம்பிள்ளை சி.வை. (பதி.), 1887, **நல்லந்துவனார் கலித்தொகை**, THE SCOTTISH PRESS, MADRAS.

* பசுபதி ம.வே. (பதி.), 2010, **செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

* மாதையன் பெ. (பதி.), 2007, **சங்க இலக்கியச் சொல்லடைவு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

* முருகன் ப. (உரை.), 2001 (எ.அ), **திருக்குறள் திறவுகோல்** (எளிய, இனிய உரை), என்.சி.பி.எச், சென்னை.

* முருகேசபாண்டியன் ந., 2011, **மறுவாசிப்பில் மரபிலக்கியம் - சங்க இலக்கியம் முதல் பாரதிதாசன் வரை**, நற்றிணை பதிப்பகம், சென்னை.

* முனீஸ்மூர்த்தி மு., 2015, **உரையாசிரியர்களின் செவ்வியல் நோக்கு**, இராசகுணா பதிப்பகம், புழுதிவாக்கம், சென்னை.

* வேங்கடசாமி மயிலை சீனி., 2003, **சமணமும் தமிழும்**, வசந்தா பதிப்பகம், ஆதம்பாக்கம், சென்னை.

* ஜெயதேவன் வ. (பதி.), 2010, **பதினெண் கீழ்க்கணக்குச் சொல்லடைவு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

****

இது காவ்யா பதிப்பக வெளியீட்டின் வழி 2017ஆம் ஆண்டு வெளிவந்த "தமிழ்ச் செவ்விலக்கிய மேன்மை (மகளிர் உடலியல் - பாலியல்சார் பதிவுகளை முன்வைத்து)" எனும் நூலின் மதிப்பீட்டுரையின் வடிவம் ஆகும்.